ஏகலைவன்

இரா. முருகவேள்

சதுரகிரி

இரா. முருகவேள்



செம்புலம்

இரா.முருகவேள்

634, லாலிசாலை,

கோயமுத்தூர் 641003.

செல்பேசி 9443014445

முன்னுரை

செம்புலம் என்றவுடன் அன்புடை நெஞ்சந்தாம் கலந்தனவே என்ற வசீகர வரிகள் நினைவுக்கு வருவது இயல்பு. ஆனால் செம்புலம் என்ற சொல்லுக்கு பாலை என்ற பொருளும் உண்டு. பாலை என்பது மணல் வெளியாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மனிதம் இல்லாத எல்லா நிலமும் வெயில் சுட்டெரிக்கும் பாழ்வெளிதான். அது பொன் விளையும் பூமியாக இருந்தாலும் சரி. அப்படிப்பட்ட ஒரு வெற்று நிலத்தில் கனவுகளைத் துரத்திச் செல்லும் மனிதர்களின் வாழ்க்கையைத் தேடிக் காணச் செய்யப்பட்ட ஒரு சிறிய முயற்சி இந்தப் புதினம்.

எந்தத் துப்பறியும் கதையை விடவும் வாழ்க்கை சுவாரஸ்யமானது. பலமடங்கு ஆழமும், கூர்மையும், குரூரமும் கொண்டது. எனவே வாழ்க்கையைத் துப்பறியும் கதையாகக் காணச்செய்யப்பட்டுள்ள இந்த முயற்சி வாசக நண்பர்களால் பெரிய மரபு மீறலாக கருதப்படாது என்று நினைக்கிறேன்.

இப்புதினத்தில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள், பாத்திரங்கள், அமைப்புகள் அனைத்தும் கற்பனையே. யாரையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சுட்டுபவை அல்ல. இடம்பெற்றுள்ள பாத்திரங்களின் கருத்துகளை அந்தந்தப் பாத்திரங்களின் எண்ணப்போக்காக மட்டும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவை நூலாசிரியரின் கருத்துகள் அல்ல.

புற உலகு பற்றிய ஒரு நாவல் என்பது பலரது கூட்டு முயற்சியாகத்தானிருக்க முடியும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள நண்பர்களின் உதவியினாலேயே இந்நூல் சாத்தியமாகியுள்ளது.

காவலர் பயிற்சிப் பள்ளியைப் பற்றியும், உழைக்கும் மக்களிடையே உள்ள அரசியல் போக்குகள் பற்றியும் நுட்பமான பார்வையை வழங்கிய தோழர் கணபதி, இந்நாவலில் வரும் நிலப்பரப்பை எனக்கு அறிமுகப்படுத்திய தோழர் சிகாமணி என்கின்ற கார்ல் மார்க்ஸ், தோழர் செ.கா., திருப்பூரைச் சேர்ந்த தோழர் செந்தில், பறையிசை

நிபுணரான அவர் மகள் இலக்கியா, விசைத்தறித் தொழிலாளர் பற்றிய விவரங்களை வழங்கிய கருமத்தம்பட்டி தோழர் தமிழ் வேந்தன், பெருமாநல்லூர் ராமலிங்கம், அம்மாப்பாளையம் வடிவேலு, பழனிச்சாமி ஆகியோருக்கும் விவசாயத்திலிருக்கும் வணிகம் பற்றிய தகவல்களை அளித்த கண்ணன் தண்டபாணிக்கும்,

நாட்டுப்புறப் பாடல்களையும், கதைகளையும் வழங்கி பேருதவி புரிந்த திருப்பூர் தோழர் ரா.ஈஸ்வரன், குறிப்பிட்ட பகுதிவாழ் மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றிய புரிதலை வழங்கிய தோழர் ராமச்சந்திரன், சிவராஜ் ஆகியோருக்கும், கிராமப்புற கல்லூரிகளின் நிலை பற்றிய பார்வையைப் பகிர்ந்து கொண்ட நூலகர் கி.ச.கல்யாணிக்கும், செல்போன் தொடர்புகள், அழைப்புகள் பற்றிய தொழில்நுட்ப விவரங்கள் வழங்கியதற்காக தோழர்கள் சந்துரு என்கின்ற சந்திரன், முகமது பாட்சித் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்படும் விதம்பற்றிய மிக அறிவுபூர்வமான உரையாடலை நிகழ்த்தியதற்காகவும் அளித்த அரிய தகவல்களுக்காகவும் பேராசிரியர் ரங்கசாமிக்கும், அவரது மாணவரும் அன்புக்குரிய தோழருமான சரவணன் வீரய்யாவுக்கும்

தனது அனுபவங்களால் செறிவூட்டிய தோழர் கபிலனுக்கும், டெமோகிராஃபிக் டிவிடெண்ட் எனப்படும் மக்கள் தொகையில் இளைஞர்கள் அதிகமிருக்கும் சூழலைப் பற்றிய புரிதலை வழங்கிய என் மகள் ப்ரீத்திக்கும் நான் பெரிதும் கடன் பட்டுள்ளேன்.

எனக்கு, சமூகப் பிரச்சினைக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணியைத் தீர்வாக வைப்பதில் உடன்பாடு இல்லை. ஆனால் அத்துறையில் அர்ப்பணிப்போடு செயல்பட்டு வரும் சத்தியமங்கலம் ரீட் அமைப்பின் தலைவர் நண்பர் கருப்புசாமியின் பணிகள் தனிச்சிறப்பானவை. அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துண்டுதுண்டாக இருக்கும் கையெழுத்துப் பிரதியைப் படித்து விவாதிக்கவும் குறைகளைச் சுட்டிக்காட்டவும் நண்பர்கள் வாய்ப்பது ஒரு வரம். அந்த விதத்தில் எழுத்தாளர் தோழர்கள் சாம்ராஜ், பாவெல் சக்தி,

சரவணன் வீரய்யா, மணிமாறன், தியாகு நூலகத்தின் நூலகர் தியாகராஜன் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

வழக்குரைஞரும் நண்பருமான பி.ஆனந்த் குமார், மேட்டுப்பாளையம் வழக்குரைஞர் வி. செந்தில்குமார், மகள் நிலவினி ஆகியோருக்கு எனது அன்பு.

இந்நூலின் ஆக்கத்துக்குத் தவிர்க்க முடியாதவர்களாக இருந்த காவல்துறை நண்பர்களின் பெயர்களைத் தவிர்ப்பது அவர்களுக்குத் தர்மசங்கடமான சூழலை ஏற்படுத்த வேண்டாமென்பதற்காகத்தானே தவிர வேறு காரணங்கள் இல்லை. அவர்கள் மீது மிகுந்த நன்றியுணர்வு கொண்டிருக்கிறேன்.

இதில் இடம்பெற்றுள்ள பல கதைகள் என் அம்மா ரங்கம்மாளும், இப்போது பெயர் மறந்துபோன மூதாட்டிகளும் சொன்னவை. அவர்களை இந்த நேரத்தில் மிகுந்த அன்புடனும் நன்றியுடனும் நினைவுகூர்கிறேன். தோழர் பாவலர் வையவன் மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு குறுகிய காலத்தில் பிழை திருத்திக் கொடுத்தார். இந்தப் பணியை அவரைப் போன்ற அற்புதமான தமிழறிஞர் ஒருவரிடம் ஒப்படைப்பது என்பது ஒரு எழுத்தாளருக்கு எத்தகைய நிம்மதியைத் தரும் என்பதை சொற்களில் விளக்கிவிட முடியாது.

தோழர் மோகன்குமார் எனது நூல்களில் தவிர்க்க முடியாதவராக மாறிவருகிறார். அவரது விரிந்த அனுபவங்களையும், அறிவையும் கொஞ்சமாவது பதிவு செய்ய முயன்றிருக்கிறேன்.

புத்தக வடிவமைப்பில் அக்கறை செலுத்தி அழகுற முடித்த தோழர் மகிவர்மனுக்கு நன்றி.

நூலை கலைநயமிக்கதாக உருவாக்குவதில் முக்கியமானவர் தோழர் கார்த்தி. அழகான அட்டைப்படங்களை தொடர்ச்சியாக செய்து தரும் அவருக்கு நன்றியும் அன்பும்.

இவர்களோடு அந்தத் தவிர்க்க முடியாத இருவர். தோழர் திருப்பூர் குணா. குணாவின் பங்கு இதுதான் இவ்வளவுதான் என்று சொல்லிவிட முடியாது முடியாது. எப்போது என்ன உதவி

வேண்டுமென்றாலும் போய் நிற்கக்கூடிய அன்புக்குரிய நண்பர் பதிப்பாளராகவும் இருப்பது தற்செயலானது அல்ல.

வழக்கமாக எனது முதல் வாசகராகவும், ஆலோசகராகவும், விமர்சகராகவும் இருக்கும் பானுமதி இந்தப் புதினத்தில் களப்பணியாளராகவும் செயல்பட்டுள்ளார். இடம்பெயர்ந்து வந்த மக்களின் வாழ்நிலை பற்றிய தகவல்கள் திரட்டியதில் பெரும் பங்காற்றியுள்ளார்,

நன்றி என்பது மிகவும் சம்பிரதாயமான சொல். எனவே அதற்குப் பதில் இவர்கள் இல்லாமல் இந்த நூல் இல்லை என்ற உண்மையைச் சொல்வதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

அன்புடன்

இரா. முருகவேள்

பாகம் 1

காமாட்சிபுரம் காவல்நிலையம்

பாட்டி சொன்ன கதை

“காங்கேயத்துக்குப் பக்கத்தால ஒரு ஊருல ஒரு ராசா இருந்தான். அவம்பண்ணையில ஒரு புள்ள வேல செஞ்சா. அளகுன்னா அளகு அத் அளகு. கருப்பு திராட்சை மாரி கண்ணு. சொளட்டி சொளட்டி பாப்பா. நிமிர் நின்னான்னா எடுப்பான நெஞ்சும், சின்ன இடுப்புமா கோயில் செலதான். எப்பப்பாத்தாலு துருதுருன்னு மூஞ்சூறு மாரி ஒரெடத்துல நிக்காம ஓடீட்டே(கையில ஒரு கொடம் தண்ணியோட பள்ளத்தை ஒரே தாவா தாண்டிருவா. அத்தினி பலம். ஈட்டி மரம் மாரி ஒடம்பெல்லாம் மினுக்கும். ஒருநா குதிரை ராசா அவளப் பாத்து மயங்கிப் போனான். ரெண்டு பேருக்கும் ஒருத்தர ஒ புடிச்சுப் போச்சு. ராசா சேரிக்குப் பக்கத்தால அளகான ஊடு கட்டி அவடத்தாலெயே வந்துட்டான். வந்தவன் ராவும் பகலும் அவளே கெதின்னு கெடந்தான். ஊரு முச்சூடும் மூக்கில வெரல வெச்சுப் பாத்துச்சு. பாத்துச்சு பாத்துச்சு... அப்புடி பாத்துச்சு. இது அடுக்குமான்னு பண்ணாடிக பயந்து போனாங்கோ.

ஆனா அவளுக்கு ஒரு வெசனமுமில்ல. தனக்கு ராணியாகறதுக்கு அல்லாத் தகுதியும் இருக்குதுன்னு நெனச்சா. ஆடிப்பாடி சந்தோசமா இரு ஒருநா மாசமாயிட்டா.

அவள ஆருக்காச்சு கட்டிக்குடுத்து அசலூருக்கு அனுப்ப ராசாவுக்கு புடிக்கல. பொறவு அங்கயுமு எவனாவது ராசா இருப்பானல்லோ. ராசா அரமனைக்குப் போயி கலியாணத்துக்கு ஏற்பாடு பண்ணிபோட்டு வந்து உ கூட்டிட்டு போறேன்னு சொல்லிப்போட்டு போனான். அவடத்தால ராசாவோ அப்பனும், ஆத்தாளும், சொந்தபந்தமும் தங்க செலயாட்டா, ஒயிலா இருந் ஒருத்தியக் காட்டி ராசாவ மயக்கி போட்டாங்க. ராசா அவளக் கலியாணம் மூச்சிட்டு அவடத்தாலையே தங்கீட்டான். அவ வயித்துப் புள்ளையோட வந் நாயம் கேட்டா. புத்தி மாறிப்போன ராசாவும், சொந்தக்காரங்களும் அவள அவ குடும்பத்தையும் ஊரஉட்டே தொரத்திபோட்டாங்க. அவ ஒரு அளகான பையனப் பெத்தெடுத்தா. அப்பனக் கொன்னு பளிதீக்கப் பொறந்தவன்னு

சொல்லியே அவன வளத்தா. பையனுக்குப் பதினாறு வயசாச்சு. ராசா ஒவ்வொரு வருசமும் தைப்பூசத்துக்கு பழனிக்கு வருவான். கிரிவலம் போயி சேவிச்சிட்டு ஊரு திரும்புவான். அப்புடி ஒருக்கா வந்தப்போ இந்தப் பையன எங்கிருந்தோ வந்து ராசாகூட சேந்திட்டான்.

ராசாவுக்கு அந்தப் பையனப் பாத்தொடனே புடிச்சுபோச்சு. பரபரன்னு அலபாயர கண்ணோட வலுவா வாளிப்பா தன்னோட ஒசரத்துக்கு நின்ன அ பாத்தப்போ ராசாவுக்கு ஆரோ நாபகம் வந்துச்சு. ஆனா வெளிய காட்டிக்க பையனக் கூட்டிட்டு கிரிவலம் போனான். படிக்கட்டுக்கு முன்னாடி நின்னு க மூடி சாமி கும்புட்டான். அவங்கண்ணுல அவளோட உருவம் தோணுச்சு. அ எங்கிருக்கா? என்ன கொளந்த பொறந்திருக்கும்னு நெனச்சா. அவனுக்கு நெஞ்சு வலிச்சுது. அவ தன்னைய மன்னிப்பாளான்னு நெனச்சான். இத்தன வருசமா அவ வந்து பாக்கவேயில்ல. கெஞ்சவேயில்லேங்கற நெனப்பு வந்த அவ தன்ன மன்னிக்க... இனிமேலுமு மன்னிக்கவே மாட்டான்னு தோணு

ஏதோ நெனப்புலருந்த ராசா சரக்குன்னு சத்தங்கேட்டு முழிச்சான். முன்னால மகன் நிக்கிறான். கையில நாலடி நீள வீச்சருவா.

“உனக்கு மன்னிப்பே கெடையாதுடா”-ன்னான் மகன். ஒரே வீச்சு. அப்பன் கைய நீட்டி தடுக்கப் பாத்தான். பதினாறு வருசமா அம்மாளும் மக அடக்கி வெச்சிருந்த கோவம். கையோட தலயும் சேந்து துண்டாச்சு.

ராசாவோட ரத்தம் பீச்சியடிச்ச எடத்துல இருந்தெல்லாம் பாம்பும், தே பேயும், பிசாசுமா கெளம்பி வந்துச்சு. ராசா மகன் வீச்சருவாளால எதித்தாட வாரதெல்லாத்தையும் வெட்டி சாய்க்கறான். ஒரு பாம்புல இருந்து பத்து பா எந்திரிச்சு வருது. ஒரு தேளுல இருந்து பத்து பத்து தேளு மொளச்சு வருத பிசாத்தோட தலய வெட்ட வெட்ட மொளச்சு வருது.

அவன் அசரல. வெட்டறான் வெட்டறான். வெட்டித் தள்ளிட்டே இருக்கறான். மவனோட ரத்தம் பட்ட புல்லுல இருந்தெல்லாம் வாளு மொளச்சு வந்துச்சு. ஒரு வாளப் புடுங்கி ரெண்டு கையும் வெட்டற சக்கரமா சுத்தறான். பிசாசும், பாம்பும் அவம்மேல பாஞ்சு கொதறுது. அவ சொளண்டு சொளண்டு வெட்டறான். காத்து சுத்துது. மண்ணு சுத்துது. வெட்டுப்பட்ட தலைக, முண்டங்க சொளண்டு சொளண்டு வருது. ரத்தம் செம்பூவா காத்துல பறக்குது. அவனுக்கு ராவு பகலு தெரியல. பசி தூக்கம்

தெரியல. தன்னோட ரத்தம், பூத கணங்களோட ரத்தம் எதுக்கும் வித்தியாச தெரியல.

சிவன்மலைக்கு அந்தப்பக்கம் சொளண்டு அடிக்குமே காத்து... அதுக்குள்ளார... வெட்டார வெளில திடீர்னு எந்திரிச்சு நிக்குமே தீக்கங்கு... அதுக்குள்ளார... ஆடிமாசம் புளுதிய வாரித் தூத்தி கண்ணு மூக்கெல்லாம் தொறக்கவிடாம செய்யுமே காத்து... அதுக்குள்ளார... இந்த சண்ட இன்னுமே நடந்துட்டிருக்குது தீராம...

அதிகாலை நான்குமணி. வானை மூடியிருந்த மெல்லிய பனிப்படலத்துக்கு மேலே மங்கலாகத் தெரிந்த வீண்மீன்கள் குளிரைப் பரப்பிக் கொண்டிருந்தன. டிசம்பர் மாதக் கூதல் காற்று ஈரத் துணியால் போர்த்தியதைப்போல உடலைச் சிலிர்க்கச் செய்தது. காமாட்சிபுரம் கிராமத்தைச் சுற்றியிருந்த தென்னந்தோப்புகளில் கும்மிருட்டு அப்பிக் கிடந்தது. இருட்போர்வைக்குள் புதைந்து கிடந்த ஓட்டுக்கூரை வீடுகள் மோனத்தில் ஆழ்ந்திருந்தன. மழை இருந்தால் குளிர் குறைவாக இருக்கும். ஆனால் இந்த ஆண்டு மழை பொய்த்ததால் பாலக்காட்டுக் கணவாய் ஓரமிருந்த காமாட்சிபுரத்தில் உதடுகளும் குதிக்கால்களும் வெடிக்குமளவுக்கு வறட்டுக்குளிர் வாட்டியது.

குரைத்தபடி கும்பலாக ஓடித் திரிந்த நாய்களைத் தவிர தெருக்களில் எந்த நடமாட்டமுமில்லை. ஊருக்கு வெளியே தனித்து அமைந்திருந்த காமாட்சிபுரம் காவல்நிலையம் வெறிச்சோடிப் போயிருந்தாலும் எல்லா அறைகளிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. காவல்நிலையத்திற்கு முன்புறம் பொள்ளாச்சி செல்லும் சாலை. அதன் இருபுறமும் இருந்த நிலங்கள் தரிசாகக் கிடந்தன. பின்னால் நிலைய காம்பவுண்ட் சுவர் வரை தென்னந்தோப்பு நெருங்கியிருந்தது. வாயில் கதவு கனமான இரும்புச் சங்கிலி கொண்டு உட்புறம் பூட்டப்பட்டிருந்தது. உள்ளே துப்பாக்கியோடு செண்ட்ரி மெல்ல நடைபோட்டுக் கொண்டிருந்தான்.

நிலையத்தில் விசாலமான முற்றத்தையடுத்து ஒரு பழமையான ஓட்டுக்கூரைக் கட்டிடமும். புதிதாகக் கட்டப்பட்ட கான்கிரீட் கட்டடமும் இருந்தன. புதிய கட்டடத்தின் உள்ளே ஒரு அறையில் நிலைய எழுத்தர் குப்புராஜ் நாற்காலியில் உட்கார்ந்தவாறே தூங்கிக்கொண்டிருந்தார்.

கையைக் காலைப் பரப்பி உடல் தொய்ந்து விழாமல், விறைப்பாக உட்கார்ந்த நிலை மாறாமல், முகவாய் மட்டும் லேசாக மார்பில் இடிக்கத் தூங்கும் போலீஸ்காரத் தூக்கம். காமாட்சிபுரம் காவல் நிலையம் சிறியது என்பதால் சட்டம் ஒழுங்குப் பிரிவுக்கும், குற்றப் பிரிவுக்கும் ஒரே எழுத்தர்தான்.

"ஏட்டையா" உள்ளிருந்து கரகரப்பான கெஞ்சும் குரல் கேட்டது.

குப்புராஜ் கண்ணை விழித்துப் பார்த்துவிட்டு மூடிக்கொண்டார். அவர் எழுத்தர் என்றாலும் மக்களுக்கும், பிடித்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கும் அவர் ஏட்டையாதான். அது ஒரு மரியாதை விளி.

"ஏட்டையா... பீடி குடுங்க ஏட்டையா"

பக்கத்து அறையிலிருந்து அந்தக் குரல் மீண்டும் கெஞ்சியது. ஒரு கனமான மேசையோடு நீளமான இரும்புச் சங்கிலியால் ஒருவனைக் கட்டிப்போட்டிருந்தார்கள். கட்டைக்குட்டையாக இருந்த அவன் குத்தவைத்து உட்கார்ந்திருந்தான். தலை பறட்டையாகக் கலைந்து கிடந்தது. வழக்கமாக ஜட்டியுடன்தான் உட்கார வைப்பார்கள். இன்று கடும்குளிர் என்பதால் சட்டையும், லுங்கியும் அணிய அனுமதித்திருந்தார்கள்.

கைதி என்றால் கைல தீய வெச்சிருக்கேன்னு அர்த்தம். ஜாக்கிரதையா இருக்கணும் என்று மேலதிகாரிகளிலிருந்து மூத்த காவலர்கள் வரை எல்லோரும் சொல்வார்கள். மரை கழண்டவன்தான் கிரிமினல் ஆவான். அவனை எந்தச் சூழ்நிலையிலும் நம்பக் கூடாது. சர்க்கரையாகப் பேசிக்கொண்டே ஓடிவிடுவான். பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் காவலர்களுக்கு அளிக்கப்படும் பாலபாடம். எனவே கைதியை அறைக்குள் தள்ளிப் பூட்டுவதைவிட சங்கிலியில் கட்டி வைப்பது இது போன்ற ஒதுக்குப்புறமான காவல் நிலையங்களில் பாதுகாப்பானது. அறைக்குள் தூக்குமாட்டிக் கொண்டு தொங்கினால் என்ன செய்வது.

அப்புறம் காவலர்களின் பாதுகாப்பு முக்கியமானது. தனது உயிரையும் அடுத்த போலீஸ்காரரின் உயிரையும் ஆபத்துக்கு

உள்ளாக்குவதை விட ஒரு கேடியைக் கட்டி வைப்பது உசிதம்.

“ஏட்டையா பீடி...” திரும்பவும் கைதி ஆரம்பித்தான்.

“டேய்...” குப்புராஜ் உறுமினார். “இப்பத்தாண்டா குடுத்தேன். வந்தன்னா மிதிச்சிருவேன்”

“ரெண்டு மிதி மிதிச்சிங்கங்க ஏட்டையா, பீடி குடுங்க...”

எழுத்தர் முழுமையாக விழித்துக்கொண்டார். மணி நான்கு பத்து. இதற்குள் இரண்டுமுறை பீடிக்கு எழுப்பிவிட்டான்.

அவர் சங்கிலியை அவிழ்த்து கையில் பிடித்துக்கொண்டு அவனை கட்டடத்துக்கு வெளியே இருந்த கழிவறைக்கு நடத்திச் சென்றார். சங்கிலியை ஜன்னலில் கட்டிவிட்டு அவனிடம் இரண்டு பீடிகளைக் கொடுத்தார். பின்பு சற்றுத் தள்ளி திண்ணையில் உட்கார்ந்து சிகரெட் பற்ற வைத்துக்கொண்டார்.

அக்யூஸ்டுகள் பீடி கேட்டு நச்சரிப்பது தொந்தரவாக இருந்தாலும் அது அவர்களை அமைதிப்படுத்தும் வழி. கேட்கும்போது கொடுத்துவிட்டால் அடுத்து கொஞ்ச நேரத்துக்குத் தொந்தரவு இல்லை. இரவு நேரங்களில் தேவையற்ற நெருக்கடிகளைத் தவிர்க்க இதுபோன்ற விஷயங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது.

குப்புராஜ் புகையை ஆழ்ந்து இழுத்தபடி அனிச்சையாக செல்லைப் பார்த்தார். வாட்ஸப்பில் செய்தி வந்திருந்தது.

காவலர் சங்கம் அமைக்கக் கோரும் ரிட் மனு Wc 1212/2016-க்கு 12.12.2016 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அணிதிரண்டு உயர்நீதி மன்றம் வருவீர்-

தமிழ்நாடு காவல்துறை காவலர்கள் சங்கம் 2001.

குப்புராஜுக்கு இந்த போலீஸ் சங்கத்தில் எல்லாம் நம்பிக்கை இல்லை. ‘போலீஸ்காரன் என்ன கம்யூனிஸ்டா கொடி பிடிக்க?’ என்பார். ‘வாங்கி வாங்கி போடற இல்ல, ரோட்ல போறவன் வாறவன் எல்லாம் பயப்படறான் இல்ல, அதுக்கு ஒரு வெல குடுத்துத்தான ஆகணும்’ அந்த குரூப்பில் அவரை யார் சேர்த்துவிட்டது என்று தெரியவில்லை.

குரூப்பிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று அவ்வப்போது நினைத்தாலும் இருக்கட்டுமே செய்திகள் தெரிந்து கொள்ளலாமென்று என்று விட்டுவிட்டார்.

அவருக்கு புதிதாக காவல் நிலையத்துக்கு வந்து சேர்ந்திருந்த பாலு என்கிற பால சுப்பிரமணியம் மீதுதான் சந்தேகம். அவன் பி.ஏ வரலாறு படித்தவன். இந்த படித்த பையன்கள்தான் பிரச்சினை செய்கிறார்கள். வாய்ப்புக் கிடைக்கும்போது இன்ஸ்பெக்டரிடம் போட்டுக் கொடுக்கவேண்டும் என்று குப்புராஜ் முன்பே முடிவு செய்திருந்தார்.

அந்த குரூப்பை அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. பணியின் போது இறந்து போன காவலர்களின் படங்கள், மன அழுத்தத்தால் துப்பாக்கியால் தாடையில் சுட்டுக்கொண்டு தலைசிதற தற்கொலை செய்துகொண்ட காவல் இளைஞர்களின் படங்கள் என்று தொடர்ந்து போட்டு மனதைச் சங்கடப்படுத்துவார்கள். இந்த இளைஞர்களிடம் ஏதோ பிரச்சனை இருக்கிறது.

அவர் சிகரெட்டை வீசிவிட்டு "டேய் போலாமா?" என்றார்.

"போலாங்கையா"

குப்புராஜ் திரும்ப நாற்காலியில் உட்கார்ந்து கண்மூடிய நிமிடத்தில் போன் ஒலித்தது.

போனை எடுத்து "காமாட்சிபுரம் போலீஸ் ஸ்டேஷன்" என்றார்.

"சார், இங்க காமாட்சிபுரத்துகிட்ட கேரளா ரோட்டுலிருந்து வாய்க்காலுக்குப் போற கட்ரோட்ல ஒரு ஆளு செத்துக்கெடக்கறானுங்க" ஒரு ஆண்குரல் பதட்டத்துடன் ஒலித்தது.

குப்புராஜ் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தார். 'பகலிலேயே ஆள் நடமாட்டமில்லாத அந்தச் சாலையில் இரவில் எப்படி?'

மொட்டையான தகவல்கள் எரிச்சலூட்டக் கூடியவை. கிடப்பவன் யார்? ஏன் கிடக்கிறான்? விபத்தா? கொலையா? சொல்பவன் யார்? ஒருவேளை விபத்து ஏற்படுத்தியவனே போன் செய்கிறானா? இல்லாவிட்டால் புகார் கொடுக்கத் தயாராக இருக்கிறானா?

எல்லாவற்றையும் நிதானமாகக் கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டும்.

“யாருங்க? உள்ளூரா? என்ன ஆச்சுன்னு ஏதாவது தெரியுதா?” குப்புராஜ் தண்மையாகக் கேட்டார்.

“ஆருன்னு தெரியலீங். உள்ளூர் மாரி தெரியல. வளுசப் பயனாட்டமிருக்கு”

“நீங்க உள்ளூருங்களா?” ஏட்டு போன் செய்தவனுக்கு வயது நாற்பதுக்கு மேல் இருக்கும் என்று முடிவு செய்திருந்தார்.

“ஆமாங். பாலுக்குப் போனனுங்களா இங்க ஆளுக பாத்துச் சொன்னாங்க”

“நம்ம பேருங்க?” ஏட்டு கேட்டார்.

“ரங்கசாமிங்”

”அங்க இருப்பீங்களா? அஞ்சு நிமிசத்துல ஸ்டேசன்லிருந்து ஆளுக வந்துருவாங்க”

“சேரிங்க”

குப்புராஜ் ரிசீவரை வைத்துவிட்டு செல்லை எடுத்து இன்ஸ்பெக்டரின் எண்ணை அழுத்தினார்.

“ஆயிரம் மலர்களே" என்று செல் இனிமையாகப் பாடிய போது முகமது அபு பக்கருக்கு அது அலாரமா அல்லது அழைப்பா என்று புரிந்துகொள்ளச் சில விநாடிகள் பிடித்தன. மணி ஐந்து.

“பாய்” கனமான குரலில் அழைத்தது இன்ஸ்பெக்டர் அன்புசேகர்.

“காமாட்சிபுரம் அருகே ஒரு உடல் கிடக்கிறது. விபத்தாக இருக்கலாம். பாத்துட்டு வந்துடுங்க. பாலுவக் கூப்புட்டுக்குங்க”

சிறப்பு இளம் ஆய்வாளர் அபுவுக்கு வயது ஐம்பதாகப் போகிறது. நல்ல உயரம். உரமேறிய உடற்கட்டு. நரைத்த தலைமுடியை நெற்றி தெரியும்படி பின்னோக்கி வாரியிருந்தார். சாந்தமான நீள முகம். அதில் எப்போதும் ஒரு களைப்பு தெரியும். மீசை மோவாய் வரை இறக்கி கத்தையாக மேல்நோக்கி வளைந்திருந்தது. அவரது அகன்ற மார்பும் ஓநாய் போன்ற ஒடுங்கிய வயிறும் அந்த மீசையும் நரைமுடியும் யாரோ பொறுப்பான கம்பீரமான ஆள் என்ற எண்ணத்தை பார்த்த உடன் ஏற்படுத்தின. அவரது ராயல் என்பீல்ட் காமாட்சிபுரம் தண்ணீர்த் தொட்டியை நெருங்கியபோது இருளில் பாலு ஏற்கெனவே வந்து காத்திருப்பது தெரிந்தது.

அந்த அதிகாலையிலும் பாலுவின் ஷூ நுனி முகம் பார்க்கும் பளபளப்பில் இருந்தது. சுத்தமாக ஷேவ் செய்திருந்தான். பளிச்சென்று ஐந்தே முக்காலடி உயரத்தில் வாட்டசாட்டமாக இருக்கும் அவனை அபுவுக்கு மிகவும் பிடிக்கும். அதிகம் பேசாத பையன். திறமைசாலி. கடுமையாக உழைக்கத் தயங்காதவன்.

அபுவுக்கும் பாலுவுக்குமான உறவு வித்தியாசமானது. அபு பெரிதாக உறவு கொண்டாடும் ஆள் இல்லை. ஆனால் இருவருக்கும் ஏதோ பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. பாலுவுக்குப் புலனாய்வின் அடிப்படைகளைக் கற்றுக்கொடுத்தது அபுதான். உண்மைக் குற்றவாளிகளைப் பிடிக்க போலீஸ்காரர்கள் ரொம்ப அலட்டிக் கொள்ள மாட்டார்கள். யாரையாவது பிடித்துப்போட்டு கேஸைக் குளோஸ் செய்து விடுவார்கள் என்றுதான் நினைத்திருந்தான்.

அபு தலையாட்டி மறுத்தார். “கொல கேஸ்ல ஒருநாளும் முதல் எதிரியா சம்பந்தமில்லாதவனைப் போடமாட்டோம். நாலுபேர் செய்யறான். அஞ்சாவதா ஒருத்தன் தெரிஞ்சு சும்மா இருக்கான்னா அவனையும் சேத்துப் போடறது உண்டுதான். ஆனால் புட் அப் கேஸ் போட மாட்டோம்”

“யார் மேலயும் கொலைக்கு பொய் கேஸ் போட்டதில்லீங்களா அய்யா”

“குண்டு வெச்சது, தீ வெச்சது, கலவரம் பண்ணுனது மாதிரி கேஸ்கள்ளயும், டெரரிஸ்ட் கேஸ்கள்ளயும் கெடச்சவனை வெச்சுப் போடறது உண்டுதான். குண்டு வெடிப்பு நடந்தப்ப நெறயப் பேரப் புடிச்சு வெச்சிருந்தோம். அப்ப பஞ்சாப்ல இருந்து வந்த சிங் ஆபீசரா கமிஷ்னரா இருந்தார். அவரே நேரடியா வந்து எல்லா விசாரணையையும் கவனிப்பார். அவருகிட்ட ஓடிப்போய் ஐயா நான் ஒண்ணுமே செய்யலீங்கய்யா, விட்டுங்கன்னு அழுதா ஒரு நிமிசம் அவன் முஞ்சிய உத்துப் பாப்பாரு. அப்புறம் இவன விட்டுடுன்னு சொல்வார். அவ்வளவுதான். அவரு தன்னால தீவிரவாதியப் பாத்தாலே கண்டுபிடிச்சுக்க முடியும்னு நம்பினாரு. அந்த மாதிரி கேஸ்ல அரசியல் இருக்கும். ஆனால் சாதாரண கேஸ்ல கெடையாது”

“ஏன்?”

“ஏன்னா அப்புடிப் போட்டா உண்மையா கொன்னவன் வெளிய இருப்பான். அத எப்புடி போலீஸ் விடும்? பத்து வருசம் கழிச்சுப் புடிச்ச கேஸ் எல்லாம் இருக்குல்ல. புட் அப் கேஸ் போடறதுன்னா அப்பவே போட்டிருக்கலாம்ல கொலைகாரன் வெளியே இருப்பது போலீசுக்கு விடப்படுற சவால் இல்லையா? அப்படி விட்டுட்டு சிவிலியன்களைக் காப்பாத்தறோம்னு எப்படி நினைச்சுக்க முடியும்? ஒரு கொலையை நம்ம டிபார்ட்மெண்ட் தெகச்சுப்போற விஷயமாகவோ விடுகதையாவோ நெனைக்காது”

“பதினஞ்சு வருசத்துக்கு முன்ன கோவையில் மதக்கலவரங்கள் நடந்தப்ப ஒரு கடைக்கார அண்ணாச்சியை பெட்ரோல் ஊத்தி எரிச்சிட்டாங்க. அன்னைக்கு நடந்த ஒரே கொலை அதுதான். ரெண்டு

பக்கத்துப் பயலுகளும் நாங்க இல்லைங்கறாங்க. அண்ணாச்சி கிருஸ்டியன் வேற. விசாரிச்ச அதிகாரியால இதைக் கலவர வழக்கா இல்லையான்னு முடிவுசெய்ய முடியல. இது கலவரக்காரங்க ஸ்டைல் கெடையாது. வழக்கு கிடப்பில கெடந்துச்சு. ஒவ்வொரு முறையும் மேலதிகாரிகள் கேட்பாங்க. ஏதோ பதில் சொல்லிடுவோம். விசாரணை மறந்தே போயிருச்சு. அப்பத்தான் புதுசா ஒரு அதிகாரி வந்தார். வேறு கோணத்தில் அண்ணாச்சிக்கு வேறு தொடர்பு ஏதாவது இருக்கான்னு விசாரிச்சுப் பாத்தார். கள்ளக்காதல் வெவகாரம் வெளில வந்துருச்சு”

அபு ஒரு முஸ்லீம் என்பதால் நவம்பர் கலவரங்கள், குண்டு வெடிப்புப் பற்றியெல்லாம் அவரது கருத்தைக் கேட்க பாலு விரும்பினான். ஆனால் அபு ஒருநாளும் எந்த அரசியலும் பேசியது கிடையாது. மதம் தொடர்பான தனது கருத்தை வெளிப்படையாகச் சொன்னதும் கிடையாது. ஆனால் எதிரே இருப்பவன் இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும் உத்தரவு வந்தால் கண் இமைக்காமல் சுட்டுத் தள்ள அபுவால் முடியும் என்பதில் பாலுவுக்கு எந்த சந்தேகமும் இல்லை. தலை முதல் கால்வரை போலீஸ்காரர் அவர்.

பாலுவுக்கு அபுவைப் பிடிக்க இன்னொரு காரணமும் இருந்தது. சட்டம் ஒழுங்குப் பிரிவுக்கு மாற்றப்பட்ட புதிதில் மூத்த போலீஸ்காரர்களுடன் பீட்டுக்குப் போகும்போது பைத்தியம் பிடித்தது போலிருக்கும்.

வரும்போதே மூத்த காவலர் இரண்டு கட்டைப் பைகளுடன் வருவார். பீட் தொடங்கியதும் முதல் வேலையாக ராஜா பேக்கரிக்குச் சென்று கையை நீட்டி முன்னால் இருக்கும் பப்ஸையோ போண்டாவையோ எடுத்துக்கொள்வார். பாலுவைப் பார்த்து “கேக் எடுத்துக்கோ” என்பார். அவருக்கு சர்க்கரை இருக்கிறது .எனவே மற்றவர்கள் இனிப்பு தின்பதைப் பார்க்கப் பிடிக்கும். இரண்டு ஸ்ட்ராங் டீ சொல்வார். பின்பு பையை கடைக்காரனிடம் கொடுப்பார். கடைக்காரன் போண்டா, பக்கோடா, தேங்காய் பன், என்று பொட்டலமாகக் கட்டிக் கொடுப்பான்.

ஓனர் சிரித்தாலும் டீ மாஸ்டரின் முகத்தில் தெரியும் எரிச்சல்

கடுப்பேற்றும். பயிற்சி காலத்திலேயே பாலுவுக்கு இந்த வசூல் வேட்டை பிடிக்காது. ஆனால் மற்ற பயிற்சி காவலர்கள் இதை ரசிக்கத் தொடங்கிவிடுவார்கள். ஸ்ட்ராங் பத்தல, சக்கர பத்தல என்று மாஸ்டரை விரட்டுவார்கள். இருப்பதிலேயே விலையுயர்ந்த கேக்கை எடுத்துக் கொள்வார்கள். காவலர் பயிற்சியில் உரமேறிய வாட்டசாட்டமான உருவம், சீருடை அது தரும் திமிர் தெனாவட்டு... இரவு முழுவதும் வசூல் வேட்டை தொடரும். வழியில் இருக்கும் கையேந்தி பவன்களில் ஆம்லெட், ஆஃப் பாயில்கள்...

ஆனால் அபுவோடு முதல்நாள் பேக்கரிக்குப் போனதுமே பாலுவுக்கு வித்தியாசமான அனுபவம் கிடைத்தது. பணியாளர்கள் அபுவை விழுந்து விழுந்து கவனித்தார்கள். காரணம் பின்பு புரிந்தது. அபு கல்லா அருகில் சென்று பணத்தை நீட்டியபோது உரிமையாளர் வாங்க மறுத்தார். அபு பிடிவாதமாக நீட்டினார். "நான் பணம் கொடுக்காம எதுவும் சாப்பிட மாட்டேன்னு தெரியும்ல"

ஐந்து இருபதுக்கு பைக் உடல்கிடந்த இடத்துக்குச் சென்று விட்டது. கருக்கிருட்டு. தொலைவில் டார்ச் லைட் வெளிச்சங்கள் தெரிந்தன. வாய்க்காலில் இருந்து தண்ணீர் திருடும் கும்பல் இன்னும் பெட்டியைக் கட்டவில்லை போலிருக்கிறது. வாய்க்காலுக்குச் செல்லும் குறுக்குச் சாலைகளில் போலீஸ் வருகிறதா? என்று கண்காணிக்கும் ஆட்கள் தூங்கி வழிந்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

காமாட்சிபுரம் காவல் நிலையப் பரப்பின் ஓரத்தில் இந்தப் பெரிய வாய்க்கால் சென்றது. வழக்கமாக பிணங்கள் அதில்தான் மிதந்து வரும்.

உடல் காமாட்சிபுரத்துக்கு வெளியே வாய்க்காலுக்குச் செல்லும் சாலையின் ஓரத்தில் கிடக்கிறது என்றதும் அபுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. கொலை செய்பவர்கள் உடலை வாய்க்காலில் வீசிவிடுவார்கள். எனவே இது விபத்தாக இருக்குமோ என்ற எண்ணம் மனதில் ஓடியது. விபத்துகள் வழக்கமாக நெடுஞ்சாலையில்தான் நடக்கும். காமாட்சிபுரம் ஒரு ஒதுக்குப்புறமான கிராமம். அங்கே போக்குவரத்தே குறைவு. அங்கிருந்து இன்னும் உள்ளே செல்லும் சாலையில் விபத்து எப்படி

நடந்திருக்கும்? அதுவும் நள்ளிரவில்?

உடலைச் சுற்றி ஏராளமான நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அபு அதிருப்தியுடன் முகம் சுழித்தார். சம்பவம் நடந்த இடம் குற்றவாளியின் விசிட்டிங் கார்டு என்று சொல்வார்கள். ஏதாவது தடயங்கள் இருந்திருந்தாலும், வண்டி பிரேக் போட்ட அடையாளம் ஏதாவது இருந்திருந்தாலும் இந்தக் கும்பலில் கலைந்து போயிருக்கும்.

"ரங்கசாமின்னு ஒருத்தர் ஸ்டேஷனுக்குப் போன் செஞ்சாரு" அபு கூட்டத்தைப் பார்த்து பொதுவாகக் கேட்டார்.

வெள்ளை வேட்டியும் வெள்ளை அரைக்கைச் சட்டையும் அணிந்து தலைக்கு உருமாலை கட்டியிருந்த ஒருவர் முன்னால் வந்து "நாந்தானுங்க" என்று தயக்கத்துடனும் அதேநேரம் உரிமையுடனும் சொன்னார்.

"யாருன்னு தெரிஞ்சுதுங்களா?"

"இல்லங்கையய்யா. ஆருக்கும் அடையாளம் தெரியல"

"வண்டில வந்திருக்கானா?"

"வண்டி எதுவும் காணல சார்"

"தம்பி" அபு பாலுவை அழைத்தார். "எல்லாரையும் கொஞ்சம் தள்ளி நிக்கச் சொல்லிட்டு ஏதாவது கிடைக்குதான்னு பாருப்பா"

உடல் சாலையோரம் இருந்த பள்ளத்தில் சரிந்து குப்புறக் கிடந்தது. முகம் ஒருபக்கமாகத் திரும்பியிருந்தது. பின்னந்தலையில் தலையில் காயம். கருப்பு முடியில் ரத்தம் காய்ந்து பார்க்க என்னவோ போலிருந்தது. கண்ணாடி போல கண்கள் எங்கோ நிலை குத்தியிருந்தன. வெட்டி வைக்கப்பட்டிருக்கும் ஆட்டுத் தலைகளில் இருப்பது போன்ற மரணம் உறைந்த பாவம். தலைமயிர் புழுதி படிந்து சாம்பல் நிறமாகத் தெரிந்தது. தலையில் வழக்கமாக குப்பைப் படிவதில்லை. எனவே தலைமுடி கருப்பாக இருந்தாலும் வெளுப்பாக இருந்தாலும் அதில் ஒரு பளபளப்பு இருக்கும். ஆனால் தலை மண்ணில் கிடக்கும் போது தலைமுடியே குப்பை போலாகிவிடுகிறது.

அபு டார்ச் லைட் வெளிச்சத்தில் அதையே பார்த்துக்கொண்டிருந்தார். அதன் மீதான ஆரம்ப கட்ட விலக்கம் போய்விட்டது. இப்படிக் கண்முன் கரளை கரளையாகக் கிடக்கும் உடலுக்கு உயிர் இல்லை, அதனால் இயங்க முடியாது என்பது ஆச்சரியமாக இருந்தது.

இறந்து கிடந்தவன் இருபத்தாறு இருபத்தேழு வயது மதிக்கத்தக்க இளைஞன். மாநிறம். விளையாட்டு வீர்னைப் போன்ற வாளிப்பான தேகம். கொஞ்சமும் ஊளைச்சதை இல்லாமல் உடலமைப்பு செதுக்கி வைத்தது போலிருந்தது. நேரான மூக்கு, நீண்ட புருவங்களுடன் கூடிய திருத்தமான நீள முகம். அந்த வாளைமீன் போன்ற கச்சிதமான உடலமைப்பு பாலுவுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. இவ்வளவு அழகான வாலிபன் இனி இல்லை.

இருப்பதிலேயே சிக்கலானது இந்தத் தலைக் காயம்தான். அடித்தாலும், வாகனத்தால் இடிக்கப்பட்டாலும், தானாகக் கீழே விழுந்தாலும் இது போன்ற தலைக்காயம் ஏற்படலாம். ஏதாவது வண்டி அடித்துத் தூக்கி வீசியிருக்கலாம். அல்லது வேகமாகப் போய்க்கொண்டிருந்த ஏதாவது லாரியிலிருந்து தவறி விழுந்துமிருக்கலாம். கொலையாகவும் இருக்கலாம். ஒரே ஒரு அடி. அவ்வளவு நம்பிக்கையாக ஒரே ஒரு அடி அடித்து விட்டு போகும் அளவுக்கு அனுபவமுள்ள கொலைகாரன் இங்கே...

வழிப்பறி என்றால் அடி முன்னால் அல்லவா இருக்கும்? சாலை தெற்கே இருந்து வடக்கே சென்றது. உடல் மேற்குப்புறம் கிடக்கிறது. தெற்கே இருந்து வடக்கே செல்லும் வண்டிகள் சாலையின் மேற்குப்புற ஓரத்தில்தான் செல்லும். உடலும் அங்கேதான் கிடக்கிறது. எனவே பின்னாலிருந்துத் தட்டியிருக்கவும் வாய்ப்பிருக்கிறது.

அவன் ஜெர்சி பாண்ட் அணிந்திருந்தான். டிஷர்ட்டில் பாக்கெட் இல்லை. அபு கிழே கிடந்தவனது கால்சட்டைப் பைகளை அசங்காமல் சோதித்தார். திருப்பூர் பொள்ளாச்சி இடையே ஓடும் கோகுலம் பஸ் டிக்கெட்டும், பொள்ளாச்சியிலிருந்து காமாட்சிபுரம் வழியாக சேத்துமடை செல்லும் 11 சி பஸ் டிக்கெட்டும் இருந்தன. அவன் திருப்பூரிலிருந்து

வந்திருக்க வேண்டும் என்று மனதுக்குள் முடிவு செய்து கொண்டார். செல் இல்லை. பையன் நன்றாகத்தான் இருக்கிறான். செல் இல்லாமல் இருப்பவர்கள் பிச்சைக்காரர்கள் மட்டுமே. முதலில் பார்த்த யாராவது செல்லைத் திருடிக் கொண்டார்களா? இருக்கலாம். வாய்ப்பு இருக்கிறது. இல்லாமலும் இருக்கலாம்.

"ரங்கசாமிண்ணா?" அபு முதலில் பார்த்தவரை அழைத்தார்.

"நீங்க எப்ப எப்புடி பாடியப் பாத்தீங்க?" அபு ஆழ்ந்த யோசனையுடன் மெதுவாகக் கேட்டார். வழக்கமான கேள்விதான். முக்கியமாக எதுவுமில்லை. ஆனால் மேற்கொண்டு சிந்திக்க அபுவுக்கு ஏதாவது ஒரு புள்ளி தேவைப்பட்டது.

"நானும் இன்னும் ரெண்டு பேரும் வந்திட்டுருக்கும் போது..."

அபுவின் செல் ஒலித்து உரையாடலை இடை மறித்தது. அன்புசேகர்தான். "பாய் போயிட்டீங்களா?"

"ஆமாங்கையா. ஸ்பாட்லதான் இருக்கோம்"

"யாரது, என்ன விஷயம்னு தெரியுதா?"

"பாடி அடையாளம் தெரியலீங்கையா. ஆர்.டி.ஏ-வான்னு (சாலை விபத்தா) முடிவு செய்ய முடியல" என்றவர் கை அசைவில் டார்ச்லைட் ஒளி வட்டம் இறந்து கிடந்தவனின் தோளைத் தொட்டுத் திரும்பியதும் ஏதோ தோன்ற அனிச்சையாக உடலருகே சென்றார். கீழே கிடந்தவனின் இடது தோளில் டி ஷர்ட் ஒட்டிக் கொண்டிருந்தது. அபு நுனி விரல்களால் உடலின் தோள்பட்டை அருகே துணியை விலக்கிப் பார்த்தார். பின்பு இடுப்பிலிருந்து டிஷர்ட்டை மேலே தூக்கிவிட்டார்.

அவர் திடீரென்று அமைதியாகிவிட்டது மறுபுறமிருந்த இன்ஸ்பெக்டருக்குப் புரிந்திருக்க வேண்டும். அவரும் எதுவும் பேசாமல் காத்திருந்தார். முதுகில் சப்பை எலும்புக்குக் கீழே கோடுகோடாகக் காயங்கள் தெரிந்தன. டிஷர்ட் பாதி மறைத்துக் கொண்டிருந்ததாலும் மண் காய்ந்த ரத்தத்தில் ஒட்டியிருந்ததாலும் இருளில் பார்த்த உடன் தெரியவில்லை. ரத்தம் கசிந்து பனியன் அதில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இல்லை அந்த இடத்தில் பனியன் நைந்து போயிருந்தது. காயங்களின்

வடிவம்...

அபு சட்டென்று அவை வரி வரியான காயங்கள் அல்ல என்று கண்டு கொண்டார். ஸ்கேல் போன்ற பட்டையான ஏதோ ஒன்றைக் கொண்டு இரண்டு முறை தாக்கியிருக்கிறார்கள். எனவே நான்கு வரிகள் கொண்ட இரு காயங்கள். கோடு போலத் தோன்றிய இடத்தில் காயம் கருத்துப் போயிருந்தது. ரத்தம் கசிந்த அடையாளமும் தென்பட்டது. நடுவே ஒரு அங்குல இடைவெளியில் தோல் கன்றி போயிருந்தது.

அபு மனதுக்குள் தேடினார். இதுபோன்ற காயங்களை எங்கோ பார்த்திருக்கிறார். எங்கே...? இரும்பு பைப்பாலோ உருட்டுக் கட்டையாலோ ஏற்படுத்தப்படும் காயம் மொத்தமாக ஒரே கோடாக இருக்கும். ஏனென்றால் உருளை வடிவ ஆயுதத்தின் ஒரு பக்கம்தான் உடலில் படுகிறது. இரட்டை கோடு போன்ற காயம் ஏற்பட வேண்டுமென்றால் ரீப்பர் தடியாலோ இரும்பு ஸ்கேல் போன்ற ஆயுதத்தாலோ தாக்கப்பட வேண்டும். இந்தப் பிசிறில்லாத நேர்க்கோடுகள்... அபு சட்டென்று முடிவு செய்தார்.

"ஐயா தறிக்கட்ட அடி போலிருக்கய்யா" தறிக்கட்டை இரண்டரை அடி நீளத்தில் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படும் ஒரு தடி. பாதிவரை பட்டையாகவும் மீதி உருண்டையாகவும் பார்க்க அகலம் குறைவான பேட் போலிருக்கும். இந்தக் கட்டையால் அடித்துக் காயப்படுத்துவது மங்கலம் சோமனூர் பகுதிகளில் அவ்வப்போது நிகழ்வதுதான்.

இன்ஸ்பெக்டர் பறந்து வந்தார். அவருக்கும் சந்தேகம்தான். ஆனால் முடிவுக்கு வர முடியவில்லை. கொலை என்று முடிவு செய்துவிட்டால் ஸ்டேசன் அல்லோலகல்லோலமாகிவிடும். கிராமப்புறம் என்பதால் டிஎஸ்பி வந்துவிடுவார். அருகிலுள்ள ஸ்டேஷன்களின் ரைட்டர்கள் அனைவரும் வந்து குவிந்து விடுவார்கள். எக்ஸ்பிரஸ் எஃப்.ஐஆர், மகஜர் எல்லாவறையும் தயார் செய்துவிட்டுத்தான் செல்வார்கள். குற்றவாளியை அதுவரை அடையாளம் தெரியவில்லை என்றால் மேலதிகாரி தனிப்படை அமைப்பார். அது விசாரணை முடியும்வரை வேறு வேலைகளில் ஈடுபடாது.

இறந்தவன் யார் என்று தெரியவில்லை. கொலையா? விபத்தா?

என்று திட்டவட்டமான முடிவுக்கு வரமுடியவில்லை. இந்த நிலையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் தேவையில்லை, அடையாளம் தெரியட்டும் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று இன்ஸ்பெக்டர் முடிவு செய்தார். செய்தியை டிஎஸ்பிக்கு அறிவித்த போது. அவரும் அதை ஏற்றுக்கொண்டார்.

"போஸ்ட்மார்டம் ரிப்போர்ட் வரட்டும். அதுக்குள்ள அடையாளம் தெரியுதான்னு பாக்கலாம்"

எல்லாம் ஓய்ந்த பிறகு பாலு அபுவிடம் கேட்டான், "நீங்க என்ன நெனைக்கறீங்க அய்யா"

"கொலைதான்"

"எப்படிச் சொல்றீங்க?"

"செல்லைக் காணோம். மொதல்ல பாத்தவன் தனியாப் பாக்கல. கூட்டமாப் பாத்திருக்காங்க. அதனால வேடிக்கை பார்த்த யாரும் செல்லைத் திருடல. யாரோ இதுக்கு முன்னாடி எடுத்துட்டுப் போயிருக்கணும்.

அதோட அடிக்கப் பயன்படுத்திய ஆயுதம் ரொம்ப முக்கியம்ப்பா. அது ஓரளவுக்கு அடிச்சவனோட மனநிலையைக் காட்டிக் கொடுக்கும். விசைத்தறி இல்லாத இந்த இடத்துக்குத் தறிக்கட்டையை மெனக்கெட்டு தூக்கிட்டு வந்து ஒருத்தன் அடிச்சிருக்கான்னா அதுக்கு ஏதாவது காரணம் இருக்கணும்"

"எது கைல கெடக்குதோ அதை எடுத்து அடிக்க வேண்டியதுதானே அய்யா. இது தற்செயலா நடந்திருக்கலாமில்ல?"

"மேட்டுப்பாளையத்துல ஒருத்தன் தன்னை ஏமாத்தின ஒரு பெண்ணோட வீட்டுக்கு அருவாளோட வந்து கண்டபடி வெட்டியிருக்கான். அந்தப் பொண்ணு மயக்கம் போட்டுடுச்சு. அப்புறம்தான் தெரிஞ்சுது அவன் அருவாளோட மொன்னைப் பக்கத்துல வெட்டியிருக்கான்னு. பத்து வெட்டு எப்புடி ஒருத்தன் அருவாளைத் திருப்பி வெட்ட முடியும்? அவ சாகக் கூடாதுங்கறதுதான் அவனோட விருப்பம். அதனால அவனுக்கே தெரியாம மொன்னைப் பக்கத்துல வெட்டியிருக்கான். இன்னொரு கேஸ்ல

முதுகுல ஒரு முப்பது குத்து. ஏன்னு பார்த்தா ஏதோ பிஸினஸ்ல கொலைகாரனை செத்தவன் ஏமாத்திட்டானாம். தன்னை செத்தவன் முதுகுல குத்திட்டான்னு கொலைகாரன் நெனைச்சிட்டான். அதான் பதிலுக்கு முதுகுல குத்திக் கொதறிட்டான்”

“இதுல தறிக்கட்டைல அடி. பொணத்த ரோட்டோரமா இழுத்துப் போட்டுட்டுப் போயிருக்கான். நாய் மாதிரி. வெறுப்பு, கோபம் தெரியுது. தறிக்கட்ட இதுல ஏதோ ஒரு விதத்துல சம்பந்தப்பட்டிருக்கு. முன் விரோதம் இருந்திருக்கு”

இந்த இடம் அணைக்கு மிக அருகில் உள்ள பகுதி. எப்போதும் ஈர வாடை அடிக்கும். இருபுறமும் நெல் வயல்கள். அங்கங்கே தென்னந் தோப்புகள். இந்த ஊரில் அபுவுக்குப் பிடித்ததே இந்தப் பசுமைதான். முந்நூறு நானூறு மீட்டருக்கு ஒருமுறை கால்வாய்கள் குறுக்கும் நெடுக்குமாகப் போகும். பெரும்பாலும் தண்ணீர் இருக்கும். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஒரு பகுதி மடையில் தண்ணீர் விடுவார்கள். அப்போது இன்னொரு புறம் தண்ணீர் போகாமல் மடையை அடைத்து விடுவார்கள். ஆனாலும் மறுபகுதிக்காரர்கள் மதகின் கரைக்காகப் போடப்பட்டிருக்கும் கான்கிரீட்டில் ஷட்டர் ஓரம் வாய்க்கால் சுவரை கொஞ்சமாக உடைத்து விடுவார்கள். தண்ணீர் வந்துகொண்டே இருக்கும். உடைப்பை சரி செய்ய வேண்டுமென்றால் பெரிய வாய்க்காலில் தண்ணீர் வருவதையே நிறுத்த வேண்டியிருக்கும். அது சாத்தியமில்லை.

தோட்டங்களுக்குப் பாயும் சிறு வாய்க்கால்களில் தண்ணீரைத் தடுக்கும் ஷட்டரை பெயர்த்து எடுத்துவிடுவார்கள். தண்ணீருக்குப் பஞ்சம் இல்லாததால் தென்னந்தோப்புகளில் எப்போதும் ஈரமிருக்கும். ஷட்டர் அடைப்பது, உடைப்பதில்தான் பெரும்பாலும் பிரச்சினை வரும். சென்ற ஆண்டு இதில் ஒரு கொலை கூட நடந்திருக்கிறது. கும்மிருட்டில் ஆளரவமற்ற தோட்டங்களில் தண்ணீர்த் திருட்டை கண்டுபிடித்துக் கேட்கப்போனால் எது வேண்டுமானாலும் நடக்கலாம்தானே. இது அது மாதிரி பிரச்சினையாகத் தெரியவில்லை. ஆள் வெளியூர்க்காரன். தவிர தண்ணீர் திருட்டு சண்டையுமில்லை. அவர்கள் பிணத்தைத் தூக்கி வாய்க்காலில் வீசி விடுவார்கள். தெருவில் போட்டு வைக்கமாட்டார்கள்.

ஐந்து கிலோமீட்டரில் மூன்று மட்டைமில்கள். தென்னங் கீற்றுகள், தேங்காய் மட்டைகளை நாராக்கி மஞ்சி போலச் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் இப்போது வளர்ந்து வருகிறது. இதை உரத்தோடு கலந்து மாடித் தோட்டம் அமைக்க மண்ணுக்குப் பதிலாகப் பயன்படுத்துகிறார்கள். மண்ணை விட எடை குறைவாக இருப்பதால் மாடிகளில் தொட்டியில் நிரப்ப ஏற்றதாகக் கருதப்படுகிறது. இந்த மஞ்சி ஐரோப்பாவுக்கும், இஸ்ரேலுக்கும் ஏற்றுமதியாகிறது. உள் நாட்டிலும் மாடித்தோட்டம் அமைக்க இப்போது இதைப் பயன்படுத்துகிறார்கள்.

சில மட்டை மில்களில் தேங்காய் நாரிலிருந்து தயாரிக்கப்பட்ட மஞ்சி இடுப்புயரத்திற்கு அழகாக சதுர வடிவில் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. மட்டை மில்களில் டிராக்டர்களில் இருந்து தென்னை மட்டைகள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

இரண்டு ஸ்பின்னிங் மில்களும் இங்கே இருக்கின்றன. அபுவுக்குப் பிடிக்காதது இதுதான். எல்லா ஊர்களில் இருந்தும் சின்னப் பெண்களை அழைத்துவந்து வேலை வாங்குகிறார்கள். எப்போதாவது யாராவது அப்பா அம்மா வந்து எங்கள் பெண்ணை விட மாட்டேனென்கிறார்கள் என்று புகார் சொல்வார்கள். அபு பிளஸ் டூ படிக்கும் தன் பெண்ணை நினைத்துக் கொள்வார். வாய்ப்புக்கிடைக்கும் போது நிர்வாகத்தை மிரட்டி பாதிக்கப்பட்ட பெண்ணை பெற்றோரோடு அனுப்பிவிடுவார். இந்த நிர்வாகிகளை அவருக்கு அடியோடு பிடிக்காது. 'இவர்கள் முதலாளிகளே இல்லை ரவுடிகள், கிரிமினல்ஸ்' என்று சரக்கடிக்கும் போது சொல்வது வழக்கம்.

இந்த மில்லுக்கு வந்தவன் எவனாவது இருக்குமோ? அக்கா தங்கையை அல்லது காதலியைத் தேடி வந்தவனோ? இரவில் இயங்குவது இந்த மில்கள்தான். இவர்கள் எதையும் செய்யக் கூடியவர்கள். அபு சிந்தனையில் ஆழ்ந்தபடி நிதானமாக பைக்கைச் செலுத்திக் கொண்டிருந்தார். கரவழி என்று இந்தப் பகுதியில் சொல்லப்படும் வயல்வெளி தொடங்கிவிட்டது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை பச்சைப் பசேலென்ற வயல்கள் பரந்து விரிந்திருந்தன. நாற்றங்கால்களில் தண்ணீர் சலசலத்துப் பாய்ந்து கொண்டிருந்தது.

பார்வை மகஜர்

இன்று 9. 12. 2016 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு காமாட்சிபுரம் காவல் ஆய்வாளர் டி.அன்புசேகராகிய நான், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 174 (சந்தேக மரணம்) -இன் கீழ், காமாட்சிபுரம் காவல்நிலைய குற்ற எண்.195/16 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில் புலன் விசாரணையின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்து ஆஜர் சாட்சிகள் 1.திரு ப.குழந்தைச்சாமி, வயது 45 த/பெ. அய்யனார், 6/104 பட்டத்தரசியம்மன் கோவில் வீதி காமாட்சிபுரம், 2. திரு.பி. செல்வராஜ் 48, த/பெ பழனிச்சாமி 6/105 பட்டத்தரசியம்மன் கோவில் வீதி, காமாட்சிபுரம், ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு எழுதும் பார்வை மகஜர்.

சம்பவ இடமானது காமாட்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தென்மேற்கில் அமைந்துள்ளது. காமாட்சிபுரத்திலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் கேரளா செல்லும் சாலையிலிருந்து ராமநல்லூர் செல்லும் பத்தடி அகல தார்ச் சாலை பிரிகிறது. இச்சாலையானது தென்வடலாக அமைந்துள்ளது. சம்பவ இடமானது அந்தச் சாலையில் ஒரு கிலோமீட்டர் வடக்கே டிரான்ஸ்பார்மருக்கு அருகே மேல்புறம் அமைந்துள்ளது. இந்த இடத்தில் சுமார் 25-லிருந்து 30 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் பிரேதம் தலை மேற்காகவும், கால்கள் கிழக்காகவும் சாலை ஓரச் சரிவில் கிடக்கிறது. வலது பின் தலையில் ரத்த காயம் காணப்படுகிறது. தலை இருக்கும் இடத்தில் புல்லிலும் மண்ணிலும் ரத்தம் படிந்துள்ளது. முதுகில் பட்டையான ஆயுதத்தால் தாக்கப்பட்டது போன்ற வரிவரியான காயங்கள் உள்ளன. இரு கால்களிலும் கருப்பு நிற செருப்புகள் உள்ளன. கருப்பில் பச்சைக் கோடு போட்ட ஜெர்சி பேண்ட், நீல நிறத்தில் கருப்பு வெள்ளை கோடு போட்ட காலர் டிஷர்ட், பழுப்பு நிற ஜட்டி அணியப்பட்டுள்ளது. பிரேதம் குளிர்ந்தும், விறைத்தும் காணப்படுகிறது.

வேறு உடமைகள் இல்லை. சம்பவ இடத்திற்கு வடபுறமும், தென் புறமும் நெல் வயல்கள் உள்ளன. அருகில் வீடுகள் எதுவும் இல்லை.

வேறு தடயங்கள் எதுவுமில்லை.

காவல் ஆய்வாளர்

காமாட்சிபுரம் காவல் நிலையம்

கோயமுத்தூர் மாவட்டம்.

ஒப்பம்

(ஏ.குழந்தைச்சாமி)

(பி.செல்வராஜ்)

கைப்பற்றுதல் மகஜர்

1. காவல்நிலையத்தின் பெயர்

காமாட்சிபுரம்

2. குற்ற எண், சட்டப்பிரிவு

கு.எண்: 195/16. குற்றவியல்

நடைமுறை சட்டம் பிரிவு 174

(சந்தேக மரணம்)

3. கைப்பற்றுதல் செய்யும் தேதி, மணி, இடம்

9.12.2016 காலை 6.30மணி,

கேரளா சாலையிலிருந்து

ராமநல்லூர் செல்லும் குறுக்குச் சாலை

4.யாரிடமிருந்து கைப்பற்றப்படுகிறது

சம்பவ இடத்திலிருந்து

5. கைப்பற்றிய சொத்துகள்

. ரத்தம் படிந்த மண் கொஞ்சம்

ரத்தம் படியாத மண் கொஞ்சம்

6. சாட்சிகளின் பெயர் விலாசம்

1. ஏ.குழந்தைச்சாமி,

2. பி.செல்வராஜ்

7. கைப்பற்றுதல் செய்யும் அதிகாரி

டி.அன்பு சேகர் காவல் ஆய்வாளர்

காமாட்சிபுரம் காவல் நிலையம்.

கோயமுத்தூர் மாவட்டம்

8. சாட்சிகளின் கையெழுத்து

9. கைப்பற்றுதல் செய்யும் அதிகாரியின் கையெழுத்து .

முதல் தகவல் அறிக்கையையும் இந்த ஆவணங்களையும் எழுத்தர் தயாரித்து முடிக்க மணி பத்து ஆகிவிட்டது. சாட்சிகள் காவல்நிலைய வராந்தாவில் போடப்பட்டிருந்த பெஞ்சில் உட்கார வைக்கப்பட்டிருந்தனர்.

அபு சாட்சிகளிடம் கையெழுத்துப் பெற்றுவிட்டு "யார் கேட்டாலும் பாடி கெடந்த எடத்திலதான் எழுதிக் கையெழுத்துப் போட்டோம்னு சொல்லணும். அங்க மொட்ட வெயில்ல வேண்டான்னுதான் இங்க வந்திருக்கோம்" என்றார். அது அவசியமே இல்லை. சாட்சிகள் காவல்நிலையம் வழக்கமான அழைக்கும் ஸ்டாக் விட்னஸ்கள். இந்த நடைமுறைகளுக்குப் பழக்கப்பட்டவர்கள். காவல்நிலையம் ஆவணங்கள் தயாரிக்க தற்செயலாக சம்பவ இடத்தில் இருக்க நேரிடும் ஆட்களை சாட்சிகளாகப் பயன்படுத்தாது. அவர்களது ஆரம்ப உற்சாகம் போகப் போக வடிந்துவிடும். மேலும் அவர்கள் காவல்நிலையத்தின் கட்டுப்பாட்டில் இருப்பார்களா என்பது சந்தேகம். இது வழக்கின் மீதான காவல்துறையின் பிடியைப் பாதிக்கும். எனவே போலீஸ் பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள், நண்பர்கள் அல்லது தங்களது இருப்பில் இருக்கும் வழக்கமான நபர்கள் ஆகியவர்களையே சாட்சிகளாகப் பயன்படுத்துவார்கள்.

கையெழுத்தைப் பெற்ற பின்பு அபு, இன்ஸ்பெக்டர் அறைக்குள்

சென்று “ஐயா மகஜர் ரெடி பண்ணீட்டனுங்க” என்றார்.

“எக்ஸ்பிரஸ் எ஼ப்.ஐ.ஆர் ஐ கோர்ட்டுக்கு அனுப்பிட்டு, சுப்பிரமணியம் ஏட்டையாகிட்ட பாடிய ஜி.ஹெச்க்குக் கொண்டுபோகச் சொல்லிருங்க. பாடியிலிருக்கிற டிரஸை எடுத்து ஃபார்ம் 86 போட்டிருங்க”

“சரிங்கய்யா” அபு சல்யூட் அடித்துவிட்டு வெளியேறினார்.

அன்புசேகர் புருவங்கள் நெறிய விட்டத்தைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்தார். இந்நேரம் உடலைத் தேடிக்கொண்டு யாராவது வந்திருக்க வேண்டும். வரவில்லை. வாட்டசாட்டமான அழகான இளைஞன். இந்த ஏரியாவுக்குப் புதிது போலிருக்கிறது. திருப்பூர் பக்கமிருந்து யாரைப் பார்க்க வந்திருப்பான்? திருப்பூர் சம்மந்தப்பட்டவர்கள் யார் இங்கே இருக்கிறார்கள்? திருப்பூர் என்றால் திருப்பூர் மட்டுமல்ல. சோமனூர், அவினாசியிலிருந்து பெருந்துறை தொழில்பூங்கா வரை எல்லோரும் திருப்பூர் என்றுதான் சொல்லிக்கொள்கிறார்கள்.

மாலைவரை பார்க்கலாம். அதற்குள் யாரும் வராவிட்டால் சுற்றிலும் இருக்கும் காவல்நிலையங்களுக்குத் தகவல் கொடுக்கலாம் என முடிவு செய்தார்.

ஸ்டேட்மெண்ட் ஆ஼ப் ஹெட் கான்ஸ்டபிள் 1148 திரு சுப்பிரமணியம், காமாட்சிபுரம் காவல்நிலையம் எக்சாமிண்ட் ஆன் 10.12.2016

நான் கோவை மாவட்டம் காமாட்சிபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிகிறேன். நேற்று காமாட்சிபுரம் காவல் நிலைய ஆய்வாளர் ஆகிய உங்களுடன் குற்ற எண் 195/16 என்ற வழக்கில் புலன் விசாரணைக்கு உதவியாக காலை 5.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்து இருந்தேன். தாங்கள் பிரேத விசாரணை செய்து பகல் 11.15 மணிக்கு என்னிடம் பிரேதத்தை ஒப்புவித்து கோவை சி.எம்.சி மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப் பணித்தீர்கள். அவ்வாறே நேற்று பிரேதத்தைப் பரிசோதனைக்கு உட்படுத்தி பிரேதத்தின்மீது காணப்பட்ட 1.ரத்தக்கறை படிந்த கிழிந்த கறுப்புநிற ஜெர்சி பேண்ட் ஒன்று 2. ரத்தக்கறை படிந்த கிழிந்த நீல நிற வெள்ளைக்கோடு போட்ட டிஷர்ட்

ஒன்று 3. பழுப்பு நிற ஜட்டி ஒன்று 4. கறுப்பு நிற ஒரு ஜோடி செருப்பு ஆகியவற்றைப் படிவம் 86-இல் கைப்பற்றி தனியறிக்கை மூலம் காமாட்சிபுரம் காவல்நிலையத்தில் ஒப்புவித்தேன். என்னை காமாட்சிபுரம் காவல் நிலைய ஆய்வாளராகிய நீங்கள் விசாரிக்க மேற்சொன்ன விவரத்தைச் சொன்னேன். படிக்கக் கேட்டேன். சரி.

அந்த உடல் கோவை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு இரண்டு நாட்களாகிவிட்டன. யாரும் தேடிக்கொண்டு வரவில்லை. காணாமல் போய்விட்டதாகப் புகாரும் வரவில்லை.

அபு அந்தப் பகுதி முழுவதும் துப்புரவாக விசாரித்து விட்டார். ஸ்பின்னிங் மில்களுக்கோ, மட்டை மில்களுக்கோ யாரும் வரவில்லை. அங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் ஒரு வலிமைவாய்ந்த சமூகத்தின் தலைவர் மனோகரனின் வீட்டுக்குப் பலர் வருவதுண்டு. அங்கேயும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அவர்கள் சம்பந்தப்பட்டவரும் யாருமில்லை.

வழக்கமாக சனிக்கிழமைகளில் நடக்கும் டிஎஸ்பியுடனான சந்திப்புச் சற்று இறுக்கமாக இருந்தது. வழக்கு இன்னும் சந்தேக மரணம் எனப்படும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 174-லேயே இருந்தது. கொலை என்றால் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-க்கும், சாலை விபத்து என்றால் 304 ஏ-வுக்கும் மாற்றப்பட வேண்டும். விசாரணையில் முன்னேற்றம் இருந்தால்தானே இது சாத்தியம்? நாளாக ஆக மேலதிகாரிகள் தொல்லை அதிகரித்துவிடும். மேலதிகாரிகளுக்கு இது ஒரு வேலை. எத்தனை வருடம் ஆனாலும் தவறாமல் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். பதில் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். வேறு வழியில்லை. காவல் நிலையம் சட்டம் ஒழுங்கைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். அதனால் மர்ம முடிச்சுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

சடலக் கூராய்வு அறிக்கை

போஸ்ட் மார்டம்.எண் 1964/16 தேதி

குற்ற எண் 195/16 காமாட்சிபுரம் காவல் நிலையம்

சுமார் இருபத்தி ஏழு வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத ஆண் பிரேதம். உடல் தலைமைக் காவலர் சுப்பிரமணியம் எண் 1148 என்பவரால் கொண்டு வரப்பட்டது. காமாட்சிபுரம் காவல் நிலைய ஆய்வாளர் அன்புசேகர் என்பவர் சடலக் கூராய்வுக்கான அனுமதி கோரி

அனுப்பப்பட்ட கடிதத்தின் பேரில்

அடையாளக் குறிகள்

1. இடது மார்பில் ஒரு கருப்பு மச்சம்.

2. வலது முழங்கைக்குக் கீழ் ஒரு கருப்பு மச்சம்.

உடலானது என்னால் 2.15 மணிக்கு பார்க்கப்பட்டது. உடல் முழுவதும் விறைப்புத் தன்மை உள்ளது. சடல கூறாய்வு 3.15 மணிக்குத் தொடங்கியது. நல்ல வளர்ச்சியடைந்த 27 வயது மதிக்கத்தக்க ஆண் உடல். கை கால் நகங்கள் வெளிறி உள்ளன.

கீழ்க்கண்ட காயங்கள் உடலின் மீது காணப்பட்டன.

- இடது நெற்றியில் 5 X 3 க்கு 1 செமீ அளவுள்ள சிவப்பு நிறமான வீக்கம்

- வலது occipital பகுதியில் எலும்பு ஆழத்துக்கு 0.5X0.5 ஒரு காயம்

- இடது முதுகில் தோள்பட்டையிலிருந்து கீழாக 2செமீ அகலம் 15 நீளத்துக்கு தோல் உரிந்த நீளமான சிதைந்த காயம்.

- இடது முதுகில் வில எலும்புகளுக்குப் பின்புறம் இடமிருந்து வலமாக 2 செமீ அகலம் 12 நீளத்துக்கு தோல் உரிந்த நீளமான சிதைந்த காயம்

கருத்து: மரணம் செரிபிரல் காயத்தால் நிகழ்ந்திருக்க வேண்டும். மரணம் சடலக் கூராய்வுக்கு உட்படுத்தப்பட்ட நேரத்துக்கு 10லிருந்து 24 மணிநேரம் முன்பாக நடைபெற்றிருக்க வேண்டும்.

இதுவரை கோவை மார்ச்சுவரியில் இருந்த மருத்துவர்களிலேயே முருகராஜ்தான் மோசமானவர். ஒரு பதில் வாங்குவதற்குள் போதும் போதுமென்றாகிவிடும். எப்போதும் தண்ணியில் இருப்பார். தான் போஸ்ட் மார்டம் பிரிவில் இருப்பதால்தான் குடிப்பதாகச் சொல்லிக்கொள்வார். ஆனால் குடிபோதையில் பிரச்சினை செய்ததால்தான் போஸ்ட் மார்ட்டம் பிரிவுக்கே அவர் மாற்றப்பட்டார் என்பது எல்லாருக்கும் தெரியும்.

எந்த மருத்துவராக இருந்தாலும் மேலோட்டமாகப் பார்த்தால் சடலக் கூராய்வு அறிக்கையில் தவறு ஏதும் இருக்காது. ஆனால் இன்னும் ஆழமாக விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். ஒரு மருத்துவர் ஊகம் செய்யலாம். ஆனால் ஊகம் செய்தால் பின்பு எதிரி வழக்குரைஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படும் போது நெருக்கடியில் சிக்கிக் கொள்ள வாய்ப்புள்ளது என்பதால் திட்டவட்டமாகத் தெரிவதை மட்டும் சொல்வார்கள். பின்புறமிருந்து அடிக்கப்பட்டிருந்தால், தாக்கப்பட்டிருந்தால்தான் இந்த மாதிரி எலும்பு முறிவு கபாலத்தில் ஏற்பட வாய்ப்புண்டு என்று தோன்றுகிறது. ஆனால் மருத்துவர் அதை வெளிப்படையாகச் சொல்வதில்லை.

கோவை செல்லும்போது முருகராஜை நேரில் பார்த்து சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று அன்புசேகர் நினைக்குக் கொண்டார்.

இது அணையை ஒட்டிய பகுதி என்பதால் விவசாயம்தான் முக்கிய தொழில். ஆனால் இப்போது இங்கே தென்னை கீற்றுகள், தேங்காய் நார் ஆகிவற்றை மஞ்சியாக்கும் மட்டை மில்கள் ஏராளமாக வந்து விட்டன. நான்கைந்து ஸ்பின்னிங் மில்களும் கூட வந்துவிட்டன. எனவே புதுப்புது ஆட்களின் நடமாட்டமும் அதிகமாகிவிட்டது.

பத்து கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கும் ராமநல்லூரிலும் இப்போது வடஇந்தியர்கள் அதிகம் வந்துவிட்டார்கள். அவர்களில் யாராவதாக இருக்குமோ என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் வடஇந்தியர்கள் எப்போதும் கூட்டமாகத்தான் இருப்பார்கள். யாராவது ஒருவனைக் காணவில்லையென்றால் உடனே தெரிந்துவிடும். அன்புசேகர் ஏதோ நினைப்பில் மேசை டிராவில் வைத்திருந்த அந்தப் பிரேதத்தின் புகைப்படங்களை எடுத்துப் பார்த்தார். மாநிறம், ஒழுங்காகக் கத்தரிக்கப்பட்ட மீசை. முகம் சுத்தமாக மழிக்கப்பட்டிருந்தது. முதுகில் பட்டையாகக் காயங்கள். இதையும், தலையிலிருந்த காயத்தையும் தவிர வேறெந்த காயமுமில்லை.

ஒருவேளை இது ஏதேனும் விபத்துதானோ? எந்த வண்டி இடித்தால் இப்படி காயமேற்படும். டிராக்டரா? அதனால் பின்னால் இருந்து ஒருவனை

இடித்துத் தள்ள முடியுமா? அதுவும் இரவில்? டிப்பர் லாரியின் உயரம் சரியாக இருக்குமா? மனதுக்குள் டிப்பர் லாரியைக் கொண்டுவர முயன்றார். அல்லது ஏதாவது லாரியிலிருந்து உருண்டு விழுந்தால் இப்படிக் காயம் ஏற்பட வாய்ப்பிருக்கிறதா? ம்ஹூம். விபத்து என்ற கோணத்தில் சிந்தித்தால் ஏதோ ஒன்று இடிக்கிறது. யார் வீட்டிற்கும் வந்ததாகத் தெரியவில்லை. கூட்டத்தில் இருந்த யாருக்கும் அவனை அடையாளம் தெரியவில்லை. பகலில் யாரும் அவனைப் பார்க்கவுமில்லை.

உடல் கிடந்த இடம் காமாட்சிபுரத்தில் இருந்து ராமநல்லூர் செல்லும் வழியில் வயல்வெளி ஓரம். இந்தப் பகுதியிலேயே காமாட்சிபுரம்தான் பெரிய கிராமம். அல்லது சிறிய நகரம். அடுத்த ஊர் பொள்ளாச்சிதான். உடல் கிடந்த இடம் பொள்ளாச்சியில் இருந்து இருபத்தி மூன்று கிலோமீட்டர் தூரம் மேற்கே இருக்கிறது. இந்தச் சாலையில் உடல் கிடந்த இடத்தில் இருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் ஒரு ஸ்பின்னிங் மில் இருந்தது. உடல் கிடந்த இடத்துக்கு அருகிலேயே இரண்டு மட்டை மில்கள் இருந்தன. மட்டை மில்களில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் உள்ளூர்க்காரர்கள். அது சம்பந்தமாக யாராக இருந்தாலும் தெரிந்துவிடும். ஸ்பின்னிங் மில்லிலும் பெரும்பாலும் பெண்கள்தான் வேலை செய்கிறார்கள். ஆண்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் இருக்கிறார்கள்.

இந்த விசித்திரமான இடத்தில் விசித்திரமான நேரத்தில் இவனுக்கு இங்கே என்ன வேலை? இறந்தவன் நடந்தா வந்தான்? அவனது செல்போன் எங்கே? முதலில் உடலைப் பார்த்தவர்கள் ஆட்டையைப் போட்டு விட்டார்களா? அல்லது... வண்டியில் வந்திருந்தால் வண்டி எங்கே?

பல்வேறு கேள்விகளுடன் அன்புசேகர் சிந்தனையில் ஆழ்ந்திருந்த போது முன்னால் இருந்த தொலை பேசி ஒலித்தது.

“இலுப்பப்பாளையம் போலீஸ் ஸ்டேஷனில் இருந்து சார்” குப்புராஜ் அன்புசேகரிடம் ரிசீவரை நீட்டினார். அன்புசேகர் முகம் சட்டென்று பிரகாசமானது. சுற்றிலும் உள்ள காவல் நிலையங்களுக்குத் தகவல் அனுப்பி “மேன் மிஸ்ஸிங்” வழக்கு ஏதாவது வந்திருக்கிறதா? என்று

கேட்டிருந்தார். அதில் இலுப்பப்பாளையம் காவல்நிலையமும் ஒன்று.

“இலுப்பப்பாளையத்தைச் சேர்ந்த பாஸ்கர் என்ற இளைஞனை மூன்று நாட்களாகக் காணவில்லை. அவனது செல்போன் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டிருக்கிறது”

‘இவன்தான்’ என்று அவர் மனது சொன்னது.

இலுப்பப்பாளையம் கோவை - அவினாசி சாலையில் உள்ள கிராமப்புற காவல் நிலையம்.

அன்புசேகர் அபுவை அழைத்தார். புகைப்படத்தில் இறந்தவனின் முதுகுப்புறம் இருந்த காயத்தை சுட்டிக்காட்டினார்.

“தறிக்கட்டைன்னு சொன்னீங்களே அது என்ன பாய்?”

“ஐயா சோமனூர் பக்கம் பவர்லூம்ல யூஸ் பண்ணற கட்டை இப்படித்தான் இருக்கும்”

அவ்வளவுதான். ஆள் இலுப்பப்பாளையத்தைச் சேர்ந்தவன். அது சோமனூருக்கு அருகில்தான் இருக்கிறது. முதல் முடிச்சு அவிழ்ந்து விட்டால் போதும். எல்லாம் அதனதன் இடத்தில் உட்கார்ந்து விடும். கர்ப்பிணிப்பெண்ணுக்குப் பெரும்பாலும் நல்லவிதமாகக் குழந்தை பிறந்துவிடுகிறது அல்லவா? அதுபோல குற்றவாளிகள் பெரும்பாலும் பிடிபட்டு விடுவார்கள் என்பதில் காவல்துறை அமைப்பு சந்தேகம் கொள்வதில்லை. அந்த மனநிலைக்குத் தனது ஊழியர்களையும் பயிற்றுவிக்கிறது. இது திருடன் போலீஸ் விளையாட்டு. கொஞ்சம் முன்னே பின்னே ஆனாலும் திருடன் பிடிபட்டுத்தானே ஆகவேண்டும்? அதுதானே விதி.

“பாய், பாலுவைக் கூட்டிட்டு நீங்க இலுப்பப்பாளையம் போய் அவன் யாரு என்னன்னு பாத்துட்டு வந்திருங்க. பாலுவ திருப்பூர் பக்கத்திலிருந்து நைட் வந்த பஸ்கள்ல விசாரிக்கச் சொல்லுங்க”

அவர்களை அனுப்பியதும் அன்புசேகர் தனது சோர்ஸ் துரைபாண்டிக்கு போன் செய்தார். சோர்ஸ் என்பவர் காவல்துறைக்கு உளவு சொல்பவர், இன்பார்மர். ஒவ்வொரு இன்ஸ்பெக்டருக்கும் உளவு

சொல்பவர்கள் முக்கியம். பத்து பேராவது இருக்க வேண்டும் என்று பயிற்சியின்போது சொல்லித்தருவார்கள். உள்ளூர் மளிகைக் கடைக்காரர்கள், ஆளும் கட்சி, எதிர்க்கட்சிக்காரர்கள், சிறு குற்றங்களில் ஈடுபட்டு ஸ்டேஷனுக்கு வந்து பழகியவர்கள் என பலர் சோர்ஸாக இருப்பார்கள். முதல் கட்ட விசாரணையின் போது கிடைத்த தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ள உளவாளிகளிடம் பேசுவது அவசியம் என்று தோன்றியது. எந்த போலீஸ் அதிகாரியும் மற்றவர்கள் முன்னால் தனது சோர்ஸிடம் நேரடியாகப் போய் பேசுவதில்லை. உளவாளிகளுடனான எல்லாத் தொடர்புகளும் போன் மூலமாகவே இருக்கும்.

“திருப்பூர் அவினாசி பல்லடம் பக்கமிருந்து வந்த ஆட்கள் யாராவது நடமாடினார்களா? அந்த ஊர்களைச் சேர்ந்தவர்களுக்கு இங்கே உறவினர்கள் இருக்கிறார்களா?” என்று விசாரித்தார்.

அந்தச் சாலையில் திருப்பூர் பக்கத்தில் உறவினர்கள் இருக்கும் ஆட்கள் யார்? யார்? என்று கேட்டார். ஏறக்குறைய எல்லா தோட்டக்காரர்களுக்கும் அங்கே உறவினர்கள் இருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட சமுதாயத் தலைவர் மனோகரன் வீட்டுக்கு அந்தப் பக்கத்திலிருந்து பலர் வருவார்கள். “இறந்தவன் என்ன சாதி?” என்று துரைப்பாண்டி கேட்டதும் அன்புசேகர் திடுக்கிட்டார். அதைப்பற்றி அவர் சிந்திக்கவே இல்லை. அதாவது இறந்தவன் அடையாளம் தெரியாததால் அதைப்பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

‘இறந்து கிடந்தவன் என்ன சாதி?’

அன்புசேகர் இலுப்பப்பாளையம் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டரை திரும்பவும் தொடர்பு கொண்டார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய். தகவல் கேட்டது போலவும், அதேநேரம் அந்த லிமிட்டுக்குள் தான் விசாரிக்க இருப்பதை அறிவித்தது போலவும்...

காவல் அதிகாரி எங்கே வேண்டுமானாலும் சென்று யாரை வேண்டுமானாலும் விசாரிக்கலாம். ஆனால் விசாரணை செய்யவேண்டிய விஷயம் குறித்து உள்ளூர் ஸ்டேஷனில் தகவல் அளிப்பது மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

பாஸ்கர் என்கிற இளைஞனைக் காணவில்லை என்று இலுப்பப்பாளையத்தில் புகார் கொடுக்கப்பட்டிருந்து. எனவே பாஸ்கர் கொலையை விசாரிக்க இலுப்பப்பாளையம் காவல் நிலையத்துக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் உடல் கிடந்தது காமாட்சிபுரம் காவல் நிலைய எல்லையில். எனவே விபத்தோ கொலையோ அங்கேயே நடந்திருக்க வாய்ப்பு அதிகம் என்பதாலேயே காமாட்சிபுரம் காவல் நிலையம் விசாரணையை முன்னெடுத்துச் சென்றது.

இன்ஸ்பெக்டரின் குரலில் மதுரை வாடை அடித்தது. “அவன் ரியோட்டருங்க (கலகம் செய்பவன்). காலனி பையன். எப்பப் பாத்தாலும் பிரச்சனை பண்ணிகிட்டிருப்பான். நாலஞ்சு கேஸ் இருந்தது. குண்டாஸ்ல கூட உள்ள புடிச்சுப் போட்டோம். பிளாக் மெய்லர். ரொம்ப மோசமான பையன். அப்புறம் பொம்பளைப் புள்ளைங்க சவகாசம். ஏதோ ஒரு பொம்பளையோடயும் சுத்தியிருக்கான். அவ புள்ளையோடயும் சுத்திருக்கான். அவ புருசன் வந்து பிரச்சினை. தண்ணி போட்டுட்டு அடிதடி பண்ணிட்டானுக. எல்லா மறியல் கேஸ்லயும் கட்டப் பஞ்சாயத்துக் கேஸ்லயும் அவன் இருப்பான். எஸ்.சி.எஸ்.டி கேஸ் போட்டுப் பஞ்சாயத்துப் பண்ணி காசு வாங்குவான். நீங்க வாங்க. கான்ஸ்டபிளை அனுப்பி வைக்கிறேன்”

சிக்கலாகிறது. ரியோட்டர். காலனி என்றால் எதிரிகள் நிறைய இருக்க வேண்டும். சண்டையோ பிரச்சினையோ ஏற்படும் நேரங்களில் கத்திக்

கூச்சல் போட்டு அதைப் பெரிதுபடுத்துபவர்களையும், தொட்டதற்கெல்லாம் மக்களை ஆர்ப்பாட்டத்துக்கோ, மறியலுக்கோ தூண்டுபவர்களையும் ஸ்டேஷனில் ரியோட்டர் பட்டியலில் வைத்திருப்பார்கள். எங்காவது பிரச்சினை ஏற்பட்டுக் கூட்டமாக நிறைய பேர் மீது வழக்குப் போடும் நேரங்களில் சம்மந்தப்பட்ட ஆள் அந்த இடத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவன் பெயரையும் முதல் தகவல் அறிக்கையில் சேர்த்து விடுவார்கள். அவனுக்கே அது தெரியாது. இப்படி பல வழக்குகளில் அவனைச் சிக்கவைத்து அலைய விடுவது இப்படிப்பட்ட ஆட்களை அடக்கி சோர்ந்து போகச் செய்ய காவல்துறை பயன்படுத்தும் தந்திரம். ஐந்து வழக்குகளுக்கு மேலே இருந்தால் அவனை குண்டர் தடைச் சட்டத்தில் கைது செய்து மாதக்கணக்கில் உள்ளே தள்ளிவிடலாம். அப்படித்தான் இவனையும் உள்ளே அனுப்பியிருக்கிறார்கள்.

இன்ஸ்பெக்டர் பேசியதைப் பார்த்தால் தமது காவல்துறை ஆட்கள்தான் போட்டுத் தள்ளிவிட்டார்களோ என்ற சந்தேகம் கூட அன்புசேகருக்குத் தோன்றியது. 'இல்லை, இது அந்த முறை இல்லை' என்று சிரித்துக்கொண்டார்.

காமாட்சிபுரம் காவல்நிலையத்துக்கு எதிரே பெருங்கூட்டம் கூடியிருந்தது. இறந்து கிடந்தவன் இலுப்பப்பாளையத்தைச் சேர்ந்த பாஸ்கர் என்பதை அவன் குடும்பத்தினரும், நண்பர்களும் புகைப்படங்களைப் பார்த்து உறுதிப்படுத்தினர். உடலை அடையாளம் காட்ட அவர்கள் கோவை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பின்பு இலுப்பப்பாளையத்தையும், கோவையையும், பொள்ளாச்சியையும் சேர்ந்த தலித் தலைவர்கள் கூட்டமாக வந்து காவல்நிலையத்தை முற்றுகையிட்டனர். உள்ளே வந்த ஒரு தலைவரோடு இரண்டு வக்கீல்களும் இருந்தனர். கொலை வழக்கை வன்கொடுமைச் தடைச் சட்டத்தில் பதிவு செய்யவேண்டும் என்று தலைவர் ஆவேசமாக வாதிட்டார். கொலை செய்தவர்கள் பெயர்களைச் சொல்கிறேன், கம்ப்ளைண்ட் கொடுக்கிறேன் என்றார்.

அன்புசேகர் எஸ்.பி-யிடம் பேசிவிட்டு அவர்களுக்கு வாக்குறுதி அளித்தார். “174 போட்டிருக்கோம். விசாரிச்சு கொலைன்னு உறுதியாச்சுன்னா 302 போட்டுடலாம். எல்லா கேஸ்லயும் இதைத்தான் செய்வோம். நம்புங்க. நாங்கதான பையன் யாருன்னு கண்டுபுடிச்சு உங்களுக்குச் சொன்னோம்”

தேசிய நெடுஞ்சாலை 47 ஓரம் அவினாசி நகரத்துக்கும் கோவைக்கும் இடையே இருந்தது இலுப்பப்பாளையம் பிரிவு. பிரிவில் இரண்டு தேனீர்க் கடைகளும், சில துணிக் கடைகளும், பாத்திரக் கடையும், இறைச்சிக் கடைகளும், பேன்ஸி ஸ்டோரும், புரோட்டா கடைகளும் இருந்தன. பிரிவிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்தது இலுப்பப்பாளையம் கிராமம். நெடுஞ்சாலையிலிருந்து கிராமத்துக்குப் போகும் வழியெல்லாம் ஆங்காங்கே ஒரே மாதிரி ஜன்னல்கள் வைத்த பனியன் கம்பெனிக் கட்டடங்கள் காணப்பட்டன. நீலம், பச்சை வண்ணங்களில் நவீன தகரக்கூரை போட்ட தொழிற்சாலைகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்பட்டன.

இடையிலிருந்த நிலங்கள் தரிசாகக் கிடந்தன. சிலவற்றில் முட்புதர்கள் மண்டிக் கிடந்தன. ஆங்காங்கே தென்னந் தோப்புகள் தென்பட்டன. அவற்றிலிருந்த பல தென்னை மரங்கள் தண்டு பெருத்து நோய்த் தன்மையுடனிருந்தன. தரிசாகக் கிடந்த நிலங்களில் ஏதேதோ பிளாஸ்டிக் குப்பைகள் இறைந்து கிடந்தன. மலை மலையாக பிளாஸ்டிக் கவர்கள், பாட்டில்கள், அட்டைகள்... தென்னை மரங்கள், முருங்கை மரங்கள் அனைத்திலும் புழுதி அடித்திருந்தது. ஆங்காங்கே அனாதையாக நின்று கொண்டிருந்த வெள்ளை வேலா மரங்களின் கிளைகளில் பிளாஸ்டிக் கவர்கள் தொங்கிக்கொண்டிருந்தன. கிராமமும், நகரமும் கலந்த ஒரு கலவை. பெருநகர எல்லை இருபத்தைந்து கிலோமீட்டருக்கு அப்பால் இருந்தது. ஆனால் இந்தத் தொழிற்சாலைகள் இந்த இடத்துக்குப் புறநகர்ப்பகுதி போன்ற ஒரு தோற்றத்தைக் கொடுத்திருந்தன.

அபுவும், பாலுவும் இலுப்பப்பாளையம் காவல்நிலையம் வரை என்ஃபீல்ட் பைக்கிலேயே வந்துவிட்டிருந்தனர். அங்கிருந்து இலுப்பபாளையம் செல்ல இன்ஸ்பெக்டர் ஒரு மாருதி ஆம்னி வேனை ஏற்பாடு செய்து கொடுத்ததோடு கான்ஸ்டபிள் ஒருவரையும் உடன் அனுப்பி வைத்தார். அபு ஜன்னல் வழியே வெளியே தெரிந்த சோர்வூட்டும் வறண்ட நிலப்பரப்பைப் பார்த்துக்கொண்டிருந்தார். அதிர்ஷ்டம் இருந்தால் இது ஒருவேளை தனது கடைசி கொலை கேசாக இருக்கலாம்.

அவருக்குக் கொலை வழக்கு மட்டுமல்ல எந்த வழக்கின் மீதும் பயம் கிடையாது. இந்த வழக்கு உடையத் தொடங்கி விட்டது. கொல்லப்பட்டது யார் என்று தெரிந்து விட்டது. எனவே கொன்றது யார் என்று தெரிந்து கொள்வதில் பெரும்பாலும் பிரச்சினை இருக்காது என்பது அவருக்குத் தெரியும்.

சும்மா தெருவில் போகும் ஒருவனை யாரும் கொல்ல மாட்டார்கள். இரண்டு வாய்ப்புகள்தான் சாத்தியம்.

இறந்தவனுக்கு விரோதிகள் இருக்க வேண்டும்.

அல்லது

இவனது இறப்பால் பலனடையக் கூடியவர்கள் இருக்க வேண்டும்.

இந்தக் கேள்விகளுக்கான பதிலில்தான் கொன்றது யார் என்ற கேள்விக்கான பதில் இருக்கிறது. பதில் தெரிந்து விடும் என்பதில் அவருக்குச் சந்தேகம் இல்லை. இந்த முப்பதாண்டு காவல்துறை அனுபவத்தில் அவர் ஏராளமானவற்றைப் பார்த்திருக்கிறார். என்னென்னமோ செய்திருக்கிறார். சமூகத்தின் அடியாழம் வரை வேர்விட்டுக் கிளைபரவி நிற்கும் போலீஸ் துறை எந்த ரகசியத்தையும் தோண்டித் துருவி வெளியே கொண்டுவந்துவிடும். கொன்றவன் எங்கேயும் போய்விட முடியாது.

அபுவுக்கு குற்றவாளிகள் மீது ஒரு கடும் வெறுப்பு உண்டு. அவர்களை வெறுத்தால் மட்டுமே காவல்துறை வேலையை விரும்ப முடியும். இந்தத் தொழில் கொடுக்கும் அத்தனை சிரமங்களையும் மீறி தன்மதிப்பு வரும். இந்த வெறுப்பு எப்போது வந்தது?

சிறுவயதிலிருந்தே அபுவுக்கு விளையாட்டுக்களில் ஆர்வம். ஓட்டப்பந்தயங்களில் எப்போதும் முதல்பரிசு அவருக்குத்தான். பதினைந்து வயதில் அண்ணனோடு ஜிம்முக்குப் போகத் தொடங்கினார். அப்போது சின்னப் பையன் என்று பளுதூக்க விடமாட்டார்கள். தண்டால், பைட்டாக் மட்டுமே எடுக்கச் சொல்வார்கள். பின்பு பளுதூக்கத் தொடங்கியதும் தன் உடல் முறுக்கேறுவதை ஜிம்மின் கண்ணாடிகளில் பார்த்து ரசிக்கத் தொடங்கிவிட்டார். கரங்களில் ரத்த நாளங்கள் புடைத்து வெளிவந்தன.

இடை குறுகி, மார்பு விரிந்து, பாம்பு படமெடுப்பதைப் போன்ற தோற்றம் வந்தது.

காவலர் தேர்வுக்குப் போகும்போது தான் வெற்றி பெறுவோம் என்பதில் அவருக்கு எந்த சந்தேகமும் இல்லை. பயிற்சி முடித்து ரிசர்வில் இருந்தபோது அந்தப் பெரிய போலீஸ் அதிகாரி தமிழகம் முழுவதும் சுற்றி காவல்துறையிலிருந்து வீரப்பன் வேட்டைக்குத் தகுந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து வந்தார். பெரும்பாலும் தென்மாவட்ட இளைஞர்களை, அதீத கோபம், முரட்டுத்தனத்தால் சிறு தவறுகள் செய்து தண்டனைக்கு ஆளானவர்களைப் பொறுக்கி எடுத்து சிறப்பு அதிரடிப்படைக்கு அனுப்பினார். அவர்கள் அதிகாரி மீது அப்படி ஒரு விசுவாசத்துடன் இருந்தனர். அதிகாரியும் அடிக்கடி சத்தியமங்கலம் வந்து அவர்களைச் சந்தித்து 'ஒண்ணு வீரப்பன் பொணம் கீழ போகணும் இல்லாட்டி நம்ம பொணம் போகணும்...' என்பார்.

வீரப்பன் வேட்டையில் கோவை ஈரோட்டைச் சேர்ந்த காவலர்களும் அவ்வப்போது ஈடுபடுத்தப்பட்டனர். அபுவையும் சிலபோது தேடுதல் வேட்டைகளுக்கு அனுப்பினார்கள். ஆனால் அந்த சிறப்புக் குழுவில் அவர் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. சிறப்புக் குழுவுக்கும் அபுவைப்போல தற்காலிகமாக வந்த காவலர்களுக்கும் வித்தியாசம் இருந்தது. அந்தக் குழுவில் இருந்தவர்களுக்கு வீரப்பனை தனிப்பட்ட முறையில் வெறுக்கக் காரணங்கள் இருந்தன. நண்பனைக் கொன்றவன். அதிகாரியைக் கொன்றவன். நன்கு பழக்கமான இன்ஃபார்மரைக் கொன்றவன்... போலீஸ் தலைமையே இத்தகைய பழிவாங்கும் உணர்வை உருவாக்குகிறது என்பதை அபு பின்புதான் உணர்ந்தார். இது போர். போர்புரிவது தங்கள் கடமை என்ற எண்ணம் மட்டும் வெற்றி பெறுவதற்குப் போதாது. ஒவ்வொரு இளைஞனும் இது தன்னுடைய சொந்தக் கடமை. பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று நினைக்கக வேண்டும் என்று மேலிடம் விரும்பியது.

பயிற்சிகள் பயிற்சிகள்... வீரப்பன் வீரப்பன்... சுட்றா சுட்றா.... தூக்கத்தில் கூட அந்தக் குரலே எதிரொலிக்கும். காடுகளுக்குள் தேடுதல் வேட்டைகள் நடக்கும். அபு அவற்றில் ஆர்வத்துடன் கலந்து கொள்வார்.

சிறப்புப் படை வீரர்கள் ஒருபோதும் போலீசைக் குறைசொல்ல மாட்டார்கள். வீரப்பன் மீதான தங்கள் வெறுப்பை மறைத்துக் கொள்ளவும் மாட்டார்கள். 'நக்கீரன் கோபால் சொல்வது பொய்' என்று அழுத்தமான தீவிரமான குரலில் சொல்வார்கள்.

வீரப்பன் வேட்டை முடிவுக்கு வந்து அதிரடிப் படைவீரர்களுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. அதில் இல்லாத அபுவைப் போன்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. பதவி என்பது எவ்வளவு முக்கியம், அதில் எத்தனை அதிகாரங்கள் இருக்கின்றன என்பதை அபு இதற்குள் முழுமையாக உணர்ந்திருந்தார்.

அதிரடிப் படைவீரர்களைப் போலவே தானும் உழைத்தும், அர்ப்பணிப்புடன் இருந்தும் தனக்குப் பதவிஉயர்வு அளிக்கப்படாதது அநியாயம் என்ற எண்ணம் அவருக்குள் புகுந்து கொண்டது. எப்படியாவது பதவிஉயர்வு பெற்று சப் இன்ஸ்பெக்டர் ஆகிவிடுவது என்று மனதுக்குள் உறுதியெடுத்துக் கொண்டார். அதற்கு டிகிரி படித்துப் பரிட்சை எழுத வேண்டும். அது சாத்தியமில்லை, நேரமில்லை. வேறு என்ன வழி என்று தேடியவர் கின்னஸ் சாதனை போல ஏதாவது செய்தால் பதவி உயர்வு கிடைக்கும் என்று கண்டுகொண்டார். தண்டால், பைட்டாக் எல்லாம் யாராவது செய்திருப்பார்கள், எனவே தரையில் படுத்துக் கைகளைக் கழுத்துக்குப் பின்னால் கோர்த்துக் கொண்டு எழுந்து முழங்கைகளால் முழங்கால்களைத் தொடும் சிட்டப்ஸ் எடுப்பது என்று முடிவுசெய்தார். ஐயாயிரம் சிட்டப்ஸ் எடுப்பது என்று இலக்கு நிர்ணயித்துக்கொண்டு பயிற்சி எடுக்கத் தொடங்கினார்.

ஆயிரம், இரண்டாயிரம் என்று சிட்டப்ஸ் உயர்ந்தது. வயிற்றுத் தசைகள் இறுகி இறுகி உடல் கல்லாக மாறியது. அந்த இறுக்கத்தைக் குறைக்க உடற்பயிற்சி முடிந்ததும் இருபது நிமிடம் படுத்துக் கிடப்பார். ஒருமுறை சோதனைக்காக வந்த அதிகாரி இளம் காவலர்கள் எல்லோரையும் முப்பது சிட்டப்ஸ் எடுக்கும் படி உத்தரவிட்டார். கண்ணிமைக்கும் நேரத்தில் அபு முப்பதைத் தாண்டினார். உடலுக்கு எடையே இல்லை போல, ஒரு வில் போல அவருடல் தரையைத் தொடுவதும் முழங்காலைத் தொடுவதுமாக இயங்கிக்கொண்டிருந்தது.

அந்த வலிமை வாய்ந்த இளைஞனின் உடல் அசைவுகளில் வெளிப்பட்ட வசீகரத்தில் அதிகாரி மனம் ஈடுபட்டு மெய்மறந்து நின்றுகொண்டிருந்தார். நூற்றி எழுபதைத் தாண்டியபோது நினைவு வந்து போதும் என்றார்.

“எவ்வளவு பாய் எடுப்ப?”

“மூவாயிரங்கையய்யா”

அதிகாரி பாக்கெட்டுக்குள் கையை விட்டு வந்த பணத்தை அப்படியே அபுவிடன் கொடுத்தார். ஸ்பாட் கிப்ட் காவல்துறையில் மிகவும் மதிக்கத் தக்கது. அதிகாரி அபுவை ஹரியானா மனோசரில் உள்ள கமாண்டோ பயிற்சிப் பள்ளிக்கு அனுப்பப் பரிந்துரைத்தார். கடுங்குளிரில் பசியில் முதுகில் மூட்டையுடன் இருபது கிலோமீட்டர் ஓடும்போது தனது வாழ்க்கை எங்கோ போகப்போகிறது என்று அவருக்குத் தோன்றியது.

திரும்பி வந்ததும் திருமணம் குழந்தைகள். பின்பு கராத்தே பயிற்சிக்கு அனுப்பப்பட்டார். பிறகு பயிற்சிக் கல்லூரியில் அதிகாரிகளுக்குக் கராத்தே பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

அபு எதையும் மறுத்தது கிடையாது. எப்போதும் முணுமுணுத்தது கிடையாது. எல்லாம் முடிந்தபிறகு கோவை பி 2 காவல்நிலையத்துக்குப் பணிபுரிய வந்தபோதுதான் தன் இடம் இது மட்டுமே என்பது அவருக்குப் புரிந்தது. தலைமைக் காவலர் ஆனார். பின்பு சிறப்பு எஸ்.ஐ-யாகப் பதவி உயர்வு கிடைத்தது. அதற்கு மேல் போகமுடியாது என்பது திட்டவட்டமாகத் தெரிந்தது. அவரிடம் பயிற்சி பெற்ற அதிகாரிகள் அவரைக் கண்டால் ஓடி வருவார்கள். போன் செய்து பேசுவார்கள். ஆனால் தான் சிறப்பு எஸ்.எஸ்.ஐ மட்டுமே. அப்போதும் அபு எதையும் வெளிக்காட்டிக் கொண்டதில்லை. தன்னைப் பொறுத்தவரை எதுவும் சரியாக நடக்காது. தான் விரும்பும் எதுவும் கிடைக்காது என்ற எண்ணம் எப்படியோ அவர் மனதில் புகுந்து கொண்டது. அபு எப்போதும் பயிற்சிக் கல்லூரியில் சொல்லித் தரப்படும் எண்டியூரன்ஸ் எனப்படும் தாங்கி நிற்கும் திறமையின் இலக்கணம். அவரால் ஒரு பிரச்சினையும் வந்ததில்லை. அவரை நம்பி எந்த வேலையையும் கொடுக்கலாம்.

ஆனால் அதற்குமேல் அவரது மனைவியால் பொறுத்திருக்க

முடியவில்லை. வீட்டை மாற்றிக் கட்ட வேண்டும். மகன்கள் வளர்ந்து விட்டார்கள். அவர்களுக்கு ஒரு ஒழுங்கு செய்ய வேண்டும். வீட்டைப் பாருங்கள் என்று நச்சரிக்கத் தொடங்கினார். அபுவும் அதிக நேரம் குடும்பத்துடன் கழிக்க வேண்டும் என்பதற்காக போக்குவரத்துத் துறைக்கு மாறுதல் கேட்டிருந்தார். கிடைக்கும் போலத்தானிருந்தது.

அப்போதுதான் அந்த பாழாய்ப்போன ரெய்டு வந்தது. பெண்களை வைத்துத் தொழில் செய்யும் ஒரு வீட்டுக்குச் சோதனைக்குப் போனார்கள். அங்கே ஒரு பேரழகியைப் பார்த்து அபு தலை குப்புற விழுந்தார். அந்தப் பெண்ணை மட்டும் தானே ஜாமீனில் எடுத்து ஒரு வீட்டில் கொண்டு போய் வைத்தார். அபு சொர்க்கத்தைப் பார்த்த நாட்கள் அவை. ஒவ்வொரு காலையும் வித்தியாசமாக இருந்தது. தான் இளைஞனாகிவிட்டது போல உணர்ந்தார். எந்த நேரமும் மனதிலும் உடலிலும் ஒரு தவிப்பு... எல்லாக் கேள்விகளையும் உதறித் தள்ளிவிட்டு பரவசமாகக் கழித்த நாட்கள் அவை.

ஆனால் புரோக்கர் கொதித்துப்போய் அபு மீது புகார் மேல் புகார் அனுப்பத் தொடங்கினான். அபுவின் மனைவியும் செய்தி தெரிந்து கண்ணீரும் கம்பலையுமாக இன்ஸ்பெக்டரிடம் முறையிட்டார்.

“என்ன பாய் இது? நீங்க செய்யற விஷயமா?”

அபு பதில் பேசவில்லை. சொல்ல எதுவுமில்லை. அழகுணர்ச்சியிலிருந்து அவரை விலக்கி வைக்க தமிழ்நாடு காவல்துறை காமாட்சிபுரத்துக்கு மாறுதல் செய்திருந்தது. சரிதான் எப்போதும் போலத்தான் நடக்கிறது. ஒரு சின்ன சறுக்கல். சமாளித்துப் போய்விடலாம்.

அபுவின் எண்டியூரன்ஸ் எல்லையற்றது. தனது சொந்த வாழ்க்கையின் பிரச்சினைகள், பின்னடைவுகள் அனைத்தின் மீதான வெறுப்பையும் தொழிலின் மீதான பக்தியாக மாற்றிக் கொண்டார். சமூகத்துக்கு நன்மை செய்யவே தான் இத்தனையும் செய்வதாக நினைத்துக்கொள்வார். ஒரு வித்தியாசமான தொழில் என்பதால் அதைச் செய்பவன் வாழ்க்கையும் வேறுவிதமாகத்தான் இருக்கும். வழக்கமான வாழ்க்கையின் இன்ப துன்பங்களை இதில் எதிர்பார்க்கக் கூடாது.

“விஷ்” என்று காற்று அடித்தது. சாலையில் மண் ஒரு நிமிடம் எழுந்து சுற்றி அடங்கியது. ஒரு எழுபது கிலோமீட்டர் தூரத்தில் எவ்வளவு வித்தியாசம் என்று அபு நினைத்துக்கொண்டார்.

ஆம்னி வேன் வேகத்தைக் குறைத்துக்கொண்டு இலுப்பப்பாளையத்தை நெருங்கியது. பெரும்பாலும் கூரை வீடுகளே இருந்த கிராமத்தின் வெளிப்புறம் சில பிரம்மாண்டமான நவீனமான வீடுகள் காணப்பட்டன. ஒரு வீடு மட்டும் சுமார் அரை ஏக்கர் அளவுக்கு இருந்தது. அதில் கார்கள் நிறுத்த தனி ஷெட் போடப்பட்டிருந்தது. வீட்டுக்கு வெள்ளையும் சாம்பலுமாக உறுத்தாத வண்ணங்கள் அடிக்கப்பட்டிருந்தன.

அசலான மரம் போலவும் கருங்கல் போலவும் தெரியும் டைல்ஸ்கள் ஒட்டப்பட்டிருந்தன. இன்னொரு வீட்டில் கோட்டைக் கதவு போலிருந்த வாயிற்கதவில் சென்சார் பொருத்தப்பட்டுள்ளது. கார் வந்தால் கதவு தானாகத் திறக்கும் என்றார் உடன் வந்த இலுப்பப்பாளையம் போலீஸ்காரர்.

“மில் ஓனருகளோட வீடுக” இவர்கள் எல்லாம் விசைத்தறி நன்றாக இருந்தபோது அதில் முன்னேறி இப்போது ஸ்பின்னிங், வீவிங் மில்கள் வைத்திருப்பவர்கள்.

ஆனால் ஊர் வேறு விதமாக இருந்தது. எல்லையிலேயே கட்சிக் கொடிக் கம்பங்கள் வரவேற்றன. வழியெல்லாம் சங்கத் தலைவர் மனோகரனின் படங்கள் காணப்பட்டன. பொள்ளாச்சி பகுதியில் வலிமையாக இருந்த சங்கம் இங்கே பரவி வருகிறது போலிருக்கிறது. மனோகரனின் படத்தோடு வெள்ளிங்கிரி என்ற ஒருவனின் படமும் காணப்பட்டது. சில இடங்களில் பாஸ்கருக்கு அஞ்சலி, வீரவணக்கம் என்றும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன.

“யார் இது வெள்ளிங்கிரி?”

“இந்தப் பக்கம் மனோகரன் சங்கத்துல முக்கியமான ஆளுங்க”

ஊருக்கு நடுவே வகிர்ந்து செல்லும் சாலையின் ஒருபுறத்தில் உயர்சாதியினர் வசிக்கும் வீடுகள் இருந்தன. பல வீடுகளில் ஆள்

நடமாட்டம் இருக்கும் அடையாளமே இல்லாமல் காலியாகக் கிடந்தன. ஊருக்கு நடுவே எட்டடி அகலமே என்றாலும் நல்ல சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. விளக்குக் கம்பங்கள் ஒழுங்கான வரிசையில் நின்றன.

தோட்டங்களை ஒட்டிய வீடுகளில் விசைத்தறிகள் ஓயாமல் ஓடிக்கொண்டிருந்தன. அது ரயில் ஓடுவதைப் போன்ற தடக் தடக் என்ற சத்தம் அருகில் செல்லச் செல்ல காதைச் செவிடாக்கிவிடும் போலிருந்தது.

மறுபுறமிருந்த தலித் மக்கள் வாழும் பகுதி இரண்டு பகுதிகளாக அமைந்திருந்தது. ஒருபுறம் ஒற்றை அறைகள் கொண்ட காலனி வீடுகள். அதையொட்டி இருந்த பழைய சேரியின் வீடுகள் வீடுகள் எந்த ஒழுங்கும் இல்லாமல் கன்னாபின்னாவென்றிருந்தன. அவற்றின் சுவர்கள் கோணல் மாணலாக ஓடைக்கற்களால் கட்டப்பட்டு சந்து பொந்துகளோடிருந்தன. அதனூடே மண் பாதை வளைந்து வளைந்து சென்றது. அதைச் சில இடங்களில் சாக்கடைகள் ஊடறுத்துச் சென்றன. சீமெண்ட் பாவப்பட்டிருந்த சாலை காலனி வரை வந்து எல்லையில் அப்பட்டமாக நின்றிருந்தது. சில வீடுகளுக்குள் தளம் போடப்படாமல் மண் தரையை அப்படியே விட்டிருந்தனர். சேரிப் பகுதியிலிருந்து ஒரு நூறு அடி தள்ளி சோளக்காட்டோரம் மேற்கூரையில்லாத மதுரைவீரன் கோவில் இருந்தது. அதன் முன்னிருந்த பெரிய முற்றத்தில் சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர்.

பாஸ்கர் வீடு காலனியில் இருந்தது. வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த ஷாமியானா காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது. அதன்கீழ் பிளாஸ்டிக் சேர்களில் சில ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் இருண்ட முகத்துடனிருந்த பாஸ்கரின் அப்பாவையும் அண்ணனையும் அபு உடனே அடையாளம் கண்டுகொண்டார். இருவரும் புகார் கொடுக்க காமாட்சிபுரம் வந்திருந்தனர். காலனி முழுவதும் பாஸ்கருக்கு இரங்கல் தெரிவித்து அவனது புகைப்படத்துடன் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. உள்ளூர் ஸ்டுடியோவில் எடுக்கப்படும் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் விசித்திரமானவை. ஆண்கள் சிரித்தால் கோணலாகவும் முறைத்தால்

கோரமாகவும் இருக்கும்.

படத்திலிருந்த பாஸ்கர் சிரிக்கவும் இல்லை. முறைக்கவும் இல்லை. அந்த முகத்தில் ஒரு தீவிரம் தெரிந்தது. நீள முகமும் பெரிய கண்களும் அந்த முகத்துக்கு ஒரு வசீகரத்தைத் தந்திருந்தன. எதையோ சிந்தித்துக்கொண்டிருக்கும் பாவனையும் தெரிந்தது. வீட்டின் முன் உட்கார்ந்திருந்தவர்கள் அபுவையும், உடன் வந்த போலீஸ்காரர்களையும் வரவேற்று உட்கார வைத்தனர்.

“பையன் ராஜாவாட்டம் ஜம்முன்னு இருப்பான். ஜிம்முக்கு ஒருநாளு உடாம போவான். பிஏ படிச்சான் முடிக்கலே. மதுரவீரன் கோயில்ல ஆட்டம்னா ஆட்டம் அப்புடி ஆடுவான். காலேஜ் படிக்கும்போதே தறி ஓட்டப்போவான். டாக்ஸி ஓட்டுவான். ஆனா ஊருக்கு ஏதாச்சும் செய்யோணும்னுதா சுத்திட்டிருப்பான். சாதி கீதின்னு பேசினா சும்மா உடமாட்டான்... அடில இருந்து முடி வரைக்கும் பாக்கோணும்னு நெனைப்பான்” வெள்ளைச் சட்டை அணிந்திருந்த ஒரு பெரியவர் கூறினார்.

“யார் மேலயாவது சந்தேகம் இருக்கா?”

பாஸ்கரின் அப்பா குரலைத் தாழ்த்திக்கொண்டு “ராஜேஸ்வரி மில்லு வெச்சிருக்காரு இல்ல பருத்திக்காட்டுக்காரரு அவருக்கு பாஸ்கரு மேல கோவமுங்க. பொறவு இந்தத் தலைவரு வெள்ளிங்கிரி இருக்கானில்லங்க... அவந்தே பாஸ்கரு மேல வெறி வெறின்னு கெடந்தான். அவனோட தறி குடோன்ல வேல செஞ்சிட்டிருந்த ஒரு தஞ்சாவூர்க்காரன் பணம் வாங்கிப்போட்டு ஓடிபோயிட்டானாம். அதுக்கு பாஸ்கருதான் காரணம்னு வெள்ளிங்கிரி சொல்லிட்டிருந்தான். அதோட ஒரு தடவ அந்த அமுதாபுள்ளயோட பாஸ்கரைச் சந்தைல பார்த்து பெரிய பெரச்சனயாயிருச்சு”

“அந்த வெள்ளிங்கிரி, அமுதா விவகாரத்தைச் சொல்லுங்க?” வெள்ளிங்கிரி மீது சந்தேகம் என்று காமாட்சிபுரம் ஸ்டேஷன் முற்றுகையின் போதே அமைப்புத் தலைவர்களும் மக்களும் சொல்லியிருந்தனர்.

“அமுதா அமராவதியோட பொண்ணு. தெக்கத்திக்காரங்க. அமுதா மில்லு வேலைக்குப் போயிட்டுருந்துச்சு. அந்தப் புள்ள ஒருநாள் பாஸ்கரோட சந்தக் கடைல நின்னு பேசிட்டிருந்துச்சாம். வெள்ளிங்கிரி மனோகரன் சங்கத்துக்கு தலைவருங்க. ஆராவது பொண்ணும் பையனும் சாதிமாறிப் பேசுனா புடிச்சு மெரட்டி உடுவான். அதே மாரி அமுதாவையும், பாஸ்கரையும் சந்தைல பாத்ததும் நம்ம பையனைப் புடிச்சு நிக்க வெச்சு மெரட்டியிருக்கான். இவனும் பதிலுக்குக் கத்தீட்டானாமா. வெள்ளிங்கிரி பாஸ்கரை ஓங்கி அப்பியிருக்கான். இவனும் பதிலுக்கு அறஞ்சி போட்டானாம். பக்கத்தால இருந்தவங்க வெலக்கி உட்டுருக்காங்க. அதுக்குப்பொறகு இவடத்தால வந்தான். பாஸ்கரு வெளில நின்னுட்டிருந்தானுங்க. மறுக்கா சண்டையாயிருச்சு. பாஸ்கரு அவன போடான்னுட்டான். வெள்ளிங்கிரி தெகச்சுப் போயி நின்னு ஒரு நிமிசம் பாஸ்கரையே பாத்திட்டிருந்தவன் ஒண்ணுமே பேசாம போயிட்டான். கை வெச்சா சும்மா உடமாட்டங்கையா. வேல தீர்த்துட்டாங்க” அவர் துண்டால் வாயைப் பொத்திக்கொண்டு அழுதார்.

“சந்தைல சண்டைக்கப்புறம் என்னாச்சு?”

“அப்ப ஒண்ணும் ஆகல. ஆனா கொஞ்சநாள் கழிச்சு அமுதா வேல செய்யற மில்லுல இருந்து ஒரு புள்ள ஓடி வந்து கம்ளெய்ண்ட் குடுத்துச்சு. போலீசு ரெய்டு போனப்ப ஒரு நாப்பது புள்ளைக ஒட்டுக்கா ஓடி வந்துருச்சு. இந்த அமுதாபுள்ளையும் ஊட்டுக்கு வந்துருச்சு. பொறவு வேற மில்லுக்கு அனுப்பிட்டாங்கோ. அதுல பாஸ்கர் மேல அவங்களுக்கு சந்தேகமிருக்குதுங்க”

“மில்லு பருத்திக் காட்டுக்காரரோடதா?”

“மில்லு அவரோடதுதான். ஆனா வேற ஒருத்தன் லீசுக்கு எடுத்து ஓட்டினான்னு சொல்றாங்க”

“வெள்ளிங்கிரி என்ன வேல செய்யறான்?”

“தறிக்கொட்டம் வெச்சிருக்கான். அதுல குடும்பத்தோட வேல செஞ்சுட்டிருந்த தஞ்சாவூர்க்காரன் ஒருத்தன் ஓடிப் போயிட்டான். ஊர்ல வேலக்காரங்க ஆரு ஓடிப் போனாலும் பாஸ்கருதான் காரணம்ன்னு

கோபம்”

“அதுக்கும் பாஸ்கருக்கும் என்ன சம்பந்தம்?”

பாஸ்கரின் உடலில் பார்த்த தறிக்கட்டையால் அடித்தத் தழும்பு. அபு ஆழ்ந்து மூச்சு விட்டார்.

“தறில வேல செய்ய வாரவீலுக்கு மொதல்லயே ஒரு லட்சம் ரெண்டு லட்சம் அட்டுவான்ஸ் குடுத்துருவாங்க. ஆனா ராத்திரி பகலா வேல வாங்குவாங்க. கஷ்டம் பொறுக்க முடியாம வேலக்காரங்க ஓடிப் போனா குடுத்த பணம் நட்டம்தானே”

“பாஸ்கர் அந்தத் தஞ்சாவூர்காரன் ஓட உதவி செஞ்சானா?”

“எங்களுக்குத் தெரிஞ்சு இந்த விசயத்துல பாஸ்கரு ஒரு உதவியும் செய்யலீங்கோ. ஆனா உதவி கேட்டு வந்தா கண்டிப்பா செய்வான். சந்தைக்குப் போறப்பதான் தறிக்காரங்க குடும்பத்தோட போவாங்க. தஞ்சாவூர்க்காரன் அப்புடி ஒருநாள் சந்தைக்குப் போறேன்னு கெளம்பி குடும்பத்தோட பஸ் ஏறி ஓடிப்போயிட்டான். பாஸ்கரு ஒண்ணுஞ் செஞ்சதா தெரீலையே. அவனுகளா சந்தேகப்பட்டு அவங்களா...” அவர் விசும்பினார்.

“அந்த அமுதாவுக்கும் பாஸ்கருக்கும் லவ்வா?”

அவர்களால் சொல்ல முடியவில்லை. அமுதாவுடன் சந்தைக் கடையில் ஏதோ பேச முயல சண்டை ஆகிவிட்டது என்று மட்டும் சொன்னார்கள். இருவரையும் சேர்ந்து யாரும் பார்த்ததில்லை. ஆனால் அமுதா மில் வேலைக்கு பொள்ளாச்சி சென்றபிறகு அவளது அம்மா அமராவதியும் பாஸ்கரும் குளத்தோரம் நின்று நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்ததை தாங்கள் ஒருநாள் பார்த்ததாக ஒரு இளைஞன் சொன்னான்.

“எப்படிப் பேசிட்டிருந்தாங்க? சண்டை போட்டுட்டா? சிரிச்சா? சும்மாவா?” அபு துருவித்துருவிக் கேட்டார்.

“சீரியஸ்ஸாத்தான் பேசறமாரி இருந்துச்சு. அந்தம்மா அழுதமாரி இருந்துச்சு”

“ரெண்டு பேருக்கும் தொடர்பு?”

“அதெல்லாம் இல்லங்க சார். அப்புடி ஏதாச்சும் இருந்தா எப்படியாச்சும் வெளில தெரிஞ்சுரும்”

பாஸ்கர் திருப்பூருக்கு பஸ் ஏறியதுவரை சாட்சிகள் இருந்தன. “அவஞ்சோட்டுக்காரங்கள வரச்சொல்லுங்கப்பா” என்றார் அபு. கோடு போட்ட சட்டையும், பனியன் துணியாலான பேண்ட்டும் அணிந்த ஒல்லியான ஒருவன் வந்து நின்றான். ‘கையைக் கட்டிக் கொள்வதா? வேண்டாமா?’ என்று முடிவு செய்ய முடியாமல் சட்டையை இழுத்துக்கொண்டிருந்தான். அவன்தான் கடைசியாக பாஸ்கரைப் பார்த்தது.

“அவன் எங்கூடத்தான் டி.வி.எஸ்.50-யில் மங்கலம் வந்தான்”

“சரக்கடிச்சீங்களாப்பா?”

“ஆமாங்க”

‘”நீ அடிச்சியா? பாஸ்கரும் அடிச்சானா?”

“நான் அடிச்சனுங். அவன் அடிக்கமாட்டானுங்”

“பாஸ்கர் தண்ணியடிக்க மாட்டானா?”

“அடிக்கமாட்டானுங். எப்பவாச்சு கொஞ்சம். அன்னைக்கு டென்சனா இருந்தான். ஆனா அடிக்கலீங்”

“என்ன டென்ஷன்?”

“ஆரயோ பாக்கப் போகோணும்னான்”

“யாரது?”

“அதப்பத்தி செரியா சொல்லமாட்டானுங். கோயமுத்தூரும்பான், பொள்ளாச்சிம்பான். முளுங்கி முளுங்கிதாம் பேசுவானுங்க”

7

எப்போதும் கொலை செய்யப்பட்டவனின் எதிர்த்தரப்பை விசாரிக்கும் வழக்கம் இல்லை. கொலை செய்யப்பட்டவனின் உறவினர்களின் உள்ளுணர்வை போலீஸ் அதிகம் நம்பும். இப்போது இந்த அமுதாவும், அவளது அம்மா அமராவதியும் எந்தத் தரப்பு என்று முடிவு செய்ய முடியவில்லை. சாட்சிகளாகவும் இருக்கலாம். கொலைக்கு உடந்தையாகவும் இருக்கலாம். கொலைகாரர்களாகவும் இருக்கலாம். எனவே அமராவதியை விசாரித்து விடுவது என்று அபு முடிவு செய்தார். எல்லோரையும் ஸ்டேஷனுக்கு அழைத்து வரலாம். ஆனால் ஆரம்ப கட்ட விசாரணையை தானே இங்கே கிராமத்திலேயே செய்துவிடுவது நல்லது என்று தோன்றியது.

அமராவதி வீட்டுக்குப் போகும்முன் ஆளுங்கட்சியின் உள்ளூர் தலைவர் வீட்டை விசாரித்து அங்கே போனார்கள். ஆளுக்கட்சியினர் போலீசுடன் நெருக்கமாக இருப்பார்கள். சில போது தகவல் அளிப்பவர்களாகவும் இருப்பார்கள். தலைவரது வீடு சாதாரணமாக இருந்தது. ஆனால் விதவிதமான எலெக்ட்ரானிக் சாதனங்கள் அங்கே இங்கே காணப்பட்டன. தலைமையின் பெரிய போட்டோ வைக்கப்பட்டிருந்தது.

“பையன் செரியான பையனுங்கோ. கட்டப்பஞ்சாயத்துக்காரன். ஒரு பிரச்சனையாயிட்டா எவ்வளவு குடுப்பீங்கன்னு நேரா கேப்பானுங். அந்த மாரி ஆளு. தொல்ல தாங்காம ஒரு தடவ குண்டாஸ்ல போட்டாங்கோ. வெளிய வந்தூமு அதே வேலைங்”

“எத்தன தடவ பஞ்சாயத்துப் பண்ணி பணம் வாங்கியிருக்கான்?”

“ஒரு தடவ செஞ்சது அல்லாருக்கும் தெரியும். வெளியூருக்கல்லாம் போயி இதே சோலிதான...”

“அமுதாவுக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு?”

“ஒரு தொடர்பும் இல்லீங்க. சந்தக் கடைல அந்தப் புள்ளைய தொல்ல பண்ணியிருக்கானுங்கோ. அமுதா போய்ட்டிருந்தப்ப இந்த மைனரு வந்து பேச்சுக் குடுத்திருக்கானுங். அந்தப் புள்ள பேசாம

ஓடீருக்கு. சந்தைல அத்தினி சனத்துக்கு நடுவால இவன் தொரத்தீட்டே போயிருக்கானுங்க. அந்தப் புள்ள பொரிக்கடைக்குப் பக்கத்தால போயி ஒளிஞ்சுடுச்சு. அவங்கப்பன் சென்றாயன் வந்து ஏன்னு கேட்டு, இவன் ஏதோ ஏத்தமா பதில்சொல்லி... அதெல்லா நல்லாச் சொல்லுவானுகள்ள... பெரிய சண்டையாயிருச்சுங்கோ. சென்ராயன் வெள்ளிங்கிரியோட அல்லக் கைங்க. வெள்ளிங்கிரியும் சண்ட வந்தப்ப பெரிய புடுங்கியாட்டா வந்து கேட்டிருக்கானுங். இந்த பாஸ்கர் பையன் ரெண்டு பேரையும் போட்டு அடிச்சுப் பின்னிட்டானுங்கோ"

"அமராவதி எப்புடி?"

"தெக்கத்தி ஆளு. புருசனில்லங்கோ. கோயமுத்தூருல வீட்டு வேல செஞ்சுட்டிருந்திருக்காளுங்க. இங்க மில்லுக்கு வந்தவ மெஸ்ல புரோட்டா பொட்டலம் கட்டற சென்றாயனோட சேந்துட்டாளுங்.. ரெண்டு பேரும் லைன் வீடெடுத்து குடும்பமாயிட்டாங்கோ. அமுதாப்புள்ள மொதப் புருசனுக்குப் பொறந்தவ. அமராவதி மகள இங்க கூட்டிட்டு வந்து பருத்திக் காட்டுக்காரரோட மில்லுக்கு அனுப்பி வெச்சா. அந்தப் புள்ள வேலசெய்ய மாட்டேன்னு ஓடி வந்துட்டாளுங். இப்ப மறுக்கா வேற எங்கியோ வேலைக்குப் போயிட்டாளாமா" என்றார்.

"ஏதோ வெள்ளிங்கிரி தறிக்கொட்டத்துல ஒருத்தன் ஓடிட்டான். பாஸ்கர்தான் தாட்டி உட்டான்னு சொல்றாங்களே?"

"வட்டிக்கு வாங்கி பவர்லூம் போடறோம். கூலிக்காரப் பசங்க முன்னாலையே பணம் வேணும்ன்னு கேக்கறாங்கோ. அதையும் குடுக்கறோமுங்க. பொறகு வேல கஷ்டம்ன்னு சொல்லிட்டு ஓடிப்போயிடறது. அதுக்கு இந்தத் தெல்லவாரி, கம்யூனிஸ்டுகாரனுக எல்லாம் ஒத்து. விசைத்தறி கொடுமைகிடுமைன்னு டிவிக்காரன் வேற நியூஸ் போடறான்"

"சரி பாஸ்கர்தான் தாட்டி உட்டானா?"

"கையப் புடிச்சுக் கூட்டிட்டுப் போய் உட்டத ஆரும் பாக்கலீங்க. ஆனா உள்ளூர்க்காரன் உதவி இல்லாம ஆரும் ஓட முடியாது. இவனமாதிரி ஆளுகதான் அதச் செய்வானுங்க"

சந்தையில் என்ன நடந்தது என்று சொல்வதற்காக நேரில் பார்த்த ஒருவரை மாலை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வருவதாகத் தலைவர் சொன்னார்.

ஊருக்கு வெளியே நீளநீள ஷெட்டுகள் கட்டி வாடகைக்கு விட்டிருந்தார்கள். அவற்றில் பனியன் கம்பெனிகளுக்கும், வேறு வேலைகளுக்கும் செல்பவர்கள் தங்கியிருந்தார்கள். ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட நீளமான கட்டடம். முன்னால் நான்கடி அளவுக்கு சிமெண்ட் தளம் போடப்பட்டிருந்தது. அதில் குடியிருப்பவர்களின் இருசக்கர வாகனங்களும், தண்ணீர் டிரம்களும், சைக்கிள்களும் மற்ற சாமான்களும் வைக்கப்பட்டிருந்தன. வரிசை வரிசையாக துணிகள் காய்ந்து கொண்டிருந்தன.

தலைவரும் கூடவே வந்தார். பின்னால் ஊர் இளைஞர்களும் வந்து கொண்டிருந்தனர். இதற்காகத்தான் சம்பந்தப் பட்டவர்களின் வீட்டுக்கு வந்து விசாரிப்பதில்லை. அமராவதியின் வீடு பூட்டியிருந்தது. அமராவதியை இலுப்பப்பாளையம் ஸ்டேஷனுக்கு வரச்சொல்லி பக்கத்து வீட்டில் சொல்லிவிட்டு அபுவும், பாலுவும், உள்ளூர் காவலரும் கிளம்பினர்.

8

மாலை இலுப்பப்பாளையத்திலிருந்து ஒரு பெரிய கூட்டமே காவல்நிலையத்துக்கு வந்து குவிந்து விட்டது. அபு முதலில் அமராவதியையும் அவளது காதலன் அல்லது கணவன் அல்லது உடன் வாழ்பவன் ஆகிய சென்ராயனையும் அழைத்தார். அமராவதிக்கு வயது நாற்பதிலிருந்து நாற்பத்தைந்துக்குள் இருக்கலாமென்று தோன்றியது. மாநிறத்துக்கும் சற்றுக் குறைச்சலான நிறம். சுருட்டை முடி நரையோடிப் போயிருந்தது. ஓரளவு நல்ல உயரம்தான். உடலமைப்புத் தெரியாமல் ஒரு பழைய பூனம் சேலையை தட்டுச் சுற்றாகக் கட்டியிருந்தாள். அது கீழே கால்பகுதியில் சுருண்டிருந்தது. பட்டையான மூக்குத்தி அணிந்திருந்தாள். கழுத்தில் ஒரு கருப்புக் கயிறு. உள்ளே வந்தவுடன் தயங்கினாலும் கொட்டைப் பற்கள் தெரியச் சிரித்ததில் துணிச்சல் தெரிந்தது. அபு அவளை முன்னாலிருந்த மர பெஞ்ச்சில் உட்காரும்படி சைகை காட்டினார்.

“அமுதா எங்கே?”

“வேலைக்குப் போயிருக்குங்க” எதிர்பார்த்த பதில்தான்.

“எந்த வேலைக்கு எங்க போயிருக்கு?”

“பொள்ளாச்சி பக்கம்...”

பாலு திடுக்கிட்டான். அபு நிதானமாக அவளைப் பார்த்தார்.

“பொள்ளாச்சி பக்கம் எங்க?”

“கேரளா பார்டர் கிட்ட. காமாட்சிபுரத்திலிருந்து போகணும்”

பாலுவுக்கு மூச்சு அடைத்துக்கொண்டது. அவ்வளவுதான். ‘எல்லாம் சரியாக இருக்கிறது. எப்படி நடந்தது? என்பது மட்டும்தான் தெரிய வேண்டும். ஒரு கேள்வி தவறாகப் போனால் ஒரு பதில் திசைதிரும்பி விட்டால்... மனது பதைபதைத்தது. கழுத்தைப் பிடித்து எப்படிக் கொன்னீங்கன்னு ஒரே ஒரு கேள்வி...’

அபுவின் முகத்தில் எதுவும் தெரியவில்லை.

“இந்த பாஸ்கரும், அமுதாவும் காதல் பண்ணிட்டிருந்தாங்களா?”

“ஐயோ அதெல்லாம் இல்லீங்க”

“அப்புறம் அவன் அமுதாவையே சுத்திசுத்தி வந்தான்னு சொல்றாங்களே”

“அவன் வேணா சுத்தி வந்திருப்பான். காதலெல்லாம் இல்லீங்க” அவள் தலையாட்டி தீர்மானமாக மறுத்தாள்.

“பாஸ்கருக்கு உம்மவ போன் பண்ணுவாளா?”

“அதெல்லாம் பண்ணமாட்டாளுங்க. அவ கிட்ட போனே கெடையாதுங்க!”

“உனக்கும், பாஸ்கருக்கும் என்ன சம்பந்தம்?”

“ஒண்ணுமில்லீங்க”

“பொறவு ஏரி மேட்டோரம் ரெண்டு பேரும் நின்னு பேசிட்டிருந்தீங்களாம்?”

அமராவதி திகைத்தாள். எச்சில் விழுங்கினாள். “நான் போயிட்டிருந்தனுங்க. அந்தத் தம்பி எதிர்ல வந்துச்சு. அக்கா, பொண்ணு ஊர்ல இருக்கான்னு கேட்டுச்சு. தம்பி நாங்க கஷ்டப்படுற குடும்பம் இதெல்லாம் வேண்டாம்னு சொன்னேன். அதுபாட்டுக்குப் போயிருச்சு”

அதோடு முடிந்து விட்டது என்று பாலு நினைத்தான். ஆனால் அபு தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

“இந்தப் பொள்ளாச்சி மில்லுல உம்பொண்ணு எத்தன நாளா வேலைக்குப் போறா?”

“ஒரு ஏழெட்டு மாசமா”

“அதுக்கு முன்னாடி?”

“இங்க பருத்திக் காட்டுக்காரர் மில்லுல போனா...”

“அங்க எத்தன நாள் போனா?”

“ஒரு ஆறு மாசம்”

“அதெப்புடி ஆறு மாசம்? மூணு வருசம் வேல செய்யறதா அட்வான்ஸ் வாங்கியிருப்பீங்களே?”

“அறுபதாயிரம் வாங்கியிருந்தோம். ஆனா வேல கஷ்டம்னு அழுதுட்டிருந்தா. கொஞ்சம் புள்ளைக சண்டை போட்டுட்டு மில்லுல இருந்து ஓடிப் போச்சு. இவளும் வீட்டுக்கு வந்துட்டா. பொள்ளாச்சி மில்லு நல்லாருக்கும்னு சொன்னாங்க. அங்க பணம் வாங்கி மில்லுல வாங்குன அட்டுவான்ஸ் பணத்தத் திருப்பிக் குடுத்துட்டு புள்ளைய பொள்ளாச்சிக்கு அனுப்பிட்டோம்”

“பொள்ளாச்சி மில்லுல பிரச்சினை இல்லையா?”

“இல்லீங்க. அங்க நல்லாயிருக்காம்”

சென்ராயன் அமராவதியை விட வயது குறைந்தவனாக, கருப்பாக உயரமாக சற்றே தடித்த உடல்வாகுடன் இருந்தான். முகம் உப்பித் தெரிந்தது. அவனும் அமராவதி சொன்ன அதே கதையைத் திருப்பிச் சொன்னான். புதிதாக சனிக்கிழமை சந்தையில் பாஸ்கருடன் நடந்த சண்டையை விவரித்தான்.

அன்று அவனும் வெள்ளிங்கிரி தலைவரும் சந்தைக்குப் போயிருந்தார்களாம். இப்போதெல்லாம் வடக்கத்திக்காரர்கள் வந்து சந்தை களை கட்டுகிறது. தான் மிளகாயும், பொரியும் வாங்கப் போயிருந்ததாகவும் அங்கே அமுதாவைப் பார்த்ததாகவும் சொன்னான். அமுதா இலுப்பப்பாளையம் மில்லில் வேலை செய்து வந்த நேரம். மில்லிலிருந்து பெண்களை பொருட்கள் வாங்கக் கூட்டமாகக் கூட்டி வந்திருந்தார்கள். அமுதா யாரையோ பார்த்துப் பயந்து மிரண்டு விழித்தபடி முன்னால் ஓடிக்கொண்டிருந்தாள். இதைப் பார்த்த சென்ராயன் என்ன என்று விசாரிக்கலாம் என்று அவள் பின்னால் சென்றான். அப்போதுதான் பாஸ்கர் அவளை விரட்டிக்கொண்டு செல்வது தெரிந்தது.

ஓரிடத்தில் பாஸ்கர் ஓடிக்கொண்டிருந்த அமுதாவை குறுக்காட்டி நிறுத்தி ஏதோ சொன்னான். ஆனால் அமுதா பதில் பேசாமல் ஓட முயன்றாள். சென்ராயன் கோபமடைந்து அவர்கள் அருகே சென்று பாஸ்கரிடம் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்டான்.

“நீயாரு சொந்த அப்பனா? மூடிட்டுப் போன்னான்.

எனக்குக் கோபம் வந்து சட்டையப் புடிச்சேன். என்னைத் தள்ளி விட்டுட்டான். சத்தம் போட்டு கூட்டம் கூடிருச்சு. வெள்ளிங்கிரி தலைவரு வந்தாரு. என்னையப் புடிச்சு தள்ளறதப் பாத்ததும் ஓங்கி ஒரு அறை விட்டாரு. அவன் ஒரு நிமிசம் கூடப் பாக்காம திரும்ப அறஞ்சிட்டான். தலைவருக்கு அப்புடி ஒரு அவமானமாயிருச்சு. எவன்வந்தாலும் குத்திக் கூறு போட்டுருவேன்னு சொல்லிட்டு பாஸ்கர் போயிட்டான்”

“வெள்ளிங்கிரிக்கும் பாஸ்கருக்கும் மொதல்லயே பிரச்சினை இருந்துச்சு” என்று அபு சொன்னது கேள்வி கேட்பது போல இல்லாமல் ஒரு தகவல் பரிமாறிக்கொள்ளும் தொனியில் இருந்தது.

“ஆமாங்க. தறில இருந்து தஞ்சாவூர்க்காரன் ஓடின வெவகாரத்துல தலைவருக்கு அவம்மேல சந்தேகம் இருந்துச்சு. மொறச்சுக்குவாங்க. ஆனா பிரச்சன ஒண்ணும் ஆகலீங்க. பணத்த வாங்கிட்டு வேல செய்யாம ஓடிப்போனா கோவம் வருமில்லீங்களா”

பாஸ்கர் மிரட்டிப் பணம் பறித்ததாகச் சொல்லப்பட்ட ஒருவரும் வந்திருந்தார். அரைக்கை வெள்ளைச் சட்டையும், வேட்டியும் அணிந்திருந்தார். பருத்த உடல்வாகு என்றாலும் கொழுகொழுவென்றில்லாமல் உரமேறித் தெரிந்தது. அறுபது வயதிருக்கலாம். மாநிறம். வழுக்கைத் தலை. நரைத்த மீசை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பஸ்ஸில் பிரச்சினை வந்ததாம். பேச்சு சுத்தமான கொங்குத் தமிழில் இருந்தது.

“குப்பன்னு ஒருத்தன் தோட்டத்துல வேல செஞ்சுட்டிருந்தான். மொதல்ல எல்லாம் வான்னா வரணும் போன்னா போகோணும். கஞ்சியோ கூழோ ஊத்தறதக் குடிச்சுப்போட்டு சோலியப் பாத்துட்டு கெடப்பானுக. இப்ப இவனுக கலெக்டரு மாதிரி ஆயிட்டானுகல்லோ. நெனைச்சா வருவானுக. நெனைச்சா வரமாட்டானுக. போய் உருவி வுட்டாத்தான் வருவானுக. இந்தக் குப்பன் ரெண்டுநாளா வரல. ஏன்னு கேக்க காலனிக்குப் போனனுங்க. என்னைய வீட்டுமுன்னாடி சேர் போட்டு உக்கார வெச்சுட்டு எங்கூட வர குப்பன் கௌம்பிட்டிருக்கான். அவன் மகன் மைனரு வந்து கோயமுத்தூருக்கு வேலைக்குப் போ இல்லாட்டி

நூறுநாள் வேலைக்குப் போ. பழைய துணிக்கும் பிச்சக்காசுக்கும் வாடா போடாங்கறவங்கிட்ட வேலைக்குப் போகாதேங்கறான். அவுரே மரியாத பாக்காம நம்மூட்டுக்கு வந்து முன்னாடி உக்காந்துட்டிருகாரு. எப்புடிடா மாட்டேங்கறதுங்கறான் அப்பன். அப்ப நம்மள அவுரு வூட்டுக்குக் கூப்புட்டு இப்புடி உக்கார வெப்பாரான்னு கேட்டுப் போட்டான். போங்கடா ---------- நீங்களுமாச்சு உங்க சோலியுமாச்சுன்னு கெளம்பி வந்துட்டேன். ஒரு நாளு மகங்காரன தோட்டத்துக்கிட்ட பாத்ததும் கண்ணு மண்ணு தெரியாம கோபம் வந்து சாத்து சாத்துன்னு சாத்தீட்டனுங்க. பக்கத்தால இருந்த நம்மட பசங்களும் சேந்து பட்டை எடுத்துட்டாங்கோ. இந்த பெரிய தனக்காரன் பாஸ்கரு இருக்கானல்லோ? இவன் வக்கீலு மாதிரி. அடிபட்ட நாயைக் கொண்டு போயி ஆஸ்பத்திரில அட்மிசன் போட்டுட்டானுங்க. கேசாயிப் போச்சு. டேசன்ல வெச்சு கோர்ட்டுக்கு அலையறதுக்கு, வக்கீலுக்குக் குடுக்கறதுக்கு எங்களுக்குப் பணத்தைக் குடுன்னு நேராக் கேக்கறானுங்க. அவனுக்கு ஒரு லட்ச ரூவாயும், போலிசுகாரங்களுக்குப் பத்தாயிரம் ரூவாயும் அளுதனுங்க" என்றார்.

"பணத்தக் குடுத்தப்ப எனக்குக் கண்ணுல தண்ணி வந்துருச்சுங்கோ. அவன் ஜில்லாக் கலெக்டரு மாரி நிக்கரானுங்கோ. பணத்த சோப்புல போட்டுப் போட்டு வாப்பான்னு கூட இருந்தவனைக் கூட்டீட்டுப் போயிட்டானுங்க. பொறகால என்னப் பாக்கறப்பல்லாம் அவங்கண்ணுல ஒரு எளக்காரம் தெரியும் பாருங்க. நாந்தே கடன் வாங்கின மாரி வேற பக்கமா ஒதுங்கிப் போயிருவனுங். இந்த மாரி எங்கியாச்சும் போய் லோலாயி பண்ணிருப்பானுங். அதான் போட்டுத்தள்ளியிருப்பாங்..." அவர் தன் மேல் சந்தேகம் திரும்பக்கூடும் என்ற நினைப்பே இல்லாமல் கொட்டித் தீர்த்தார். அவரது கோபத்தைப் பார்த்து அபு வாய்க்குள் சிரித்தது போலிருந்தது.

கடைசியாக சந்தையில் சண்டையைப் பார்த்த பொரிக்கடைக்காரர் வந்திருந்தார். சென்ராயன் சொன்ன அதையேதான் சொன்னார்.

"பாஸ்கர் என்ன சொல்லி அடிச்சான்?"

பொரிக்கடைக்காரர் சற்றுச் சிந்தித்தார். "புள்ளைய

மில்லுக்காரங்கிட்ட வித்துப்போட்டு எங்கிட்ட என்னடா வீரம்ன்னானுங்க”

அபு ஏதோ புரிந்தது போலத் தலையாட்டிக்கொண்டார்.

விசாரணை முடிந்து திரும்பும் போது பாலு “என்னங்கையய்யா நினைக்கிறீங்க?” என்று கேட்டான்.

அபு வெளியில் வேடிக்கை பார்த்துக்கொண்டே “அமராவதி பொய் சொல்றா” என்றார்.

“அப்ப பாஸ்கருக்கும், அமுதாவுக்கும் லவ்வுங்களாய்யா?”

“அப்படித் தோணல. வேற ஏதோ இருக்கு. பொண்ண வித்துட்டேன்னு சொல்லியிருக்கான். சண்டைக்காரப் பையன். அமுதாவ விசாரிச்சாத்தான் தெரியும்”

பாலுவைப் பொறுத்தவரை சாதியைச் சொல்லி ஒரு மனிதனைத் கேவலப் படுத்துவதைப் போன்ற குற்றம் வேறு கிடையாது. அதைச் செய்த ஒருவனைப் பணம் வாங்கிக்கொண்டு தப்புவித்தவன் கேடு கெட்டவன். பாஸ்கரின் மீதான தனது வெறுப்பை அபுவிடம் பகிர்ந்து கொள்ள விரும்பினான்.

“காசு வாங்கிட்டு எஸ்.சி. எஸ்.டி கேஸ வாபஸ் வாங்க வெச்சிருக்கானுங்கையய்யா” பாலுவின் குரலிலேயே குற்றம் சாட்டும் தோரணை தெரிந்தது. அபு பதில் பேசவில்லை.

“இந்த பாஸ்கர் பிராடுதானங்கையய்யா?” பாலு திரும்பவும் கேட்டான்.

அபுவின் முகபாவம் அதை அவர் ஆமோதிக்கவில்லை என்தைக் காட்டியது.

“எதுக்குப் பணம் வாங்கினானோ... வாங்கி என்ன செஞ்சானோ!” என்றார். “கட்டப் பஞ்சாயத்துக்காரனைப் போய் ஏன் கொல்றாங்க?”

பாலுவுக்குச் சுருக்கென்றது. தான் தவறவிட்டதை அபு சரியாகக் கணித்து விட்டார். மக்களும், ஊர் இளைஞர்களும் பாஸ்கர் மீது கொண்டிருந்த அன்பைக் கண்கூடாகப் பார்த்தார்கள் அல்லவா?

அபு தனக்குத்தானே தலையாட்டிக் கொண்டார். அவ்வளவுதான். சாதி

வந்து விட்டது. ஊர்ப்பெரிய மனிதர்கள், தலைவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இனி அதிகாரிகளைக் கேட்டுத்தான் நகர வேண்டும்.

9

ராஜேஸ்வரி மில் ஓனர் பருத்திக்காட்டு ராமசாமிக்கு அறுபத்தைந்து வயதிருக்கலாம். அவர் அணிந்திருந்த தும்பைப்பூ போன்ற வெள்ளைச் சட்டை மிகமிக மென்மையான பூந்துகில் போலிருந்தது. உள்ளே முண்டா பனியன் தெரிந்தது. வேட்டியிலிருந்த வெண்மை சற்றே நீலம் பூத்திருந்தது. பிரம்மாண்டமான வீடு. மைதானம் போலிருந்த முற்றத்தில் நான்கைந்து கார்கள் நின்றுகொண்டிருந்தன. ஒரு ஆடி கார்கூட இருந்தது. முற்றத்திலும் அதையொட்டியிருந்த தென்னந்தோப்பிலும் யார் யாரோ ஆட்கள் நடமாடிக்கொண்டிருந்தார்கள். கடல் போலிருந்த ஹாலின் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த வெள்ளை வெளேரென்ற சோபாவில் அன்புசேகரும், அபுவும் இன்னொரு போலீஸ்காரரும் உட்கார வைக்கப்பட்டனர். இந்தச் சூழலைப் பார்த்த போது இவருக்கெல்லாம் பாஸ்கர் போன்ற ஒருவனைத் தெரிந்திருக்குமா என்பதே அன்புசேகருக்குச் சந்தேகமாக இருந்தது.

“இந்த ஊர்ல சாதிப் பிரச்சினையே இல்ல. இந்த வளுசப் பசங்க தலையெடுத்துதான் ரெண்டு பக்கமும் சிக்கல் பண்ணறாங்க” மோர் குடித்த பின்பு ராமசாமி பட்டும் படாமலும் சொன்னார்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் மில்லில் வேலை செய்பவர் போலிருக்கிறது. பணிவு உடல் மொழியில் தெரிந்தது. “மதுரவீரன் கோவில் ஐயாவுடைய எடத்துலதான் இருக்குங்கோ. சித்திரமாசம் திருவிழா நடக்குமில்ல அப்ப அவங்க எத்தினி எடம் கேக்கறாங்களோ அத்தினி எடத்த வுட்டுக் கொடுப்பாங்கோ. எல்லாச் சாதிக்காரங்களும் சேர்ந்துதான் பல்லக்குத் தூக்குவாங்கோ. இந்த பாஸ்கரு எல்லாத்திலயும் சாதியைக் கொண்டுவந்து பிரச்சினை பண்ணுவானுங்க”

“எங்க செத்துக் கெடந்தான்?” ராமசாமி கேட்டார்.

“காமாட்சிபுரம்”

“அதெங்க இருக்கு?”

“பொள்ளாச்சி கிட்ட”

“ஓ”

“ஏதாவது டீலிங் பண்ணப் போயிருப்பான். இல்லாட்டி பொம்பளையத் தேடிப் போயிருப்பான். மைனருல்ல. மப்புல காடுகரை எதுன்னு தெரியாம உசுர உட்டுருப்பான்” என்றார் அருகே உட்கார்ந்திருந்தவர்.

“வெள்ளிங்கிரி எப்படி?” அன்புசேகர் எந்தப் பீடிகையும் இல்லாமல் ராமசமியிடம் நேரடியாகக் கேட்டார்.

ராமசாமி கொஞ்சம் மௌனமாக இருந்தார். என்ன சொல்வது என்று யோசிப்பது போலிருந்தது. பின்பு மெதுவாக கனைத்துக்கொண்டார்.

“நமுக்கு அல்லாச் சாதியும் ஒண்ணுதான். தாயா புள்ளையாத்தான் பழகறோம். மாதாரிகளுக்கும், நமக்கும் என்ன பிரச்சினை? ஊர்ல பள்ளு பறையெல்லாம் வெளிய போய் நாளாச்சு. இவங்கிட்ட போய் என்ன வீரம்? சரிக்கு சரி நின்னுட்டு... ஊரு மாறிப்போச்சு. ரெண்டு மூணு கிலோமீட்டர் வரைக்கும் கோயமுத்தூரு வந்து போச்சு. முன்ன மாதிரி இருக்குமா? பொழுதன்னிக்கும் சண்ட இழுத்துட்டு... பசங்களக் கெடுத்துட்டு...”

அன்புசேகர் ஆச்சரியப்பட்டுப் போனார். ராமசாமி வெள்ளிங்கிரியை ஆதரிப்பார் என்று நினைத்திருந்தார். ஆனால் அவர் பேசியது...

“அமுதாவுக்கும் வெள்ளிங்கிரிக்கும் என்ன உறவு?” அன்புசேகர் தெரிந்தேதான் கேட்டார்.

ராமசாமி கூட இருந்தவரைப் பார்த்தார். “அதானுங்கையய்யா அன்னிக்கு கூட்டமா புள்ளைங்க ஓடுனப்ப ஓடுச்சே...”

ராமசாமி தலையாட்டிவிட்டு அமைதியாக இருந்துவிட்டார். அவர் திரும்பவும் பேசப் போகிறார் என்று அன்புசேகர் நினைத்துக் கொண்டிருக்க கூட இருந்தவர்தான் பேசத் தொடங்கினார்.

“நம்ம மில்லுதானுங்க. இப்ப நாங்க ஓட்டறதில்ல. லீசுக்கு ஒருத்தன் கிட்ட உட்டிருந்தோம். அங்க வேலைக்கு இருந்த ஒரு தெக்கத்திப் பொண்ணுக்கு வேல செய்யறதுக்கு வளையல. மில்லுல இருந்து ஓடிப்போச்சு. இங்க ஒரு சங்கத்துக்காரனிருப்பான், கிருஷ்ணபரமாத்மா

மாதிரி எல்லாப் புள்ளைகளையும் நாந்தான் காப்பாத்தறேன்னு தெக்கையும், வடக்கையும் சுத்திட்டிருப்பான். அவனும் இந்த பாஸ்கர் பயலும் சேந்து கலெக்டர் வரைக்கும் பெட்டிசன் போட்டு போலீசைக் கூட்டிட்டு மில்லுக்கு ரெய்டு வந்துட்டானுகோ. வேல செஞ்சுட்டிருந்த மத்த பொண்ணுகளையும் கூட்டி வேற எடத்துல நல்ல வேல வாங்கித் தர்றேன்னு ஆசை காட்டியிருக்கானுக. கொஞ்சம் பொண்ணுக இவனுகளோட வேலையை உட்டுட்டு போயிடுச்சு... இந்த அமுதாப்பொண்ணும் வெளீல வந்து மதுரைக்கு ஓடிப்போச்சு. அந்தப்புள்ள மில்லு வேலைக்காகாது. வளையாமாறி. அன்னாடும் அழுதுட்டே இருக்கும். சூப்பர் வைசர் சொல்லிச் சொல்லி சடஞ்சு போயிட்டானுங். பொறகு... அந்த பாஸ்கரு பையங்கூட ஏதோ தொடுப்பு இருந்துது போலிருக்கு. அந்தப் புள்ளையோடவும் அவனுக்குத் தொடுப்பு. அவங்கம்மாளோடவும் தொடுப்பு. மோசமான ஆளு"

அவர் சற்று நிறுத்தித் தொடர்ந்தார். "கூட்டிட்டு போனவனுக சொன்னபடி புள்ளைகளுக்கு ஜில்லாக் கலெக்டர் வேல வாங்கித் தந்திருக்கோணும்லீங்கோ. நட்டாத்துல உட்டுபோட்டுப் போயிட்டானுக. அந்தப் பொண்ணுக வேற மில்லுல வேல செஞ்சுட்டுத்தான் இருக்கு. அதெல்லாம் பைவ் ஸ்டார் ஓட்டல் மாதிரி இருக்கும் போலிருக்கு. இந்த நாய்க வாயே தெறக்கலீங்க"

"நீங்க ஒண்ணும் செய்யலையா?" அன்புசேகர் ராமசாமியிடம் கேட்டார்.

"எனக்கென்ன? கட்டடம் என்னோடது. ஒருத்தன் அதுல வாடகைக்கு மில்லு நடத்தினான். அவனாச்சு. இவனுகளாச்சு"

சந்தேகப்படுவதென்றால் ராமசாமி மேலும் சந்தேகப்படலாம். ஆனால் சமீப காலமாக ஊரில் பிரச்சினை இல்லை என்கிறார்கள். ஸ்டேஷனில் ராமசாமி அப்படிப்பட்ட ஆள் இல்லை என்கிறார்கள். கொல்வதென்றால் இங்கேயே லாரியில் அடித்துத் தூக்கிப் போட்டிருக்கலாம். இவர்களுக்கு அவன் எங்கே இறந்து கிடந்தான் என்பதே தெரியவில்லை. முன்விரோதம் என்றால் இந்த ஊரில் எல்லாருக்கும் அவனுடன் முன் விரோதம் இருக்கிறது.

அன்புசேகர் யோசனையுடன் ஜீப்பை எடுக்கச் சொன்னார்.

10

பாலுவுக்கு இரண்டு வேலைகள் கொடுக்கப்பட்டன. கொலை நடந்ததற்கு முதல்நாள் மாலை ஆறுமணிக்கு பாஸ்கரை பஸ் ஸ்டாண்டில் பார்த்திருக்கிறார்கள். இலுப்பபாளையத்திலிருந்து கோவை, கோவையிலிருந்து பொள்ளாச்சி, பொள்ளாச்சியிலிருந்து காமாட்சிபுரம். இடையில் டீ காபிக்கு எங்காவது நின்றிருக்கலாம். எனவே உத்தேசமாக பாஸ்கர் இரவு ஒன்பதிலிருந்து பதினோரு மணிக்குள் காமாட்சிபுரம் வந்திருக்க வேண்டும் என்று கணக்கிட்டார்கள். அந்த நேரத்தில் காமாட்சிபுரம் வழியாகப் போகும் பஸ்களின் டிரைவர் கண்டக்டர்களை விசாரிக்க வேண்டும். பாஸ்கரின் எண்ணுக்கும், வெள்ளிங்கிரி, சென்ராயன் எண்களுக்கும் எத்தனை போன்கள் வந்தன? இவர்கள் யார்யாருக்குப் போன் செய்தார்கள்? காமாட்சிபுரம் டவர்களில் இருந்து எத்தனை போன்கள் சென்றன? என்பது குறித்தும் விசாரிக்க வேண்டும்.

அபு இதை அவனிடம் விளக்கமாகச் சொல்லிவிட்டு ஒருமுறை நிதானமாகப் பார்த்தார். "ஸ்டிரிக்டா பேசு பாலு. பம்ம வேண்டாம்"

பாலுவுக்குக் கொஞ்சம் கோபமும், அவமானமும் ஏற்பட்டது. ஆனால் அபு சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவனுக்கும் கோபம் மறைந்து புன்முறுவல் அரும்பியது. தனது பலவீனத்தை இவரும் கண்டுகொண்டார். பாலு துணிச்சல்காரன், உழைப்பாளி, புத்திசாலி எல்லாம் சரிதான். ஆனால் அவனுக்கு அதிகாரமும் வருவதில்லை. அடங்கிப் போகவும் முடிவதில்லை.

பாலுவுக்கு ஒருநாளும் போலீசில் சேர வேண்டும் என்ற எண்ணம் இருந்ததே கிடையாது. அவனுக்குக் காரமடைப் பக்கம் கிராமம். கூப்பிடுதூரத்தில் காடு தொடங்கிவிடும். பாலுவும், நண்பர்களும் இரவும் பகலும் காட்டுக்குள்ளேயே கிடப்பார்கள். மலைமேல் ஓடுவார்கள். முயல்வேட்டை ஆடுவார்கள். நீந்துவார்கள். மரமேறுவார்கள். பாலு கோவை அரசு கலைக் கல்லூரியில் வரலாறு படித்தான். அந்த நேரத்தில் ஊர்ப் பையன்கள் போலீஸ் செலக்ஷனுக்குத் தயாராகத் தொடங்கினார்கள். தனது குழு முழுமூச்சாக இந்த வேலையில் ஈடுபட்டதால் பாலுவும் விளையாட்டாக இறங்கினான்.

காரமடை ஜிம்மில் போலீஸ் செலக்ஷனுக்குப் போகிறவர்களுக்காக புளிய மரத்தில் பெரிய வடக்கயிறு தொங்கவிடப்பட்டிருக்கும். இளைஞர்கள் அதில் ஏறிப் பயிற்சி செய்வார்கள். எல்லோரும் மேலே ஏறிவிடுவார்கள். ஆனால் இறங்கும் போது ஒரு கையால் கயிற்றைப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையைக் கீழே இறக்கிப் பிடித்துதான் இறங்க வேண்டும். ஆனால் பலருக்குக் கையை எடுக்க முடியாது. கூசும். அந்த ஒருவிநாடி ஒற்றைக் கையால் தொங்க மனம் அனுமதிக்காது. எனவே கையை எடுக்காமல் கயிற்றில் சரித்துக் கொண்டே இறங்குவார்கள். உள்ளங்கையில் தோல் உரிந்துவிடும். அடுத்த நான்கு நாட்களுக்குக் கயிறு ஏற முடியாது. ஆனால் பாலு லாவகமாகக் கைகளை மாற்றி மாற்றி அழகாக இறங்கிவிடுவான்.

பாலு ஒவ்வொரு தேர்வையும் எளிதாகத் தாண்டிப் போனான். ஒரு கட்டத்தில் இது விளையாட்டு இல்லை, தான் போலீஸ் ஆகிவிடுவோம் என்று அவனுக்குப் புரியத் தொடங்கிவிட்டது. இதை எப்படி எதிர்கொள்வது என்று அவனுக்குப் புரியவில்லை. எப்படியும் ஒரு வேலை வேண்டும்தானே? எனவே போலீஸ் வேலைக்குப் போவது என்று முடிவு செய்தான்.

காலை 7 மணிக்கு கோவை பி.ஆர்.எஸ் கிரவுண்டுக்கு வரச்சொல்லி உத்தரவு வந்தது. ரெக்ரூட்மெண்ட் நம்பர் கொடுத்தார்கள். பின்பு முப்பதுபேர் கொண்ட குழுக்களாகப் பிரித்தார்கள். அதில் ஒரு பேரக்குக்கு எட்டு பேர். நிக்கர், போலீஸ் பனியன், ஷூ, பெல்ட், சமாச்சாரங்கள் கொடுத்து ஒழுங்கு செய்ய மூன்று நான்கு நாட்கள் சென்றது.

பயிற்சிக் கல்லூரியில் காலை நான்கரை மணிக்கு விசில் அடிக்கப்படும். உடனே ஷேவிங் செய்துவிட்டு, பனியன், டிரவுசர், ஷூ அணிய வேண்டும். ஷூ நுனி பளபளக்க வேண்டும். அதற்கு இரவே பாலீஷ் போட்டு காலையில் டிரை பிரஷால் தேய்த்தால்தான் அந்தப் பளபளப்பு வரும். பெல்ட் பக்கிள்ஸ் வெள்ளி போல மின்ன வேண்டும்.

கணுக்கால் வரை ஷூ இருக்கும். அதற்கு மேல் பட்டித்துணி. தொப்பியின் அடையாளச் சின்னம் வலது கண்ணுக்கு மேலே இருக்க வேண்டும்.

இந்த அலங்காரங்களுடன் கிரவுண்டுக்குச் சென்றதும் ரோல் கால் எடுக்கப்படும். பயிற்சியாளர் போலீஸ் பணியைப் பற்றி உயர்வாக சில நிமிடம் பேசுவார். பின்பு போலீஸ் ஷூவைக் கழற்றி விட்டு ரன்னிங் ஷூ அணிந்து கொண்டு மைதானத்தைச் சுற்றி ஓட வேண்டும். பயிற்சியாளரின் முரட்டுத்தனத்துக்குப் பாராட்டு உண்டு என்பதை பின்பு பாலு தெரிந்து கொண்டான். அதேநேரம் சில பயிற்சியாளர்களுக்கு ஒன்றுமே தெரியாது.

காமாண்டண்ட் கிரவுண்டைச் சுற்றிச்சுற்றி வந்து வேலை வாங்குவார். சில பயிற்சியாளர்கள் அவர் வரும்போது இவர்களை வேறுபுறம் அழைத்துச் சென்று விடுவார்கள். சில போது 'அவன் வர்றனா பாரு' என்று இவர்களிடமே சொல்வார்கள். பின்பு பயிற்சிகளின் கடுமையைக் குறைப்பதற்காக மாதம் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் லஞ்சம் தருவதும் தொடங்கியது.

பயிற்சியின் போது துப்பாக்கியை வைத்துக்கொண்டு ஓட வேண்டும். ஐந்தரை கிலோ .303 துப்பாக்கி. முதலில் மிகவும் சிரமமாக இருந்தது. பின்பு பழகிவிட்டது. ஓட்டம், அணிநடை என்று இரண்டு மணிநேரம் பயிற்சி நடக்கும்.

குளித்து விட்டு உணவு முடிந்ததும் வெள்ளைச் சட்டை, வெள்ளை அரை ட்ரவுசர் அணிந்து சட்ட வகுப்புக்குச் செல்ல வேண்டும். இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், சாட்சிச் சட்டம், போலீஸ் ஸ்டேண்டிங் ஆர்டர், காவல் நிலையத்துக்கு வரும் வழக்குகள் என்று வகுப்புகள் நடைபெறும். எஸ்.ஐ. தகுதியில் உள்ள காவலர்கள் வகுப்பு எடுப்பார்கள். அவர்களுடைய அனுபவங்களை நிறைய சொல்வார்கள்.

வகுப்பறை கல்லூரி போலவே இருந்தது. பாடமெடுப்பதும் கல்லூரி போலத்தானிருக்கும் என்று பாலு நினைத்திருந்தான். ஆனால் முதல் வகுப்பே அதிர்ச்சியூட்டி இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிய வைத்தது.

தனது அனுபவத்தில் கண்ட ஒரு கொலை வழக்கைப் பற்றி ஒரு ஆசிரியர் இப்படி விளக்கத் தொடங்கினார்.

“ஒருத்தனுக்கு பொண்டாட்டிய குத்திட்டே இருக்கணும். குத்துன்னா எந்த குத்துன்னு தெரியுமில்ல? அந்ந்ந்தக் குத்து. வேற வேலையே கெடையாது. குத்திக் குத்தி பொண்டாட்டிக்கு அது பழக்கமாகிப் போச்சு. ஒரு நாள் இவன் எங்கியோ போயிட்டான். அவ குத்து இல்லாம இருக்க முடியாம பக்கத்து வீட்டுக்காரனக் கூப்புட்டு குத்த சொன்னா. குத்திட்டு இருக்கும் போது புருசன் வந்துட்டான். கத்தி எடுத்துக் குத்திட்டான”

குத்து என்பதை ஒவ்வொரு முறையும் அழுத்திச் சொன்னார். விதவிதமான சைகைகள் காட்டினார். ஒவ்வொரு முறை அவர் அதை உச்சரிக்கும் போதும் வகுப்பு சிரிப்பால் அதிர்ந்தது.

ஆனால் வகுப்பில் தூங்குபவர்களுக்கும் அலட்சியமாக இருப்பவர்களுக்கும் கடும்தண்டனை கிடைக்கும். இது கல்லூரி அல்ல என்பதை ஒவ்வொரு நிமிடமும் காட்டியது வகுப்பு.

பேரக்ஸில் பாலுவுடன் இருந்த பையன்கள் உணர்ச்சிமயமாகவிருந்தனர். ஜென்ம சாபல்யம் அடைந்து விட்டவர்கள் போன்ற மிதப்புடன் நடமாடினர். பரம்பரை பரம்பரையாக போலீஸ் வேலைக்கே நேர்ந்து விடப்பட்ட குடும்பங்களைப் பற்றி பாலு அங்கேதான் தெரிந்து கொண்டான். ஒரு பையன் பத்தொன்பது வயது இருக்கும். மீசை கூட ஒழுங்காக வளரவில்லை. அதை முறுக்கி முறுக்கி விடுவான்.

“இது எத்தன பெருமைங்க. நாடே நம்மள நம்பித்தானே இருக்கு. போலீசாகணும்னு பொறந்ததுல இருந்தே நெனைச்சுட்டிருக்கேன். எங்க குடும்பத்துல ஆம்பளைங்க எல்லாரும் போலீஸ்தான்” என்றான். அவன் முகத்தில் பெருமிதம் தாண்டவமாடியது. பாலுவுக்கே கூட தனக்கு எளிதாக வேலை கிடைத்து விட்டதால் இதன் அருமை தெரியவில்லை போலிருக்கிறது என்று தோன்றத் தொடங்கிவிட்டது.

பயிற்சியின் போது ஒவ்வொரு பதினைந்து நிமிடத்துக்கும் ஐந்து நிமிடம் ஓய்வு வழங்கப்படும். எல்லாமே முன்பே திட்டமிடப்பட்ட ஒழுங்கில் துல்லியமாக செயல்படும். ஒவ்வொன்றுக்கும் ஒரு முறை, ஒவ்வொன்றுக்கும் ஒரு ஒழுங்கு. ஒரு சட்டம் ஒரு விதி.

யாராவது பெரிய அதிகாரி வரப்போகிறார் என்றால் பயிற்சிக் காவலர்களை முழு சீருடையில் ஒருமணி நேரத்துக்கு முன்பே தயாரித்துப் பொம்மை போல அலங்கரித்து வரிசையில் நிறுத்தி விடுவார்கள். அதிகாரி வரும்வரை வரிசை குலையாமல் ரைபிளை நேராகப் பிடித்தபடி நிற்க வேண்டும். பசி, தாகம், இயற்கை உபாதைகள் எதற்கும் இடமில்லை. காவலர் பயிற்சியின் போது அழுத்திச் சொல்லப்படுவது எண்டியூரன்ஸ். எல்லாவற்றையும் தாங்கி நிற்பது. இதுதான் முக்கியம் என்று திரும்பத்திரும்ப வலியுறுத்தப்படும். ஒரு காவலனுக்கு அனைத்தையும் தாங்கி நிற்கும் மனவலிமையும், உடல்வலிமையும் வேண்டும்.

பணிக்கமர்த்தப் பட்ட பின்பு விஐபி விஜயங்களின் போது சாலைகளிலும், ஏதேதோ கட்டடங்களின் மொட்டை மாடிகளிலும் காத்துக் கிடக்க வேண்டும். அதற்கு இதுதான் பயிற்சி. சிலபோது பசிக் களைப்பால் கொஞ்சம் உட்கார்ந்து கொள்ள வேண்டும் போலிருக்கும். உடல் ஓய்ந்து வரும். தலை சுற்றும். கிறக்கமாகிவிடும். தன்னிலை தப்புகிறது என்ற எண்ணம் வரும்போது ஷூவுக்குள் பெருவிரலை ஆட்ட வேண்டும் என்று பயிற்சியாளர் சொல்லித் தந்திருக்கிறார். பாலுவுக்கு அந்த நிலைமை ஒரு போதும் வந்ததில்லை.

ஒரு ஓநாயைப் போன்ற வலுவுடன் அதேநேரம் ரப்பரைப் போன்ற நெகிழ்வுத் தன்மையுடன் இருக்கும் பாலுவின் மீது மற்ற மாணவர்களுக்கு எப்போதும் அதீத பொறாமைதான்.

அன்று அப்படித்தான் போலீஸ் பரம்பரைப் பையன் காலை ஐந்து மணியிலிருந்து மைதானத்தில் நின்று தலைசுற்றி ரைபிளின் மீது சாய்ந்து விட்டான். பயனெட் முகத்தில் கிழித்து விட்டது. பயிற்சியின் போது யாராவது கீழே விழுந்தால் மற்றவர்கள் அசையக் கூடாது. அப்படியே நிற்க வேண்டும். அசைந்தால் தண்டனை உண்டு. ஆனால் பாலு ஓடி வந்து அவனைத் தூக்கி ஒரு மர நிழலில் படுக்க வைத்தான். பின்பு இந்த விதி மீறலுக்காகத் தன்னை என்ன செய்யப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்புடன் பயிற்சியாளரைப் பார்த்தான். அவர் சிரித்தபடி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தட்டிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்.

பயிற்சி, கேள்வியின்றிக் கீழ்படிதல், அதே நேரம் அதட்டலான முழுத்தொண்டையில் பேச்சு, சீருடை உடை, மதமதப்பான உணவு... வகுப்புகள் மெல்ல மெல்ல தன்னைத் தெருவில் போகும் மற்ற மனிதனுக்கு மேல் நிறுத்திக்கொள்ள இந்த பயிற்சிக் கல்லூரி பழக்கப்படுத்துவதை உணர்ந்தான். அவனது நண்பர்கள் பஸ்ஸில் போனால் டிக்கெட் எடுக்க மாட்டார்கள். சாலையில் யாரோ மூன்று பேர் இரு சக்கர வாகனத்தில் போனால் கூப்பிட்டு மிரட்டுவார்கள். தங்களுக்கு அதற்கு உரிமை இருக்கிறது என்று கருதினார்கள். தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்று பயிற்சி சொல்லித்தந்தது. அத்தனை மனிதர்களும் கெட்டவர்கள், அடக்கி ஆளப்பட வேண்டியவர்கள். தாங்கள் யாரைக் காக்க வேண்டுமோ அவர்களைக் கீழ்படிய வைக்க வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தது.

எதையும் முடிவெடுக்க வேண்டிய அவசியமில்லை. குழப்பிக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. எல்லா முடிவுகளும் முன்பே எடுக்கப்பட்டு விட்டன. எல்லாமே முன்பே தீர்மானிக்கப்பட்டு விட்டன. அதை அமுல்படுத்துவது மட்டுமே தனது வேலை. தனது சிந்தனையே கூட கருப்பு வெள்ளையாக மாறிவருதை பாலு உணர்ந்தான்.

உடலெல்லாம் முறுக்கேறி துளி ஊளைச்சதை இல்லாமல் ஐந்தே முக்காலடி உயரத்தில் நிமிர்ந்து நிற்கும் தங்களுக்கு முன்னால் கொழுகொழுவென்றும், ஒல்லியாகவும், குள்ளமாகவும் தொந்தியும் தொப்பையுமாகவும், வளைந்தும் நெளிந்தும் கூன் போட்டும் பல்வேறு கோணல் பார்வைகளுடனும் தெருவில் போகும் மனிதர்கள் எல்லோரும் இளக்காரமாகத்தான் தெரிந்தனர்.

பயிற்சிக் காலம் முடிவதற்குள் தான் போலீஸ்காரன் என்ற உணர்வு மனதில் அழுத்தமாகப் பதிந்து விட்டது. ஒரு திருமணம், விருந்துக்குப் போனாலும் கூட இந்த பயிற்சி மைதானமே மனதில் நிற்கும்.

பாலுவுக்குப் பயிற்சியில் எந்த அளவுக்கு நல்ல பெயர் இருந்ததோ அதே அளவுக்குக் கலகக்காரன் பட்டமும் இருந்தது. இரவு விதியை மீறி விடுதியிலிருந்து வெளியேறி சினிமாவுக்குப் போவான். பயிற்சிக் காவலர் விடுதியில் அடிக்கடி எல்லாம் சரியாக இருக்கிறதா என்று

பரிசோதிக்கப்படும். விசில் ஊதினால் ஐந்து நிமிடத்தில் காவலர்கள் அனைவரும் வந்து நிற்க வேண்டும். ஆனால் எல்லோரையும் நிற்க வைத்து எண்ணிப் பார்க்க இருபது நிமிடமாவது ஆகும். பாலுவுக்கு அது போதும். ஒரு போன் வந்ததும் சினிமாவுக்குப் போனவர்கள் பாய்ந்தோடி வருவார்கள். தெருவில் எந்த வாகனம் கிடைத்தாலும் அது நம்முடையதுதான். உடல்நிலை சரியில்லை மருந்து வாங்கப் போனோம் என்று அதிகாரியை ஏமாற்ற வழியில் ஏதாவது ஒரு மருந்துக் கடையில் ஏதாவது ஒரு மாத்திரை.

ஆனால் பாலுவால் முழுமையான போலீஸ்காரனாக மாற முடியவில்லை. சக மனிதனை அவன் திருடனாக இருந்தாலும், பிச்சைக்காரனாக இருந்தாலும் உருட்டி மிரட்ட அவனுக்கு மனம் வருவதில்லை. இதைத்தான் அபு கண்டு பிடித்துச் சொன்னார்.

பயிற்சி முடிந்த பின்பு பாலு பழனியிலுள்ள ஆயுதப்படை பெட்டாலியனுக்கு மாற்றப்பட்டான்.

பாலுவுக்கு எல்லா வேலைகளையும் திறமையாகச் செய்ய முடிந்தது. ஆனால் இந்தக் கேள்வி முறையில்லாமல் கீழ்படிவது என்பது மட்டும் வரமறுத்தது. எல்லோரையும் எப்படி ஒருவன் திருப்திப் படுத்த முடியும்? எல்லாவற்றுக்கும் விதி இருக்கும் போது இதற்கு மட்டும் ஏன் விதி இல்லை?

பாலுவை ஒரு அதிகாரி ஒரு வேலைக்கு அனுப்பினார். பாலு போய்க் கொண்டிருக்கும் போது குவார்ட்டர்ஸ் வாசலில் நின்று கொண்டிருந்த இன்னொரு அதிகாரி கறி வாங்கி வரச் சொன்னார். பாலு கடைக்குப் போய் கறி வாங்கிக் கொடுத்து விட்டு முதல் அதிகாரி சொன்ன வேலையைச் செய்யச் சென்ற போது தாமதமாகிவிட்டது.

“ஏன்?” மிரட்டினார் அதிகாரி.

“ஐயா கறிவாங்கிட்டு வரச் சொல்லிட்டாருங்கையா”

அதிகாரி கடுங்கோபம் கொண்டார். “எங்கிட்ட இதைச் சொல்ல உனக்கு எத்தன துணிச்சல்” என்று வெடித்தார். கறி வாங்கிவரச் சொன்ன அதிகாரி பாலுவுக்குப் பரம விரோதியாகிப் போனார். பல முனைகளில்

இந்த சண்டை நடந்தது. கடைசியில் எல்லா முனைகளிலும் பாலு தோற்கடிக்கப்பட்டான். மற்றவர்கள் மிக லாவகமாக இதையெல்லாம் சமாளித்தனர். இவனுக்கு அது வரவேயில்லை.

ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை நாட்கள் வந்து கொண்டே இருந்தன. சிலபோது நான்கு ஐந்து மணிநேரம் மட்டுமே தூங்க முடிந்தது. விடுமுறையும் இல்லை. ஓய்வு நேரமும் இல்லை. பாலு தனது வேலை எதுவென்று திட்டவட்டமாகத் தெரிய வேண்டும் என்று எதிர்பார்த்தான். ஏதாவது ஒரு கட்டத்தில் வேலை நேரங்கள் ஒழுங்காகி ஓய்வு கிடைக்கும். லீவு கிடக்கும் என்று நினைத்தான். ஆனால் அதற்கு வாய்ப்பே இல்லை என்பது போகப் போகத் தெரிந்தது. மூத்த ஏட்டுகளே வீட்டு விசேஷங்களுக்குப் போவதில்லை என்பது புரிந்தது. ஒரே வழி பரிட்சை எழுதி எஸ்.ஐ ஆகிவிடுவது. அல்லது டிராபிக்குக்குப் போய்விடுவது. அப்போதுதான் ஒரு வாட்ஸப் செய்தி வந்தது.

காவலர்களின் நிறைவேறாத நீண்டநாள் கோரிக்கைகள்.

---

1. மத்திய அரசில் ராணுவத்திற்குப் புதிய பென்ஷன் திட்டத்தில் விலக்கு உள்ளதைப் போன்றே காவல்துறைக்கும் பழைய பென்ஷன் திட்டம் வழங்க வேண்டும்.

2. காவலர்களின் பெற்றோர்களையும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைக்க வழிவகை வேண்டும்.

3. காவலர்களின் தர ஊதியம் ரூ1900-லிருந்து ரூ2400 ஆக உயர்த்தப்பட வேண்டும்.

4. ஓய்வுக் காலம்வரை சொந்த மாவட்டத்தில் பணிபுரிய ஆணை பிறப்பிக்க வேண்டும்.

5. காவலர்களின் குழந்தைகளுக்குத் தனியார் பள்ளிகளில் 50% சலுகை வழங்க வேண்டும்.

6. வாரம் ஒருமுறை அனுமதி விடுப்பு கட்டாயப்படுத்த வேண்டும்.

7. ஒவ்வொரு காவலர்களுக்கும் ரோந்துப்பணி, வழிக்காவல், தபால் அலுவல், மனு விசாரணை போன்ற பல அலுவல்களுக்குத் தனது சொந்த வாகனத்தையே பயன்படுத்தும் நிலை உள்ளதால் மாதம்தோறும் ரூ3000 முதல் ரூ5000 வரை செலவு செய்ய வேண்டியுள்ளதால் பெட்ரோல் அலவன்ஸ் கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

8. இரண்டாம்நிலை காவலர் பதவியில் இருந்து 7 வருடங்களில் முதன்நிலை காவலர்களாக பதவி உயர்வும் 12 வருடங்களில் தலைமைக் காவலர்களாக பதவி உயர்வும் 20 வருடங்களில் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வும் வழங்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

9. 30 நாட்களில் வீடு கட்டுவதற்கு லோன் வழங்கப்பட வேண்டும், பெர்சனல் லோனும் இதே கால அளவில் வழங்கப்பட வேண்டும். குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்க வேண்டும்.

10. காவலர்களின் யூனிபார்மை ஊர்க்காவல்படை, வாட்ச்மேன், செக்யூரிட்டி, போக்குவரத்து மற்றும் மற்ற தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் யூனிபார்மிலிருந்து வித்தியாசப்படுத்தி அறியும் வண்ணம் காவலர்களுக்குத் தரமான உடைகள் கொடுக்க வேண்டும்.

11. அரசு விடுமுறை நாட்களில் அதாவது பொங்கல், தீபாவளி, குடியரசுதினம், சுதந்திரதினம், ரம்ஜான், பக்ரீத், கிறிஸ்துமஸ் போன்ற நாளில் பணிபுரியும் காவலர்களுக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்க வேண்டும்.

12. பயணப்படி TA 10% லிருந்து 20%-ஆக உயர்த்த வேண்டும்.

13. இடர்படி 750 ரூ ஆகவும் மருத்துவபடி 500ரூ ஆகவும் உயர்த்த வேண்டும்.

14. சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாளில் பணிபுரியும் காவலருக்கு ETR என்ற ஏமாற்று திட்டத்தை ரத்து செய்து ஒரு நாளுக்குரிய சம்பளத்தை வழங்க வேண்டும்.

15. ஒருநாளைக்கு ஒரு காவலருக்கு ஒரு அலுவல் மட்டும் வழங்க வேண்டும்.

16. ஒரு நாளைக்கு குறைந்தது 8 மணிநேரமாவது முழு ஓய்வு கொடுக்க வேண்டும்.

17. அனைத்து மாவட்டத்திலும் காவலர்களின் நல அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

18. Risk அலவன்ஸ் ரூ400 லிருந்து ரூ1000 ஆக உயர்த்த வேண்டும்.

இதை அதிகம் ஷேர் செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் தெரியப்படுத்தவும்

பாலு முகநூலில் இப்படியொரு குழு இருப்பதைக் கண்டுபிடித்து நட்பு அழைப்பு விடுத்துச் சேர்ந்தான். காவல் நிலையக் காவலர்களுடன் பேச முயன்றான். எல்லோரும் அது ஒண்ணு வேணும் என்று சொன்னார்களே தவிர அடுத்த கட்டத்துக்குப் போகும் எண்ணம் யாருக்கும் இல்லை. அடுத்த கட்டம் என்றால் ஜவான்ஸ் பவன் முன்னால் கொடி பிடிப்பதா? அதை நினைத்தால் சிரிப்பாக இருக்கும். பாலு ஏராளமான கூட்டங்களுக்குப் பாதுகாப்பளிக்கப் போயிருக்கிறான். நாமே இப்படி...

“எம்ஜிஆர் காலத்துல போலீசுக்கு சங்கம் எல்லாம் இருந்துதுதாம்ப்பா. எம்.ஜி.ஆருக்கு ஒரு பொண்ணு இருந்து நம்மாளுக செட்டப் செஞ்சுருந்தாங்கன்னா அவரு பாணில பிரச்சினையத் தீர்த்திருக்கலாம்” என்று ஏட்டு சிரித்தார்.

11

பாலு அந்த பஸ் கம்பெனி அலுவலகம் சென்றான். ஒரு இளைஞன் இரவு ஒன்பது மணி சுமாருக்குக் காமாட்சிபுரம் பஸ் நிலையத்தில் இறங்கினான் என்பதைத் தவிர வேறு எந்தத் தகவலும் இல்லை. பின்பு கோவை சென்று அந்த செல் கம்பெனிகளின் அதிகாரிகளைப் பார்த்தான். பாஸ்கரின் செல் பி.எஸ்.என்.எல் நிறுவனத்துடையது. அந்த செல்லுக்குக் கடந்த ஒருமாதத்தில் எத்தனை அழைப்புகள் வந்துள்ளன. யார் யார் அவனை அழைத்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டிருந்தார்கள். அது ஒரு கவரில் போட்டுக் கொடுக்கப்பட்டது. காமாட்சிபுரத்தில் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் செல்போன் டவர்களில் இருந்து என்னென்ன கால்கள் சென்றுள்ளன வந்துள்ளன அவற்றின் ஐ.எம்.ஐ எண்கள் போன்ற விவரங்கள் அந்தந்த அலுவலகங்களில் பெற்றுக் கொண்டு வரச் சொல்லியிருந்தார்கள். அதிகாரிகள் பெரிதாகக் காக்க வைக்காமல் உடனே கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

அன்புசேகர் தனது அறையில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். நிறைய தகவல்கள் திரட்டப்பட்டுவிட்டன. பாஸ்கருக்கும், வெள்ளிங்கிரிக்கும் முன்விரோதம் இருந்திருக்கிறது. பாஸ்கர் உடல் கிடந்த இடம் காமாட்சிபுரம் அருகே ஒரு சாலையோரம். வெள்ளிங்கிரியின் சங்கத் தலைவர் மனோகரனின் வீடு இங்கேயே இருக்கிறது. மில் ஒனர் ராமசாமிக்கும் பாஸ்கர் மீது கோபம் இருக்கிறது. ஆனால் அதுபோன்ற கோபம் அந்த ஊரில் பலருக்கு உண்டு. யார் வேண்டுமானாலும் செய்திருக்கலாம்.

ஆனாலும் வெள்ளிங்கிரி மேல்தான் சந்தேகம் தீவிரமாக விழுகிறது. பாஸ்கரைக் கொல்வதற்கு வலுவான காரணங்கள் அவனுக்கு இருக்கின்றன. ஆனால் வழக்கு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்காக மாற வாய்ப்பிருக்கிறது. அப்படி மாறும் பட்சத்தில் புலன் விசாரணையை டிஎஸ்பியிடம் ஒப்படைத்து விட வேண்டும். ‘அவரை உடனடியாகச் சென்று சந்திக்கலாமா அல்லது வழக்கமாகச் சந்திக்கும் நேரம் வரை காத்திருக்கலாமா’ என்று அன்புசேகர் தனக்குள் விவாதித்துக்

கொண்டிருந்தார்.

அப்போது அபு உள்ளே வந்தார். அவர் கையில் இருந்த செல்லில் ஒரு முகநூல் பக்கம் தெரிந்தது. வெள்ளிங்கிரி மைக் பிடித்துப் பேசிக்கொண்டிருக்கும் படம். அது வீடியோ என்று காட்டும் முக்கோணம் அதன் மேலிருந்தது.

“என்ன பாய்?”

அபு அந்த வீடியோவை ஆன் செய்தார். அது வெள்ளிங்கிரியின் வீராவேசமான உரை.

“இனத்தைக் காக்க பெண்களைக் காக்க வேண்டும். பெண்களைக் காக்க முன்வராத ஆண்களுக்கு வளையல்களைப் பரிசளிக்க வேண்டும். வீரம் பேசிட்டு வீட்டுக்குள்ள முடங்கிட்டிருக்கானுக. நம்ம ஊர்ல கூட ஒண்ணு ஓடிட்டிருக்கு. ஒருத்தன் உச்சாணிக் கொம்புல போய் உக்காந்து எல்லாத்து மேலயும் கேஸ் போட்டு பணம் வாங்கிட்டிருக்கான். அவனுக்குக் காட்டர காட்டுல ஊர்ல திரியற அத்தன பசங்களும் அடங்கிடணும்” அந்தப் பேச்சு தொடர்ந்துகொண்டே இருந்தது. ‘சாதி மாறிக் காதலிக்கும் ஆட்களை ஒழித்துக்கட்டாமல் விடமாட்டோம்’ என்று மீண்டும் மீண்டும் சவால் விட்டிருந்தான்.

வெள்ளிங்கிரியும், மனோகரனும் இருக்கும் ஏராளமான படங்கள் அவனது முகநூல் பக்கத்தில் காணப்பட்டன. அன்புசேகர் வெள்ளிங்கிரி அல்லது மனோகரனின் ஆட்களில் தென்மாவட்டத்துக்காரர்கள் அல்லது கொலை அல்லது கொலை முயற்சி வழக்குகள் தொடர்புடையவர்கள் இருக்கிறார்களா? என்று பார்க்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

பாலு காவல் நிலையத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து செல்போன் கம்பெனிக்காரர்கள் கொடுத்த பட்டியலை நிதானமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். பாஸ்கரின் போன் அன்று இரவு 11.48க்கு சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது. அதே போல வெள்ளிங்கிரியின் எண்ணும் மாலை 7 மணிக்குச் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. அது

திரும்பவும் காலை 11 மணிக்கே ஆன் செய்யப்பட்டிருந்தது.

அதே போல பாஸ்கர் இறப்பதற்கு முந்தைய நாளும், அதற்கு நான்குநாட்கள் முன்பும் சென்னையில் ஒரு எண்ணுக்கு அழைத்திருக்கிறான். ட்ரூ காலரில் போட்டுப் பார்த்த போது அது அருண் என்பவரின் எண் என்று காட்டியது. அருண் மித்ரன் பத்திரிக்கையின் நிருபர் என்ற விவரங்களும் கிடைத்தன.

கூடவே, அன்நோன் (UNKNOWN) என்ற எண்ணிலிருந்து பாஸ்கரின் செல்லுக்கு ஒரு அழைப்பு தொடர்ந்து இரண்டு நாட்களுக்குச் சென்றிருக்கிறது. அழைப்பவரின் எண் தெரியாத வண்ணம் போன் செய்ய தனியார் நிறுவனங்கள் உள்ளன. அப்படிப்பட்ட அண் டிரேசபிள் கால்ஸ் டெலிபோன் சேவையை அளிக்கும் ஏதோ ஒரு தனியார் போன்கால் நிறுவனத்தின் மூலம் செய்யப்பட்ட அழைப்பு. உண்மையான எண்ணைக் கண்டு பிடிக்க வேண்டுமென்றால் சைபர் கிரைமால்தான் முடியும். எனவே இந்த அழைப்பைக் கண்டுபிடித்துத் தருமாறு சைபர் கிரைம் பிரிவுக்கு வேண்டுதல் அனுப்பும்படி அன்புசேகர் உத்திரவிட்டார். அநேகமாக அது அமுதாவாக இருக்கலாமென்று முடிவு செய்தார்கள். அமுதா அழைத்திருக்க வேண்டும். அவளைப் பார்க்க பாஸ்கர் வந்திருக்க வேண்டும். வெள்ளிங்கிரி பின் தொடர்ந்து வந்து போட்டுத் தள்ளியிருக்க வேண்டும். ஆனால் ஒரு சந்தேகம். அதிகம் படிக்காத, செல் வைத்துக்கொள்ளும் வசதி கூட இல்லாத அமுதாவால் நெட் கால் செய்ய முடியுமா? அமுதாவே செய்தாளா? அல்லது அவளுக்காக வேறு யாராவது செய்தார்களா?

ஆனால் பாஸ்கர் அமுதாவைப் பார்க்கப் போகிறான் என்று வெள்ளிங்கிரிக்கு எப்படித் தெரியும்?

1. அமுதா சொல்லியிருக்கலாம்.

2. அமுதா யாருடைய செல்லையோ கணிணியையோ பயன்படுத்தினாளோ அவன்(ள்) சொல்லியிருக்கலாம்.

3. பாஸ்கர் யாராவது நண்பனிடம் சொல்லி அவன் சொல்லியிருக்கலாம்.

4. பாஸ்கரைப் பின் தொடர்ந்து வந்திருக்கலாம்.

12

சமுதாய சங்கத் தலைவர் மனோகரனின் வீட்டருகே கடை வைத்திருக்கும் அண்ணாச்சி அன்புசேகரின் சோர்ஸ். மனோகரன் வளர்ந்து வரும் ஒரு முக்கியமான தலைவர் என்பதால் அரசு அவர் மீது ஒரு கண் வைத்திருந்தது. அரசு என்றால் ஆளுங்கட்சி அரசியல்வாதிகள், மற்றும் காவல்துறை, மாவட்ட நிர்வாகம் அடங்கிய மொத்த அதிகார வர்க்கமும் இந்தச் சங்கத்தின் அசைவுகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தது. பல வழிகளில் தகவல்கள் திரட்டப்பட்டாலும் அன்புசேகரைப் பொருத்தவரை முக்கியமான சோர்ஸ் அண்ணாச்சி. மனோகரனின் நடமாட்டங்கள், அங்கே வரும் ஆட்கள்... பற்றி அன்புசேகர் அடிக்கடி அறிக்கை அளிக்க வேண்டும். இதில் கணிசமான விவரங்களை அண்ணாச்சியைக் கொண்டுதான் தெரிந்து கொள்வார்.

அண்ணாச்சி கன்னியாகுமரி மாவட்டம் ஏரலைச் சேர்ந்தவர். அவரது மளிகைக் கடை ஊர் எல்லையில் மனோகரனின் வீட்டருகே அமைந்திருந்தது. கடையோடு டீக்கடையும் ஒருபக்கம் இருந்தது. அதோடு ஊர் முடிகிறது. அங்கிருந்து மனோகரனின் தோட்டம் தொடங்குகிறது. மனோகரனின் வீடு தோட்டத்திற்கு உள்ளே அமைந்திருந்தாலும் சாலையோரம் கட்சி அலுவலகமும், கட்சி ஆட்கள் தங்க ஒரு நீளமான கட்டடமும் அமைக்கப்பட்டிருந்தன. அங்கே வரும் கட்சிக்காரர்கள் அண்ணாச்சி கடையில்தான் சிகரெட் பீடி வாங்குவார்கள். டீ குடிப்பார்கள்.

அன்புசேகர் ஒருபோதும் அண்ணாச்சியை நேரில் போய்ப் பார்ப்பதில்லை. எனவே அண்ணாச்சியைத் தனக்குத் தெரிந்த ஒரு தோட்டத்துக்கு வரச் சொல்லியிருந்தார்.

அண்ணாச்சி அபு கொடுத்த போஸ்டரை பேப்பர் படிப்பது போல விரித்துப் பார்த்தார்.

“நம்ம தலைவருல்லா...” என்றார். அது மனோகரனைக் குறிக்கிறது.

“பக்கத்தில இருக்கறது...”

“வெள்ளிங்கிரி...”

அன்புசேகரும் அபுவும் பதில் பேசாமல் அண்ணாச்சி மேற்கொண்டு விவரங்கள் தருவதற்காகக் காத்திருந்தனர்.

“அடிக்கடி தலைவர் வீட்டுக்கு வருவாருல்லா”

“கடைசியா எப்ப வந்தார்?”

“போன வாரம் காலைலயே வந்துட்டார். கூட அந்த தேனிக்காரன் குபேந்திரனும் இன்னும் ரெண்டு பேரும் இருந்தாங்க”

“அப்புறம் எப்ப போனாங்க?”

“இருட்டு கட்டுனதும் கூட்டமாப் போனாங்க”

“காமாட்சிபுரம் பக்கமா?”

“இல்ல. எதிர்க்க. மில்லு பக்கம்”

“அங்க எதுக்குப் போகணும்?”

“வழக்கமா போக மாட்டாங்க. ஆனா கக்கூஸ் எதுக்காச்சும் போனாலும் போகலாம். மப்புக் கூட போடப் போயிருக்கலாம்”

“எப்ப திரும்பிப் போனாங்க?’

“நான் பாக்கலையே. அவங்க வந்திருந்தா கடைக்கு வராமப் போக மாட்டாங்க”

அவ்வளவுதான்.

அன்புசேகரும் அபுவும் இவ்வளவு எதிர்பார்க்கவில்லை. அன்புசேகர் செய்தித்தாளில் சுற்றி வைத்திருந்த வி.எஸ்.ஓ.பி ஃபுல்லை எடுத்து அண்ணாச்சியிடம் கொடுத்தார்.

“இதெல்லாம் எதுக்கு சார்?”

அண்ணாச்சி தயங்கினார். அன்புசேகர் வற்புறுத்தி அவர் கையில் திணித்துவிட்டுக் கிளம்பினார்.

வெள்ளிங்கிரியை கொலை அல்லது விபத்து நடந்த இரவு காமாட்சிபுரத்தில் பார்த்திருக்கிறார்கள். குபேந்திரன் என்ற ஒருவன் வெள்ளிங்கிரியுடன் நெருக்கமாக இருந்திருக்கிறான். குபேந்திரன்

தேனியைச் சேர்ந்தவன். அவனும் வெள்ளிங்கிரியும் இன்னும் இருவரும் மனோகரனின் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். இலுப்பப்பாளையம் ஆட்களிடம் விசாரித்தபோது கிடைத்த தகவல் வியப்பளித்தது.

குபேந்திரனை பாஸ்கர் மரணமடைந்த நாளிலிருந்து காணவில்லை.

குபேந்திரனைப் பற்றி தேனி கம்பம் பகுதி காவல் நிலையங்களில் தகவல் கேட்கப்பட்டது. தேனியிலிருந்து ஒரு தகவல் கிடைத்தது. குபேந்திரன் ஒரு கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்டுக் காணாமல் போனவன். தேடப்பட்டு வருகிறான். எனவே ஊருக்குத் திரும்பிப் போயிருக்க வாய்ப்பில்லை. குபேந்திரனைப் பற்றித் தகவல் கிடைத்தால் உடனே வர தேனிப் போலீஸ்காரர்கள் விரும்புகிறார்கள்.

எனவே அவனை வெள்ளிங்கிரிதான் எங்கோ ஒளித்து வைத்திருக்க வேண்டும் என்று அன்புசேகர் முடிவு செய்தார். குபேந்திரனின் மனைவிக்கும், நண்பர்களுக்கும் திருப்பூரின் சுற்றுப்புறங்களில் இருந்து ஏதாவது அழைப்பு போகிறதா? என்று விசாரிக்கச் சொன்னார். வெள்ளிங்கிரியின் செல்லும் கண்காணிக்கப்பட்டது.

“ஐயா, அருண்கிறவர் மித்ரன் பத்திரிக்கை ரிப்போர்ட்டராமாங்க. பாஸ்கரத் தெரியுமாமா. ஒரு மேட்டர் சொல்லியிருந்தான். பாஸ்கருக்கு என்னாச்சுன்னு கேக்கிறான்”

“பாஸ்கரை எப்படித் தெரியும்? என்ன டீலிங்ஸ்னு கேளுங்க”

“ஒரு பொண்ணை அடைச்சு வெச்சு வேல வாங்கறாங்க. அந்தப் பொண்ணை மீட்டுட்டு வரேன். ஒரு நியூஸாக்கணுன்னு சொன்னானாம்”

“பொண்ணு பேரு என்னன்னு சொன்னானா?”

“ஆமா சார். அமுதா”

“வேறென்ன சொன்னான்?”

“அந்தப் பொண்ண காமாட்சிபுரம் மில்லுல சேர்க்கும் போது ஏஜெண்ட் கம்பெனி ஹாஸ்டல் படமெல்லாம் காட்டினானாம்... மூணு

வருசம் வேலை செஞ்சா கம்பெனி பர்மனென்ட் பண்ணிடும்ன்னு சொன்னானாம்”

மீடியாவில் இதை அம்பலப்படுத்துவது என்று பாஸ்கரும் அருணும் முடிவு செய்தனர். அன்று இரவு அமுதாவை மீட்பது என்பது திட்டம். அமுதாவை வெளியே அழைத்து வந்ததும் அருணைத் தொடர்பு கொள்வது என்றும் அருண் அவளைப் பேட்டி எடுத்துச் சென்னையிலுள்ள தனது பத்திரிக்கைத் தொலைக்காட்சி தொடர்புகள் மூலம் ஃபிளாஷ் செய்வது என்றும் திட்டமிட்டிருந்தனர். அதோடு ஒரு உள்ளூர் தொண்டு நிறுவனத்தின் உதவி பெற்று மற்ற பெண்களையும் மீட்பது என்று முடிவு செய்திருந்தனர்.

“ஒரு பொண்ணக் காப்பாத்தறது பிரச்சனையே இல்ல சார். ரெண்டு லட்சம் பொண்ணுக அடைபட்டிருக்காங்க. சுதந்தரமா நடமாட விடாம அடச்சு வெக்கறது சட்டவிரோதம்தானே? ஒரு கம்பெனில வெறும் அப்ரண்டிஸ் மட்டும் இருக்க முடியுமா? இத சரியா எடுத்துச் சொல்வோம் அப்படின்னு பாஸ்கர் சொல்லியிருந்தான்”

தான் ஸ்பாட்டுக்குக் கிளம்பப் போவதாக, பாஸ்கர் அருணிடம் காலையில் தெரிவித்திருந்தான். அதன் பின்பு அவனிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை.

13

அன்புசேகரும் அபுவும் பாலுவும் இன்னும் இரண்டு கான்ஸ்டபிள்களும் போலீஸ் ஜீப்பில் அமுதா வேலை செய்து வந்த அந்த மில்லுக்கு முன்னே வந்து நின்றனர். திருப்பூர் கட்டடங்களைப் போலவே இரண்டு மாடிக்கட்டடம் மரங்கள் மற்றும் தென்னை மரங்களுக்கு உள்ளே ஒளிந்திருந்தது. பின்னால் பாக்குத் தோப்பு தென்பட்டது. கட்டடத்தின் நீளம் நூறு அடிக்கு மேலிருந்தது. ஒரே மாதிரி இரும்பு, அலுமினிய சட்டமிட்ட கண்ணாடி ஜன்னல்கள். மில் ஓடிக்கொண்டிருக்கும் கும்மென்ற சத்தம் மட்டுமே வெளியே கேட்டுக்கொண்டிருந்தது.

போலீஸ் ஜீப்பைப் பார்த்த வாட்ச்மேன் முகத்தில் பயமும் சங்கடமும் அப்பட்டமாகத் தெரிந்தன. இதற்கு முன் அன்புசேகர் இரண்டு முறை வேலை செய்யும் பெண்களின் பெற்றவர்களிடமிருந்து வந்த புகார் மீதான விசாரணைக்கு வந்திருக்கிறார். ஒருமுறை சம்பளம் கொடுக்கவில்லை என்று கம்பெனியில் இருந்த ஒரு காரைத் தூக்கிக் கொண்டு போய் ஸ்டேஷனில் வைத்திருக்கிறார். வாட்ச் மேன் அவரை நேராக மேனேஜர் அறைக்கு அழைத்துச் சென்றான். மழுங்கச் சிரைத்த முகமும் சிவந்த நிறமும் சொட்டையுமாக இளந்தொந்தியோடு இருந்த மேனேஜர் தமிழைக் கடித்துத் துப்பி வரவேற்றான்.

“ஹிமான்சு சாரங்கி” என்று அறிமுகபடுத்திக் கொண்டான்.

“பெங்காலா?”

“நோ சார் உடிஸ்ஸா” என்றவன் உட்காருங்க சார் என்று எதிரே இருந்த சிவப்புக் குஷன் வைத்த சேரைக் காட்டினான். “காபியா? டீயா?” என்று போனை எடுத்தான். மேனேஜர் அறை சில்லென்று குளிர்ந்திருந்தது. வெளியே பாக்கு மரங்கள் தென்பட்டன. வராந்தாவில் குவியல் குவியலாக என்னென்னமோ துணிகள் கிடந்தன. பெரிய பெரிய அட்டைப் பெட்டிகள் காணப்பட்டன.

அன்புசேகர் உட்கார்ந்து நிதானமாகச் சுற்றிலும் பார்த்தார். மேனேஜரின் முகத்தில் வழக்கமான பதட்டத்துக்கு மேல் எதுவும்

தெரியவில்லை.

“இலுப்பப்பாளைத்த்திலிருந்து அமுதான்னு ஒரு பொண்ணு வந்திருக்கு. அதைப் பாக்கணும்”

“ஓ அமுதாவா? வேல நடந்திட்டிருக்கே...”

அன்புசேகர் பதில் சொல்லவில்லை.

“எம்.டி-கிட்ட ஒரு வார்த்த சொல்லிக்கறேன்”

இப்போதும் அன்புசேகர் பதில் பேசவில்லை.

மேனேஜர் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு வெளியே சென்றான். சிறிது நேரத்தில் அறை வாயிலில் நிழலாடியது. ஒரு பெண் உருவம் உள்ளேவரத் தயங்கி மறுப்பதை உணர முடிந்தது. உடன் வந்த இளைஞன் பார்க்ஸ் பேண்ட், கட்டம் போட்ட முழுக்கை சட்டை அணிந்திருந்தான். ஒல்லியாக நடுத்தர உயரத்துடன் இருந்த அவனுக்கு முப்பது வயது இருக்கலாம். ஒரு காதில் வெள்ளிப் பொட்டாக கடுக்கண். சுவரோரம் மறைந்து நின்ற அமுதாவை அவன் மென்மையாக முதுகில் கை வைத்து உள்ளே தள்ளினான்.

அமுதா சற்றே மங்கிய பழுப்புநிற சுடிதார் அணிந்திருந்தாள். உடன் வந்தவனை சூப்பர்வைசர் கிஷோர்குமார் என்று மேனேஜர் அறிமுகப் படுத்தினான். அமுதாவுக்கு சுருட்டை முடி. துருதுருவென்று அலையும் கண்கள். மாநிறம். சட்டென்று கவர்ந்துவிடும் களையான முகம்தான் ஆனால் மூச்சுப் பிரச்சினையால் சற்றே சோபையிழந்திருந்தது. முதலில் தயங்கினாலும் பின்பு துணிச்சலுடன் அன்புசேகரை ஏறிட்டுப் பார்த்தாள். கணவன் அல்லது காதலன் அருகில் இருக்கும் போது பெண்களுக்கு வரும் துணிச்சல். அவள் வணக்கம் சொல்வதா இல்லையா என்ற தயக்கத்துடன் கால்களை மாறி மாறி வைத்தபடி நின்று கொண்டிருந்தாள். அடிக்கடி கிஷோரின் முகத்தைப் பார்த்தாள். அது கேள்விக்குறியா அல்லது அவனைப் பார்த்து பயப்படுகிறாளா என்று அபுவால் முதலில் முடிவு செய்ய முடியவில்லை. ஆனால் அந்த இளைஞன் பயப்பட வேண்டாம் நான் இருக்கிறேன் என்று தலையை அசைத்து கண்களால் சொன்னதும் அமுதாவுக்கு அவனிடம் பயம் இல்லை என்று அபு முடிவு

செய்தார்.

“ஒரு நிமிஷம் பேசிக்கிறேன். வெளீல இருங்க” அன்புசேகர் வெடுக்கென்று மேனேஜரிடமும், கிஷோரிடமும் சொன்னார்.

மேனேஜர் பயந்து போனான். “சார் ஏதாச்சும் பிரச்சினையா? எதுக்கும் எம்டி வந்துடட்டுமே?” என்று பதறினான்.

“அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. ஏட்டையா கூட்டிட்டு போங்க” என்றார் அன்பு சேகர். மேனேஜர் பதறியபடியே செல்லை எடுத்துக்கொண்டு வெளியே போனான். கிஷோரும் இன்னொருமுறை கண்களால் அமுதாவுக்கு தைரியம் சொல்லிவிட்டு வெளியேறினான்.

“பாஸ்கர எப்ப பாத்த?” அன்புசேகர் நேரடியாகக் கேட்டார்.

“எங்கூரு பாஸ்கரண்ணனுங்களா?” அமுதாவின் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வருவது போலிருந்தது.

“இலுப்பப்பாளயந்தான உங்கூரு?”

“ஆமாங்”

“அவந்தான் சொல்லு”

“நாலு மாசம் முன்னாடி பாத்தேன்”

“அதுக்கப்புறம் பாக்கலயா?”

“இல்லீங்க”

“ஒரு பத்து நாள் முன்னாடி அவன் போன் பண்லயா?”

“இல்லீங்களே. என்கிட்ட போன் கெடையாதுங்க”

“இதபாரு அமுதா நல்ல யோசிச்சு சொல்லு. பாஸ்கர் உனக்கு போன் பண்லயா?”

“இல்லீங்க. போன் வந்தா மேனேஜர் ரூமுக்குத்தான் வரும். அவர வேணா கேட்டுப் பாருங்க” அவள் ராகம் போடுவது போலப் பேசி அவர் கண்களை நேராகப் பார்த்தாள்.

“செல் இல்லியா?”

“இல்லியே”

“பாஸ்கருக்கும் உனக்கும் என்ன பழக்கம்?”

“பழக்கமெல்லாம் இல்லீங்க. லீவுல ஊருக்குப் போனா அந்தண்ணன் பின்னாலயே வரும். இதெல்லாம் நல்லால்லன்னு சொன்னாலும் கேக்காது. வந்து வந்து பேச்சுக் கொடுக்கப் பாக்கும்”

“வெள்ளிங்கிரியத் தெரியுமா?”

“எங்கூருதானுங்க” அவள் குரல் இன்னும் உள்ளொடுங்கியிருந்தது.

“பாஸ்கருக்கும் வெள்ளிங்கிரிக்கும் ஏதாவது பிரச்சினையா?”

“ஒருநாளு சந்தப் பேட்டைல நான் போயிட்டிருந்தப்ப பாஸ்கரண்ண கூடவே வந்தாரு. நான் வேக வேகமா போயிடலாம்னு பாத்தேன். அமுதா நில்லு நில்லுன்னுட்டு கூடவே வந்துட்டிருந்தாரு. எங்கப்பா இதப் பாத்துட்டு ஏம்ப்பா அந்தப் புள்ள கிட்ட பெரச்சின பண்றேன்னாரு. நீ உம் வேலையப் பாத்துட்டுப் போன்னு பாஸ்கரண்ணஞ் சொன்னாரு. அங்க வெள்ளிங்கிரியும் இருந்தாரு. ரெண்டு பேருக்கும் அடிதடி ஆயிடுச்சு”

அன்புசேகர் அதோடு பேச்சை முடித்துக் கொண்டு வெளியே போவதற்காக எழுந்து கதவை நோக்கி ஒரு எட்டு வைத்தார்.

“சார்...” அமுதாவின் குரல் தயக்கத்துடன் பின்னால் வந்தது.

“என்ன?”

“பாஸ்கரண்ணன பத்திக் கேட்டீங்களே. எதுனாச்சும்...”

“உம் பாஸ்கரண்ணன் செத்துப் போயிட்டான்”

அமுதா திக்பிரமையடைந்து நிற்பதைப் பொருட்படுத்தாமல் அன்புசேகர் வெளியேறினார்.

அன்புசேகர் அமுதாவிடம் பேசிக்கொண்டிருக்கும் போது அபு வாட்ச்மேனை நெருங்கினார்.

“ஒரு தம் அடிக்கலாம்னு வந்தேன்”

“அடிங்க சார்”

அபு அவனிடமும் ஒரு சிகரெட்டை நீட்டினார். “கோல்டு பில்டர் அடிப்பீங்களா”

அவன் தலையசைத்து சிகரெட்டைப் பெற்றுக்கொண்டதும் இருவரும் வாட்மேன் கூண்டுக்கு சற்று வெளியே நின்றுகொண்டனர்.

“இந்த சூப்பர்வைசர் எந்த ஊரு?”

“உடுமலைப் பேட்டை தளி பக்கம்”

“பொண்ணுகளுக்கெல்லாம் அவனப் புடிக்கும் போலிருக்கு”

“சார்?” வாட்ச்மேன் இதெல்லாம் பேசலாமா என்று தயங்குவது தெரிந்தது.

“நாங்க நின்னுட்டிருக்கும் போதே ஒரு பொண்ணு இடுப்பக் கிள்ளறான்”

“டிக்கெட்டு சார். எப்புடியோ கரெக்ட் பண்ணிருவான். ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு பொண்ணோட சுத்துவான்”

14

ஸ்டேஷன் வந்ததும் அன்புசேகர் அபுவையும் பாலுவையும் தனது அறைக்கு அழைத்துச் சென்றார். ஒரு வெற்றிகரமான நாளுக்குப் பிறகு வரும் திருப்தியான மனநிலை மூவருக்கும் இருந்தது. வேலை நெரிக்காத, பதட்டம் தணிந்த இந்த மாலை நேரங்கள் அழகானவை. பேச்சு இயல்பாக இருக்கும். நெருக்கம் அதிகார தோரணை இல்லாமல் வெளிப்படும்.

"என்ன பாய் தொடங்கிடலாமா?" பூர்வாங்க விசாரணை முடிந்துவிட்டது. கைது நடவடிக்கையைத் தொடங்கலாம் என்கிறார் என்பதை பாலு புரிந்துகொண்டான்.

ஆனால் அடிப்படைத் தகவல்கள் திரட்டப்பட்டுவிட்டன என்பதில் அபுவுக்கு உடன்பாடில்லை என்பது போலத்தான் தோன்றியது. அபு மோவாயைத் தேய்த்தார்.

"இந்த அமுதாப்பொண்ணு ஏங்கிள் ஒண்ணு இருக்கு சார்"

"சொல்லுங்க"

"பாஸ்கருக்கு கொலை நடந்த அன்னிக்கு ஒரு கால் போயிருக்கு. பாஸ்கரை யாரோ காமாட்சிபுரம் வரச்சொல்லியிருக்கணும். அமுதாதான் சொல்லியிருக்கணும். அப்புறம் பாஸ்கர் அமுதாவ மீட்கணும். நியூஸ் குடுக்கணும்னு ஒரு ரிப்போட்டர்கிட்ட பேசியிருக்கான். அமுதாவப் பார்க்கத்தான் வந்திருக்கான். அவ கூப்புட்டுத்தான் வந்திருக்கான். இப்ப அமுதா இல்லேங்கறா"

"பாத்துக்கலாம் பாய். இந்த வெள்ளிங்கிரி கும்பலப் புடிச்சு நாலு தட்டுத் தட்டினா கொலைல அமுதாவுக்கு என்ன தொடர்புன்னு தெரியப் போகுது"

இதுதான் சரியான வழி. என்ன விசாரணை நடத்தினாலும் கொலைகாரன் வாயிலிருந்து வருவதை ஒப்பிட்டுப் பார்த்தால் மட்டுமே முழு உண்மையும் தெரியும். அவன் வாயிலிருந்து எல்லாவற்றையும் வரவழைக்க வழிகள் இருக்கின்றன.

முதல் கைதுக்கு முன் மேலிடத்தில் ஒருவார்த்தை சொல்லிக்கொள்ளலாம் என்று உதவிக் காவல்துறைக் கண்காணிப்பாளரைப் பார்க்கப் போனார். டி.எஸ்.பி ஓய்வு பெறும் வயதில் இருந்தார். ஆனால் நல்ல முறுக்கேறிய தேகம். வெளிர் சிவப்பு. மீசை இல்லாத கன்ன எலும்புகள் துருத்திய முகம் ஒரு முரட்டுத்தனத்தைக் காட்டியது. டி.எஸ்.பி அன்புசேகர் சொல்லியதை எல்லாம் நிதானமாகக் கேட்டார்.

“வெரிகுட். நல்லாப் பண்ணியிருக்கீங்க. நல்லாப் பண்ணியிருக்கீங்க” என்று இரண்டு முறை மூக்கில் பேசுவது போன்ற கனமான குரலில் பாராட்டிவிட்டு விடை கொடுத்து அனுப்பினார். இப்போதைக்கு இது முன்விரோதம்தான். சாதி இல்லை. விசாரணை நடந்தவரை காதல் கீதல் ஆணவக் கொலை எதுவுமில்லை.

ஆனால் பாஸ்கர் கொலைக்கு நீதி கேட்டு இதுவரை ஏழெட்டு ஆர்ப்பாட்டங்கள் நடந்துவிட்டன. எனவே ஏதாவது ஒருகட்டத்தில் வழக்கை எஸ்.சி எஸ்.டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்ற வேண்டியிருக்கும். அப்போது விசாரணையை டி.எஸ்.பி-யிடம் ஒப்படைக்க வேண்டிவரும். அப்படியே இருந்தாலும் வேலை செய்வது எப்போதும் போலத் தாங்கள்தானே? அதைப்பற்றிக் கேட்டதற்கு டி.எஸ்.பி “நீங்க தொடர்ந்து என்கொயரி செய்யுங்க. அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்” என்று சொல்லிவிட்டார்.

அன்புசேகருக்கு அப்பாடா என்றிருந்தது. அரசியல் தொடர்புடைய கொலைகள் எப்போதுமே தொந்தரவானவை. உண்மை அறியும் குழுவை எதிர்கொள்வது, நிருபர்களைச் சந்திப்பது, போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் அவை தரும் நெருக்கடியையும்...

வெள்ளிங்கிரியுடன் சேர்ந்து பொள்ளாச்சி வந்தவர்கள் நான்குபேர். குபேந்திரன், மாரிமுத்து, சுப்பிரமணியம், ரத்தினம். குபேந்திரனையும் வெள்ளிங்கிரியையும் தவிர மற்ற மூவரும் திருமணம் ஆகாத இளைஞர்கள். யாரைத் தூக்குவது என்று அன்புசேகரும் இதற்காக

நியமிக்கப்பட்டிருந்த தனிப்படைப் போலீஸ்காரர்களும் முடிவெடுக்க வேண்டியிருந்தது.

அன்புசேகர் அபுவை யோசனையுடன் பார்த்தார். அபு தனது வழக்கமான கிறீச்சிடும் குரலில் "குபேந்திரனைத் தூக்கலாங்கையா" என்றார் தீர்மானமாக.

"மதுரக்காரன், வெளியாளு, புள்ள குட்டிக்காரன், ஏற்கெனவே கேஸ்ல சிக்கியிருக்கான். சில்லறப்பய. புடிச்சா கொட்டிடுவான்" என்றார்.

அவர் சொல்லச்சொல்லவே இவந்தான் என்று அன்புசேகர் மனதுக்குள் முடிவு செய்துவிட்டார். ஏற்கெனவே ஜெயிலுக்குப் போனவனுக்குத்தான் அதன் மீதான பயம் இருக்கும்.

15

குபேந்திரன் திருப்பூர் மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள ஒரு தோட்டத்தில் மனைவி மக்களுடன் ஒளிந்திருந்தது அவனது செல்போன் தொடர்புகளைக் கண்காணித்ததில் கண்டுபிடிக்கப்பட்டது.

இரவு இலுப்பப்பாளையம் ஸ்டேஷனைத் தளமாகக் கொண்டு குபேந்திரனைத் தூக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. அவனைத் தொடர நியமிக்கப்பட்டிருந்த ஆளிடமிருந்து தகவல்கள் வந்து கொண்டிருந்தன. இன்னும் வெள்ளிங்கிரி சகஜமாகத்தான் உலாவிக் கொண்டிருந்தான். எந்தப் பதட்டமும் இல்லை. இலுப்பப்பாளையம் இன்ஸ்பெக்டர் இரவு பனிரெண்டு மணிக்கு ஸ்டேஷன் வந்துவிட்டார். அந்த ஸ்டேஷனைச் சேர்ந்த ஒரு கான்ஸ்டபிளும் டிரைவரும் ஒரு பொலீரோ காருடன் தயாராக இருந்தனர். காமாட்சிபுரம் ஸ்டேஷனிலிருந்து அபுவும், பாலுவும், அன்புசேகரும் இன்னும் இரண்டு காவலர்களும் வந்திருந்தனர். யாரும் சீருடை அணிந்திருக்கவில்லை. இரண்டு மணிக்கு வீட்டில் பிடிப்பது என்பது திட்டம். தேடப்படும் எதிரியைப் பிடிக்க வீடுதான் சரியான இடம். வேறு எந்த இடமாக இருந்தாலும் எதிரி தப்பி ஓட முயல்வான். வீடு என்பது நான்குபுறமும் அடைபட்ட இடம். பெண்டு, பிள்ளைகள் இருக்கும் இடம். அவர்களை விட்டு விட்டு பெரும்பாலும் ஓடமாட்டார்கள்.

இரவில் சாலை வெறிச்சோடிப் போயிருந்தது. ஆங்காங்கே தெரிந்த சிறுசிறு வெளிச்சப்பொட்டுகளைத் தவிர கும்மிருட்டு. வெட்டவெளியில் காற்று தங்குதடையின்றி வீசியடித்துக் கொண்டிருந்தது.

பழுப்புச் சட்டையும், லுங்கியும் அணிந்திருந்த ஒருவன் அந்தத் தோட்டத்துக்கு எதிரே சிறுநீர் கழிப்பது போல ஒரு புளியமரத்தின் பின் உட்கார்ந்தான். அவன் வந்திருந்த பைக் வெகு தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தது. குபேந்திரன் தென்னந்தோப்பிலிருந்த கிணற்றுமேட்டில் படுத்திருந்தான். ஆழ்ந்த தூக்கத்திலிருப்பது போலவும் தெரிந்தது. அதே நேரம் அவன் வாய் அவ்வப்போது ஒரு துயரம் மிக்க பாடலை மெதுவாக முணுமுணுத்துக் கொண்டுமிருந்தது. தூக்கம் அல்ல போதை. நோட்டம்விட்டுக் கொண்டிருந்தவன் புளியமரத்தின் பின்னால் சற்றே மறைந்து நின்று செல்லை எடுத்து யாரையோ அழைத்தான்.

நான்கைந்து ரிங் போனது உறுதியானதும் தொடர்பைத் துண்டித்து விட்டு மெதுவாக நகர்ந்து இருளில் காணாமல் போனான்.

அடுத்த பத்தாவது நிமிடம் போலீஸ்காரர்கள் இருந்த பொலீரோ தோட்டத்தின் வாயிலில் வந்து நின்றது.

ஒரு கான்ஸ்டபிள் கதவாக வைக்கப்பட்டிருந்த படலைத் திறந்து தோப்புக்குள் சென்றார். மற்றவர்களும் தொடர்ந்தனர்.

“குபேந்திரன்”

ஒருவர் அழைக்க வேறு இருவர் கிணற்று மேட்டுக்கு பின்னால் சென்று நின்று கொண்டனர்.

குபேந்திரன் திடுக்கிட்டு எழுந்தான்.

அதிர்ச்சியும் பயமும் கண்களில் அப்பட்டமாகத் தெரிந்தன.

“ஸ்டேஷன் வரைக்கும் போகணும் கிளம்புங்க”

குபேந்திரன் நகர முடியாமல் திகைத்துப்போய் நின்றுகொண்டிருந்தான்.

“ம். போலாம்” ஒரு கனத்த குரல் அழுத்தமாகச் சொன்னது.

குபேந்திரன் ஒரு அடி முன்னால் எடுத்து வைத்தான். அவன் மனைவி குடிசையிலிருந்து வீறிட்டபடி ஓடி வந்து கணவன் முன் நின்றுகொண்டாள். வற்றியுலரந்த உயரமான தேகம். தலைமுடி அரைகுரையாகப் பின்னப்பட்டு இடுப்புவரை நீண்டு கிடந்தது. தின்கிற சோறெல்லாம் முடிக்கே போய்விடுகிறது போலும். வாட்டசாட்டமாக முறுக்கு மீசையுடனிருந்த குபேந்திரனுக்கு நேர் எதிராக இருந்தாள் அவள். விலை மலிவான சேலை வறுமையை விட கவனக்குறைவைக் காட்டியது. குரல் கீச்கீச்சென்று வந்தது “அவர எதுக்கு இந்த நட்ட நடுராத்திரில கூப்புடறீங்க? வரமாட்டாரு” என்றாள்.

‘சரியான ரவுடிப் பொம்பள போலிருக்கு’ என்று அன்புசேகர் நினைத்துக்கொண்டார்.

“குபேந்திரன் புறப்படலாம்”

குபேந்திரன் பதறினான். ஒரு போன் செய்துகொள்கிறேன் என்றான். உடை மாற்ற வேண்டும் என்றான். அனுமதி கிடைத்தது. போனில் மறுமுனையில் இருந்தவன் இன்ஸ்பெக்டருடன் பேச வேண்டும் என்றான். இன்ஸ்பெக்டர் அலட்சியமாக அதை மறுத்துவிட்டுக் குபேந்திரனை நடத்திச்சென்றார். அதற்குள் பக்கத்துத் தோட்டங்களிலிருந்து கூட்டம் கூடத் தொடங்கிவிட்டது.

காலைல வந்துடுவாரு. என்றார் ஒரு கான்ஸ்டபிள். குபேந்திரன் சத்தம் போட்டிருந்தாலோ, எதிர்ப்புக் காட்டியிருந்தாலோ பிரச்சினையாகும் வாய்ப்பு இருந்தது. ஆனால் குபேந்திரன் சப்தநாடியும் ஒடுங்கியிருந்தான்.

குபேந்திரனை நடுவே உட்கார வைத்து இரண்டுபுறமும் இரு போலீஸ்காரர்கள் உட்கார்ந்து கொண்டனர்.

“எதுக்கு சார் என்னக் கூட்டிட்டுப் போறீங்க?” அவன் தீனமான குரலில் கேட்டான்.

“ஒரு பொண்ணு உம்மேல ஒரு கம்ளெய்ண்ட் கொடுத்திருக்குப்பா!”

“யாரு சார்? யாரு?”

“ஸ்டேஷனுக்குப் போய் சொல்றேன்”

ஸ்டேஷனுக்கு போய்ச் சேரும் போது மணி மூன்று. ஆய் என்று திறந்து வெறிச்சொடிக் கிடந்த கட்டடத்தைப் பார்த்ததுமே குபேந்திரனுக்குப் பதட்டத்தில் விலா எலும்புக்குக் கீழ் கடும் வலி எடுப்பது போலத் தோன்றியது. சுற்றிலும் இருள் மண்டியிருந்த காலியிடமும் காவல்நிலையத்தின் இரண்டுமாடிக் கட்டடத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்குகளும் ஏற்படுத்திய ஒரு அமானுஷ்யமான, பயங்கரக் கனவில் தப்பியோட முடியாமல் சிக்கிக்கொண்டு தவிப்பதைப் போன்ற உணர்வு குப்பென்று தாக்கியதில் அந்த நொடியில் உடல் வியர்த்து வழியத் தொடங்கியது.

அன்புசேகர் முன்னிருந்த ஒரு அறைக்குள் சென்று உட்கார்ந்து கொண்டார். குபேந்திரன் அவர் எதிரே நிறுத்தப்பட்டான். அன்புசேகர் கடுமை சுடரும் முகத்துடன் அவனை நிதானமாக உற்றுப் பார்த்தார். ஒரு கான்ஸ்டபிள் மட்டும் குபேந்திரன் பின்னால் நின்றுகொள்ள மற்ற

காவலர்கள் முன்னிருந்த விலாசமான கூடத்தில் உட்கார்ந்து கொண்டனர்.

எந்தப் பீடிகையும் இல்லாமல் விசாரணை தொடங்கியது.

“பன்னெண்டாம் தேதி எங்க போயிருந்த?”

“காட்லதான் சார் இருந்தேன்”

“எத்தன மணில இருந்து எத்தன மணி வரைக்கும் காட்ல இருந்த?”

“மத்தியானம் மூணு மணி வரைக்கும் வேல செஞ்சுட்டு வீட்டுக்கு வந்து படுத்துட்டேன் சார்”

“அப்புறம் எப்ப எந்திரிச்ச?”

“ஒரு ஆறு மணிக்கு”

“எந்திரிச்சு என்ன பண்ணின?”

“ஒண்ணும் பண்ணல சார்”

“வீட்ல உக்காந்துட்டே இருந்தியா? ஒண்ணுக்கு ரெண்டுக்கு கூடப் போகலயா?”

“போனனுங்க சார்”

“எத்தன மணிக்குப் போன?”

“ஆறர மணி இருக்குங்க”

“எப்ப திரும்பி வந்த?”

“ஆறே முக்கா இருக்குங்க”

“ஒண்ணுக்குப் போயிட்டு வந்து என்ன பண்ணின?”

“உக்காந்துட்டேன்”

“எங்க உக்காந்த?”

ஒருநிமிட இடைவெளிகூட இன்றி கேள்விகள் நெருக்கமாக வந்தன... குபேந்திரனால் சிந்திக்கமுடியவில்லை. அவன் மனம் வெறுமையாகக் கிடந்து ஒத்துழைக்க மறுக்க வாய் தன்போக்கில் பதில்

சொல்லிக்கொண்டிருந்தது. இன்னும் தான் போலீஸ் பிடியில் இருக்கிறோம் என்பதை அவனால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. திட்டமிட்டுச் சிந்தித்துப் பதில் சொல்லவும் முடியவில்லை.

“வீட்ல உக்காந்துட்டேனுங்”

“எங்க உக்காந்த?”

“திண்ணைல”

“எத்தன நேரம் உக்காந்துட்டிருந்த?”

“ஒரு எட்டுமணிக்கு சாப்புட கூப்புடுற வரைக்கும்”

“எத்தன நேரம் சாப்புட்ட?”

“ஒரு இருபது நிமிசம்”

“என்ன சாப்புட்ட?”

குபேந்திரன் தடுமாறினான்.

“தோச....”

“எத்தன...?”

“எட்டு”

“அப்புறம்?”

“தூங்கிட்டனுங்க”

அன்புசேகர் ”ஏட்டையா” என்று அழைத்தார். அபு உள்ளே வந்து குபேந்திரனை வா என்று மாடியறைக்கு அழைத்துச் சென்றார். அவனை எதற்கு அழைத்துச் எல்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட பாலு மெல்ல நழுவி பீரோவின் பின் மறைந்துகொள்ள முயன்றான். ஆனால் அபு அவனைக் கண்ணால் தேடி பின்தொடரும்படி சைகை செய்ததும் வேறு வழியில்லாமல் போய்விட்டது. குபேந்திரனை அவர் அழைத்துச் சென்றது ஒரு பெரிய அறை. ஒரே ஒரு டியூப் லைட் அழுது வடிந்து கொண்டிருந்தது. மேஜை முன்னால் பயிற்சிக் காவலன் உட்கார்ந்து கம்யூட்டரில் ஏதோ செய்து கொண்டிருந்தான்.

அறைக்குள் நுழைந்தவுடன் பாலுவுக்குக் குபேந்திரன் மேல் இனம்புரியாத இரக்கம் தோன்றியது. இவன் அந்த அழகான இளைஞனைக் கொன்றவன். ஆனாலும் போலீஸ் வேலையிலேயே பாலுவுக்குப் பிடிக்காதது ஆண் வலி தாங்காமல் அலறும் சத்தம்தான். அந்த கனத்த குரல்களில் வெளிப்படும் அழுகையும், கெஞ்சலும், வலியும், கண்ணீரும் வியர்வையும் ஒழுகும் முகங்களும் மயிர்க்கால்களைக் குத்திட்டு நிற்கவைக்கப் போதுமானவை. இப்போது தொடங்கப் போகிறது.

பயிற்சிக் காலத்தில் பாலுவும் இன்னொரு இளைஞனும் வெரைட்டிஹால் ரோடு காவல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டிருந்தனர். உடனிருந்த இளைஞன் வாய் ஓயாமல் வீரம் பேசுவான். 'நாங்கெல்லாம் அருவாளெடுத்தா ரத்தம் பாக்காம வெக்க மாட்டோம்' என்பான். 'வெட்டிட்டான், குத்திட்டான், அறுத்துட்டான்' எப்போதும் இதேதான் பேச்சு. வீச்சை கையில் பிடித்துக்கொண்டே பிறந்தான் போலிருக்கிறது என்று பாலு நினைத்துக்கொள்வான். ஒரு பிரச்சினை என்று வந்துவிட்டால் நாலு பேரை வெட்டியோ, குத்தியோ சாய்க்காமல் விடமாட்டானென்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. இந்த மாதிரி ஆட்கள்தான் போலீசுக்கு லாயக்கு. தான் இல்லை என்று அவ்வப்போது பாலுவுக்குத் தோன்றும்.

ஒருநாள் பாலுவும் வீர பாரம்பரியப் போலீஸ்காரனும் வாசலில் காவலுக்கு நின்று கொண்டிருந்தார்கள். "ஐயா என்னக் கொல்றானே" என்று ஒரு ஓலம் கேட்டது. ஒரு வயதான அம்மாள் கதறியபடியே ஓடி வந்து கொண்டிருந்தாள். மூக்கிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. தண்ணியடித்து ரகளை செய்ததற்காக மகன் அடித்து விட்டானாம். அந்த அம்மாள் காவல் நிலைய வாயிற்கதவைத் தாண்டியதும் போதையில் தலை குப்புற விழுந்தாள். மூக்கிலிருந்து வந்துகொண்டிருந்த ரத்தத்தோடு பல்லும் உடைந்து ரத்தம் கொட்டத் தொடங்கியது. நசநசவென்று தூறிக்கொண்டிருந்த மழைவேறு சுற்றுப்புறமெங்கும் சேறும் சகதியுமாக அடித்திருந்தது. மழையால் சாக்கடையிலிருந்து வந்து கொண்டிருந்த முடைநாற்றமும், அந்தம்மாளின் வாயிலிருந்து வந்த சரக்கும் ரத்தமும்

கலந்த வாடையும் கலந்து ஒரு அழுகிய வாசனை வயிற்றைப் பிரட்டியது.

பாலு நடப்பதை சுவாரஸ்யத்துடன் கவனித்துக்கொண்டிருந்தான். திடீரென்று காதருகே தீனமாக ஒரு குரல்.

"பாலு பாலு என்னப் புடி தல சுத்துது"

நண்பன் மயங்கி விழுவதைப் பார்த்து பாலு என்னவோ ஏதோவென்று ஓடிப்போய்ப் பிடித்தான். பின்பு நடந்ததைக் கேட்டு ஸ்டேஷனே சிரித்தது. இன்ஸ்பெக்டர் சிரிக்கவில்லை. அதிருப்தியுடன் பார்த்துவிட்டு அறைக்குள் போய்விட்டார்.

பின்பு ஒருநாள் ஒரு கேடி முட்டாள்தனமாக ஸ்டேஷனில் இருந்து தப்பி ஓடிய போது அவனை விரட்டிப் பிடிக்கும்படி பயிற்சிக் காவலர்களுக்கு அதிகாரி உத்திரவிட்டார். உத்தரவு நிறைவேற்றப்பட்டதும்

"இவனைப் பஞ்சா போடுங்க" என்றார்.

பிடிபட்டவனை ஜட்டியுடன் சுவரோரம் உட்கார வைத்து இரண்டு போலீஸ்காரர்கள் இரண்டு கால்களையும் விரித்துப் பிடித்துக்கொண்டார்கள். அவன் வலிதாங்காமல் கதறினான். மனித உடலின் மிக மென்மையான, மிக நுண்மையான பாகத்துக்கு நேரெதிரே முரட்டுக் காலணிகள் மூர்க்கமாக அசைந்தன. எந்த நேரமும் பாலுவுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. அந்தக் கதறல், அவனிருந்த நிலையைவிட அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற எண்ணமே முதுகுத் தண்டைச் சில்லிடச் செய்தது.

ஆனால் அது நடக்கவில்லை. போலீஸ்காரர்கள் அவனை எழுப்பி குனிந்து உட்கார வைத்தனர்.

"ட்ரெய்னி போலீஸ்காரன் ஒவ்வொருத்தனும் பத்துப்பத்து அடி அடிங்கடா" என்றார் இன்ஸ்பெக்டர். இன்ஸ்பெக்டர் என்பவர் ஒரு ஆசிரியரும் கூட. ரத்தத்தைக் கண்டு பயப்படுபவன் போலீஸ்காரனாக இருக்க முடியாது.

கான்ஸ்டபிள் ராஜேந்திரன் "இங்க வாங்கடா" என்று பயிற்சிக்

காவலர்களை அழைத்தான். ராஜேந்திரன் ஒரு இரும்பு உரலைப் போலிருப்பான். முகத்தில் அப்படியொரு மூர்க்கம் உறைந்திருக்கும். அவனது மஞ்சளும் சிவப்புமான கண்களைப் பார்த்தாலே குற்றவாளிகள் மூத்திரம் கழித்து விடுவார்கள். உள்ளே வரும்போதே அடிவாங்க இருப்பவனின் பாதி உயிரைப் போக்கிவிடுவான். மேஜையைத் தட்டுவான். லட்டியால் அங்கே இங்கே அடித்து சத்தம் எழுப்புவான். ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம் என்று கர்ஜிப்பான். அவன் உருவத்தையும் இரும்பு முஷ்டிகளையும் பார்த்தால் ஒருகுத்து விட்டால் போதும் எலும்பு உடைந்து விடும் என்று தோன்றும்.

ராஜேந்திரன் அந்த கேடியின் கழுத்தை ஒரு கையால் வளைத்துப் பிடித்தான். பின்பு இன்னொரு கையை நன்றாக விரித்து வைத்து உள்ளங்கையால் முதுகில் சப்பு சப்பென்று அப்பினான்.

பின்பு ஒவ்வொரு பயிற்சிக் காவலனாக கேடியின் முதுகில் அறைந்தார்கள். ரைபிளை தூக்கிச் சுழற்றிய கைகள் முறம் போலிருந்தன. பாலு அறையும் போது அவன் முதுகில் இருந்து ரத்தம் கசியத் தொடங்கியது.

“அடிடா”

தோல் உரிந்து ரத்தம் கசியும் இடத்தை விட்டுவிட்டு வேறு இடங்களில் முதலில் பாலு அறைந்தான். பின்பு சிவப்பாகத் தெரியும் இடத்தில் உள்ளங்கை படும் வண்ணம் குறிவைத்து அடிக்க மனது உந்தியது. கேடி கதறிக் கொண்டிருந்தான். அது யாரோ எங்கோ கத்துவது போலிருந்தது. வீர பரம்பரைக்காரனை கடைசியில் அடிக்க அனுப்பினார்கள்.

முதல் அடியில் ரத்தம் தெறித்தது. அவன் தயங்கிப் பின்வாங்கினான். “அடிடா” மறுப்புக்கு இடமேயில்லாத கண்டிப்பான உத்தரவு.

“மயக்கம் மட்டும் போட்ட... மவனே” யாரோ அமுங்கிய குரலில் அந்தப் பயிற்சிக் காவலனை எச்சரித்தார்கள். இது வேடிக்கையும் இல்லை விளையாட்டும் இல்லை.

பாதுகாப்பிலிருந்துத் தப்பியோடும் கைதியைப் போலீஸ்காரர்கள் ஒருபோதும் மன்னிப்பதில்லை. பாலுவுக்குத் தன் மீது நம்பிக்கை வந்தது அங்கேதான். சக மனிதனைத் திட்டமிட்ட முறையில் அடித்துப் பழகியதும் அங்கேதான்.

இங்கே இலுப்பபாளையத்தில் தனியறையில் குபேந்திரனைப் பார்த்ததும் தோன்றிய இரக்கம் ஒரு விநாடியில் மறைந்தது. உடல் முறுகிக் கொண்டது. இதோ இப்போது உத்திரவு வந்துவிடும். ஆனால் அபு அவன் பக்கம் திரும்பவில்லை. கதவைக் கூடச் சாத்தவில்லை. பாலுக்குக் குழப்பமாக இருந்தது. அடிப்பதற்கான சூழல் உருவாக்கப்படுவதைப் போலத் தெரியவில்லை. அதற்குச் சில தயாரிப்புகள் வேண்டும். இது என்னவோ கைதியுடன் டீ சாப்பிடப் போவது போலிருக்கிறது. ஆனால் அபு... வேறு என்னமோ அவர் மனதில் இருக்கிறது.

அபு அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். அவரது நிதானமான பார்வையில் குபேந்திரன் தலையோடு காலாக நடுங்கினான்.

“இத பாரு குபேந்திரா உன்னய அடிக்கவே மாட்டோம். ஒரு ஊசி போடுவோம். எல்லா உண்மையும் வெளிய வந்துடும். நீயே சொல்லிடு. நாங்க முடிஞ்ச அளவுக்கு உதவி பண்ணறோம். எத்தனையோ பேரக் காப்பாத்தியிருக்கோம். உன்னக் காப்பாத்த மாட்டமா?” அபுவின் குரல் வினோதமான கிறீச்சிடும் ஓசையுடன் இருந்தது.

“குபேந்திரன் திகைத்துப்போய் நின்றான். போலீஸ்காரர்கள் அடித்தால் வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தான். ஆனால் ஊசி... அவனுக்கு அடிவயிற்றில் ஒரு ஜில்லிப்பு ஓடியது. பீதியில் நெஞ்சு அடைத்துக்கொண்டது. விலாவிலும் தோள்பட்டையிலும் இன்னும் உடலில் எங்கெங்கோ குத்துவலி எடுப்பது போன்றதொரு சங்கடமான உணர்வு... தான் ஆஸ்பத்திரி படுக்கையில் படுத்திருப்பது போல குபேந்திரன் கற்பனை செய்துகொண்டான்.

‘தன்னை என்னவோ செய்யப் போகிறார்கள்...’

வயிற்றைப் பிசைந்தது. வயிறு உள்ளே இருக்கும் அனைத்தையும்

வெளியே தள்ளிவிடத் தயாராக பாரமானது. தற்பாதுகாப்பு இல்லாமல் படுத்துக் கிடப்பதால்தான் மருத்துவமனைப் படுக்கை பீதியூட்டுகிறது. அங்கேயாவது மருத்துவர்கள் என்ன செய்தாலும் நமது நன்மைக்குத்தான் செய்கிறாரென்ற ஆசுவாசம் இருக்கும். ஆனால் இங்கே...

அபுவின் குரல் எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து வருவதுபோலக் கேட்டது.

"ஐயாகிட்ட பதில் சொல்லியிருக்க இல்ல, உன் சம்சாரத்தையும், கொழந்தைகளையும் கூப்புட்டு நீ சொன்னது சரியான்னு செக் பண்ணுவோம். ரொம்ப மொரண்டு பண்ணினா சம்சாரத்தையும், மச்சினனையும் சேத்து கேஸ்ல போடச்சொல்லி ஐயா சொல்லியிருக்கார்"

சொல்லிவிட்டு ஏதோ பைல்களை அடுக்கி வைக்கத் தொடங்கினார். குபேந்திரனின் பின்னங்கழுத்திலிருந்து வியர்வை வழிந்தது. கைகளில் நசநசவென்று வியர்த்தது. வியர்வையால் கண் சரியாகப் பார்க்க முடியவில்லை போலிருந்தது. உப்பிக்கொண்ட வயிறு வேறு சித்திரவதை செய்தது. தான் ஒரு மேசையில் படுத்திருப்பது போலவும் தன்னைக் கத்தி வைத்துக் கிழிப்பது போலவும் எண்ணங்கள் ஓடின. 'ஊசி என்றதைத் தான் தவறாகப் புரிந்து கொண்டோமோ? டாக்டர் போடுவது போல இல்லாமல் வேறு ஏதாவது இடத்தில் குத்தி தன்னைத் துடிக்க வைக்கப் போகிறார்களோ?'

சிறுநீர் கழித்துவிட்டு கொஞ்சம் உட்கார்ந்துத் தண்ணீர் குடித்து ஆசுவாசப் படுத்திக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று தோன்றியது. ஆனால் இவர்கள் அதை அனுமதிக்கப் போவதில்லை. 'அதற்காக இங்கே தன்னை அழைத்து வரவில்லை. வதைக்கப் போகிறார்கள். அந்த வெள்ளிங்கிரி இப்போது என்ன செய்து கொண்டிருப்பான். தான் ஏன் இந்த வேதனை அனுபவிக்க வேண்டும்? ஒருவேளை மனைவியையும் சேர்த்துப் போட்டு விடுவார்களோ? போடக் கூடாது என்று யார் தடுக்கப் போகிறார்கள்? தேனி வழக்கு வேறு இருக்கிறது. தன்னால் லேசில் வெளியே வர முடியாது. சொந்தக்காரர்கள் வீட்டில் குழந்தைகள் என்ன பாடுபடும்? தன்னைப் பற்றியெல்லாம் வெள்ளிங்கிரி கோஷ்டி கவலைப்படுமா? தான் மட்டும் ஏன் அவர்களைப்

பற்றிக் கவலைப்பட வேண்டும்? போலீஸ்காரர்கள் தனக்கு உதவுவார்களா என்று தெரியவில்லை. ஆனால் இப்போது தனக்கு யாராவது ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அவர்கள்தான் செய்ய முடியும்'

அபு முன்னால் இருந்த சேரில் உட்கார்ந்து அவனையே பார்த்துக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் அவசரமோ மிரட்டலோ இல்லை. ஈட்டியைப் போன்ற துளைக்கும் பார்வை மட்டுமே இருந்தது. அவர் அவனைச் சிந்திக்க அனுமதித்தார்.

வெளியுலகிலிருந்து எல்லாவிதத்திலும் துண்டிக்கப்பட்ட இரை. எதிரே ஓநாய். விஷ்ஷென்று சுழலும் ஃபேன். எங்கோ வாகனங்கள் செல்லும் ஓசை. ஒரு வினோதமான பந்தம் தங்கள் இருவருக்கும் இடையே உருவாவதைக் குபேந்திரன் உணர்ந்தான்.

எதிரே இருந்தவரின் கரங்கள் மிக மிக வலிமையாக இருந்தன. விகு ஏறிய கிடார் கம்பி போலிருந்தது அவரது தேகம்.

ஊசி... முன்னங்கை பிசுபிசுப்பு சித்திரவதை செய்தது. மனைவியைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமை என்று குபேந்திரன் நினைத்துக்கொண்டான். அதற்காகத்தான் முடிவெடுக்க வேண்டும். ஊசி முக்கியமில்லை என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டான். வெள்ளிங்கிரியின் மீது கண்மூடித்தனமான வெறுப்பு பீறிட்டு வந்தது. இந்த மனிதர்களுக்கு முன் வெள்ளிங்கிரி ஒரு துரும்பு என்று தோன்றியது.

"வேண்டாங்கையா நீங்க என்னசொல்லச் சொல்றீங்களோ அதச் சொல்லிடறேன்"

அபு அவனை அப்படியே நிற்க விட்டு விட்டு யாருக்கோ போன் செய்தார். "ஐயா ஒத்துக்கிட்டான். ஸ்டேட்மெண்ட் குடுக்கறேங்கறானுங்கைய்யா"

"சரி சொல்லு"

அவன் சொன்னதை முழுமையாகக் கேட்ட பின்பு அபு அவனைக் கீழே அன்புசேகரிடம் இட்டுச் சென்றார்.

"பாஸ்கரோட செல்லு இவங்கிட்டத்தான் இருக்காமா. அதை

வெள்ளிங்கிரி கிட்ட இருந்து எடுத்ததா போட்டுக்கலாம்" சம்பவத்தைக் கண்ணால் கண்ட சாட்சிகள் இல்லாத போது போலீஸ் இந்தத் தந்திரத்தைக் கையாளும். வெள்ளிங்கிரி பாஸ்கரின் செல்லை ஏதோ ஒரு காட்டில் ஒளித்து வைத்திருப்பதாக சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அங்கே போலீசாரை அழைத்துச்சென்று சாட்சிகள் முன்னிலையில் செல்லை எடுத்துக் கொடுத்தாகவும் எழுதிக்கொள்வார்கள். இதெல்லாம் திட்டமிட்ட நாடகம் போல அரங்கேற்றப்படும். சாட்சிகள் போலீசுக்கு நெருக்கமானவர்களாகவும் சொல்லிக் கொடுக்கப்படுவதை அட்சரம் பிசகாமல் ஒப்பிக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். வாக்குமூலம் போலீசாரே எழுதிக்கொண்டதாக இருந்தாலும் சாட்சிகள் முன்னிலையில் வெள்ளிங்கிரி செல்லை எடுத்துக் கொடுத்ததால் அவன் மீதான வழக்கு வலுவாகிவிடும்.

அன்புசேகர் சரி என்று தலையசைத்தார். "சரி. செல் ரிகவரி எங்க செட் பண்ணலான்னு நெனைக்கறீங்க"

"காமாட்சிபுரம் கரட்டுமேட்லயே வெச்சதா ஸ்டேட்மெண்ட் போட்ரலாம்ங்கையா"

"சரிங்க பாய். சாட்சிகள ஒருதடவ அங்க கூட்டிட்டுப் போய்க் காட்டிடுங்க. இல்லாட்டி கோர்ட்ல கேக்கும் போது ஒளறிக் கொட்டுவானுக"

"சரிங்கைய்யா"

அன்புசேகர் பின்பு குபேந்திரனை ஒரு விநாடி இமைக்காமல் பார்த்தார். பின்பு கேட்டார்

"ஏண்டா எங்களைப் பாத்தா கேனக்கூதி மாதிரி தெரியுதா?"

அன்புசேகர் கிளம்பிப் போனதும் ஸ்டேஷன் வெறிச்சோடிப் போனது. குபேந்திரனை ஒரு அறையில் தள்ளிப் படுக்கச் சொன்னார்கள். இரண்டு பயிற்சிக் காவலர்கள் பாதுகாப்புக்குள் இருந்தனர். ஒருவன் கம்யூட்டரில் ஏதோ கேம் விளையாடிக்கொண்டிருக்க இன்னொருவன் அக்யூஸ்ட்களில் ஆல்பத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஒரு போலீஸ்காரர் கைவிலங்கோடு வந்தார். குபேந்திரன் தனக்குத்தான் விலங்கு போடப் போகிறார்கள் என்று நினைத்தான். ஆனால் அவர் கட்டடத்தை விட்டு

வெளியே சென்று ஸ்டேஷன் கதவை இழுத்து மூடி விலங்கு போட்டுப் பூட்டினார்.

“தூங்கு குபேந்திரா. காலைல பேசிக்கலாம்”

குபேந்திரனுக்கு மரத்துப்போன மனநிலை மாறவேயில்லை. அறைகள் காலியாக இருளோடிக் கிடக்க ஆட்கள் இயல்பாக தங்கள் வேலைகளில் ஆழ்ந்திருந்தனர். குபேந்திரனுக்கு எல்லாமே வழக்கம் போல இருப்பதுபோலத் தோன்றியது. ‘இது என்ன மாதிரி இடம்? தனக்கு என்ன நேரப் போகிறது?’ என்று சிந்திக்க முயன்றான். மனைவியைக் காப்பாற்றி விட்டோம். ஊசி இல்லை. என்று ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றான். ஆனால் எதுவுமே மனதில் ஊன்றி நிற்கவில்லை. எல்லா எண்ணங்களுமே வழுக்கிக்கொண்டு சென்றன.

“எழுந்திருச்சுக்க. ஐயா வந்திருக்கார்” என்ற குரல்கேட்டுச் சட்டென்று விழித்துக் கொண்டான். மணி ஏழு என்று கடிகாரம் காட்டியது. “பாத்ரூம் போறதுன்னா போயிட்டு, பல்லகில்ல வெளக்கிட்டு வா” என்றார் அபு.

குபேந்திரன் காலைக் கடன்களை முடித்துவிட்டு வந்தபோது அவனுக்காக அந்த மாடி அறையில் முழு சீருடையில் டி.எஸ்.பி காத்திருந்தார். அவர் குபேந்திரனை உட்காரச் சொன்னார். குபேந்திரன் குத்துக்காலிட்டு உட்கார்ந்தான்.

“குபேந்திரா நான் உன்னோட ஆபீசர். என்கிட்ட சொல்லாம இனி யாரும் உன்ன விசாரிக்க மாட்டாங்க. போட்டோ எடுக்க மாட்டாங்க. என்னோட சொந்த திருப்திக்காக கொஞ்சம் கேள்வி கேக்கப் போறேன். சொல்லு”

டிஎஸ்பி தனது செல்லை எடுத்து அவன் பேசுவதைப் படமெடுத்தபடி கேள்விகள் கேட்கத் தொடங்கினார். எல்லாமே அறிவினாக்கள்.

நீ அவம்மேல கோபமா இருந்த, அவனத் தீத்துடறதுன்னு முடிவு செஞ்சிருந்த, திட்டம் போட்டீங்க என்று கேள்விகள் இழுத்துச் சென்றன.

குபேந்திரனுக்கும் பாஸ்கரைப் பிடிக்காது. அவ்வளவுதான். ஆனால் கொலை செய்யுமளவுக்குப் பெரிய கோபமெல்லாம் கிடையாது.

வெள்ளிங்கிரியைத் திருப்திப்படுத்த வேண்டி போட்டுக்கொடுப்பதும் உண்டு. அன்று வெள்ளிங்கிரி அழைத்ததும் கிளம்பிவிட்டான். எதற்கு என்று தெரியுமா என்றால் தெரியும்தான். தெரியாதும்தான். அன்று சரக்கடித்துவிட்டு மல்லாந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. இதுதான் உண்மை.

ஆனால் குபேந்திரன் தான் கடுங்கோபம் கொண்டிருந்ததாகவும் தானும் வெள்ளிங்கிரியும் சேர்ந்து பாஸ்கரை வாழ விடக்கூடாது என்று முடிவு செய்ததாகவும், கூட்டமாக கூடிச் சிந்தித்ததாகவும், மேலிடத்திலிருந்து உத்தரவு வந்ததாகவும் சொல்லிக்கொண்டே போனான். தான் ஏன் இப்படிப் பேசுகிறோம் என்று அவனுக்குப் புரியவில்லை. தனது செயல் மிகவும் நியாயமானது என்று குபேந்திரன் விளக்க விரும்பினான். போலீஸ்காரர்களுகாகவா அல்லது தனக்கேவா என்று அவன் சிந்திக்கவில்லை. உடல் மரத்து மனம் செயலிழந்து கிடந்த அந்த நிலையில் தான் சொல்வது உண்மை என்பதில் அவனுக்கு எந்த சந்தேகமும் ஏற்படவில்லை.

டிஎஸ்பி செல்லை ஆஃப் செய்துவிட்டு இத அப்புடியே கேஸ்ல போட்டா உனக்குப் பிரச்சினையாயிடும். அதனால உன்ன வி.ஏ.வோ-கிட்ட கூட்டிட்டுப்போறேன். அவங்கிட்ட நீ வாக்குமூலம் குடுத்ததா ரெகார்ட் பண்ணிக்கிறேன். என்ன வேணுமோ கேட்டு வாங்கிச் சாப்புடு” என்றார்.

அடுத்த ஒருமணி நேரத்தில் போலீஸ் ஜீப் குபேந்திரனையும் அபுவையும் பாலுவையும் போலீஸ்காரர்களையும் ஏற்றிக்கொண்டு காமாட்சிபுரம் நோக்கிப் புறப்பட்டது.

16

டி.எஸ்.பி அழைப்பதாகத் தகவல் வந்ததும் அன்புசேகர் லேசாகக் குழம்பினார். 'எதற்காக இருக்கும்? பாஸ்கர் வழக்குக்காகத்தான் என்பதில் சந்தேகமில்லை. வழக்கு முக்கியமான கட்டத்தை எட்டிவிட்டது. ஆனால் அடுத்து இருப்பதுதான் சிரமமான வேலை. உள்ளூர் சாதித் தலைவர்களை கைது செய்யும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பஸ்ஸைக் கல்வீசி அடிப்பதற்கு மேல் இங்கு எதுவும் நடந்து விடப்போவதில்லை. அதிகபட்சம் சாலை மறியல். ஆனால் எதிர்பாராமல் ஏதாவது நடந்துவிட்டால் பதில் சொல்ல வேண்டியிருக்கும்' அது தொடர்பாகப் பேசுவதற்காக இருக்கும் என்று நினைத்துக்கொண்டார்.

இதுவரை வழக்கின் புலன் விசாரணை டிஎஸ்பியின் நேரடி மேற்பார்வையில் நடந்து கொண்டிருக்கிறது. இது தொடர்பாக தனக்கு எந்த சிபாரிசோ, நெருக்கடியோ வராதது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. வழக்கமாக இதெல்லாம் நடக்கும். ஆனால் எதிர் தரப்பு கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது. மேலதிகாரிகள் மட்டத்திலிருந்தும் சம்பிரதாயமான விசாரிப்புக்கு மேல் எதுவுமில்லை.

எனவே விசாரணையில் மேலிடம் தலையிடவில்லை. அது தன்போக்கில் நடப்பதை அனுமதிக்கிறது என்பதை அன்புசேகர் புரிந்து கொண்டிருந்தார். பேசாமல் இருந்துவிட்டால் எல்லாம் சரியாக நடந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

டி.எஸ்.பி அன்புசேகரை கவனமாக உற்றுப் பார்த்தார்.

"அடுத்து என்ன பண்ணப் போறீங்க?"

"வெள்ளிங்கிரி வகையறாவை செக்யூர் பண்ணிறலாம் சார்..."

"குபேந்திரன் வாக்குமூலம் குடுப்பானா?"

"குடுத்துட்டானுங்களே ஐயா" அன்புசேகர் குழப்பத்துடன் கேட்டார்.

"நம்மகிட்ட குடுக்கற வாக்குமூலம் இல்ல. கோர்ட்டில் குடுக்கற 164 வாக்குமூலம் முயற்சி பண்ணலாமில்ல"

"164 ஆ?" அன்புசேகர் ஆச்சரியத்துடன் விழித்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் 164-இன் கீழான வாக்குமூலம் என்பது நேரடியாக நீதிபதியிடம் அளிக்கப்படும் வாக்குமூலமாகும்.

போலீஸிடம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கொடுக்கும் வாக்குமூலம் செல்லாது. இதைச் சரிசெய்ய போலீஸ் வழக்கமாக ஒரு தந்திரத்தைப் பயன்படுத்தும். போலீசிடம் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் செல்லாது என்றாலும் அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஏதாவது ஒரு பொருள் கண்டெடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் அந்தப் பகுதி மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். எனவே எதிரியிடம் வாக்குமூலம் வாங்கும்போது போலீஸ்காரர்கள் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கத்தியை அல்லது தடியை இந்த இடத்தில் ஒளித்து வைத்திருக்கிறேன். என்னை அழைத்துச் சென்றால் அதை எடுத்துக் கொடுக்கிறேன் என்று இரண்டு வரிகள் சேர்த்து விடுவார்கள். பின்பு சாட்சிகள் முன்னிலையில் அதை எடுத்துக் கொடுத்ததாக எழுதிவிட்டால் வாக்குமூலத்திற்குப் பலம் வந்துவிடும். இது பழைய தந்திரம்.

சிலபோது மூன்றாவது மனிதர்களிடம் கொடுக்கும் வாக்குமூலம் செல்லும் என்பதால் போலீஸ் கிராம நிர்வாக அலுவலர்களிடம் அழைத்துச்சென்று வாக்குமூலம் கொடுக்க வைக்கும். தானாக தன்னிடம் வந்து வாக்குமூலம் கொடுத்ததாக கிராம நிர்வாக அதிகாரி நீதிமன்றத்தில் சொல்லிவிடுவார்.

இதற்கு பதில் எதிரியை நேரடியாக மேஜிஸ்ட்ரேட்டிடம் அழைத்துச் சென்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வைத்துவிட்டால் அந்த வாக்குமூலத்தை நீதிமன்றம் முழுமையாக ஏற்றுக்கொள்ளும். ஆனால் மாஜிஸ்ட்ரேட் போலீஸாரையெல்லாம் வெளியே அனுப்பிவிட்டுத் தனியாகத்தான் எதிரியை விசாரிப்பார். அப்போது 'இந்த வாக்குமூலம் உனக்கு எதிராகப் பயன்படுத்தப்படும். உனக்குத் தண்டனை கிடைக்கவும் வாய்ப்புள்ளது. வாக்குமூலம் கொடுக்காமல் இருக்கவும் உரிமையுள்ளது' என்று சொல்லித்தான் விசாரிப்பார். குற்றவாளி மனம்மாறி குறுக்கே திரும்பிவிட்டால் எல்லாமே சொதப்பிவிடும். அதிலும் இதுபோன்ற அரசியல் சம்பந்தப்பட்ட வழக்கில் அந்த ஆபத்து அதிகம். ஆனால் டி.எஸ்.பி வெள்ளிங்கிரியைச் சுற்றித் துல்லியமாக வலை பின்ன

விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

அன்புசேகர் பதில் பேசாமல் இருப்பதைப் பார்த்ததும் டி.எஸ்.பி மெல்லியதாகச் சிரித்துக்கொண்டார். "இந்த கேஸ்ல வாக்குமூலம் குடுத்தா மத்த கேஸ்கள்ல ஜாமீன்ல வர்றதுக்கு உதவலாம். இல்லாட்டி ஜென்மத்துக்கு வரமுடியாதுன்னு சொல்லுங்க"

"சரிங்க ஐயா"

அன்புசேகர் கிளம்பத் தயாராக இருந்தார். ஆனால் போகலாம் என்னும் சமிக்ஞை இன்னும் டி.எஸ்.பி-யிடமிருந்து வரவில்லை. அவர் இன்னும் ஏதோ சொல்ல விரும்புவது தெரிந்தது. டி,எஸ்,பி மேசையில் மெல்ல விரல்களால் தாளம் போட்டார். பின்பு கனைத்துக்கொண்டார். விஷயம் முக்கியமானதுதான் போலிருக்கிறது. அதற்குத்தான் இத்தனை பீடிகை.

"அப்புறம் இந்தக் கொலையை வெள்ளிங்கிரியே பண்ணினானா, இல்ல மனோகரனும் இதுல உண்டா?"

அன்புசேகர் திடுக்கிட்டார். 'அப்படியானால் குறி வெள்ளிங்கிரியில்லையா? மனோகரன்தான் இலக்கா!' அவர் பதில் பேசவில்லை.

"பாருங்க அன்புசேகர். சான்ஸ் இருக்குது. பெரியாளு ஆகிறதுக்கு இப்படியெல்லாம் பண்ணக்கூடிய ஆளுகதான்"

"சரிங்கைய்யா"

"அந்த ஏங்கிளையும் கொஞ்சம் பாருங்க" டி.எஸ்.பி முடிந்தது என்பதற்கான அடையாளமாகத் தலையசைத்தார்.

அன்புசேகர் அசையாமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து

"ஏதாவது மேட்டரா?" என்றார் டி.எஸ்.பி.

"பாஸ்கர் அழுதான்னு ஒரு பொண்ணை மில்லுல இருந்துத் தூக்க காமாட்சிபுரம் பக்கம் வந்ததா அருண்னு ஒரு ரிப்போர்ட்டர் சொல்றான்"

"ம்?"

“மில் ஏங்கிள் ஒண்ணு இருக்குன்னு...”

“மில்... இந்தப் புள்ள போனா இன்னொரு புள்ள. இவனுக சம்பளமா கொடுக்கப் போறாங்க. பாதிநாள் வேல செஞ்சுட்டு ஓடிப்போனா இவனுகளுக்கு நல்லதுதானே? அதுக்கு ஏன் கொல செய்யரானுக? அப்படியே இருந்தாலும் பண்ணது இந்தப் வெள்ளிங்கிரி, மனோகரன் பயலுகதானே? எவிடென்ஸ் எந்தப் பக்கம் போகுதோ அந்தப் பக்கம் போங்க”

அவர் சுவாதீனமாகக் கொலைகாரர்கள் பட்டியலில் மனோகரனையும் சேர்த்துக்கொண்டது அன்புசேகருக்கு ஆச்சரியமாக இருந்தது.

“சரிங்கைய்யா” அன்புசேகர் எழுந்து சல்யூட் அடித்தார்..

“மில்லு ஏங்கிள்ளயும் விசாரிச்சுப் பாருங்க. கன்ஸ்ட்ரக்டிவ்வா ஏதாவது கெடச்சா பாக்கலாம். இல்லேன்னா அதுல டைம் வேஸ்ட் பண்ண வேண்டாம்”

“யெஸ் சார்”

17

“ஹலோ காமாட்சிபுரம் இன்ஸ்பெக்டர் அன்புசேகர் பேசறேன், ஐயா இருக்கிறாங்களாம்மா?”

“இருக்கிறாருங். தூங்கிட்டிருக்கிறாருங்க”

“நீங்கம்மா?”

“நா பூரணி பேசறேனுங்க, அவரு சம்சாரம்”

“ஐயா எந்திருச்சாருன்னா கொஞ்சம் ஸ்டேஷன் வரைக்கும் வரச்சொல்லுங்க. ஒரு என்கொயரி இருக்கு”

அடுத்த அரைமணி நேரத்தில் மனோகரன் நிலையத்துக்கு வந்துவிட்டான். அன்புசேகருக்கும் மனோகருக்கும் பழக்கம் உண்டு. எனவே நேராக அன்புசேகர் அறைக்கு வந்தான். மனோகரனிடம் ஒரு படித்த களை இருக்கும். படித்தவன்தான். எம்.ஏ ஆங்கில இலக்கியம். பார்த்தால் அசப்பில் ஒரு பேராசிரியர் போலவோ வங்கி மேலாளர் போலவோ தோன்றும்.

இன்று மனோகரனின் முகம் இருண்டிருந்தது.

“எனக்கும் இதுக்கும் சம்மந்தமேயில்ல” என்றான் கவலையுடன்.

அன்புசேகர் ஆமாம் என்றோ இல்லையென்றோ சொல்லாமல் “எனக்கு பிரஷர் வருது. உங்க வீட்டுகிட்ட சம்பவம் நடந்திருக்கு. உங்க ஆளுகதான் சம்மந்தப்பட்டிருக்காங்க”

“அவுங்க அப்படித்தான சொல்லுவாங்க. அவுங்க சொல்றதக் கேட்டா ஊர்ல இருக்கிற எல்லாரையும் புடிக்க வேண்டியிருக்கும்”

“இல்ல பிரஷர் அவுங்ககிட்டிருந்தில்ல”

“வேற ஆருகிட்டிருந்து சொல்லுங்க?” மனோகரனின் பதட்டம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துச் சென்றது.

“அது எங்க ஆபீசருங்க... அது வேண்டாம். உங்களுக்கு யாருக்காவது போன் பண்ணணும்னா இங்கியே உக்காந்து

பண்ணிக்குங்க”

தான் கைது செய்யப்படப் போகிறோம் என்பதை மனோகரனால் நம்ப முடியவில்லை.

இருபது நிமிடம் மனோகரன் யார்யாருக்கோ போன் செய்தான். இறுதியாக வக்கீலிடம் பேசினான் போலிருக்கிறது. பின்பு அன்புசேகர் எதிரே வந்து உட்கார்ந்தான்.

“உங்களால என்ன செய்யமுடியும் எனக்கு?” அவனது இருண்ட முகம் மாறவில்லை என்றாலும் குரலில் சற்றுத் தெளிவும் நிதானமும் தெரிந்தன.

“உங்களுக்கு நேரடியா சம்மந்தமில்லாத ஆனா சொன்னா கேக்கிறமாதிரி ரெண்டு பேர சொல்லுங்க” என்றார் அன்புசேகர்.

“எதுக்கு?”

அன்புசேகர் எரிச்சலடைந்தார். “இப்ப என்னால ஒண்ணும் பண்ண முடியாது. ஆனா சாட்சிக உங்க ஆளுகளா இருந்தா கேஸ் நடக்கும்போது உங்களுக்குச் சாதாகமா இருக்குமில்ல?”

மனோகரன் நன்றியுணர்ச்சிப் பொங்கி வழிய அவர் கையைப் பிடிக்க வந்தான் .

“மச்சானை வந்து பார்க்கச் சொல்றேன். இதை மறக்க மாட்டேன்”

அன்புசேகர் மெல்ல விலக்கிவிட்டார். “சீக்கிரம் சொல்லுங்க”

சில நிமிடங்கள் கழித்து இன்ஸ்பெக்டர் தனது அறையிலிருந்து வெளியே வந்தார். குப்புராஜிடம் “மனோகரனும் வெள்ளிங்கிரியும் சதியாலோசனை பண்ணுனதைப் பாத்ததா கோர்ட்ல சொல்றதுக்கு இந்த ரெண்டு விட்னஸைப் போட்டுக்குங்க” என்று சாதாரணமாகச் சொல்லி பெயர்களும் முகவரியும் எழுதப்பட்டிருந்த ஒரு துண்டு சீட்டைக் கொடுத்தார்.

“சரிங்கையா.. சரிங்கையா” குப்புராஜின் குரலில் தெரிந்த அவசரம் இதில் தனக்கு எந்த சந்தேகமுமில்லை. எந்த ஆட்சேபனையுமில்லை

என்று நிரூபிப்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

“ஐயா அந்த அமுதா ஏங்கிள்? சைபர் கிரைம்ல இருந்து அந்தப் போன் சம்மந்தமா இன்னும் ரிபோர்ட் வரல” அபு மெதுவாக வாயெடுத்தார்.

அன்புசேகர் நிதானமாக டேபிள் வெயிட்டை உருட்டினார். அபுவுக்குத் தான் பேசி முடிப்பதற்குள் இன்ஸ்பெக்டருக்கு போன் எதுவும் வந்து விடக்கூடாது என்று தவிப்பாக இருந்தது. இன்ஸ்பெக்டர் செல் ஒலிக்கத்தான் செய்தது. ஆனால் அவர் அதை ஆஃப் செய்து விட்டு அபுவின் மீது கண்ணோட்டினார்.

“பாய் காமாட்சிபுரத்திலிருந்து பாஸ்கருக்குப் போன போன் அமுதா பண்ணியிருக்கலாம்னு நெனைக்கறீங்க. செஞ்சிருக்கலாம். ரெண்டுபேருக்கும் தொடுப்பு இருந்தாலும் இருந்திருக்கலாம்தானே? அமுதா போன் பண்ணினா. அவன் வந்தான். அக்யூஸ்டு கோஷ்டி பின்னாலயே வந்து போட்டுத் தள்ளிடுச்சு”

“அருண்னு ரிப்போர்ட்டர்?”

“செத்தவன் தலைவர்தானே. கட்டப் பஞ்சாயத்துகாரன் வேற. அமுதாவ வெச்சு நியூஸ் பண்ணி பாலிட்டிக்ஸ் பண்ணலாம்னு நெனச்சிருப்பான். இல்லாட்டி மில்லுகிட்ட ஆட்டையப் போடலாம்னு நினைச்சிருப்பான். அமுதாவுக்குக் கொலைல பங்கிருக்குன்னு யாரும் சொல்லலையே? சென்ராயனுக்குக் கூட பங்கிருக்குன்னு சொல்லலையே? சாட்சியாப் போட்டுக்கலாம். அது போதும். இவளையும் அக்யூஸ்டாப் போட்டம்ன்னா முன்விரோதத்துக்கு சாட்சியே இருக்காது. நாங்கதான்னு வெள்ளிங்கிரி கோஷ்டியும் சொல்லுது. அவ்வளவுதான்”

இன்ஸ்பெக்டர் அமுதாவுடன் நிறுத்த விரும்புகிறார். போன் செய்தது அமுதாதான் என்று அவர் திட்டவட்டமாகச் சொன்னது அபுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இதுவரை அதற்கான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால்... இதற்குமேல் சிந்திக்க வேண்டாம் என்று அதிகாரிகள் நினைத்தால்? ‘சரி... ரைட் விசாரணை முடிந்து விட்டது’

“சரிங்கையய்யா” அபு சல்யூட் அடித்துவிட்டு வெளியேறினார்.

பாலு கோவை காந்திபுரத்தில் கிராஸ்கட் சாலைக்கும், நூறடி சாலைக்கும் இடையே இருக்கும் பல நெரிசலான குறுக்குச் சந்துகளில் ஒன்றிலிருந்த அந்தக் கம்ப்யூட்டர் சென்டரில் நுழைந்தான். கையில் கணேஷ் பிரபு என்ற ஒரு டிரைவிங் லைசென்ஸ் இருந்தது. அதிலிருந்தது வாக்காளர் அடையாள அட்டையில் இருப்பது போன்றதொரு ஒரு விகாரமான போட்டோ. அதில் இருப்பது கணேஷ் பிரபு என்றும் சொல்லலாம். அவன் தாத்தா என்றும் சொல்லலாம்.

பாலு அடையாள அட்டையைக் காட்டிவிட்டு பிரவுசிங் சென்டர் இளைஞன் காட்டிய ரெஜிஸ்டரில் கணேஷ்பிரபு என்று கையெழுத்திட்டு ஒரு போன் நம்பரையும் எழுதினான்.

பிறகு ஒரு கம்யூட்டரில் உட்கார்ந்து கெபிராக்ஸி வெப்சைட்டுக்குள் போனான். ஒரு போலி மின்னஞ்சல் முகவரியை ஏற்படுத்தி அதிலிருந்து தட்டச்சு செய்யத் தொடங்கினான்.

“பாஸ்கர் என்ற தலித் தலைவரின் கொலையில் மேலும் சில குற்றவாளிகளைக் காவல்துறை மறைத்துப் பாதுகாக்கிறது. அமுதா வேலை செய்யும் மில்லுக்கும், கொலைக்கும் தொடர்பு இருக்கிறது. விசாரித்தால் உண்மை தெரியும்”

இந்த மின்னஞ்சலை சில மனித உரிமை அமைப்புகளுக்கு அனுப்பிவிட்டு வெளியே வந்தபோது மனதிலிருந்த பாரம் குறைந்து தன்னால் முடிந்ததைச் செய்துவிட்ட திருப்தி வந்தது.

பாகம் 2

பூரணி

1

“காடையூரில் சேடகுலச் செல்வருக்கு நான்கு ஆண்மக்கள், ஒரு பெ
பெண்ணின் உடல் முழுவதும் வெள்ளையாக இருந்த காரணத்தால் எவரு
வெள்ளையம்மாளை மணம் செய்துகொள்ள முன்வரவில்லை.
வெள்ளையம்மாளை மணம்செய்து கொள்பவருக்குத் தம் பெரும் சொத்தில்
நான்கில் ஒரு பங்கைக் கொடுப்பதாக சேடகுலச் செல்வர் அறிவித்தார்.
காங்கேய நாட்டுக்குத் தங்கள் மாட்டுப்பட்டியை ஓட்டிவந்த கருமாபுரம்
பொருளந்தை குல இளைஞன் காங்கேயன் வெள்ளையம்மாளை மணந்து
கொள்ள முன்வந்தான். திருமணம் முடிந்து மாமனார் வீட்டிலேயே
தங்கியிருந்தான். மூன்று ஆண்மக்கள் பிறந்து வளர்ந்தனர். அப்பனும்,
அம்மாவும் காலம் சென்றபின்பு நான்கு சகோதரர்களும் வெள்ளையம்மாளு
காணி கொடுக்க விரும்பவில்லை.

அவர்கள் நால்வரும் தங்கள் மனைவிமார்களின் பேச்சைக்
கேட்டுக்கொண்டு காங்கேயனைக் காடு சுற்றிப்பார்க்க அழைத்துச் சென்று
கொன்றுவிட்டனர்.

பின்பு தங்கைமேல் விபச்சாரி என்ற பழிச் சுமத்தி கால்காணி கொடு
முடியாது என்று கூறி குழந்தைகளோடு விரட்டிவிட்டனர். அப்போது
வெள்ளையம்மாள் கர்ப்பிணியாக இருந்தாள். வெள்ளையம்மாள் எவ்வளவு
கெஞ்சியும் அவர்கள் மனம் இரங்கவில்லை.

பெரும் துயருற்று அவமானத்தால் கண்ணீர் வடித்தபடி வெள்ளையம்
கட்டிய துணியுடன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டாள்.

வெள்ளையம்மாள் காங்கேயம் கோட்டை அருகே வரும்போது இஸ்ல
சர்தார் ஒருவர் சிலவீரர்களுடன் குதிரையில் வந்து கொண்டிருந்தார்.
வெள்ளையம்மாள் ஒதுங்கி நின்றாள். குழந்தைகள் அஞ்சி நடுங்கினர்.
நிராதரவாக ஆண் துணையில்லாமல் இவர்கள் நிற்பதைப் பார்த்து சர்தார்
இரக்கப்பட்டு விசாரித்தார். தான் தாராபுரம் சென்று வரும்வரை இவர்களை
காங்கேயம் கோட்டையில் தங்கவைத்து நன்கு உபசரிக்கச் செய்தார்.

பின்பு வேலை முடித்துத் திரும்பி வந்த சர்தார் வெள்ளையம்மாளை குழந்தைகளையும் காடையூர் அழைத்துச் சென்றார். அங்கே வெள்ளையம்மாளின் சகோதரர்களையும் ஊர்ப் பொதுமக்களையும் அழைத் விசாரித்தார். எல்லோரும் ஒரேமாதிரி பதில் சொன்னார்கள். வெள்ளையம்மாளின் தந்தை காணி கொடுப்பதாகச் சொல்லவே இல்லை. வெள்ளையம்மாளின் நடத்தை சரியில்லாததால் காங்கேயன் ஓடிவிட்டான். ஒழுக்கம் தவறிய வெள்ளையம்மாள் காடையூரில் இருக்கலாகாது என்றனர். வெள்ளையம்மாள் திகைத்துப் போனாள்; அழுது புலம்பினாள்; துடித்தாள்.

சகோதரர்களும் பொதுமக்களும் அவளுக்குத் தனது தரப்பு நியாயத்ை நிரூபிக்க மூன்று சோதனைகள் வைத்தனர். மூன்றிலும் வெற்றிபெற்றால் க கொடுப்பதாகக் கூறினர்.

பச்சை மண்குடத்தில் தண்ணீர் எடுக்க வேண்டும்.

அந்தத் தண்ணீரை மண்குதிரை மீது ஊற்றி அதைக் கனைக்கச் செ வேண்டும்.

கோவிலில் பட்டுப்போன வெடத்தலா மரத்திலான கழுமரம் உள்ளது. அதன்மீது தண்ணீர் ஊற்றி தழைக்கச் செய்ய வேண்டும்.

இதைச் செய்யத் தவறினால் வெள்ளையம்மாள் கழுமரத்தில் ஏற்றப்படுவாள்.

சர்தார் பதறிப் போனார். இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவளைக் கொல்லவே சதி செய்கிறார்கள் என்றார்.

“பச்சைமண் பாத்திரத்தில் பாவையே நீர் எடுத்தால்

பானை கரையாதோ பைங்கிளியே சொல்லுமம்மா!

குதிரை உருவாரம் குலுக்குமோ நீர் தெளித்தால்

வறண்ட மரம் துளிர்விடுமோ மாதரசி உன் நீரால்

பட்டமரம் தழைத்திடுமோ பாவையரே இந்நாளில்

குற்றம் சுமத்தியல்லோ கொலை செய்யத் திட்டமிட்டார்

ஈவிரக்கம் இல்லாத இரும்புமனம் கொண்டவர்கள்

பச்சைக் குழந்தைகளைப் பரிதவிக்க விட்டுவிட்டார்

வேண்டாம் விசப்பரிட்சை விபரீதம் வந்துவிடும்.

சத்தியம் செய்ய வேண்டாம் சபையோர்கள் முன்னாலே”

ஆனால் வெள்ளையம்மாள் மனமுவந்து நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாள். காடையீசுவரர் பங்கயச் செல்வி அருளால் தான் வெற்ற முடியும் என்றாள்.

பச்சை மண் குடத்தில் நீர் எடுத்தாள். மண் குதிரை மேல் ஊற்ற குத குலுக்கிக் கனைத்தது. நீர் பட்ட கழுமரம் தழைக்கத் தொடங்கியது.

குதிரை உருமேலே கோதையவள் நீர்த் தெளிக்க

குலுக்கிக் கனைத்ததுதான் குவலயத்தோர் முன்பாக

பச்சைமண் பாத்திரத்தில் பாவையவள் நீரெடுத்தால்

பானை கரையாமல் பைங்கொடியாள் வந்துவிட்டாள்.

வறண்ட கழுமரத்தை வகையுடனே சுற்றி வந்து

நீரைத் தெளித்தழுதாள் நிறைமாத கர்ப்பிணியாள்

கழுமரம் தன்னைக் கட்டிப் புரண்டழுதாள்

சுற்றிப் புரண்டழுதாள் சுந்தரரைத் தான் நினைத்து

கதறி யழுதாளே கட்டழகி வெள்ளையம்மாள்

கட்டழகி தானழுகக் கழுமரமும் தான் தழைத்து

பட்டமரம் துளிர்த்துப் பளிசென்று தான் தெரிய

வெள்ளையம்மாள் ஆனந்தக் கண்ணீர் விட்டாள். சர்தார் அல்லாவுக்கு நன்றி சொன்னார்.

வெள்ளையம்மாள் சர்தாருக்கு நன்றிக் கடன் ஆற்ற நினைத்தாள். த மக்களின் வழியினர் குழந்தைப் பருவத்தில் காதுகுத்தாமலிருந்து பின் சீர் “காதுகுத்திக் கல்யாணம்” என்ற பெயரில் காது குத்திய பின்தான் திருமண செய்ய வேண்டும் என்று முடிவு செய்தாள்.

காதுகுத்திக் கல்யாணம் என்பது இஸ்லாம் மதத்திலிருந்து இந்து மத திரும்புவது போன்ற சடங்காகும்.

“அரசூர் முழுக்காதன் குல வரலாறும் வெள்ளையம்மாள் காவியமும் கதைப் பாடலிலிருந்து.

விளக்க உரை புலவர் செ.இராசு”

மேற்கு மாவட்டங்களில் வேகமாக வளர்ந்து வரும் அந்தச் சமுதாய சங்கத்தின் தலைவரான மனோகரன் நல்ல உயரம். வெயில் படாத வழுவழுப்பான சந்தன நிறம். ஏறுநெற்றி. இளம் தொந்தி. ஆனால் விரிந்த தோள்கள் என்பதால் சட்டை போட்டால் தொந்தி தெரியாது. முகத்தில் ஒரு அறிவுக்களை தெரியும். கண்களில் ஒரு அமைதியும் நிதானமும் எப்போதும் இருக்கும். மனோகரன் கை நீட்டினால் குழந்தைகள் எளிதில் வந்துவிடும். அந்த அளவுக்கு அவன் முகத்தில் ஒரு பாதுகாப்பை உணரச் செய்யும் சாதுத்தன்மை இருந்தது. மனோகரன் சாதுவும்தான். இல்லையும்தான்.

அவன் எந்த நேரமும் வீரம் பேசி வெட்டு குத்து என்றிருக்கும் ஆள் கிடையாது. ஆனால் மற்றவர்கள் பின்வாங்கும் நேரங்களிலும் சோர்வுறும் தருணங்களிலும் துணிச்சலுடன் நிற்கத் தன்னால் முடியும் என்பதைக் கண்டுகொண்டிருந்தான். அதனால்தான் அதிர்ந்து பேசாத, மீசை முறுக்காத உளவியலிலும், இலக்கியத்திலும், வரலாற்றிலும் ஆர்வம் கொண்ட தனிமையான ஆத்மாவான அவனால் இந்த முரட்டு சங்கத்துக்குத் தலைவனாக இருக்க முடிகிறது.

தோற்றத்தில் ஒரு படித்தகளை தெரிந்தாலும் தனது தோற்றத்தைப்பற்றி மனோகரனுக்கு ஒரு கவலை உண்டு. சொல்லப்போனால் எல்லாவற்றையும் பற்றிக் கவலைப்படுவதுதான் அவனுக்கு வாடிக்கை.

காமாட்சிபுரம் பகுதியில் அந்தக் காலத்தில் பிரபலமாக இருந்த குதிரைக்காரனின் ஒரே மகன் அவன். குதிரைக்காரன் காமாட்சிபுரம் ஜமீனின் ஒன்றுவிட்ட தம்பி. சொத்துகளுக்குக் குறைவில்லை.

குதிரைக்காரனின் அப்பாவுக்கு அதாவது மனோகரனின் தாத்தாவுக்கு மொத்தம் இருநூரு ஏக்கர் நிலமிருந்தது. அணை கட்டுவதற்கு முன்பு பெரும்பாலும் வானம் பார்த்த பூமிதான் இந்தப் பகுதி. எல்லா இடத்துக்கும் ஒரே மாதிரிதானே மழை பெய்யும்? எனவே மழை பெய்யும்போது ஏரோட்டிவிட எல்லா வசதியான விவசாயிகள் வீட்டிலும் ஏராளமான மாடுகள் வைத்திருப்பார்கள். குதிரைக்காரர் வீட்டிலும் முன்னூறு மாடுகளும் முன்னூறு எருதுகளும் இருந்தன. மாடுகள் மலையில்தான் மேயும். அவற்றைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு மலசர்களுடையது. உழவுக் காலத்தில் ஐம்பது ஏர் போகும். அது ஒரு திருவிழா போல கோலாகலமாக இருக்கும்.

குதிரைக்காரன் ஜமீன் மாளிகையைப் போல அழகான ஒரு சிறிய மாளிகையைக் கட்டியிருந்தான். வீடு துடைக்க, பாத்திரம் தேய்க்க, சாணி மெழுக பண்ணையத்து ஆட்களிருந்தனர். மாலை வேளைகளில் பண்ணையத்திலிருப்பவர்கள் வேலையை முடித்துவிட்டு துண்டம் என்று சொல்லப்படும் துண்டோடு வந்து வந்து நிற்பார்கள். துண்டில்தான் குடும்பத்துக்கான சோறு கொட்டப்படும். பித்தளைப் போசியில் குழம்பை ஊற்றித் தருவார்கள். பரம்பரை பரம்பரையாகப் பண்ணையிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்து வேலை செய்து வெளியுலகம் தெரியாமலேயே புதைக்கப்பட்ட காலம் அது.

குதிரைக்காரனின் காலத்தில்தான் இந்த அணை வந்தது. கண் முன் அந்த அதிசயம் நடந்தது. கம்பு சோளம் விளைந்த காடுகள் பொன் விளையும் பூமிகளாக மாறிவிட்டன. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலென்ற நெல் வயல்கள் கிலோ மீட்டர் கிலோமீட்டராகப் பரவிக்கிடந்தன. சிறியதும் பெரியதுமான வாய்க்கால்கள் பரந்து விரிந்திருந்த வெட்டவெளியை ஊடறுத்துச் செல்லத் தொடங்கின. மலைப்பாங்கான கரடுமுரடான பூமியில் எங்கு தோண்டினாலும் தண்ணீர் பீறிட்டு வந்தது. மழைகாலங்களில் கிணறுகள் நிறைந்து அதிலிருந்து தண்ணீர் வாய்க்காலுக்கு வழிந்தோடிச் சென்றது. நிலம் கைத்தடியை நட்டாலும் வளர்ந்துவிடும் என்று சொல்லுமளவிற்குச் செழுமை கொண்டதாக மாறியது.

தெளிந்த நீரோடும் வாய்க்கால்களில் வாத்துகள் ஒய்யாரமாக நீந்திக் கொண்டிருக்கும். வீட்டில் தினமும் அரிசிச்சோறு சாப்பிடும் முதல் தலைமுறை உண்டானது. நடவு, அறுப்புக் காலங்களில் நூற்றுக்கணக்கான பெண்கள் வரப்பிலும் சாலையிலும் ஒற்றை வரிசையில் நடந்து போய்க்கொண்டே இருப்பார்கள்.

சோளக்காட்டில் பணம் ஒரு பெரிய விஷயமாக இருக்காது. அதேநேரம் பஞ்சமும் இருக்காது. யாரும் அள்ளிக் குவிக்கவும் இல்லை. பட்டினி கிடக்கவுமில்லை. ஆனால் நெல்வயலில் இரவுபகலாகப் போராடியதற்கு பணம் வந்து குவிந்தது.

கண்ணுக்கெட்டியதூரம் வரை பரந்து விரிந்திருக்கும் வயல்வெளிகளுக்கு நடுவே குதிரைக்காரனுக்கு ஒரு அழகான வெள்ளையடிக்கப்பட்ட சாளை இருந்தது. அதன் முன்பு தென்னங்கைகளைக் கொண்டு வேயப்பட்ட ஒரு நீளமான பந்தல் உண்டு. அதன் கீழ் எப்போதும் குளுகுளுவென்றிருக்கும். சாளைக்குப் பின்புறம் இருந்த வாய்க்காலில் தெளிந்த நீர் எல்லாக் காலங்களிலும் சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும். சாளைக்கு அருகிலிருந்த பிரம்மாண்டமான மாமரத்தோரம் வாய்க்கால் சற்றே அகண்டு ஒரு குளம்போன்ற நீர்ப்பரப்பை உருவாக்கி பின்பு மீண்டும் குறுகி ஓடியது.

குதிரைக்காரன் பெரும்பாலும் தோட்டத்துச் சாளையிலேயேதான் இரவுகளைக் கழிப்பான். அப்போதெல்லாம் அம்மா ஏதோ பறிகொடுத்ததைப் போன்ற முகத்துடன் மூலையில் போய் உட்கார்ந்து கொள்வாள். அப்பனுக்குச் சாளையில் பெண்களோடு கும்மாளமடிப்பதைத் தவிர ஒரு விபரீதமான பழக்கமும் இருந்தது. எப்பொழுதாவது சாளையில் உடன் தங்கும் பெண்களை அரை நிர்வாணமாக அடித்து விரட்டியதாகத் தகவல் வரும். காலையில் அப்பனின் சாந்தமான முகத்தைப் பார்த்தால் இப்படியெல்லாம் செய்யக்கூடியவன் என்று யாராலும் சொல்லமுடியாது. பங்காளிகள், ஊர்க்காரர்களோடு குழையக் குழையப் பேசுபவனிடம் இரவானால் எங்கிருந்தோ ஒரு அரக்கத்தனம் வந்துப் புகுந்துகொள்ளும். மனைவி, பண்ணையத்திற்கு வரும் பெண்கள் எல்லோரும் அவனுக்கு ஒன்றுதான்.

மனோகரனின் அம்மா குதிரைக்காரருக்கு இரண்டாவது மனைவி.

அப்பாவின் முதல் மனைவி அப்படி ஒரு அழகி என்று மனோகரன் கேள்விப்பட்டிருக்கிறான். குதிரைக்காரன் முதலிரவிலேயே அந்தப் பெண்ணை நிர்வாணமாக்கி குதிரை லாயத்தில் கட்டிப் போட்டு சவுக்கால் அடித்தானாம். அடுத்தநாள் ஊர்க்காரர்கள் தற்செயலாக வந்தபோது இதைக் கேட்டுத் துடிதுடித்துப்போய் பெண்ணைக் கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். மனிதர்களைக் கட்டி ஆள்வதில் அவனுக்கு அப்படியொரு ருசி. குறிப்பாகப் பெண்களை. அந்த ஆத்தா வாழாவெட்டியாக வாழ்க்கையைக் கழித்து அப்பன் செத்தபிறகு வெள்ளைச் சீலைக்கார ஆத்தாவாக இப்போதும் நடமாடிக் கொண்டிருக்கிறாள்.

அது தவிரவும் குதிரைக்காரனுக்கென்று வித்தியாசமான ரசனைகளும் பொழுது போக்குகளும் இருந்தன. அவனுக்கு ரேக்ளாரேஸ் என்றால் உயிர். அதற்காகவே பண்ணையத்தில் மாதாரிகளை வைத்திருப்பான். வருடத்துக்கு ஒருமுறை குதிரைகளையும், மாடுகளையும் அழைத்துக்கொண்டு ஊர்வலம் போல பண்ணை ஆட்கள் புடைசூழ வண்டிச்சோலை செல்வான். அங்கே தெரிந்த வீட்டில் விதவிதமான சரக்குகளோடு நாள்கணக்கில் கொண்டாட்டம் நடைபெறும். பின்பு இந்த ஊர்வலம் அப்படியே மைசூர் போகும்.

அதுதான் கொங்கு மண்டலத்தின் இரண்டு அணைகளின் காரணமாக பணக்கார விவசாயிகள் வாரிக் குவித்த காலம். இனம் பணத்தை மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொண்டு கோவைக்கும், திருப்பூருக்கும், ஈரோட்டுக்கும் சென்று பல கம்பெனிகளிலும், ஓட்டல்களிலும், மருத்துவமனைகளிலும், சினிமா தியேட்டர்களிலும், சினிமாவிலும் இன்னும் பல தொழில்களிலும் முதலீடு செய்தது. குதிரைக்காரன் லாரி டிரான்ஸ்போர்ட் வைக்கும் ஆவல் கொண்டு ஒரே நேரத்தில் மூன்று கிங் பென்ஸ் லாரிகள் வாங்கினான். கிங் பென்ஸ் தோல்வியடைந்த மாடல். லாரிகள் எப்போதும் பாதிவழியில் நின்றுவிடும். அதன் பின்னால் ஓடியே அவனது நேரம் கழிந்தது. குதிரைக்காரன் தனது லாரிகளின் மேல் எவ்வளவு பாசத்தைக் கொட்டினாலும் அவையென்னவோ

அவனிடம் பரம விரோதிகள் போலத்தான் நடந்து கொண்டன.

குதிரைக்காரன் சுகவாசி. உடல் வளையாது. அவன் வளைந்து எதுவும் செய்ய வேண்டும் என்பதில்லை. ஆனால் ஓடியாடி கண்காணிக்க வேண்டுமல்லவா? அதற்கும்கூட அவனுக்கு வளையாது. நான்கு தங்கைகள் இருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைப் பார்த்துக்கொள்வார்கள். எல்லோருக்கும் நல்ல சாமார்த்தியம். ஒரு தங்கை சமையல். ஒருத்தி விவசாயம். ஒருத்தி மாட்டுப்பட்டி, ஒருத்தி வரவுசெலவு என்று குதிரைக்காரருக்கு வேலையே இல்லை. எல்லாவற்றையும் மேற்பார்வை பார்க்க அம்மா.

ஆனால் தங்கைகள் ஒவ்வொருத்தியாக திருமணமாகிப் போகப் போக வருமானம் அடிவாங்கியது. முதலில் மாடுகளை விற்றான். பின்பு கொஞ்சம் கொஞ்சமாக எருதுகள் பின்பு நிலங்கள். பார்த்துக்கொண்டிருக்க இருக்க அந்தப் பெரிய வீட்டின் சுவர்கள் கருமையேறி ஒரு பாழடைந்த தோற்றம் வந்து கொண்டிருந்தது.

குதிரைக்காரனின் மனைவிக்கு எதிலும் பற்றில்லாமல் போய் சீட்டாட்டத்தில் எப்படியோ ஆர்வம் வந்துவிட்டது. ஒரு பண்டாரப் பெண்ணைத் துணைக்கு வைத்துக் கொண்டு அதிலேயே முழுகிக் கிடப்பாள். பெரிய ஆடம்பரம் இல்லையென்றாலும் கையில் பணம் நிற்காது. என்னவென்றே தெரியாமல் பணத்தை அள்ளிவிடும் ஒரு அப்பாவித்தனம் இருக்கும்.

மனோகரன் தலையெடுத்த போது பாதி சொத்துதான் இருந்தது. பண்ணையம் ஏறக்குறைய காலியாகிவிட்டிருந்தது. பாதி நிலங்கள் தரிசாகக் கிடந்தன.

மனோகரனுக்கு எதுவுமே எளிதாகக் கிடைக்கவில்லை... ஒரேமகன். வேலைக்காரர்கள்தான் வளர்த்தார்கள். தாந்தோன்றியான அப்பனின் வாழ்க்கையில் மகனுக்கான இடம் எங்கோ ஒரு மூலையிலிருந்தது. முடங்கிச் செயலிழந்து போன அம்மாவும் ஏறக்குறைய அப்படித்தான். பண்ணையத்திலிருக்கும் பெண்கள் அவனைப் பாவம் என்றுதான் கொஞ்சுவார்கள். வீட்டு வேலை செய்யும் பொங்கியா அவனை இடுப்பை விட்டு இறக்கவே மாட்டாள். அம்மாவை விட அவனுக்குப் பொங்கியாதான்

நெருக்கம். தூங்கி எழுந்தவுடன் அவனுக்கு பொங்கியா வேண்டும். குளிப்பாட்டுவது, சோறூட்டுவது, ஆடை மாற்றிவிடுவது எல்லாமே அவள்தான்.

சிலபோது பொங்கியா மனோகரனைத் தனியாக விட்டுச்செல்ல மனம் வராமல் கூடவே தனது குடிசைக்குத் தூக்கிச் செல்வாள். சாணி போட்டு மெழுகிய திண்ணையில் மனோகரன் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பான். மற்ற குழந்தைகள் பிறந்த மேனியாக உருண்டு புரண்டு புழுதியில் ஆடுவது அவனுக்குப் பொறாமையாக இருக்கும். ஆனால் ஒருபோதும் அவர்களோடு சேர்ந்துகொள்ள முடிந்ததில்லை.

சேரிக் குழந்தைகள் அவனை ஆச்சரியத்தோடு பார்த்துவிட்டு விலகிப் போவார்கள். அப்படியே நெருங்கி வந்தாலும் பெரியவர்கள் விரட்டி விடுவார்கள். அதீத மரியாதையும் அதீத ஒதுக்கமுமாகத்தான் வாழ்க்கை. ஒரு நல்ல நட்பு அமையவேயில்லை. தான் யார் என்ற அடையாளச் சிக்கல் அவனுக்கு வந்ததும் அப்போதுதான்.

பண்ணையத்தில் இருப்பவர்களை அப்பாவும் அம்மாவும் மிரட்டி உருட்டி அதிகாரம் செய்வார்கள். திட்டுவார்கள். அப்பன் சில போது அடிப்பான். ஒருமுறை ஏதோ பாத்திரத்தைச் சரியாகக் கழுவவில்லை என்று ஒரு பெண்ணை அம்மா எட்டி உதைத்ததை மனோகரன் பார்த்தான். அவர்கள் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு மனோகரனை கவனித்துக்கொள்வார்கள். வலுவான குடும்பம் இருந்து வேலைக்காரர்கள் மீது ஆதிக்கம் செலுத்தினால் குடும்பத்தின் பக்கம் நின்று அதிகாரத்தைப் பழகிக்கொள்ள முடியும். பண்ணையாட்களின் அன்பையும் பணிவையும் மிரட்டிப் பெறுவது தனது உரிமை என்பதைக் குடும்பம் கற்றுக் கொடுக்கும். காலம் காலமாக இதுதான் நடந்து வருகிறது. ஆனால் ஆதிக்கம் செலுத்தப்படுபவர்களிடமே அன்புக்காகப் போக வேண்டிய நிலை வரும்போது தான் யார் பக்கம் என்ற குழப்பம் மனோகரனுக்கு வந்தது. சம்பந்தமே இல்லாத ஒரு குற்ற உணர்ச்சியும் வந்து புகுந்து கொண்டது.

பதினான்கு வயதில் குரல் உடைந்ததும் மனோகரனின் பேச்சில் ஒரு அசாதாரண மென்மை வந்துவிட்டது. தன்னைப் பார்த்து சிரிக்கும்

எல்லோரிடமும் நின்று பதிலுக்குச் சிரித்து விட்டுத்தான் நகர்வான்.

சாந்தமான பையன் என்பார்கள். முகத்தில் பால் வடியுது என்பார்கள். ஆனால் மனோகரன் மனதார வெறுத்தது இந்தப் பால்வடியும் முகத்தைத்தான். அறைக்கதவைச் சாத்திக்கொண்டு கண்ணாடி முன்நின்று தன்னையே யோசனையுடன் பார்த்துக்கொண்டிருப்பான். வட்ட முகம். மேலுதட்டில் பச்சையாக அரும்பி வந்த மீசை. ஊஹூம் தன் தோற்றத்தில் பெண்மை கலந்திருப்பது போல அவனுக்குத் தோன்றும். பறட்டையாக காற்றில் பறக்கும் முடியுடன் அடாவடித்தனம் ததும்பும் கண்களுடன் ஒரு நல்ல போக்கிரியாக சினிமாவில் வரும் கதாநாயகன் போல ஆக அவனுக்கு விருப்பம். அப்படிப்பட்டவர்களைத்தான் பெண்கள் விரும்புகிறார்கள்.

தன்னாலும் ஒருநாள் கவர்ச்சியான முறுக்கேறிய ஆண்மை ததும்பும் இளைஞனாகிவிட முடியும் என்று உறுதியாக நம்பியிருந்தான். ஆனால் நிஜத்தில் மனோகரன் மேலும் மேலும் தனிமைப்பட்டுக் கொண்டிருந்தான். பெரிய பையனாகிவிட்டதால் முன்புபோல வேலையாட்களோடு நெருங்கிப் பழக முடியவில்லை. வேறு நண்பர்களும் இல்லை. எப்படியோ புத்தகப் புழு ஆகிவிட்டான். அம்மா ஒரு லஷ்மி, சிவசங்கரி ரசிகை. எனவே அதில் தொடங்கி சுஜாதா, பாலகுமாரன் என்று தொடர்ந்து கொண்டிருந்தது படிப்பு. படிக்கும் ஒவ்வொரு கதையும் மனதுக்குள் சற்றே மாறுதலுடன் ஓடிக்கொண்டே இருக்கும்.

பெண்கள் பின்னால் அலைய அவனுக்குப் பயம். ஆனால் அவனோடு படிக்கும் பையன்களுக்கு இதெல்லாம் சர்வ சாதாரரணம். தான் இளமையாக இல்லை, துருதுருப்பாக இல்லை, அடாவடியாக இல்லை. இப்படிப் பல இல்லைகள். கூட்டுகிற பெண்கள், தோட்டத்தில் வேலை செய்கிற பெண்கள், தெருவில் பாக்கிற பெண்கள், எல்லோரும் அவனைப் பைத்தியமாக்கினார்கள். நல்ல பையன் இமேஜையும் காத்துக்கொண்டு இந்தப் பார்த்து ரசிக்கும் ஆவலையும் தீர்த்துக்கொள்வது மிகப்பெரிய தவிப்பாக இருந்தது.

“கெவுடு சூஸ்தடா” என்று பண்ணையத்திற்கு வரும் பெண்கள் அவனைப் பார்த்து கிளுகிளுத்து சிரிப்பார்கள். ஆனால் நெருங்க

முடியாது. அந்தஸ்தா பயமா அல்லது தப்பாக எதுவும் செய்து விடக்கூடாது என்ற என்ற எண்ணமா தெரியவில்லை. அவர்களே விலகிவிடுவார்கள்.

பனிரெண்டாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்தான். ஆனால் மனோகரன் பிடிவாதமாக கோவையில் ஆங்கில இலக்கியம் சேர்ந்தான். கல்லூரி வேறுவிதமாக இருந்தது. தன் இமேஜை மாற்றிக்கொள்ள அவன் சிகரெட் பிடிக்கத் தொடங்கியது அங்கேதான்.

மனோகரன் தன்னிடம் மற்றவர்களுக்கு இல்லாத திறமைகள் இருப்பதை உணர்ந்து கொண்டது இந்தக் காலத்தில்தான். தாமஸ் ஹார்டியின் டிரம்பெட் மேஜரையும், டி.எச்,லாரென்ஸின் சன்ஸ் அண்ட் லவ்வர்ஸையும் அவன் கைடின் உதவி இல்லாமலேயே படித்தான். ஒதெல்லோ எடுத்த பேராசிரியர் முருகேசனை அவனுக்குப் பிடிக்கும். அவர் வகுப்பைத் தவறவிடவே மாட்டான். அவர் கொஞ்சம் சிடுமூஞ்சி. மற்ற பையன்களுக்கு அவரைப் பிடிக்காது. ஒருநாள் ஏதோ கோபத்தில் புத்தகம் இல்லாமல் இருப்பவர்கள் எல்லாம் வெளியே போங்கள் என்றார். பையன்கள் குதூகலத்துடன் வெளியேறினர்.

மனோகரன் எழுந்து நின்று "சார், நான் ஒன்று சொல்ல வேண்டும்" என்றான்.

"என்ன?"

"புத்தகத்துக்கு மேல ஏதாவது உங்கள் வகுப்பில் கிடைக்கும் என்றுதான் நாங்கள் வருகிறோம். உங்கள் வகுப்பைக் கவனிக்கிறோமா இல்லையா என்று மட்டும்தானே நீங்கள் பார்க்க வேண்டும்?" என்றான்.

முருகேசன் வழக்கமான சிடுசிடு முகத்துடன் அவனை உட்காரச் சொன்னார். பின்பு அந்த ஆண்டு முழுவதும் யாரிடமும் புத்தகம் கேட்கவேயில்லை.

அவன் எம்.ஏ முடித்த நேரத்தில் குதிரைக்காரன் இறந்து போனான். அம்மா நிர்வாகத்தைக் கையில் எடுத்துக்கொண்டாள். ஆனால் கண்ணுக்கு முன்னால் தவறுகள் செய்தாள். ஒரு வங்கிக்குப் போனால் திகைத்து நிற்பாள். வேலை செய்பவர்களிடம் என்ன எதிர்பார்ப்பது என்பது

அவளுக்குத் தெரியவில்லை. கத்திக் கூச்சல் போடுவதும் அழுவதுமாக அவளது செயல்கள் வேடிக்கையாக இருக்கும். ஒருநாள் ஏதோ ஒருவெறியில் எல்லாத்தையும் வித்துத் தீத்தர்றேன் என்று சாலையோரம் இருந்த நிலத்தை விலை பேசியபோது மனோகரன் குறுக்கே புகுந்துத் தடுத்தான். அம்மா புரிந்துகொண்டு நிர்வாகத்தை மகனிடம் விட்டுவிட்டாள். மனோகரன் பிடிவாதமாக தனது சொத்து விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் வேலையில் ஈடுபட்டான்.

தன்னால் ஒருபோதும் உருட்டி மிரட்டி வேலை வாங்க முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்ததால் தேவையானதை மட்டும் அழுத்தமாகப் பேசும் ஒரு முறையை பழக்கப்படுத்திக் கொண்டான். தனக்கு விவசாயத்தையும், அதையொட்டிய வியாபாரத்தையும் பற்றி எதுவுமே தெரியாது என்பதால் முடிவுகள் எடுக்க, தயங்காமல் உறவினர்கள் உதவியை நாடினான். ஒருவரை நம்பாமல் இரண்டு மூன்று பேரைக் கேட்டுக்கொள்வது என்று வழக்கப்படுத்திக்கொண்டான்.

மனோகரன் தலையெடுக்கத் தொடங்கிய நேரத்தில் பண்ணையத்துக்கு ஆட்கள் வருவது நின்றுவிட்டது. பண்ணையாட்கள் போட்டதைத் தின்றுவிட்டுப் பரம்பரை பரம்பரையாக நிலத்திலேயே கிடப்பார்கள். இப்போது குடும்பம் குடும்பமாக கோவைக்கும், திருப்பூருக்கும் இடம்பெயரத் தொடங்கினார்கள். இருப்பவர்களும் பண்ணையத்துக்கு வர விரும்பவில்லை. கூலி பேசி விட்டுடுங்க என்றார்கள். கூலி கொடுக்கவேண்டி வந்ததும் லாபம் குறைந்து போனது. அப்படியும் ஆட்கள் போதவில்லை. எப்படியாவது ஆட்கள் கோவைக்கும், திருப்பூருக்கும் இடம் பெயர்வதைத் தடுக்க வேண்டும். அல்லது மாற்று வழி காண வேண்டும். நெல் வயலுக்கு எப்போதும் பிரச்சினை இருக்கும். தண்ணீர், ஆட்கள் இல்லாமல் முடியாது.

ஒருவழியை மனோகரனும் மற்ற விவசாயிகளும் சீக்கிரம் கண்டுபிடித்தனர்.

“சைடு போர். இதோ வாய்க்கால் வரைக்கும்” என்றான் மனோகரன்.

ஆழ்துளைக் கிணறு தோண்டும் ரிக் வண்டிகாரன் பங்காளிதான். மனோகரன் சொன்னதைக் கேட்டதும் சற்றே பயந்துபோனான். எங்கோ உள்பகுதிகளில் இப்படி நடப்பதாகக் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் இப்படி பொள்ளாச்சி சாலையில்...

"போடு நான் பாத்துக்கறேன்" என்றான் மனோகரன். பிரச்சினை வந்தால் என்ன செய்வதென்று மனோகரனுக்கும் தெரியாதுதான். ஒரு அசட்டுத் துணிச்சல்...

அணைப்பிரதேசம் முழுவதும் கண்ணுக்கு எட்டிய தூரம் பரந்து விரிந்திருந்த நெல்வயல்கள் கொஞ்சம் கொஞ்சமாக காணாமல் போய்க்கொண்டிருந்தன. அவற்றினிடத்தை தென்னந்தோப்புகள் ஆக்கிரமிக்கத் தொடங்கின. தென்னையில் எல்லாமே பணம். காய்கள், கீற்றுகள், மஞ்சி... ஆட்கள் தேவையே இல்லை. ஆற்றில் தண்ணீர் வருகிறதா இல்லையா என்றெல்லாம் கவலையே இல்லை. மனோகரனின் இருபத்தி மூன்று ஏக்கர் நிலம் வாய்க்கால் ஓரமாக நீண்டிருந்தது. மற்ற நிலங்கள் உள்ளே தள்ளியிருந்தன. ஆனால் அவற்றிலும் தண்ணீருக்குப் பஞ்சமிருக்கவில்லை என்றாலும் இந்த வாய்க்காலோர நிலத்தைத்தான் அவன் முதன்முதலில் தென்னந்தோப்பாக்கினான்.

தென்னைமரத்தைச் சுற்றி குளம்போல தண்ணீரைத் தேக்கியிருப்பார்கள். தோப்பு முழுவதும் ஈரத்தில் கால் வைக்கவே முடியாது.

அதோடு புதிதாக இங்கே வந்து குவிந்திருந்த மட்டைமில்களும் தங்கள் பங்குக்கு நீரை உறிஞ்சித் தள்ளின. இந்தத் தென்னை வந்ததும் கிராமப்புறமே ஒரு தொழிற்சாலை போலாகிவிட்டது. ஒவ்வொரு பத்துப்பதினைந்து தோட்டத்துக்கும் ஒரு மட்டை மில் வந்துவிட்டது. அதிநவீன இயந்திரங்கள், புதுப்புது ஆட்கள், வாகனங்கள்...

தென்னை மட்டைகளையும், கீற்றுகளையும் பணமாக்கியது மட்டைமில். தென்னை மட்டைகளை தண்ணீரில் ஊற வைத்து இயந்திரத்தில் கொடுத்து பஞ்சு போன்ற மஞ்சியாக்கி விடுவார்கள். மஞ்சி மலை மலையாகக் குவிக்கப்பட்டிருக்கும். இந்த மஞ்சியைக் கயிறு திரிக்கவும், மெத்தைகளில் வைக்கவும் பயன்படுத்துவார்கள். காய்ந்த

தென்னங்கீற்றுகளைப் பொடியாக்கி செடி வளர்க்கப் பயன்படுத்துவார்கள். இதைச் சிங்கள வியாபாரிகள் வாங்கி இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். வேறு பல ஐரோப்பிய நாடுகளும் மாடித் தோட்டங்கள், இண்டோர் தோட்டங்களுக்கு இந்த தென்னைப் பொடியைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

ஆனால் நாள் செல்லச் செல்ல எல்லாரும் தென்னைக்கு மாற மாற கிணற்றில் தண்ணீர் போதவில்லை. முறைவைத்து கிளை வாய்க்காலில் விடப்படும் தண்ணீரும் போதவில்லை. தோட்டங்களில் காற்றில் கலந்திருந்த ஈரம் குறைந்து வந்தது. வாய்க்காலை நம்பி தென்னைக்கு மாறியவர்கள் நெருக்கடியில் சிக்கிக்கொண்டார்கள். ஏதாவது ஒன்று செய்தே ஆக வேண்டும்.

ஆளாளுக்கு புலம்பிக் கொண்டே நாள் கடத்திக்கொண்டிருக்க துணிந்து இறங்கிய முதல் குழுவில் மனோகரன் இருந்தான். கிணற்றிலிருந்து வாய்க்காலுக்கு பத்தடி தூரம் வரை சைடு போர் போட்டு பிவிசி பைப்பை மண்ணில் புதைத்து விடுவார்கள். இரவானதும் மண்ணில் புதைக்கப்பட்டிருக்கும் பைப்போடு ரப்பர் பைப்பை இணைத்து அதை வாய்க்காலில் போட்டு நீரை உறிஞ்சுவார்கள். கிணற்றில் நீர்நிறைந்துவிடும்.

வாய்ப்பேச்சு வீரர்கள் ஒரு வேலைக்கும் ஆகவில்லை. துணிந்து இறங்கியவர்களில் பலர் முரட்டுத்தனத்துக்கு மேல் எதுவும் இல்லாதவர்கள்.

அடுத்தது என்ன என்பது பற்றி எதுவும் சிந்திக்கவே முடியாதவர்கள். கொஞ்சம் விவரம் இருந்த சிலர் அளவுக்கு மீறி வஞ்சகமாக இருந்தனர். யாரையும் எப்போதும் காட்டிக்கொடுக்கத் தயாராக இருந்தனர். மனோகரன் இவற்றில் எந்தக் குழுவுக்குள்ளும் பொருந்தவில்லை. தன்னால் இவர்களை மீறிச் சிந்திக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றிக்கொண்டே இருந்தது.

மட்டைமில்லில் வேலை செய்யும் பெண்களுக்கு ஈரமும் வெக்கையுமான சூழலால் அனீமியா வந்து மாதவிலக்கின்போது அதிகமான ரத்தப்போக்கு உண்டாகிறதாம். எனவே அந்தப்

பெண்களுக்குச் சம்பளத்தோடு ஒரு ஹார்லிக்ஸ் பாட்டிலும், ஒரு கிலோ பேரிச்சம்பழமும் கொடுக்கிறார்கள். மனோகரனின் அன்புக்குரிய பொங்கியாவின் மகள் இந்த மட்டை மில்லுக்கு வேலைக்குப் போகிறாள். தன்னிடம் வீட்டு அதிகாரம் வரும்போது பொங்கியாவையும் அவள் குடும்பத்தையும் உட்கார வைத்துச் சோறு போட வேண்டும் என்று மனோகரன் நினைத்திருக்கிறான். ஆனால் அதற்கான நேரம் வந்தபோது மனோகரன் ஒன்றுமே செய்யவில்லை. செய்யக்கூடாது என்றில்லை. ஆனால் இதற்காக உறவினர்கள், சாதிக்காரர்களிடமிருந்து கிளம்பக்கூடிய புயலை எதிர்கொள்ளும் மனநிலை அவனுக்கு இல்லை.

ஆனால் இந்த விஷயத்தில் மனோகரனுக்கு ஒரு அடையாளச் சிக்கல் இருந்து கொண்டே இருந்தது. பெரும் பணக்கார விவசாயிக்கான ஆளுமையும் தோரணையும் மனோகரனிடம் குறைவாக இருந்தன. தான் யார் பக்கம்? என்பதில் ஏற்படும் குழப்பத்தை ஒருநாளும் அவனால் முழுமையாகக் தீர்த்துக்கொள்ள முடிந்ததில்லை. பொங்கியாவின் மகளை எங்காவது சாலையில் பார்த்தால் காரை நிறுத்தி அழைத்துப்போகத் தோன்றும். ஆனால் ஒருநாளும் அதற்கான துணிச்சல் வந்ததில்லை.

மனோகரனின் பலவீனம் இரண்டு வேலைகளைச் சாதித்தது. ஒன்று ஐயா நல்லவர் என்ற பெயரைப் பெற்றுத்தந்தது. இதனால் தான் செய்ய விரும்பும் காரியம் எளிதாக நடந்தது. தன்னை எப்படி நல்லவன் என்று எல்லோரும் நம்புகிறார்கள் என்று ஆச்சரியமாக இருக்கும். தன்னை சதா குத்திக் கிழித்துக் கொண்டிருக்கும் இந்தக் குற்ற உணர்விலிருந்து என்றாவது ஒருநாள் விடுபட்ட முடியும் என்று மனோகரன் மனப்பூர்வமாக நம்பியிருந்தான்.

தொடுவானம் வரை கடல்போலப் பரந்திருந்த சோளக்காடுகளுக்கும், கொளுக்கட்டைப் புல் வளர்ந்த வெட்டவெளிகளுக்கும், பனைமரக் கூட்டங்களுக்கும் நடுவே உள்ள சின்னஞ்சிறு கிராமம் மஞ்சேரி. மனோகரனின் மனைவி பூரணியின் குடும்பம் மஞ்சேரியிலிருந்து ஊத்துக்குளிவரையுள்ள ஊர்களில் மிகவும் மரியாதையான குடும்பம் என்று பெயர்பெற்றது. இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்புவரை அவளது தாத்தா அருமைக்கார மருதாசலம் என்றால் தெரியாதவர்கள் கிடையாது. அப்போது அருமைக்காரர்கள்தான் திருமணங்களை நடத்தி வைப்பார்கள். மஞ்சேரி கிராமத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் தோட்டத்து சாளையில் அவர்கள் வீடு இருந்தது.

அவர் சேலை போன்ற பத்துமுழ வேட்டி கட்டிக்கொண்டு கடுக்கனோடு கல்யாண வீட்டுக்காரர்களை அன்பாக அதட்டி மிரட்டி சீர் செய்ய வைப்பதைப் பார்க்க வேண்டுமே!

திருமணங்கள் பெரும்பாலும் தொட்டிக்கட்டு வீடுகளில்தான் நடக்கும். தொண்ணூறு சதம் உறவினர்கள்தான் இருப்பார்கள். எல்லா வேலைகளையும் அவர்களே செய்வார்கள். விறகு வெட்டுவதும் நெல்வேக வைப்பதும் ஒரு தனிச்சடங்காகவே நடக்கும்.

திருமணச் சடங்குகள் அவரவர்கள் நிலத்திலேயே உள்ள ஒரு பால்வரும் மரத்தை வழிபாடு செய்து முதல்கிளை வெட்டுவதுடனேயே தொடங்கும். அருமைகாரர் தேங்காய், பழத்தோடு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி மணத்துடன் பூசை செய்து, கொடுவாள் எடுத்து முதல்வெட்டுப் போட்டுத் தொடங்கி வைப்பார். இதில் மூன்று கிளை உடைய ஒரு குச்சியை எடுத்து மணவீட்டுக்குக் கொண்டுவருவார்கள். பெண் வீட்டு உறவு ஒரு கிளை. மாப்பிள்ளை வீட்டு உறவு ஒரு கிளை இருவரும் சேர்ந்து ஒரு கிளை. பின்பு திருமண விருந்துக்கு வேண்டிய விறகு வெட்டப்படும்.

அடுத்தநாள் நெல் வேகவைத்து அரைக்கும் நிகழ்ச்சி நடக்கும். அதையும் அருமைக்கார அய்யாதான் தொடங்கி வைப்பார். அய்ந்து

வள்ளம் நெல் அளந்து அண்டாவில் போடுவார். பத்துப் பதினைந்து பேர் கூடி இரவெல்லாம் நெல்லை வேகவைத்து மறுநாள் உலர்த்தி வைப்பார்கள். பெண்கள் நெல்லைக் குற்றி அரிசியாக்குவார்கள்.

இரவு முழுவதும் சீர் நடக்கும். ஒவ்வொரு சீருக்கும் அரைமூட்டை நெல் வேண்டும். ஒவ்வொரு சீர் முடிந்தவுடனும் திருமணத்துக்காக நட்டிருந்த நட்டுக்கல் வரை மாப்பிள்ளையை மேளதாளத்துடன் அழைத்துச்சென்று தண்ணீர் ஊற்றி விடுவார்கள்.

அருமைக்காரர் மருதாசலம் நடத்தும் திருமணத்தில் ஒருகுறை இருக்காது. அய்ந்து நாள் சீர் முடித்துத் திரும்பும்வரை கல்யாணவீடு அவர் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். ஆனால் தோட்டத்துக்கு வந்துவிட்டால் அவர் ஆளே மாறிவிடுவார். அந்த வாட்டசாட்டமான உருவம் எப்படி வேண்டுமானாலும் வளையும் நார் போலாகிவிடும். தோட்டத்தோடு தோட்டமாக மண்ணோடு மண்ணாக கல்லோடு கல்லாக மாறிவிடும். ஒரு கரும்பழுப்பு நிழல் போல தோட்டத்தில் எல்லா இடத்திலும் அவரது உருவம் பரவியிருக்கும். ஒரு பரபரப்பு இருக்காது. ஒரு ஓட்ட சாட்டம் இருக்காது. நிதானமாக அமைதியாக எல்லாம் அதனதன் போக்கில் நடந்து கொண்டே இருக்கும்.

அதிகாலை நான்கரை மணிக்கு மாட்டுவண்டி தயாராகிவிடும். பண்ணையத்துக்கார பொன்னன் வண்டியை முடுக்கிவிட்டுவிட்டுப் அதில் ஏறிப் படுத்துக்கொள்வார். வண்டிமாடுகள் அசை போட்டபடி மெதுவாக நடந்து ஊருக்கு வெளியே இருக்கும் ஏரிக்குப் போகும். போய் நின்றவுடன் விழித்துக் கொள்வார். சட்டென்று இறங்கி விடுவிடுவென்று நாலு மம்புட்டி மண்ணை அள்ளி வண்டியில் போட்டால் நிறைந்து விடும். மீண்டும் வண்டியில் ஏறிப் படுத்துக்கொண்டால் வண்டி தானாக தோட்டத்துக்கு வந்து சேர்ந்துவிடும்.

ஏரியில் நீர் வற்றும் காலங்களில் சுற்றுப்புறங்களில் உள்ள விவசாயிகள் தினமும் அங்கே சென்று கீழே படிந்திருக்கும் வண்டல் மண்ணைத் தங்கள் தோட்டங்களுக்கு எடுத்துச் செல்வார்கள். அதனோடு மாட்டுச்சாணம், குப்பைகள் எல்லாவற்றையும் கலந்து போட்டு வைப்பார்கள். ஒரு நல்ல விவசாயி குளத்திலிருந்து வண்டல் மண் எடுத்து

வந்து எறும்பு போலச் சேர்த்து வைக்க வேண்டும். இப்படிச் சேர்க்கும் மண் அடுத்த உழவுக்குள் நிலம் முழுவதற்கும் போதுமான உரமாக மாறிவிடும்.

அருமைக்காரருக்குப் பதினைந்து ஏக்கர் நிலமிருந்தது. அதில் கிணற்று நீர் இருக்கும் இரண்டு ஏக்கரில் மட்டும் பருத்தி போடுவார்கள். மற்றவற்றில் எப்போதும் போல சோளம்தான். பருத்தி ஒரு வருடப் பயிர். பருத்தி விளைந்தவுடன் தினமும் காலையிலேயே குப்பை படியுமுன் பறித்துச் சாக்குகளில் நிரப்பி விடுவார்கள். பருத்தி விவசாயம் முதுகொடிய வைக்கும் பெரிய வேலை. ஆண் பருத்தியையும் பெண் பருத்தியும் இணைத்து மகரந்தச் சேர்க்கை செய்வதற்காக மூடிக் கட்ட வேண்டும்...

இரவில் களஞ்சைப் பிரித்து எடுக்கும் வேலை இருக்கும். புரோக்கர் லாரியில் வருவான். பஞ்சை கித்தான் சாக்குகளில் நிரப்பிக் கையோடு கொண்டு வந்திருக்கும் மெஷினில் எடை போட்டு அப்போதே பணம் கொடுத்துவிடுவான். அறுவடை முடிந்ததும் ஒரு வருடத்துக்கு வேண்டிய அரிசி, பருப்பு எல்லாவற்றையும் வாங்கிக்கொள்வார்கள். சோளக்காட்டில் ஊடுபயிராக துவரை, கத்தரிக்காய், தக்காளி, வெண்டைக்காய் போடுவதால் அதிலிருந்தும் வருமானம் வரும்.

தாத்தாவுக்குப் பூரணியின் அப்பாவும் அவன் தங்கை திலகவதியுமாக இரண்டு வாரிசுகள். அருமைக்கார அய்யனுக்குத் திலகவதி செல்லமகள். மகன் கடின உழைப்பாளிதான். ஆனால் ஒரு தொணதொணப்பு இருக்காது. மகள் பட்டாம்பூச்சி போல காடெல்லாம் சுற்றிவருவாள். அவள் சிரிப்பால் நிலமெல்லாம் நிறைந்திருக்கும். கொத்துக்களை வெட்டுவாள். தட்டுக் கட்டுவாள். சுமப்பாள். கடலைச் செடி பிடுங்குவாள். ஒரு நிமிடம் ஓய்ந்திருக்க மாட்டாள். எல்லாவிதமான காய்கறிச் செடிகளையும், மூலிகைச் செடிகளையும் கொண்டுவந்து வீட்டைச்சுற்றி நட்டிருப்பாள். திருநீற்றுப் பச்சிலை, புண்ணுக்கு வைக்கும் இலைகள், ஆடாதொடை, கண்டங்கத்திரி, தூதுவளை என்று எது வேண்டுமென்றாலும் அய்யனூட்ல கெடைக்கும் என்ற நம்பிக்கையுடன் ஊர்க்காரர்கள் வருவார்கள்.

மூன்று மணியானால் போதும் திலகா மாட்டை ஓட்டிக்கொண்டு பொளிக்குப் போய்விடுவாள். ஆம்பளயாகப் பிறந்திருக்க வேண்டியவள் என்று அருமைக்காரர் நினைத்துக்கொள்வார். ஆனால் இந்தத் துறுதுறுப்பும் சிரிப்பும் லாவகமும் சுட்டுப் போட்டாலும் பையன்களுக்கு வராதே. லட்சுமி இவள்.

இவள் போகுமிடம் ஆலமரமாகத் தழைக்கும். பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையும் வாழவைக்கப் பிறந்தவள் இவள் என்று நினைத்துக்கொள்வார் அருமைக்காரர்.

இரவு முழுவதும் மழை பெய்து சில்லென்று குளிர்ந்திருந்த ஒரு காலை நேரத்தில்தான் பூரணி பாஸ்கரை முதல் முதலாகப் பார்த்தாள். அப்போது அவளுக்குப் பத்து வயதிருக்கும். காட்டில் பள்ளவாரியோரம் இருக்கும் புளியந்தோப்பு பூரணிக்கு மிகவும் பிடிக்கும். பள்ளம் இவர்கள் காட்டோரம் வளைந்து செல்லும். அதில் அந்தக் காலத்தில் அடிக்கடி வெள்ளம் வந்து காட்டில் மணலைப் பரப்பிவிடும். எனவே என்ன பயிரிட்டாலும் பிரச்சினை என்று புளியங்காடு வளர்த்திருந்தார்கள். அந்த மரங்கள் சந்தையில் இருக்கும் பெரிய பெரிய புளிய மரங்களைப் போலில்லாமல் கொஞ்சம் சிறியவையாக இருக்கும். ஒரே உயரத்தில் நாற்பத்து சொச்சம் புளியமரங்கள் வளர்ந்திருக்கும்.

மழை நின்று விட்டாலும் புளிய மரங்களில் இருந்து சலசலவென்று துளிகள் விழுந்து கொண்டிருக்கும். மேக மூட்டமும் ஈரமுமான காலையில் நீர்த்திவலைகள் தொங்கிக் கொண்டிருக்கும் புற்களின்மேல் கால்வைத்து நடப்பது அவளுக்குப் பிடிக்கும். கட்டெரும்புகள் புற்களுக்கு இடையே வழி கண்டுபிடித்துச் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும். ரயில் பூச்சிகள் என்று சிறுவர்கள் சொல்லும் மரவட்டைகள் சாவகாசமாக நகர்ந்து கொண்டிருக்கும். லேசாகத் தொட்டால் அழகான வட்டமாகச் சுருண்டு கொள்ளும். தரையைக் கொத்திக்கொண்டிருக்கும் மைனாக்களும் குருவிகளும் ஆட்கள் வருவதைக் கண்டால் சாவகாசமாகத் தத்தி அப்பால் செல்லும்.

பூரணி புளியங்காய்களைப் பறித்து வந்து பள்ளியில்

பையன்களுக்கும் பெண்களுக்கும் கொடுப்பாள். சிலருக்குப் புளியங்காய்தான் பிடிக்கும். சிலருக்கு மொகப்பழம்தான் பிடிக்கும். சிலருக்கு பிஞ்சு வேண்டும். பூரணிக்கு இது எதுவுமே பிடிக்காது. பழுத்தவுடன் ஓட்டை உடைத்தால் ஓட்டோடு ஒட்டாமல் உள்ளே கரும்பழுப்பு நிறத்தில் இருக்கும் புளியம்பழம்தான் பிடிக்கும். பச்சையாக கடுகடுவென்றிருக்கும் புளியங்காயை எப்படிப் பிடிக்க முடியும்? அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்று நினைத்துக் கொள்வாள். புளியம்பழம் ஒன்றைத்தவிர பூரணிக்கு விருப்பு வெறுப்புகளே கிடையாது. வீட்டில் வாங்கிக் கொடுக்கும் ஆடைகள், அம்மா செய்து கொடுக்கும் உணவு...

பூரணி அருமைக்கார அய்யனின் பேத்தி. அப்பா அம்மாவுக்கு இரண்டாவது பெண். அண்ணன் ஜெகதீஸ்வரன் அவளுக்கு நான்கு வயது மூத்தவன். பூரணி பிறந்த போது ஊரில் எல்லாம் நன்றாகத்தானிருந்தது.

காலை ஐந்து மணிக்கே அப்பனும் அம்மாவும் எழுந்து விடுவார்கள். வாசல் தெளித்துக் கோலம் போட்டவுடன் வெளியில் இருக்கும் விறகு அடுப்பில் சாப்பாடும் ஏதோ ஒரு குழம்பும் அம்மா வைப்பாள். உறவினர்கள் வரும்போதும், மழை பெய்யும் போதும் மட்டும் கேஸ் ஸ்டவ் பற்ற வைக்கப்படும்.

நிம்மதியான வாழ்க்கை. சோளக்காட்டுக்குள் ஆள் அரவமே இருக்காது. அது ஒரு தனி உலகம். ஒரு கிலோமீட்டர் தூரத்தில் செல்லும் லாரிகளின் சத்தத்தை வைத்து அவற்றின் பெயர்களை பூரணியும் ஜெகதீஷும் சொல்லிவிடுவார்கள். தொலைவில் சோளக்காடுகளினூடே தார்ச்சாலை வளைந்து சென்றது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை சோளக்காடுகள் பரந்து விரிந்திருக்கும். அங்கங்கு சாளைகளின் ஓட்டுக்கூரைகள் மட்டும் சிவப்பு முதுகுகள் போலத் தெரியும்.

வீடு சோளத்துல முழுகிடுச்சு என்பான் ஜெகதீஷ். ஜெகதீஷ் பொளியிலும், பள்ளத்திலும் ஓடித் திரிவான். பூரணி பூப்போட்ட சட்டையும் பாவாடையும் அணிந்து அவன் பின்னாலேயே சென்று கொண்டிருப்பாள். அப்பனும், அம்மாவும் வாய் பேசாமல் வேலையில் ஆழ்ந்திருப்பார்கள்.

சொந்தக்காரர்களிலேயே பூரணி வித்தியாசமாகத் தெரிவாள். இந்தப்

பக்கங்களில் வழக்கமில்லாத சிவப்பு கலந்த வெண்மை நிறம். நேரான சிறிய மூக்கு. சற்றே பழுப்புத் தெரியும் பெரிய கண்கள். எண்ணெய் மட்டும் தேய்க்காமலிருந்து விட்டால் கூந்தலில் ஒரு பொன்னிறம் தெரியும். அம்மா வகையில் ஏதோ ஒரு தாத்தா கோவை காந்திபார்க் பக்கத்திலிருந்து ஒரு கொங்கணி பிராமணப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து விட்டாராம். அந்தப் பாட்டி வெள்ளைக்காரிபோல அப்படி ஒரு சிவப்பாம். ஆனால் பல் மட்டும் தேங்காய் துருவி போலிருக்குமாம்.

தான் காணாத அந்தப் பாட்டியின் நிறம்தான் பூரணிக்கு வந்திருக்கிறது என்று அம்மா சொல்லிக் கொள்வாள். அவளுக்கு அதில் கொஞ்சம் பெருமை என்றாலும் ஊரில் வித்தியாசமாகத் தெரியக் கூடாது என்று எண்ணெய் போட்டுப் படிய மகளுக்குத் தலைவாரி விடுவாள். அந்தப் பாட்டி போல பல் துருத்திவிடப் போகிறது என்று வேறு பயந்து கொண்டிருந்தாள். ஆனால் மகளுக்கு முத்துப் போன்ற அழகான பற்கள் முளைத்தன. மகள் வடிவழகியாக மலரப் போகிறாள் என்பது அம்மாவுக்கு பூரணியின் பத்து வயதிலேயே தெரிந்து விட்டது.

அப்போதுதான் லீவுக்கு ரங்கன் வீட்டுக்கு வந்திருந்த பாஸ்கர் அறிமுகமானான். ஒருநாள் பூரணி புளியங்காய் பறிக்க தோப்புக்குப் போயிருந்த போது அவன் அங்கே உண்டி வில்லுக்குக் கிளை தேடிக்கொண்டிருந்தான். அவனுக்கும் பூரணியின் வயதுதான் இருக்கும். தோட்டத்துக்காரியான பூரணி அவனை விரட்டியிருக்க வேண்டும். அவனும் ஓடியிருக்க வேண்டும். ஆனால் பூரணியும் விரட்டவில்லை. அவனும் ஓடவில்லை. பூரணியைப் பார்த்து தைரியமாகச் சிரித்தான். பத்து வயது பூரணிக்குத் தோட்டத்துக்காரி அந்தஸ்த்தை அவன் கொடுக்கவில்லை போலிருக்கிறது.

“புளிங்கா அடிக்கறயா?” என்றாள்.

“ஆமா”

“எங்க ஆத்தா பாத்தா...” பூரணி மிரட்டினாள்.

“ஒரு ரெண்டு காய் பறிச்சா என்ன ஆயிரும்?” அவன் சிரிப்புடன்

கேட்டான். பூரணிக்கு அந்த துறுதுறுப்பான முகத்தையும் பளிச்சென்ற சிரிப்பையும் பிடித்துவிட்டது.

“செரி... ரெண்டே ரெண்டு காய் புடிங்கிக்கோ”

அவன் ஒரு கிளையில் தொத்தி ஏறி காய்களைப் பறித்துத் தனக்கு சிலதை வைத்துக்கொண்டு மீதியை அவளிடம் நீட்டினான்.

“எங்க தோட்டத்துக் காய எனக்கே குடுக்கறயா?”

அவன் அதற்கும் சிரித்தான்.

இரண்டு பேரும் நட்பாகிவிட்டனர். பள்ளத்தோரம் பூரணி குடும்பத்தின் பழைய வீடு இருந்தது. இப்போது அது இடிந்து சிதிலமாகிக் கிடந்தது. அங்கே யாரும் போவதில்லை. மூன்று தலைமுறை வாழ்ந்த வீட்டில் குடியிருக்கக் கூடாது என்று ஒரு ஐதீகம். அல்லது வேறு ஏதோ காரணம். தாத்தா இந்தப் பரம்பரை வீட்டை விட்டுவிட்டு தோட்டத்தின் உள்ளே இப்போது இருக்கும் வீட்டைக் கட்டிக்கொண்டார். பழைய வீடு ஆளில்லாமல் பாழடைந்து விட்டது. அது உருளீஸ் ஓடு வேய்ந்த கூரை என்பதால் மாடி வீடு என்பார்கள். அதன் மேல் மங்களூர் ஓடு வேய்ந்த ஒரு மாடி அறையும் இருந்தது.

கீழே இருக்கும் கூடத்தில் ஓணான்களும், பூனைகளும் மேலும் சகலவிதமான ஜீவராசிகளும் இருக்கும். உள்ளே கால்வைக்க முடியாது. ஒருநாள் பாஸ்கர் சிதிலமான படிக்கட்டுகளில் தாவி ஏறி மேல்மாடிப் போய்விட்டான். அறை சிதைந்து கிடந்தாலும் முன்னாலிருந்த மொட்டை மாடி அழகாக இருந்தது. பூரணியும் எப்படியோ அவன் கையைப் பிடித்து ஏறிவிட்டாள். மாடியில் காற்று பிய்த்துக் கொண்டு போனது. இருவரும் கைப்பிடிச் சுவருக்குக் கீழே ஒளிந்துகொண்டு வேடிக்கை பார்த்தார்கள். கண்ணுகெட்டியதூரம் சோளக் காடுகள். வறண்டு போன பள்ளம் பாம்பு போலப் படுத்துக் கிடந்தது. தொலைவில் சாலை கருப்பு ரிப்பன் போல மேடு பள்ளங்களில் ஏறி இறங்கிச் சென்று மறைந்தது.

அன்றிலிருந்து அந்த இடம் தங்களுக்கே தங்களுக்கான மாளிகை போலாகிவிட்டது இருவருக்கும். பாஸ்கர் மதுரை வீரன் கூத்தை ஆடிக் காட்டுவான். பூரணி ராஜா ராணி கதைகளை ரசனையோடு சொல்வாள்.

பூரணி வேறு எங்கோ போவதாகச் சொல்லிவிட்டு பாஸ்கரின் மாமா ரங்கன் வீட்டுக்கு வந்து விடுவாள். எப்பொழுதாவது பாஸ்கரும் பூரணி வீட்டுக்கு வருவான். அவனால் உள்ளே வர முடியாது. பூரணியின் அப்பா சிலபோது முன்னே நின்றிருப்பான்.

ஒரு சின்ன விழிப்பு. பின்பு பூரணிக்கண்ணு என்று ஒரு அழைப்பு. அப்புறம் அப்பா தன் வேலையைப் பார்க்கப் போய்விடுவான். அலட்சியம் என்று சொல்ல முடியாது. வெறுப்பும் கிடையாது. ஏன் வெறுக்க வேண்டும். வெறுக்கும் அளவுக்குப் பெரிய ஆளெல்லாம் இல்லை இந்தப் பையன். அவ்வளவுதான். சில போது சோடிக்காரனப் பாரு என்று கிண்டல் கூடச் செய்வான். ஆனால் ரங்கன் வீட்டில் எல்லோருக்கும் பயம் இருந்தது.

“இந்தப் புள்ள எதுக்கு இவடத்தால வருது?”

ஒவ்வொரு லீவிலும் பாஸ்கர் பூரணிக்காகவே மஞ்சேரி வந்து விடுவான்.

அத்தைக்கு எழுதிங்கு சீர் செய்த போதுதான் பூரணிக்கு அவள் வேறு, அவன் வேறு என்பது தெரிய வந்தது.

“எழுதிங்குன்னா என்னம்மா?” என்றாள் பூரணி.

“அதொரு சடங்கு கண்ணு. அதைப் பண்ணிப் போட்டுத்தா பசங்களுக்குக் கலியாணம் பண்ணோணும்” என்றாள் அம்மா உற்சாகமாக. வீட்டில் விஷேஷங்கள் நடப்பதும் உறவினர்கள் வருவதும் அம்மாவுக்குப் பிடிக்கும். வெளியுலகத் தொடர்பில்லாத வாழ்க்கையில் கொண்டாட்டங்கள் மிக முக்கியமானவையாக இருந்தன.

தாத்தா ஊரில் முக்கியமான அருமைக்காரர். சடங்குகளைச் சரியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். மகளுக்கு எழுதிங்கு செய்து வைப்பது தனது கடமை என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. அப்பா இதெல்லாம் இத்தனை அவசியமா? இப்போதெல்லாம் இதைச் செய்கிறார்களா? என்று அலட்சியமாகக் கேட்பான். ஆனால் தாத்தாவும் பாட்டியும் பிடிவாதம் பிடித்தார்கள். அத்தைக்கும் ஆசைதான்.

ஒரு கல்யாணத்தைப் போலவே வீடு தயாராகிக் கொண்டிருந்தது. சொந்தங்களெல்லாம் முன்பே வந்து குவிந்து விட்டன. அத்தைக்கு இரண்டு மகன்கள். மூத்தவனுக்குக் கல்யாணம் ஆக இருந்தது. அதற்கு முன் எழுதிங்கு செய்ய வேண்டும் என்றுதான் இந்த ஏற்பாடு. அத்தையின் முகம் பூரித்துப் போயிருந்தது. எப்போதும் அத்தை சிரித்த முகமாக இருப்பாள். இப்போது இன்னும் சந்தோஷம் அந்த மஞ்சள் பூசிய சதுர முகத்தில் தாண்டவமாடியது. சுண்டுவிரல் அளவுக்குப் புது தாலிக் கயிறு, அரக்கு கலர் பட்டுப் புடவையில் இருந்த அத்தை பூரணியை இழுத்து மடியில் உட்கார வைத்துக்கொண்டாள். "கொஞ்சம் முன்னால பொறந்திருக்கலாமில்ல. கொத்திட்டுப் போயிருப்பனே" என்று கொஞ்சினாள்.

அத்தையை திருப்பூருக்கு அருகே இருக்கும் சோமனூருக்குக் கட்டிக் கொடுத்திருந்தார்கள். விஷேச நாட்களில் வாயெல்லாம் சிரிப்பாக வேகுவேகென்று ஓட்டமும் நடையுமாக பிறந்த வீட்டுக்கு வருவாள். வந்தவுடன் யாருடனும் பேச மாட்டாள். காட்டுக்குள் போய் மரம் மட்டைகள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்ப்பாள். புளியந்தோப்பைப் பார்ப்பாள். மாடு கன்றுகளைத் தடவிக் கொடுப்பாள். பிறகுதான் நிதானமாக உட்கார்ந்து பேசவும், பூரணியைக் கொஞ்சவும் தொடங்குவாள். இரவு முற்றத்தில் உட்கார்ந்து கதைகதையாகச் சொல்வாள். எல்லாம் அவள் பிறந்த வீட்டில் இருந்தபோது நடந்த கதைகள். அதைக் கேட்கும் போதெல்லாம் அத்தை இன்னும் மனதளவில் இங்கேதான் இருக்கிறாள் என்று தோன்றும். இது தங்கள் வீடல்லவா? இவளுக்கு இங்கே என்ன சொந்தம் என்று சிலபோது பொறாமையும் வரும். அத்தை முதலில் இங்கேதான் இருந்தாள் திருமணம் ஆனதும் போய்விட்டாள் என்பது அவள் மனதில் பதியவே மாட்டேனென்றது.

"ஏனத்த இங்கியே இருந்திருலாமில்ல?" சில்லென்று குளிர்ந்த வானில் விண்மீன்கள் ஒளிவீசிக் கொண்டிருந்த ஒரு இரவில் பூரணி கேட்டாள்.

"அதெப்புடி கண்ணு?" என்றாள் அத்தை. அவள் விழிகள் எங்கோ வானத்தில் நிலை குத்தியிருந்தன. அத்தை நல்ல பணக்காரி. அவளுக்கு

வருத்தமே இல்லை என்பாள் அம்மா. ஆனால் ஏதோ ஒரு ஏக்கம் இருப்பதுபோல அவளைப் பார்க்கும் போதெல்லாம் பூரணிக்குத் தோன்றும்.

“ஆனா ஏன் அத்த மூஞ்சி சில சமயம் என்னவோ மாதிரி இருக்குது?”

“அதப்புடித்தே இருக்கும்” அம்மா சொல்லிவிட்டுப் போய்விடுவாள்.

அன்று மாலை மாலை ஏழுமணிக்கு அத்தையின் எழுதிங்கு சடங்குகள் தொடங்கின. நல்லாசாமியை அருமைக்காரராக அழைத்திருந்தனர். அவர் தாத்தாவுக்கு நண்பர். விரல்கள் முடிச்சு முடிச்சாக உரமேறி இருந்தாலும் முகத்தில் ஒரு அமைதியும் சிரிப்பும் எப்போதுமிருக்கும். செந்தாத்தா என்பார்கள். அவர் எப்போதோ சிவப்பாக இருந்தாராம். இப்போது எல்லாத் தாத்தாக்களையும் போலவே வெயிலில் அடிபட்டு செம்பு நிறத்துக்குப் போய் கருப்பாகவே மாறி விட்டார். கைகள் தீவைத்துக் கருக்கியது போல கருப்பாக இருந்தன. அவற்றில் அங்கங்கு நீள நீள நரை முடிகள் தூக்கிக் கொண்டிருந்தன. முகத்தில் கோடு கோடாக சுருக்கங்கள் தெரிந்தாலும் முகம் பளிச்சென்றிருந்தது. பட்டையாக விபூதி இட்டிருந்தார்.

அவர்தான் பந்தக்கால் நட்டார். ஐந்து படி தினைமாவில் நீர்விட்டுப் பிசைந்து அம்மிக் கல்போல சுருட்டி இரு கூராகப் பிளந்து நடுவில் ஒரு அச்சு வெல்லத்தை வைத்து மூடினார்கள்.

அம்மாவும், ஆத்தாவும் ஒரு புது மண்பானையைக் கொண்டு வந்து அதில் மூன்று படி நீர் விட்டார்கள். அதன் வாயில் குச்சிகளை குறுக்கும் நெடுக்குமாக வைத்து அதன் மீது இந்த மாவு உருண்டையை வைத்தார்கள்.

“புடச் சட்டி வைப்பா” என்றார் நல்லாசாமி.

இந்தச் சட்டிதான் புடச்சட்டி. அப்பா ஒரு துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு பயபக்தியுடன் வந்து அந்தப் பானையை எடுத்து அடுப்பில் வைத்தார். இன்னொரு புறம் மூலையில் கிடந்த ஏர்க்கால் கொழுவை நெருப்பில் காய்ச்சிக் கொண்டிருந்தார்கள்.

அத்தையை பந்தலில் நிற்க வைத்துத் தண்ணீர் ஊற்றினார்கள். பின்பு அழைத்து வந்து உரல் முன் நிறுத்தினார்கள். அப்பா இலந்தை முள்ளோடு வந்து குடை பிடித்தான். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கொழுவினைக் கொண்டு வந்து அத்தை அருகே வைத்து அதன் மீது மோரை ஊற்றினார்கள். சட சட வென்ற சத்தத்துடன் கொழு குளிர்ந்தது. அத்தை உரலைக் காலால் உதைத்துவிட்டு வீட்டினுள் சென்றாள்.

அதன் பின் ஒரே கேலியும் கிண்டலுமாக கொண்டாட்டமாகிவிட்டது. அம்மாவும், ஒன்றுவிட்ட சித்திகளும், பெரியம்மாக்களும் குழவிக் கல்லை எடுத்து அத்தையின் மடிமீது போட்டு அதன் மீது உட்கார முயன்றார்கள். அத்தை அவர்களைத் தள்ளி விட்டாள். ஒரு சித்தியைத் தள்ள இன்னொருத்தி உட்கார்ந்தாள். பின்பு புளியங்கொம்பைப் போட்டு அத்தையைத் தாண்ட சொன்னார்கள். முதுகில் செஞ்சாந்திட்டார்கள்.

முற்றத்தில் விருந்து நடந்தது. அத்தையும் சாப்பிட்ட பின்பு கிணற்று மேட்டில் சேரிக்காரர்களுக்குச் சாப்பாடு போடப்பட்டது. சோறு என்னவோ ஒன்றுதான். ஆனால் அவர்கள் குத்த வைத்தும், ஒருகளித்தும் பலவிதமாக உட்கார்ந்து அள்ளி வாயில் போட்டுக் கொண்டார்கள். தாங்களை விருந்தளிப்பவர்களுக்கு இணையானவர்களாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே கூனி குறுகி உட்காருவதாக அவளுக்குத் தோன்றியது. அவர்கள் அப்படித்தான் உட்கார வேண்டும் என்று தன்னவர்களும் விரும்புவது தெரிந்தது. அவர்களுடன் பாஸ்கரும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் பூரணிக்கு என்னவோ போலாகிவிட்டது. அவனும் அவளோடு பேசவில்லை. அவளும் அவனை அழைக்கவில்லை. அவன் வேறு என்பதை பூரணி முழுமையாக உணர்ந்தது அன்றுதான். ஏன்?

விருந்துக்கு வந்திருந்த சிறுவர்களும், சிறுமிகளும் தோட்டம் முழுவதும் ஓடியாடிக் கொண்டிருந்தனர். பூரணிக்கு மனதில் ஏதோ பெரும் சுமையை வைத்தது போலாகிவிட்டது. அவளால் உற்சாகமாக விளையாட்டில் கலந்துகொள்ள முடியவில்லை.

சிலர் ஊருக்கு வெளியே இருக்கிறார்கள் அவர்களிடம் நல்ல உடைகள் இல்லை. அவர்கள் வீடுகளும் குடிசைகளாக இருக்கின்றன.

அவர்களைப் பேர் சொல்லிக் கூடக் கூப்பிடலாம். திட்டலாம். சிலபோது அடிக்கலாம். அவர்கள் பதிலுக்கு எதுவும் செய்ய மாட்டார்கள். இதெல்லாம் வழக்கம்தான். ஆனால் பாஸ்கர்...

மகள் முகம் வாடியிருப்பதை அம்மா கண்டுபிடித்து விட்டாள்.

“ஏண்டி ஆரோடயாவது சண்ட கட்டீட்டயா?”

“இல்ல”

“பொறகு ஏன் மூஞ்சி இப்புடி இருக்குது?”

“அவீலையும் உள்ள கூட்டி வெச்சுச் சோறு போட்டா என்ன?”

“உங்கப்பங் கேட்டா முதுகுத்தோல உரிச்சுப் போடும்.” என்றாள் அம்மா. அப்புறம் என்ன நினைத்தாளோ பூரணியை அணைத்துக்கொண்டு தலையைத் தடவிக் கொடுத்தாள்.

“நம்மூட்டுக்கு ஒறம்பொறயல்லாம் வந்திருக்கிறாங்க இல்ல கண்ணு. நீதான கெவனிக்கோணும். இந்தா, தண்ணி கொண்டு போய்க் குடு... வெத்தல எடுத்து குடுபோ சாமி....”

பூரணி சரியென்று தலையாட்டி விட்டு ஓடிவிட்டாள். எல்லாவற்றிலும் முக்கியமான சடங்கு அதிகாலையில் தொடங்கியது. புடச்சட்டியில் வெந்த மாவை எடுத்து வந்து வாசற்படியில் வைத்தார்கள். அருமைக்காரியும் எழுதிங்குக்காரியும் கோடாரியால் அந்த மாவை இரண்டாகக் கீறினார்கள். அத்தையின் முகம் முத்து முத்தாக வேர்த்திருந்தது. அந்தக் குளிர்க்காற்றில் ஏன் அத்தை முகம் இப்படி வேர்த்திருக்கிறது என்று பூரணி வியந்து போனாள். அத்தை முகத்தில் பயமும் தென்பட்டது. அருமைக்காரி மாவப் பிளந்த இடத்தை இன்னும் விரித்து உள்ளே கைவிட்டாள். உள்ளே வைக்கப்பட்ட வெல்லம் முழுமையாக அப்படியே இருந்தால் இரண்டு குடும்பத்துக்கும் நல்லது. வெல்லம் கரைந்து போயிருந்தால் குடும்பமும் கரைந்து போய்விடும்.

‘எல்லோரும் நன்றாகத்தானே இருக்கிறோம். குடும்பம் எப்படி கரைந்து போகும் அத்தை ஏன் பயப்படுகிறாள்?’ என்று பூரணிக்குப் புரியவில்லை. ‘ஒருவேளை துளசிக்காட்டுத் தோட்டத்துக்காரர்கள் நிலத்தை

விட்டுவிட்டு டீ கடை வைக்கப் போனது போல ஆகிவிடும் என்று நினைக்கிறார்களா? ஆனால் துளசிக்காட்டு மாமா குடிகாரர். குடித்துவிட்டுப் படுத்துக் கிடப்பார். அவர்கள் கிணற்றில் தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. நமக்கு என்ன? அத்தைக்கு என்ன?'

சட்டென்று அத்தையின் முகம் மலர்ந்தது. வெல்லம் முழு உருண்டையாக அருமைக்காரியின் கையில் தெரிந்தது. "ஆகி வந்த குடும்பம் நல்ல இருப்ப!" என்று அருமைக்காரி வாழ்த்தினாள்.

வாழ்த்து பலிக்கவில்லை. அத்தையின் மகன் திருமணத்திற்குப் பிறகு திருப்பூர் சென்று டையிங் கம்பெனி வைத்துப் பெரிய நட்டத்தை ஏற்படுத்தி விட்டான். இப்போதெல்லாம் எந்தத் தொழிலில் இறங்கினாலும் நட்டம்தான் வருகிறது. அத்தை அடிக்கடி வரத் தொடங்கினாள். கடன் கேட்டு என்று பூரணி புரிந்து கொண்டாள்.

பூரணிக்கு பனிரெண்டு வயதாகியிருந்த போது தாத்தா தளர்ந்து போய்விட்டார். அவரது உலகம், விவசாயம் எல்லாம் மாறிவிட்டன. ஏரியில் வனத்துறை கருவேல மரங்களை நட்டதிலிருந்தே பிரச்சினை தொடங்கிவிட்டது. மண் எடுக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நினைத்தபடி மண் எடுக்க முடியவில்லை. தவிர மழை இல்லாததால் வண்டல் மண்ணும் படியவில்லை. மாடும் இல்லை. பண்ணையத்துக்கு ஆளும் இல்லை. கூலிகொடுத்துக் கட்டுப்படி ஆகவில்லை.

கோவைக்கும், திருப்பூருக்கும் குடிபெயர்ந்தவர்கள் அரசு வேலைகளுக்குப் போனவர்கள், பிள்ளைகளை மென்பொறியாளர்களாக்கியவர்கள் அள்ளிக் குவித்துக் கொண்டிருந்தார்கள். திருமணங்கள் கோவை ஈரோடு சாலையில் உள்ள குளிரூட்டப்பட்ட பெரும் பெரும் மண்டபங்களில் நடந்தன. ஐந்துவகை இனிப்புகள், ஐந்துவகை ஐஸ்கிரீம்கள், ஐந்துவகை பீடாக்கள் என்று பணம் வழிந்தது. மேடையில் அருமைக்காரரை நாற்காலிபோட்டு உட்கார வைத்துக்கொண்டு பிராமணர்களை வைத்து வேதம் ஓதி திருமணம் நடத்தும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. திருமணங்களில் தொண்ணூறு சதவீதம் நண்பர்களே இருந்தனர். மேடைக்கு கீழே நீண்ட வரிசையில் அழகாக பேக் செய்யப்பட்ட பரிசுப் பொருட்களோடு கூட்டம் நின்றது.

ஒருமணி நேரத்தில் மண்டபம் வெறிச்சோடியும் போனது. தனது காலம் முடிந்து விட்டது என்று அவருக்குத் தோன்றத் தொடங்கிவிட்டது.

ஒருநாள் படுத்து வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்த தாத்தா எழுந்து உட்கார்ந்தார். மகனையும், மனைவியையும், மருமகளையும் அழைத்தார்.

“இந்த திலகா நெலம செரியில்ல. பொளிஞ்சு போயிட்டாங்களாட்டிருக்கு. இருக்கற நெலமைல பொறந்தூட்டு சொத்துல பங்கு கேட்டுட்டு வந்தாலும் வந்திருவா. நா கண்ண மூடறதுக்குள்ள சொத்துக்கு ஒரு ஓர்சல் செஞ்சு வெக்கோணும். பாடுபட்டுச் சேத்தது. மருமகங் கைக்குப் போயிரக்கூடாது பாரு”

சொத்தின் ஒரு பகுதி தாத்தா சொந்தமாக வாங்கியது. அதற்கு பத்திரம் இருந்தது. சுயார்ஜித சொத்துக்கு யாரும் உரிமை கொண்டாட முடியாது. யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஈரோடு வக்கீல் அந்த சொத்தை தான செட்டில் மெண்ட் பத்திரமாக மகனுக்கு எழுதிக் கொடுத்துவிட்டால் பிரச்சினை இல்லை, மகளால் நெருங்கவே முடியாது என்றார். பிரச்சினை பூர்வீகமாக வந்த மேட்டாங்காட்டில் வந்தது. எட்டரை ஏக்கர் மேட்டாங்காட்டுக்கு பத்திரம் இல்லை. பட்டா மட்டும்தான்.

சட்டப்படி பூர்வீக சொத்தில் பெண்களுக்குப் பங்கு இருக்கிறது. ஆனால் ஏற்கெனவே பாகம் பிரிக்கப்பட்டு ஆண் வாரிசுகள் அனுபவித்து வந்தால் பெண்கள் புதிதாக பாகம் பிரித்துக் கேட்க முடியாது என்றது அதே சட்டம். பூர்வீக சொத்தான மேட்டாங்காடு இன்னும் பாகம் பிரிக்கப்படவில்லை. எனவே அதில் அத்தைக்கு பங்கு கேட்க உரிமை இருக்கிறது. இதத் தடுக்க தாத்தா, பாட்டி, தாத்தாவின் நண்பர்கள், வக்கீல், அப்பா, அம்மா எல்லோரும் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர். பூர்வீக சொத்தைப் பஞ்சாயத்துத் தலைவரின் செல்வாக்கைப் பயன்படுத்தி சொஸைட்டியில் அடமானம் வைத்து அப்பாவுக்கு வர இருக்கும் சொத்தில் நீண்ட நாள் திட்டமான கிணற்றில் போர் போட்டு தென்னந்தொப்பு செய்து விடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

எல்லாப் பத்திரமும் எழுதி முடித்து, சொஸைட்டியில் கடனும் வாங்கிய பின்புதான் அப்புச்சிக்கு அக்கடாவென்றிருந்தது. “இனி கட்ட

நிம்மதியா வேகும்” என்றார்.

3

“கண் சிவந்தால் மண் சிவக்கும்-னு ஒரு படம் வந்துதே பார்த்திருக்கியா” முன்னாள் எம்.எல்.ஏ மாமா ஒரு குறுஞ்சிரிப்புடன் மனோகரனிடம் கேட்டார்.

அவரது முகம் பேச்சு எல்லாம் வழக்கமாக சீரியஸ்ஸாகத்தானிருக்கும். அவர் சிரிப்பது அபூர்வம். சிரிக்கும்போது அதில் தெரியும் குறும்புக்காகவே மனோகரன் அவர் சிரிப்புக்குக் காத்திருப்பான். பல முக்கியமான பொறுப்புகளில் இருந்தவரும் கூர்மையான அறிவும், அனுபவமும் படைத்தவருமான அவரது ஒவ்வொரு சொல்லையும் மனோகரன் பயபக்தியுடன் கேட்டுக் கொண்டிருப்பான். ஒருவிதத்தில் வெளியுலகைப் பார்க்க அவன் கண்களைத் திறந்து விட்டவர் அவர்தான்.

“இல்லீங்களே” அவன் அசட்டுச் சிரிப்புடன் பதிலளித்தான்.

“அதெல்லாம் பாக்காத. மரத்துக்கடில கம்முனு உக்காந்து பொத்தகமாப் படி. அது.... கீழ வெண்மணி சம்பவம் பத்தி எடுத்த படம். ஆனா கிராமத்துல என்ன பிரச்சினைன்னே படம் எடுத்த ஆளுக்குப் புரியல”

“கம்யூனிஸ்டுக்காரங்களுக்குத் தெரியலையா?”

“அவனுக்குத் தெரிஞ்சிருக்கும். ஆனால் படமெடுத்த பையனுக்குத் தெரியலையே. ஆனா தலைவரோட உரிமைக்குரல் பாத்திருக்கியா?”

“ஹி ஹி டி.வில் கொஞ்சம்...”

“அந்தக் காலத்துல சிறு வெவசாயியோட பிரச்சினையே நெலத்தையும், பொம்பளைகளையும் உங்கப்பனமாரி ஜமீந்தாருக கிட்ட இருந்து காப்பாத்தறதுதேன். அது அப்புடியே படத்துல இருக்கும். தலைவருக்கு எல்லாந் தெரியும்”

சொல்லிவிட்டு மாமா சிரித்தார். “படத்துல சண்டை போட்டு ஜமீந்தார ஒழிப்பார். ஆனா நேர்ல தலைவர் கம்யூனிஸ்ட்காரன் வேல பாக்கவே மாட்டார். சண்டையே போட மாட்டார்”

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எல்லாவற்றிலும் எம்.எல்.ஏவாக இருந்து விட்டு தாக்குப் பிடிக்க முடியாமல் கிராமத்துக்குத் திரும்பிய மாமா சாதிச் சங்கம் தொடங்கினார். உண்மையில் அது விவசாயிகள் சங்கமாக இருந்திருக்க வேண்டும். அதற்கான தேவை இருந்தது. ஆனால் சாதிச் சங்கம் இருந்தால் தனது கட்சித் தொடர்பையும் காத்துக்கொண்டு தனி அமைப்பையும் காத்துக்கொள்ளலாம் என்று நினைத்தார். விவசாயிகள் சங்கம் கட்சியுடனும் ஆட்சியுடனும் முரண்பாட்டைக் கொண்டுவரும் என்ற எண்ணமும் அவருக்கு இருந்தது.

கிராமத்தில் அதற்கான ஆட்களைத் தேடியபோது நிதானமான பொறுமையான மனோகரனை அவருக்குப் பிடித்துவிட்டது.

“வா கண்ணு பேசலாம்” என்று அழைத்தார்.

மனோகரன் தனது வழக்கமான கூச்சத்துடன் போகாமல் இருந்தாலும் கூட “ஏம்ப்பா வரமாடேங்கறே, உங்கம்மாகிட்ட போனக் குடு” என்று உரிமையுடன் கடிந்து கொள்வார். மனோகரனுக்கு அந்த வெள்ளையும் சொள்ளையுமான கூட்டத்துடன் முதலில் ஒட்டவில்லை. ஆனால் தலைவர் அவனை ஒரு செயலர் போல நடத்தத் தொடங்கியதும் வாழ்க்கையிலேயே முதல்முதலாக ஒரு கூட்டத்துடன் ஒன்றிப் போனான். இது தனக்கான இடம் என்று தோன்றத் தொடங்கியது.

வெட்டுவோம் குத்துவோம் ஆட்களுக்கு மாற்றாக தலைவர் மனோகரனைப் பயன்படுத்தத் தொடங்கினார். ஒரு இடத்துக்கு மிரட்ட ஒரு முரடனை அனுப்பினால் கூடவே அமைதியாகப் பேசிப் பிரச்சினையைத் தீர்க்க மனோகரனையும் அனுப்புவார்.

வாய்க்கால் பாசனப்பகுதி விவசாயிகளுக்கு சங்கம் இருந்தால் மட்டுமே பாதுகாப்பு என்பதை எல்லோரும் உணர்ந்திருந்தனர். போலீசும் பொதுப்பணித்துறை அதிகாரிகளும் தண்ணீர்த் திருட்டைத் தடுக்க முடியவில்லை. சொல்லப்போனால் அவர்கள் கண்முன்னே தண்ணீர் திருடப்பட்டது. ஒரு ஆளுங்கட்சித் தலைவர் வாய்க்கால் ஓரம் ஒரு ஏக்கர் நிலம் வாங்கினார். சைடு போர் போட்டு வாய்க்காலில் இருந்து மோட்டர் வைத்துக் கிணற்றை நிறைப்பார். பின்பு கிணற்றிலிருந்து இரண்டு

கிலோமீட்டர் தொலைவிலிருந்த தனது தோட்டத்துக்குத் தண்ணீரைக் கொண்டு செல்வார். பைப் சாலையோரம்தான் இருந்தது. ஆனால் யாரும் கண்டு கொள்ளவில்லை. இருந்தாலும் திடீர் ரெய்டு நடத்தி பலர் மீது வழக்கும் போடுவதும் நடந்துதான் வந்தது. அதோடு வேறுபல விஷயங்களுக்கும் அதிகாரிகள் மூலமாக அரசுடன் தொடர்பு கொள்ளவும் சங்கம் தேவையாக இருந்தது.

சங்கத்துக்கும், போலீசுக்கும் நல்ல ஒத்துழைப்பு இருந்தது. மனோகரன் தன்னால் மற்றவர்களை விட பிரச்சனைகளை ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும், சமாளிக்க முடியும் என்றுக் கண்டுகொண்டது அப்போதுதான். சமாளிப்பது என்பதன் பொருள் நுட்பமானது. நிலத் தகராறு, கோவில் தகராறு, கணவன் மனைவி தகராறு, சாதி, காதல் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் சிலவற்றைத் தீர்க்க முடியும். சிலவற்றைத் தீர்க்க முடியாது. அந்த இடங்களில் தீர்வு என்பது தள்ளிப் போடுவதுதான். அப்போதைக்குத் தள்ளிப் போட்டால் போதும். அது எப்படியோ இழுத்துப் பறித்துச் சரியாகிவிடும்.

தலைவர் வாக்கிங் போகும்போது மனோகரனுடன் பேசத் தொடங்குவார். “மக்களைப் புரிஞ்சுக்கணும்ப்பா” என்று அடிக்கடி சொல்வார்.

தலைவர் தனது திட்டம் என்ன என்று ஒரு போதும் பேசியதே இல்லை. அப்படியொரு திட்டம் இருந்ததா என்பதே மனோகரனுக்கு சந்தேகம்தான். அவர் இருந்த கட்சியின் உயர்மட்ட தலைமையில் மாற்றங்கள் வந்து கொண்டிருந்தன. தலைமையைச் சுற்றிப் புதுப்புது குழுக்கள் உருவாகிக் கொண்டிருந்தன. எனவே தனது இன்றியமையாமையை நிரூபிக்க தனக்கு ஒரு குழு வேண்டும் என்று கருதியிருக்கலாம். அல்லது தண்ணீர், விவசாயம், இடுபொருட்கள் பிரச்சினை, விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் இந்தப் பின்னணியில் இங்கே ஒரு அமைப்பு தேவைப்படுவதை மங்கலாக உணர்ந்திருக்கலாம்.

தலைவர் ஒரே ஒருமுறை இது பற்றி விரிவாகப் பேசினார். “பிராமின்ஸைப் பாரு. அதுல பல பிரிவு இருக்குது. அவங்க

அதையல்லாம் சமாளிச்சு ஒண்ணா நிக்கறாங்க. தங்களுக்குள்ளாற ஒத்துமையான கூட்டமா இருந்து வெளில இருந்து வர்ற நெருக்கடிய சமாளிக்க அவங்கதான் மொதல்ல பழகிட்டாங்க. தமிழ்நாட்டு பிராமின்ஸைப் பாத்துத்தான் மலையாளிகளும், மகாராஷ்ட்ரா பிராமின்ஸும் இதே மாதிரி குழுக்களா தங்களை அமைச்சுட்டாங்க. நம்மளும் அதைத்தான் செய்யோணும். நம்மாளுக இப்ப எல்லா எடத்துலையும் வந்துட்டிருக்காங்க. விவசாயம் பண்ணற அதே அளவுக்கு இன்ஜினீரிங் தொழில்லையும், பிசினஸ்லையும் இருக்கான். காலேஜ் வெச்சிருக்கான். பஸ் கம்பெனி லாரி கம்பெனி வெச்சிருக்கான். ஆஸ்பத்திரி வெச்சிருக்கான், காண்ட்ராக்ட் எடுக்கறான். ஆனா உள்ளூர் கவர்மெண்ட்ல செல்வாக்கு இல்லாம இதெல்லாம் காப்பாத்த முடியுமா? தாசில்தாரு, கலெக்டரு, வரி போடறவன்கிட்ட உக்காந்து பேச ஆளில்லாட்டி எல்லாஞ்சேந்து தின்னு போடுவானுக. சேர்ந்து நிக்கோணும். தனியா நிக்கறதுக்கு பதில் கூட்டமா நில்லு. கூட்டமா நிக்கறதுக்கு பதில் கையைப் பிடிச்சுட்டு நில்லு. ஜனநாயக நாடு, எல்லாரும் சமம்ன்னு சொல்றான். ஆனா எவன் கூட்டமா இருக்கானோ எவன் அமைப்பைப் புரிஞ்சிட்டிருக்கானோ அவந்தாப்பா ஆள முடியும்”

கூட இருந்தவர்கள் வயதில் மூத்தவர்கள், வெட்டுக்குத்துக்கு அஞ்சாதவர்கள் என்றாலும் ஏதோ பலவீனங்கள் இருந்தன. தங்களுக்குள் திட்டவட்டமாக ஒத்துப்போகவும், வெட்டிக் கொள்ளவும் அவர்களால் முடியவில்லை. தலைவன் வெட்டிவிடத் தெரிந்தவனாக இருக்க வேண்டும். ஒட்டிக்கொள்ளவும் தெரிய வேண்டும். மனோகரனுக்கு மனதுக்குள் இருந்த குற்ற உணர்ச்சி, தான் பணக்காரனா? ஏழையா? என்ற அடையாளச் சிக்கல் தலைமைக்கு மிகச் சரியாகப் பொருந்தியது. மனோகரனால் மற்றவர்கள் பேசுவதைக் கேட்க முடியும். உட்கார்ந்து பேச முடியும். யாரிடமும் முகத்தைத் திருப்பிக்கொண்டு போக முடியாது. யார் முகத்துக்கு நேரும் அடாவடியாகப் பேச முடியாது. தனது மென்மையான பேச்சும் குணமும் இப்படியொரு மரியாதையைப் பெற்றுத்தரும் என்பதை உணர்ந்தபோது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

அந்த நேரத்தில்தான் காட்பரீஸ் சாக்லேட் கம்பெனி விவசாயப் பல்கலைக் கழகத்தோடு சேர்ந்து காமட்சிபுரத்திற்கு வந்து சேர்ந்தது.

கோகோ கொட்டைகள்தான் சாக்லேட் செய்யப் பயன்படுகின்றன. கோகோ மரங்கள் மலைச்சாரலில் நீர்நிறைந்த செம்மண் பூமிகளில்தான் வளரும். அதற்கு நிழல் வேண்டும். தமிழ்நாட்டில் நீர்வளமுள்ள பகுதிகளில் தென்னந்தோப்புகளில் கோகோ பயிரிடலாமென்று கம்பெனி கண்டுபிடித்தது.

கம்பெனி கோக்கோ நாற்றுகளை விநியோகித்தது. வளர்ந்ததும் கோகோ கொட்டைகளைத் தாங்களே பெற்றுக் கொள்வதாக உறுதியளித்தது. தென்னை மரங்களின் ஊடாக கோகோ பயிரிடுவதால் களையெடுக்கவேண்டிய அவசியமில்லை. கோகோ இலைகளை உரமாகப் பயன்படுத்தலாம். கோகோ ஐம்பதாண்டுகள் வாழும். எனவே நீடித்த லாபமென்று விவசாயப் பல்கலைக்கழகம் பிரச்சாரம் செய்தது. நாற்றுகளை விற்பனையும் செய்தது. நேஷனல் ஹார்டிகல்சர் மிஷன் கோகோ விவசாயத்துக்குப் பெரும் ஊக்கமளித்தது. ஏக்கருக்கு 11,250 ரூபாய் மானியமும் வழங்கியது. வாய்க்கால் ஓரம் மனோகரன் கோகோ பயிரிட்டான். ஓரிடத்தில் வாய்க்காலுக்கும், தோப்புக்கும் நடுவே அரசு புறம்போக்கு நிலம் ஒன்றரை ஏக்கர் வால்போல் நீண்டிருந்தது. அதன் மீது மனோகரனுக்கு ஒருகண் இருந்தது. அதில் மனோகரன் கை வைத்தபோது யாரும் தடுக்க வில்லை.

கம்பெனிக்கு சங்கத்தின் ஆதரவு தேவைப்பட்டது. விவசாயிகளை அணுக, வியாபாரம் பேச உள்ளூர் ஆட்களின் அறிமுகம் தேவைப்பட்டது. சங்கம் உள்ளூர் அதிகார வர்க்கத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது. கம்பெனி கோவில் கும்பாபிஷேகத்துக்கு நிதியுதவி, பஸ் ஸ்டேண்ட் அமைப்பு, குடிநீர்த்தொட்டி கட்டுதல் என்று ஏதாவது சாக்கு வைத்து விழாக்கள் நடத்தியது. தங்கள் விழாக்களுக்கு சங்கத் தலைவர்களையும் அரசு அதிகாரிகளையும் அழைத்துத் தான் ஒரு அரசு அமைப்பு போலக் காட்டிக் கொண்டது.

கம்பெனி அதிகாரிகள் சங்கக் கூட்டங்களில் மனோகரனைக் கண்டுபிடித்து நட்புப் பாராட்டத் தொடங்கினார்கள். கூட்டங்களுக்கு அவனைத் தனியாக அழைப்பார்கள். ஆனால் மனோகரன் ஒருநாளும் வயதில் மூத்த தலைவர்களைத் தாண்டிப் போக முயன்றதில்லை.

“அண்ணந்தான் எல்லாம்” என்று அறிமுகப்படுத்துவான். தனது நாற்காலியைக் கொடுப்பான். இதையெல்லாம் தந்திரமாகச் செய்தான் என்று சொல்லமுடியாது. அவனது இயல்பே அதுதான். அவனால் விட்டுக் கொடுக்க முடியும். அடுத்தவரைப் புகழமுடியும். ஆனால் தனக்கு அது பதிலுக்குச் செய்யப்படாவிட்டால் அதை அவமானமாகக் கருதத் தொடங்கிவிடுவான். மனோகரனை அவமதித்தவன் அவனுக்குப் பரமவிரோதிதான்.

இந்த மரியாதை, பரம்பரை, படிப்பு எல்லாவற்றுக்கும் மேல் தலைமையை நிலைநாட்ட இன்னொன்று தேவைப்பட்டது.

அதற்கும் வழிவந்து சேர்ந்தது ரியல் எஸ்டேட் கண்ணுசாமி வடிவில்.

அந்தக் காலகட்டத்தில்தான் பூரணி குடும்பத்தின் வீழ்ச்சியும் தொடங்கியது. முன்பெல்லாம் பள்ளத்தில் அடிக்கடி வெள்ளம் வரும். வெள்ளம் வடிந்ததும் குட்டை குட்டையாகத் தண்ணீர் தேங்கியிருக்கும் பள்ளங்களில் மீன்கள் சிக்கி நின்றிருக்கும். போய்ப் பிடித்துக்கொண்டு வருவார்கள். ஆனால் இப்போதெல்லாம் பள்ளம் பெரும்பாலும் வறண்டே கிடந்தது.

சுற்றிலுமுள்ளவர்கள் தோப்பு செய்ததால் கிணற்றில் தண்ணீர் குறைந்து போனது. பூரணி வீட்டுக் கிணறு பிரம்மாண்டமானது. 28-க்கு 25 அடி நீள அகலம் கொண்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதிலேயே மூன்று ஏக்கரைத் தின்றது என்று அப்புச்சியும் அப்பத்தாவும் சொல்வார்கள். கிணற்றில் தண்ணீர் அடிஆழத்துக்கு இறங்கியது. பருத்தி விவசாயம் படுத்துப் போனது. அதற்கு வேலை செய்ய ஆட்கள் கிடைக்கவில்லை. சோளம் ராகி எதுவும் ஒழுங்காக வரவில்லை. திருப்பூரின் வளர்ச்சி கிராமங்களைக் காலி செய்து கொண்டிருந்தது. விவசாயம் படுத்துப் போனவர்களும், சேரி மக்களும் கூட்டம் கூட்டமாக திருப்பூரை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். ஏராளமான வீடுகள் காலியாக, கவனிப்பாரற்று பாழடைந்து போய்க் கொண்டிருந்தன.

ஊரில் தங்கியிருக்க தென்னந்தோப்பு மட்டுமே ஒரே வழி... கிணற்றில் போர் போட்டார்கள். முன்னூறு அடி... ஓராண்டு தாக்குப்பிடித்தது. பின்பு தண்ணீர் வற்றி விட்டது.

புதிதாக வைக்கப்பட்ட தென்னங்கன்றுகள் காய்வதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மீண்டும் போர் வண்டி வந்தது. காதைப் பிளக்கும் ஓசையோடு நிலத்தைத் துளைத்தது. நான்கரை இஞ்ச் போரில் தண்ணீர் ஊறி வந்தது. ஆனால் போதாது, இன்னும் இன்னும்... பாறைகளைப் பிளந்து போர் எண்ணூறு அடி ஆழத்துக்கு இறங்கியது. போரைச் சுற்றித் தண்ணீர் வழிந்து ஓடியது. ஒருமணி நேரத்துக்கு மூவாயிரத்து ஐநூறு ரூபாய் கொடுக்க வேண்டும். வண்டி பதினைந்து மணிநேரம் ஓடி இருந்தது. கணக்கு பீதியூட்டினாலும் தண்ணீர் வந்துவிட்டது மகிழ்ச்சியளித்தது. பங்காளிகள் வேடிக்கைப் பார்ப்பது போல வந்து

எத்தனை அடி என்று பார்த்துவிட்டுப் போனார்கள். யாரும் உண்மையில் தங்கள் போர் எத்தனை அடி ஆழம் என்று சொல்ல மாட்டார்களாம். ஒரு நூறு அடி ஐம்பது அடி குறைத்துத்தான் சொல்வார்கள். தண்ணீர் வரும்வரை போர் போடுவது என்றானபிறகு ஆழத்தை மறைப்பதில் என்ன பயன் என்று அப்பனுக்குப் புரியவில்லை. தரைக்கு மேல் சொந்தம் கொண்டாடினாலும் தரைக்குக் கீழே பங்காளிகளுக்குள் கடும் சண்டை நடந்து கொண்டிருந்தது.

போரை இரண்டு நாட்கள் விட்டுவிட்டு மண் செட்டானதும் மோட்டாரை இறக்கும் படி சொல்லிவிட்டுச் சென்றார்கள். பழைய மோட்டார் வேலைக்கு ஆகாது. எனவே அதிக பவர் கொண்ட புது மோட்டார் டெக்ஸ்மோ கம்பெனியில் இருந்து வந்து இறங்கியது.

புத்தம் புது வெள்ளைக் கலர் பைப்புகள், அதை இறக்க மஞ்சள் நைலான்கயிறு கோலாகலமாக மோட்டர் இயக்கப்பட்டது. தொட்டி நிரம்பி ஓடியது. பூரணி குடும்பம் பூரித்துப் போனது. மறுநாள் ராசிக்காரி என்ற விதத்தில் பூரணி சுவிட்ச் போட்டாள். பைப்பில் தண்ணீர் கலங்கலாக வந்தது. மண் துகள்கள் வெள்ளிபோல மின்னின. பொதபொதவென்று வந்த தண்ணீர் ஐந்து நிமிடத்தில் நின்று போனது. பிளம்பர் வந்து மோட்டாரில் சேறு அடைத்துக் கொண்டிருக்கிறது என்று விட்டு விட்டு சுவிட்ச் போட்டுப் பார்த்தான். அவன் போட்டதும் மோட்டார் ஓடியது.

பின்பு நின்று விட்டது. பிளம்பர் இரண்டு லெங்க்த் குறைத்தான். அப்போதும் இதே கதைதான். மீட்டர் மோட்டார் ஓடுவதைக் காட்டியது. மோட்டாரில் பிரச்சினை இல்லை. மின் இணைப்பில் சிக்கல் என்று சொல்லிவிட்டுப் போனான். எலெக்ரீஷியன் வந்து மின் இணைப்பில் சிக்கல் இல்லை என்றான். அவ்வளவுதான். மோட்டார் காலையில் ஒரு அரைமணிநேரம் ஓடும். ஒரு நாலுநாள் நிறுத்தினால் ஒருமணிநேரம் ஓடும். மழை வந்தால் ஓடும். இதை வைத்துப் பிழைத்துக் கொள்ள வேண்டியதுதான். கிணற்றிலிருந்து தொலைவில் இருக்கும் மரங்களை விட்டுவிடுவது என்று முடிவு செய்தார்கள். மரங்கள் அடி பெருத்து காய்கள் சிறுத்து பார்க்கவே பரிதாபமாக நின்றன.

பூரணி அப்பனுக்கு வேறு வழி தேட வேண்டிய நெருக்கடி வந்து

கொண்டிருந்தது. விசைத்தறி போட முயன்றான். திருப்பூர் போய் கம்பெனிகளில் அதிக வேலை இருக்கும் போது தையல் வேலை வாங்கிவந்து தைக்கும் தொழில் தொடங்க முயன்றான். எதுவும் சரிவரவில்லை.

திருப்பூருக்கு வடக்கே இருக்கும் விவசாயிகள் விவசாயம் பொய்த்ததும் செய்வதைப் போலத் தானும் கோவைக்குப் போய் வட்டிக்கு விட்டான். கோவை வாழ்க்கை போராட்டம்தான். தென்மாவட்டத்துக்காரர்களும், வடமாநிலத்துக்காரர்களும், மலையாளிகளும் இறைந்து கிடந்தார்கள். யாரை நம்புவது யாரை நம்ப முடியாது என்று புரிந்துகொள்ள முடியவில்லை. கடன் வாங்க சர்க்கரையாகப் பேசினார்கள். ஓடிப் போனார்கள். சாதி பார்த்துக் கடன் கொடுக்க முடியவில்லை. பெரிய சிக்கல்தான். அடுத்து கேரளாவுக்குப் போவது என்று அப்பன் திட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

அப்பனிடமிருந்து இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை காலை ஏழுமணிக்குப் போன் வரும்.

“ஜெகதீசு ஒளப்பீட்டிருக்கானா?” என்பதுதான் முதல் கேள்வி. குடும்பத்தின் மொத்த நம்பிக்கை ஜெகதீஷ் என்றானது.

வீட்டில் தாத்தா இருந்தார் என்றாலும் ஜெகதீஷ் தன்னைக் குடும்பத்தலைவனாகக் கருதிக்கொண்டான். வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர தாத்தா குடும்ப விவகாரங்களில் எந்தத் தலையீடும் செய்வதில்லை.

ஜெகதீஷுக்கு இருபது வயது. படிப்பை நிறுத்திவிட்டான். தோட்டத்து வேலையில் முழுதாக இறங்கிவிட்டான். ஆனால் மாலை வேளைகளில் கூட்டாளிகளுடன் சேர்ந்து சுற்றித் திரியவும் தொடங்கினான். எல்லாப் பெண்களையும் உற்று உற்றுப் பார்க்கும் வயது. பேச்செல்லாம் பெண்களைச் சுற்றியே இருந்தது. சதா சர்வ நேரமும் கூட்டாளிகள் பெண்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். சந்தைக்கு வரும் பெண்கள், கோவிலுக்கு வரும் பெண்கள், பஸ்ஸில் வரும் பெண்கள்... ஜெகதீஷும் அப்படித்தான்.

அந்த நேரத்தில்தான் மஞ்சப் பைகள், நோட்டிஸ்களோடு இண்டிகா கார்கள், டாடா சுமோ ஜீப்களில் பங்காளிகள் கிராமம் கிராமமாக, தோட்டம் தோட்டமாகப் போய் சங்கத்துக்கு ஆள் சேர்க்கத் தொடங்கினார்கள். ஜெகதீஷ் சங்கத்தில் சேர்ந்ததும் ஆளே மாறிவிட்டான்.

அவனுக்குத் தன் வீட்டுக்கு வரும் நண்பர்கள் தங்கையை நோட்டம் விடுகிறார்களோ என்ற சந்தேகம் இருந்தது. அம்மாவைப் பார்க்கிறார்களோ என்று கூடப் பதறிப் போவான். இந்த நினைப்பால் சிடுசிடுப்புக்காரனாக மாறிவிட்டான். குடும்பத்தோடு எங்கேயும் வர மாட்டான். தங்கையையும் தனியாக எங்கும் போக விடமாட்டான். தெருவில் எந்தப் பையனையும் பார்த்தால் பேசி விடக்கூடாது. யாராவது பேசினாலும் நின்று பதில் சொல்லக்கூடாது. அண்ணனுக்குத் திடீரென்று என்னவானது என்று பூரணிக்குப் புரியவில்லை. பேசினால் என்னவாகிவிடும்? அவனைக் கண்டாலே பூரணி பயப்படத் தொடங்கினாள்.

“இவனுக்கு என்னத்துக்கு இத்தன கோவமுஞ் சீராட்டும்?” என்று அம்மா வெளிப்படையாகவே சொல்வாள். அம்மா மாராப்பை ஒழுங்காகப் போடாமல் ஏதாவது வேலை செய்து கொண்டிருந்தால் அவனுக்குக் கோபம் வரும். அதை வெளியே சொல்ல முடியாமல் சண்டை போடுவான்.

ஒருநாள் “ஒழுங்கா சீலையக் கட்டு” என்று சொல்லியே விட்டான். அதன் பிறகு அம்மா கவனமாக இருக்கத் தொடங்கினாள். பூரணிக்கு இதெல்லாம் ஒரு பிரச்சினை இல்லை. அண்ணன் நல்லதுக்குத்தான சொல்லுது என்று நினைத்துக்கொண்டு யாராவது வந்தால் பின் வாசல் வழியாக ஓடி விடுவாள். நண்பர்கள் போகும் வரை யார் கண்ணிலும் பட மாட்டாள்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் யார் மேலாவது புகார் கொடுக்கப்பட்டால் அடுத்த விநாடி சங்க உறுப்பினர்கள் காவல்நிலையத்தில் குவிவார்கள். இந்த ஆரம்ப கட்ட கூச்சல் மிரட்டல் அடித்தொண்டை உறுமலிலேயே பாதி வழக்குகள் சமாதானமாகிவிடும். சங்க உறுப்பினர்கள் தெருக்களில் சுற்றி வந்து ஏதாவது பையனும் பெண்ணும் பேசிக்கொண்டிருந்தால் யார் என்ன என்று விசாரிப்பார்கள். கோவை புறக்கணிக்கப்படுகிறது, விவசாயி புறக்கணிக்கப்படுகிறான்,

பெண்களும் நிலமும் ஒன்று என்ற பேச்சுகளைக் கேட்டுக் கேட்டு முறுக்கேறும்.

இந்த மண் நம்முடையது. இதைப் பாதுகாப்பது நமது கடமை. காலங்காலமாக இருந்து வரும் கம்பீரம், அந்தஸ்து, குலப் பெருமைக்கு இதெல்லாம் இல்லாதவர்கள் போட்டிக்கு வருகிறார்கள். பெண்களை வளைப்பதன் மூலம் சொத்துகளை வளைக்க நினைக்கிறார்கள். ஜெகதீஷுக்கு தான் பாரம்பரிய வீரர்களின் வாரிசாக வாளேந்தி மண்ணைக் காத்திட நிற்பது போன்ற உணர்ச்சி அடிக்கடி ஏறப்படும். அப்போதெல்லாம் அவனையறியாமல் அடித்தொண்டையிலிருந்து ஒரு உருமல் வெளிவரும். உடல் புல்லரிக்கும். எங்காவது ஏதாவது காதல் திருமணம் நடந்துவிட்டதாகத் தெரிந்தால் கொதித்துப் போவான்.

தனது நண்பர்கள், சொந்தக்காரர்கள் எவ்வளவு மரியாதையாகப் பேசுபவர்கள், எவ்வளவு உழைப்பாளிகள். பாசமானவர்கள். இவர்களை விட்டு விட்டு எப்படி அவர்கள் மேல் காதல்...

தன் வீட்டில் இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வது தன் பொறுப்பு என்று அவனே முடிவுசெய்து கொண்டான். தோட்டத்து வேலைக்கு எப்போதாவது வரும் காலனிக்காரர்களிடம் அம்மா உட்கார்ந்து பேசுவது அவனுக்குப் பிடிக்காது. எல்லாரையும் வெக்கற எடத்துல வெக்கணும் என்பான். பிரச்சினைகள் இருந்தன. தென்னைக்கு நோய் பிடித்தது. அல்லது காய்க்கு விலை கிடைக்கவில்லை. மின்சாரம் போதவில்லை. எல்லாவற்றுக்கும் தீர்வு ஒழுக்கம், ஒற்றுமை, பாரம்பரியம் இணைந்து நின்றால் பிரச்சினைகளைத் தீர்த்து விடலாம். முன்முயற்சியாக குலப்பெருமையைக் காக்க வேண்டும். பெண்கள் ஒழுக்கம் காக்க வேண்டும்.

அவனது மொத்த உக்கிரத்தையும் அனுபவித்தவள் பூரணிதான். இங்கே நிற்க வேண்டும், இவரோடு பேசலாம், இவரோடு பேசக்கூடாது. குனிந்த தலைநிமிராமல் நடக்க வேண்டும். கழுத்தில் செய்ன் இல்லாமல் இருக்கக் கூடாது. கைகளில் வளையல் இல்லாமல் இருக்கக் கூடாது. காலில் செருப்பு இல்லாமல் வெளியே வரக்கூடாது. கட்டுப்பாடுகள், கட்டுப்பாடுகள்...

அம்மா கூட “என்ற புருசன் கூட இத்தினி மொடக்கடி பண்ணுனதில்லியே” என்று வியப்பாள். “அட அது பாட்டுக்குப் பொட்டாட்டா போயிட்டு வருது. நீயேண்டா தொந்தரவு பண்ணற?” என்று அவ்வப்போது மிரட்டுவாள். ஆனால் ஜெகதீஷை அடக்கிவைக்க அது போதவில்லை.

பூரணிக்குத் தன்னை எப்போதும் யாராவது கண்காணித்துக் கொண்டே இருப்பது போலிருந்தது. இது பரவாயில்லை. சில வீடுகளில் ஆண்கள் முன்னால் உட்காரவே கூடாது என்கிறார்களாம். பெண் என்றால் இப்படித்தான். அடக்கமாக இருக்க வேண்டும். ஓடியாடி வேலை செய்யவேண்டும். முடங்கிப் படுக்க வேண்டும். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து நிற்க வேண்டும். உண்பது, குடிப்பது எல்லாவற்றையும் ஒரு தயக்கத்துடன் குற்ற உணர்வுடன் செய்ய வேண்டும். அவளைத் தின்ன வைப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிடும். ஒரு நல்லநாளும் அதுவுமாக கறியும் சோறும் என்றால் குமட்டிக்கொண்டு வரும் அவளுக்கு.

அவளுக்கு வேலை இருந்து கொண்டே இருக்கும். புதிதாக வாங்கிய ஜெர்சி மாட்டைக் கவனித்துக்கொண்டே இருக்க வேண்டும். கீழே குனிந்து களைகொத்தும் போதெல்லாம் சுடிதாரை கழுத்து அருகே இருக்கிக் பிடித்துக் கொள்ள வேண்டும். அண்ணன் பார்த்து விட்டால் அவ்வளவுதான். அவன் காரணம் சொல்ல மாட்டான். ஆனால் வறுத்தெடுத்து விடுவான்.

“நாலு வாய் ஒளுங்காத் திங்க மாட்டயா நீ” என்று அம்மாவே தாங்க மாட்டாமல் அவ்வப்போது திட்டி கொட்டிப் பார்ப்பாள். தேங்காய், வெல்லம் என்று கொறித்துக் கொண்டு திரிவதுதான் பூரணிக்குப் பிடிக்கும். ஆனால் அது என்னவோ பாலும், வெண்ணையும் தின்று வளர்ந்து போல தந்தம் போன்ற உடல் வாகு அவளுக்கு.

அப்போது முதல்முதலாக சங்க மாநாடு நடந்தது. ஊரே திருவிழாக்கோலம் பூண்டது. புறக்கணிக்கப்படும் கொங்கு மண்டலத்தைத் தனி மாநிலமாக்க வேண்டும் என்கிற அளவுக்குப் பேசப்பட்டது. மாபெரும் மாநாடு. வழியெல்லாம் கட் அவுட்கள். ஆட்கள் விதவிதமான கார்களில் மஞ்சள் பைகளோடு வந்து மாநாட்டுக்கு வந்தே தீர வேண்டும் என்று

வலியுறுத்தினர். பெண்கள் தாங்களும் மாநாட்டுக்கு வருவோம் என்று ஒற்றைக் காலில் நின்றனர். விசைத்தறிக்காரர்களிடம் பணம் வாங்கிக் கொண்டி ஓடிப் போகிறவர்களைப் பிடித்துவர சங்கம். கட்டைப் பஞ்சாயத்து செய்ய சங்கம். அடுத்த சாதிக்காரனைக் காதலிக்கும் பெண்களை மிரட்டிப் பிரிக்க சங்கம்.

பாஸ்கருக்கு மீசை அரும்ப தொடங்கி இருப்பதையும் அவன் உடைகள் மாறத் தொடங்கி இருப்பதையும் பூரணி தொலைவில் இருந்து பார்த்தாள். ஜெகதீஷும், சங்கத்துக்காரர்களும் தெருவில் எந்தப் பையனும், பெண்ணும் நின்று பேசிக் கொண்டிருந்தாலும் மிரட்டி விரட்டி விட்டார்கள். பஸ்களிலும் ஏறி நோட்டம் விட்டார்கள்.

பாஸ்கர் சட்டென்று விலகிப் போனான். அவளைப் பார்க்க எந்த முயற்சியும் எடுக்க வில்லை. பின்பு வேறு ஒரு சந்தர்ப்பத்தில் வேறு ஒரு இடத்தில் எதிர்பாராமல் அவனைச் சந்தித்தாள்.

தாத்தா இறந்து போய் கொஞ்ச நாளில் அந்த கலவரம் வெடித்தது. 'எனக்கு ஏதாச்சு செய்யி, செரமத்துலிருக்கறேன்' என்றாள் அத்தை. அவளது தோற்றமே கஷ்ட நிலையைக் காட்டியது. கசங்கிய சேலை. கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியைக் காணவில்லை. தலை பரட்டையாகக் கிடந்தது. பூரித்த முகத்தோடு எழுதிங்கு செய்து கொண்ட அத்தையா இது?

பாதிச் சொத்தெல்லாம் வேண்டாம். பதினைந்து ஏக்கரில் ஒரு ஏக்கர் கொடு கடனை கொஞ்சம் அடைத்துக் கொள்கிறேன் என்றாள். அவளுக்கு கணவன், மகனிடமிருந்து கடும் நெருக்கடி வந்து கொண்டிருந்தது. 'எல்லா வீட்டிலும் பெண்களுக்குச் சொத்துப் பிரித்துக் கொடுக்கும் போது நீயும் ஏன் கேக்கக் கூடாது? பிரிச்சு வாங்கிட்டு வா' என்றான் மகன். 'வாங்கினால் நம்ம புள்ளகுட்டிக்கு ஆகுமே' என்றான் கணவன். கடனை அடைக்க வேறு வழி மட்டும் இல்லை.

பாட்டி சேலையை இழுத்து செருகிக்கொண்டு முன்னால் நின்றார்.

“சொத்து கித்துன்னு கேட்டுப்போட்டு இங்க வந்துராத. அந்த மனுசன் இருந்தா வந்திருப்பியா நீயி?”

“ஏ வரக்கூடாது? எனக்குப் பங்கில்லையா?”

“பெத்த புள்ளயா எப்ப வேணா வந்துட்டுப் போ. பங்குகிங்குன்னு கேக்காத. வேணா ஆயரம் ரெண்டாயரம் கேட்டு வாங்கிக்க”.

“பிச்சையா போடற...” அத்தை ரௌத்திரகாரமானாள். “என்ற பொறந்தவன் பண்ணுன என்னத்த நாம்பண்ணுல? நா வளத்த மரம், மாடு, கண்ணு. முதுகொடிய வேல செஞ்ச காடு. எனக்குச் சொந்தமில்லேன்னு சொல்லறதுக்கு இவனாரு?”

“அதுக்கல்லாஞ் செஞ்சாச்சு. கட்டிக்குடுத்துப் போட்டா அவடத்தடாலதான் போய் பொளைக்கோணும். அப்பனூட்டுக்குப் பாகங்கேட்டு வாரவ நல்ல பொம்பளயா? நீ எத்தினி பாகம் உங்கொளுந்தியாளுக்குக் குடுத்த?”

“நீ அவன மட்டுந்தே பெத்தயா? என்ன தவுட்டுக்கு வாங்கீட்டு வந்தயாக்கு? பொறந்தவன்னா செய்யோணும் தெரிஞ்சுக்க. ஆயிரரெண்டாயிரமில்ல. செய்யோணும். ஒரு பெரச்சனைன்னா வந்து நிக்கோணும். பாத்துக்கறேன்” அவிழ்ந்து தொங்கிய கூந்தலை இழுத்துச் செருகிக்கொண்டு சென்றாள் அத்தை. அடுத்த நடந்த பஞ்சாயத்தில் சொத்துகளை பெயர் மாற்றி எழுதியதும் அடமானம் வைத்ததும் வெளியே வந்து விட்டது.

“இப்புடி ஒரு துரோகத்தப் பண்ணிப்போட்டியே அம்மா...” அத்தையின் குரலில் குத்துப்பட்டதைப் போன்றதொரு வலி இருந்தது.

“க்கும். போடி உந்துரோகத்தைக் தூக்கிட்டு” என்று விரட்டுவது போலக் கை நீட்டினார் பாட்டி. பூரணிக்குப் பாவமாக இருந்தது. ‘ஏன் எல்லோரும் அத்தையை திட்டுகிறார்கள்?’ ஜெகதீஷும், அத்தை மகன்களும் ஒருவரையொருவர் அடிக்க அடிக்கப் போனார்கள். அவர்களைப் பிரித்து விடுவதே பெரும்பாடாக இருந்தது.

“வளுசப் பசங்க பேசாதீங்கப்பா. அக்காட்டால போங்க” என்று பெரியவர்கள் விரட்டி விட்டார்கள். அத்தை ஏதோ மிகப் பெரிய தவறு

செய்கிறாள் போலிருக்கிறது. ‘அப்பாவுடைய சொத்தை கேட்பது சரியா?’

“கடைசியா என்னதான் குடுக்க முடியும்னு கேட்டுச் சொல்லுங்க” என்றான் மாமா.

“பொறந்தவங்கறதுக்காக முடிஞ்சதக் குடுக்கறேன். ஆனா சொத்தெல்லாம் குடுக்க முடியாது” என்று அப்பா தீர்மானமாகச் சொன்னான்.

“இது கோர்ட்டாலதான் முடியும். வக்கீலுகதாந் திம்பாங்க” என்றார் நல்லாசாமி. வழக்கு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

பூரணி பனிரெண்டாவது முடித்ததும் வீட்டில் இன்னொரு சண்டை வந்தது. படித்தது போதும் என்றான் ஜெகதீஷ். ஆனால் அம்மாவும் அப்பாவும் அவனை மிரட்டி அடக்கிவிட்டார்கள்.

“காலேசுக்குப் போயி படிக்காட்டா என்னடா மருவாதி?” என்று அப்பா கேட்டபோது ஜெகதீஷால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை.

பூரணியைப் பெண்கள் கல்லூரியில்தான் சேர்க்க வேண்டுமென்று ஜெகதீஷ் பிடிவாதம் பிடித்து கோவை கிருஷ்ணம்மாள் கல்லூரியில் நியூட்ரிஷனில் சேர்த்தான். ஹாஸ்டலில் ஏராளமான கட்டுப்பாடுகள் இருந்ததும் ஒரு காரணம். மாணவிகளில் விஜய் ரசிகைகள், தனுஷ் ரசிகைகள், என்று தனித்தனியாக இருந்தனர்.

சொத்து, வீடு, தோட்டம், செலவு, கடன், அந்தஸ்த்து, மரியாதை... எல்லாப்பிரச்சினையும் தற்காலிகமாக விலகிப் போயிருந்தது.

5

கெடாவெட்டு சமையலின் ருசி உலகத்தில் வேறெதெற்கும் கிடையாது. வெறும் சோறும், குழம்பும், வறுவலும்தான். ஆனால் அந்த மணத்துக்கு முன்னால் கோவை - பொள்ளாச்சியின் எந்தப் புகழ்பெற்ற அசைவ ஓட்டலும் நிற்க முடியாது. ஆட்டுக்கிடாயும், கோழிகளும், மீன்களும் காலையிலேயே டெம்போவில் கொண்டுவரப்பட்டு விட்டன. விருந்து மனோகரனின் நண்பரான ஒரு வக்கீலின் தோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வக்கீலுக்கும், விவசாயத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. எப்படியோ தன் கைக்கு வந்த தோட்டத்தை மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கும் இடமாகவே கருதி வந்தார். தோட்டம் சேத்துமடைக்கு அருகே காட்டை ஒட்டினாற்போல் நீளவாக்கில் அமைந்திருந்தது. வருபவர்கள் தங்கள் செலவில் சரக்கு வாங்கிக் கொண்டு வந்து விடுவார்கள். மற்ற உணவுப் பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவர் பொறுப்பெடுத்துக் கொள்வார்கள்.

பெரிய உருளியில் வெந்து கொண்டிருந்த கறியின் மணம் விருந்தாளிகளைத் தவிக்கச் செய்தது. இதற்குமேல் என்ன... குழம்பை இறக்கிப் பரிமாறத் தொடங்க வேண்டியதுதானே என்று வந்தவர்களுக்கு ஆத்திரமாக இருந்தது. அந்தக் கிறங்க வைக்கும் மணம் குழம்பையும் உடைக்க இருந்த பாட்டில்களையும் தவிர வேறு எதையும் நினைக்கவிடாமல் செய்தது. ஆனால் சமையல்காரப் பொன்னுசாமி கலைஞன். அவன் நினைக்கிற பதத்துக்கு குழம்பின் மணமும் நிறமும் வராமல் குழம்பை இறக்க மாட்டான். ஒரு செஸ் விளையாட்டு வீரனைப் போன்ற பொறுமையுடனும் கூர்மையுடனும் கொதித்துக் கொண்டிருந்த குழம்பை உற்றுப் பார்த்து அவ்வப்போது கிளறி விட்டுக் கொண்டிருந்தான்.

சில அவசரக்காரர்கள் அடுப்படிக்குச் சென்று வறுத்துக் குவித்து வைத்திருந்த மீன்களையும் அடுப்பில் வெந்து கொண்டிருந்த கறியையும் பாக்குமட்டை தட்டுகளில் அள்ளிப் போட்டுத் தூக்கி வர மரத்தடிகளிலும் பந்தலுக்குக் கீழும் வரப்பின் சரிவிலும் விருந்தினர்கள் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்து கொண்டாட்டத்தைத் தொடங்கினர்.

எந்தக் காரணமும் இல்லாமல் அறிமுகம் செய்து கொள்வதற்காகவும், வியாபாரமும் அரசியலும் பேசுவதற்காகவுமே இதுபோன்ற விருந்துகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. முன்பெல்லாம் கோவில்களில் நடைபெறும் கிடாவெட்டுகள்தான் இந்தப் பாத்திரத்தை ஆற்றிவந்தன. இப்போது தொழில்களும், தொழில் முனைவோரும் பெருகிப்போன காரணத்தால் திருவிழாக்கள், காது குத்துக்களுக்காகக் காத்திருக்க முடியாது. சங்கம் சமுதாயத்தைச் சேர்ந்த அரசு அதிகாரிகளுக்குப் பாராட்டுவிழாக்கள் நடத்தும். அல்லது மற்றவர்களுக்குப் பரிசளிக்க அழைத்து அதை அதிகாரிக்கான பாராட்டுவிழாவாக மாற்றும். இதேபோல சமுதாயத்தைச் சேர்ந்த ஆலை முதலாளிகள், பெரும் வணிகர்கள், பல கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் என்று பலருக்குப் பல்வேறு விழாக்கள் அடிக்கடி நடத்தி அவர்களோடு ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்தும். சங்கத்தின் பக்கபலம் உறுதி செய்யப்பட்டுவிட்டால் அந்த முக்கியஸ்தர்களின் குரலிலும் தனி வலிமை வந்துவிடும்.

பெண்கள் இந்தக் கூட்டங்களுக்கு அழைத்து வரப்படுவதில்லை. கூட்டம் முக்கியமான சிலருக்காக ஏற்பாடு செய்யப்பட்டாலும் ஆந்திராவிலிருந்து ஆப்கானிஸ்தான் வரை பல்வேறு தொழில்கள் செய்யப்போவதாகப் பரபரத்துத் திரியும் நபர்களும் வந்து குவிந்து அபத்தமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். வரவேண்டியவர்கள் வந்துவிட்டால் முக்கியமான சந்திப்புகள் நிகழும். மிக முக்கியமான விவகாரங்கள் இங்கே தொடங்கி அல்லது முடித்து வைக்கப்படும். மனோகரன் தலையெடுத்த பிறகு இந்தக் கூட்டங்கள் அவன் தலைமையில் நடைபெற்று வந்தன. முக்கிய விருந்தாளிகளுக்காக மனோகரன் லெபனான் ஓயின், ஸ்காட்ச் விஸ்கி போன்ற விலையுயர்ந்த மதுவகைகள் வாங்கி வைத்திருப்பான்.

மனோகரன் ஒவ்வொரு கூட்டமாக நலம் விசாரித்தபடி நடந்து கொண்டிருந்தான். விருந்தினர்கள் நல்ல புத்தியுடனிருக்கும் போதே இரண்டு வார்த்தை பேசிவிட வேண்டும். இல்லாவிட்டால் கூத்தும் கும்மாளமும் தொடங்கி உருப்படியாக எதுவும் பேச முடியாமல் போய்விடும். உட்கார்ந்திருந்தவர்கள் மனோகரனை உற்சாகமாக வரவேற்று ஜோதியில் கலந்துவிடும் படி வற்புறுத்தினர். “எல்லாத்தையும்

ஒரு ரவுண்டு பாத்துட்டு வந்துர்றேன்" என்று புன்னகையுடன் மறுத்தபடி நகர்ந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் அடிக்கடி தோட்டத்துக்கு வரும் மண்சாலையைப் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தன. வழக்கமாக கண்ணுசாமி வரும் நேரம்தான். இன்று கண்ணுசாமியிடம் பேசுவதற்கு மனோகரனுக்கு நிறைய விஷயங்களிருந்தன. எனவே எல்லோரையும் விட கண்ணுசாமியை அவன் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்

இது போன்றதொரு கூட்டத்தில்தான் மனோகரன் முதல் முதலாகக் கண்ணுசாமியைப் பார்த்தான். இருவரும் ஜாடிக்கேற்ற மூடிபோல ஒட்டிக் கொண்டனர். கோவையில் ரியல் எஸ்டேட் தொழிலில் கொடிகட்டிப் பறந்துவந்த கண்ணுசாமிக்கு ஒரு திட்டம் இருந்தது. மலைகளில் இருந்து ஓய்வு பெற்று இறங்கும் அதிகாரிகள் நகர இரைச்சலை விரும்புவதில்லை. எனவே மலைக்கு அருகிலும் அதே நேரம் நினைத்தால் நகருக்குச் செல்லும் இடத்திலும் குடியிருக்க விரும்பினர். பல பணக்காரர்களும் பண்ணை வீடு போன்ற வீடுகளை இந்தப் பசிய வயல்வெளிகளுக்கு நடுவே அமைத்துக்கொள்ள ஆர்வமாக இருந்தனர். பொள்ளாச்சிக்கும், மலைகளுக்கும், கேரள எல்லைக்கும் நடுவே இருந்த இந்த அணைப்பிரதேசம் இதற்குச் சரியான இடமாக இருக்கும் என்று கண்ணுசாமி துல்லியமாகக் கணித்திருந்தான்.

காட்டை ஒட்டினாற்போல வாய்க்காலோரம் போட்ட முதல் திட்டம் மிகப் பெரிய வெற்றியடைந்தது. அதைவிடப் பெரிதாக இரண்டாவது திட்டம் சற்றுதள்ளித் தொடங்கியது. ரியல் எஸ்டேட் என்றால் ஏதோ நிலத்தை வாங்கி விற்பது என்று நினைத்திருந்த மனோகரன் திகைத்துப் போனான். அதில் பல அரசுத் துறைகள் தொடர்பு கொண்டிருந்தன. எங்கே பஸ் நிலையம் வரப்போகிறது, எங்கே ரிங்ரோடு வரப்போகிறது என்பது எல்லாம் கண்ணுசாமிக்குத் தெரிந்திருந்தது. அரசு அலுவலகங்களின் கதவுகள் அவனுக்கு எளிதில் திறந்தன. எந்த நேரம் தகவல் பெறும் விண்ணப்பம் போட்டு அதிகாரியைத் திணற அடிக்கவேண்டும் என்பதும் அவனுக்குத் அத்துப்படி. அரசைத் தவிர மணல் வியாபாரிகள், சிமெண்ட், செங்கல் என்று பல துறைகள் இதில் சம்பந்தப்பட்டிருந்தன.

ஐந்துரூபாய் போட்டு பத்துரூபாய் எடுப்பதுதான் லாபம் என்ற மனோகரனின் புரிதலிலும் குழப்பம் ஏற்பட்டது. ஐந்துரூபாய் போட்டு நூறு ரூபாய் எடுப்பதுதான் லாபம் என்பதை உணர்த்தியது கண்ணுசாமிதான். கண்ணுசாமிக்கு வந்து கொண்டிருந்த லாபத்துக்கு வில்லங்கச் சொத்து வாங்கவேண்டிய அவசியமே இல்லை. ஆனால் கண்ணுசாமி அதிலும் அதிக ஆர்வம் காட்டினான். தாறுமாறாக வழக்குகள் இருந்த சொத்துகளைக் கூட அலட்சியமாக வாங்கினான். "கேஸ் என்னிக்காவது முடியுமில்ல" என்று சொல்வான். நடக்கட்டும். வழக்கு முடிந்து சண்டைகள் முடியும்போது சொத்தின் மதிப்பு பலமடங்கு அதிகமாகிவிடும். லாபத்தின் ஒருபகுதியை வில்லங்கச் சொத்து வாங்குவதில் முதலீடு செய்வதை கண்ணுசாமி ஒரு வியாபார தந்திரமாகக் கடைப்பிடித்து வந்தான்.

மில்கள் இங்கே வருவதற்குக் கூட கண்ணுசாமி ஒரு காரணம். மில்காரர்கள் ஒதுக்குப்புறமான பகுதிகளை நாடினார்கள். மில்களில் வேலை செய்தவர்கள் பெரும்பாலும் பதினாறிலிருந்து இருபத்தி மூன்று வயதுக்குட்பட்ட பெண்கள். அவர்கள் மில்லை விட்டு வெளியே விடப்படுவதில்லை. மில்களுக்கு நிலம் வாங்கவும் பாதுகாப்புக்கு ஆட்களை அனுப்பவும் நிர்வாகங்களுக்கு உள்ளூரில் செல்வாக்குமிக்க மனோகரனின் அமைப்பு தேவைப்பட்டது. பெண்கள் ஓடிப்போகாமல் தடுக்கவும், தங்கள் பெண்கள் மோசமாக நடத்தப்படுவதாக சந்தேகித்து வரும் பெற்றோரைச் சமாளிக்கவும், சாலைகளையும், ஊர்களையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு அமைப்பு அவசியமாக இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக வெளியிருந்த வந்த மட்டை மில்கள், ஸ்பின்னிங் மில்கள் போன்றவை விவசாய வேலைக்கு ஆட்கள் வருவதைக் குறைத்தன. இரண்டாவதாக மட்டை மில்கள் தண்ணீரை உறிஞ்சித் தள்ளின. உள்ளூர் மக்கள் இயல்பாகவே இவர்கள் மீது வெறுப்புக் கொண்டிருந்தனர். சென்னையிலிருந்தும் திருச்சியிலிருந்தும் வந்து மட்டை மில் தொடங்கியிருந்த முதலாளிகளும், மேனேஜர்களும் மனோகரனை தலைவர் என்று கொண்டாடினார்கள். மனோகரனுக்கு இந்த இடம் எப்போதும் குழப்பம்தான். தான் எப்படி விவசாயிக்கும், மில்

ஒனருக்கும் தலைவராக இருக்க முடியும்? மட்டை மில்காரருக்கும், தென்னை விவசாயிக்கும், தேங்காய் வியாபாரிக்கும் ஒருவரே எப்படி தலைவராக இருக்க முடியும்?

ஆனால் எல்லாவற்றையும் தள்ளிக் கொடுத்துக்கொண்டு போக முடிந்தது. ஒட்டு மொத்தத் தீர்வு என்று பேசிக்கொண்டு அந்தந்தப் பிரச்சினையை மட்டும் மற்ற தலைவர்கள் கருத்தில் கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டான். அதைக் கடைப்பிடிக்க நேரம் ஆகவில்லை. தான் உள்ளும் புறமும் அறிந்த பகுதியில் சமாளித்துக் கொள்வது மனோகரனுக்கு முடிந்தது.

இந்தக் காலகட்டத்தில்தான் தலைவர் இறக்க, தலைமை மனோகரனுக்கு வந்தது. பெரிய போட்டியில்லை. கட்சிக்காரர்கள், மில் முதலாளிகள், ரியல் எஸ்டேட் அதிபர்கள், விவசாயிகள் என்று ஏறக்குறைய எல்லோருடைய ஆதரவும் மனோகரனுக்கு இருந்தது. அதே நேரம் பூதாகரமாக உருவாகிவந்த ஒரு சாதிக் கட்சி சிதறியது. அரசால் குறிவைத்துத் தாக்கிச் சிதறடிக்கப்பட்டது. அந்தக் கட்சி தலைவர்கள் மீது ஏடாகூடமான வழக்குகள் போடப்பட்டன. ரெய்டுகள் நடத்தப்பட்டன.

மனோகரன் குழம்பிப் போனான். அவனுக்குப் போட்டிக் கட்சி உடைவது சந்தோஷம்தான் என்றாலும் ஏதோ இனம் புரியாத பயமும் தோன்றியது. அந்தக் கட்சி ஒருநாள் தன்னை விழுங்கிவிடும். தான் அதில் சேரவேண்டி வரும் என்று நினைத்திருந்தான். அந்தக் கட்சி இரண்டாக உடைந்தது. விரைவில் இரண்டு மூன்றானது.

‘ஏன்?’

‘யார் இதன்மீது தாக்குதல் தொடுக்கிறார்கள்? எல்லாக் கட்சிகளிலும் தலைமையில் நமது ஆட்கள்தான் இருக்கிறார்கள். பின்பு எப்படி?’ ஏதோ இருக்கிறது என்பதை மனோகரன் உணர்ந்திருந்தான். இந்தக் கட்சி வளர்வதை யாரோ விரும்பவில்லை என்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் உண்மையில் இதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதைத்தான் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. இது பற்றிப் பேசத்தான் கண்ணுசாமியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்ணுசாமியின் கருப்பு நிற ஆடி கார் தோட்டத்துக்குள் வந்து மாமரத்தடியில் நின்றது. வெள்ளை அரைக்கை சட்டை, சிமெண்ட் கலர் பேண்டில் இருந்த கண்ணுசாமி தன்னை வரவேற்க வந்த மனோகரனைத் தழுவிக்கொண்டான். கண்ணுசாமி நல்ல உயரம். கம்பெனியிலும், தோட்டத்திலும் உழைத்து உரமேறிய தேகம். முகத்திலும் பேச்சிலும் கிராமத்துக் களை இன்னும் மாறாமலிந்தது. உடல் முழுவதும் முடி அடர்ந்திருந்தது.

"திடுதிப்னு ஆர்க்கிடெக்ட்டும், இஞ்சினீரும் வந்து ஏதோ பெரச்சனன்னு உக்காந்துட்டானுக. தாட்டி உட்டுப்போட்டு வாரதுக்கு நேரமாயி போச்சு" என்றான்.

மனோகரன் தோட்டத்தின் ஒரு மூலையில் இருந்த தண்ணீர் டேங்கின் கீழிருந்த அறைக்கு அவனை அழைத்துப் போனான். அதிநவீன ஜன்னல் திரைகள், கண்ணை உறுத்தாத வெள்ளை விளக்குகள், விலையுயர்ந்த கருப்பு நிற ரெக்ஸினாலான சோபாக்கள் என்று அற்புதமாக அலங்கரிக்கப்பட்ட அறை அது.

கண்ணுசாமி சியர்ஸ் சொல்லிவிட்டு "தலைவரே தனிக்காட்டு ராசாவாகப் போறீங்க. போட்டிக்கட்சிக்காரன் முடிஞ்சே போயிட்டான். எங்களையெல்லாம் மறந்துராதீங்க" என்றான்.

"அதான் எனக்கும் புரியல பங்காளி. யாரு அவீல முடிச்சுப் போட்டது? என்ன பிரச்சன?"

"நாங்கதே ராசா. எங்களக் கேட்டுதான் நாலு மாவட்டத்துல எல்லா வேலையுஞ் செய்யோணும்னு சொன்னா, இத்தினி வருசமா மாநிலத்தையே கட்டி ஆண்டுட்டிருக்கற கட்சிக்காரன் சும்மா இருப்பானாக்கு? நம்மட பங்காளிகளுக்கு கொளுப்பு சாஸ்திதானுங்க" கண்ணுசாமி சிரித்தான்.

"ஆளுங்கட்சிதா எல்லாத்தையுஞ் செய்யுதுங்களா?"

"அவங்கொஞ்சம் செய்யறான். இந்த கார்ப்பரேட்காரன் தூண்டி உடறான்"

"ஏ? ரெண்டுபேரும் நல்லாத்தானே இருந்தாங்க?" அந்தக் கட்சியின்

தலைவர்களே பெரிய முதலாளிகள்.

புதிதாக முதலீடு செய்ய இங்கே வரும் கார்ப்பரேட்டுகள் சென்னையிலோ, டெல்லியிலோ விஷயங்களைப் பேசிமுடிக்க விரும்புகின்றனர். உள்ளூரில் இன்னொரு அதிகார மையம் உருவாவதை விரும்பவில்லை. அதே போல பெரிய கட்சிகளுக்கும் உள்ளூரில் பேரம்பேச பிளாக்மெய்ல் செய்ய இன்னொரு கட்சி உருவாவது விருப்பமில்லை. தங்கள் ஓட்டுக்களைப் புதிய கட்சி பிரிப்பதையும் விரும்பவில்லை. கண்ணுசாமி கொஞ்சம் சொன்னான். மனோகரன் மீதியைப் புரிந்து கொண்டான்.

அப்படியென்றால் இதே போன்றதொரு தாக்குதல் தன் அமைப்பின் மீதும் தொடங்க வாய்ப்பிருக்கிறது. அதிகார மட்டத்தோடு எவ்வளவு இணக்கமாகப் போனாலும் தன்னை அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ள வந்தவனாகத்தான் ஏற்கெனவே அதிகாரத்தில் இருப்பவர்கள் பார்ப்பார்கள். முதலில் தங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கார்ப்பரேட்டுகள் ஆழமாகக் காலூன்றியதும் உள்ளூர் அமைப்புகளை ஒழிக்கத்தான் பார்க்கிறார்கள். இது புலிவால். ஒன்று பாட்டாளி மக்கள் கட்சி போல எட்டமுடியாத உயரத்திற்கு வளர்ந்து தவிர்க்க முடியாத சக்தியாகிவிடவேண்டும். அல்லது லெட்டர் பேடு கட்சியாக மாறிவிட வேண்டும்.

ஏதோ ஒரு கட்டத்தில் தங்கள் மேலும் வழக்குகள் தொடுக்கப்படலாம். ரெய்டுகள் நடத்தப்படலாம். அதற்குள் வடக்கு நோக்கி அமைப்பை விரித்தெடுத்துவிட வேண்டும் என்று மனோகரனும், கண்ணுசாமியும் முடிவு செய்தனர். தங்கள் அமைப்பின் மீது கை வைக்க தைரியம் வரக்கூடாது. அப்படியே வந்தாலும் ஏதாவது நடந்தால் மேற்கு மாவட்டங்கள் ஸ்தம்பிக்க வேண்டும்.

அந்த விருந்துக்குப் பிறகு மனோகரன், கண்ணுசாமி போன்றவர்களின் உதவியோடு கட்சியை திருப்பூர், ஈரோடு மாவட்டங்களுக்கு விரிவாக்க தீவிர முயற்சிகளில் இறங்கினான். போட்டிக்கு ஆளில்லாத நிலையில் கட்சி எளிதாகப் பரவியது. ஆனால் நெருக்கடிகளும் கூடவே வந்தன... இந்த இடத்தில்தான் தான் தவறு

செய்து விட்டோமோ என்ற பயம் மனோகரனுக்கு இருந்தது. ஈரம்பூத்த நிலம் மனோகரனின் பகுதி. ஆனால் கொங்கு மண்டலத்தின் வடகிழக்கே இருந்த பகுதி புல்பூண்டு கூட கருகிக் கிடக்கும் பொட்டல் நிலங்கள். புழுதிபடிந்த கிராமங்கள். ஓணான் கூட முட்டை வைக்காது என்று உள்ளூர்க்காரர்களே சொல்லும் பூமி அவனுக்கு முழுவதும் அன்னியமாக இருந்தது.

வாய்க்கால் பூமியில் எப்போதாவது சாதிச் சண்டை வரும். மிரட்டினால் ஒதுங்கிக் கொள்வார்கள். ஆதிக்க சாதிக்கு பணமும், பதவியும் அந்தஸ்த்தும் இருந்தன. மேல் சாதிக்கும், கீழ் சாதிக்குமான வித்தியாசம் ஏணி வைத்தால் கூட எட்ட முடியாததாக இருந்தது. ஆனால் இங்கே பொட்டல் காட்டில் விவசாயம் சிதைந்து போய் மேல்சாதியிலேயே ஒரு பகுதி பெரும் பணக்கார்களாகவும், இன்னொரு பகுதி பஞ்சைப் பராரிகளாகவும் மாறிப் போயிருந்தது. மேல்சாதி, கீழ்சாதி இரண்டு பேரும் மில்லுக்குப் போனார்கள். இரண்டு பேரும் வெளியே வேலைக்குப் போனார்கள். ஏறக்குறைய தினமும் சண்டைகள் வந்தன. நிலம், கூலி என்பதாக இல்லாமல் மரியாதை, ஈகோவாக சண்டைகள் இருந்தன.

லாரிகள், கோழிப் பண்ணை, மில்கள் விசைத்தறிகள் என்று விசித்திரமான கலவையாக தொழில்துறை இருந்தது. லாரி உரிமையாளர் சங்கம் எப்போதும் டீசல் விலை உயர்வு, நெடுஞ்சாலை வசூல் நிலையங்கள் என்று நெருக்கடியில் இருந்தது. கோழிப்பண்ணை விவசாயிகள் பெரு நிறுவனங்களில் பணயக் கைதிகளாக இருந்தனர். விசைத்தறி உரிமையாளர்கள் டெக்ஸ்டைல் உரிமையாளர்களோடு ஜீவ மரணப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதேநேரம் தங்களிடம் வேலை செய்யும் கூலிகளைத் தக்க வைக்கவும் போராடிக் கொண்டிருந்தனர்.

கை வைத்தால் சுற்றுப்புறம் வெடித்து விடும். குளவிக்கூட்டில் கை வைத்தது போலாகிவிடும். இப்போதைக்கு சாதியில் மட்டும் நின்று கொள்வது என்று அமைப்பு முடிவு செய்தது. வீரம், பாரம்பரியம், குலப் பெருமை பெண்கள் இத்தோடு நின்றால் உடனடிப் பிரச்சினை இல்லை.

அதற்கு ஏற்றாற்போல் இனம் புதுபுது தொழில்களில் இறங்கிக் கொண்டிருந்தது. ஆனால் சூழ்நிலையின் உக்கிரத்தால் தாங்கள் சுற்றி

வளைக்கப்பட்டிருப்பது போலவும் நெருக்கடியில் இருப்பது போலவும் ஒரு மனநிலையை வளர்த்துக் கொண்டிருந்தது. தலித்துகள் டீக்கடைக்கு வந்து டீ குடித்தால் லாபம் வரும். ஆனால் அவர்கள் அருகே உட்கார்ந்து டீ குடிப்பதை மனது ஒப்புக்கொள்ள மறுத்தது. தலித்துகள் டிவிஎஸ் 50 வாங்கினால் ஏஜென்ஸி வைத்திருப்பவருக்கு நல்லதுதான். ஆனால் அவர்கள் தன் முன்னால் அதில் ஏறிப் பறந்தால் எங்கிருந்தோ ஒரு வெறுப்பு வருகிறது. தனக்கு மேலுள்ளவர்களுடன் நடக்கும் போராட்டத்தில் சந்திக்கும் அத்தனைத் தோல்விகளுக்கும் இந்த டீ குடிக்க விரும்புபவர்களும் பஸ்ஸில் உட்கார்ந்து வருபவர்களும் ஏதோ ஒருவிதத்தில் காரணம் என்று ஒவ்வொரு ஆதிக்க சாதி இளைஞனும் நினைத்துக் கொண்டிருந்தான்.

பூட்டு தனக்கான சாவியைக் கண்டு கொண்டது.

6

“சின்னக்காய்தான, நாலு ரூபாய்க்கு எடுத்துக்கறேன்” என்றார் தேங்காய் வியாபாரி. ஜெகதீஷ் கடுங்கோபத்துடன் காலைத் தரையில் உதைத்து விட்டு அகன்றான். இதுதான் நிலவரம் என்பது அவனுக்கும் தெரியும். அதேநேரம் கோபத்தில் கொதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் தெரியும்.

சென்ற மூன்று ஆண்டுகளாக தேங்காய் விலை உச்சத்திலிருந்தது. பதினாறு ரூபாய் வரை போனது. ஆனால் அப்போது மழை இல்லாமல் மரத்தில் காய் பிடிக்கவே இல்லை. தென்னை மரம் மோசமான மரம். எத்தனை தண்ணீர் பாய்ச்சினாலும் மேல்தண்ணி அதாவது மழை விழாமல் குறும்பை வெக்காது என்று பெரியவர்கள் சொல்வார்கள். இங்கே மழையும் இல்லை. போரில் தண்ணீரும் இல்லை. அப்புறம் எங்கிருந்து காய் வரும்?

இந்த வருடம் மழை கொட்டித் தீர்த்தது. குலை குலையாகக் காய். ஆனால் விலை நான்கு ரூபாய்க்கு இறங்கிவிட்டது. தக்காளி, கத்தரி எல்லாவற்றுக்கும் இதே நிலைதான். வெண்டை காய்த்துக் காய்த்துத் தொங்கியது. பறித்துப் பறித்து அதன் இளம் முள் உராய்ந்து கைகாலெல்லாம் அரிப்பெடுத்தது. ஆனால் கிடைக்கும் பணம் கழுவும் சோப்புக்கூடப் போதவில்லை.

ஜெகதீஷின் மனதில் எப்போதும் ஒரு கோபம் கனன்று கொண்டே இருந்தது. யார் மீது கோபம், எதற்காகக் கோபம் எதுவும் புரியவில்லை. தேங்காய்க்கு விலையில்லை என்ற கோபம். கடனைக் கட்டச்சொல்லி வங்கியிலிருந்து வரும் ஒவ்வொரு நோட்டீஸையும் பார்க்கும் போதும் கனன்று வரும் கோபம். அருமைக்காரர் குலப்பெருமை தெரியாமல் மொக்கையாகத் திரியும் அப்பனைக் கண்டால் கோபம். சங்கத்தின் மீதுகூடக் கோபம் வந்தது. விவசாயிக்கு இத்தனை பிரச்சினை இருக்கிறது. அதை விட்டுவிட்டு சங்கம் ஏதோ செய்து கொண்டிருக்கிறதென்ற கோபம். விவசாயம் கடும் போராட்டமாக மாறிவிட்டதில் இந்த நெருக்கடிகளிலிருந்து எப்படி வெளிவரப்போகிறோம் என்பது அவனுக்கு மலைப்பாக இருந்தது. சுற்றிலும் காடுகள் தரிசாகக் கிடக்க தனக்கும் இந்த நிலை வந்துவிடுமோ

என்ற பீதி அவ்வப்போது தோன்றும்போது நெஞ்சு குப்பென்று அடைத்துக் கொள்ளும்.

ஒவ்வொருமுறை இந்த நெருக்கடி வரும்போதும் பெரிசுகள் இருண்ட முகத்துடன் அடிக்குரலில் பேசிக் கொள்ளும்.

“நெல்லுக்கு வெல வெக்கறானுகள்ளோ அதே மாரி இந்த தேங்காய்க்கும் ஒரு வெல வெச்சா என்ன கேடு?”

“ரேசன் கடைல பாமாயிலுக்குப் பதில் தேங்காயெண்ண ஊத்தினா என்ன?”

இதை ஏன் சங்கம் பேசமாட்டேனென்கிறது என்று ஜெகதீஷுக்குப் புரியவில்லை. வா என்றால் விவசாயிகள் திரண்டு வந்துவிட மாட்டார்களா? கோவை ஈரோடு சாலையையும் கோவை திருச்சி சாலையையும் இரண்டு நாட்கள் மறித்தால் அரசு தன்னால் ஓடி வராதா? ஏன் செய்ய மாட்டேனென்கிறார்கள்? ஒருவேளை தேங்காய் வியாபாரிகளும் வேண்டியவர்கள் என்று பார்க்கிறார்களா?

ஆனால் சங்கம் பிரச்சினையை வேறுவிதமாக அணுகியது.

“போனவருசம் காய் பதினாறு ரூவாய்க்குப் போனப்ப பண்ணையத்தாளுக்குக் கூலி எவ்வளவு குடுத்த சாமி?”

“350 ரூவாய்ங்க”

“இந்த வருசம் காய் நாலு ரூவாய்க்குப் போறப்ப கூலி எவ்வளவு?”

“நானூறு...”

“இது எந்தூரு நாயம்? இதோட மரமேர்றவன் கூலி தனி. கூலிக்காரனுக்கு எளவெடுத்தே பண்ணையம் முடிஞ்சு போச்சு. நல்லாக் காசு வாரப்ப கேட்டு வாங்கறவன் கொறையும் போது அதுக்கேத்தமாரி பேசோணுமில்லோ. அப்ப கோயமுத்தூரு போறேன், திலுப்பூரு போறேன்னுட்டு கௌம்புறானுக. சம உரிம வேணும்னா நல்லது கெட்டதுக்கு இங்க இருந்துட்டு கூடச்சேந்து கஷ்டப்படோணும். நல்லது நடக்கும் போது முடிஞ்ச வரைக்கும் கொள்ளையடிக்கறது, இல்லாதப்ப ஓடீடறது. முடிஞ்சா பொட்டப்புள்ளகளைக் கை வெக்கறது. மொதல்ல

கெவனிக்க வேண்டியது இவனுகளத்தான். தேங்காய்க்காரன், அரசாங்கம் அல்லாத்தையும் ஒவ்வொண்ணா அப்புறம் பாக்கலாம். விட்டுருவமா என்ன?"

தலைவர்கள் சொல்வதிலும் அர்த்தம் இருந்தது. ஆதிக்கமும் குலப் பெருமையும் நிலை நாட்டப்பட வேண்டும். அதை விட்டுத்தந்ததால்தான் இத்தனை பிரச்சினையும்.

அமெரிக்கா போய்விட்டு வந்த நண்பனுக்குத் திருமணம் நடந்தது. பெண் நாயுடு. காதல் திருமணம். இரண்டுசாதிச் சீர்களும் நடந்தன, இரண்டுசாதிச் சீர்களும் புறக்கணிக்கப்பட்டன.

"என்ன தப்பு?" என்றான் நண்பன். "ஒரே வேலை. ஒரே அந்தஸ்த்து. ஒரே மாதிரி குடும்பம். ஏன் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?"

"அப்ப நம்ம புள்ளைகள யாரு கல்யாணம் பண்ணறது?"

"ஏன்? நாய்க்கனுகதான்" என்ற நண்பன் வாய்விட்டுச் சிரித்தான். "நம்ம சாதியில அப்பிடியொன்னும் பசங்களுக்குப் பஞ்சமில்ல நண்பா. நம்ம புள்ளைங்க உங்கிட்ட மாப்பிளகீது பாக்கச்சொல்லி கேட்டா, நீ நல்ல பையனாப் பாத்துப் பண்ணி வெச்சுப்போடு" நண்பன் வேண்டுமென்றே கொங்கு தமிழில் அழுத்திப் பேசி கிண்டல் செய்வது தெரிந்தது.

ஆனால் சங்கம் இந்த நெருக்கடியைப் புரிந்திருந்தது. இந்தக் காதல் கத்தரிக்காய் விவகாரங்களைத் தடுக்க வேண்டும் என்று முடிவு செய்தது. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கமுடியாது. கொஞ்சம் கொஞ்சமாக இதை ஏற்றுக்கொள்ளும் மனநிலை வந்து கொண்டிருக்கிறது. அனுமதிக்க முடியாது.

கோயமுத்தூர்ப் பக்கம் ஒரு பெண் ஊருக்குப் புதிதாக வந்த வி.ஏ.ஓ இளைஞனோடு ஓடிவிட்டாள் என்று தெரிந்தது. அவன் தலித். இதில் மோசம் என்னவென்றால் பெண்ணின் அப்பா அதை அப்படியே விட்டுவிட்டார். சங்கம் பெண்ணைக் மீட்டுக் கொண்டுவர என்னென்னவோ முயற்சி எடுத்தும் நடக்காமல் போனது. பெண் வீட்டார் இருண்ட முகங்களுடன் நடமாடினர். என்ன மானங்கெட்ட பொழப்பு என்று அவர்கள்

காதுபடவே மற்றவர்கள் பேசிக் கொண்டார்கள்.

“சம்பந்தியோட செரிக்கு செரி உக்காந்து ரெண்டு வார்த்த பேச முடியுமா?” என்று நேரடியாகவே கேட்டார்கள். கொன்னு பொதச்சிருக்கணும். நம்ம ஊர்ல இப்படியொண்ணு நடக்க விட்டுடக்கூடாது என்ற சங்கல்பம் எல்லோருடைய முகத்திலும் தெரிந்தது.

சொல்லி வைத்தது போல இன்னொன்று.

ரிக் வண்டி வைத்திருக்கும் வாட்டசாட்டமான இளைஞன் அவன். இரும்புவேலை செய்யும் விஸ்வகர்மா சாதி. ஒல்லியாக சிவப்பாக நீள முடியுடனிருந்த பூஞ்சையைப் போன்ற அழகான பெண் அவள். இருவரும் ஓடிப் போய்த் திருமணம் செய்துகொண்டு ஈரோட்டில் பையன் வீட்டில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. சங்கத்துக்காரர்கள் அந்த வீட்டுக்குப் பெண்ணின் அப்பா அம்மாவுடன் போனார்கள். பெண்ணின் அம்மா மூலையில் ஒண்டிக் கொண்டு நின்ற பெண்ணை மாறி மாறி அறைந்தாள்.

“கௌம்புடி”

தடுக்க முயன்ற சம்பந்திக்கும் திட்டு கிடைத்தது. “நீயெல்லா ஒரு பொம்பளையா? சிறுசுக தப்புப் பண்ணுனா திருத்தி வெக்காம கலியாணம் மூச்சுப் பாத்துட்டிருக்கற....”

மிரட்டல். அழுகை. ‘இங்கியே சுருக்குப் போட்டுட்டு செத்துப் போவேன்’ என்ற இறுதி அஸ்திரம். பெண் அம்மாவுடன் கிளம்பி வந்தாள்.

இனி அவள் என்னவாவாள் என்பது ஜெகதீஷுக்கு திகைப்பாக இருந்தது. ‘இன்னொரு கல்யாணம் செய்து வைத்தாலும் அது சரியாக வருமா? நல்லபடியாகக் குடும்பம் நடத்த முடியுமா? ஊர் கூடிக் கல்யாணம் செய்து வந்தவளையே ஆயிரம் கேள்வி கேட்பவர்கள் இந்த மாதிரி பெண்ணை என்ன செய்ய மாட்டார்கள்?’

சாகட்டும் என்று நினைத்துக் கொண்டான். ‘செஞ்ச தப்புக்குத் தண்டனை வேண்டாமா? ஒரு நாலு பேர அடக்கி வெச்சாத்தான் மத்த புள்ளகளுக்கு பயம் வரும். இல்லாட்டி இதுக்கு ஒரு முடிவே இல்லாமப் போய்விடும்’

‘நமது இளைஞர்கள் கடுமையாக உழைக்கின்றனர். மினுக்கிக் கொண்டிருக்க நேரம் இல்லை. பெண்கள் பின்னால் திரிவதில்லை. இதெல்லாம் செய்பவன் மீது காதல் வருகிறது. நாம்தான் புத்தி சொல்லித் திருத்தவேண்டும். அதை அப்படியே விட்டுவிட முடியாது’

இரண்டாவது மட்டத் தலைவர்களும், பெரியவர்களும் கதை கதையாகச் சொல்வார்கள்.

“நம்ம புள்ளைகளால அங்க போய் வாழ முடியாதுப்பா. காதலிக்கறப்ப கடனோ ஒடனோ ஒரு பைக் வாங்கி ஓட்டுவான். பொறவு வேலவெட்டிக்குப் போகோணுமில்ல. ஒழைக்கோணுமில்ல. செய்ய மாட்டான். பொளைக்க முடியாம புள்ளைக திரும்பி வரப் பாக்கும். எந்த மூஞ்சியோட வரும்? சேத்துக்க மாட்டாங்க. எத்தன புள்ளைக சுருக்குப்போட்டு செத்துப்போயிருக்குது தெரியுமா? கெணத்துக்கடவுக்கு அந்தப் பக்கம் ஒரு ஊர்ல ஒருபுள்ள ஓடிப் போயிருச்சு. ஊர்க்காரங்கல்லாம் போலீஸ் ஸ்டேசன் போகோணும், புடிச்சுட்டு வரோணும்ன்னாங்க. அய்யங்காரன் வேண்டான்னுட்டான். மொட்டையப் போட்டு கருமாதி சோறு போட்டு புள்ள செத்துப் போச்சுன்னுட்டான்”

“மானஸ்தன்” என்றார்கள் கேட்டுக் கொண்டிருந்தவர்கள்.

சில நேரங்களில் சங்கத்தின் உதவியால் நெருக்கடிகளின் போது ஜெகதீஷுக்குக் கடன் கிடைத்தது. அதுவே தர்ம சங்கடங்களையும் கொண்டுவந்தது. கொடுத்தவர்கள் திருப்பித்தர அவசரப்படுத்தவில்லை. ஆனால் மற்ற கடன்காரர்களிடமிருந்து வசூல் செய்ய உதவி கோரப்பட்டது. மெல்லத் தான் உள்ளூர் தலைவருக்கு தளபதியாகிக் கொண்டிருக்கிறோம் என்பது புரிந்தது. வசூல் செய்ய, தறிகளில் இருந்து பணம் வாங்கிக்கொண்டு ஓடிப் போகிறவர்களைப் பிடித்துவர இளைஞர்கள் குழு பைக்குகளில் சுற்றி வந்தது. உள்ளூர் தெருக்கள் மெல்லத் தங்கள் கட்டுப்பாட்டின் வருவதை உணர்ந்த போது அவர்களுக்குத் தங்கள் பொறுப்பு கூடிப்போனது போலிருந்தது. அவர்கள் தங்களைப் பாதுகாப்புப் படை என்று சொல்லிக் கொண்டார்கள்.

அப்போதுதான் தலைவர் மனோகரன் ஊருக்கு வந்தார். வெளிர் நீல ஜீன்சும் கோடுபோட்ட முழுக்கை வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தார். சிரித்த களையான முகம். பார்த்தாலே படித்தவர் என்ற எண்ணம் வரும் தோற்றம். சட்டென்று தோளில் கை போட்டுப் பழகிவிட்டார். அன்பாக விசாரித்தார். முதல்பார்வைக்குத் தோற்றத்தில் ஒரு முதிர்ச்சி தெரிந்தாலும் கவனித்துப், பார்த்தால் இளைஞர்தான் என்பது தெரிந்தது. வயது நாற்பதுக்குள்தான் இருக்கும். அதிராத பேச்சு. மற்றவர்கள் வீரம் பேசக் கேட்டுக்கேட்டு தலைவர் வந்தால் தீப்பொறி பறக்கும் என்றெல்லாம் நினைத்ததற்கு மாறாக அதிராமல் மென்மையாகப் பேசினார்.

போட்டோ எடுத்துக்கொண்ட போது "தொந்தி தெரியாம எடுங்கப்பா பங்காளிகள்லாம் நல்லா டிரிம்மா இருக்கறாங்க" என்று தன்னைத்தானே கேலி செய்து கொண்டார். வெள்ளிங்கிரி சற்றே அதிருப்தியுடன் முணுமுணுத்த போது "நம்ம பசங்க கிட்ட என்ன பந்தா?" என்று சிரித்தார்.

விவசாயிகளின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார். விசைத்தறி உரிமையாளர்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார், பிறகு மெல்லமெல்ல விஷயத்துக்கு வந்தார்.

"இனம் இன்று இருப்பது போல நாற்பதாண்டுகளுக்கு முன்பு இல்லை. அப்போது ஒருவர் வக்கீலுக்குப் படித்தால் குடியானவப் பையனுக்கு எதுக்கு வக்கீல் படிப்பு என்பார்கள். இப்போ எத்தனை வக்கீல், எத்தனை டாக்டர், எத்தனை மில் ஒனர். நாம் வளர்வோம். எல்லாவற்றையும் சரிசெய்து கொள்வோம். முஸ்லீம்கள், நாயக்கர்கள், வெள்ளைக்காரர்கள் எல்லோர் காலத்திலும் நாம் வாழ்ந்தோம். போராடினோம். வளர்ந்தோம். அதே போல இந்த விவசாயம், லாரி, தறி பிரச்சனைகளை சமாளித்துக் கொள்வோம். இது நமதுமண். நாம் காப்போம். உயிரைக் கொடுத்துக் காப்போம். ஆனால் நமது பெண்கள் நமது குல விளக்குகள், அவர்களின் மானத்தைக் காப்பதே முதல் கடமை"

மனோகரன் எல்லோருடைய வீட்டுக்கும் வந்தார். வீட்டில் உள்ளவர்களுடன் சகஜமாகப் பேசினார். தலைவர் வந்துபோன பத்து நாட்கள் அவரைப் பற்றியே பேச்சாக இருந்தது.

ஒருநாள் அந்தப்பேச்சு வந்தது. ஏப்பா, தலைவருக்கு பொண்ணு குடுத்து மச்சானாகிக்கறயா?

மனோகரனுக்குப் பெண்கள் எப்போதுமே அன்னியமாகத்தான் இருந்தார்கள். பெண்கள் நடுவிலேயே வளர்ந்திருந்தாலும் கூட ஒரு பெண்ணிடமும் அவனால் நெருங்க முடிந்ததில்லை. தனக்கே உரிய கவனத்தோடு பெண்களை ஆழ்ந்து கவனித்தவன் சிரித்துச்சிரித்து பேசுபவர்களையும், குழந்தைத்தனமான அல்லது சிறு பையன்கள் போன்ற முகமும் உடலமைப்பும் உள்ளவர்களிடம் பெண்கள் எளிதாக நெருங்கி விடுகிறார்கள் என்று முடிவு செய்தான்.

சற்றே முதிர்ச்சியான தோற்றம்கொண்ட தன்னைப்போன்ற ஆண்களிடம் பயம் வந்து விலகுகிறார்கள். இதற்குத் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது. காத்திருக்க வேண்டியதுதான். தந்திரங்களும், முரட்டுத்தனமுமான வாழ்க்கை வாழ்ந்தாலும் பெண்களிடமிருந்து விலகியே இருந்தாலும் மனோகரனின் அகக் காதல் அழகியலானது.

ஜெகதீஷின் வீட்டில் பூரணியைப் பார்த்ததும் அவனுள் தூங்கிக் கொண்டிருந்த ஏதோ ஒன்று விழித்துக் கொண்டது. அந்த மென்மையில், அந்தக் கண்களில் தெரிந்த பரிவில், மிரட்சியில் ஒரு பாதுகாப்பை மனது கண்டுகொண்டது.

பூரணியை மனோகரன் பெண்கேட்டு வந்தபோது பூரணி குடும்பம் கொஞ்சம் ஆடித்தான் போனது. மனோகரன் படித்தவன். அந்த அறிவுக்களை முகத்தில் தெரியும். கவர்ந்திழுக்கும் தோற்றம். எளிமையான குணம். ஜமீன் பரம்பரை. தலைவர். ஏராளமான சொத்துக்கு ஒரே வாரிசு. ஜெகதீஷிடம் சங்கப் பெரிசு ஒருவர் கேட்ட போது அவன் திக்பிரமையடைந்து போனான். தலைவர் தனக்கு மச்சானாவதா? அப்பனைப் பொருத்தவரை மனோகரனுக்கு மகளைக் கொடுப்பதில் எந்த

ஆட்சேபணையுமில்லை. அம்மாவுக்கு என்னதான் இருந்தாலும் இத்தனை வயது வித்தியாசத்தில் பெண்ணைக் கொடுக்க விருப்பமேயில்லை. இருபத்தியொரு வயதில் அல்லித் தண்டுபோல இருக்கும் அழகு பெண்ணுக்கு 15 வருட வித்தியாசத்தில் கட்டிக் கொடுப்பதா? அம்மா கிணற்றடியில் அப்பனிடம் சண்டை போட்டாள். கணவனும், மாமனார் மாமியாரும் சொன்ன காரணத்தைக் கேட்டு கப்சிப் என்று அடங்கிப் போனாள்.

“ஊர் மெச்சற தலைவனுக்கு மேல எந்த மாப்ளய நீ புடிக்கப் போற? காடு கடன்ல கெடக்குது. இந்தப் புள்ளய எவனுக்கு கட்டிக் குடுத்தாலும் சொத்துல பங்கு கேப்பான். பொறவு மகனுக்கென்ன மிச்சமிருக்கும்? எவனோ வந்து நொட்டீட்டு போறதுக்குத்தான் இத்தன காலம் பாடுபட்டமா? இருக்கிறதுல பாதியை மருமகன் கொண்டுட்டுப் போயிட்டான்னா மீதிய வெச்சு உன்ர பய பொளைக்க முடியுமா? தலைவருன்னா இந்தச் சில்லற விசியத்துக்கெல்லாம் வரமாட்டாரு. இந்தக் காசு அவரு செல்லுக்கு, பெட்ரோலுக்கே பத்தாது. அவருக்கென்ன அளகில்லையா? காசு பணமில்லியா? செல்வாக்கில்லியா?”

அம்மா அந்த நியாயத்தை ஒப்புக் கொண்டாள்.

அவளுக்கும் பணக்காரக்குடும்பத்தில் மகள் ராணி மாதிரி இருப்பதைப் பற்றிய கற்பனைகள் தோன்றின. எத்தன காலத்துக்குக்குதான் இங்க களுனிப்பானையோட மாரடிக்கறது? கோயமுத்தூர் போனா மட்டும் என்ன வாளுது? அங்கியும் வாடக வட்டி எல்லாம்தான. வயசு கொஞ்சம் அதிகம்னாலும் மாப்பிள்ளை பார்க்க நல்லாத்தான இருக்கான். ஊரே மெச்சற தலைவரு. எத்தன புள்ளக அதைக் கட்டிக்க காத்துக் கெடக்கறாங்க...

பூரணிக்கும் மனோகரனைப் பிடித்துத்தானிருந்தது. அந்த மென்மையான சிரிப்பும் உறுத்தாத பேச்சும் அடிக்கடி மனதில் ஓடிக் கொண்டிருந்தன. பூரணி அதுவரை எந்த ஆண்மகன் மேலும் காதல் கொண்டதில்லை. தன்னைச் சுற்றி வந்த இளைஞர்களை அவள் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. இளம் வயது நண்பனான பாஸ்கரை ஓரிருமுறை கல்லூரிக்கு அருகில் பார்க்க நேர்ந்த போதும் தனது எல்லை

என்ன என்பதை அவள் திட்டவட்டமாக அறிந்தே இருந்தாள். பாஸ்கர் மீது அவளுக்கு அன்பும் பரிவும் உண்டு. ஆனால் அது அவ்வளவுதான். தன்னால் தன் குடும்பத்துக்கு ஒரு அவமானம் வந்து விடக்கூடாது என்பதில் அவளுக்கு அசாத்தியமான பிடிவாதமிருந்தது. அதோடு சொத்து பிரிப்பது ஏதாவது நேர்ந்து விட்டால் தான் கோடாலிக்காம்பாக மாறிவிட்டதாக ஒரு பழி வருமே?

மனோகரன் பூரணியை முறைப்படி குடும்பத்துடன் பெண்பார்க்க வந்தான். ஆரம்ப கட்ட பேச்சுகள் முடிந்ததும் இருவரையும் தனியாகப் பேச அனுப்பினார்கள். இது இந்தப் பக்கங்களில் வழக்கமில்லைதான். ஆனால் கோரிக்கை தலைவரிடமிருந்து வரும்போது மறுக்க முடியவில்லை. கலியாணம் மூய்க்கப் போறவங்கதானே பேசுனா பேசிக்கட்டும் என்று ஆத்தா கூடச் சொன்னது ஆச்சரியமாவிருந்தது. மல்லிகைப் பந்தலருகே இருந்த சேரில் மனோகரன் உட்கார்ந்து கொண்டு அவளையும் உட்காரச் சொன்னான்.

“புக் படிப்பீங்களா?” மனோகரன் பன்மையில் கேட்டது அவளுக்குப் பிடித்திருந்தது. என்ன சொல்வது என்று தெரியாமல் சிரித்து மழுப்பினாள்.

“சினிமா பாப்பீங்களா?’’

“ம்”

“விஜய் பிடிக்குமா? அஜித்தா?”

“தனுஷ்” பூரணி சிரித்தபடி பதிலளித்தவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள். ‘இன்னொரு ஆணை அது நடிகனாக இருந்தாலும் பிடிக்கும் என்று வருங்காலக் கணவனிடம் சொல்வது சரியா? அவன் எப்படி எடுத்துக் கொள்வான்?’

“எனக்கும் பிடிக்கும். எங்க வீட்ல தனுஷோட எல்லா பட சிடியும் இருக்கு” மனோகரன் சிரிப்பு மாறாமல் சொன்னான். “நீங்க ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்களே?”

“நீங்க சிகரெட் பிடிப்பீங்களா?” பூரணி கேட்டாள்.

“எப்பவாவது” மனோகரன் மென்று விழுங்கினான்.

“இனிமேல் புடிக்கக் கூடாது”

“செரி. சிகரெட்டை நிறுத்தினா எனக்கு என்ன தருவீங்க?”

“போதும் வாடா...” என்று மனோகரனின் அம்மா குரல் கொடுக்கும் வரை அவர்கள் பேசிக்கொண்டே இருந்தனர்.

8

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள்...

கண்ணுசாமி இரவு ஷிப்ட் முடித்துவந்து காலைத் தூக்கம் போட்டுவிட்டு தோட்டத்தில் உட்கார்ந்திருந்தான். சங்கடமான எண்ணங்கள் மனதில் ஓடிக் கொண்டிருந்தன. கோவையிலிருந்து சென்னை வரை செல்லும் அவினாசி சாலை, தேசிய நெடுஞ்சாலை 47 அகலப்படுத்தப்படப் போகிறது. சாலையின் இருபுறமும் உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு நோட்டிஸ் வந்திருந்தது.

ஏற்கெனவே நூறு அடிக்கு மேல் அகலமான சாலை. இன்னும் இருநூறு அடி அகலமாக்கப்படப் போகிறதாம். விவசாயிகள் கதிகலங்கிப் போனார்கள். நிலத்தை அரசு எடுத்தால் ஏக்கருக்கு ஐநூறு ஆயிரம்தான் தரும். அதுவும் பத்து வருடம் கழித்துத்தான் தரும் என்று உள்ளூரில் அரசுக்கு நிலம் கொடுத்து அனுபவப்பட்டவர்கள் சொன்னார்கள். கண்ணுசாமி நிலத்தில் ஏறக்குறைய மூன்றில் ஒருபங்கு போக இருந்தது. முன்னூறு அடி அகலத்துக்கு ஒரு சாலையா? அப்படியென்ன அதில் செல்லும், எதற்கு இத்தனை அகலம் என்று கண்ணுசாமிக்குப் புரியவில்லை. யாராவது தவறு செய்கிறார்களா? விளையாடுகிறார்களா என்றும் குழப்பமாக இருந்தது. தனது இடத்தில் எதுவரை அடிபடும்? அந்த நட்டத்தை எப்படிச் சரிக்கட்டுவது என்ற கவலை அவனை அல்லும் பகலும் வதைத்துக் கொண்டிருந்தது.

மெல்லிய படபட சத்தத்துடன் ஒரு சாமுராய் பைக் வந்து தோட்டத்துப் படல் அருகே நிற்பதை சிந்தனையில் ஆழ்ந்திருந்த கண்ணுசாமி முதலில் கவனிக்கவில்லை. அரைக்கைச் சட்டை வெள்ளை வேட்டியில் இருந்த அந்த பைக்காரன் தன்னை நோக்கி வந்த போதுதான் அவன் நிமிர்ந்தான். வந்தவன் ஒல்லியாக நெடுநெடுவென்றிருந்தான். பார்த்தால் புதிதாகத் தோன்றியது. கோவைக்காரனாக இருக்கும். யாராக இருக்கும்? என்ற குழப்பத்துடன் கண்ணுசாமி உட்கார வைத்தான்.

வந்தவன் தன்னை ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் என்று

அறிமுகப்படுத்திக் கொண்டான்.

“ஏனுங் இந்த ஹைவேக்கு நெலம் எடுக்கறாங்க, நம்ம நெலத்துலயும் போகுதுன்னு கேள்விப்பட்டனுங்க. கவுர்மெண்ட் காரன் எடுத்துட்டான்னா மீதிய வெச்சு மாரடிக்கறது செரமமுங்க. நம்ம கிட்ட நல்ல பார்ட்டி இருக்குது. நெலத்தக் குடுத்துப் போடுங்க. நல்ல ரேட் வாங்கீறலாம். கவர்மென்ட் விஷயத்தை நாங்க பாத்துக்கறோம்” என்றான்.

வந்தவனின் பேச்சு சுருக்கென்று குத்திக் கடுங்கோபத்தை வரவழைத்து விட்டது. இங்கிதமில்லாமல் இப்படியே கவலையிலிருப்பவர்களிடம் பேசுவார்கள்? அதே நேரம் கண்ணுசாமிக்கு ஆச்சரியமாகவுமிருந்தது. ஆர்ஜிதத்தில் இருக்கும் நிலம். இதைப் பெரும்பாலும் வாங்க மாட்டார்கள். நகரங்களில் இருந்து இவ்வளவு தொலைவில் கடை கண்ணி எதுவும் கட்ட முடியாது. அப்புறம் ஏன் வாங்குகிறார்கள்? தான் நினைத்தது போல இது எல்லாமே ஏதோ ஒரு விளையாட்டாக இருக்குமோ? கண்ணுசாமிக்கு நிலத்தை விற்கும் சிந்தனையே இல்லை. இவர்களால் சமாளிக்க முடியும் என்றால் நம்மாலும் முடியும். மறுத்து விட்டான்.

கண்ணுசாமி மில்லுக்குத்தான் போய்க் கொண்டிருந்தான். அவனது நிலம் சின்னியம்பாளையத்துக்குக் கிழக்கே நெடுஞ்சாலை ஓரமிருந்தது. நல்ல அகலமான சாலை. இருமருங்கிலும் புளிய மரங்கள் இருக்கும். அங்கங்கே ஆட்கள் இளநீரும், வெள்ளரியும், கொய்யாவும் விற்றுக் கொண்டிருப்பார்கள். கிராமங்கள் நெருங்கும் போது புரோட்டா கடைகள் வரும். பகலில் வெள்ளையடித்த சுவர்களும், சிமெண்ட் தரையும் ஓட்டுக் கூரையும் கொண்ட கடைக்குள் சாப்பாடு நடக்கும். இரவில் கடைமுன் இருக்கும் திறந்த முற்றங்களில் போடப்பட்டிருக்கும் மேசைகளில் உணவு பரிமாறப்படும். ஊர் இளைஞர்களுக்கும் ஈரோடு, திருப்பூருக்கு பைக்கில் பறக்கும் இளவட்டங்களுக்கும் இந்தக் கடைகள் பிடிக்கும். இருளோடிக் கிடக்கும் சாலையில் வாகனங்கள் ஒளிவெள்ளத்தைப் பீச்சியபடி விர் விரென்று பறக்கும்.

கடை முன் தொங்கவிடப்பட்டிருக்கும் பச்சை டியூப் லைட்டின் ஒளி இருளோடியிருக்கும் சுற்றுப்புறத்துக்கு ஒரு மாயத்தனமையை அளித்துக்

கொண்டிருக்கும். இதன் வெளிச்சம் கண்கூசாத தொலைவில் வீசியடிக்கும் காற்றுக்கு முதுகு காட்டியபடி நின்று சிகரெட் பிடிப்பதில் அப்படியொரு சுகம்.

கோயமுத்தூர் எங்கோ தொலைவில் இருந்தது. திருப்பூரும், அவினாசியும் அதைவிடத் தொலைவில் இருந்தன. எந்த மாற்றமும் சாத்தியமில்லை. வாழ்க்கை நிம்மதியாகத்தான் போய்க் கொண்டிருந்தது. கண்ணுசாமி கடினமான உழைப்பாளி. ஒருநாளும் மில்லுக்குத் தேவையில்லாமல் லீவு போட மாட்டான். வீட்டில் இருக்கும் போதெல்லாம் காட்டில்தான் இருப்பான். பத்து மாடுகள் இருந்தன. தென்னந் தோப்பு இருந்தது. அப்போதுதான் இந்த பூகம்பம் வெடித்தது.

ஊர்க்காரர்கள் ஒன்று கூடி வழக்குப் போட முடிவு செய்து வக்கீலைப் பார்க்கப் போனார்கள். வக்கீல் 'நில ஆர்ஜிதச் சட்டப்படி ஒரு நிலம் வேண்டும் என்று அரசு முறைப்படி முடிவுசெய்தால் அரசு அந்த நிலத்தை எடுத்துக் கொள்வதை தடுக்க முடியாது. வேண்டுமானால் விலையைக் கூட்டி வாங்கித் தருகிறேன்' என்றார்.

நெடுஞ்சாலையோர கிராமங்களில் எல்லாம் கூட்டங்கள் நடந்தன. ஒவ்வொரு கூட்டமும் சண்டை, கூச்சல் குழப்பத்தில் முடிந்தது. கோபக்காரர்கள் கேஸ் போட வேண்டும். நிலத்தைக் கைப்பற்றவரும் அரசு அதிகாரிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். சாலையைத் தொடர்ந்து மறித்து அதனோரம் இருக்கும் பெருநகரங்களை ஸ்தம்பித்துப் போகச் செய்யவேண்டும் என்று நரம்பு புடைக்கக் கத்தினர். வேறு பலருக்கு சந்தேகங்கள் இருந்தன. ஒவ்வொரு முறை நிலம் எடுக்கும் போதும் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் இதுவரை எல்லாப் போராட்டத்தையும் முறியடித்து அரசே வென்றிருக்கிறது. எனவே மந்திரி, எம்.எல்.ஏவைப் பார்த்து ஏதாவது வழி செய்யமுடியுமா என்று கேட்க விரும்பினர்.

கண்ணுசாமிக்கு எது சரி என்று தெரியவில்லை. இந்த நிலையில் நிலத்தை ஒருவன் விலைக்குக் கேட்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இது பற்றி ஊரில் பேச வேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

மறுநாள் ஒரு மாருதி எஸ்டீம் வந்து ஒய்யாரமாக தோப்புக்கு வரும் சாலையை அடைப்பது போல நின்று கொண்டது. வெள்ளையும் சொள்ளையுமாக ஒரு தடியான ஆள் இறங்கி சிநேகிதமாக முறுவலித்தார். அறுபது வயதிருக்கலாம்.

“கண்ணுசாமிங்கறது...”

“நாந்தானுங்...”

“நமக்கு நெலம் வேண்டியிருக்கு...” என்று இழுத்தார்.

“அதுக்கு எதுக்கு நம்மகிட்ட வந்து நிக்கறீங்க?” திரும்பவும் இந்தப் பேச்சை எடுத்ததில் கண்ணுசாமிக்கு எரிச்சல் வந்தது. ‘ரோட்டுக்குக் கொஞ்சம் எடுத்தால் போய்ச்சாகிறான். இந்த ஒன்றரை அணா காசுக்குப் பரம்பரை நிலத்தை ஏன் விற்க வேண்டும்? அப்படி என்ன விலை கொடுத்து விடப்போகிறார்கள்?’

“இத பாருப்பா” புதியவர் தொடங்கினார். ‘ங்க‘ போடாமல் பேசும் ஆட்களை கண்ணுசாமிக்குப் பிடிக்காது. எகிறிவிடலாமா என்று நினைத்தவன் சரி பெரிய சீவன் போகட்டும் என்று விட்டுவிட்டான்.

“இங்க ரோடு வரப்போகுது. ஆறு ரோடு ஒண்ணா வரப்போகுது. உம்பூமில பாதி போயிடும்”

“அதான் தெரியுமே”

“நீ நெனைக்கற மாதிரி இல்ல. அது வந்தா வெவசாயம் எல்லாம் பண்ண முடியாது”

“ஏன் ரோட்ல போறவன் உள்ள வந்து ராகி, சோளம் போடக்கூடாதுன்னு கையப் புடிச்சுக்குவானா?” கண்ணுசாமி நக்கலாகக் கேட்டான்.

அந்த மனிதர் கொஞ்ச நேரம் கண்ணுசாமியை உற்றுப் பார்த்துவிட்டு “சரி மனச மாத்திட்டீன்னா என்ன வந்து பாரு. சண்முகத்துக்குத் தெரியும்” என்று சொல்லிவிட்டும் போனார். பக்கத்து நிலங்களிலும் கேட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. அங்கெல்லாம் அடிதடி நடக்காத குறை.

சாலை வேலை தொடங்கியது. ரோடு போடுவது ஊருக்கு ஒன்றும் புதிதல்ல. லாரி வந்து ஜல்லியைக் கொட்டிவிட்டுப் போகும். புல்டோசர் வரும். சிறுவர்கள் புல்டோசர் பின்னால் ஓடுவார்கள். மதியம் அதன்மீது ஏறி உட்கார்ந்து கொள்வார்கள். புத்தம் புதிய தார்ச்சாலை பார்க்க அவ்வளவு அழகாக இருக்கும்.

ஆனால் இந்தப் புதிய சாலை வேறு விதமாக இருந்தது. சாலை முன்னூறு அடிக்கு பரந்து விரிந்திருக்க அதன் ஒரு பாதியில் உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் கொண்டு அசுர வேலை தொடங்கியது. சாலை ஓரம் பெரும் பெரும் சிமெண்ட் பாளங்கள் செய்யப்பட்டன. பெரும் குழிகள் தோண்டப்பட்டு ராட்சஸ தூண்கள் எழுப்பப்பட்டன.

கண்ணுசாமிக்கு அரசு கொடுத்த பணம் அவ்வளவு குறைவு இல்லை. மார்க்கெட் மதிப்பு என்று சார் பதிவாளர் அலுவலகத்தில் கேட்கப்படும் தொகையை அரசு கொடுத்தது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஆனால் சாலையோரம் பெரும் கம்பெனியே இயங்குவது போல வேலை நடந்ததது. சாலை ஓரத்தில் இருபதடி உயரம் கொண்ட இயந்திரங்களைக் கொண்டு கலவை கலக்கப்பட்டது ஐந்தடி உயரமும் நான்கடி அகலமும் ஐம்பதடி நீளமும் கொண்ட ராட்சஸ சிமெண்ட் பாளங்கள் நூற்றுக்கணக்கில் செய்யப்பட்டன.. நினைத்து நினைத்து சாலையோரம் போர் போடப்பட்டது. ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான அடி ஆழம். சீக்கிரத்தில் அருகில் உள்ள கிணறுகள் வற்றிப் போயின. சாலையில் இருந்து எப்போதும் புழுதிப் படலம் தோட்டத்தை நோக்கி வந்து கொண்டே இருந்தது.

தண்ணீர் போதாமல் தென்னை மரங்களில் காய்ப்புக் குறைந்து போனது. சோளப் பயிரைப் பழுதிப் படலம் போர்வைபோலப் போர்த்திக் கொண்டது. இன்றோ நாளையோ வேலையை முடித்துவிட்டு போய்த் தொலைவார்கள் என்று நினைத்தால் அது ஒன்றும் முடிகிற பாடாய்த் தெரியவில்லை. நான்கைந்து கிலோமீட்டருக்கு ஒருமுறை மாபெரும் மேம்பாலங்கள் உருவாகின. கோயமுத்தூர் மேம்பாலத்தைப் பார்த்து எங்கள் ஊரில் மேம்பாலம் இருக்கிறது என்று பெருமைப்பட்டது எவ்வளவு வேடிக்கை. இப்போது மலை போன்ற மேம்பாலங்கள் சாலை முழுவதும்.

கண்ணுசாமியின் நிலத்தோரம் சர்வீஸ் ரோடு வந்தது.

கண்ணுசாமி சட்டென்று புரிந்து கொண்டான். அந்த ஆள் ஏன் வந்து தனது இடத்தைக் கேட்டான் என்று.

கௌரவம் எல்லாம் பார்க்காமல் நேராக தோட்டத்தை விலைக்குக் கேட்ட அவரிடம் சென்று பேரம் பேசினான். “சரி உனக்குச் சேர்த்துத் தர்றேன். ரொம்ப ஓரியாடாத” என்று சலித்துக் கொண்டார். “ஆனா கண்ணுசாமி ஒரு வேல செய். ரோட்டோரம் இன்னொரு நாப்பது ஏக்கர் பாரு” என்றார். கண்ணுசாமி ரியல் எஸ்டேட் முதலாளியானது இப்படித்தான்.

பிரம்மாண்டமான சாலை அமைக்கப்பட்டதும் ஏராளமான தொழிற்சாலைகள் வந்து குவிந்தன. நிலத்தின் விலை பன்மடங்கு உயர்ந்தது. ஆனால் அதற்குள் ஏராளமான நிலங்களை கண்ணுசாமியும் அவனது காட்பாதரான தாமோதரனும் கைப்பற்றிக் கொண்டனர். தாமோதரன் கண்ணுசாமியை முழுமையாக நம்பினார். அவருக்கு ஏராளமான தொடர்புகள் இருந்தன. அரசுத் திட்டங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பே அவருக்குத் தெரிந்து விடும். எங்கே பஸ் நிலையம் வருகிறது, எங்கே கல்லூரி வருகிறது எல்லாம் அவருக்குத் தெரிந்திருந்தன. கண்ணுசாமி எங்கேயும் போய்விட மாட்டான் என்பதும் அவருக்குத் தெரியும். எனவே வாங்கிய நிலங்களை அவனது கட்டுப்பாட்டிலேயே விட்டு வைத்திருந்தார்.

தாமோதரனுக்கு விழுப்புரம் பக்கம். சென்னையில் தொழில் செய்த அனுபவம் உண்டு. அவருக்குக் கோவை வித்தியாசமாக இருந்தது. சென்னையில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு கட்டைப்பஞ்சாயத்துத் தலைவன் இருந்தான். உள்ளூர் ரௌடிகள் இருந்தார்கள். எல்லோருக்கும் கொட்டி அழ வேண்டும். உள்ளூர் தலைவனிடம் எல்லா சாதி ஆட்களும் இருப்பார்கள். இங்கே அந்த மாதிரி பேட்டை ரவுடிகள் இல்லை. ஆனால் சாதி இருந்தது. எல்லா கட்சிகளிலும் ஒரே சாதி ஆட்கள் இருந்தார்கள். ஒரு விவகாரம் என்றால் சாதி ஆட்கள் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். அந்தச் சாதியில் ஒரு வலிமையான ஆள் இருந்து விட்டால் போதும், உள்ளூரில் எல்லாவற்றையும் சாதித்துக் கொள்ளலாம் என்பது போல

இருந்தது நிலைமை.

இது ஒன்றும் தாமோதரனுக்குப் பிரச்சினை இல்லை. எடுக்க வேண்டுமென்றால் கொடுக்க வேண்டும் என்பது தானே விதி!

கண்ணுசாமியைச் சுற்றி ஒரு கும்பல் உருவானது. கண்ணுசாமி கோவில் விசேஷங்களுக்கும் கல்யாணங்களுக்கும் அள்ளி விட்டான். ஆளும் கட்சியில் வட்டச் செயலாளர் பதவியைக் கைப்பற்றினான்.

அதேநேரம் அரசு நகரின் ஒருபுறம் நூறு ஏக்கர் நிலத்தை வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கு எடுக்க இருப்பதாக அறிவிப்பு வெளியிட்டது. அங்கே ஏற்கெனவே அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வாங்கி வீடுகட்டிப் பலர் குடியிருந்து வந்தனர். அவர்களிடையே அந்த அறிவிப்பு பெரும் பீதியை ஏற்படுத்தியது. தாமோதரனும் கண்ணுசாமியும் மனைகளையும் வீடுகளையும் குறைந்த விலைக்கு வாங்கிக் குவித்தனர். தாமோதரன் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். ஒரு வீட்டை இடித்து இன்னொரு வீடுகட்ட வேண்டியதில்லை என்று நீதி மன்றம் முன்பு ஒரு முறை தீர்ப்பளித்திருந்ததை எடுத்துக் காட்டித் தடை உத்தரவு பெற்றார்.

அப்போது அந்த பெரிய பஸ் முதலாளிக்கு தன் பஸ்களை நிறுத்த ஒரு பெரிய இடம் தேவைப்பட்டது. தாமோதரனும் கண்ணுசாமியும் அவரை அணுகி தங்கள் இடத்தை வாங்கிக் கொள்ளும்படி வற்புறுத்தினர். வற்புறுத்தல் மிரட்டலாக மாறியதும் பஸ் கம்பெனி தாமோதரனை முதல்வர் மட்டத்தில் போட்டுக் கொடுத்தது. தாமோதரன் சட்டென்று எல்லாவற்றையும் விட்டுவிட்டு சாதுவாக நல்ல பிள்ளையாக மாறினார். ஏறக்குறைய துறவு பூண்டது போல அமைதியாகிவிட்டார்.

அந்த நேரத்தில் அவர் கண்ணுசாமி மூலமாகவே இயங்க வேண்டியதாகிவிட்டது. கண்ணுசாமி முடிவுகளைத் தானே எடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. கோவை திருப்பூர் மேட்டுப்பாளையம் பகுதிகளில் வில்லங்கமில்லாத நிலங்கள் வாங்கி டி.டி.பி அப்ரூவல் பெற்று சைட் போடவும், வீடுகள் கட்டிவிற்கவும் தொடங்கினான். உயர் மத்தியதர வர்க்கத்துக்கு எது எதெல்லாம் பயமோ அதையெல்லாம் காசாக்கத் தொடங்கினான். சுற்றுச்சுவர் போடபப்ட்ட பாதுகாப்பான டவுன்ஷிப்,

வீடுகட்ட ஒப்புதல், அரசு அங்கீகாரம், கடன் ஏற்பாடு செய்வது, சொத்துவரி, மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு அனைத்தையும் கம்பெனி பார்த்துக் கொண்டது.

சமீப காலமாக கண்ணுசாமி தனது பார்வையைக் காமாட்சிபுரம் பக்கம் திருப்பியிருந்தான். மலைமேல் இருக்கும் நகரத்தில் வேலை செய்து ஓய்வு பெறும் அதிகாரிகளும், நகர நெரிசலில் இருந்து வெளியேற விரும்பும் கோவை பாலக்காடு பணக்காரர்களும் கண்ணுக்கு அழகான மலையோரப் பகுதிகளில் வீடு கட்டிக் குடியேற விரும்பினர். அது தொடர்பான ஆரம்ப கட்ட வேலைகளுக்குக் காமாட்சிபுரம் வந்த போதுதான் மனோகரனுடன் உறவு ஏற்பட்டது.

அந்த நேரத்தில்தான் பொள்ளாச்சி உடுமலை சுற்றுப்புறங்களை நோக்கி மில்கள் நகரத் தொடங்கின. பண்ணை வீடுகளோடு மில்களுக்கான இடங்களும் கண்ணுசாமியின் தொழிலின் ஒரு பகுதியானது.

தவிர கண்ணுசாமியே பொங்கியண்ணன் ஸ்பின்னிங் மில் தொடங்கினான். காமாட்சிபுரம் சாலையில் ஊரிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் மில் அமைந்திருந்தது. எங்கெங்கிருந்தோ பெண்களைக் கூட்டிவர ஆட்கள் நியமிக்கப்பட்டனர். அதற்குக் கமிஷன் கொடுக்கப்பட்டது. பதினேழு அல்லது பதினெட்டு வயதுப் பெண்களும், ஆதரவற்ற பெண்களும் அங்கே வேலைக்கு எடுக்கப்பட்டனர். உள்ளூர் பெண்கள் பெரும்பாலும் வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை. ஸ்கீம், நலவாழ்வுத்திட்டம் என்றும் பெயர்கள் வைத்துக்கொள்வார்கள்.

உணவு கம்பெனியிலேயே வழங்கப்படும். ஒரு நீள அறையில் இருபது பேர்கள் தங்க வைக்கப்படுவார்கள். வாரம் ஒருமுறை லீவு வழங்கப்படும். அந்த நாட்களில் ஏதாவது வாங்க வெளியே செல்லும் பெண்களோடு நிர்வாகத்தைச் சேர்ந்த ஆள் ஒருவரும் வருவார். வருடம் ஒருமுறை ஊருக்குச் செல்லவும் லீவு விடப்படும். அப்போதும் திரும்பி அழைத்து வர உள்ளூர் ஏஜெண்டுகள்.

இருபது பேர்கள் என்றால் உண்மையில் நாற்பது பேர். ஏனென்றால் இரண்டு ஷிப்ட்.

மூன்று ஆண்டுகள் வேலை செய்தால் அறுபதாயிரம் ரூபாய். இடையில் உடல்நிலை சரியில்லாமல் வேலையை விட்டுப் போய்விட்டால் பணம் கிடைக்காது. பல பெண்கள் இடையில் ஓடிவிடுவார்கள். இடையில் சந்தேகப்பட்டு வரும் அப்பா அம்மாவை மிரட்டி அனுப்ப உள்ளூரில் கண்ணுசாமிக்கு உதவி தேவைப்பட்டது.

சிக்கல் என்னவெனில் கண்ணுசாமி ஆளுங்கட்சியில் ஒரு பிரமுகர். அவனால் அந்தக் கட்சியைவிட்டு வெளியே வரமுடியாது. ஆனால் உள்ளூர் வியாபார வேலைகளுக்கு மனோகரனின் சங்கம் தேவைப்பட்டது.

கண்ணுசாமிக்கு வேறு வழியில்லை. தனது முதலீடு இருக்கும் இடங்களில் தனக்கு அடியாள் பலம் மட்டுமல்ல மக்கள் ஆதரவும் இருக்க வேண்டும். தன்னைப் போன்றவர்கள் ஆளுங்கட்சி ஆதரவை மட்டும் நம்பியிருக்க முடியாது.

கண்ணுசாமி போன்றவர்களின் உதவியோடு மனோகரனின் அமைப்பு எழுபது கிலோமீட்டர் தூரத்துக்கு விரிந்து பரவியது. கோவை திருப்பூர் கல்லூரிகளும் கூட அந்த வெக்கையை உணரத் தொடங்கியிருந்தன. ஒரு வாரத்துக்கு ஒரு தாலுக்கா என்ற விதத்தில் சங்கம் பரவிக்கொண்டே இருந்தது. அடுத்து வரும் தேர்தலில் மனோகரனின் சங்கம் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாற வாய்ப்பிருக்கிறது என்று ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி வட்டாரங்களில் பேசிக் கொண்டனர். அரசின் அத்தனை கண்களும் மனோகரனை நோக்கித் திரும்பின.

மனோகரனின் மீது தாக்குதல் விரைவில் நடக்கும் என்று அவனது உள்ளுணர்வு சொன்னது. ஆளும்கட்சிக் கூட்டங்களில் கிசுகிசுப்புகள், விசாரணைகள், பொருள்பொதிந்த புன்னகைகள்... ஆனால் எங்கிருந்து எப்படித் தாக்குதல் தொடங்கும் என்று ஊகிக்க முடியவில்லை. நடக்கும் பட்சத்தில் தான் என்ன நிலை எடுக்க வேண்டும் என்று முடிவெடுக்க வேண்டியிருந்தது.

9

மல்லிகை காமாட்சிபுரத்தில் புதிதாகத் திறக்கப்பட்டிருந்த சிறிய டிபார்ட்மெண்டல் ஸ்டோர். வழக்கமாக வராம் இருமுறை பூரணி இந்தக் கடைக்கு சாமான் வாங்க வருவாள். கடை சூப்பர்வைசர் பயபக்தியுடன் பூரணியின் பின்னாலேயே வந்து கொண்டிருந்தான். ஒரு சிப்பந்தி அவள் காட்டும் பொருட்களை டிராலியில் வைத்து பில் போடும் இடத்துக்குத் தள்ளிக்கொண்டு போனான். "நீங்க போய் கார்ல உக்காருங்கம்மா. கொண்டு வந்து வெச்சர்றோம்" என்று சூப்பர்வைசர் அவளை அனுப்பி வைத்தான். கார் கதவில் கை வைக்கும் போது தற்செயலாகத் திரும்பியவள் பஸ் ஸ்டாண்டில் சாய்ந்து நின்றபடி தன்னையே பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கரைப் பார்த்து விட்டாள்.

தன் விழிகள் வியப்பால் விரிவதையும் மகிழ்ச்சி ஊற்றெடுத்துப் பொங்குவதையும் உணர்ந்தாள். ஒரு விநாடியும் சிந்திக்காமல் அவனை நோக்கி நடந்தாள்.

"நல்லாருக்கீங்களா?" முகம் மலரச் சிரித்தபடி அவனிடம் கேட்டாள். திருமணமான பெண்கள் பழைய நண்பர்களைப் பார்க்கும்போது ஒரு பெரிய மனிதத் தோரணையையும் அக்கறையும் வெளிப்படுத்துகிறார்கள். அதில் அவர்கள் வயதில் மூத்தவர்கள் போலவும் சிறுவர்களிடம் பேசுவது போலவும் ஒரு தோற்றம் இருக்கும்.

பாஸ்கர் தடுமாறினான். பூரணி கடைக்குள் போகும் போதே அவன் கவனித்து விட்டான். தண்ணீர் ஜடையில் கூந்தல் விரிந்து இடுப்பு வரை முதுகின் மேல் படிந்திருந்தது. அதில் ஒரு பொன்னிறம் தெரிந்தது. இந்தப் பொன்னிறக் கூந்தல்... சேலை இடைவெளியில் தெரிந்த இடையின் வெண்ணெய் போன்ற வெளிர் மஞ்சள் நிறம்... உயரம்... பூரணியேதான். அவளோடு பேச வேண்டும் என்றும் மனது துடித்தாலும் அது சரியில்லை என்று நினைத்துக்கொண்டு பேசாமலிருந்து விட்டான். ஆனால் அவளே இப்படி நேராக வந்து பேச்சைத் தொடங்குவாள் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அந்தப் பெரிய விழிகள் அவனை அளவெடுத்தன. அந்த முகத்துக்கு

ஒரு குழந்தைத் தனத்தையும் அப்பாவித்தனத்தையும் தரும் அந்தக் கொழுவிய கன்னங்கள்... கன்னங்களில் மென்மையை அதிகரித்துக் காட்டிய இளஞ்சிவப்பு இதழ்கள். மிக நேர்த்தியாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்த புருவங்கள். எந்த ஆணையும் ஒரு விநாடி நிலைதடுமாறச் செய்துவிடும் அழகு.

பாஸ்கர் சிரிக்க விரும்பினான். இல்லை, முகம் ஒத்துழைக்க மறுத்தது.

எப்போதும் சோகம் ததும்பும் முகத்தோடு சற்றே தயக்கத்துடன் பேசும் பூரணி தன்னம்பிக்கையும், துணிச்சலும் கொண்டவளாக மாறியிருந்தாள். கண்கள் முகம் எல்லாமே சிரித்தன.

கரும்பச்சை நிற சில்க் காட்டன் புடவை பணச்செழுமையைக் காட்டியதோடு உடலின் மென்மையையும் அதிகப்படுத்திக் காட்டியது.

“நல்லாயிருக்கேன். நீங்க...” பாஸ்கர் எப்படியோ சமாளித்துக்கொண்டு பதிலளித்தான். பாஸ்கரும் வளர்ந்து முழுமையான இளைஞனாக மாறியிருந்தான். முகத்திலிருந்த குழந்தைத்தனம் மாறி தீவிரத் தன்மை வந்திருந்தது. நீண்ட முகமும் கன்னத்தில் படிந்திருந்த மெல்லிய தாடியும் அவனை முற்றிலும் அன்னியனாகக் காட்டின. அவன் கருப்பு முழுக்கை சட்டையும் காக்கி பேண்டும் அணிந்திருந்தான். கல்லூரியில் பார்த்ததை விட இன்னும் கருத்துப் போயிருந்தான். ஆனால் குறுகிய இடையும் விரிந்த வடிவான தோட்களும் அவனை இன்னும் கவர்ச்சியாகக் காட்டின.

ஆரம்ப கட்ட விசாரிப்புகளுக்குப் பிறகு “இங்க என்ன பண்றீங்க?” என்றாள் பூரணி.

“தெரிஞ்சவரு ஒருத்தரைப் பாக்க வந்தேன்”

“யாரு இங்க உங்களுக்குத் தெரிஞ்சவரு?”

“ஒருத்தர் இருக்காரு” பாஸ்கர் மழுப்பியதும் ஏனோ அது பெண்ணாக இருக்கக் கூடும் என்று தோன்றியது.

“வீட்டுக்கு வாங்க” பூரணி முறுவலும் பெருந்தன்மையும் மாறாமல்

அழைத்தாள்.

“இன்னொரு நாள் வர்றங்க”

பூரணி காரை நோக்கி நடந்தாள். அவள் திரும்பி தன்னைப் பார்ப்பாள் என்று பாஸ்கர் நினைத்தான். ஆனால் அவள் திரும்பவில்லை. பூரணியிடம் எப்போதும் ஒரு அசாதாரணமான அமைதியும் அடக்கமும் தெரியும். பாஸ்கர் மீதான அன்பை அவள் மறைத்ததில்லை. ஆனால் ஒருபோதும் அது அடுத்த கட்டத்துக்குப் போக அனுமதித்ததுமில்லை. இப்போதும் அப்படித்தான். மிக இயல்பாகப் பேசி மிக இயல்பாக வீட்டுக்கு அழைத்தாள்.

பூரணி பாஸ்கரை கடைசியாகப் பார்த்தது ஒரு கல்லூரி விழாவில். இருவரும் நேரெதிரே பார்த்துக்கொண்டார்கள். பாஸ்கர்தான் முதலில் ஹாய் சொன்னான். பூரணி தெரிந்த பையன்களைப் பார்த்தால் புன்னகையுடன் தலையசைத்துவிட்டு விலகிச் சென்றுவிடுவாள். அன்று இருந்த விழா மனநிலை, அந்தக் குழந்தைப் பருவத்து நினைவுகள் எல்லாம் சேர்ந்து பேச்சு வளர்ந்தது. இருவரும் விழா இரைச்சலிலிருந்து விலகி ஒரு படிக்கட்டில் உட்கார்ந்தார்கள்.

பாஸ்கர் தான் அவ்வப்போது வேலை செய்துகொண்டே படிப்பதாகச் சொன்னான். வக்கீலுக்குப் படிக்கும் விருப்பம் இருப்பதாகவும் சொன்னான். பூரணி மனதுக்குள் பதைத்துக் கொண்டிருந்தாள். அன்னிய ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஒரே விதமான உறவுதான் ஏற்பட முடியும் என்று உறுதியாக நம்பியிருந்த காலம் அது. ஏதாவது ஒரு கட்டத்தில் பாஸ்கர் நெருங்க முயற்சி செய்வான் தான் அதைத் தவிர்த்து அவனைப் புண்படுத்த நேரிடும்... இருந்த ஒரே நண்பனை எத்தனையோ ஆண்டுகள் கழித்து மீண்டும் சந்தித்திருக்கிறாள். அவனையும் உடனே இழக்க நேரிடலாம் என்ற எண்ணம் கவலையளித்தது.

ஆனால் பாஸ்கர் வேறு ஏதோ நினைவுகளில் மூழ்கியிருந்தான். பூரணி கேட்டபோது “ஒரு நண்பனுக்குப் பிரச்சினை” என்று மட்டும் கூறினான். மேற்கொண்டு விளக்கவில்லை. அவளைப் பற்றிய

விவரங்களையும் கேட்கவில்லை. அந்த முன்னிரவுப் பொழுதில் அவனது அண்மை இனம்புரியாத மகிழ்வூட்டினாலும் அவன் முற்றிலும் அன்னியனாகிவிட்டது போலத்தானிருந்தது. நிரப்பவே முடியாத இடைவெளி இருவருக்கும் இடையே தோன்றிவிட்டிருந்தது. அந்தப் புளியந்தோப்பு நாட்களெல்லாம் எப்படி சாத்தியமானது என்பதே அவளுக்குப் புரியவில்லை.

அவனிடம் விசித்திரமான ஒரு கேள்வி கேட்டாள். "உங்க ஊட்ல எல்லாம் பொண்ணுகளுக்கு என்ன செய்வீங்க?"

பாஸ்கர் "ஏதோ முடிஞ்சதச் செய்வோம்" என்றான்.

"சொத்துக் குடுப்பீங்களா?"

"சொத்தா... எங்களுக்கேது சொத்து? ஆராவது சிட்டி பக்கம் போய் வாத்தியார் வேல, பேங்க் வேல, போலீஸ்கீலீஸ்ன்னு ஆயிருந்தா கொஞ்சூண்டு சொத்து இருக்கும்" என்று அலட்சியமாகச் சொன்னான்.

பஸ்ஸுக்கு நேரமாகிவிட பூரணி கிளம்பினாள். பாஸ்கர் தான் பின்பு வருவதாகக் கூறி விடையளித்தான். கொஞ்சதூரம் சென்று பூரணி திரும்பிப் பார்த்தபோது பாஸ்கர் உற்சாகமாகச் சிரித்துக் கை ஆட்டினான். தன்னை எந்த நெருக்கடிக்கும் தள்ளாமல் மிக நாகரீகமாகச் சந்தித்துப் பிரிந்த அவன் மீது அவள் கொண்ட நன்றியுணர்ச்சி நீண்ட நாட்களுக்கு இருந்தது.

பூரணி கார் கதவைத் திறக்கும் போதுதான் அவனுக்குத் தன் செல் எண்ணைத் தரவில்லை அவனிடமும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது நினைவுக்கு வந்தது. நினைத்திருந்தால் ஒரு நிமிடத்தில் திரும்பிச் சென்று என்ன கேட்க வேண்டுமோ கேட்டிருக்கலாம். ஆனால் பூரணி டிரைவரிடம் "போலாங்கண்ணா" என்றாள். எண் வாங்க மறந்தது தற்செயலாக நடந்ததா? அல்லது தனது உள்மனதில் உண்மையில் அவனை மேற்கொண்டு சந்திக்கவும் வீட்டுக்கு அழைத்து வரவும் விரும்பவில்லையா? என்று புரியவில்லை. தான் மனோகரன் போலவே சிந்திப்பதாக அவளுக்குத் தோன்றியது. வீட்டுக்கு பாஸ்கர் வந்தால்

என்னவாகிவிடும்? மனோகரன் மீது என்ன குறை சொன்னாலும் இந்தக் குறை சொல்ல முடியாது. அவளோடு யார் வந்தாலும் கட்டாயம் வரவேற்பான். ஆனால் அருகே கொட்டகையில் இருக்கும் சங்கத்துக்காரர்கள்...

மதியம் இரண்டிலிருந்து நான்குவரையான நேரத்தைப் பூரணி தனக்கே தனக்கானதாகக் கருதுவாள். காலையில் மகளைப் பள்ளிக்கு அனுப்பியவுடன் தனக்கும், மனோகரனுக்கும், மாமியாருக்குமான காலையுணவுக்காக ஒரு சமையல் நடக்கும். பின்பு சற்று ஓய்வுக்குப் பிறகு மதிய சமையல் தொடங்கிவிடும். எல்லாவற்றுக்கும் ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் பக்கத்தில் இருந்து பார்ப்பது பூரணிக்குப் பிடிக்கும்.

பெரும்பாலும் மதிய உணவுக்கு மனோகரன் வந்துவிடுவான். பூரணியோடு பேசிக் கொண்டே சாப்பிடுவது அவனுக்குப் பிடிக்கும். அவன் வர நேரமாகிவிட்டால் பூரணி காத்திருக்க மாட்டாள். அதற்குப் பதில் அவன் சாப்பிடும் போது உணவு மேசையில் கூடவே உட்கார்ந்திருப்பாள்.

பெண்கள் ஆண்கள் முன் நிற்கக்கூடாது, கணவன் வரும்முன் சாப்பிடக்கூடாது, பண விஷயங்களில் தலையிடக்கூடாது என்று தனது கட்சிக்காரர்கள் அரட்டல் உருட்டல் செய்து வருவதை மனோகரன் புன்னகையுடன் அங்கீகரித்தாலும் வீட்டில் வேறுவிதமாக இருப்பான். மணிக்கணக்கில் பூரணியோடு பேசுவதையும் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதையும் அவன் விரும்புவான். சங்கத்தில் அவனுக்கிருந்த தனிமையின் காரணமாக சங்க ஆட்கள் பற்றிய தனது அபிப்பிராயங்களைக் கூட அவளுடன் பகிர்ந்து கொள்வான். சிலபோது அவர்கள் முட்டாள் தனத்தைப் பற்றிப் புலம்புவான். சிலபோது தனது எதிர்காலத் திட்டங்களைப் பற்றியும், எதிரிகளைக் கையாண்ட விதம் பற்றியும் பெருமையுடன் சொல்வான்.

திருமணமாகிவந்த புதிதில் ஒருநாள் அவன் அவளுடன் அரசியல் பேசிக் கொண்டிருந்த போது "ஏன் பொம்பளைங்களுக்குச் சொத்துக் குடுத்தா என்ன? சேரிக்காரங்களை இன்னும் கொஞ்சம் நல்லாப் பார்த்துக்கிட்டா என்ன?" என்று கேட்டுவிட்டாள்.

மனோகரன் முதலில் சற்றுத் திகைத்துப் போனாலும் பின்பு பொறுமையாக விளக்கினான். “பெண்களுக்குச் சீதனமும் ஆண்களுக்கு நிலமும் கொடுப்பதுதான் பரம்பரை வழக்கம். திருமணமாகிப் போகும் பெண்களுக்கு நிலம் கொடுத்தால் ஊர் நிலங்களின் மீது வெளீயூர்க்காரர்களின் ஆதிக்கம் ஏற்பட்டு விடும். நிலங்களை நிர்வகிப்பதில் இருந்து ஒரு ஊரின் நில உரிமை குழம்பிப் போவது வரை எல்லாம் நடக்கும். அதேபோல நிலத்தின் மதிப்பு அளவுக்கு பெண்களுக்குச் சீர் செய்யப்படுவதில்லை என்பதும் உண்மைதான். சங்கம் இனி வருங்காலங்களில் முயற்சி எடுத்து இரண்டும் ஒரே அளவாக இருப்பது போலப் பார்த்துக் கொள்ளும்” என்றான்.

“ஒரு குறிப்பிட்ட அத்தைக்கு சொத்து கிடைத்ததா, இல்லையா என்பதை விட பொதுநன்மைதான் முக்கியம்” என்றான். சேரிக்காரர்களைப் பொறுத்தவரை இப்போது தலையெடுக்கும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அவர்கள்தான் காரணம். பூரணி மெல்ல மெல்ல அவனைப் போலவே சிந்திக்கத் தொடங்கிவிட்டாள். எல்லாப் பிரச்சினைகளிலும் தனக்குத் தெரியாத கோணங்களை எடுத்துப் பேசும் மனோகரனின் அறிவு மீது அவளுக்கு வியப்பும், மரியாதையும் உண்டு. தங்களுக்கு மிகப் பெரிய எதிர்காலம் இருக்கிறது என்பதில் அவள் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தாள்.

இவ்வளவு அறிவாளியும் அந்தஸ்து உள்ளவனுமான அவன் ஏன் தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அடிக்கடி சிந்திப்பாள். தனது தோற்றம், தனது ஒழுக்கம், அடக்கம் பற்றி ஊரில் நிலவும் கருத்து இதெல்லாம்தான் காரணமாக இருக்கும் என்று நினைத்துக் கொள்வாள். தன்னிடம் முழுமையாகச் சரணடையும் மனோகரனின் இயல்புக்கு வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று அவளுக்கு அடிக்கடி தோன்றும். ஆனால் அதைப்பற்றி அதற்குமேல் அவளால் சிந்திக்க முடிந்ததில்லை.

மனோகரன் கண்ணாடி முன்னால் நிற்கும் போது அவளும் நின்று பார்ப்பாள். அவன் முன்நெற்றியைத் தடவுவாள். அவனது இளம் தொந்தியைக் கிள்ளுவாள். தங்களுக்குள் ஏதோ ஒரு பொருத்தம்

இருக்கிறது என்பதில் அவளுக்கு எந்த சந்தேகமும் இல்லை.

மதியம் மனோகரன் கிளம்பிப் போனதும் பூரணி டிரைவரை அழைத்துக்கொண்டு மல்லிகை ஸ்டோருக்குப் போவாள். கேரளா செல்பவர்களையும் மலையோரத்தில் புதிதாகக் குடிவந்திருப்பவர்களையும் குறிவைத்துத் தொடங்கப்பட்ட கடை அது. அங்கே மகளுக்குப் பிடித்த லேஸ் சிப்ஸ்கள், பிஸ்கட்டுகள், நூடுல்ஸ், பேப்பர், கலர் பென்சில்கள், வீட்டை சுத்தம் செய்யத் தேவையான ஆஸிட்கள், கிளிப்புகள் போல வாங்க தினமும் ஏதாவது இருக்கும்.

பாஸ்கரை மல்லிகை கடையின் முன் கண்டதற்கு மறுநாள் அவளால் ஸ்டோர் பக்கம் போக முடியவில்லை. பின்பு சென்றபோது கண்கள் பஸ் ஸ்டாண்ட் பக்கம் தன்னிச்சையாகத் திரும்பின. அவன் இல்லை. அதன் பின்பு அவன் கண்ணில் படவேயில்லை. பாஸ்கருடனான பழைய பழக்கம் போல இந்த சந்திப்பும் ஒரு மங்கிய புகைப்படம் போல மனதில் ஒரு ஓரத்தில் தங்கிவிட்டது.

அவனை இனி சந்திக்கப் போவதே இல்லை என்ற முடிவுக்கு அவள் வந்த போதுதான் அந்த உரையாடல் நிகழ்ந்தது.

10

வெள்ளிங்கிரி பாஸ்கர் விவகாரம் மூன்றாவது நபர்கள் மூலமாகத்தான் மனோகரனிடம் வந்தது. 'இயக்கம் நீண்ட நாள் சைவமாக இருக்க முடியாது. ஒருநாள் வயதுக்கு வந்தேதான் ஆக வேண்டும். ஆனால் தனது பங்கு என்ன?'

இப்போது மனோகரன் தனது வாழ்க்கையிலேயே, சங்கத்தின் வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒரு முடிவை எடுக்க வேண்டியிருந்தது. 'வெள்ளிங்கிரி வளர்ந்து வரும் தளபதி. அவனை அவமானப் படும்படி விட்டுவிட முடியாது. ஒரு தாழ்ந்த சாதி இளைஞன் இவனைப் பொது இடத்தில் அடித்துத் துவைத்திருக்கிறான்'

ஒரு அரசியல் கட்சிக்கும், சமுதாய சங்கத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது. கட்சி முற்றிலும் தனக்கே தனக்கான அமைப்புகளையும் இடங்களையும் கொண்டிருக்கிறது. அது தனக்கான மன்றங்கள். கூட்டங்கள், விழாக்களை ஏற்படுத்திக்கொள்கிறது. ஆனால் சங்கம் பாரம்பரிய கோவில்கள், விழாக்கள், சந்தை போன்ற மக்கள் கூடும் இடங்கள் மீது தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேண்டியிருக்கிறது. இதன் மூலமாகவே அது காலங்காலமாகத் தொடர்ந்து வரும் சமுதாய அமைப்பின் வாரிசு தான்தான் என்பதை நிலை நாட்ட வேண்டியிருக்கிறது. எப்போதாவது வெள்ளிங்கிரி பாஸ்கர் சண்டை போன்ற நிகழ்வுகள் நடந்து விடுகின்றன. ஏதாவது செய்யாவிட்டால் ஊர்ச்சந்தை அவமானத்தின் சின்னமாக இருக்கும்.

ஒரு பத்து பேர்களைக் கூட்டிக்கொண்டு போய் இரண்டு சாத்து சாத்தினால் சரியாகிவிடும். சத்தம் பெரியதாக இருந்தாலும் ஒன்றும் நடக்காது. இப்படித்தான் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. இது ஏற்படுத்தும் பீதி காலாகாலத்துக்கும் இருக்கும்.

ஆனால் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கொதித்த போது வெள்ளிங்கிரி எதுவுமே பேசவில்லையாம். "உட்ருங்க. பாத்துக்கறேன்" என்று மட்டும் சொல்லிவிட்டானாம். இளைஞர்கள் அவமானத்தால் குறுகிப்போய் மனோகரனிடம் முறையிட்டனர். தங்களால் வீதியில் நடமாட

முடியவில்லை. எதிர்த்தரப்பினர் ஏதோ போரில் ஜெயித்தவர்கள் போல ஆடுகிறார்கள். ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்தினர். அடுத்த முறை வெள்ளிங்கிரி வந்தபோது மனோகரன் தனியாக அழைத்து இந்தப் பேச்சை எடுத்தான். வெள்ளிங்கிரி சட்டென்று அமைதியாகிவிட்டான்.

கண்களில் ஒரு கடுமையும், முகத்தில் ஒத்துழைக்காமல் முரண்டு பிடிக்கும் தன்மையும் அப்பட்டமாக வெளிப்பட்டன. வெள்ளிங்கிரிக்கு ஒல்லியான தேகம். அதன் காரணமாகவோ என்னவோ அடர்த்தியான மீசை வைத்திருப்பான். அதிகம் சிரித்துப் பேசுபவனல்ல. கண்களில் ஒரு வன்மம் தேங்கியிருக்கும். இப்போது அதன் உக்கிரத்தைக் கண்டு மனோகரனுக்கே சற்று அதிர்ச்சியாகவிருந்தது. அவன் ஏனோ தன்னைக் குற்றம் சாட்டுவதைப் போன்ற பாவம் அதிலிருந்தது.

“நாம்பாத்துக்கறனுங்”

“நீங்க மட்டும் ஏம் பாத்துக்கணும் வெள்ளிங்கிரி? உங்களுக்கு ஒண்ணுன்னா எல்லாருக்கும் தான?”

வெள்ளிங்கிரி குனிந்ததலை நிமிராமலிருந்தான். அதில் ஒரு பிடிவாதமும் மூர்க்கமும் தெரிந்தது. இது என்னுடைய முடிவு. நீ தலையிடாதே என்ற எச்சரிக்கையும். இதைத்தான் மனோகரனால் புரிந்துகொள்ள முடிவதில்லை. மனோகரனைப் பொறுத்தவரை அவன் உதவி வருவதையும், கூட்டு முயற்சியையும் எப்போதும் விரும்புவான். இது முடிவெடுக்கும் நெருக்கடியிலிருந்து ஒருவனை விடுவிக்கிறது. கூடவே தனித்து தன்னால் ஒன்றைச் செய்து முடிக்க முடியுமா என்ற சந்தேகத்திலிருந்தும் விடுதலை அளிக்கிறது.

மனோகரன் தன்னையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த வெள்ளிங்கிரி மீண்டும் முணுமுணுத்தான்.

“பாத்துக்கறனுங்”

“அதாரு அவன்?”

“தறியோட்றவனுங். ரவுடிங்”

“ஓ” தறிக்கொட்ட முதலாளியான வெள்ளிங்கிரி தறியோட்டுபவனிடம் பொது இடத்தில் அடி வாங்குவது இன்னும் பயங்கரமான அவமானம்.

எந்த அரசியலாக இருந்தாலும் எல்லோரையும் முந்திக்கொண்டு முன்னால் வந்து நிற்பவனிடம் ஏதோ ஒரு குறையை நிறைவு செய்துகொள்ளும் தவிப்பு இருக்கிறது என்ற முடிவுக்கு மனோகரன் வந்திருந்தான். பாரம்பரியப் பெருமை இல்லாத வெள்ளிங்கிரியைப் போன்றவர்கள் மற்றவர்களை உருட்டி மிரட்டி தங்களது மேலாதிக்கத்தை நிலைநாட்ட விரும்புவார்கள் என்று உளவியல் நிபுணர் அட்லர் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு மனோகரன் இவர்களைப் புரிந்து கொள்ள முயன்றான். ‘தாழ்வு மனப்பான்மையை உயர்வு மனப்பான்மையாக மாற்றிக் கொண்டவர்கள் இவர்கள். அதன் பக்க விளைவாக ஒரு குறிப்பிட்ட இனத்தை இனக்குழுவை வெறுக்கத் தொடங்கியவர்கள்’ எவ்வளவு அழகாகக் சொல்லியிருக்கிறார் இந்த அட்லர்!

‘வெள்ளிங்கிரியின் தன்மதிப்பு மிகக் கொடூரமாகக் காயப்படுத்தப்பட்டு விட்டது. வெள்ளிங்கிரி எடுக்கும் பதில் நடவடிக்கை எதுவாக இருக்கும்? கட்டாயம் முட்டாள்தனமானதாக ஏடாகூடமான நெருக்கடியில் சிக்கவைக்கக் கூடியதாகத்தானிருக்கப் போகிறது’ என்ற எண்ணம் மனோகரனின் மனதில் ஏதோ ஒரு மூலையில் நிழலாடியது. தான் செய்வது தியாகம் என்று நினைத்துக்கொண்டு வெள்ளிங்கிரி சங்கத்தை இதிலிருந்து விலக்கி வைக்க முயல்கிறான். அதேநேரம் தன் செயலுக்கான முழு அங்கீகாரத்தையும் தானே அடைய விரும்புகிறான்.

மனோகரன் அந்த நேரம் வெள்ளிங்கிரியைக் கடுமையாக எச்சரித்திருக்க வேண்டும். சங்கத்துக்குத் தெரியாமல் எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது என்று கடுமையாக மிரட்டியிருக்க வேண்டும். ஆனால் மனோகரன் வெள்ளிங்கிரியின் தோளில் தட்டிக் கொடுத்தான். “பாத்துக்கலாங்க. நம்மெல்லாரும் ஒண்ணுதான” என்றான்.

வெள்ளிங்கிரி இந்த மேலோட்டமான பேச்சைப் பொருட்படுத்தப் போவதில்லை என்பது அப்போதே மனோகரனுக்குத் தெரிந்திருந்தது. தான் ஏன் வெள்ளிங்கிரியை மிரட்டவில்லை? தலைவன் என்ற அதிகாரத்தை நிலைநாட்டவில்லை? தனது பலவீனத்தின் மீது அவனுக்குக் கோபம்

வந்தது.

‘இல்லை. தான் வெள்ளிங்கிரியைத் தடுக்க விரும்பாததற்கு பலவீனம் மட்டும் காரணமல்ல’ வேறு காரணங்களும் இருந்தன. வெள்ளிங்கிரியை அவன் வழியில் செல்லவிட்டால் என்ன நடந்தாலும் அவனோடு முடிந்துவிடும். சங்கம் பாதிக்கப்படாது. பாஸ்கர் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை சங்கம் எடுத்துக் கொண்டால் அதன் பின் விளைவுகளையும் சேர்த்துதான் எதிர்க்கொள்ள வேண்டும். தடுத்தால் வெள்ளிங்கிரி சங்கத்தை விட்டு வெளியேறும் வாய்ப்பும் இருந்தது. இதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது.

விசைத்தறி உரிமையாளர்களுக்கும், அவர்களுக்கு ஆர்டர் தரும் டெக்ஸ்டைல் உரிமையாளர்களுக்கும் இடையே கூலிப் பிரச்சினை இருந்து வருகிறது. டெக்ஸ்டைல் உரிமையாளர்கள் தறி உரிமையாளர்களுக்குக் கொடுக்கும் கூலியைக் குறைக்க விரும்புகிறார்கள். தறி உரிமையாளர்கள் கூலியை உயர்த்தாவிட்டால் தாங்கள் கடும் நஷ்டத்தை எதிர்நோக்க நேரிடும் என்று அஞ்சுகிறார்கள். டெக்ஸ்டைல் உரிமையாளர்கள் இப்போதுதான் சங்கத்தை ஆதரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ‘வெள்ளிங்கிரி தறிக்கொட்ட உரிமையாளன். உள்ளூரில் கொஞ்சம் செல்வாக்குள்ளவன். வெள்ளிங்கிரியின் கோபம் தனக்குக்கீழ் வேலை செய்யும் கூலிகள், தலித்துகள் மேல் திரும்புவதில் டெக்ஸ்டைல் உரிமையாளர்களுடனான பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்படும். பின்பு ஒருநாள் கூலிப் பிரச்சினையை நிதானமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள தனக்கு வாய்ப்புக் கிடைக்கும்’ என்று மனோகரன் நினைத்திருந்தான்.

ஒருவேளை வெள்ளிங்கிரியின் கோபம் ஆறிவிடலாம். வெள்ளிங்கிரிக்கே கூட பயம் வந்துவிடலாம். நினைத்த அளவுக்கு மோசமாக இல்லாமல் வெறும் அடிதடியாக முடிந்து விடலாம்...

‘அவனை என்ன செய்யப் போகிறோம்?’ மனோகரனுக்கு உடலின் ஏதோ மென்மையான பாகத்தில் தாக்கப்பட்டது போல வலித்தது. ‘எலும்பு முறிவது எப்படியிருக்கும்?’ அடிவயிறு பிசைந்தது. கடுமையாகப் போராடி அந்த நினைவை விரட்ட முயன்றான். ஆனால் அது மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருந்தது. ‘தனது விருப்பம் என்ன? இந்த உணர்வை

விரட்டுவதா அல்லது இந்தச் சங்கடத்தை தான் ரசிக்கத் தொடங்கிவிட்டோமா?' மனோகரனுக்கு தான் மற்றவர்களைவிட அதிகமான நுண்ணுணர்வு கொண்டிருப்பதாக எப்போதும் தோன்றும்.

'என்ன பெரிதாக நடந்துவிடப் போகிறது? வழக்கு இல்லாத அரசியல்வாதி, தலைவன் யார் இருக்கிறார்கள்? தான் வேட்டையாடுபவனின் பக்கம் இருக்கும் போது வேட்டையாடப்படுபவனின் வலியை ஏன் உணர வேண்டும்? வலி வேதனை பற்றிய உணர்வு தன்னை ஏன் விடாமல் விரட்டி வருகிறது? மனதில் ஏதோ ஒரு மூலையில் எப்போதோ உறைந்து போன குற்ற உணர்ச்சிக்கு மனம் தொடர்ந்து பழி வாங்குகிறதோ?'

மனோகரனின் செயல்பாடுகளில் பதற்றமே இருக்காது. எல்லாவற்றையும் முன்கூட்டியே திட்டமிட்டுவிட்டது போல ஒரு ஒழுங்கு இருக்கும். மனோகரன் காலை நேரம் பூரணி கொடுக்கும் காபியைக் குடித்துவிட்டுத் தோட்டத்துப்பக்கம் போய்வருவான். காலையுணவுக்குப் பிறகு தர்பார் தொடங்கிவிடும். புலவர் அர. பழனிச்சாமி வந்து பழைய முறைப்படிதான் எளிமையாகத் திருமணம் செய்ய வேண்டும் என்று சங்கத்தில் சட்டம் போட வேண்டும் என்று வழக்கம் போல வலியுறுத்துவார்... மனோகரன் சிரித்துக்கொள்வான். அப்படிச் செய்தால் நெடுஞ்சாலையோரம் குளிரூட்டப்பட்ட திருமண மண்டபங்கள் கட்டி வைத்திருக்கும் சங்கத்துக் காரர்கள் என்னவாவது? ஆனால் குலப் பெருமையை விட்டுக் கொடுத்து விட முடியாது. சில வித்தைகள் காட்ட வேண்டும். புலவரை எப்படித் திருமணம் செய்ய வேண்டும் என்று விரிவாக ஒரு புத்தகம் எழுதச் சொல்லியிருந்தான். அது தயாராகிக் கொண்டிருந்தது.

சென்ற வாரம் ஒரு போன் வந்திருந்தது. ஒருவன் மில்லில் வேலை செய்யும் பெண்ணைக் கடத்திக் கொண்டுபோய் பத்திரிக்கைக்குப் பேட்டி கொடுக்க வைக்க முயல்கிறானாம்.

"அண்ணா ஒரு வார்த்த சொல்லுங்க. இத இப்படியே உட்றக் கூடாது"

இதுவரை அந்த அனுபவம் மனோகரனுக்கு இல்லை.

“யார் என்னன்னு சொல்லுங்க”

“பெண் நல்ல பெண்தான். இந்தப் இலுப்பப்பாளையத்துப் பையன் அவளைச் சுற்றிச் சுற்றி வருகிறான். இவளைக் காரணமாக வைத்து மில் நிர்வாகத்தைப் பழிவாங்க நினைக்கிறான். பணம் வாங்குவதுதான் நோக்கம்”

“அவ்வளவு பெரிய ஆளா”

“அதெல்லாம் இல்ல. சும்மா தெல்லவாரி”

மனோகரனுக்கு ஒரு விஷயம் விசித்திரமாக இருந்தது. ‘மில்காரர்கள் சொல்வதும் வெள்ளிங்கிரி துடித்துக்கொண்டிருப்பதும் ஒரே ஆள்தான். இது எப்படி சாத்தியம்? மில் நிர்வாகமும் வெள்ளிங்கிரியும் ஒருவேளை இணைந்தால் நிலைமை கட்டுமீறிப் போய்விடும் வாய்ப்பு இருக்கிறது’

மனோகரன் முடிவெடுப்பதற்கு முன் இன்னொரு பிரச்சினை தோன்றிவிட்டது. அவன் கண் முன்னே வெள்ளிங்கிரிக்கும் ஆர்.என்.ஆர் டெக்ஸ்டைல் உரிமையாளருக்கும் சண்டை வந்தது. டெக்ஸ்டைல் உரிமையாளர்கள் விசைத்தறி உரிமையாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலியைக் குறைத்து விட்டார்கள். எனவே அவர்களுக்கு எதிராக விசைத்தறி உரிமையாளர்கள் போராட்டம் நடைபெற்று வந்தது. மிகப் பிரபலமான ஆர்.என்.ஆர் டெக்ஸ்டைல் உரிமையாளர் தன்ராஜ் மனோகரன் சங்கத்தின் அனுதாபி.

“நீங்க நம்ம சங்கத்துக்காரங்கதானே. ஒரே சாதிசனம்தானே? ஏன் எங்க கூலியைக் கொறைக்கறீங்க?” என்றான் வெள்ளிங்கிரி.

“எனக்கு என்ன கெடைக்குதோ அதத்தான உனக்குக் குடுக்க முடியும்?” என்றார் மில் உரிமையாளர்.

“பொய் சொல்லாதீங்க. நீங்க சொல்றதுல ஏதாச்சு நியாயம் இருக்குதா?” வெள்ளிங்கிரியின் குரலில் சூடு ஏறிக் கொண்டிருந்தது. “எங்காவது ஏத்துன கூலிய எறக்குனது உண்டா?”

“வெள்ளிங்கிரி... உனக்கு தொழிலோட சூட்சுமமே புரியலப்பா. லேபர் கூலிய அதுக்குத் தகுந்த மாதிரி, சித்த அட்ஜஸ்ட் பண்ணி

நட்டத்தச் செரி பண்ணோணும். நீயா அள்ளி விட்டு செலவ அதிகப்படுத்திட்டு எங்கிட்ட வந்து கூலியக் கூட்டிக் குடுன்னா முடியுமா? கோயமுத்தூர்ல எண்டிசி மில்லுக்காரன் குடுக்கற கூலிய உன்னால் குடுக்க முடியுமா, என்னால குடுக்க முடியுமா? குறச்சு குடுக்கறமில்ல? பொறகு என்னத்துக்கு எங்காவது ஏத்துன கூலிய கொறச்சிருக்காங்களான்னு கேள்வி?"

மனோகரன் முடிவு செய்யவில்லை. அல்லது நடக்க இருப்பவற்றை அதன் போக்கில் விட்டுவிடுவதுதான் அவன் எடுத்த முடிவு. ஆனால் வெளிப்பார்வைக்குத் தெரிந்ததற்கு மாறாக உள்ளே உணர்ச்சிமயமாகவிருந்தான். 'எக்ஸைட்மெண்ட்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். தான் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பது எதை என்பது அவனுக்குப் புரியவில்லை என்று சொல்லிவிட முடியாது.

11

மனோகரன் அன்புசேகரிடமிருந்து வந்த அந்த அழைப்பை எதிர்பார்க்கவில்லை என்று சொல்லிவிட முடியாது. வீட்டருகே அந்த சம்பவம் நிகழ்ந்ததிலிருந்தே அவன் கோபமும் எரிச்சலுமாகத்தானிருந்தான். அடைத்துக் கொண்டது போன்ற ஒரு கனம் நெஞ்சில் நிரந்தரமாக உட்கார்ந்து கொண்டிருந்தது. தான் அதைத் தடுத்திருக்க வேண்டும் அல்லது தலையிட்டு இன்னும் புத்திசாலித்தனமாகச் செய்திருக்க வேண்டும். வெள்ளிங்கிரியைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்திருக்க வேண்டும். எல்லாருக்குமாகச் சேர்ந்து சிந்திக்கவும், செயல்களுக்கு உத்தரவு இடவும் தனக்குள்ள உரிமையை நிலைநாட்டியிருக்க வேண்டும். செய்யத் தவறிய தனது பலவீனத்தை மனோகரன் சபித்துக்கொண்டான்.

வெள்ளிங்கிரியின் மீது கடுங்கோபமும் எரிச்சலும் வந்தது. 'இப்படியா ஒரு மனிதன் அசட்டுத்தனமாகக் காரியம் செய்வான்? உபயம் வெள்ளிங்கிரி என்று அந்த இடத்தில் எழுதி வைக்காததுதான் பாக்கி'

மனோகரன் சிறைக்குச் சென்றதில்லை என்றாலும் தனக்குச் சிறை மீது பயமில்லை என்று நினைத்திருந்தான். ஆனால் அதற்கான சூழ்நிலை வரும்போது மனம் கலங்கத்தான் செய்கிறது. பாதி முடிந்த நிலையிலிருக்கும் வேலைகள், வெளியுலகம் தெரியாத மனைவி... மகள்...

ஒருவேளை இதற்கெல்லாம் அவசியமில்லாமலும் இருக்கலாம். சாதாரணமாக விசாரித்துவிட்டு அனுப்பவும் செய்யலாம். தன் வீட்டின் அருகே கொலை நடந்திருக்கிறது என்பதற்கு மேல் இதில் தன்னைச் சம்பந்தப்படுத்த என்ன இருக்கிறது?

ஆனால் இந்தக் கொலைக்கும் தன் மீதும் சங்கத்தின் மீதும் நடக்க இருக்கும் தாக்குதலுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பதை மனோகரன் உணர்ந்தே இருந்தான். அது சூரியன் கிழக்கே உதிக்கும் என்பதைப் போன்று நிச்சயமானது. இது இல்லாவிட்டால் வேறு ஒரு காரணத்தைக் கொண்டு சங்கம் தாக்கப்பட்டே தீரும். சிற்றரசர்கள் வளர்வதை பேரரசர்கள் ஒருநாளும் விரும்பமாட்டார்கள். அதை

எதிர்கொள்ள மனோகரனிடம் திட்டங்கள் இருந்தன. ஆனால் இப்படி அசட்டுத்தனமாக முதலை வாயில் போய் தலையைக் கொடுக்க வேண்டிவரும் என்று அவன் நினைத்தே பார்க்கவில்லை.

வெள்ளிங்கிரி ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட பற்றிக்கொண்ட நெருப்பு எல்லோரையும் சுடுகிறது. மனோகரனுக்குத் தன்னை சங்கமும் அதைச் சுற்றி நிற்கும் தொண்டர் படையும் கண்ணுசாமி போன்ற உள்ளூர் முதலாளிகளும் தன்னைக் கைவிட மாட்டார்கள் என்பது தெரியும். தன்னை இந்த நெருக்கடியில் சிக்க வைப்பவர்களும் கூட தன்னைப் பலவீனப்படுத்தி எப்போதும் தங்களைச் சார்ந்து இருக்கும்படி வைக்க விரும்புகிறார்களே தவிர தன்னை அடியோடு ஒழித்துக் கட்டுவது அவர்கள் நோக்கமல்ல. தப்ப முடிந்தால் தப்பித்துக்கொள் என்று ஏதாவது வழி வைத்திருப்பார்கள்.

ஆனால் வரவிருக்கும் நாட்கள் கடினமானவை. சவாலானவை. மனோகரனின் இருண்மை பூசிய மனநிலை மெல்ல ஒரு உக்கிரமான பிடிவாதத்துக்கு மாறியது. தனது ஆள் அம்பு அனைத்தையும் பயன்படுத்தி எதிர்த்து நிற்பது என்று முடிவு செய்தான். தான் இல்லையென்பதை ஒவ்வொரு நிமிடமும் கோகோ காரர்களும், மில்காரர்களும், மற்ற ஆலை அதிபர்களும், வணிகங்களில் ஈடுபட்டிருப்பவர்களும் உணரவேண்டும். மனோகரன் இந்த முடிவை எடுத்ததும் மனதை அழுத்திக்கொண்டிருந்த கனம் சற்றே விலகியது போலிருந்தது.

நிதானமாக உட்கார்ந்து தேர்ந்தெடுத்த சிலரை ஒவ்வொருவராக அலைபேசியில் அழைக்கத் தொடங்கினான்.

பாகம் 3

ஷீலா ரெஜிப் பிரியா

1

நாட்டுப்புறக் கதை- ஷீலாவின் குறிப்புகளில் இருந்து

அத்தானாம் ஒசரம் பெரிய ஒரு மல. அது முச்சூடும் காடு. காடுன்ன காடு மூணு நாலு மணி ஆயிருச்சுன்னா நெகாப்பு தெரியாது. கும்மிருட்டாட் போயிரும். அவடத்தால காட்டுக்கு நடுவால ஒரு பெரிய ஊடு. அரமணயாட அதுல ஒரு பூதம் இருந்துச்சாமா. பூதம் ஒரு அளகான வளுசப் புள்ளையத் தூக்கீட்டு வந்து காட்டுக்குள்ள வெச்சு நெதமும் வேல வாங்குச்சாம். பூதம் ஒரு கெடைல நிக்க உடாதாம். வேல செஞ்சு செஞ்சு அந்தப் புள்ள சடஞ்ச போச்சாம்.

ஒரு நா பூதம் தோச சுட்டுக் குடுன்னு சொல்லுச்சாம். அந்தப் புள்ள தோசக்கல்ல அடுப்புல வெச்சு போட்டு கல்லு மேல ஈரத்துணியக் கட்டித் (விட்டாளாம். துணீல இருந்து சொட்டு சொட்டா தண்ணி கல்லு மேல உளு சொய் சொய்ய்ன்னு சத்தம் வந்துட்டே இருந்துச்சாம்.

பூதம் தோச சுடறான்னு நெனச்சுட்டு இருக்கறப்ப பொறகால கதவத் தொறந்து அந்தப் புள்ள ஓடிப் போயிட்டாளாம்.

பாட்டி சொன்ன கதை

அந்தக் காலத்துல கலியாணம் மூச்சுட்டு வந்த புதுப்பொண்ணு மொ மொதல்ல பெரிய ஊட்டு சாளைக்குச் சாணி வழிக்கப் போகோணும். அங்க போனா ஒருநாள் பொண்டாட்டியா இருந்துட்டுதான் திரும்பும்.

அதனால எங்கப்பன் கல்யாணம் மூச்சதும் ஆத்தாளக் கூட்டிட்டு (மலைக்குப் போயிருச்சாம். மலைல கூதல்ல காச்ச வந்துட்டே இருக்குமாம பத்தாததுக்கு மேஸ்திரிக கொடும வேற. மலைக்குப் போயி சம்பாரிச்ச கா மருந்துக்கே பத்தாதுன்னுட்டு ஓடிப் போயிரலாம்னு நெனைச்சாங்களாம். மேஸ்திரி உட மாட்டானல்லோ. அன்னாடும் ராவுல லைன சுத்தி சுத்தி வந் அல்லா ஊட்லயும் அடுப்பெரியுதான்னு பாப்பான். அப்ப சோத்துச் சட்டி பே காட்டுக் கம்பளீய நனைச்சுக் கட்டிவுட்டு தண்ணி சொட்டும் போது காஞ்ச

இருந்து சொய் சொய்ன்னு சத்தம் வார மாரி பண்ணிபோட்டு மலைய உட்(வந்துட்டாங்களாம்...

"குட் மார்னிங் மேடம்"

ஷீலா அறைக்குள் நுழைந்து வணக்கம் செலுத்தியபோது அனிதா மேடம் ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்தார். நிமிர்ந்து யோசனையோடு அவளைப் பார்த்தவர் "குட்மார்னிங் ஷீலா. உட்காரு" என்று எதிரே இருந்த கருப்பு குஷன் சோபாவைக் காட்டினார். அவருக்குப் பின்னால் 'பாவப்பட்டவர்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள். நாம் அவர்களோடு இருப்போம்' என்று மீன் வடிவில் செதுக்கப்பட்டிருந்த பலகையில் எழுதப்பட்டிருந்தது. மேடம் வழக்கம்போல் மொடமொடப்பான காட்டன் சேலையில் இருந்தார். ஏசி 19 டிகிரி செல்ஷியஸ் என்று காட்டியது. இவ்வளவு குளிர்ச்சி தேவையில்லைதான். ஆனால் மேடம் ஐரோப்பாவிலிருந்து திரும்பியதும் இந்தமுறை அவருக்கு வெயில் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறது.

அனிதா மேடம் 'விழிப்பு மனித உரிமை அமைப்பின்' இயக்குனர். விழிப்பு தமிழ்நாட்டின் மிக முக்கியமான மனித உரிமை அமைப்பு. அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது.

இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்கள்மேல் நடத்தப்படும் வன்முறைகளுக்கு முறையாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறதா, பதிவு செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் சரியாக நடத்தப்படுகிறதா என்று கண்காணிக்கும் பணியைச் செய்ய ஒரு ஜெர்மனிய பன்னாட்டு மனித உரிமை அமைப்பு ஒரு திட்டத்தை ஏற்படுத்தி நிதியுதவி அளித்து வருகிறது.

தமிழகத்தில் இந்தப் புராஜெக்டை விழிப்பு பெற்றுள்ளது. விழிப்பு மனித உரிமைகளை நிலைநாட்டச் செயல்படும் ரைட்ஸ் பேஸ்டு அதாவது மனித உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனம். வன்கொடுமைத் தடுப்பு வழக்குகளை முறைபடி நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருவது இந்தத் திட்டத்தின்

அடிப்படையான பணியாகும். இது தவிர வழக்கு நடக்கும் போதும், நடந்து முடிந்த பின்பும் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காகத் திட்டங்களை உருவாக்கி அதற்கும் வெளிநாட்டு நிதியுதவி பெற்றுச் செயல்படுத்தி வருகிறது இந்த அமைப்பு. ஷீலா இதில் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறாள்.

மேடத்துக்கு வயது ஐம்பது இருக்கலாம். ஆனால் பார்த்தால் நாற்பது நாற்பத்தி இரண்டுக்கு மேல் சொல்ல முடியாது. எப்பொழுதும் சேலைதான் உடுத்துவார். ஆனால் அதில் ஒரு துல்லியமான ஒழுங்கு இருக்கும். மிக உயர்தர கண்ணாடி. கண்டிப்பு நிறைந்த கண்களைத் துல்லியமாகக் காட்டும். ஒரு முடிகூட ஒருபோதும் கலைந்திருக்காது. காலையில் பார்த்தது போலவே மாலையிலும் இருக்க இவரால் மட்டும் எப்படி முடிகிறது? என்று ஷீலாவுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

பெரும்பாலும் ஆண்களே கோலோச்சி வந்த இந்தத் துறையில் பிடிவாதமாக நின்று சாதித்துக் காட்டியதால் மேடத்தின் மீது ஷீலாவுக்கு அபரிமிதமான மரியாதை. அவரையே தனது முன்மாதிரியாக வரித்துக் கொண்டிருந்தாள். மேடம் நல்ல உயரம். ஷீலா நடுத்தர உயரம். மேடம் ஒல்லி. ஷீலாவுக்கு பூசினாற்போன்ற உடல்வாகு. மேடம் நல்ல சிவப்பு. ஷீலா மாநிறம். எல்லாவற்றும் மேலாக ஷீலாவுக்கு வயது முப்பத்தி ஒன்றுதான். துறுதுறுப்பான குழந்தை முகம். ஆனால் மேடத்தைப் போலவே தனது அலைபடிந்த தலைமுடியைக் கழுத்தோடு வெட்டியிருந்தாள். மிகக்குறைவான நகைகள், வாட்ச் என்று எல்லாவற்றிலும் அவரையே காப்பியடித்திருந்தாள். ஆனால் காட்டன் சேலைக்குப் பதில் இளஞ்சிவப்பு த்ரீ போர்த் சுடிதார் அணிந்திருந்தாள். அது ஒன்றுதான் வித்தியாசம்.

“ஷீலா ஒரு இன்சிடண்ட் நடத்திருக்கு. இண்டர்வென்ஷன் தேவையா இருக்கு” (ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. நமது தலையீடு தேவைப்படுகிறது)

ஷீலா வியப்படைந்தாள். அவளிடம் இதைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை. பேசுகிறார் என்றால் ஏதோ காரணமிருக்கிறது. அவளுக்குள் ஏதோ புரிந்தது போலிருந்தது. கடைசியில் நீண்ட நாட்களாக

எதிர்பார்த்திருந்த வாய்ப்பு கைகூடப் போகிறதோ? ஊற்றெடுத்த மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"கோயமுத்தூர் பக்கம் சாதி சங்கத் தலைவர் மனோகரன் அரெஸ்ட் ஆனது தெரியுமில்லையா?"

ஷீலா தலையசைத்தாள். அதெப்படித் தெரியாமலிருக்கும். மனோகரன் கைதுக்குப் பிறகு மேற்கு மாவட்டங்கள் பதட்டத்தில் மூழ்கியிருந்தன. தினமும் ஏதாவது ஒரு கிராமத்தில் பஸ்மீது கல் வீசப்படுகிறது. ஒரு பஸ் எரிப்பு சம்பவம் கூட நடந்திருந்தது. ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் உண்ணாவிரதங்களும் இடைவிடாமல் நடந்துவந்தன. பல சிறிய ஊர்களில் கடையடைப்புகளும் நடந்திருக்கின்றன.

"செத்துப் போன பாஸ்கர்ங்கற பையன் நம்மோட கெப்பாசிடி பில்டிங் கேம்ப் எல்லாம் அட்டெண்ட் பண்ணியிருக்கான். எங்கயோ பொள்ளாச்சி பக்கம் செத்து கெடந்தானாம். போலீஸ் விசாரிச்சு கொஞ்சம் பேர அரெஸ்ட் பண்ணியிருக்கு. கைதானவங்க பெரிய ஆளுகதான். ஆனா இன்னும் கொஞ்சம் அக்யூஸ்ட் இருக்காங்க. அவங்களைக் கைது பண்ணலேன்னு ஒரு மெய்ல் வந்திருக்கு. ஏதோ மில்லுக்காரங்க சம்பந்தப்பட்டிருக்காங்க. அவங்களைக் கேஸ்ல சேக்கலேன்னுதான் நான் விசாரிச்சவரை சொன்னாங்க. ஒரு உண்மை அறியும் குழு ஏற்பாடு பண்ணணும். கோயமுத்தூர்ல ஏக்டிவிஸ்ட்ஸ், அட்வகேட்ஸ், ரைட்டர்ஸ், இருக்கிறாங்க. அவங்கள கூப்பிட்டுக்கலாம். ரொம்ப முக்கியமான கேஸ். அதனால குமணன் இருந்தா நல்லா இருக்கும். அவரால மூணுநாலுநாள் உண்மையறியும் குழுவுல கலந்துக்க முடியாதுன்னு நெனைக்கிறேன். ஆனா நீங்க தகவல் எல்லாம் சேகரிச்ச பின்னாடி சாரை சென்னையிலிருந்து வரச்சொல்லி பிரஸ்மீட் குடுத்திடலாம். அப்புறம் எஸ்.சி.எஸ்.டி ஏக்ட் படி ஒரு நல்ல கிரிமினல் வக்கீலை வழக்கு நடத்த நியமிக்கச் சொல்லி கலெக்டர்கிட்ட மனு கொடுக்கணும்.

கோயமுத்தூர்ல நல்ல கிரிமினல் லாயர்க இருக்காங்க. அரசு

வக்கீலை நம்ப முடியாது”

நீளமாகப் பேசிவிட்டு ஷீலாவை உற்றுப்பார்த்தார்.

வழக்கமாக பெண் ஆய்வாளர்களை இது போன்ற விஷயங்களுக்கு அனுப்புவதில்லை. ஆனால் இப்படி ஒரு முன்முயற்சியைத் தான் முன்னின்று நடத்தவேண்டும் என்பது அவளுடைய கனவு.

அனிதா மேடம் ஏனோ அந்த வார்த்தையைச் சொல்ல தாமதம் செய்தார். சுழல் நாற்காலியில் அமர்ந்தபடி அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். இரண்டு மூன்று விநாடிகளில் ஷீலாவுக்கு எரிச்சல் ஏற்பட்டு விட்டது. ‘சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் இது என்ன பார்வை?’

“பாண்டியன் வெளிநாடு போக வேண்டியிருக்கு. ஸ்டீவ் ஒரு கோர்ஸ் பண்ணிட்டிருக்கார். ஏதோ எக்ஸாம் இருக்காம். வெளிய அனுப்ப முடியாது. உன்னால சமாளிக்க முடியுமா?”

‘ஏன் முடியாது?’ வெடுக்கென்று கேட்க வாயெடுத்தாள். சட்டென்று அறிவு விழித்துக் கொள்ள வாயை இறுக மூடிக்கொண்டாள். கொலை வழக்கையே நடத்த அவளுக்குத் தகுதி இருக்கிறது என்று வாங்கிய பி.எல் பட்டம் சொல்கிறது. கொலைக்கு உண்மை அறியும் குழு அமைக்கத் தகுதி இருக்கிறதா? இல்லையா? என்று முடிவு செய்ய இத்தனை யோசனை!

“முடியும் மேடம். ரெண்டு மூணு உண்மை அறியும் குழுல போயிருக்கிறேன்” ஷீலா தன்னை அடக்கிக் கொண்டு அமைதியாகப் பதிலளித்தாள்.

“வெரிகுட்...”

ஒரு குறிப்பிட்ட பகுதியில் மனித உரிமை மீறல்கள் நடக்கும் போதும், அரசு செயல்பாடுகள் போதுமானவையாக இல்லாதபோதும், அல்லது அரசே அடக்குமுறைகளில் ஈடுபடும் போதும் சமூகப் பொறுப்பு மிக்க சில குடிமக்கள் ஒரு குழுவாக அங்கே சென்று உண்மை நிலையையும், காரணங்களையும் அறிந்து வந்து வெளிப்படுத்துவதும் தேவைப்பட்டால் போராடுவதும் மனித உரிமை செயல்பாடுகளில்

முக்கியமானது. இந்தியாவைப் பொறுத்தவரை பிஹாரின் சம்பாரன் பகுதியில் இண்டிகோ விவசாயிகள் நிலப்பிரபுக்களால் கொடுமைக்குள்ளான போது காந்தி மேற்கொண்ட நடவடிக்கைதான் இத்தகைய முதல் செயல்பாடாகக் கருதப்படுகிறது. பல உண்மையறியும் குழு அறிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களின் தரப்பு நியாயங்களை வெளிப்படுத்தும் முக்கியமான ஆவணங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. சூழலின் தீவிரத்தால் எந்த அமைப்பின் முயற்சியும் இன்றி தாங்களாகவே இத்தகைய குழுக்கள் உருவாவதும் உண்டு. மனித உரிமை அமைப்புகள் இத்தகைய குழுக்களைத் தற்காலிகமாக உருவாக்கி நடத்துவதும் உண்டு. மனித உரிமை அமைப்புகளில் ஜனநாயகமாகத் தேர்தெடுக்கப்பட்ட தலைமைகளைக் கொண்டு சுதந்திரமாக இயங்கும் அமைப்புகளும் உண்டு. உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகளிடம் நிதிஉதவி பெற்று இயக்குநர், ஆராய்ச்சியாளர் சம்பளம் பெற்று செயல்படுபம் ஊழியர்கள் என்று நிறுவனமாகச் செயல்படும் அமைப்புகளும் உண்டு. விழிப்பு ஐரோப்பிய யூனியனிலுள்ள அமைப்புகளிடமிருந்து நிதியுதவி பெற்று இயங்கி வருகிறது. எப்படி இருந்தாலும் மனித உரிமைச் செயல்பாடுகளில் உண்மை அறியும் குழுவின் பங்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

எனவே மேடத்தின் பயம் அர்த்தமுள்ளதுதான். மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவது, சட்ட உதவிகள் செய்வது, போராடுவது, அதே நேரம் போராட்டம் சட்டத்திற்கு உட்பட்ட வழிகளில் இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவது ஆகியவை மனித உரிமை அமைப்புகளின் பணிகள். இது கத்திமேல் நடப்பதைப் போன்றது. குழுவை நடத்துபவர்கள் அதற்கான ஆளுமை இல்லாதவர்களாக இருந்து விட்டால் குழு மூலைக்கொருவராக இழுத்துக் கொண்டு போய்விடும். ஏடாகூடமாக ஏதாவது நடந்துவிட்டால் நிறுவனத்தால் உரிய செயல்தந்திரம் வகுக்க முடியாமல் போய்விடும். அதிலும் இந்த வழக்கில் தலைவர் மனோகரன் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஷீலா போன்ற அனுபவமில்லாத பெண்ணிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கத் தயக்கம் இருக்கத்தான் செய்யும்.

மேடம் அவள் எப்போது புறப்பட வேண்டும், கோவை சென்று யார் யாரைப் பார்க்க வேண்டும், எப்போது கிராமத்துக்குச் செல்ல வேண்டும்,

எங்கே தங்க வேண்டும் என்பதை எல்லாம் விளக்கிச் சொன்னார். அதோடு கிளம்பும் முன் அமைப்பின் ஆவணக் காப்பகம் சென்று இந்த சம்பவம் பற்றி என்னென்ன செய்திகள் வந்திருக்கின்றன என்பது குறித்து முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

விழிப்பு அமைப்பின் ஆவணக்காப்பகம் ஷீலாவுக்கு மிகவும் பிடிக்கும். அந்த அமைப்பின் உயிரே அந்த ஆவணக் காப்பகம்தான். விழிப்பு ஒரு மோப்ப நாய் போல. எல்லா நாளிதழ்களும் வார, மாத இதழ்களும் அங்கே இருக்கும். எங்காவது ஒரு ஊரில் ஏதாவது ஒரு சம்பவம் நடந்திருக்கும். இது தலையீடு செய்வதற்கானது. இதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று விழிப்பு சரியாகக் கணிக்கும்.

ஏனென்றால் விழிப்புக்கு கிராமங்களில் ஊழியர்கள் இல்லை. எனவே கிராமங்களில் நடந்துவரும் உக்கிரமான மோதல்களை அறிந்து கொள்வதற்கு இந்த இதழ்கள் மட்டுமே துணை.

“உண்மை அறியும் குழு போய்ட்டு வந்த பின்னாடி கேஸை யாரை வெச்சு நடத்தறதுன்னு ரமேஷ்குமாரிட்ட பேசிட்டு முடிவு செஞ்சுக்கலாம்” என்றவர் பேச்சு முடிந்துவிட்டது என்ற எண்ணத்தில்

“ஓகே?” என்றார்.

ஷீலா தலையை ஆட்டினாள். ஆனால் எழத் தயங்கி நாற்காலியின் நுனிக்கு நகர்ந்தாள்.

“என்னம்மா”

“இந்த பாஸ்கர் யாருங்க மேடம்? நா பார்த்திருக்கிறனா?” ஷீலாவின் உச்சரிப்பில் ஒவ்வொரு எழுத்தும் தனியாகத் தெரியும். அதில் ஒருவிதமான மழலை போன்ற இனிமை இருந்தது.

“கெப்பாசிட்டி பில்டிங் ஒர்க்ஷாப்புக்கு (தலித்துகளுக்குத் தலைமைப் பண்பை வளர்க்க உதவும் பயிற்சி வகுப்புகள்) வந்திருக்கான். அப்புறம் எஸ்.சி எஸ்.டி அட்ராசிடி ஏக்ட் பத்தி ஒரு கிளாஸ்க்கு வந்திருக்கானாம். ஒழுங்கா ஒரு வேலைக்கும் போகமாட்டானாம். சிஸ்டமேட்டிக்கா இல்லாமல் தாந்தோன்றியா ராபின் ஹூட் மாதிரி நெனைச்சுகிட்டு நிறைய

பசங்க இருக்காங்க. ஹூம்... எதிலயோ சிக்கி போயிட்டான்..." மேடம் பெருமூச்சு விட்டார்.

மேடத்தின் பேச்சில் பிரஸ் மீட்களில் தெறிக்கும் கோபமும் மிகையான அனுதாபமும் இல்லாமல் இயல்பான வருத்தம் இருந்தது. இதுதான் உண்மை முகம்.

"தேங்க் யூ மேடம்" ஷீலா எழுந்தாள்.

ஷீலா சரியாக மதியம் பனிரெண்டு மணிக்கு கோவை நீதிமன்றம் அருகே இருந்த வழக்குரைஞர் ரமேஷ்குமாரின் அலுவலகத்துக்குப் போய்விட்டாள். முதுபெரும் மனித உரிமை ஆர்வலர் தோழர் குமணன் தலைமையில் உண்மை அறியும் குழு அமைக்க அனிதா மேடமும் வழக்குரைஞரும், விழிப்பு அமைப்பின் சட்ட ஆலோசகருமான ரமேஷ்குமாரும் ஏற்கெனவே முடிவு செய்திருந்தனர்.

ஆவணப் படத் தயாரிப்பாளரான கரு.ராஜேந்திரன், முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியரும் ஒருகாலத்தில் விவசாயிகள் சங்கத் தலைவராக இருந்தவருமான சிவானந்தம், கவிஞரும், மொழிபெயர்ப்பாளரும், பேராசிரியருமான சுமதி சூடிக்கொடுத்தாள் ஆகியோர் குழுவில் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களுடன் ரமேஷ்குமாரும், ஷீலாவும். குமணன் மற்றவர்களை சம்பவ இடத்துக்குச் சென்று பார்க்கும்படியும், தான் பின்புவந்து கலந்து கொள்வதாகவும் தனக்கு ஒரு முக்கியமான கருத்தரங்கம் இருப்பதாகவும் சொல்லியிருந்தார். பழ.ராஜேந்திரனிடம் இருந்து ஒருதகவலும் இல்லை. தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது வந்துவிடுவதாகச் சொல்லிக்கொண்டே இருந்தார்.

ரைட்ஸ் லாயர் அதாவது மனித உரிமை வழக்குரைஞர் என்றதும் ரமேஷ்குமார் பற்றி ஷீலாவுக்கு வேறு கற்பனை இருந்தது. தாடி, கசங்கிய உடையோடு அன்றாட வாழ்கையைப் பற்றிக் கவலைப்படாத ஒரு கலகக்காரரை, வயதான வக்கீலைக் கற்பனை செய்திருந்தாள்.

ரமேஷ் குமார் அலுவலகத்தில் நுழைந்ததுமே ஷீலா வியந்து போனாள். இருபதுக்கு இருபது அளவு பெரிய ஹால். ஒரு மூலையில் கேபின். மொத்த அலுவலகமும் கரும்பழுப்பு பிளைவுட்டால் இழைக்கப்பட்டிருந்தது. மேசை நாற்காலிகளும், கதவும், நூல் அலமாரிகளும் ஒரே நிறத்தில் இருந்ததால் கண்ணுக்குக் குளுமையாகவிருந்தது. புத்தக அலமாரிகளில் ஏராளமான ஆல் இண்டியா ரிப்போர்ட்டர் என்ற சட்ட இதழ்களும், கிரிமினல் லா மேனுவல்களும் ஒரே மாதிரி பைண்ட் செய்யப்பட்டு ஒழுங்கான வரிசையில் செருகப்பட்டிருந்தன.

ஒரு துல்லியமான ஒழுங்கும், தூய்மையும் பளிச்சென்று கவனத்தைக் கவர்ந்தன.

ரமேஷின் கேபினில், கண்ணாடிக் கதவுகள் வைத்தத் தேக்கு மரத்தாலான ஒரு பழமையான புத்தக அலமாரியில் மனித உரிமை தொடர்பான நூல்களும், பல ஆங்கில சமூக ஆய்வு நூல்களும் காணப்பட்டன. தீஸ்தா சதல்வாட்டில் காம்பேட் லா இதழ் மேசையின் மீது கிடந்தது. கிருஷ்ணய்யர், கண்ணபிரானின் படங்கள் பிரேம்போட்டு சுவற்றில் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. அவற்றோடு ஒரு உயர்நீதி மன்ற நாட்காட்டியும் தொங்கிக்கொண்டிருந்தது.

ரமேஷ்குமாருக்கு வயது நாற்பத்தைந்து இருக்கலாம். நல்ல சிவப்பு. ஒல்லியாக உயரமாக இருந்தான். கருப்பு பேண்ட்டில் வெள்ளை சட்டை கச்சிதமாக இன் பண்ணப்பட்டிருந்தது. முழுக்கை சட்டையை முழங்கைவரை மடித்து விட்டிருந்தான். சுத்தமான ஷேவிங் பச்சையாகக் கன்னத்தில் பளபளத்தது. டை அடிக்கப்பட்டு ஒழுங்காக வகிடெடுத்து வாரிவிடப்பட்டிருந்த தலைமுடி கருநீல நிறத்தில் ஒளிர்வது போலிருந்தது.

“வாங்க... ஷீலா மேடம்” ரமேஷ் மிக மெல்லிய குரலில் அழைத்தான். “ஜஸ்ட் டூ மினிட்ஸ். சிவானந்தம் கோர்ட்ல ஒரு பழைய பிரண்டைப் பார்க்கப் போயிருக்கார். போன் பண்ணினா வந்துருவார். சுமதி மேடம் ஆன் தி வே... சாந்தி தியேட்டர் கிட்ட வந்துட்டாங்க”

“மேடம் நல்லாயிருக்காங்களா?” இந்தமுறை அவன் மேடம் என்றது விழிப்பு இயக்குநரை.

“நல்லா இருக்கிறாங்க சார்”

குமணன், கரு.ராஜேந்திரன் தவிர மற்றவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்ததும் பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது.

“ராஜேந்திரனுக்காகக் கொஞ்சம் காத்திருக்கலாமா?” என்று ஷீலா கேட்டபோது “குமணன் வராமல் அவர் வரமாட்டார்” என்றார் சிவானந்தம். எல்லோரும் சிரித்தார்கள். அவர்களுக்கு இதெல்லாம் பழக்கம் போலிருக்கிறது.

“அதெல்லாம் வந்துடுவாங்க. நாம வேலையைப் பாக்கலாம்”

என்றார் சுமதி.

கூட்டம் மிக விரைவாக நடந்து முடிந்தது. நாளை பாஸ்கரின் சொந்த ஊரான இலுப்பபாளையம் போவது என்றும் அங்கே மக்களிடம் விசாரித்து விட்டு மறுநாள் காமாட்சிபுரம் வந்து காவல்நிலையத்திலும் மேல் அதிகாரிகளிடமும் விசாரிப்பது என்றும் அதற்கு அடுத்த நாள் உட்கார்ந்து அறிக்கையைத் தயாரிப்பது அதை மறுநாள் செய்தியாளர்களிடம் வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. ஓரிரு தலித் அமைப்பினர் இந்த உண்மையறியும் குழுவில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்திருந்தனர். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ரமேஷ் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டான். நமக்குள் இருக்கும் உறவுகள் வேறு. உண்மையறியும் குழுவில் ஒருபக்கச் சார்பான ஆட்களை இணைத்துக் கொள்வது வேறு என்றான்.

“பாதிக்கப்பட்டவனுக்கு என்ன நடந்ததுன்னு தேடிட்டுப் போற குழுவுல சேர்ந்துக்க உரிமை இல்லை. இது ஒருவகையான அதிகாரவர்க்க நடைமுறை” என்று கசப்புடன் சொன்னார் சிவானந்தம்.

“நாம போறது உண்மையறியும் குழு. இவங்க ஆதிக்க சாதிக்காரங்கதான் கொலை செஞ்சுட்டாங்கன்னு சொல்றாங்க. ஏற்கெனவே முன்முடிவுகளோட இருக்கறவங்களை எப்படிச் சேர்க்க முடியும்? அப்புறம் அவங்க அந்த முடிவுகளை நம்மீது திணிப்பாங்க இல்லையா?”

“நடுநிலையான ஆளுகளாப் போலாம். உண்மையைக் கண்டறியலாம். அப்புறம் துண்டை உதறித் தோள்ல போட்டுட்டுப் போயிட்டே இருக்கலாம்” என்றார் சிவானந்தம்.

சிவானந்தம் ஒருவிதமான வறண்ட குரலில் எல்லாவற்றையும் மறுத்துப் பேசினார். ஆனால் இதை இப்படித்தான் செய்யவேண்டும் என்று ஒரு மாற்றுக் கருத்து வைத்துப் பிடிவாதமாக நிற்கவில்லை. அதில் ஒரு பலவீனம் தெரிந்தது. தன்னுடைய பார்வை மேம்பட்டது என்பதை அறிவித்துவிட்டு வேறு வழி இல்லாமல் இவர்களோடு இருப்பதாகக் காட்டிக்கொள்வதன் மூலம் அவர் தன்னையும் மற்றவர்களையும் ஏமாற்ற முயல்வது போல ஷீலாவுக்குத் தோன்றியது. ஆனால் அவசரப்பட்டு முடிவுகளுக்கு வந்துவிடக்கூடாது. இன்னும் இரண்டு மூன்று நாட்கள் தங்கி

வேலை செய்ய வேண்டியிருக்கும் ஆட்களுடன் ஆரம்பத்திலேயே மனவிலக்கம் கொண்டுவிடக் கூடாது என்று நினைத்துக்கொண்டாள்.

“தோழர், நீங்க புரட்சி பண்ணுங்க. நாங்க வேண்டான்னா சொல்றோம்?” என்றார் சுமதி சூடிக்கொடுத்தாள்.

‘சூடிக் கொடுத்தாள்’ என்ற பெயரில் அவர் எழுதிய கவிதைகள் தீவிர இலக்கிய வட்டங்களில் மிக முக்கியமான விவாதங்களை ஏற்படுத்தியவை. அதோடு ஆர்வமிக்க மனிதஉரிமைச் செயல்பாட்டாளரும் கூட. இது போன்ற சம்பவங்கள் நடக்கும்போது பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக நிற்பது தனது கடமை என்ற உறுதியான நம்பிக்கை கொண்டவர். அதிகமோ குறைவோ முடிந்ததெல்லாம் செய்ய வேண்டும் என்பது அவரது கொள்கை.

சிறுவயதில் சுமதி சூடிக் கொடுத்தாள் என்ற தனது பெயரை அவர் வெறுத்தார். ஆனால் கணவருடனான பிரிவுக்குப் பின்பு தனது பெயரின் மீது அவருக்கு ஒரு நேசம் பிறந்துவிட்டது. எந்த ஆணின் துணையுமில்லாமல் நேராகக் கடவுளைத் தனது வழியில் அடைந்த ஆண்டாளின் கதை அவருக்குத் தனிக்கவர்ச்சியை அளித்தது. அவர் சூடிக் கொடுத்தாள் என்ற பெயரில் கவிதைகள் எழுதத் தொடங்கியது அதன் பின்புதான்.

“பண்ண முடியும்ன்னா பண்ணியிருக்க மாட்டமா? ஒண்ணும் முடியாமதான சுப்பக்கான்னு உக்காந்திருக்கோம்”

“அப்ப சும்மா இருங்க” என்று சுமதி மென்மையான புண்படுத்தாத சிரிப்புடன் சொன்னார். சிவானந்தம் எதுவும் பேசவில்லை.

சிவானாந்தம் நடுத்தர உயரம். வேட்டி சட்டை அணிந்திருந்தார். வெயிலில் அலைந்து கருத்துப்போன நிறம். ஒரு காலத்தில் பெரிய விவசாயிகள் சங்கத் தலைவராக இருந்தவர். ஏறக்குறைய இளமை முழுவதையும் போராட்டங்களிலும் சிறையிலும் கழித்தவர். இப்போது கட்சியிலிருந்து விலகி பொதுவான ஆளாக இருந்து வந்தார். எல்லா சிறு அமைப்புகளின் கூட்டங்களிலும் அவரைப் பார்க்க முடியும். மைக்கைப் பிடித்துவிட்டால் தன்னை மறந்து எல்லோரையும் ஏசி விடுவார் என்று

ரமேஷ் ஷீலாவிடம் கிசுகிசுத்தான்.

“அப்புறம் ஏன் அவரை அவங்க அழைக்கிறாங்க?”

“இந்த அமைப்புகள்லாம் முப்பது நாற்பது பேர்கள்தான் இருக்காங்க. நான்கைந்து அமைப்புகள் சேந்தால்தான் ஒரு நூறு பேராவது வருவாங்க. அதனால கலந்தாலோசனை கூட்டம் நடத்த இவரமாதிரி பொதுவான ஆளுகளைச் சேத்துக்கறாங்க”

“போலீசில் கூட்டங்களுக்கு அனுமதி வாங்குவது, கூட்டியக்கம் நடத்த முன்னால் நின்று பேச்சு வார்த்தை நடத்துவது, பேச ஆளில்லாத போது மைக் பிடித்துப் பேசுவது என்று இவரால பல உபயோகங்கள்” ரமேஷ் சிரித்தான்.

ஷீலா சிவானந்தத்தின் வெறுப்பால் சுழித்த முகத்தையே சுவாரஸ்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரமேஷ்குமார் ஷீலாவின் காதருகே மீண்டும் கிசுகிசுத்தான். “நம்பிக்கை இழந்த கிழம். சும்மா பொலம்பிக்கிட்டே இருக்கும். நம்மால உண்மையறியும் குழு போட்டு மலையப் பெரட்ட முடியாது. ஆனால் கத்திக்கிட்டே இருக்கணும். இல்லாட்டி கொலைகாரனுக ஊரையே சுடுகாடு ஆக்கிருவானுக” என்றான் தணிந்த குரலில். “இங்க இப்புடிதான் இருப்பார். ஆனா பீல்டுக்குப் போயிட்டா சின்னப்பையனாட்டம் ஓடியாடி வேல செய்யத் தொடங்கிடுவார்”

தனியாக பேச வாய்ப்புக் கிடைத்ததும் ஷீலா ரமேஷ்குமாரிடம் கேட்டாள்.

“சார், யார் இந்த பாஸ்கர்? நீங்க என்ன நினைக்கிறீங்க? கொலைதானா?”

“பையன் கொஞ்சம் ஏடாகூடமான பையந்தான். எங்கியாவது வாயைக் குடுத்து ஏதாவது ஆகியிருக்கலாம். கெப்பாசிடி பில்டிங் கிளாஸுக்கு வந்திருக்கான். கேள்வியா கேட்டு கிளாஸையே கெடுத்துட்டான். வன்கொடுமைப் புகார் கொடுத்தா ஆதிக்க சாதிக்காரன் மேல கேஸ் போட்டதோட புகார் கொடுத்தவன் மேலையும் ஒரு கேஸ் போடறாங்களே? மேல்சாதிக்காரங்கள அரெஸ்ட் பண்ண

மாட்டேங்கறாங்களே? இதுக்கெல்லாம் என்ன சொல்றீங்க... இப்படி என்னென்னமோ கேட்டான்"

"அதில உண்மையில்லையா?" ஷீலாவின் குரலில் சற்று தயக்கமிருந்தது. ரமேஷ்குமார் உடனே பதில் சொல்லாமல் யோசனையுடன் இவளைப் பார்த்தான். அந்தப் பார்வையில் 'இது கூடத் தெரியவில்லையா?' என்பது போன்ற ஒரு பாவம் இருந்தது.

"இத பாருங்க ஷீலா" சில விநாடிகளுக்குப் பிறகு மெல்லிய குரலில், டியூஷன் ஆசிரியர் போன்ற கண்டிப்புடன் ஆங்கிலத்தில் தொடங்கினான். "சட்டம் வேற, செயல்படுத்துதல் வேற. சட்டம் நமக்குச் சாதகமா இருக்கு. ஆனா சட்டத்தைச் செயல்படுத்தறதுல அதாவது எக்ஸிகியூஷன்ல பிரச்சினை இருக்கு. அதச் சரி செய்யத்தான் இந்த சிவில் சொஸைட்டி நடவடிக்கைகள். புகார்தாரர்கள் சட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்புகளை அணுக வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர்றோம். அரசோட ஒவ்வொரு கதவையும் தட்டவும், தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளவும் பயிற்சி கொடுக்கறோம். அமைப்புகளை உருவாக்கிக் கொள்ள உதவறோம். ஸ்லோ அண்ட் பெய்ன்புல் ரோட். ஆனா ரிசல்ட்ஸ் இருக்கு. இப்படித்தான் தீர்க்க முடியும். வேறென்ன சாத்தியம்?"

ரமேஷ்குமார் ஒரு கலகக்காரன் அல்ல என்பது அப்பட்டமாகத் தெரிந்தது. ஒரு புரபஷனல். ஐடி புரபஷனல் போல, வக்கீல் போல இதிலும் புரொபஷனல். ஹ்யூமன் ரைட்ஸ் புரொபஷனல் என்று மனதுக்குள் சொல்லிப் பார்த்தாள். தமிழில் மொழி பெயர்த்தால் மனித உரிமைச் செயல்பாடுகளைத் தொழிலாகக் கொண்டவர் என்று வந்தது. அந்தச் சொல் மிகச் சரியானதாகவும் பொருத்தமானதாகவும் தோன்றியது. ஷீலா மெல்லப் புன்னகைத்தாள்.

ரமேஷின் முகத்தில் அதிருப்தி தெரிந்தது. ஒரு ஜூனியர் வக்கீல் எதிரே உட்கார்ந்து காரணமில்லாமல் சிரிப்பதை அவன் ரசிக்கவில்லை. அவள் சட்டென்று முகத்தை கவனமாக இருப்பது போல மாற்றிக்கொண்டாள்.

"பாஸ்கர் பத்தி சொல்லிட்டிருந்தீங்க சார்?"

“ஆங் யெஸ் பாஸ்கர். பேசினப்போ பெரிய புரட்சிக்காரன் மாதிரி இருந்துச்சு. ஆனால் ஊருக்குப் போய் ஏதோ பஞ்சாயத்துப் பண்ணிட்டான். வன்கொடுமைக் கேஸ்ல காசு வாங்கிட்டு புகார வாபஸ் வாங்க வெச்சுட்டானாம். அந்தமாதிரி ஆளுக தான்...”

பாஸ்கர் மீதான ரமேஷின் அலட்சியத்துக்குக் காரணம் இதுவாகத்தானிருக்க வேண்டும் என்று ஷீலா நினைத்துக்கொண்டாள். சமூக செயல்பாட்டாளர்கள் வன்கொடுமை வழக்குகளை வாபஸ் பெறுவதை மன்னிக்க முடியாத குற்றமாகவும் காட்டிக் கொடுக்கும் செயலாகவும் கருதுகிறார்கள்.

“போலீஸ் இந்தக் கேஸ்ல சில ஆளுகள அரெஸ்ட் பண்ணிடுச்சுன்னு சொல்றாங்க. நாம இதிலே என்ன செய்யப் போறோம்?”

“போலீஸ் விசாரிச்சுட்டிருக்காங்க. யாரையாவது கேஸ்ல சேக்காம விட்டிருக்காங்களான்னு பாக்கணும்” ரமேஷின் பேச்சு எப்போதுமே மெல்லியதாக இருந்தது. யாரையும் கடுமையான சொற்களில் பேசவில்லை. ஒருமாதிரியான உணர்ச்சியற்ற நிதானம்.

“இந்தமாதிரி கேஸ்ல எல்லாம் போலீசுக்கு நெருக்கடி இருக்கும். சிவில் சொஸைடி கவனிப்பு இருக்கணும். எல்லா அக்யூஸ்டையும் ஒழுங்கா கேஸ்ல சேர்க்கறாங்களான்னு நாம கவனிக்கறோம்னு அவங்களுக்குப் புரிய வைக்கணும். அப்புறம் வழக்கு நடக்கும்போது அரசு வக்கீல் வேண்டாம்னு நல்ல கிரிமினல் லாயர் யாரையாவது நியமிக்கச் சொல்லிக் கேக்கணும். வன் கொடுமைத் தடுப்புச் சட்டத்துல இதுக்கு வழி இருக்கு இல்ல? பயன்படுத்தணும். இதெல்லாம் இருந்தாத்தான் வேல நடக்கும்”

”ஏன் சார் நீங்க நடத்த மாட்டீங்களா?”

“நான் பாதிநாள் ஹை கோர்ட்ல இருப்பேன். ஸோ...”

மறுநாள் ரமேஷ்குமார் துல்லியமாகச் செயல்பட்டான். குழுவில் எல்லாருக்கும் ஆளுக்கொரு நாற்பது பக்க நோட்டும், ஒரு ரெனால்ட்ஸ் பேனாவும் கொடுத்தான். “மக்களிடம் பேசி அவர்கள் கூறுவதை வாக்குமூலமாகப் பதிவு செய்யவேண்டும். அரைகுறையாக எழுதக் கூடாது. வாக்குமூலம் அளிப்பவரின் பெயர், தகப்பனார் பெயர், விலாசம் வயது உட்பட முழு விவரமும் குறிப்பிட வேண்டும். கோர்ட்டில் கூட ஒப்புக் கொள்ளும்படி இந்த வாக்குமூலம் பதிவு செய்வது இருக்க வேண்டும்” என்று சீரியஸான முகத்துடன் கூறினான்.

”நாம் செல்வது உண்மையை அறியத்தான். உண்மை எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். எனவே ஒரு தரப்பினரிடம் அதிக நெருக்கமாக இருப்பது போலக் காட்டிக்கொள்ளக் கூடாது”

இங்கே யாரும் உண்மை அறியும் குழுவுக்குப் புதியவர்கள் அல்ல. இருந்தாலும் கவனமாகக் கேட்பது போல முகத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள். அங்கே போனதும் குழு தனித்தனியாகப் பிரிந்து விடும். எல்லோரும் கதை கேட்கத் தொடங்கிவிடுவார்கள்.

உண்மையறியும் குழு ரமேஷ்குமாரின் காரில் காலை எட்டு மணிக்குக் கிளம்பியது. கோவை நகர எல்லை முடிந்ததுமே ஆங்காங்கே மனோகரன் வெள்ளிங்கிரி மற்றும் கைது செய்யப்பட்டிருந்த சங்கத்துக்காரர்களின் முகங்களுடன் விடுதலை செய் என்ற போஸ்டர்கள் காணப்பட்டன. இலுப்பபாளையத்தில் போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. மனோகரனும், வெள்ளிங்கிரியும் கைது செய்யப்பட்டவுடன் சேரி மீது ஒரு தாக்குதல் முயற்சி நடந்தது. ஊரில் பாஸ்கருக்கு ஒட்டப்பட்டிருந்த நினைவஞ்சலி சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டிருந்தன. மனோகரன் வெள்ளிங்கிரி படம் போடப்பட்ட சுவரொட்டிகள் ஊர் முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன.

சங்கத்துக்காரர்களின் கைதுக்குப்பின் தலித்மக்கள் ஊர்விலக்கம் செய்யப்பட்டிருந்தனர். சுற்றிலும் இருந்த கிராமங்களில் அவர்களுக்கு எந்தக் கடையில் எந்தப் பொருளும் விற்கக்கூடாது, வேலை கொடுக்கக்

கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. விவசாயவேலை மட்டுமல்லாமல் விசைத்தறி, மில்களிலும் கூட இலுப்பப்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் வெளியே நிறுத்தப்பட்டனர்... பள்ளிக்குச் சென்ற இலுப்பப்பாளையம் குழந்தைகள் கூடத் திருப்பி அனுப்பப்பட்டனர். கல்வீச்சால் ஊருக்கு பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்தது. வாகனங்களிலும், நடந்தும் வேறிடங்களுக்கு வேலைக்கும் பொருட்கள் வாங்கவும் சென்றவர்கள் ஊர்ச் சாலையில் தாக்கப்பட்டனர். காலனிக்கு வந்த தண்ணீர் பைப் சேதப்படுத்தப்பட்டு குடிநீர் இணைப்புத் துண்டிக்கப்பட்டது. தலித் மக்கள் வாழும் பகுதி வெற்றிடமாகிவிட்டது. போலீஸ் வந்ததும் பல குடும்பங்கள் கோவைக்கும் திருப்பூருக்கும் தப்பிச்சென்றன. மிஞ்சி இருந்தவர்கள் வெளியே செல்ல வழியில்லாமல் ஊருக்குள் முடங்கிக் கிடந்தனர். பல அமைப்புகள் இணைந்து நடத்திய போராட்டத்துக்குப் பிறகு அவர்கள் ஏற்பாட்டில் போலீஸ் பாதுகாப்புடன் கோவையிலிருந்து ஒரு டெம்ப்போவில் பொருட்கள் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்தன.

தொலைவிலேயே போலீஸ்காரர்கள் அரசமரத்தடியில் உட்கார்ந்திருப்பதையும் ஊர் வெரிச்சோடிக் கிடப்பதையும் பார்த்து ரமேஷ்குமார் காரின் வேகத்தைக் குறைத்தான். இரண்டு இளம் போலீஸ்காரர்கள் பாய்ந்து வந்து காரை மறித்தனர். அவர்கள் வந்த வேகத்தைப் பார்த்ததும் இந்த நொடி கார் கண்ணாடியை உடைக்கப்போகிறார்கள் என்று தோன்றியது.

“திரும்பிப் போ” ஒரு போலீஸ்காரன் கை காட்டினான். இன்னொருவன் டயரில் லட்டியால் தட்டினான். ரமேஷ்குமார் கார் கதவைத் திறக்க முயல போலீஸ்காரன் அதை முரட்டுத்தனமாகச் சாத்தினான். நெருக்கடிப் பகுதிகளை வெளியுலகத் தொடர்பு இல்லாத வெற்றிடமாக ஆக்குவதை அரசு முக்கியமான தந்திரமாகக் கருதும். துண்டிக்கப்பட்டுள்ள பகுதியோடு தொடர்பு ஏற்படுத்துவதே மிகமிக அவசியமான முதல் நடவடிக்கை.

ரமேஷ் தனது வழக்குரைஞர் அடையாள அட்டையை எடுத்து நீட்டினான். “அட்வகேட்ஸ். உண்மையறியும் குழு வந்திருக்கோம். எஸ்.பி

பர்மிஷனோடத்தான் வந்திருக்கோம்”

ஷீலாவும் தனது அடையாள அட்டையை எடுத்து நீட்டினாள். அதைப் பார்த்து அங்கே உட்கார்ந்திருந்த சற்று மூத்த காவலர் ஒருவர் எழுந்து வந்தார்.

“யாரா இருந்தாலு விட முடியாது போங்க”

“விடா விட்டால் இங்கேயே மறியலும் உண்ணாவிரதமும் நடக்கும்” சுமதி சாலையில் உட்கார்ந்தார். அவரோடு ஷீலாவும் சிவானந்தமும் உட்கார்ந்தனர். அதற்குள் காலனியிலிருந்து தலித் தலைவர் சம்பூகனும் இன்னும் சில முற்போக்கு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் ஓடி வந்தனர். அவர்கள் இலுப்பப்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றாலும் தொடர்ந்து மக்கள் மீது தாக்குதல் நடந்து வந்ததால் பாதுகாப்புக்கு வந்து அங்கேயே தங்கியிருந்தனர். பல தோழர்கள் இரவில் போலீசுக்கும் ஆதிக்க சாதி இளைஞர்களுக்கும் தெரியாமல் காடுமேடெல்லாம் நடந்து காலனியில் நுழைந்திருந்தனர்.

ஒரு ஓரமாக நின்று நடப்பதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த உளவுத் துறை போலீஸ்காரர் சாவகாசமாகக் கிசுகிசுத்தார் எஸ்.ஐ-யிடம் சென்று ஏதோ கிசுகிசுத்தார்.

“ஒ, ரைட்ஸ் லாயரா? மொதல்லயே சொல்லியிருக்க வேண்டியதுதானே? சீக்கிரம் போயிட்டு வந்துடுங்க சார். ஊர்ல டென்ஷன் இருக்கு. கூட்டம் கீட்டம் எதுவும் போட்டுடாதீங்க” எஸ்.ஐ எதுவுமே நடக்காததைப் போல சிரித்தபடி கைகுலுக்கிப் போகலாம் என்று சைகை செய்தார்.

உண்மையறியும் குழுவை வரவேற்க ஒரு பெரிய கூட்டமே பாஸ்கர் வீட்டில் காத்திருந்தது. சம்பூகன் எல்லோரையும் கைகுலுக்கி வரவேற்று வெளியே போடப்பட்டிருந்த ஷாமியானாவின் கீழ்ப் போடப்பட்டிருந்த பிளாஸ்டிக் சேர்களில் உட்கார வைத்தார். ஒரே அறை சமையலறையாகவும், கூடமாகவும் பிரிக்கப்பட்ட காலனிவீட்டினுள் பெண்கள் கூட்டம் நிறைந்திருந்தது. பரணில் ஜெயலலிதா படம் போடப்பட்ட அட்டைப் பெட்டிகள் தெரிந்தன. இலவச ஃபேனும்,

கிரைண்டரும் தரப்பட்ட பெட்டிகள் என்பதை உடனே புரிந்துகொள்ள முடிந்தது.

சுமதி சூடிக் கொடுத்தாள் தனது பையிலிருந்து இரண்டு கிலோ டீத்தூளை எடுத்து அருகே இருந்த ஒருவரிடம் கொடுத்தார்.

கண்ணாடி போட்டிருந்த ஒரு தாடிக்கார இளைஞன் "ரொம்ப நன்றி தோழர். புண்ணியமாப் போச்சு. டீ இல்லாம காஞ்சு போயிட்டோம்" என்றான்.

"பால் இல்லீங்களே" ஒரு பெண் டீ பாக்கெட்டுகளைப் பெற்றுக்கொண்டு தயங்கினாள்.

"வற டீ போடு கண்ணு. தோழர் பசங்க சோறு இல்லாம கூட இருந்துருவாங்க. டீ இல்லாமத்தே நெம்ப கஷ்டப்பட்டுப் போயிட்டாங்க" என்றார் ஒரு பெரியவர்.

"சம்பூகன் தோழர் டீத்தூள் வாங்கிட்டு வரச் சொன்னப்ப நிலைமை இவ்வளவு மோசமா இருக்கும்னு தெரியல. இல்லாட்டி பால்பவுடர் ஏதாச்சும் வாங்கிட்டு வந்திருப்பேன்" சுமதி உண்மையான வருத்தத்துடன் கூறினார்.

உண்மையறியும் குழு தனது முதல் விசாரணையை பாஸ்கரின் வீட்டில் தொடங்கியது. எல்லோருக்கும் பாஸ்கரைப் பற்றித் தெரிந்து கொள்ள விருப்பம் இருந்தது. அங்கிருந்த ஒருசில இளைஞர்கள் நீலச்சட்டை அணிந்திருந்தனர். எல்லோர் முகத்திலும் ஒரு கோபமும், ஆவேசமும் கொதித்துக் கொண்டிருந்தது. பள்ளிக்குப் போகாத குட்டிப் பையன்கள் சுற்றித் திரிந்து கொண்டிருந்தனர். அரைக்கால் டிரவுசர் அணிந்து கால்கள் வளைந்து போன பெரியவர்களும் சுருங்கி வளைந்துபோன மூதாட்டிகளும் திண்ணையில் உட்கார்ந்து எதையோ உள்ளொடுங்கிய குரல்களில் முனகிக் கொண்டிருந்தனர். மூதாட்டிகளின் பச்சை குத்திய தோள்களும் கரங்களும் சுருங்கிப் போய் வினோதமாகத் தோன்றின.

சம்பூகனுக்கு வயது ஐம்பத்தைந்து இருக்கும். சம்பூகன் என்பது அவரது புனைப்பெயர். கருப்பாக குட்டையாக வழுக்கைத்

தலையுடனிருந்தார். ஆனால் அந்த முகத்தில் அப்படியொரு பளபளப்பும் தெளிவும் தென்பட்டன வெள்ளை வேட்டியும் கருப்புச் சட்டையும் அணிந்திருந்தார். தி.க.காரராக தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியிருந்தாலும் இப்போது அதிலிருந்து வெளியேறி ஒரு தலித் இயக்கத்தில் இயங்கி வருகிறார். இருந்த போதும் கருப்புச் சட்டை அணிவதை விடவில்லை. சிறந்த நாடக நடிகர். பாதி நேரத்தை நூலகத்திலேயே கழிப்பார் என்று ரமேஷ் அவரை ஷீலாவுக்கு அறிமுகப்படுத்தினான். சம்பூகன் சிரிக்காமல் கை குலுக்கிவிட்டு டிரஸ்ட் ஏட்டில் புத்தரின் சாக்கிய பழங்குடி இனத்துக்கும், தமிழக தலித்துகளுக்கும் உள்ள உறவுபற்றி ஒரு ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளதாகச் சொன்னார்.

ஷீலா அதைப் படித்திருந்தாள். ஏராளமான தரவுகளுடன் எழுதப்பட்டிருந்த கட்டுரை அது. தலித்துகள் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அம்பேத்கரின் கருத்து தெரிந்ததுதான். ஆனால் அவர்களை புத்தரின் சாக்கியப் பழங்குடி இனத்தோடு தொடர்புபடுத்தும் பார்வை புதிதாக சுவாரஸ்யமானதாக இருந்தது.

ரமேஷ்குமார் தலைவர் சம்பூகனைப் பார்த்துத் தொடங்குங்கள் என்று சைகை காட்டினான். சம்பூகன் மறுத்துவிட்டு பாஸ்கரின் அப்பாவைப் பேசச் சொன்னார். சுமதியும் சிவானந்தமும் அதை ஆமோதித்தனர். பாஸ்கரின் பின்னணியைத் தெரிந்து கொள்ள குடும்பத்தினர் பேசினால்தான் நல்லது. ரமேஷுக்கு செண்டிமெண்ட் விஷயங்கள் நேரத்தைக் கெடுக்கும் என்ற உணர்வு. ஆனால் ஏனோ சம்பூகன் கூட்டத்தின் நடுவே பேச விரும்பவில்லை.

பாஸ்கரின் அப்பா உழைத்து உரமேறிய வலிய தேகமும், முடிச்சு முடிச்சான விரல்களும் கொண்டிருந்தார். தலைமுடியில் வெளுப்பு தெரிந்தாலும் அடர்த்தியாக இருந்தது. சற்றே உற்றுப் பார்த்தால் பாஸ்கரின் முகச் சாயலைக் காணமுடிந்தது. வெளுத்துப்போன லுங்கி கணுக்கால் வரையே இருந்தது. பாதி பட்டன்கள் இல்லாத சட்டையும் பேருக்குத் தோளில் தொங்கிக் கொண்டிருந்தது. அம்மாவுக்கு வயது சொல்ல முடியவில்லை. முகம் அழுதழுது சும்பிப் போயிருந்தது.

அணிந்திருந்த ரேஷன் கடை சேலையில் திட்டுத்திட்டாக ஈரம் தெரிந்தது. பாஸ்கரின் அம்மாவும், அப்பாவும் நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டு உடைந்த குரலில் தட்டுத் தடுமாறிப் பேசத் தொடங்கினர்.

ஷீலாவின் குறிப்புகளில் இருந்து

பாஸ்கர் பிறந்தது இலுப்பப்பாளையத்தில். அப்போது ஊருக்கு நான்கு புறமும் பருத்திக் காடுகள் இருந்தன. ஊர் அவ்வளவு அழகாக இருக்கும். நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்பு எல்லா நிலங்களிலும் பருத்திதான் பயிரிடப்பட்டிருந்தது என்றாலும் பெரும் நிலக்கிழாரான ஒருவர் மட்டுமே பருத்திக் காட்டுக்காரர் என்று அழைக்கப்பட்டார். அவரிடம் பண்ணையத்துக்கு இருப்பவர்கள் அதிர்ஷ்டக்காரர்கள் என்று சேரியில் சொல்லிக் கொள்வார்கள். மற்ற வீடுகளில் பண்ணையத்துக்கு இருப்பவர்களுக்கு வயிறு நிரம்ப சோறோ, களியோ கிடைக்காது. பாஸ்கரின் அப்பா மாரன் அவரிடம்தான் பண்ணையத்தில் இருந்தான்.

மாரன் ஏழு வயதில் பண்ணையத்தில் சேர்க்கப்பட்டான். பண்ணையில் முப்பது மாடுகள் இருந்தன. சாணி அள்ள அள்ள மாளாது. கோழி கூப்பிடும் போது தொடங்கும் வேலை மாலை மயங்கும் வரை தொடரும். சாணி அள்ள வேண்டும். மாடு மேய்க்க வேண்டும். தவிர தேவைப்படும் போது பருத்திக் காட்டில் வேலை செய்ய வேண்டும். அது இடுப்பொடித்துவிடும். விதைத்த மூன்று மாதத்தில் பருத்திச் செடி ஒருஆள் கட்டித்தாவிப் பிடிக்குமளவுக்கு வளர்ந்துவிடும். மூன்று மாதத்தில் பூக்கும். ஒரு செடி சுமார் நூறு பூக்கள் பூக்கும்.

பூக்கள் பச்சை நிறக்காய்களாகும். பின்பு சிவப்பு நிறமாகிப் பழுக்கும். வெடித்துப் பஞ்சாகும். ஒரு மாதம் பஞ்சு பறிக்கும் வேலை தொடர்ந்து நடக்கும்.

மாரன் முதல் முதலாக பனிரெண்டு வயதில் ஊரைவிட்டு ஓடினான். எப்படியோ காங்கேயம் பக்கம் இருக்கும் மாமா வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். இரண்டு நாட்கள் நிம்மதியாகத் தூங்கினான். இப்படியே இருந்து விடலாம் என்று இருந்த போது அப்பா தேடிக்கொண்டு வந்துவிட்டார். பிடித்து இரண்டு போடு போட்டு திரும்பவும் தோட்டத்துக்குக் கொண்டுவந்து விட்டார்கள். அடுத்து பதினைந்தாவது வயதில் திரும்பவும் ஓடினான். இந்த முறை கோயமுத்தூருக்கு ஓடி அங்கே ஒரு டீக்கடையில்

வேலைக்குச் சேர்ந்துவிட்டான். இங்கே நிலைமை உலைக்குத் தப்பி நெருப்பில் விழுந்தது போலாகிவிட்டது.

காலை நான்கு மணிக்கு எழ வேண்டும். இரவு பதினோரு மணி வரை வேலை சக்கையாகப் பிழிந்துவிடும். தாக்குப்பிடிக்க முடியாமல் வீடு திரும்பினான். அப்பா பருத்திக் காட்டுக்காரரிடம் கூட்டிக்கொண்டுபோய் விட்டார். அவரது சிவந்த விழிகளைக் கண்டதும் மாரனுக்கு அடி வயிறு கலங்கியது. காட்டுக்காரர் கை ஓயும் வரை சாத்திவிட்டு வேலையைப் பாருடா என்று விரட்டி விட்டார். பத்தொன்பது வயதில் திருமணம். முதலில் ஒரு பையன். அப்புறம் பாஸ்கர். தனது மகன்களை ஒரு போதும் பண்ணையத்துக்கு அனுப்பக்கூடாது என்று மாரன் முடிவு செய்திருந்தார்.

மழை பொய்த்தது. ஆங்காங்கே நிலங்கள் தரிசாகக் கிடக்கத் தொடங்கின. பருத்திக் காட்டுக்காரரால் பருத்தி போட முடியவில்லை. கொஞ்ச நிலங்களில் கரும்பும் தென்னையும் பயிரிட்டதோடு மீதியை சும்மா போட்டுவிட்டார். பலர் வேலைதேடி கோவைக்கும், திருப்பூருக்கும் இடம் பெயர்ந்தனர். அப்போதுதான் திருப்பூரில் இருந்து பஸ்கள் வந்து ஆட்களை வேலைக்குக் கூட்டிச்செல்லத் தொடங்கின. பின்பு பருத்திக் காட்டுக்காரரே ஒரு ஸ்பின்னிங் மில் தொடங்கினார்.

ஒருநாள் மாரனை மில்லுக்கு வாரியா என்று கேட்டார். மாரன் உடனே ஒப்புக்கொண்டார். ஊரில் பெரும்பாலான காடுகள் தரிசாகக் கிடந்தன. நிலச் சொந்தக்காரர்கள் ஊரைவிட்டு கிழக்கே நெடுஞ்சாலையை நோக்கி நகர்ந்து வந்தார்கள். காட்டு வேலையைத் தவிர வேறு வேலை தெரியாத, செய்ய விரும்பாத சேரிப் பெரிசுகளை சில காட்டுக்காரர்களே கூப்பிட்டுக் காட்டை ஓட்டிக்கறயா? என்று கேட்டார்கள். பெரிதாக ஒன்றுமில்லை. காடு சும்மா கிடக்க வேண்டாம் என்றுதான்.

பாஸ்கர் வித்தியாசமாக இருந்தான். அவனது தோற்றம் கூட வேறுவிதமாக இருந்தது. நீள முகமும், நேரான மூக்குமாக தனித்துத் தெரிவான். துறுதுறுப்பும் குறும்பும் இருந்தாலும் அதிகம் சிரிக்காத ஒரு கவனமான பார்வை அந்த கூர்மையான விழிகளில் தெரியும். வகுப்பில் முதல் மாணவனாக வந்தான்.

மதுரைவீரன் கோவில் ஊருக்கு வெளியே இருந்தது. கோவிலுக்குக்

கூரை போடக்கூடாது என்பது ஐதீகம். எனவே கதவு ஜன்னல் எல்லாம் இருந்தாலும் மேற்கூரை மட்டும் இருக்காது. அந்த நீளமான கட்டடத்தினுள் ஒரு வேப்ப மரம் ஆர்ந்து உயர்ந்து வளர்ந்திருந்தது. அதனோடு ஒரு அரச மரமும் பின்னிப் பிணைந்திருந்தது. உள்ளே ஏராளமான இரும்பு வாள்கள் மரத்தில் சாத்தி வைக்கப்பட்டிருக்கும்.

மதுரைவீர சாமி கேட்டது கொடுக்கும். கவுண்டர்கள், முதலியார்கள், செட்டியார்கள் எல்லோரும் வருவார்கள். முக்கியமாக குழந்தை இல்லாதவர்கள், பேய் பிடித்தவர்கள் வருவார்கள். பூசாரி சாமியாடி குழந்தை வரம் கொடுப்பார். பேய் ஓட்டுவார்.

கோவில் சாட்டும் போது பருத்திக் காட்டுக்காரர் கோவிலுக்கு முன்னால் உள்ள நிலங்களில் சேரிக்கார்கள் கேட்கும் நிலத்தை பண்டிகைக்கு விட்டுக்கொடுப்பார். அங்கே மக்கள் பொங்கல் வைப்பார்கள். மதுரைவீர சாமி கூத்து நடக்கும்.

ஏழு கானகங்கள் மரக்கிளைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டு அங்கே சாமி கிளியைத் தேடிச் செல்லும். ஒவ்வொரு கானகத்திலும் ஒவ்வொரு ஆபத்துக் காத்திருக்கும். அதைக் கடந்து சென்று கிளியைக் கண்டு பிடிக்கும்.

ஒருநாள் மதுரைவீரன் நாடகத்தை நடத்த ஒரு குழு வந்திருந்தது. மஞ்சள் ஜிப்பா அணிந்திருந்த அந்த நடுத்தர வயதுக்காரர்தான் மதுரைவீரன் வேஷங் கட்டுபவர் என்றார்கள். அவருக்கு புதர் போல மண்டிய அடர்ந்த தலைமுடி. அதுவும் ஜிப்பாவும் மட்டும்தான் அவரை வித்தியாசப்படுத்திக் காட்டின. அவர் கூட்டத்திலிருந்து சற்றே ஒதுங்கி சிகரெட் பிடித்தார். பின்னால் வந்த சின்னப் பையன்களுடன் சகஜமாகப் பேசினார். இவரா மதுரைவீரன்? பாஸ்கரும் ஊர்ப் பையன்களும் ஆச்சரியப்பட்டனர்.

நாடகம் தெருவில் தொடங்கியது. அவர் முதுகின் மேல் வட்டவடிவத் தட்டு போல மூங்கில் குச்சிகளைக் கட்டி அவற்றில் துணி சுற்றி தீபம் ஏற்றினார்கள். அது அவரது முதுகைச் சுற்றி ஒளிவட்டம் போல எரியத் தொடங்கியது. மதுரைவீர சாமி புறப்பட்டது. பறை முழங்கியது. சுண்டுக் குச்சியும் அடிக்குச்சியும் அற்புதமான ரிதத்தோடு அதிர்ந்தன. இதயமும்

அதே ரிதத்தோடு இயைந்து துடிக்கத் தொடங்கியது. பறையொலி அலையலையாக உடலைத் தாக்கியது. காதுமட்டுமல்லாமல் உடலின் ஒவ்வொரு அணுவும் அதை உணர்வது போலிருந்தது. இரண்டு அலைகளுக்கு நடுவே இருந்த அந்த கண நேர அமைதி காந்தம் போலக் கவர்ந்து இழுத்து வந்தது. அந்த கணத்தில் மனம் அடுத்த அடிக்குத் தயாரானது. லயம் தவறாது வந்த அடுத்த அடி உடலின் ஒவ்வொரு நரம்பையும் அதிர வைத்தது. மனம் அதிர்ந்தது. உடல் அதிர்ந்தது. இருளும் முரசொலியும் தீப ஒளியும், அவற்றிலிருந்து வந்த எண்ணெயும், துணியும் கருகும் மணமும் ஒரு கனவு போன்ற சூழலை ஏற்படுத்தின. மனம் தனது கட்டுப்பாட்டை முழுமையாக இழந்து கைகளும் கால்களும் தன்னிச்சையாக தாள லயத்துக்கு ஏற்ப அசையத் தொடங்கின.

திண்ணைகளில் உட்கார்ந்திருந்தவர்கள் கைகளை எதிரே இருக்கும் கண்ணுக்குத் தெரியாத கண்ணாடியில் பதிப்பது போன்று அசைவுகளுடன் எழுந்து ஆடத் தொடங்கினர். கூட்டம் முழுவதும் மந்திரத்தால் கட்டுண்டது போல தாள லயத்துக்கேற்ப ஆடத் தொடங்கியது.

மதுரைவீரன் சாமியின் ஒவ்வொரு அசைவிலும் உக்கிரம் தெரித்தது. குரல் எக்காளம் போல ஓங்கி முழங்கியது. சாமி தீபங்கள் கொழுந்துவிட்டெரிய அழுத்தமாக அடிவைத்து கோவிலுக்குள் நுழைந்தது. ஒரு கோழிக் குஞ்சை வாயால் கடித்துத் துண்டித்தது.

பின்பு பறை முழங்க மக்கள் தொடர சாலையில் ஊர்வலம் தொடங்கியது. இருளில் மூழ்கியிருந்த வெட்டவெளிகளில் கருப்பாக நீண்டது தார்ச்சாலை. நீலவானம் அந்த ஊர்வலத்துக்கு ஒரு மாயத்தன்மையை அளித்தது. இதெல்லாம் நிஜமில்லை. கனவு இப்போது கலைந்து விடுமென்று தோன்றியது. பறை அதிர்ந்தது.

த குகுகு த குகுகு தகுகுத தத

தத்த குகுகு

தகுகு தகுகு

தகுகு தகு

தீம் தீம் தீம்

குத குத குத குத்தீம்

திகுகு திகுகு தத்த தத்த

பறை சிரித்தது. அழுதது. முழங்கியது.

சாமி ஒவ்வொரு சொல்லையும் முழக்கத்துடன் உச்சஸ்தாயில் உச்சரித்தது. சாதாரண சொற்கள் கூட அந்த அதட்டலும் மிரட்டலுமாக வெளிவந்தன.

“ஏன் இந்தக் கானகத்துல உக்காந்திருக்கே?” சாமி முழுத்தொண்டையில் நடுங்கிக் கொண்டிருந்த தகப்பனிடம் கேட்டது.

“குளுரடிக்குது, மழ பெய்யுது, கால்வலிக்குது, காவலுக்குப் போக முடியலே” தகப்பனும் அதே உச்சஸ்தாயியில் பதிலளித்தான்.

“உனக்குக் குளுரடிக்குது. உடம்பெல்லாம் வலிக்குது. நீ போக முடியலே. அதனால... அதனால... நான் போறேன்”\

“பஞ்சையும் நெருப்பையும் பக்கத்துல பக்கத்துல வெக்கலாமா?”

“வெச்சா என்னவாகும்?”

“தீப்புடிச்சுக்கும்”

“அப்ப தீப்புடிச்சா குளுர் காயலாம்” சாமி அதே உக்கிர நடன அசைவுகளோடு மரக்கிளைகளால் மறைக்கப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த பொம்மியிடம் சென்றது.

நாடகம் முடிந்து பல நாட்கள் வரை மதுரைவீர சாமியின் குரலில் இருந்த அதட்டலும் கம்பீரமும் மிரட்டலும் தெனாவட்டும் கண்களை விட்டு அகலவேயில்லை. சுற்றிலுமிருந்த குரல்களில் ஊறிப் போயிருந்த அடிமைத்தனத்துக்கும் கெஞ்சலுக்கும் மாறாக ஓங்கி ஒலித்த அந்தக்குரல் மந்திரம் போல உள்ளத்தைக் கொள்ளைகொண்டது.

பாஸ்கர் மதுரைவீரனாகவே மாறிவிட்டான். இந்த வேடத்தை அற்புதமாக நடிக்கத் தொடங்கினான். அது இயல்பாக வந்துவிட்டது. சாதி வாழ்க்கையோடு ஊறிப்போயிருந்தது. பள்ளியில் சேரிப் பிள்ளைகளைத் தனியாக உட்கார வைப்பார்கள். ஊருக்கு வெளியே ஓடியாடி விளையாட

முடியாது. பெரிய மனிதர்கள் உறுத்து விழிப்பார்கள். தங்கள் உடைகள் சற்றே கந்தலாக இருக்கும். ஆனால் அந்தக் காலத்துல என்று பெரியவர்கள் சொல்லக் கேட்கும் கதைகள் இன்னும் மோசமானவையாக இருந்தன. அந்தக் காலம் இப்போது இல்லை என்று ஆசுவாசத்தோடுதான் கதைகளை சேரிப்பிள்ளைகள் கேட்டனர்.

முதல் பிரச்சினை அவன் பனிரெண்டாவது படிக்கும் போது வந்தது. உள்ளூர் மில்களில் வேலை செய்பவர்கள் முதலிலேயே அட்வான்ஸ் வாங்கிவிடுவார்கள். அப்படி ராஜேஸ்வரி மில்லில் அட்வான்ஸ் வாங்கியிருந்த இரண்டு பேர் கோயமுத்தூருக்கு ஓடிவிட்டார்கள். மில்காரர்கள் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். இரண்டு நாட்களாகக் கட்டி வைத்து அடிக்கிறார்கள் என்று அவர்கள் குடும்பம் ஊரில் முறையிட்டது. முதலில் ஊர்க்காரர்கள் போய்க் கெஞ்சினார்கள். பருத்திக் காட்டுக்காரரை நேரில் பார்க்கவே முடியவில்லை. ஆட்களை குடோனில் அடைத்து வைத்திருக்கிறார்கள் கல்லைக் கட்டி கிணற்றில் போடப்போகிறார்கள், கரண்ட் வைத்துக் கொல்லப் போகிறார்கள் என்றெல்லாம் வதந்திகள் உலாவின. ஊர்க்காரர்கள் பதறிப்போய் கோவையைச் சேர்ந்த ஒரு தலித் இயக்கத் தலைவரிடம் போய் முறையிட்டனர். தலைவர் வந்து பஞ்சாயத்துப் பேசிய பின்பு அரை உயிராக இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

தலைவரின் கொடி ஊரில் நடப்பட்டது. அது இரவோடு இரவாகக் காணாமல் போனது. தலைவரோடு சேர்ந்து கொண்டவர்கள் அரசல் புரசலாக மிரட்டப்பட்டனர். பாஸ்கரும் ஊர் இளைஞர்களும் அந்தத் தலைவருடன் இணைந்து கொண்டனர். மில்லுக்குப் போகிறவர்கள் எண்ணிக்கை இன்னும் குறைந்துபோனது. எதைச் செய்தாலும் தீவிரத்துடன் இயங்கும் பாஸ்கரின் கைக்கு அம்பேத்காரின் சாதி ஒழிப்புப் புத்தகம் எப்படியோ வந்து சேர்ந்தது. ஜெய் பீம் என்பான். எதற்கெடுத்தாலும் பாபா சாகேப் என்பான். டிசம்பர் 6 ஊரில் கொண்டாட வேண்டும் என்பதுதான் அவன் கனவு. ஆனால் பிரச்சினை ஏற்பட்ட நாட்களை நினைத்துப் பார்த்தால் அது இப்போதைக்குச் சாத்தியமே இல்லை போலத் தோன்றும். ஊர்க்காரர்கள் பைக்கில் முறுக்கிக் கொண்டு சுற்றிச் சுற்றி வருவார்கள். அந்த சத்தத்தைக் கேட்டாலே அடிவயிறு

கலங்கும்.

“அதுக்கப்புறம் எங்க சாதிப் பிரச்சினைன்னாலும் ஓடிப் போய் நிப்பான். முடிஞ்சதைச் செய்வான். ஒரு தப்பும் பண்ணாம ஜெயிலுக்குப் போய் மூணு மாசம் இருந்தான். அவனப் பத்தி என்னென்னமோ சொல்றாங்க. பஞ்சாயத்து பண்ணி பங்களா கட்டிட்டோங்கறாங்க. பாருங்க நாங்க எப்படியிருக்கறோம்னு”

கடைசியாகப் பேசியது விடுகதை போலிருந்தது. யாருக்கோ பதில் போலவுமிருந்தது. ஷீலா ஒரு வார்த்தை இடையில் பேசாமல் செல்லில் பதிவு செய்தாள். மற்றவர்களும் ஏனோ குறுக்கிடவில்லை. பாஸ்கரின் அப்பா சொல்லி முடித்துப் பெருமூச்சு விட்டதும் சட்டென்று ஒரு மௌனம் அங்கே கவிழ்ந்து விட்டது.

“அல்லாத்துலையும் தப்பிச்சவன் இப்புடி ஒரு புள்ள பெரச்சனைல சிக்கிச் சீரழிஞ்சு போனானே...” என்று அவனது அம்மா மார்பில் அடித்துக் கொண்டு அழுதார்.

“யார் அது அமுதா? விவரமா சொல்லுங்க”

“அது ஒரு தெக்கத்திக் காரங்க. அவளோட அம்மா ஒரு புரோட்டாக்காரனோட குடும்பம் நடத்துச்சு... அந்தப் புள்ள மில்லுக்குப் போச்சு. இவனுக்கும் அவளுக்கும் ஏதோ பழக்கமாயிடுச்சு. அத அந்த வெள்ளிங்கிரி தடுக்கப் போய்த்தான் சண்டையாச்சு. இந்தப் பையன் உசுரக் குடிச்சுப் போட்டானுகளே...”

“இப்ப அந்த அமுதாவும் அந்தக் குடும்பமும் எங்க?”

“எங்கன்னே தெரியல. காணாமப் போயிட்டாங்க. ஓடி வந்த பொம்பள. எங்கியோ ஓடிப் போயிருச்சு... நாசமாப் போச்சு”

5

ரமேஷ்குமார் அமுதா விஷயத்தில் அதீத ஆர்வம் காட்டினான். வழக்குரைஞர் என்ற முறையில் அது இயல்பானது என்பதை ஷீலா புரிந்து கொண்டாள். கொலைக்குக் காரணம் அமுதா மீது பாஸ்கர் கொண்டிருந்த காதல் அல்லது அமுதாவை பாஸ்கர் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்தது என்று சொல்லப்படுவதால் அது பற்றி மக்கள் கருத்தை அறிந்து கொள்வதுதான் உண்மையறியும் குழுவின் முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும்.

"இந்த அமுதா யாரு? அவளுக்கும் பாஸ்கருக்கும் காதல் இருந்துச்சா? இதப்பத்தி யாராச்சும் சொல்லுங்களேன்" ரமேஷ் தனது வழக்கமான மெல்லிய குரலில் கேட்டான்.

"சிந்தாமணியக்காள வரச் சொல்லுங்க. சிந்தாமணியக்கா... இங்க வாங்க" என்று யாரோ அழைத்தார்கள். சிந்தாமணியும் அமுதாவின் அம்மா அமராவதியும்தான் நெருங்கிய தோழிகள் என்று சொன்னார்கள்.

சிந்தாமணிக்கு வயது நாற்பது இருக்கலாம். சுருட்டை முடி பறட்டையாகக் கிடந்தது. கழுத்தில் வெறும் கயிறு. சாயம் போன பெரிய பெரிய பூப்போட்ட கிளிப்பச்சை நிறச் சேலை. பூ மாதிரி கில்ட் கம்மல். வெயில் தீய்ந்து போனது போன்ற கருப்பு நிறம். அழுது கண்ணீரைத் துடைத்திருந்ததால் முகம் கரும்பழுப்பு நிறத்தில் தெரிந்தது.

"அந்த அமுதாப்புள்ளயோட அம்மா அமராவதியும், நானும் ஒரு பத்து வருசம் முன்னாடி ஒட்டுக்கா மில்லுக்குப் போனமுங்க. அப்பத்திலிருந்து பிரண்டு. அக்கா தங்கச்சியாட்டா அப்புடிப் பழகுனோம். அவளப் பத்தி எனக்கு அல்லாமே தெரியுமுங்க"

அமுதா, அமராவதியின் கதை – ஷீலாவின் குறிப்புகளிலிருந்து

அமராவதிக்கு மதுரை-சிவகங்கை சாலையில் உள்ள ஒரு கிராமம். அப்பா கொய்யா தோப்புகளை குத்தகைக்கு எடுப்பார். நாள் முழுவதும் கொய்யாப்பழம் பறிப்பார்கள். மதியம் ஒரு சாணி மெழுகிய இடத்தில்

உட்கார்ந்து சாப்பிடுவார்கள். காலையும் மதியமும் சோறு. இரவு களி சாப்பிடுவார்கள். அல்லது கரைத்துக் குடிப்பார்கள். சந்தோஷமான வாழ்க்கைதான். பதினெட்டு வயதில் திருமணம். கணவனுக்கு பத்தொன்பது வயது.

ஊரில் மழை இல்லாததால் கணவனுக்கு வேலை இல்லை. அப்பா வீட்டில் கஷ்டம். கோவையில் அண்ணனைப் பார்த்து வேலை தேட அமராவதியும் கணவனும் கிளம்பி வந்தனர். கையில் ஸ்டவ், சாப்பாடு பொங்க ஒரு பாத்திரம், இரண்டு குண்டாதான் இருந்தது. தடாகம் சாலையில் உள்ள முத்தண்ணன் குளத்து மேட்டில் நான்குபுறமும் கீற்று வேய்ந்த குடிசை நிலம் வாடகைக்குக் கிடைத்தது. தளம் போடப்படாத மண் தரை. முதலில் கட்டட வேலைக்குப் போனார்கள். பழக்கமில்லாத வேலை உடலெல்லாம் ஓய்ந்து வரும்... குடிசையை விட்டு நான்கைந்தடி தூரத்தில் ஏரி. சாக்கடைத் தண்ணீர் சேறும் சகதியுமாக தாங்க முடியாத நாற்றத்துடனிருக்கும். கொசு படை படையா வரும். இரண்டு கொசுவர்த்தி வைத்தால்தான் கொஞ்சமாவது தூங்க முடியும்.

அமராவதியின் புருஷன் குடிக்கத் தொடங்கினான். உடம்பு வலிக்காக என்று தொடங்கி இரவு பகலாகக் குடித்தான். இந்தப் பஞ்சம் பசி அடி உதையிலும் இரண்டு பெண் குழந்தைகள். சின்னக் குழந்தைகளாக இருந்த போது சத்துணவுக் கூடத்தில் விட்டார்கள். கொஞ்சம் வளர்ந்தபின் பக்கத்து வீட்டுக்காரப் பெண்ணிடம் கொஞ்சம் பணம் கொடுத்து பால் வாங்கிக் காய்ச்சித் தரச் சொல்வார்களாம். புருஷன் ஒருநாள் இறந்து போய்விட்டான். ஊருக்குத் திரும்பிய அமராவதியால் அம்மா வீட்டில் நீண்டநாள் இருக்க முடியவில்லை.

அப்பா இறந்து போய் சொத்துகளைப் பிரித்தபோது ஏற்கெனவே சீர் செய்து திருமணம் செய்து கொடுத்து சிறப்பாக வாழ்ந்து வருவதால் பெண் வாரிசுகளுக்குப் பாகம் ஒதுக்கப்படவில்லை என்ற வாசகங்களோடு பாக சாசனப் பத்திரம் எழுதப்பட்டது. அமராவதியின் பிறந்த வீடு ஒரு அண்ணனுக்கு ஒதுக்கப்பட்டது. அண்ணியின் தொந்தரவு தாங்க முடியாமல் எட்டு வயதும் ஐந்து வயதுமாக இருந்த குழந்தைகளை ஊரில் அம்மாவிடமே விட்டுவிட்டு அமராவதி மட்டும் கோயமுத்தூர்

திரும்பி வந்தாள்.

இந்த முறை அப்பார்ட்மெண்ட் கூட்டும் வேலை கிடைத்தது. அந்த வேலை கஷ்டம். வேலை தெரியாததால் நிறையத் திட்டு வாங்கினாளாம். பிறகு இங்கே இலுப்பப்பாளையத்தில மில் வேலை கிடைத்தது. இங்கேயே தங்கவும் இடம் கொடுத்ததால் வந்துவிட்டாள். அப்போது ஓட்டலில் வேலை செய்யும் சென்ராயனோட பழக்கமானது. பத்து ஆண்டுகளாக ஒன்றாக இருக்கிறார்கள். இந்த விவரம் அமராவதியின் ஊர்க்காரர்களுக்கோ, தம்பிகளுக்கோ தெரியாது. தெரிந்தால் வெட்டிப் போட்டுவிடுவார்களாம்.

ஊரில் அம்மா இறந்துவிட்டார். குழந்தைகள் பெரியவர்களாகி விட்டனர். பார்த்துக்கொள்ள ஆள் இல்லை. சின்னப் பெண்ணை சித்திவீட்டில் விட்டுவிட்டு பெரிய பெண் அமுதாவை மட்டும் இங்கே கூட்டி வர வேண்டியதாகிவிட்டது. பிறகு ஆரம்பித்தது தலை வேதனை. அமராவதியுடைய ஆள் சென்ராயன் அமுதாவையே சுத்தித் சுத்திவரத் தொடங்கிவிட்டான். இவளால் ஒருநிமிடம் அமுதாவை விட்டுவிட்டு இருக்க முடியவில்லை. இதற்கிடையில் அமராவதி ஒரு பணியாரக்கடை போட்டிருந்தாள். இந்த டென்ஷனால்தான் கடை நட்டமாகிப்போனது. பணக்கஷ்டம். பெண்ணை சென்ராயனிடமிருந்து பிரித்து வைக்க ஸ்கீம் மில்லுக்கு அனுப்பி வைத்தாள். ராஜேஸ்வரி மில்லில் உள்ளூர்க்காரர்களைச் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அமராவதி கெஞ்சி அமுதாவை அங்கேயே சேர்த்து விட்டாள்.

மனோகரன் சங்கம் வந்தபிறகு வெள்ளிங்கிரி பெரிய ஆளாகிவிட்டான். சென்ராயன் அவனுடன் சேர்ந்து சுற்றத் தொடங்கினான்.

“பாஸ்கருக்கும் அமுதாவுக்கும் எப்படிப் பழக்கம்? என்ன பழக்கம்?” சுமதி கேட்டார். கதையின் முடிவைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதை விட மனதைப் பிசையும் இந்த அடுக்கடுக்கான சோகங்களைக் கேட்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம்தான் அவரைத் தவிக்கச் செய்தது.

“இலுப்பபாளயம் சந்தை கேப்பாரில்லாமக் கெடந்துச்சு. இப்ப

வெளியூர்க்காரங்க, மில்லு பொண்ணுக, வடக்கத்திக்காரங்க எல்லாம் வந்து சந்தை பெரிசாயிப் போச்சு. சந்தைல அந்தப் பொண்ணு பொறகாலயே பாஸ்கரு சுத்திட்டு இருக்கறத அமராவதியோட அந்தாளு பாத்துட்டானாமா. அங்கியே இருந்த வெள்ளிங்கிரிகிட்ட சொல்லி அடிதடியாயிருச்சு"

"ஓ..."

"நிஜமாலுமே அந்தப் பொண்ணு பின்னாடி பாஸ்கர் சுத்தினானா?"

"வளுசப் பசங்க. சுத்தினாலுஞ் சுத்தியிருக்கலாம். இல்லாட்டி அந்தப் புள்ளகீது கண்ணக்கிண்ண காட்டியிருக்கலாம். எப்புடிங்கோ சொல்றது...?"

"இதப் பத்தி அமராவதி உங்ககிட்ட ஏதாவது சொல்லியிருக்காங்களா?"

"இல்ல. ஆனா மில்லுல புள்ள ரொம்ப செரமப் படுதுன்னு சொல்லியிருக்காளுங்கோ. சந்தைல அடிதடி ஆனதுக்குப்பொறகு சங்கத்துக்காரங்க போயி மில்லுல இருந்து கொஞ்ச புள்ளைகள மீட்டுட்டு வந்தாங்க. அப்ப இந்த அமுதாளும் ஓடி வந்துட்டா. எளச்சுப் போயி கண்ணெல்லாம் ஒடுங்கி பாக்கவே பாவமா இருந்துச்சுங்கோ. மூக்கு வேற ஒழுகீட்டே இருந்துச்சு. ஊருக்குப் போறேன்னு ஒரே முசுவா நின்னு மதுரைக்குப் போயிட்டா"

"அப்புறம்?"

"அட்டுவான்சு வாங்கிப்போட்டு வேல செய்யாம ஓடியாந்தா புரோக்கர் புடிச்சுக்குவானல்லோ.... தேடீட்டு வந்துட்டான் அந்த கெரகம்புடிச்சவெ. இன்னொரு நாலு நாள் ஊட்ல வெச்சு நல்லா சோத்த போட்டுட்டு, பொள்ளாச்சி பக்கம் ஏதோ மில்லுக்கு அனுப்பிட்டாங்க. அமராவதி அப்பப்ப புள்ளய நெனைச்சு அளுவா. ஊருல அவிய சொந்தத்துல ஒரு பையன் இருக்கானாமா. அவனுக்குக் கட்டி வெச்சுட்டா கவல தீந்துரும்னு சொல்லுவா"

6

குழு அடுத்து யார் யாரைப் பார்க்கப் போகலாம் என்று மதுரைவீரன் கோவிலில் உட்கார்ந்து கலந்தாலோசித்தது. ரமேஷ்குமார் சம்பூகனிடம் அந்த வன் கொடுமைக் கேஸில் பாஸ்கர் பஞ்சாயத்து செய்து பணம் வாங்கிய விஷயத்தைச் சொல்லுங்க என்றான். அவனுக்கும் அதுபற்றி ஓரளவு தெரிந்திருந்தது. சம்பூகனின் முகத்தில் சங்கடம் தெரிந்தது. அவர் இதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. ஆனால் பேசாமல் இருப்பது தவறோ என்று நினைப்பதையும் புரிந்துகொள்ள முடிந்தது.

“நல்ல உணர்வுபூர்வமான தோழந்தான். ஆனா முந்திரிக் கொட்டை. அவன் வழி தனிவழி. ஒருதடவ நம்ம எஸ்சி மக்களை ஆதிக்க சாதிக்காரங்க அடிச்சுக் கலவரம் பண்ண கேஸ்ல போலீஸ் ரெண்டு தரப்பையும் அரெஸ்ட் பண்ணுச்சு. ஜெயிலுக்குப் போயிட்டு வந்ததும் ஆளே மாறிட்டான். இன்னொரு பிரச்சினை வந்தப்ப நாங்க மனு கொடுத்து கேஸ் பதிவு பண்ண போராடிட்டிருக்கோம். இவன் பாதிக்கப்பட்ட ஆளக் கூட்டிட்டுப் போய் கட்டப் பஞ்சாயத்துல செட்டில் பண்ணி பணம் வாங்கிட்டான். ஜெயிலுக்குப் போகப் பயப்பட்டானா, இல்ல பணம் வேணும்னு நெனைச்சுட்டானான்னு திட்டமாத் தெரியல. ஏப்பா இப்படின்னு கேட்டப்ப நீங்க கேஸ் போட்டு அடிவாங்குனவனையே உள்ள அனுப்பப் போறீங்க. போய் மொதல்ல சட்டத்த மாத்திட்டு வாங்கன்னான். அப்புறம் நாங்க எல்லாம் அவனோட பேசறத நிறுத்திட்டோம். போராடணும். தியாகம் பண்ணனும். நாமே சுருக்கு வழி தேடி போராடி வாங்குன உரிமைய விட்டுக் கொடுத்திடக் கூடாது. நாங்க போற வழி கஷ்டமா இருக்கலாம். ஆனால் நீ சொல்ற வழி நியாயமானது இல்ல. செய்யப்பட்ட கொடுமைக்குப் பேரம் பேசறது மானத்தப் பேரம் பேசறதுக்குச் சமம்ன்னேன். பேரம் இல்லை. விலைன்னான். எனக்குப் புடிக்கல. ஒருமாதிரி சுருக் சுருக்குன்னு எடுத்தெறிஞ்சு பேசுவான். சரி கேஸ் போடலாம். நம்ம மேலயும் போடுவான். மேட்டுப்பாளையத்துல கண்டிஷன் கையெழுத்துப் போடணுமே செலவுக்கு நீ ஏற்பாடு செய்வியான்னான். வேல செஞ்சு கையெழுத்துப் போடுவோம்னேன். அதுசெரி. எந்த சிட்டிக்குப் போனாலும் இப்ப நம்மாளுக்கு ஆஸ்பத்திரில கக்கூஸ் கழுவற வேலதான கெடைக்கும். அங்க போய் அவனுகளுக்கு

கழுவி உடறத விட இங்கியே இவனுகளுக்குக் கழுவலாம்ன்னான். இந்த மாதிரி பேசறவன்கிட்ட என்ன செய்ய முடியும்? அது என்னமோ நடந்துருச்சு. அதுக்காக நம்ம பையனை உட்டுக் குடுத்துட முடியுமா? அன்னைக்கு அவன் எங்களோட நின்னிருந்தா ஒரு வேளை இன்னிக்கு இந்தக் கொலை நடக்காம இருந்திருக்கலாம்"

சுமதி சட்டென்று குறுக்கிட்டார். "சின்னப் பையன். பயந்துட்டானோ, காசுக்கு ஆசைப்பட்டானோ, இல்லாட்டி இது ஒரு வழினு நெனைச்சானோ தெரியல. ஆனால் அது வேற இது வேற. சமூகத்துக்கு ஏதோ செய்யணும்னு நெனைச்ச பையன கொன்னிருக்காங்க. விடக்கூடாது" என்றார்.

பின்பு குழு மக்களிடம் பேசி விட்டு மேல்சாதிக்காரர்கள் இருக்கும் பகுதிக்குச் செல்வது என்று முடிவு செய்தது.

ஷீலா சட்டென்று எழுந்து தாங்கள் சம்பூகனிடம் பேசுவதை சற்று தொலைவில் நின்று வெறுப்புடன் பார்த்துக்கொண்டிருந்த இளைஞர்களிடம் சென்றாள். அவர்களிடம் தங்கள் நண்பனின் கொலைக்கு நியாயம் தேட வந்திருப்பவர் என்ற மரியாதையும் சம்பூகனிடம் பேசியதால் அதிருப்தியும் ஒரே நேரத்தில் தென்பட்டன.

ஷீலா நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

"பாஸ்கர் ஏதோ கேஸ்ல பணம் வாங்கிட்டாருன்னு சொல்றாங்க. அதைப் பத்தி சொல்லுங்க" என்றாள். இளைஞர்கள் முகத்தில் ஒரு விநாடி தயக்கமும் பின்பு தீவிரமும் தோன்றின.

"யாருங்க சொன்னது?" ஆளாளுக்குப் பேசத் தொடங்கினார்கள்.

மில்லிலிருந்து ஓடிப் போனவர்களைப் பிடித்து வந்த பிரச்சினைக்குப் பிறகு அடுத்த சண்டை பஸ் வடிவில் வந்தது. பஸ் ஊருக்கு வெளியே காலனி அருகே சென்று திரும்பும். காலனி ஆட்கள் அப்போது அதில் ஏறி உட்கார்ந்து கொள்வார்கள். பஸ் பின்பு ஊர் மன்றத்துக்கு அருகே

வரும்போது பாதி நிரம்பிவிடும். சிலபோது ஊர்க்காரர்கள் உட்கார இடம் இருக்காது. காலனிக்காரர்கள் சிலர் எழுந்து இடம் கொடுப்பார்கள். சிலர் தெரியாதது போல அப்படியே உட்கார்ந்திருப்பார்கள். அன்றும் அதே போலத்தான் ஊர்க்காரர்கள் இருவர் ஏறிய போது பஸ்சில் சீட் காலி இல்லை.

"டேய் அக்கட்டால போய் உக்காரு" என்றான் வெள்ளை வேட்டியும் சட்டையும் அணிந்திருந்த ஒருவன்.

உட்கார்ந்திருந்த இளைஞன் கம்பிவேலை செய்பவன். எழ மறுத்துவிட்டான். ஒருவன் அவன் சட்டையைப் பிடித்து இழுத்தான். உட்கார்ந்திருந்த இளைஞன் அவனைப் பிடித்துத் தள்ளி விட்டான். இன்னொருவன் அவன் மீது பாய பஸ்ஸில் அல்லோல கல்லோலம் ஏற்பட்டது. சேரிக்கார பெரியவர்கள் பதறி எழுந்து தடுத்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தங்கள் இடத்தில் உட்காரும்படி சொன்னார்கள். ஆனால் அவர்கள் உட்காராமல் இறங்கிக் கொண்டனர்.

அன்று இரவு சேரியில் உறுமியபடி இருபது முப்பது பைக்குகள் பாய்ந்து வந்தன. சேரியில் மேடும் பள்ளமுமான சந்துகளில் மூர்க்கமான வேகத்தில் பறந்து சென்றன. பைக்கில் சென்றவர்கள் அங்கே இருந்த தொட்டிகள், கட்டில்கள், இருசக்கர வாகனங்கள் எல்லாவற்றையும் உதைத்துக் கொண்டும் அடித்து நொறுக்கிக் கொண்டும் சென்றனர். மக்கள் பீதியடைந்து வீடுகளுக்குள் ஒடுங்கிக் கிடந்தனர்.

என்ன நடக்கிறதென்று தெரியாமல் பஸ்ஸை விட்டு இறங்கிவந்த இருவர் அடித்து நொறுக்கப்பட்டனர். ஒரு ஆட்டுக் கிடாயின் மீது நெருப்பு வைக்கப்பட்டது. பாஸ்கர் பிடிவாதமாக நின்று போலீஸ் ஸ்டேஷனில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்றான். ஸ்டேஷன் முன் முற்றுகைப் போராட்டம் என்றெல்லாம் நடந்தது. இன்ஸ்பெக்டர் வெளியே வந்து சமாதானம் பேசினார். நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துக் கலைந்து போகச் சொன்னார். இல்லாவிட்டால் தடியடி நடத்தவோ, கைது செய்யவோ வேண்டும் என்பதையும் விளக்கினார்.

ஊர்ப் பெரியவர்கள் கலைந்து செல்வது என்று முடிவு செய்தனர். எல்லோரையும் அனுப்பிவிட்டு கடைசியாக பாஸ்கரும் இன்னும்

நான்கைந்து பேரும் திரும்பிக்கொண்டிருந்தபோது ஸ்டேஷனுக்கு எதிரே உள்ள நான்கு முக்கில் ஊர்க்காரர்கள் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். கூட இருந்தவர்கள் எப்படி ஓடினார்களோ தெரியவில்லை. நொடியில் காணாமல் போய்விட்டனர். பாஸ்கர் ஓடவில்லை. தன்னந்தனியாக அசையாமல் நிமிர்ந்து நின்றான். சாவது என்றால் போராடிச் சாவது என்று முடிவு செய்தான்.

கூட்டம் உறுமியது, கத்தியது. அந்தக் கண்களில் விவரிக்க முடியாத வெறுப்பும் குரோதமும் தென்பட்டன. இதோ தனது கதி அதோகதி ஆகிவிடும் என்று தோன்றியது. கெஞ்சவோ, ஓடவோ செய்தால் அது தன் இனத்துக்கே அவமானம் என்ற எண்ணம் அந்தக் கணத்தில் அவனை ஆட்கொண்டது. கூட்டம் அவனை நெருங்கியது. தொட்டுவிடும் தூரம்தான். பாஸ்கரால் அருகில் கையை ஓங்கிக் கொண்டிருப்பவனின் சட்டைக்குள் தெரிந்த தங்கச் செயினைக் கூடப் பார்க்க முடிந்தது.

“என்ன பண்ணமுடியுமோ பண்ணுங்கடா, நா சாகத் தயாராத்தான் இருக்கறேன்” என்றான். அவனது உடல் அவனையறியாமல் முறுக்கிக் கொண்டது. முஷ்டிகள் இறுகின. கெண்டைக்கால் சதை வலிப்பு வந்தது போல இழுத்தது.

‘டா’ என்ற சொல்லைக் கேட்டு கூட்டம் கடுங்கோபம் கொண்டது. ஆனால் தன்னந்தனியாக அசையாமல் துணிந்து நிற்கும் இளைஞனின் தோற்றம் சங்கடப் படுத்தியது. அந்த இளைஞனின் பார்வை அதில் தெரிந்த உக்கிரம்... முதல் கை யாராவது ஓங்கியிருக்க வேண்டும். ஆனால் நாற்சந்தியில் காவல் நிலையம் நூறடி தூரத்திலிருக்கும் போது... எல்லோரும் தயங்கினார்கள். ஆளாளுக்குத் திட்டித் தீர்த்தார்கள். “பட்டை எடுக்கோணும்” என்று வஞ்சினம் மொழிந்தார்கள்.

சாவகாசமாக இரண்டு போலீஸ்காரர்கள் வந்து, என்ன? என்று கேட்டதும் கூட்டம் கலைந்தது.

பத்திரிக்கைகளில் செய்தி, கலெக்டரிடம் மனு என்றெல்லாம் பிரச்சினை பெரிதானதும் ஊர்க்காரர்கள் பதினைந்து பேர்மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அதேநேரம் ஊர்க்காரர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் பாஸ்கர் மீதும், வேறு

சிலர் மீதும் எதிர் வழக்கு போடப்பட்டது. பாஸ்கரும் மற்றவர்களும் ஊர்க்காரர்களைக் கொன்று விடுவதாக வாயால் மிரட்டியதாக இந்திய தண்டனைச் சட்டம் 506(2) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதாவது புகார் கொடுத்தவர்கள் மேலேயே வழக்கு போடப்பட்டது. இதுதான் தமிழ்நாடு முழுவதும் உள்ள நடைமுறை என்று காவல் நிலையத்தில் சொன்னார்கள்.

போலீஸ் இருதரப்பையும் கைது செய்யவில்லை. வன்கொடுமைத் தடைச்சட்டத்தில் முன் ஜாமீன் இல்லை. அது ஜாமீனில் வர முடியாத நான்- பெய்லபில் குற்றம். ஜாமீனும் மாவட்ட நீதிமன்றத்தில்தான் பெறவேண்டும். வழக்கும் மாவட்ட நீதிமன்றத்தில்தான் நடக்கும். ஊர்க்காரர்கள் தவித்துப் போனார்கள். சிறைக்குப் போனால் அவமானம். இந்தப் பயல்களால் தாங்கள் ஜெயிலுக்குப் போவதா?

கோவையிலேயே பிரபலமான அந்த வக்கீல் ஒரு வழி சொல்லித் தந்தார். “வன்கொடுமைச் சட்டத்தின்படி குற்றம் செய்தவர்களுக்கு முன்ஜாமீன்தான் கிடைக்காது. ஆனால் ஜாமீன் மனுவை ஒரே நாளில் முடிக்கச் சொல்லி உயர்நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கித் தருகிறேன்” என்றார்.

வழக்கமாக ஜாமீனில் விட முடியாத குற்றங்களுக்காக ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் சிறைக்கு அனுப்பப்படுவார். முதல்நாள் மனு போட வேண்டும். அந்த மனுவின் நகலை அரசு வழக்குரைஞரிடம் அளிக்க வேண்டும். மனு இரண்டு நாட்கள் கழித்து விசாரணைக்கு வரும். அப்போது கைது செய்யப்பட்டவரை ஜாமீனில் விடலாமா வேண்டாமா என்பது தீர்மானிக்கப்படும். அதுவரை அவர் சிறையிலிருக்க வேண்டும். ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் கைதாகாமலேயே நீதிமன்றத்தில் தன்னைக் கைதுசெய்யப் போகிறார்கள், அப்படிச் செய்தால் உடனே ஜாமீனின் விட வேண்டும் என்று கோருவது முன் ஜாமீன் கேட்பதாகும். அப்படி முன் ஜாமீன் வழங்கப்பட்டால் குற்றம் செய்தவரை போலீஸ் கைது செய்தால் உடனே அதாவது அன்றே நீதிமன்றம் ஜாமீனில் விடுவிக்கும். பெரும்பாலும் குற்றவாளியே நீதிமன்றத்தில் சரணடைந்து அன்று மாலை ஜாமீனில் சென்றுவிடுவார். சிறைக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

வன்கொடுமைத் தடுப்பு வழக்குகளில் முன்ஜாமீன் கிடையாது. எனவே வழக்குப் பதிவு செய்யப்பட்டு விட்டால் அவர் சிறைக்குச் செல்வதைத் தவிர்க்க முடியாது. யாரோ ஒரு புத்திசாலி இதற்கும் ஒரு குறுக்கு வழி கண்டுபிடித்திருந்தான். சிறையிலிருப்பதற்குக் காரணம் பதிலளிப்பதற்குப் போலீசுக்கு நேரம் வழங்க வேண்டும் என்பதுதானே? சட்டத்தில் அடிப்படை குற்றம் நிரூபிக்கப்படாத வரை எல்லோரும் நிரபராதிகள் என்பதுதானே? இது இரண்டையும் இணைத்து உயர்நீதி மன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்படும். போலீசிடம் முன்பே ஜாமீன் மனுவின் நகலைக் கொடுத்து விடுகிறோம். காலையில் நீதி மன்றத்தில் சரணடைகிறோம். வழக்கில் ஒரே நாளில் பிணை மனுவில் தீர்ப்பு வழங்க உத்திரவிட வேண்டும் என்று கோரப்பட்டது. பிணையில் விடுவிக்க முடியாத குற்றங்களுக்கு ஒருவரை சிறைக்கு அனுப்பித்தான் ஆக வேண்டும் என்று விதியில்லை என்பது எடுத்துக் காட்டப்பட்டது. உயர்நீதி மன்றமும் வாய்ப்பிருந்தால் ஒரே நாளில் இவர்களது பிணை மனுவை விசாரித்து பிணையில் விடலாம் அல்லது தள்ளுபடி செய்து ஜெயிலுக்கு அனுப்பலாம் என்று உத்தரவு வழங்கும். இதற்கு டைரக்ஷன் என்று பெயர். இந்த உயர்நீதிமன்ற டைரக்ஷனின் படி காலையில் ஜாமீன் மனுதாக்கல் செய்து அன்றே அரசு வழக்குரைஞரிடம் பதில் பெற்று அன்றே விசாரிக்கப்பட்டு வாய்ப்பிருந்தால் குற்றவாளி ஜாமீனில் விடப்படுவார்.

ஊர்க்காரர்கள் ஒருநாள் கூட சிறைக்குச் செல்லாமல் ஜாமீனில் வந்தார்கள், அதே போல் காலனிக்காரகளுக்கும் முன்ஜாமீன் கிடைத்தது. ஆனால் ஊர்க்காரர்கள் பல்லடத்திலும், காலனிக்காரர்கள் மேட்டுப்பாளையத்திலும் தங்கியிருந்து அந்தந்த ஊர்க் காவல்நிலையத்தில் கையெழுத்துப் போட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ஊர்க்காரர்களுக்காக வசூல் வேட்டை நடந்தது. தினமும் கிடாவெட்டு நடந்தது. தடபுடல் சாப்பாடு, பேச்சு, குடி எல்லாம்...

காலனிக்காரர்கள் படாத பாடுபட்டார்கள். தற்காலிக வேலைகளுக்குப் போனார்கள். வசூல் செய்தார்கள். எப்படியோ அரைவயிறு கழுவுவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டுப் பழக்கமே இல்லாத பலர் மருத்துவமனைகளில் தற்காலிக வேலைக்குச்

சேர்ந்தனர். சிலர் செப்டிக் டேங்க் கழுவும் காண்ட்ராக்டர்களிடம் வேலைக்குப் போக நேர்ந்தது. இரண்டாவது நாள் பாஸ்கர் கையெழுத்துப்போடப் போனபோது கைது செய்யப்பட்டான். பின்புதான் தெரிந்தது அவன் குண்டர் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருப்பது. ஒருவன் மீது ஐந்து வழக்குகள் இருந்தால் அவனைக் குண்டர் தடைச் சட்டத்தில் கைது செய்யலாம். பல வழக்குகளில் பாஸ்கரை அவனை அறியாமல் போலீசார் சேர்த்திருந்தார்கள். இப்போது அனைத்து வழக்குகளும் தூசி தட்டி எடுக்கப்பட்டு அவன் தலைமறைவாக இருந்ததாகக் கூறப்பட்டு அவன் மீது குண்டர் தடைச் சட்டம் பாய்ந்தது. மூன்று மாதப் போராட்டத்துக்குப் பிறகே வெளியே வர முடிந்தது.

பின்பு வழக்கு விசாரணைக்கு வந்தது. புகாரை வாபஸ் பெற ஒரு லட்சம் வரை பேரம் பேசினார்கள். சாட்சிகள் பயந்தனர். ஊசலாடினர். பாஸ்கர் கத்திக் கத்திப் பேசி அவர்களை பணம் வாங்க மறுக்க வைத்தான். இரவு பகலாக பாஸ்கரும், நண்பர்களும் தங்கள் பகுதியைக் காவல் காத்தனர். சாட்சிகளுக்கு இளைஞர்கள் பாதுகாப்பாகச் சென்றனர்.

வழக்கில் போலீஸ்காரர்கள் ஒரு அடிப்படையான தவறு செய்திருந்தார்கள். வழக்கை டி.எஸ்.பி.தான் விசாரிக்க வேண்டும். ஆனால் இன்ஸ்பெக்டர் விசாரித்திருந்தார். ஒரு என்.ஜி.ஓ மறு விசாரணை வேண்டும் என்று ரிட் மனுதாக்கல் செய்யலாம் என்றது. வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படி அரசு வழக்குரைஞருக்குப் பதில் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் விரும்பும் வழக்குரைஞரை நியமித்துக் கொள்ளலாம். அதன்படி ஒரு நல்ல வழக்குரைஞர் நியமிக்கப்பட்டார்.

வழக்கு நடந்தது. பாஸ்கரும் நண்பர்களும் விசாலமான மாவட்ட நீதிமன்ற ஹாலில் உட்கார்ந்து வழக்கை கவனித்துக் கொண்டிருந்தனர். பாதிக்கப்பட்டவர்கள் ஒழுங்காகச் சாட்சி சொன்னார்கள். ஆனால் போலீஸ் சாட்சிகள் பல்டி அடித்தனர்.

இன்ஸ்பெக்டர் விசாரித்த தவற்றை டீக்கடையில் செய்தி பரிமாறிக் கொள்வது போல அலட்சியமாக வக்கீல் நீதிபதியிடம் எடுத்துச் சொன்னார். நீதிபதி எரிச்சலுடன் தலையசைத்தார்.

“ஒரு வேலைய ஒழுங்கா செய்ய மாட்டாங்களா?” என்று போலீஸ்காரரிடம் கேட்டார்.

“இந்த எஸ்.சி. எஸ்.டி கேஸ்க வந்த அப்புறம் மாவட்ட நீதிமன்றத்தோட டெகோரமே கெட்டுப் போச்சுங்க. கெட்ட வார்த்த பேசுன கேஸெல்லாம் செஷன்ஸ் கோர்ட்டுக்கு வருது” என்று நீதி மன்ற வாயிலிலேயே பேசிக்கொண்டார்கள். ஆதிக்க சாதிக்காரர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

சொல்லிக் கொண்டிருந்த இளைஞன் ஒரு நிமிடம் எதுவும் பேசவில்லை. மற்றவர்களும் வாயைத் திறக்கவில்லை. காற்று அரச மரத்தின் இலைகளை சரசரவென்று அசைத்தது. எங்கோ ஒரு மயில் அகவியது.

“எங்க மேல போட்ட கேஸையும் விடுதலை பண்ணிபோட்டாங்க. ஆனா நாங்க பதினெட்டு பேர் ஒன்னரை வருஷம் கோர்ட்டுக்கு இருபது தடவ போனோமுங்க. ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு ஐநூறு ரூபா கூலின்னா ஒரு வாய்தாவுக்கு ஒன்பதாயிரம் ரூபா நட்டம். மத்தியானம் சாப்பாடு, பஸ் காசு தனி. இருபது வாய்தாவுக்கு சராசரியா பத்துப் பேர் போயிருந்தாலும் தொண்ணூரு ஆயிரம் ரூபா. மத்த செலவு பத்தாயிரம் ஒரு லட்சம் போச்சு. வக்கீல் பீசு கேக்கல. ஆனாலு வற்புறுத்தி கொஞ்சம் குடுத்தோம். இதத் தவிர மேட்டுப்பாளையத்துல கண்டிஷன் கையெழுத்துப் போட்டப்ப தவுடு தின்னோம். வேலைக்குப் போயித்தான் அன்னன்னைக்குத் தின்னோம். எங்களுக்குக் கெடைச்ச நஷ்ட ஈடு இதுக்கே செரியாப் போச்சு. நாங்களும் விடுதலை. அவீலும் விடுதலை. என்ன தியாகம் நாங்க பண்ணலைன்னு சொல்லுங்க?”

“இதுக்கெடைல நாங்கள்ளாம் முஸ்லீமா மாறீட்டோம்னும், எஸ்.சி எஸ்.டி ஏக்ட் எங்களுக்குப் பொருந்தாதுன்னும் ஆரோ பெட்டிஷன் போட்டு இந்த ஆர்.டி.ஓ, தாசில்தாரல்லாம் அத வேற விசாரிச்சுட்டு கெடந்தாங்க”

கருப்பாக குண்டாக இருந்த அந்த இளைஞனின் குரல் கணீரென்று ஒலித்தது. ஷீலாவால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை. இல்லை இதற்கு பதில் இருக்க வேண்டும். சம்பூகன் இருந்தால் சொல்வார்.

“அடுத்த தடவ பிரச்சினை வந்தப்ப அவங்க…. அதான் மேல் சாதின்னு சொல்லிக்கறாங்க இல்ல, அவங்க ஜெயிலுக்குப் போகப் பயந்துட்டாங்க. பேசித் தீத்துக்கலான்னாங்க. பாஸ்கரண்ணன் சரின்னான். ஜெயிலுக்குப் போயிட்டா பயம் போயிரும். பயம் இருக்கணும்னு நெனைச்சான்”

இப்போதும் ஷீலாவால் அவர்கள் சொல்வது சரியா? தவறா? என்று முடிவு செய்ய முடியவில்லை.

7

ஆதிக்க சாதியினரின் பகுதிக்குள் சென்றதும் ஊர் கூடி விட்டது. ஆளாளுக்குப் பேச எதுவும் புரியவில்லை. வெள்ளை வேட்டியும், வெள்ளை சட்டையும் உடுத்திருந்த ஒருவர் வந்து "எங்காவது உட்கார்ந்து பேசலாமா?" என்று கேட்டார். சரி என்றதும் ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

அதுஒரு ஓய்வு பெற்ற மணியக்காரரின் வீடு. பிரம்மாண்டமான கூடம். கனமான வழவழப்பான மரத்தால் கூடம்முழுக்க பரண் அமைக்கப்பட்டிருந்தது. குளுமையான காற்று நான்குபுறமிருந்தும் வந்து கொண்டிருந்தது. ரெட் ஆக்ஸைடு போடப்பட்ட சிமெண்ட் தரையின் குளுமை மனதை அள்ளியது.

உட்கார்ந்த சில நிமிடங்களில் குழுவுக்கும், அவர்கள் பின்னாலேயே வந்த ஊர்க்காரர்களுக்கும் மோர் வந்தது.

ஊர்க்காரர்கள் திண்ணையிலும், கைப்பிடி சுவரிலும் உட்கார்ந்து கொண்டனர். குழுவினருக்கு பிளாடிக் சேர்கள் போடப்பட்டது. மணியக்காரர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு தண்மையான குரலில் பேசத் தொடங்கினார்.

"இங்கல்லாம் தாயா புள்ளையாத்தான் பழகிட்டிருக்குறோம். இந்தப் பசங்க வந்துதே என்னென்னமோ கேள்வி கேக்கறாங்க. எதிரிக மாரியே நடந்துக்கறாங்க"

"ஆனா எங்க பொட்டப் புள்ளைகளுக்குப் பொறகால மட்டும் போவானுக. அவிய மட்டும் வேணுமாமா" என்று ஒரு குரல் எங்கிருந்தோ வந்தது. மற்றவர்கள் "உஷ்..." என்று அவனை அடக்கினார்கள்.

மணியக்காரர் அதிருப்தியுடன் அந்தப் பக்கம் பார்த்துவிட்டுத் தனது வழக்கமான தணிந்த குரலில் தொடர்ந்தார்.

"இந்தப் பையன் இருந்தானுல்ல பாஸ்கரு... அவனொரு செரியான தெல்லவாரி" அவர் பார்வையில் தெரிந்த நட்புணர்வு கேட்பவர்களை சரி என்று தலையாட்டத் தூண்டியது. மரியாதையான ஆழமான பேச்சை ஒரு

கலையாகப் பயின்றவர் என்பது தெரிந்தது.

“ஊர்ல இருக்கற பூராப் பிரச்சினைக்கும் இவந்தே காரணம். ஆ ஊன்னா போலீஸ்ல போயி கம்ளெயிண்டு குடுத்துபோடுவான். இவனுகளுக்கு ஒண்ணுமில்ல. எங்களுக்கு... தோட்டம் தொறவு இருக்குது. மாடு கன்னு இருக்குது. உள்ள போயி பொழுதன்னிக்கும் உக்காந்துக்க முடியுமா? இதே மாதிரி பண்ணிப் பண்ணி வெள்ளிங்கிரியைப் புடிச்சுச் சந்தைக் கடைல அடிக்கற அளவுக்கு ஆயிபோச்சு”

“ஆமா அது என்ன நடந்துச்சுன்னு சொல்லுங்க”

“அமராவதின்னு ஒரு தெக்கத்தி பொம்பள. அதோட இந்த பையனுக்குத் தொடர்பு. அத சாக்கா வெச்சு சந்தைல அமராவதி புள்ள அமுதாவத் தொல்ல பண்ணியிருக்கான். அந்தப் பொண்ணு பயந்து ஓடியிருக்கு. அமராவதி புருசனும், வெள்ளிங்கிரியும் பாத்து என்ன ஏதுன்னு கேட்டிருக்காங்க. இவன் அவிய ரெண்டு பேரையும் அடிச்சுத் தொவச்சுட்டானாம்”

“அமராவதிக்கும், பாஸ்கருக்கும் தொடர்பு இருக்குன்னு எப்படிச் சொல்றீங்க?”

“ரெண்டு பேரயும் ஒட்டுக்கா கோயமுத்தூர்ல கண்ணால பாத்த சாட்சி இருக்கு” என்றபடி ஒருவரை அறிமுகப்படுத்தினார் மணியக்காரர். திட்டுத் திட்டாக நரைத்த தாடியுடனிருந்த அந்த மனிதர் ஒரு வேலையாக கோவை விவசாயக் கல்லூரிக்குப் போய்க் கொண்டிருந்தாராம். ஆர்.எஸ்.புரம் வழியாக பஸ்ஸில் போகும்போது அமராவதியும் பாஸ்கரும் அங்கே ஒரு சாலையில் நடந்து செல்வதைப் பார்த்தாராம்.

“என்ன ரோடு?”

“திருவேங்கட சாமி ரோடுங்க”

வேறு ஓரிருவரும் பாஸ்கரும், அமராவதியும் அங்கே இங்கே நின்று பேசுவதைப் பார்த்திருக்கிறார்கள்.

“அமுதாவுக்கும், பாஸ்கருக்கும் லவ் இருந்துச்சா சார்?” ஷீலா பொதுவாகக் கேட்டாள்.

“அதான் அந்தப் புள்ள இவனக் கண்டதுமே ஓடுச்சாமே? ஆனா என்னமோ பழக்கமிருந்திருக்குது. இவனுகதான் அல்லாப்புள்ளகளுமு தனக்குத்தான் நெனைச்சுக்குவானுகளே?”

“அந்தத் தஞ்சாவூர்க்காரங்க வெள்ளிங்கிரியின் தறியிலிருந்து பணம் வாங்கிட்டு ஓடினது சம்பந்தமா வெள்ளிங்கிரிக்கும் பாஸ்கருக்கும் விரோதம் இருந்திருக்குன்னு சொல்றாங்களே?”

அதுவரைக்கும் இருந்து வந்த அமைதி சட்டென்று குலைந்தது. “செரியாத் தெரீல தெரிஞ்சிருந்தா அவன அன்னிக்கே வெட்டிப் பொதைச்சிருப்போம்” என்று தெளிவாக ஒரு குரல் ஓங்கி ஒலித்தது. எல்லோரும் ஒருவிநாடி துணுக்குற்றார்கள்.

மஞ்சளடித்துப் போன வெள்ளைசட்டை, வேட்டி அணிந்து நடுத்தர உயரத்தில் நடுத்தரமான உடல்வாகுடன் இருந்த ஒருவன்தான் குரல் கொடுத்தவன். மிகச் சாதாரணமான ஒடுங்கிய முகம். இரண்டு சட்டைப்பட்டன்கள் அசிரத்தையாகக் கழண்டு கிடந்தன. மற்றவர்கள் முகத்தில் சற்றே சங்கடம் தெரிந்தது.

அவன் தொடர்ந்து பேசினான், “தற்கொலை செஞ்சுட்ட வெவசாயியப் பத்தி பேச ஒரு நாலு பேர் இருக்கறான். அதுவும் தஞ்சாவூர்ல செத்தா பேசுவான். ஆனா கோயமுத்தூர்ல செத்தா... நாய் கூட சீந்தாது. வெசத்தறி வெச்சு பொளிஞ்சு போய் செத்தவனைப் பத்தி ஆராச்சு எங்காச்சு பேசிப் பாத்திருக்கிறீங்களா....? உங்களத்தாம்மா கேக்கறேன்.... சொல்லுங்க”

“சொல்லுங்க” என்றார் சுமதி.

விசைத்தறி உரிமையாளர் பரமேஸின் வாக்குமூலம்- ஷீலாவின் குறிப்புகளிலிருந்து

பொங்கலூரில் தோட்டம் இருந்தது. தண்ணீர் இல்லாமல் மரங்கள் காய்ந்து விட்டன. பின்பு இங்கே வந்து தறி போட்டோம். முதலில் 4 தறி இருந்தது. பின்பு வளர்ந்து இப்போது 16 தறி ஓடுகிறது. 14 வயதிலிருந்து தறி ஓட்டும் வேலை செய்கிறேன். பள்ளிக்குப் போய் விட்டு வந்ததும் தறி ஓட்டுவேன். பத்தாவது முடித்ததும் வேறு வேலைக்குப் போகாமல்

தறியிலேயே இறங்கி விட்டேன்.

நாங்கள் தறி உரிமையாளர்கள் என்றாலும் டெக்ஸ்டைல் உரிமையாளர்களிடம் கூலிக்குத்தான் வேலை செய்கிறோம். ஸ்பின்னிங் மில்களில் பருத்தியை வாங்கி வந்து நெய்வதற்குத் தகுந்த பாவு எனப்படும் நூலாகவும் மாற்றுவார்கள். இவர்கள்தான் தறிக்காரர்களுக்கு நூல் சப்ளை செய்வார்கள். நாங்கள் அதை ஆடையாக நெய்து அவர்களுக்குத் தரவேண்டும். அவர்கள் அதை ஆமதாபாத், பாம்பே வியாபாரிகளுக்கு விற்பனை செய்வார்கள். ஒரு பெரிய மில் எங்களைப் போன்ற ஆயிரம் தறி உரிமையாளர்களுக்கு நூல் சப்ளை செய்யும். இங்கு நெய்யப்படும் துணிகளிலிருந்து விரிப்புகள், தலையணை உறைகள், திரைச்சீலைகள் மற்றும் பலவற்றை செய்கிறார்கள். பல நூறு கோடி ரூபாய் வியாபாரம் இது.

எங்களுக்கு மில் உரிமையாளர்கள் தரவேண்டுமென்று அரசு நிர்ணயித்த கூலி ஒரு மீட்டருக்கு 6.65 பைசா. ஆனால் ஆர்டர் இல்லை என்று சாக்கு சொல்லி ஸ்பின்னிங் மில் உரிமையாளர்கள் பாவுநூல் கொடுப்பதை நிறுத்தி விடுவார்கள். வேறு வழியில்லாமல் நாங்கள் கூலியைக் குறைக்க ஒப்புக்கொள்வோம்.

இப்போது ஐந்து ரூபாய்க்கு ஓட்டுகிறோம். இது நட்டம்தான். வேறு வழியில்லை. எங்களுக்கு முதலாளிகள் போனஸ் கொடுப்பதில்லை. ஆனால் நாங்கள் எங்கள் கூலிகளுக்கு போனஸ் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும் மில் உரிமையாளர்களிடம் கூலி உயர்வு கேட்டு நாங்கள் ஸ்ட்ரைக் செய்வோம். பேச்சு வார்த்தையில் கூலியைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுப்பதாக ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அரசாங்கம் கரண்ட் பில்லை ஏற்றிவிடும். ஸ்பேர் பார்ட்ஸ் விலையை ஏற்றிவிடுவார்கள். நாட்டிங் மிஷின்காரர்களும் விலையை ஏற்றி விடுவார்கள். ஆனால் மில்காரர்கள் ஒப்பந்தங்களை மீறுவார்கள். கூலியை உயர்த்தித் தரமாட்டார்கள். அரசாங்கம் இதைக் கண்டு கொள்வதேயில்லை.

எங்களுக்கு வாரியமே கிடையாது. நான்கு லட்சம் பேர் வேலை செய்தாலும் விசைத்தறி கைத்தறியின் பிரிவாகவே இயங்குகிறது.

எங்களுக்குச் சம்பளமே இரண்டு மூன்று வாரங்கள் கழித்துதான் தருகிறார்கள். யாராவது சண்டை போட்டால் அவனுக்கு மற்றவர்கள் ஆர்டர் கொடுக்க மாட்டார்கள்.

பதினாறு தறி இரண்டுமாதம் ஓடினால் கரண்ட் பில் முப்பதாயிரத்தைத் தாண்டி விடும். கரண்ட் பில் ரத்தத்தையே குடிக்கிறது. வேலைக்கு ஆள் வராத நிலையில் யாராவது கூலிக்குக் கிடைத்தால் இனி நெருக்கடி தீர்ந்துவிடும், வேலை செய்யலாம் என்று நினைத்து தாலிக்கொடியைக் கூட அடகுவைத்து கூலிக்காரர்களுக்குக் கொடுப்பார்கள். கூலிக்காரன் ஓடிப்போனால் போனதுதான். கஷ்டப்பட்டு சம்பாதிப்பதை அடுத்தவன் கொண்டு செல்லும்போது வயிறு எரியும்.

இப்போது அதிநவீனமான ஆட்டோலூம் தறிகள் வந்துவிட்டன. இவை வழக்கமான தறியைவிட நான்கு மடங்கு அதிக வேலை செய்கின்றன. பல டெக்ஸ்டைல்காரர்கள் தாங்களே ஆட்டோலூம் போட்டு வருகிறார்கள். நாங்கள் மேலும் மேலும் கடனில் விழுந்து கொண்டிருக்கிறோம். மாடு கன்றுகள் இருப்பவர்கள் சமாளித்து கொள்வார்கள். மற்றவர்கள் கூலிகளாக மாறிவிடுவார்கள்.

வெவசாயம் நொடிஞ்சு போயி எப்படியோ பொளச்சுக்கலாம்னு கடன ஒடன வாங்கி தறி போடறோம். 300, 400 தறி வெச்சிருக்கற மாஸ்டர் வீவர்ஸ்க்குத்தான் பாங்க் கடன் குடுக்கும். எங்களுக்குக் குடுக்காது. வட்டிக்குத்தே வாங்கோணும். காடு கழனிய அடமானம் வெச்சுத்தே வாங்கோணும். நாங்க மாஸ்டர் வீவர்ஸ் கிட்ட வேலவாங்கிச் செய்யறோம். இவனுகளுக்கு ஒரு லட்சம் ரெண்டு லட்சம் அட்டுவான்சு குடுத்து வேலைக்குக் கூட்டீட்டு வர்றோம். ஓனர் புள்ளைக்குப் பள்ளிக்கூடம் போக பணம் இல்லாட்டி கூட இவனுக கொழந்தைகள இஸ்கூலுக்கு அனுப்பாம இருக்கறதில்ல. பணத்தக் கட்டிட்டுதான் தூங்கப் போவான் தறிக்காரன். வேற எந்த வேலைல இவ்வளவு அட்டுவான்ஸ் குடுக்கறாங்க?

வேல கஷ்டம், ராவு பகலா வேல வாங்கறாங்கன்னு ஓடற கேப்மாரி அவனோட சொந்த ஊருக்குப் போய்த்தானே உக்காரோணும்? ஏன் திருடனாட்டா ஓடி இங்கியே வேற தறிக்கு வேலைக்குப் போறான்? அங்க முட்டும் இவன தடவியா குடுக்கறாங்க? சோம்பேறி நாய்களுக்குக்

கம்யூனிஸ்ட்காரன், செத்துப் போனானே தலைவரு, பத்திரிக்கைக்காரன் அல்லாரும் ஒத்து. கொத்தடிமையாமா.... கொத்தடிமைங்கறவன் வாங்குன காச வெச்சுபோட்டு பேச வேண்டீதுதானே? பாவப்பட்ட தறிக்காரன் வகுத்துல மட்டும் அடிக்கலாமா? கரண்ட்டு கட்டு வந்தா சீரழியறோம். வடக்கத்திக்காரன் போட்டியில சீரழியறோம். ஆர்டரு இல்லாம சீரழியறோம். இதுல இவனுக பெரச்சின வேற"

குண்டு வெடித்தது போன்ற அமைதி நிலவியது. யாருக்கும் எதுவும் பேசத் தோன்றவில்லை. சுமதி மட்டும் சுதாரித்துக் கொண்டு கேட்டார்.

"நீங்க ஏன் மொதல்லயே அட்வான்ஸ் கொடுக்கறீங்க? அதானே பிரச்சினை? செய்யற வேலைக்கு அன்னாடம் கூலி கொடுத்துட வேண்டியதுதானே?"

"இவனுக பொஞ்சாதி, புள்ளகுட்டிய கூட்டீட்டு கட்டுன துணியோட தான வர்றானுக. சோறு பொங்க சட்டி பானகூட இல்ல. குந்த குடிச இல்ல. பூராத்தையும் நாங்கதே குடுக்கோணும். அதுக்குத்தே அட்டுவான்சு"

"உள்ளூர்க்காரங்கள வேலைக்கு வெச்சுக்கலாமே?"

"மைனருக கோயமுத்தூரு போயிப் பழகீட்டானுக. நெனைச்சா வருவானுக. நெனைச்சா வரமாட்டானுக. இவனுகள நம்பி ஒரு ஆர்டரு எடுக்க முடியாது"

"இதோ அங்க பாருங்க" ஒருவர் கை காட்டினார். அங்கே இருநூறடி நீளத்தில் ஒரு பெரிய கட்டடம் இருந்தது. அதன் மேல்பகுதி நீல வண்ண ஷீட்டால் கட்டப்பட்டிருந்தது. முகப்பு கிரேனைட்டால் இழைக்கப்பட்டிருந்தது.

"இந்த மில்லு இருக்கற எடம் வெள்ளிங்கிரியோடதுதே. இத வித்துத்தே தறி போட்டான். ஒரு லட்சம் வாங்குன அந்தக் கொள்ளைலபோன தஞ்சாவூர்க்காரன் ஓடிப் போயிட்டான். இந்த மைனரு பாஸ்கருதான் தாட்டி உட்டான். கொத்தடிமைன்னுட்டீங்க.... செரி. போச்சாகுது.... மானம் மருவாதியோட பொளச்ச ஊரு சந்தைக் கடைல வெள்ளிங்கிரிய அவன் நாயடிக்கிற மாரி அடிச்சு மூக்கு வாயெல்லாம்

உடைச்சுப் போட்டான். என்ன வெள்ளிங்கிரி குடிச்சுபோட்டு ரகள பண்ணுனானா? இல்ல இவனுக புள்ளய கையப் புடிச்சு இழுத்தானா? உள்ள போட்டுப் போட்டீங்க. குடும்பத்த ஆரு பாக்கறது?"

வெள்ளிங்கிரி பாஸ்கரைக் கொல்லாமல் விட்டிருந்தால்தான் ஆச்சரியம் என்று தோன்றியது.

குழு காலனிக்குத் திரும்பியது. என்னதான் நடுநிலை பேசினாலும் காலனியே இந்தச் செயல்பாட்டுக்கு தளம் என்பது எல்லோருக்கும் புரிந்துதான் இருந்தது.

மக்களும் அதை ஏற்றுக்கொண்டது போலத்தானிந்தது. அவர்கள் இயல்பாக வரவேற்று உட்கார வைத்து தண்ணீர் கொடுத்தனர்.

"இந்தத் தறி விவகாரம் பத்தி இவங்க கிட்ட கேட்டுடலாம்" என்றார் சுமதி.

ஒரே ஊரில் இரண்டுவிதமான மக்கள். ஆழங்காணமுடியாத வேற்றுமைகள். இருவரும் வதைபட வேறுவேறுவிதமான வலிகள். வேதனைகள்.

"என்ன சொன்னாங்க?" வெளியே பாய்விரித்து உட்கார்ந்திருந்தவர்கள் கேட்டனர்.

விளக்கியதும் "எவ்வளவு பெரிய பொய்?" என்று கன்னத்தில் கை வைத்தனர் மக்கள். "அல்லாஞ் சொல்லுவாங்கோ. அவீலுக்குத்தே எல்லாப் பெரச்சனையும். எங்களுக்கெல்லா எதுவுமே இல்ல"

"ஓ ஹோ?" கசப்பான கிண்டல் வழிந்தது அந்தக் குரலில். "இவனுக அன்பு பொங்கி வளியறதுனாலதே தறில வேல செய்யறவங்க கிட்னிய விக்கறாங்களாக்கு?"

"கூலியாளுக்கு ரெண்டு லட்ச ரூவா குடுப்பான். பாக்கின்னு பேரு அதுக்கு. இதுல ஒரு லட்சம் கடன். அதுக்கு வட்டி கட்டோணும். செய்யற வேலைக்கும் வட்டிக்குஞ் செரியாப் போயிரும். ஒரு நாளைக்கு 12 மணிநேரம் வேலை. சில நாளு அதுக்கும் மேலகூட ஆகும். ஒருநா கூட

லீவு கெடையாது. ஊட்டுக்கு வாடகை இல்லை. ஆனா 2000 ரூவா கரண்ட்டு பில்லு வாங்கறாங்க. ஒரு பத்துக்கு பத்து ரூமுக்கு ஒரு லைட், ஒரு பேனுக்கு 2000 ரூவா. எந்தூரு நியாயம் இது? பத்து வருசத்துக்கு முன்னால நாங்க உள்ளூர்ல இந்த வேல செஞ்சப்ப ஒரு தொழிலாளி ஒரு நேரத்துல எட்டு தறி ஓட்டினான். இப்ப பதினாறு தறி, பன்னண்டு மணிநேரம் ஓட்டறாங்க. பஞ்சம் பட்டினி தீரவே இல்லையே. நெனைச்சே பாக்க முடியாத கொடுமையெல்லாம் நடந்திருக்குதுங்க"

"மேலுக்கு முடியாம போயிரும். அப்பையும் ஒரு நா உக்காந்து கெடக்க உடமாட்டாங்க. கொழந்த குட்டி அல்லாத்தையும் நேரங்காலமில்லாம வேல வாங்குவாங்க. இதெல்லாம் தாங்க முடியாமத்தான் ஓடிப்போறாங்க. ஆனா எங்க போக முடியும்? வேற தறிக்குப் போய்த்தான் நிப்பாங்க. வேற வழி இல்லங்க. ஆரு எங்க வேலைக்குப் போனாலும் நாயத்துக் கிழம மங்கலத்துக்கு மாட்டுக்கறி வாங்க வருவாங்கல்லோ. இவனுக அங்க ஒளிஞ்சிருந்து புடிச்சுக்குவானுக"

"மாசத்து ஒருதடவையாச்சும் தப்பி வந்த குடும்பங்கள் பாதுகாப்பு கோரி மனு, கணவனை மீட்டுத் தரக் கோரி மனைவி மனுன்னு பேப்பர்ல பாத்திருப்பீங்கல்லோ? அதெல்லாம் இங்கதானுங்க. பொம்பளங்க நிலைம சொல்ல முடியாது. ஒருத்தன் வந்து உசுரே போயிருமாட்டா இருக்குது தப்பிச்சுப் போக உதவி பண்ணுங்கண்ணு கேட்டா பண்ணுவோம். நீ குடுத்த பணம் திருப்பி வேணும்னா சட்டப்படி என்ன வேணுமோ அதப் பண்ணிக்க. அடைச்சு வெச்சு வேல வாங்கறது, அடிச்சுக் கொடுமைப் படுத்தறது இதெல்லாம் ஒத்துக்க முடியாது"

"இதைப் பத்தி பாஸ்கர் என்ன சொல்வார்?"

"இந்த வெள்ளிங்கிரி வெவகாரத்துல ஆருக்காவது ஓடிப் போக உதவி செஞ்சானா இல்லையான்னு தெரியாதுங். இதையல்லாம் அவன் வெளில சொல்ல மாட்டான். அதே மாரி யார் என்ன செஞ்சாலும் பழி அவம்மேலதா உளுகும். ஆனா அவன் ஒரு யூனியன் கட்டி நாலு பேரு மேல கேஸு போட்டு உட்டா பாதிப் பிரச்சினை தீந்துபோகும், அதச் செய்யறதுக்கு ஆளில்லாததுனாலதான் இந்த ஓடிப் போறது, புடிச்சுட்டு வாறது எல்லாம் நடக்குதுன்னு சொல்லுவான்"

ஷீலாவைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருந்தது. யார் யாரோ வந்து என்னென்னமோ சொன்னார்கள். கோபத்தைக் கொட்டினார்கள். ஊரில் விசாரித்துவிட்டு அதிகாரிகளிடம் போகும் வரை இப்படித்தான் இருக்கும் என்று அனுபவப்பட்ட குழு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஷீலாவுக்கு அந்த இளைஞர்கள் தங்கள்மேல் காட்டும் நம்பிக்கை பயமூட்டியது. குழு உறுப்பினர்கள் தாங்களே விசாரணை அதிகாரிகள் போல சகட்டு மேனிக்குக் கேள்விகள் கேட்பதும், ஆலோசனைகள் சொல்வதும், தீர்ப்புகள் வாசிப்பதுமாக உணர்ச்சிமயமாயிருந்தனர். ரமேஷ் பொறுமையிழந்து கொண்டிருந்தான். தேவையில்லாத விவகாரங்கள் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விசைத்தறி, மில்காரர்கள், கூலிகள் பிரச்சினை முக்கியமானதுதான். ஆனால் இங்கே வந்தது அதற்காக அல்ல. ஆனால் அவனால் தடுக்க முடியவில்லை.

ஆனால் இந்தப் பையன் சொந்த விஷயத்துக்காகக் கொல்லப்படவில்லை என்பது தெளிவாகிறது. காதல் தொடர்பான சாதிய மோதல். அல்லது வேறு சாதியைச் சேர்ந்த ஒருவருடன் மோதல். அவ்வளவுதானா? இந்த சண்டையில் உயிர்ப்பலியில் கிராமப்புறத் தொழில்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. தற்போது புதிதாக உருவாகிவரும் சமூக உறவுகள், அமைப்புமுறை சம்பந்தப்பட்டிருக்கிறது.

ஷீலா மெல்ல சம்பூகனிடம் சென்றாள். .

“இந்த ரெண்டு கோஷ்டிலயும் இல்லாத வேற சாதிக்காரங்க யாராவது கொஞ்சம் பொறுப்பாப் பேசறவங்க இருந்தாப் பாக்கலாமா?”

ஒரு இளைஞன் நாற்காலிகளுக்குள் புகுந்து அவளருகே வந்தான்.

“வணக்கம். நீங்க சொல்ற தகுதி எனக்கு இருக்கு” சற்றே கம்மிய குரலில் சொன்னான். கருப்பு பச்சை கட்டம் போட்ட சட்டையும், ஜீன்சும் அணிந்திருந்தான். மெல்லிய மீசை. லேசான தாடி. குரலில் ஒரு அசாதாரணமான நிதானம் தெரிந்தது. இருபத்தேழு அல்லது இருபத்தெட்டு வயதிருக்கலாம். சற்றே ஒல்லியான உடல்வாகு அவனை

உயரமானவனாகக் காட்டியது. கண்ணாடி அந்த முகத்துக்கும் ,வயதுக்கும் பொருந்தாத ஒரு அமைதியைக் கொடுத்திருந்தது.

இங்கே வந்ததுமே ஷீலா அவனைக் கவனித்திருந்தாள். அதிகம் பேசாமல் ஆனால் எல்லாவற்றையும் ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தான் அவன்.

ஷீலா வியப்புடன் பார்த்தபடி பதில் வணக்கம் சொன்னாள்.

"இவுருதான் இளங்கோ. பாஸ்கரோட ஃபிரண்டு. ஸ்கூல் வாத்தியார்" என்று ஒருவர் அறிமுகப்படுத்தினார்.

இளங்கோவின் வாக்குமூலம் என்று ஷீலா எழுதினா.ள். சிவானந்தம் அது தமிழ் அல்ல என்றும் அதற்கு நேரான தமிழ் சொல் ஆணையுறுதி என்றும் சொன்னார். ஆணையிட்டு உறுதியாகச் சொல்கிறேன் என்று உறுதியளித்துச் சொல்வதால் ஆணையுறுதி என்றார் அவர். ஷீலா அதை இளங்கோவின் ஆணையுறுதி என்று மாற்றிவிட்டு மறக்காமலிருப்பதற்காக அடைப்புக்குறிக்குள் அஃபிடவிட் என்று எழுதிவைத்தாள்.

இளங்கோவின் ஆணையுறுதி.

பெயர் இளங்கோ. தகப்பனார் பெயர் வெங்கடாசலம். வயது 27. தொழில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர். ஊர் கே.எஸ்.மங்கலம்.

"பாஸ்கரும் நானும் சிறுவயதிலிருந்தே நண்பர்கள். நான் இப்போது சொல்லப்போகும் விஷயத்துக்கும், பாஸ்கரின் மரணத்துக்கும் நேரடி தொடர்பு கிடையாது. ஆனால் இங்குள்ள சூழ்நிலையைப் புரிந்துகொள்ள இது உங்களுக்கு உதவக்கூடும்.

பள்ளி முடித்ததும் நான் கோவையிலுள்ள ஒரு புகழ்பெற்ற கலை அறிவியல் கல்லூரியில் சமூகவியல் துறையில் சேர்ந்தேன். பாஸ்கர் சில நாட்கள் ஏதோ வேலை செய்து விட்டு கிராமங்களுக்கு நடுவே இருக்கும் ஒரு கல்லூரியில் பிஏ வரலாறு சேர்ந்தான். அங்கே பெரும்பாலும் தலித் மாணவர்கள்தான் படிப்பார்கள். வசதிகுறைவான இடைநிலைச் சாதிகளைச் சேர்ந்தவர்கள் ஒரு சிலர் மட்டுமே அங்கே வருவார்கள். அந்தக் கல்லூரி ஒரு அமைச்சர் கடுமையாகப் போராடி அங்கே கொண்டு வந்தது. சுற்றிலும் சாதிய அமைப்புகள் வலுவாக இருந்தன. ஒரு காதல் நிகழ்ந்து

விட்டால் தனது சாதனை மறக்கப்பட்டு சாதி அமைப்பு காலூன்றி விடும் என்று அமைச்சர் எப்போதும் பயந்து கொண்டே இருப்பார் என்று பாஸ்கர் சிரித்துக் கொண்டே சொல்வான். எனவே மற்ற கல்லூரிகளில் இல்லாத கட்டுப்பாடுகள் இங்கே இருந்தன.

உடற்பயிற்சி ஆசிரியரின் வேலை வேறு வேறு சாதிகளைச் சேர்ந்த எந்தப் பையனும் பெண்ணும் சேர்ந்து பேசாமல் தடுப்பது என்று சொல்வான். அவர் கல்லூரி முழுவதும் சுற்றிச் சுற்றி வந்து தனது பணியைச் செய்வார். கல்லூரி முடிந்ததும் பெண்களை முதலில் போகச் சொல்லிவிட்டு பதினைந்து நிமிடம் கழித்தே பையன்களை வெளியே அனுப்புவார்கள். இவ்வளவு எல்லாம் இருந்த போதிலும் கல்லூரி கேட்டைத் தாண்டியதும் பையன்களும் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து கொள்வார்கள்.

பையன்கள் படிப்போடு ஏதோ ஒரு வேலைக்குப் போவார்கள். கட்டட வேலை, எலெட்ரீஷியன் வேலை, கார் ஓட்ட என்று வேலை செய்து சம்பாதிப்பார்கள். எனவே காதல் வந்துவிட்டால் உடனே கல்யாணம்தான். படிக்கும் போதே பாஸ்கர் எலெட்ரீஷியனாகவும், டிரைவராகவும் வேலை பார்த்தான் .பாஸ்கருக்கு இதிலெல்லாம் அக்கறை இல்லை. இந்த மூச்சுத் திணற வைக்கும் சூழலில் காதலிக்க விரும்பவில்லை என்பான். அவன் மனதில் வேறு பெண் இருந்தாள் என்று நினைக்கிறேன். அவளைப் பற்றி அவன் ஒருநாளும் வெளிப்படையாகப் பேசியதில்லை.

நான் படித்த கல்லூரி ஒரு நவீனமான கல்லூரி. மாணவர்கள் மிகவும் வசதியானவர்கள். நல்ல நூலகம் இருந்தது. கல்லூரியில் மாணவர் அமைப்புகள் இருந்தன. இலக்கிய அமைப்புகளும் இருந்தன. எல்லோரிடமும் நல்ல செல் இருந்தது. நான் இலக்கியக் கூட்டங்களிலும், போராட்டங்களிலும் கலந்து கொண்டேன்.

இரண்டாவது ஆண்டில் வகுப்பில் பாடத்தின் ஒரு பகுதியாக சாதிமறுப்புத் திருமணம் குறித்து ஒரு விவாதம் நடந்தது.

‘ஆண்களுக்கும் பெண்களுக்கும் தாங்கள் யாருடன் வாழ வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் உரிமை வேண்டும்’ என்று நான் பேசினேன்.

‘அப்படிச் சொல்ல முடியாது. குழந்தைத் தனமான காதலின் காரணமாக பின்பு பெண்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். எனவே முதலிலேயே தடுப்பது நல்லதுதான்’ என்று ஒரு பெண் மறுத்துப் பேசினாள். வகுப்பில் என்னை பலரும், அவளைச் சிலரும் ஆதரித்தனர்.

விவாதம் சூடாகி ‘காதல்திருமணம் செய்து கொள்வதால் வாழ்க்கை மோசமடைவதில்லை. அவர்களை ஒதுக்கி வைத்துக் கொடுமைப்படுத்துவதால்தான் வாழ்க்கை மோசமடைகிறது. நன்றாக வாழ்ந்த பலரையும் விரட்டிச் சென்று கொன்றிருக்கிறார்கள். எனவே காதல் திருமணங்களைத் தடுப்பவர்களின் நோக்கம் குழந்தைகள் நன்றாக வாழவேண்டும் என்பதல்ல. குலப் பெருமையைக் காக்க வேண்டும் என்பதே’ என்று நாங்கள் சொன்னோம்.

‘அவர்கள் வளர்த்த பெண்ணை அவர்கள் கொலை செய்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. உங்களுக்கு என்ன?’ என்றாள் அவள். அந்தப் பெண் சிவில் சர்வீசுக்குத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

என்னுடைய ஒரு நண்பன் ‘நீ தயவு செய்து பாஸ் செய்து விடாதே. நீ கலெக்டர் ஆனால் அந்த ஊர் சுடுகாடு ஆகிவிடும். எத்தனை பேர் சாவுக்கு நீ காரணமாகப் போகிறாயோ’ என்று சற்றுக் கடுமையாகக் கூறிவிட்டான்.

அந்தப் பெண் விம்மியழுதபடி வெளியே ஓடினாள். சமாதானம் செய்யலாம் அல்லது மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்று நான் அவள் பின்னே போனேன். அப்போது அவளது ஊரைச் சேர்ந்த சில பையன்கள் ஓடி வந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர். அவள் ஏதோ சொன்னதைக் கேட்டு என்னை முறைத்தனர். நான் அவர்களை நோக்கி ஒரு எட்டு வைத்ததும் அவர்கள் கலைந்து சென்று விட்டனர். இந்த இடத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். சில பையன்கள் தங்கள் சாதியைச் சேர்ந்த சில பெண்களுக்குக் காவலர்களாக தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டிருந்தனர். அந்த மாணவிகள் மற்ற பையன்களோடு பேசிக்கொண்டிருந்தால் வந்து என்ன பேசுகிறீர்கள் என்று விசாரிப்பார்கள். அதில் ஒரு மிரட்டலும் வெறுப்பும் இருக்கும். சில பெண்கள் ஏற்றுக்கொள்வார்கள். சிலர் பதிலுக்குக் கத்துவார்கள். ஆனால்

காதலிக்கும் எல்லாப் பெண்களுக்கும் பையன்களுக்கும் கொஞ்சம் குற்ற உணர்ச்சி இருப்பதால் யாரும் இதைப் பெரிதாக்குவதில்லை. இந்தப் பண்பாட்டுக் காவல் தொடர்ந்து கொண்டுதானிருந்தது.

இதுமாதிரி ஒரு குழுவினரிடம்தான் அந்தப் பெண் என்னைப் பற்றி அல்லது எங்களைப் பற்றி புகார் சொல்லிக் கொண்டிருந்தாள். அவர்கள் எதுவும் பேசாமல் போனதால் எனக்கும் வேறு வழி இருக்கவில்லை. அதன்பிறகு எனக்கு விசித்திரமான குறுஞ்செய்திகள் வரத் தொடங்கின. 'சோறும் போடுவோம் கூறும் போடுவோம் தெரியுமா? பிச்சக்கார நாயே உன் தகுதிக்கு ----------பொண்ணு கேக்குதா? உங்க வீட்டுக்கு நான் வர்றேன்' என்றெல்லாம் ஆபாசமாக, மிரட்டி வக்கிரமாக செய்திகள் வந்து கொண்டே இருந்தன. ஃபேஸ்புக்கிலும் இன்பாக்ஸில் கெட்ட கெட்ட வார்த்தைகளாக ஒவ்வொரு நாளும் பத்து செய்திகளாவது வந்து குவியும்.

நீ கலெக்டர் ஆக வேண்டாம் என்று சொன்ன அந்தப் பையனுக்கும் இதே போல செய்திகள் வந்து கொண்டிருந்தன. முகநூலில் மண்ணின் வீர மைந்தர்கள் என்ற பக்கத்தில் எங்கள் இருவர் படத்தையும் போட்டு 'இவர்கள் கீழ்ச் சாதிக்காரர்கள், நம் சாதிப் பெண்ணை கடத்திப் போக முயல்கிறார்கள். நமது பெண்களை தங்களைக் காதலிக்கச் சொல்லி வற்புறுத்துகிறார்கள், இவர்களுக்கு நாம் யார்? நம் சாதி எப்படியானது? என்று புரிய வையுங்கள்' என்று பதிவு போட்டிருக்கிறார்கள் என்பது பின்பு தெரிய வந்தது.

பின்பு எனக்கு நேரடியான ஃபோன்களும் வரத் தொடங்கின. தாராபுரம், பல்லடம் பெருந்துறை போன்ற இடங்களில் இருந்தெல்லாம் அழைப்பு வரும். 'தம்பி என்ன படிக்கிறீங்க' என்று தொடங்குவார்கள். 'அப்பா அம்மா என்ன பண்றாங்க' என்பார்கள். சாதிக்கு வருகிறார்கள் என்று தெரிந்து நான் பிடிவாதமாகச் சொல்ல மறுத்து விடுவேன். சாதி சொல்ல மறுப்பவன் தலித்தாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்களாகவே முடிவு செய்து கொள்வார்கள். 'சாதி தெரிஞ்சு நடந்துக்கோ. ஜாக்கிரத. வீணா வாழ்க்கையைக் கெடுத்துக்காத' என்று நிதானமாக மிரட்டுவார்கள். 'எதுக்கு எங்கிட்ட இப்படிப் பேசறீங்க, நான் என்ன பண்ணிட்டேன்' என்று கேட்பேன். சிலர் பேசுவார்கள். சிலர்

மிரட்டிவிட்டுத் துண்டித்து விடுவார்கள்.

எனக்கு இரவெல்லாம் தூக்கம் வராது. ஒரு சின்ன சத்தம் கேட்டாலும் விழித்துக் கொள்வேன். தெருவில் நடக்கும் போது முன்னும் பின்னும் பார்த்தபடி நடப்பது வழக்கமாகிவிட்டது. மனம் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தது. அதே நேரம் இனம்புரியாத பயமும் பின்மண்டையில் உறுத்திக் கொண்டே இருந்தது. எங்கள் மாணவர் அமைப்புத் தலைவரிடம் போய்ச் சொன்னேன். அவர் பிரின்ஸ்பாலிடம் புகார் சொல்லிவிட்டார். பிரின்சிபால் ஆடிப் போனார். அவருக்கு வியர்த்து விட்டது. காலேஜுக்குள் எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன். நீ வெளிய ஜாக்கிரதையா இருந்துக்கோ என்றார். வேணா லீவு போட்டுக்கறயா என்றும் கேட்டார். பின்பு என்ன செய்தாரோ தெரியவில்லை. அதன் பிறகு சில பையன்கள் கண்ணில் தட்டுப்படவில்லை.

என்னோடு சாதி மறுப்புத் திருமணத்தை ஆதரித்துப் பேசிய அந்த நண்பனுக்கும் தொல்லைகள். அவன் தன்னை மிரட்டிய ஒருவரிடம் உங்களுக்கு என்னதான் வேண்டும் என்று கேட்டான்.

அவர் 'உன் சாதிக்கு இதெல்லாம் தேவையா? கஞ்சி குடிச்சமா பொழப்பப் பாத்தமான்னு இருக்க வேண்டாமா?' என்று கேட்டிருக்கிறார்.

'என் சாதிக்கு ஏன் கஞ்சி குடிக்க வேண்டும்?'

'வேறென்னத்த குடிப்பீங்கடா பன்னிகளா?'

'என் சாதி என்னன்னு நெனைச்சுட்டு பேசறீங்க?'

'நீ ----------இவந்தானே?'

'இல்ல செட்டியார். வாணிய செட்டியார்'

'பொய் சொல்லாத. நா கேள்விப்பட்டது நீ...'

'இல்ல. கெடையாது'

'செரி நீ என்ன பண்ற... உன்னோட சாதி சர்ட்டிபிகேட்ட செராக்ஸ் எடுத்து ஃபேஸ்புக்ல போடு'

அவன் அதே போல செய்ததும் அவனுக்குத் தொல்லைகள் நின்றுவிட்டன. நான் சாதி சொல்ல மறுத்து விட்டேன். இந்த நாட்களில் பாஸ்கர் எனது நிழலாக இருப்பான். கல்லூரி விடும் நேரத்தில் அவன் எங்கள் காலேஜ் வாசலுக்கு வந்து விடுவான். சிலபோது என்னோடு வருவான். சிலபோது சற்றுத் தள்ளி நின்று கொள்வான். தன்னோடு என்னைப் பார்த்தால் எனது சாதியைப் பற்றிய அவர்களது எண்ணம் உறுதியாகிவிடுமே என்று அவனுக்குப் பயம். ஆனால் ஆச்சரியம் என்னவெனில் அவனுக்குத் தான் தாக்கப்படலாம் என்ற பயமே இல்லை. ஓரிரு முறை அவன் பக்கத்திலிருக்கும் பெண்கள் கல்லூரியில் படிக்கும் ஒரு சிவப்பான அழகான பெண்ணுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். எனக்கு இருந்த பிரச்சினையில் இதையெல்லாம் கவனிக்கவில்லை.

இதைப் பற்றி ஒருநாள் பாஸ்கரிடம் கேட்ட போது 'உயிரை விடற அளவுக்கு காதல் வொர்த் இல்லை' என்றான். ஏன் என்று கேட்டேன். 'வேற பிரச்சினைகளில்லாத மத்தவங்களுக்கு வேணும்னா காதலுக்கு உயிர விடறது முக்கியமா இருக்கலாம். ஆனால் வாழறதே பிரச்சினையா இருக்கற நாங்க உயிர விடணும்னா இதவிட முக்கியமான வேற விஷயங்களுக்காக விடணும்'பான்.

சரி என்னோட விஷயத்துக்கு வர்றேன். என்னோட ஒரு கைய ஒடைக்கப் போறதா தகவல் வந்தது. எங்கிட்டயே ஒருத்தன் போன்ல சொன்னான். எனக்கு இதுக்கு மேல தாங்க முடியாதுன்னு ஆச்சு. அப்படி யாராவது வந்தா கொன்னுட்டு சாகலாம்னு முடிவு பண்ணினேன். ஆனால் சும்மா மெரட்டறாங்க. அந்த அளவுக்கு என்ன நடந்துச்சுன்னும் தோணுச்சு. ஒருநாள் நானும் இன்னும் ரெண்டு பசங்களும் காலேஜ்ல நடந்து போயிட்டிருக்கறப்ப மூணுபேர் நின்னு பாத்துட்டிருந்தாங்க. கொஞ்ச நேரத்துல அது நாலஞ்சு பேராயிடுச்சு. நானும் எல்லாப் பசங்களுக்கும் சொல்லி விட்டேன். பாஸ்கரையும் வரச்சொன்னேன். நாங்க ஒரு நாற்பது பேர் பைக் ஸ்டாண்டு கிட்ட நின்னுட்டோம். அவங்களும் முப்பது நாப்பதுபேர் நிக்கறாங்க என்ன வேணா நடக்கலாம். அப்ப ஒரு பி.ஜி படிக்கற அண்ணன் அங்க போய் ஏன் இப்படிப் பண்றீங்கன்னு கேட்டார்.

ஒரு பையன் கூலா பேசறான். என்னைக் காட்டி 'இதோ இவன் தலித். எங்க பொண்ண லவ் பண்ணச் சொல்லி வற்புறுத்தறான். நடவடிக்க எடுக்கச் சொல்லி எங்களுக்குக் கட்சில இருந்து பயங்கர பிரஷ்ஷர். நீங்க பண்றீங்களா இல்ல நாங்க பண்ணட்டுமான்னு கேக்கறாங்க. நாங்களே பண்றோம்னு சொல்லிட்டோம்'ங்கறான்.

அந்த அண்ணன், 'என்னப்பா லூசு மாதிரி பேசறீங்க. யாரும் யாரையும் லவ் பண்ணல. கிளாஸ்ல நடந்த ஒரு ஆர்க்யூமெண்ட். இதுக்குப் போய் இத்தன கலாட்டாவான்னு?' திட்டினார். நான் தலித் இல்லேன்னும் சொன்னார்.

இது உண்மையான்னும் கேட்டான்.

நான் எப்படி அந்த பதிலச் சொன்னேன்னு இன்னி வரைக்கும் புரியல. அதுவரைக்கும் அடிதடிக்கும் எந்த ஆபத்துக்கும் தயாரா இருந்தேன். ஆனால் பிரச்சினை தீர கண்ணுமுன்னாடி வாய்ப்பிருக்குன்னதும் எங்கிருந்தோ ஒரு பலவீனம் வந்திருச்சு. என் சாதி என்னன்னு அந்தப் பொண்ணுகிட்டயே கேட்டுக்கோன்னேன்.

அவன் அங்க இங்கே போன் பண்ணிட்டு சிரிச்சுட்டே வந்து சாரி பிரதர்ன்னான். அவங்க ஆளுக யாருக்கோ போன் பண்ணிச் சொன்னான். அவங்க எங்க ரெண்டு பேரயும் நின்னு போட்டோ எடுத்து பேஸ்புக் மெசேஜ்ல போடச் சொன்னாங்க. என் வாழ்க்கைலயே கேவலமான போட்டோ அது. என் மூஞ்சில அத்தன அவமானமும் அப்புடியே அப்பியிருக்கு. அவன் சிரிக்கறான்.

'அதான நா மூஞ்சியப் பாத்தப்பவே நெனைச்சேன். நீ வேற மாரி இருக்கியேன்னு. எங்க பசங்க ஏதோ வெளயாடிட்டாங்க. நீ சொல்லியிருக்க வேண்டியதுதான, நான் அவனில்லைன்னு' அப்படின்னு சொல்லி முதுகுல தட்டிட்டுப் போயிட்டான். பின்னால நின்னு எல்லாத்தையும் கேட்டுட்டு, பார்த்துட்டு இருந்த பாஸ்கருக்கு எப்படி இருந்திருக்கும்? ஆனா அவன் எதையும் காட்டிக்கல.

இங்கே எல்லாரும் படிச்ச குடும்பத்தில இருந்து வந்தவங்க, வசதியானவங்க, ஐஏஎஸ் லட்சியத்தோட இருக்கறவங்க, பைக். செல்

எல்லாம் வெச்சிருக்காங்க. ஆனா சாதியோட அசிங்கமான முகம் இங்கதான் எனக்குத் தெரியத் தொடங்கிச்சு. இந்த உலகமே எங்களோடதுன்னு அவங்க நடந்துக்கறாங்க. நாம் அரசியல் அனாதையாயிட்ட மாதிரி இருக்கு. போய்ச் சொல்ல ஒரு எடம் இல்ல. கேக்க ஆள் இல்ல. அவங்களுக்கு கடன் கொடுக்க, வேல கொடுக்க எல்லாத்துக்கும் ஆள் இருக்கு. அந்தக் கடுப்புலதான் ராயல் என்பீல்ட் வாங்கினேன். அதுல அவங்க முன்னாடி போறதுல எனக்கு ஒரு பெருமை.

இப்ப வாட்ஸப் வந்த பிறகு இந்தக் கூட்டமெல்லாம் இன்னும் நல்லா ஆர்கனைஸ் ஆயிடுச்சு. யாரை வேணாலும் டார்கெட் பண்ணலாம். பாஸ்கரை யார் என்ன பண்ணினாங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனால் என்னவேணா பண்ற சூழ்நிலை இருக்கு. காரணம் உண்மையாவும் இருக்கலாம் பொய்யாவும் இருக்கலாம் கற்பனையாகவும் இருக்கலாம். ஆனா யாரும் டார்கெட் கிட்ட போய் விளக்கம் கேக்க மாட்டாங்க.

இளங்கோவின் ஆணையுறுதி தொடர்ச்சி .

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் தொண்ணூறு சதவீதத்துக்கும் மேற்பட்டவை ஆதிக்க சாதிகள் வாழும் பகுதிகளிலேயே இருக்கின்றன. ஆனால் இந்தப் பள்ளிகளில் படிப்பவர்கள் எண்பது சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் தலித்துகள். ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த சிறு விவசாயிகள், வசதியான விவசாயிகள் எல்லோரும் தனியார் பள்ளிகளிலேயே தங்கள் குழந்தைகளைச் சேர்க்கின்றனர். அதற்கு வழியில்லாத தலித்துகளே அரசு பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கின்றனர்.

இந்தப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாவது வரையுள்ள வகுப்புகளுக்கு இரண்டே இரண்டு ஆசிரியர்கள்தான் உள்ளனர். ஒருவர் ஓய்வு பெற்றால் அல்லது இறந்து போனால் குறைந்தது ஒரு வருடத்துக்கு இன்னொரு ஆசிரியர் நியமிக்கப் படுவதில்லை. ஐந்து வகுப்புகளுக்கு ஒரு நாளைக்கு மொத்தம் 35 பீரியட்கள். இரண்டு ஆசிரியர்களால் பத்து வகுப்புகளைத்தான் கவனிக்க முடியும். ஏதாவது சிறிய சாதிப் பிரச்சினை வந்துவிட்டால் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்கள் உடனடியாக குழந்தைகள் பள்ளிக்கு வருவதைத் தடைசெய்து விடுவார்கள். ஒவ்வொரு முறையும் நானும் பாஸ்கரும் கடுமையாகப் போராடியே குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டுவருவோம்.

பக்கத்து ஊரில் சிலர் தங்கள் குழந்தைகளை நான் ஆசிரியராக இருக்கும் பள்ளியில் சேர்க்க விரும்பினார்கள். ஆனால் பஸ் வசதி இல்லை. பாஸ்கர் போக்குவரத்துத் துறை அதிகாரிகளிடம் நடையாக நடந்தான். ஆளுங்கட்சிக்காரர்களைப் பிடித்துக்கொண்டுபோய் உள்ளூர் மந்திரியையும் பார்த்தான். எதுவுமே நடக்கவில்லை. மந்திரி தனது எம்.எல்.ஏ நிதியிலிருந்து பள்ளிக்குக் குழந்தைகள் வர ஒரு வேன் வாங்கித் தருவதாகச் சொன்னார். பலமுறை அலைந்த பிறகு அரசுப் பள்ளிக்கு வாகனங்கள் வைத்துக் கொள்வதற்கு விதிகள் இடம் கொடுக்கவில்லை என்று அதுவும் ஊற்றி மூடப்பட்டது. பத்தாண்டுகளுக்கு முன்பு வரை பள்ளியில் எல்லா சாதிகளைச் சேர்ந்தவர்களும் படித்து

வந்தனர். அப்போது பள்ளியில் எந்த விழாவும் நடத்தப்படாது. எல்லா சாதிக்காரர்களும் ஒன்றாக உட்கார வேண்டுமே! இப்போது ஆதிக்க சாதி குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து விட்டதால் பள்ளி ஆண்டு விழா நடத்த வேண்டுமென்று பாஸ்கர் ஒற்றைக்காலில் நின்றான். இப்படி ஏதாவது செய்து பள்ளியைத் தூக்கி நிறுத்தாவிட்டால் இழுத்து மூடிவிடுவார்கள் என்று பயந்தான். எனக்கும் அந்த பயம் இருக்கத்தான் செய்தது...

பாஸ்கர் திருநெல்வேலியைச் சேர்ந்த கதை சொல்லும் தோழரையும், வேறு பல பேச்சாளர்களையும் ஏற்பாடு செய்து கொடுத்தான். ஒரு வாரம் நாங்கள் இருவரும் தூங்கவேயில்லை. கடைசியில் சேர்களை இறக்கியபோது ஊர்க்காரர்கள் அலட்சியமாக முகம் சுளித்தபடி சென்றுவிட்டனர். இது ஒரு பள்ளி, இதற்கு ஒரு ஆண்டுவிழா!

வரிசை வரிசையாகப் பாடல்களும் பேச்சும் நடந்தன. திடீரென்று கூட்டத்துக்கு நடுவே கோமாளி தோன்றினார். குஞ்சம் வைத்த தொப்பி, முகத்தில் கலர் கலராக வண்ணம், மஞ்சள் சட்டையும், அரைக்கால் டிரவுசரும் அணிந்திருந்தார்.

“வணக்கம் குழந்தைகளே” என்றார்.

குழந்தைகள் “கோமாளி” என்று கத்தினர்.

“வணக்கம் சொல்லுங்க”

“வணக்கம் கோமாளி”

கோமாளி தத்தி ஓடி மைக்கின் முன் நின்று கொண்டார். “ஒரு கதை சொல்லப் போறேன்”

குழந்தைகள் “ஏ” என்று கத்தினர்.

“ஒரு ஊர்ல ஒரு நரி. அதோட சரி”

“ம்ம்ம்ம்” குழந்தைகள் அதிருப்தியில் முனகினர்.

கோமாளி மேடையிலும் கீழேயும் ஓடி பல்வேறு பாவனைகள் சேஷ்டைகள் செய்து கதை சொன்னார். சொல்லி முடித்தபோது

சுவரின்மேல் குரங்கு தோன்றியது "தொப்" என்று ஏழடி உயரத்திலிருந்து மேடையில் குதித்தது. குழந்தைகள் பக்கம் போய் "உர்" என்று உறுமியது. கோமாளி அதன் வாலைப் பிடித்து மேடைக்கு அழைத்துச் சென்றார்.

"யார் நீ?"

குரங்கு ஊட்டியிலிருந்து வந்தேன் என்று கை காட்டியது.

"உனக்கு என்ன வேணும்?"

"பசிக்குது" என்று வயிற்றைத் தொட்டுக் காட்டியது.

'சரி யாரையும் தொந்தரவு பண்ணாம ஏதாவது சாப்பிட்டுக்கோ" என்றார் கோமாளி.

குரங்கு ஒரு பிளாஸ்டிக்கை சாப்பிட்டு உயிரை விட்டது. கோமாளி கண்ணீர் விட்டபடி "பிளாஸ்டிக் குப்பை போடாதீர்கள்" என்று குழந்தைகளிடம் சொன்னார்.

நானும் பாஸ்கரும் வேப்ப மரத்தடியே நின்று கொண்டிருந்தோம். நாடகத்தைப் பார்த்து எனக்கு வருத்தமாக இருந்தது. பாஸ்கர் அலட்சியமாகச் சிரித்தான். "ஏண்டா சிரிக்கிறே?"

"இவரு அறிவொளி இயக்கத்துக்காரரு. அங்க சொல்லிக் குடுத்த நாடகத்த போடறாரு. பிளாஸ்டிக்கால பிரச்சினைன்னா பிளாஸ்டிக் கம்பெனியத் தடை பண்ண வேண்டியது தான? சிகரெட்டால பிரச்சினைன்னா சிகரெட் கம்பெனியத் தடை பண்ண வேண்டியது தான? நம்மகிட்ட ஏன் வந்து சொல்றாங்க?"

"நீதான இவரக் கூட்டிட்டு வந்த?"

"உன் ஸ்கூலக் காப்பாத்த ஏதாவது பண்ணோணுமில்ல?"

"இங்கு ஐந்தாவது முடிக்கும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல பல ஊர்கள் தாண்டிச் செல்ல வேண்டும். அங்கும் மாணவர்கள் குறைவு. பலரை ஒன்பதாவது வகுப்பில் ஃபெயில் செய்து விடுவார்கள் தோல்வியுறும் மாணவர்கள் வேலைக்குப் போய்விடுவார்கள். தப்பித் தவறி

பிளஸ் டூ போகும் போது பள்ளிச் சூழலே மாறியிருக்கும். தனியார் பள்ளி மாணவர்களும் அங்கு வந்து சேர்வார்கள். இவனுக்கு ஏபிசிடியே ஒழுங்காகத் தெரியாது. வீட்டில் உட்கார்ந்து படிக்க இடம் கிடையாது. ஒழுங்கான சாப்பாடு கிடையாது. பள்ளியிலும் பெரும்பாலும் யாரும் வேண்டாத குரூப்பே கிடைக்கும். மிகுந்த பிடிவாதமும், மன உறுதியும் கொண்ட தலித் மாணவர்களாலேயே ஏதோ கொஞ்சம் மார்க் வாங்கி பிளஸ் டூ தாண்ட முடியும்"

"பாஸ்கர் என்ன செய்ய விரும்பினான்?" ஷீலா கேட்டாள்

"இதெல்லாம் பலவீனமான முயற்சிகள் என்பது பாஸ்கருக்குத் தெரியும். ஆதிக்க சாதிகளுடைய பணபலத்தைத் தகர்ப்பதன் மூலமே குறைந்த பட்ச சமத்துவத்தை நிலைநாட்ட முடியும் என்று நினைத்திருந்தான். பள்ளி நடத்துபவர்கள், ஊர்ப் பெரிய மனிதர்கள் மணல் கடத்துகிறார்கள், பல சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்றெல்லாம் புகார்கள் வரும். புகார் எழுதுவது யாரென்று அவர்கள் மண்டையைப் பிய்த்துக்கொண்டார்கள். பாஸ்கராக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்"

"தறில, மில்லுல கேம்ப்கூலி சிஸ்டம் இருந்துதே அங்கெல்லாம் யூனியன் கட்ட பாஸ்கர் ஏதாவது முயற்சி செஞ்சாரா?"

"இல்லை ஷீலா மேடம். ஏற்கெனவே இருக்கற அமைப்புகளுக்கு அந்த எண்ணமே இல்லை. அவனால புதுசா ஒரு அமைப்பு கட்ட முடியாது. அதனால் ரகசியமா ஏதாவது செய்ய நினைச்சிருக்கான் போலிருக்கு. ஓடிப் போக உதவி பண்றது, பிரஸுக்குக் காட்டிக்கொடுக்க முயற்சி பண்றது, என்.ஜி.ஓ மூலமா மீட்பது, மொட்டைப் பெட்டிஷன் போடறதுன்னு... குறுக்கு வழி. கொஞ்ச காலம் வாழ்ந்திருந்தா ஏதாவது அமைப்பு உருவாக்க முயற்சி பண்ணியிருப்பான்"

10

பாஸ்கர் – அமராவதி - அழுதா பற்றி மீண்டும் விசாரித்தபோது கிடைத்த தகவல்கள் துண்டுத்துண்டாக இருந்தன. அழுதாவுக்கும், பாஸ்கருக்கும் இடையே காதல் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பாஸ்கரின் நண்பனான ஒரு இளைஞன் அழுதா தன்னை மில்லிலிருந்து காப்பாற்றும்படி பாஸ்கரிடம் கேட்டுக் கொண்டதாகவும் அதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று பாஸ்கர் சொன்னதாகவும் சொன்னான்.

ஆனால் சந்தையில் அடிதடி நடக்கும்போது கூடஇருந்தவன் சொன்னது வேறுவிதமாக இருந்தது.

“சந்தைல பொரிக்கடைப் பக்கம் நாங்க நின்னு பேசிட்டிருந்தோம். அப்ப அந்தப் பொண்ணு விறுவிறுன்னு வந்துச்சு. எங்களப் பாத்துதான் வந்த மாதிரி இருந்துச்சு. பாஸ்கரண்ணன் திரும்பி அதைப்பாத்துப் போனான். இவன் பக்கத்தால போனதும் அந்தப் பொண்ணு திரும்பி ஓடத் தொடங்கிடுச்சு. பாஸ்கரண்ணன் பின்னாடியே போனான். அதுக்குள்ள அவனுக வந்து அடிதடி”

“அடிதடின்னா சண்டையா தள்ளுமுள்ளா?”

“பாஸ்கர் அடிச்சு மூஞ்சிய ஒடச்சிட்டான்”

அழுதா இன்னும் விரைவாக ஓடினாள். பாஸ்கர் தாவிக் குறுக்கே பாய் அவளை மறிக்க முயன்றான். அப்போது அவன் அணிந்திருந்த சட்டை ஏதோ ஆணியில் மாட்டியதைப் போல மேலேறி அவன் கழுத்தை சட்டென்று இறுக தொடங்கியது. ஒருநிமிடம் அவனுக்கு என்ன நடக்கிறதென்று புரியவில்லை. தோளில் சடாரென்று ஒரு அடி விழுந்தது. அப்போதுதான் யாரோ தனது சட்டைக்காலரைப் பிடித்து இழுத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான். இழுத்தவன் சென்ராயன். அமராவதியின் காதலன், கணவன்...

பாஸ்கர் பலங்கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ளி தன்னை விடுவித்துக் கொண்டான். சென்ராயனின் கண்கள் சிவந்திருந்தன. அவன் குடித்திருந்தது தெரிந்தது. இவனைப் பார்த்துதான் அழுதா ஓடியிருக்கலாம்.

“----------தாயோளி எத்தன ஏத்தமிருந்தா அவமேல கை வெப்ப”

சென்றாயன் திரும்பவும் அவன்மேல் பாய வந்தான். பக்கத்தில் நின்றிருந்த அவனைத் தடுக்க முயன்றனர்.

பாஸ்கர் சட்டென்று அமைதியானான். சாதியச் சொல்லி திட்டும் அந்த கெட்ட சொல் எப்போதும் அவனுள் ரௌத்திரகாரமான கோபத்தை ஏற்படுத் இந்தச் சொல்லைப் பொதுஇடத்தில் தன்னை நோக்கிச் சொன்னவனைச் சு விட முடியாது. அவன் நிதானமாக சுற்றிலும் தேடினான். அடித்துத் துவைக் வாகாக ஏதாவது பொருள் கிடைக்கிறதா என்று. இதற்குள் வெள்ளிங்கிரி அங்கே வந்து விட்டான். யாரோ பையனோடு சண்டை. இரண்டு அறையோ விட்டு விடலாம் என்று நினைத்தவனுக்கு பாஸ்கரைப் பார்த்ததும் கருக்கென்றிருந்தது. என்றாவது ஒருநாள் அடித்துக் கையைக் காலை உடை வேண்டும் என்று நினைத்திருந்த ஆட்களில் பாஸ்கரும் ஒருவன். ஆனால் சந்தையில் துணைக்கு ஆட்களில்லாமல் அவனை எதிர் கொள்ளத் தயக்கம் இருந்தது.

பாஸ்கர் நிதானமாக சென்றாயனை நோக்கி வந்தான். வெள்ளிங்கிரி பதட்டத்தில் அவனை மறித்து அறைய முயன்றான். பாஸ்கரின் முஷ்டி இடி வெள்ளிங்கிரியின் முகத்தில் இறங்கியது. அவனுக்குத் தலை சுற்றியது. கண்மூடித்தனமாகக் காற்றில் கையை வீசினான். பாஸ்கரின் கால் அவன் விலாவில் தாக்கியது. வெள்ளிங்கிரி தரையில் உருண்டான். இதற்குள் கூட்ட கூடிவிட்டது. அடிபட்டவன் வெள்ளிங்கிரி என்றதும் ஆளாளுக்குக் கூச்சல் தொடங்கினார்கள். வெள்ளிங்கிரி ஒரு வார்த்தை பேசாமல் எழுந்து இருளில் காணாமல் போனான்.

அன்றிரவு ஒரு பத்துப் பேரை அழைத்துக்கொண்டு வெள்ளிங்கிரி பா வீட்டுக்குப் போனான். வீடு புகுந்து அவனை அடித்து நொறுக்குவதுதான் நோக்கம். ஆனால் பாஸ்கர் வீட்டு முன்னாலேயே அவனை எதிர்பார்த்து நி கொண்டிருந்தான். உடன் சில இளவட்டங்கள். இரண்டு குழுக்களுக்கு இடையே மக்கள் நின்று கெஞ்சினார்கள்.

“சாமி சாமி... இந்த ஒருக்கா உட்டுப் போடுங்க”

வெள்ளிங்கிரி நரம்பு புடைக்கக் கத்தினான். “டேய் ஆரு மேல கைய உன்ன உண்டு இல்லேன்னு ஆக்கிபோடறம் பாரு”

“போடா போ. முடிஞ்சதப் பாரு. அதுக்கு மொதல்ல உங்க புள்ளக ராத்திரி பகலா வேல வாங்கறாம்பாரு.... அவங்கிட்ட போயி உன் வீரத்தக்

இருபுறமும் நூற்றுக்கணக்கான ஆட்கள். குறுகலான சேரித் தெருக்க பாஸ்கரின் முகத்தில் தெரிந்த கோபம். வெள்ளிங்கிரி ஆழ்ந்து மூச்சு விட்டு பாஸ்கரையே ஒரு நிமிடம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அங்கிருந்து கிளம்பினான்.

பிரச்சினை முடிந்தது என்று பலர் ஆசுவாசப் பெரு மூச்சு விட்டனர். முடியவில்லை. தொடங்கியிருக்கிறது என்பது பாஸ்கருக்கும் சில பெரியவர்களுக்கும் புரிந்தது. முன்பாக இருந்திருந்தால் சம்பந்தப் பட்டவை பஞ்சாயத்தில் நிறுத்தி பட்டை எடுத்து ஊர் பிரச்சினையை முடிக்கும். ஆன இப்போது ஊர் இரண்டு பட்டு இருபுறமும் வழக்குகள் விரோதம் நிலவும் ச பஞ்சாயத்து தண்டிக்கும் வல்லமையை இழந்து விட்டது. சாதி மேலாதிக்கத் நிலைநாட்ட தாக்குதல் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் ஏற்கெனவே வழக்குகளுக்கு அலைந்து சிரமப்பட்டுப் போன விவசாயிகள் ப தெற்கத்திக்காரனுக்காகவும் அவன் வைப்பாட்டிக்காகவும் இன்னொரு முற கோர்ட் கேசுக்காக அலைவார்களா என்று சொல்ல முடியாது. எனவே...”

எனவே தீராத வன்மம் கொலையில் முடிந்திருக்கிறது .

“அந்த அமுதாவும் அமராவதியும் எங்கே?” ஷீலா கேட்டாள்.

“அமராவதி காணாமப் போயிட்டா. ஆளே காணோம்”

இது சரியாகத்தான் தோன்றியது. ஏனென்றால் சந்தையில் பாஸ்கர் வெள்ளிங்கிரியையும் சென்ராயனையும் தாக்கிய அன்றைக்கு இரவு அவர்கள் பாஸ்கர் வீட்டுக்கு வந்தபோது “உங்க புள்ளைகள மில்லுல வெச்சு ராத்திரி பகலா வேல வாங்கறான். அவங்கிட்ட போய்ச் சண்டை போடுங்கடா” என்று பாஸ்கர் சொன்னதாக எல்லோருமே சொன்னார்கள். எனவே பாஸ்கருக்கும் அமுதாவுக்குமான உறவு மில்வேலை தொடர்புடையதாக இருக்க வாய்ப்பிருக்கிறது.

ஆனால் அமராவதிக்கும் பாஸ்கருக்குமான உறவு சிக்கலானதாக இருந்தது. இருவரும் அங்கே இங்கே பேசிக் கொண்டதை சிலர் பார்த்திருக்கிறார்கள். இது போன்ற உறவுகள் வழக்கமாக இருக்கக்

கூடியவைதான். சிந்தாமணியும் பாஸ்கரின் நண்பர்களும் கூட இந்த இடத்தில் தயங்கினார்கள்.

மகள் பாஸ்கரிடம் உதவி கேட்டிருக்கிறாள். அவன் அமராவதியிடம் பேசியிருக்கிறான். மகள் குறித்துப் பேசியிருக்க எல்லா வாய்ப்பும் இருக்கிறது. ஆனால் ஆண்பெண் உறவின் பாலியல் தன்மை குறித்துப் புரையோடிப் போயிருக்கும் சிந்தனைப் போக்கு அதை மட்டுமே சுற்றிச் சுற்றி வருகிறது.

ஆனால் எல்லோருமே சொல்லி வைத்தது போல ஒரே பதிலைத்தான் சொன்னார்கள். அமராவதி அப்படிப்பட்ட பெண் அல்ல. அவளது ஒழுக்கத்தைக் குறை சொல்ல முடியாது. பாஸ்கருக்கும் பெண்கள் மீது அந்தக் கோணத்தில் ஈடுபாடு கிடையாது. அவன் பெண்களோடு பேசுவான். கிண்டல் செய்வான். ஆனால் அதற்கு மேல் போனது கிடையாது.

காதல் காமம் தொடர்பாக பாஸ்கர் விசித்திரமான கொள்கைகள் கொண்டிருந்ததாக இளங்கோ சொல்லியிருந்தான். அகமண முறையை ஒழித்தால்தான் சாதி ஒழியும் என்று பாபா சஹேப் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் இட ஒதுகீடு கொடுத்ததன் நோக்கம் வளர்ச்சி பெற்றவர்கள் சமூகத்தைக் கைதூக்கி விட வேண்டும் என்பதே. எனவே நல்ல வேலையும் வசதியையும் இட ஒதுக்கீட்டின் மூலம் அடைந்தவர்கள் மேல்சாதிப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டால் இனம் ஒரு நல்ல ஆணை இழக்கிறது. நமது பெண்களை அவர்கள் ஒவ்வொரு நிமிடமும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்குகிறார்கள். என்றாலும் நாம் ஒழுக்கத்தைப் பேண வேண்டும் என்று சொன்னதாகவும் அதை உறுதியாகக் கடைப்பிடித்ததாகவும் இளங்கோ சொல்லியிருக்கிறான். தவிர அவனுக்கு ஏதோ வெளியே சொல்லாத காதலும் இருந்திருக்கிறது...

ஆனால் ஊர்க்காரர்கள் ஏதோ சொன்னார்களே? பாஸ்கரையும் அமராவதியையும் கோவையில் பார்த்ததாக... எங்கே பார்த்ததாக... ஷீலா பைக்குள் தேடி வாக்குமூலங்களைப் பதிவு செய்திருந்த நோட்டை எடுத்தாள். துளசிக்காட்டுத் தோட்டம் நல்லாச்சாமி என்பவர் சொல்லியிருந்தார். “ஆர் எஸ் புரம் திருவேங்கட சாமி சாலையில் உள்ள

போஸ்ட் ஆபீஸ் பின்புறம் 1 ஏ பஸ்வரும் குறுக்குச் சாலையில் பாஸ்கரையும் அமராவதியையும் பார்த்தேன்”

பின்பு கனவில் நடப்பவள் போல ரமேஷ் குமாரிடம் சென்றாள்.

“கோயமுத்தூர் ஆர்.எஸ்.புரம் போஸ்ட் ஆபீஸ் பின்னால ஏதாவது மனித உரிமை அமைப்போ, வக்கீல் ஆபீஸோ, பத்திரிக்கை ஆபீஸோ இருக்கா?”

ரமேஷ் குமார் ஒரு விநாடி ஆழ்ந்து சிந்தித்தான். ”ஆமாம் எம்பவர் இருக்கு” என்றான். அப்போது அருகே வந்துநின்ற சுமதியும், சிவானந்தனும் கூட அதை அங்கீகரித்தனர்.

11

இரவு ஏழு மணி நெருங்கும் போது உண்மையறியும் குழுவில் இருந்தவர்களுக்கு உடல் சோர்ந்து வந்தது. கண்கள் சிவந்து போய்விட்டன. ஊரில் இனி விசாரிக்க யாரும் இல்லை. கோவைக்குச் சென்று தங்கிவிட்டு மறுநாள் பொள்ளாச்சி பக்கம் சென்று வேலையைத் தொடர முடிவு செய்து கிளம்பினார்கள். ஆனால் ஷீலா மனதுக்குள் ஒரு முடிவு செய்திருந்தாள்.

"நான் இன்னைக்கு நைட் இங்கேயே தங்குறேன். காலையில ஒரு பஸ் பிடிச்சு காமாட்சிபுரம் வந்திடுறேன்" என்றாள்.

"இங்கியா? ஏன்?" சுமதி ஆச்சரியத்துடன் கேட்டார்.

"இங்கே எப்படித் தங்குவீங்க" ரமேஷ்குமார் முகத்தில் வழக்கமான அதிருப்தி. உணர்வுபூர்வமான ஏதாவது செய்வதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. இது விதி மீறல். எல்லாமே துல்லியமான ஒழுங்கில் நடக்கவேண்டும் என்று நினைப்பான். இங்கே தங்கி இந்தப் பெண் என்ன விசாரிக்கப் போகிறாள்? தவிர ஊரில் இப்போது பதட்டம் வேறு நிலவுகிறது. ஏதாவது நடந்து விட்டால் அவர்தானே பொறுப்பு.

"பரவால்ல சமாளிச்சுக்குவேன்"

"இல்ல ஷீலா, இது லாஜிக்கா சரியில்ல. நமக்கு ரெண்டு பேரும் ஒண்ணுதான். நாம மக்களோட புகார்களைக் கேட்கத்தான் வந்திருக்கோம். புலன் விசாரணை செய்ய இல்லை. நம்மால் அது முடியவும் முடியாது" என்றான் ரமேஷ்.

சுமதிக்கு இங்கே அவள் தங்குவதில் ஆட்சேபனை எதுவுமில்லை. சொல்லப் போனால் இந்த முடிவு அவருக்கு மகிழ்ச்சியளித்தது. இங்கே அன்பைப் பொழியும் மனிதர்கள் நடுவே தங்குவதில் என்ன பிரச்சினை வந்துவிடக்கூடும்?" அவர் தானும் உடன் தங்குவதாகத் தெரிவித்தார். ஆனால் அவருக்கு டயாபடீஸ் இருக்கிறது. மாத்திரை எடுத்து வரவில்லை.

"வேண்டாம் தோழர்" ஷீலா அவரை வற்புறுத்தி அனுப்பினாள். அவளுக்கு சுமதி இங்கே தங்கினால் திரும்பவும் குழு தங்களுக்குள்

முடங்கிவிடுமோ என்ற பயம்.

சிவானந்தமும், ரமேஷ்குமாரும் பாஸ்கரின் அப்பாவிடமும் இன்னொரு பெரியவரிடமும் ஷீலாவைக் கவனித்துக்கொள்ளச் சொல்லிக் கேட்டுக்கொண்டனர். இளங்கோ தானும் இரவு அங்கே தங்க இருப்பதாகச் சொன்னான். எனவே தான் ஷீலாவை காலை பொள்ளாச்சி பஸ் ஏற்றி விடுவதாகப் பொறுப்பேற்றுக் கொண்டான்.

“அதுக்கென்ன. இங்கியே இருக்கட்டும். என்ன பயம்?” என்றார்கள் அவர்கள். ஷீலாவுக்கு துளிகூடத் தயக்கம் இல்லை. இவர்கள் தன்னவர்கள் என்று தோன்றியது. இன்னும் தனக்கு இந்தப் பகுதியைப் பற்றி சரியாகத் தெரியவில்லை என்பதையும் உரையாடல்களின் போது உணரமுடிந்தது. எந்திரத்தனமான கேள்விகள். எந்திரத்தனமான பதில்கள். இதையெல்லாம் தாண்டி இந்தப் பகுதியின் வாழ்க்கையை அறிந்து கொள்ள விரும்பினாள். எளிமையாக ஆர்ப்பாட்டமில்லாமல் நடுநிலை நடிப்பு இல்லாமல் இயல்பாக மக்களோடு உரையாட விரும்பினாள். இந்தப் பகுதி எந்தவிதமான மனிதர்களை உருவாக்குகிறது என்பதுதான் தனது தேடலின் அடிப்படை என்று அவளுக்குத் தோன்றியது. தலித்தாக வாழ்வது என்பது எப்படியிருக்கும்? பாஸ்கரின் கொலைக்கு தனிநபர் விரோதம் மட்டும் காரணமல்ல. அதன் பின்னே சமூகக் கொந்தளிப்பு இருக்கிறது.

பாஸ்கர் வீட்டில் உணவு சரியாகச் சமைக்கப்படாததால் பக்கத்து வீட்டுக்கு அழைத்துச் சென்று பரிமாறினார்கள். ரேஷன் அரிசியில் செய்யப்பட்ட தக்காளி சாதம். ஷீலா வாழ்க்கையில் அவ்வளவு ருசியான தக்காளி சாதத்தைச் சாப்பிட்டதே இல்லை. பின்பு அந்த வீட்டுப் பெண் கொடுத்த ஒரு நைட்டியை அணிந்து கொண்டாள். இந்த வீட்டில் ஒரு அழகான இளம் பெண்ணும் அவளது அம்மாவும் இருந்தார்கள். வீட்டு ஆண் வெளியே உட்கார்ந்து கொண்டார். உணவு முடித்து ஷீலா வெளியே வந்து உட்காரவும் வேறுசில பெண்களும் வந்து சேர்ந்துகொண்டனர். சற்றுதொலைவில் இளைஞர்கள் கூட்டமாக உட்கார்ந்திருந்தனர். போலீஸ் பாதுகாப்பு இருப்பதால் சற்று பதட்டம் குறைந்திருக்கிறது. ஆனாலும் எப்போதாவது கல் வந்து விழுந்து கொண்டுதானிருந்தது. தனியே சிக்குபவர்கள் உதைபடும் வாய்ப்பு

இருக்கிறது.

குளிர்கால இரவு சோகத்தையும் தனிமையையும் பரப்பியது. ஷீலாவுக்கு ஏற்கெனவே கோவைக்குளிரில் உதடுகள் வறண்டு போயிருந்தன. துப்பட்டாவால் தலையைச் சுற்றி முக்காடு போட்டுக் கொண்டாள். இருந்த போதும் குளிர் ஊசியாகக் குத்தியது. பனி பெய்யுது என்று ஒரு பெண் ஒரு போர்வையைக் கொண்டு வந்து ஷீலாவுக்குப் போர்த்தி விட்டாள். வெளவால்களும் இன்னும் ஏதேதோ பெயர் தெரியாத பறவைகளும் பறந்து கொண்டிருந்தன. சற்றுத் தள்ளியிருந்த இலந்தை மரம் அவ்வப்போது அசைவதும் நிற்பதுமாக இருந்தது. எரிந்துகொண்டிருந்த ஒரே ஒரு வீதி விளக்கின் கீழ் நீலநிற மென்பனி புகைபோலத் தெரிந்தது. தொலைவில் தெரிந்த வெட்டவெளிகளை ஊடறுத்துச் சென்ற மண்பாதைகளினூடே சில்லென்று குளிர்ந்திருந்த காற்று வீசியடித்துக் கொண்டிருந்தது.

“டீத்தண்ணி வெச்சுக் கொண்டா கண்ணு. இந்தக் கம்மனாட்டிங்களால டீக்குடிச்சே நாளாச்சு” யாரோ நெட்டி முறித்தார்கள்.

“இந்த மாதிரி ஆகறது இதுதான் மொத தடவையா? இல்லாட்டி அடிக்கடி நடக்குமா?”

“ஒவ்வொருக்கா சண்ட தகறாரு வரும்போதும் இதே பெரச்சனதான். ஆனா இப்ப வெள்ளிங்கிரி தலைவரும் நெம்பப் பேரும் உள்ள இருக்கறதுனால நெம்பக் கோவமா இருக்காங்க”

தன் வாழ்க்கையிலேயே துயரந்தோய்ந்த இரவு அது. பெண்கள் ராகம் போன்ற கொங்கு தமிழில் இரவும் பகலும் வீட்டிலும் வெளியிலும் தங்களைத் துரத்தி வரும் வேட்டைக்காரர்களைப் பற்றிப் பேசினார்கள். விரட்டி விரட்டி வேலை வாங்கப்பட்டதைப் பற்றிப் பேசினார்கள். அடித்து நொறுக்கப்பட்டதைப் பற்றிப் பேசினார்கள். பணியிடங்களில் விபத்துகளைப் பற்றிப் பேசினார்கள். குடித்துக்குடித்துச் செத்துப்போன உறவினர்களைப் பற்றிப் பேசினார்கள், நோய்களையும் பஞ்சத்தையும் வறுமையையும் பற்றிப் பேசினார்கள்... அத்தனை செல்வங்களிலிருந்தும் இன்பங்களிலிருந்தும் தாங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பற்றிப் பேசினார்கள்.

கல்லைப் போன்ற கனத்த அமைதி அந்த இடத்தை மூடிக்கொண்டது. சிலருக்கு வாழ்க்கை ஏன் இவ்வளவு கடினமாக இருக்கிறது? என்று ஷீலா நினைத்துக் கொண்டாள். இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த மக்கள் இப்படி வாழ வேண்டும்?

ஷீலா எதிரே அரக்குக் கலர் புடவையணிந்த ஒரு பாட்டி தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். பாட்டியின் கால்பெருவிரல் ஆங்கில ஒய் போல வளைந்திருந்தது.

"பாட்டி...?

பாட்டி கரகரவென்று கண்ணீர் சிந்தத் தொடங்கினார்.

"அநியாயமா செத்துப் போயிட்டாங்கண்ணு. இன்னும் எத்தன காலத்துக்குத்தான் இப்புடி நம்ம புள்ளைகளக் கொன்னுட்டே இருப்பாங்களோ?"

"வேற யாராவது இந்த மாதிரி செத்திருக்கிறாங்களா பாட்டி?"

"அவீலுக்கு இதுதான வேல..."

கண்ணம்மா பாட்டி சொன்னகதை---- ஷீலாவின் குறிப்புகளிலிருந்து.

பண்ணையத்திலிருக்கும் கருப்பனுக்கும், பண்ணையார் பழனிச்சாமி மகள் செலம்பாவுக்கும் தொடுப்பாகிவிட்டது. பழனிச்சாமி ஊர்ப் பெரியதனக்காரரிடம் கலந்தாலோசித்தார். பின்பு ஒரு வெள்ளிக்கிழமை பழனிச்சாமியும், அவர் மனைவியும் மகள் செலம்பாவும் பேரூருக்குச் சென்றனர். பேரூர் பட்டீஸ்வரர் கோவிலுக்குச் செல்பவர்கள் அங்கே ஓடும் நொய்யல் ஆற்றில் குளிக்காமல் வரமாட்டார்கள். எப்போதும் ஆற்றில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்த காலம்.

கணவனும், மனைவியும், செலம்பாவும் ஆற்றில் இறங்கிக் குளித்தார்கள்.

"ஒரு முக்குளி போடும்மா" என்றார் பழனிச்சாமி.

செலம்பா மூக்கைப் பிடித்துக் கொண்டு நீரில் முங்கினாள்.

பழனிச்சாமி அவள் கால்களைத் தன் காலால் துளாவி வாரிவிட்டார்.

ஏற்கெனவே காலடியில் இருக்கும் மண்ணை ஆற்று நீர் பரபரவென்று அரித்துக் கொண்டு போய்க்கொண்டிருக்கும். எனவே தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் நிற்பது மெதுவாகக் சுழன்று கொண்டிருக்கும் சக்கரத்தின்மேல் நிற்பது போல்தானிருக்கும். காலை வாரிவிட்டதும் நீருக்குள் முழுகியிருந்த செலம்பா நிலைதடுமாறி மல்லாந்து விழுந்தாள். ஒரு மாய விநாடி நீருக்கடியில் ஏதோ பரபரப்புத் தெரிந்தது. பின்பு அமைதி. ஆறு எதுவும் நடக்காதது போல ஓடிக் கொண்டே இருந்தது.

பழனி இரண்டு மூன்று முறை முக்குளி போட்டார். பின்பு திடீரென்று எழுந்து "செலம்பா... செலம்பா..." என்று தேடினார். கணவனும், மனைவியும் மாரடித்து அழுதுவிட்டு ஊர் வந்து சேர்ந்தனர். ஊர்க்காரர்கள் சித்திரச் சாவடி அணையோரம் செலம்பாவின் உடலைக் கண்டுபிடித்தனர். மூன்றாம் நாள் காரியம் முடிந்தது.

இருண்ட முகத்துடன் திக்பிரமையடைந்து உட்கார்ந்திருந்த கருப்பன் மீது பழனிச்சாமி திடீரென்று பாய்ந்து அவனைப் பிடித்து புளிய மரத்தில் கட்டினார். வீட்டினுள் புகுந்து மூக்குத்தியை திருடிவிட்டான் என்று உலக்கையாலும் கட்டைகளாலும் அடித்து நொறுக்கத்தொடங்கினார். சுற்றிலுமிருந்த சொந்த பந்தங்கள் புளிய விளாறாலும் மண்வெட்டிகளின் கட்டைகளாலும் ஈவிரக்கமின்றித் தாக்கத் தொடங்கினர்.

அன்றிரவு கருப்பன் அதே புளிய மரத்தில் சுருக்கிட்டுக் கொண்டான்.

வெட்டவெளியில் காற்று விர் விர் என்று அடித்தது. வானில் அரை நிலவு ஒளி வீசிக் கொண்டிருந்தது. தரிசாகக்கிடந்த நிலங்கள் தொடுவானம் வரை விரிந்திருந்தன. எங்கோ தொலைவில் தென்னை மரங்கள் இருளில் நிழல் உருவங்களாகத் தோன்றின. சைட்டுகள் பிரித்ததற்கு அடையாளமாக நடப்பட்டிருந்த முட்டுக்கற்கள் முழங்காலுயரம் வளர்ந்திருந்த புற்களில் முழுகியிருந்தன. செம்மண் பாதை வெட்டவெளியை ஊடறுத்துக் கொண்டு நீண்டு வளைந்து சென்றது. இந்த அமானுஷ்யமான இரவில் ஷீலாவுக்குப் பாட்டியிடம் அதைக் கேட்கவேண்டுமென்று தோன்றியது.

“ஏன் பாட்டி மேல்சாதி ஆம்பளைக கீழ்சாதி பொம்பளைங்கள காதலிச்சிருக்காங்களா?”

“அவிங்க எதுக்கு காதல் கீதல்லாம் பண்ணோனும்? அந்தக் காலத்துல அவிய கூப்புட்டா போய்தான ஆகோணும்” பாட்டி குளிர்க்காற்றை ஆழ்ந்து இழுத்தார். முகத்தில் சுருக்கங்களுக்கிடையே தெரிந்த தோலும் ரவிக்கையணியாத கருத்த தோள்பட்டையும் நிலவொளியில் பளபளத்தன.

“ஒண்ணு நடந்திருக்குது” நிலவு குளிரைப் பரப்பிக் கொண்டிருந்த அந்த இரவில் பாட்டி சொன்ன கதை.

“காங்கேயத்துக்குப் பக்கத்தால ஒரு ஊருல ஒரு ராசா இருந்தான். அவம்பண்ணையில ஒரு புள்ள வேல செஞ்சா. அளகுன்னா அளகு அத் அளகு. கருப்பு திராட்சை மாரி கண்ணு. சொளட்டி சொளட்டி பாப்பா. நிமிர் நின்னான்னா எடுப்பான நெஞ்சும், சின்ன இடுப்புமா கோயில் செலதான்.

எப்பப்பாத்தாலு துருதுருன்னு மூஞ்சூறு மாரி ஒரெடத்துல நிக்காம ஓடீட்டேருப்பா. கையில ஒரு கொடம் தண்ணியோட பள்ளத்தை ஒரே தாவ தாண்டிருவா. அத்தினி பலம். ஈட்டி மரம் மாரி ஒடம்பெல்லாம் மினுக்கும். ஏ குதிரைல வந்த ராசா அவளப் பாத்து மயங்கிப் போனான். ரெண்டு பேருக் ஒருத்தர ஒருத்தர் புடிச்சுப் போச்சு. ராசா சேரிக்குப் பக்கத்தால அளகான ஞ கட்டி அவடத்தாலெயே வந்துட்டான். வந்தவன் ராவும் பகலும் அவளே கெத கெடந்தான். ஊரு முச்சூடும் மூக்கில வெரல வெச்சுப் பாத்துச்சு. பாத்துச்சு பாத்துச்சு... அப்புடி பாத்துச்சு. இது அடுக்குமான்னு பண்ணாடிக பயந்து போனாங்கோ.

ஆனா அவளுக்கு ஒரு வெசனுமுமில்ல. தனக்கு ராணியாகறதுக்கு அல்லாத் தகுதியுமு இருக்குதுன்னு நெனச்சா. ஆடிப்பாடி சந்தோசமா இரு ஒருநா மாசமாயிட்டா.

அவள ஆருக்காச்சு கட்டிக் குடுத்து அசலூருக்கு அனுப்ப ராசாவுக்கு புடிக்கல. பொறவு அங்கயுமு எவனாவது ராசா இருப்பானல்லோ. ராசா அரமனைக்குப் போயி கலியாணத்துக்கு ஏற்பாடு பண்ணிபோட்டு வந்து உ கூட்டிட்டு போறேன்னு சொல்லிப்போட்டுப் போனான். அவடத்தால ராசாவே

அப்பனும், ஆத்தாளும், சொந்தபந்தமும் தங்க செலயாட்டா, ஒயிலா இருந்
ஒருத்தியக் காட்டி ராசாவ மயக்கிப் போட்டாங்க. ராசா அவளக் கலியாணம்
மூச்சிட்டு அவடத்தாலையே தங்கிட்டான். அவ வயித்துப் புள்ளையோட வந்
நாயம் கேட்டா. புத்தி மாறிப்போன ராசாவும், சொந்தக்காரங்களும் அவளய
அவ குடும்பத்தையும் ஊரவிட்டே தொரத்திபோட்டாங்க. அவ ஒரு அளகா
பையனப் பெத்தெடுத்தா. அப்பனக் கொன்னு பளிதீக்கப் பொறந்தவன்னு
சொல்லியே அவன வளத்தா. பையனுக்கு பதினாறு வயசாச்சு. ராசா ஒவ்வெ
வருசமும் தைப்பூசத்துக்கு பழனிக்கு வருவான். கிரிவலம் போயி சேவிச்சிட்
ஊரு திரும்புவான். அப்புடி ஒருக்கா வந்தப்போ இந்தப் பையன் எங்கிருந்
வந்து ராசாகூட சேந்திட்டான்.

ராசாவுக்கு அந்தப் பையனப் பாத்தொடனே புடிச்சுபோச்சு. பரபரன்னு
அலபாயர கண்ணோட வலுவா வாளிப்பா தன்னோட ஒசரத்துக்கு நின்ன அ
பாத்தப்போ ராசாவுக்கு ஆரோ நாபகம் வந்துச்சு. ஆனா வெளிய காட்டிக்க
பையனக் கூட்டிட்டு கிரிவலம் போனான். படிக்கட்டுக்கு முன்னாடி நின்னு க
மூடி சாமி கும்புட்டான். அவங்கண்ணுல அவளோட உருவம் தோணுச்சு. அ
எங்கிருக்கா? என்ன கொளந்த பொறந்திருக்கும்னு நெனச்சா. அவனுக்கு
நெஞ்சு வலிச்சுது. அவ தன்னைய மன்னிப்பாளான்னு நெனச்சான். இத்தன
வருசமா அவ வந்து பாக்கவேயில்ல. கெஞ்சவேயில்லேங்கற நெனப்பு வந்த
அவ தன்ன மன்னிக்கல, இனிமேலுமு மன்னிக்கவே மாட்டான்னு தோணுச்

ஏதோ நெனப்புலருந்த ராசா சரக்குன்னு சத்தங்கேட்டு முழிச்சான்.
முன்னால மகன் நிக்கிறான். கையில நாலடி நீள வீச்சருவா.

“உனக்கு மன்னிப்பே கெடையாதுடா”ன்னான் மகன். ஒரே வீச்சு. அ
கைய நீட்டி தடுக்கப் பாத்தான். பதினாறு வருசமா அம்மாளும் மவனும் அ
வெச்சிருந்த கோவம். கையோட தலயும் சேந்து துண்டாச்சு.

ராசாவோட ரத்தம் பீச்சியடிச்ச எடத்துல இருந்தெல்லாம் பாம்பும்,
தேளும், பேயும், பிசாசுமா கெளம்பி வந்துச்சு. ராசா மகன் வீச்சருவாளால
எதித்தாப்பல வாறதெல்லாத்தையும் வெட்டி சாய்க்கறான். ஒரு பாம்புல இ
பத்து பாம்பு எந்திரிச்சு வருது. ஒரு தேளுல இருந்து பத்து பத்து தேளு வ
வருது. பிசாசோட தலய வெட்டவெட்ட மொளச்சு வருது.

அவன் அசரல. வெட்டறான் வெட்டறான். வெட்டித் தள்ளிட்டே

இருக்கறான். அப்பனோட ரத்தம் பட்ட புல்லுல இருந்தெல்லாம் வாளு மெ வந்துச்சு. ஒரு வாளப் புடுங்கி ரெண்டு கைலயும் வெட்டறான். சக்கர சுத்தறான். பிசாசும், பாம்பும் அவம்மேல பாஞ்சுக் கொதறுது. அவன் சொளண்டு சொளண்டு வெட்டறான். காத்து சுத்துது. மண்ணு சுத்துது. வெட்டுப்பட்ட தலைக, முண்டங்க சொளண்டு சொளண்டு வருது. ரத்தம் செம்பூவா காத்துல பறக்குது. அவனுக்கு ராவு பகல் தெரியல. பசி தூக்கம் தெரியல. தன்னோட ரத்தம், பூத கணங்களோட ரத்தம் எதுக்கும் வித்தியா தெரியல.

சிவன்மலைக்கு அந்தப்பக்கம் சொளண்டு அடிக்குமே காத்து... அதுக்குள்ளார... வெட்டார வெளில திடீர்னு எந்திரிச்சு நிக்குமே தீக்கங்கு... அதுக்குள்ளார... ஆடிமாசம் புளுதிய வாரித் தூத்தி கண்ணு மூக்கெல்லா தொறக்கவிடாம செய்யுமே காத்து... அதுக்குள்ளார... இந்த சண்ட இன்னு நடந்துட்டிருக்குது. தீராம...

“ஆமாம். அந்த பாஸ்கரும் உடன் ஒரு பெண்ணும் வந்திருந்தனர். பாஸ்கர் நம்ம தோழர்தான்” என்றார் எம்பவர் அமைப்பின் இயக்குநர் கே சாமி. சிலவிநாடி அமைதியிலும் சிறிய கண்களைச் சுருக்கியதிலும் ஒரு ஆழ்ந்த வருத்தத்தை உணர முடிந்தது. இயக்குநருக்கு வயது நாற்பது இருக்கலாம். வெள்ளைச் சட்டையும் கருப்பு பேண்ட்டும் அணிந்திருந்தார். எழுந்து நின்றபோது உயரம் தெரிந்தது.

“தோழரா?” ஷீலா தனது வழக்கப்படி ஒவ்வொரு சொல்லாக அழுத்தி உச்சரித்துக் கேட்டாள். தோழர் என்ற சொல் தன்னார்வத் தொண்டு நிறுவன வட்டாரங்களில் புழக்கத்தில் இருப்பதுதான். ஆனால் இவ்வளவு அப்பட்டமாக கட்டைப் பஞ்சாயத்து என்று குற்றம் சுமத்தப்பட்ட ஒருவனைத் தோழர் என்று உரிமை கொண்டாடுவது ஆச்சரியமாக இருந்தது.

எம்பவர் அமைப்பின் அலுவலகம் மிக எளிமையாக ஆனால் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டதாக இருந்தது. கிராமத்து வீடுகள் போல முன்னால் ஒரு முற்றம். அதைச் சுற்றிலும் ப வடிவத்தில் மங்களூர் ஓடு போடப்பட்ட அறைகள் அமைந்திருந்தன. முற்றத்தில் ஒரு அமைதி தவழும் புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்தது. இயக்குநர் அறை மகிழமரத்தோரம் இருந்தது. இயக்குநரின் மேசைக்குப் பின்னே அம்பேத்கர் தொகுப்பு நூல்களும் ஏராளமான சுற்றுச்சூழல் மற்றும் கல்வி தொடர்பான நூல்களும் இதழ்களும் கையேடுகளும் ஒரு அலமாரியில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஏராளமான ஸ்பைரல் பைண்டிங் செய்யப்பட்ட பைல்கள் லேப்டின் மேலே கிடந்தன. ஷீலாவின் கேள்வியை அவர் வேறுவிதமாகப் புரிந்துகொண்டார்.

“நான் ராமகிருஷ்ணன் அண்ணன் தி.க.ல இருந்தேன். எல்லா அமைப்புத் தோழர்களும் வருவாங்க” என்றார். ஒரு அமைப்பின் இயக்குநர் என்பதைவிட அவர் இன்னும் தி.க செயல்பாட்டாளராகத்தான் இருக்கிறார் என்று ஷீலா நினைத்துக்கொண்டாள்.

பாஸ்கரைப் பற்றி எந்தத் தயக்கமும் இல்லாமல் பேசத்

தொடங்கினார்.

“ரொம்ப நல்ல தோழர்” என்றார்.

“பாஸ்கரோடு சேர்ந்து நிறைய வேலை செய்திருக்கிறோம். ஒருமுறை இலுப்பப்பாளையத்திலுள்ள ஒரு மில்லிலிருந்து 41 பெண்களை மீட்டோம். ஆர்.டி.ஓ-கிட்ட ரிலீஸ் சர்டிபிகேட் வாங்கி பொண்ணுகளை ஊருக்கு அனுப்புற வரைக்கும் பாஸ்கரும் அவரோட தோழர்களும் கூடவே இருந்தாங்க. அப்படி மீட்கப்பட்ட ஒரு பொண்ணோட அம்மாகூடதான் இங்க வந்திருந்தார்”

“பாஸ்கர் உங்க அமைப்பில் வேலை செய்தாரா?” ஷீலா கேட்டாலும் கூட ஏனோ பாஸ்கர் அப்படி வேலைக்கெல்லாம் இருந்திருக்க மாட்டான் என்று நிச்சயமாகத் தோன்றியது.

“இல்லை” யோசனையுடன் தலையசைத்தார் கே.சாமி. அவர் மேற்கொண்டு அது குறித்து ஏதோ பேசத் தயாராவதை உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆனால் அதைப் பின்பு பேசிக் கொள்ளலாம் என்று ஷீலா முடிவு செய்து பேச்சை தனது உடனடி ஆர்வத்துக்குரிய விஷயத்தை நோக்கித்திருப்பினாள்.

“கடைசியா உங்களைப் பார்க்க ஒரு அம்மாவைக் கூட்டிட்டு பாஸ்கர் வந்திருந்தாரா சார்?”

“ஆமாம். அவங்க பேரு...” இயக்குநர் நினைவு அடுக்குகளில் அந்தப் பெண்ணின் முகத்தையும் பெயரையும் துழாவினார்.

“அமராவதி?”

“ஆமாம். அமராவதி. அந்தம்மாவோட பொண்ணு பொள்ளாச்சி கிட்ட ஒரு மில்லுல சுமங்கலி திட்டம் மாதிரி ஒரு திட்டத்துல இருக்குது. கஷ்டப்படுது. காப்பாத்துங்கன்னு சொல்லுச்சு. அது நாங்க ஏற்கனவே மீட்டு அனுப்புன பொண்ணுதான். செஞ்சுடலாம். முதல் கட்டமா போலீஸ்ல இல்லாட்டி கலெக்டர் கிட்ட புகார் கொடுக்கலாம்ன்னு சொன்னேன். அந்தம்மா ஒத்துக்க மாட்டேன்னு சொல்லிடுச்சு. ஏற்கனவே மில்லுல இருந்து ரெய்ட்ல வெளிய வந்ததால ரொம்ப மிரட்டி விட்டிருப்பாங்க போலிருக்கு. புகார்ன்னு போனா பொண்ண ஏதாவது

பண்ணிடுவாங்கன்னு பயந்துருச்சு. எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். மாட்டவே மாட்டேன்னுடுச்சு"

"அப்புறம் எதுக்கு உங்க கிட்ட வந்துச்சு?"

"ஏதாவது பஞ்சாயத்துப் பேசி பொண்ண வெளிய கூட்டிட்டு வர முடியுமான்னு கேட்டுச்சு. சரி அந்த ஏரியால தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களான்னு பார்க்கறேன். முடிஞ்சதைத் செய்யறேன்னு சொன்னேன்"

"அதுக்கு பாஸ்கர் என்ன சொன்னார்?"

"பாஸ்கருக்கு சரியான கோபம். பாதிக்கப்பட்டிருக்கற எல்லாப் பொண்ணுகளையும் மீட்கணுங்கறதுதான் அவரோட விருப்பம். வெளிப்படையா ஒண்ணும் சொல்லலை. ஆனா அந்தப் பொண்ணைக் காண்டாக்ட் செய்ய பாஸ்கர் ஏதாவது முயற்சி செஞ்சிருக்கலாம். அதுலதான்..." அவர் வருத்தத்துடன் மேசையிலிருந்த டேபிள் வெயிட்டை உருட்டினார்.

"நீங்க பாஸ்கர் சாவுக்கு மில்லுக்காரங்க காரணமா இருக்கலாம்ன்னு நெனைக்கிறீங்களா சார்?"

"அந்தப் பொண்ணு வேலை செய்யற மில்லுகிட்ட இவர் செத்துக் கிடந்திருக்கார். அந்தப் பொண்ணை மில்லுல இருந்து வெளீய எடுக்க முயற்சி செஞ்சிருக்கார். அப்படியொரு வாய்ப்பு இருக்குதானே. நானே பாஸ்கர் கேஸ்ல மறு விசாரணை கேட்டு ரிட்டு போடலாம்னு தோழர்கள் கிட்ட சொல்லிட்டிருக்கேன்"

"பாஸ்கர் சாதி ஒழிப்புப் போராளிதானே? இந்த மில் விவகாரத்துல அவருக்கு என்ன அக்கறை?"

"ரெண்டும் ஒண்ணுதான்னு அவரு நெனைச்சாரு. கிராமத்துல விவசாயம் அழிஞ்சதும் ஒரு புதுவிதமான அடிமைத்தனம் வந்துட்டு இருக்குன்னு சொல்வார். நிலங்களில் பண்ணயத்துக்கு இருந்த தலித்துகள் இந்தப் புதுவிதமான ஆலைகளில் கொத்தடிமைகளாக மாற்றப்படுகின்றனர். எங்க அப்பன் தாத்தன் கோவணத்தைக் கட்டிட்டு அவங்க காடு தோட்டத்துல வேல செஞ்சாங்க. இப்ப நாங்க பேண்ட்

சட்டை போட்டுட்டு அவங்க மில்லுல வேல பாக்கறோம். வேற வித்தியாசம் இல்லைன்னு சொல்லுவார். நெலமா இருந்தாலும் சரி தொழிலா இருந்தாலும் சரி ஆதிக்கம் இருந்தா அடிமைத்தனமும் இருக்கும்ன்னு சொல்லுவார். அதனால இந்த மில்லு வேலையை அடிமைத்தனம் இல்லாததா, உரிமைகள் உள்ளதா மாத்தினா தலித்துகள் திரும்பவும் இன்னொருவிதமான கொத்தடிமை முறைக்குள் போவதைத் தடுக்க முடியும், புதிதாக கிராமப்புறங்களைக் கட்டுப்படுத்தி வரும் ஆலை நிர்வாகங்களின் ஆதிக்கத்தைக் குறைத்தால் சாதி ஆதிக்கமும் குறையும்ன்னு நினைச்சார்”

“அப்ப உங்க அமைப்புல வேலை செஞ்சிருக்கலாமே?”

“இதுக்கு கொஞ்சம் விரிவா பதில் சொல்லணும்” என்றார் அவர்.

“சொல்லுங்க சார்” ஷீலாவுக்கு அவரது பேச்சில் ஆர்வம் வந்து விட்டது.

“நாங்க எவ்ரி சைல்டு என்ற குழந்தைகள் நலனுக்கான திட்டத்தில் திருப்பூர் ஈரோடு கிராமப் பகுதிகளுக்குப் போனபோது நிறையப் பெண்கள் தங்கல் வேலைக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள். நாங்க அதுபற்றி ஒரு ஆய்வு செய்தோம். வறுமை, பள்ளியில் 9-வது வகுப்பில் பெயில் ஆவது, உடைந்த குடும்பம், அப்பா குடி போன்ற காரணங்களால் பெண்குழந்தைகள் இந்த வேலைக்குப் போகின்றனர். ஏஜெண்டுகள் இவர்களைக் கண்டுபிடித்து ஆசைகாட்டி வேலைக்கு அழைத்துச் செல்கின்றனர். மிகக் கடுமையான வேலை. ஆனால் கணக்குப் போட்டால் ஒருநாளைக்கு சம்பளம் 100-லிருந்து 200 ரூபாய்க்குள்தான் வரும். அதையும் மூன்று வருடம் முடிந்த பின்புதான் தருவார்கள். சில மில்களில் அட்வான்ஸ் கொடுத்து வேலைக்கு அழைத்து வருகிறார்கள். ஒருமாதத்துக்கு ஒருமுறைதான் மில்லை விட்டு வெளியே வார்டன் பாதுகாப்பில் செல்ல முடியும். ஆறுமாதத்துக்கு ஒருமுறைதான் வீட்டுக்குப் போக முடியும். இடையில் போகவே முடியாது. இந்தியா முழுவதும் அப்ரண்டிஸ் என்பது ஒருவருடம்தான். அதன் பின்பு வேலை செய்பவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். பயிற்சி பெற்ற தொழிலாளிக்கான ஊதியம் தர வேண்டும். ஆனால் எல்லாவிதிகளுக்கும்

மாறாக நீதி நியாயங்களுக்கும் மாறாக தமிழ்நாட்டில் மட்டும் ஒருவரை மூன்று வருடம் அப்ரண்டிசாக, தொழில் பழகுநராக வைத்திருக்கலாம் என்பது நடைமுறையில் இருக்கிறது. இந்தப் பெண்களை தொழில் பழகுநர்கள் என்கின்றனர். ஆனால் நன்கு தொழில் தெரிந்தவர்கள் செய்யும் எல்லா வேலைகளையும் இவர்கள் செய்கின்றனர். ஒரு மில்லில் எப்படி எல்லோருமே தொழில் பழகுநர்களாக இருக்க முடியும்?

தொழில் பழகுநருக்குச் சட்டப்படியான சலுகைகள் கிடையாது. ஈ.எஸ்.ஐ, பி.எஃப், கிராஜுவிட்டி, லீவு, மினிமம் சம்பளம், போனஸ் எதுவும் கிடையாது. பெண் வார்டன்கள் பெரும்பாலும் இருப்பதில்லை. பாலியல் தொல்லைகள், மோசமான தொழில் சூழலால் உடல்நலக் கோளாறுகள் என்று பல பிரச்சினைகள்.

நாங்கள் அரசை வற்புறுத்தி சிலரை மீட்போம். வெளிநாட்டு வாடிக்கையாளர்களை வற்புறுத்தி இங்கே மில்களை ரெய்டு செய்வோம். தணிக்கை செய்வோம். கத்திக் கத்தி இப்பெல்லாம் கொஞ்ச மில்லுல உள்ளயே விளையாட, படிக்க ஏற்பாடு செய்து குடுத்திருக்காங்க. இப்படித்தான் மாற்ற வேண்டும். பாஸ்கருக்கு இந்த முறை ஒத்து வரவில்லை.

கம்பெனியை இழுத்து மூட வேண்டும் என்று பாஸ்கர் சொல்வார்.

நானூரு மில் இருக்கு. அதுல 25 மில்லுலதான் ஓராளவு உரிமைகள் இருக்கும். நீங்க எப்ப ஒவ்வொரு மில்லா ரெய்டு பண்ணி பிரச்சினையைத் தீக்கப் போறீங்கன்னு கேட்டார். நீங்க என்னசெய்யப் போறீங்கன்னு கேட்டேன். மில்லுல இந்தமாதிரி பெண்களை வேலைக்கு வைப்பதையே தடைசெய்ய வேண்டும். அவருக்கும் என்ன செய்யறதுன்னு சரியாத் தெரியல. ஆனா என்னென்னவோ செய்ய முயற்சி செஞ்சார். ஒருவேளை உயிரோடு இன்னும் கொஞ்ச வருஷம் இருந்திருந்தா ஏதாவது செஞ்சிருக்கலாம்”

“அவர் நினைச்சது தப்புன்னு நெனைக்கறீங்களா?”

“ஆசைப்படறது தப்பில்ல. ஆனால் நடைமுறை சாத்தியமான்னு

பாக்கணும். உலகச் சந்தைல டெக்ஸ்டைல் துறைல இருக்கற போட்டில நிக்கறதுக்காகத்தான் தொழிலாளியோட கூலியைக் குறைக்கறாங்க. எங்கெங்க எல்லாம் குறைவான கூலிக்கு ஆட்கள் கிடைக்குமோ அங்கிருந்தெல்லாம் ஆட்களை இங்கே கொண்டு வந்து குவிக்கறாங்க. மொதல்ல கோவை திருப்பூர், அப்புறம், மதுரை ராமநாதபுரம், இப்ப ஜார்கண்ட் பிஹார், பெங்கால்... இதெல்லாம் அரசுக்குத் தெரியாதுன்னு நெனைக்கறீங்களா? தெரிஞ்சுதான் நடக்குது. அப்ப மெதுவா போராடித்தான் சாதிக்க முடியும். தொழிற்சங்கம் கட்டலாம். யார் கட்டறது?"

இயக்குநர் சட்டென்று நிறுத்திக் கொண்டார். ஷீலாவுக்கும் இளங்கோவுக்கும் என்ன பேசுவதென்று தெரியவில்லை. பாஸ்கர் மட்டுமே இதற்குப் பதில் சொல்லியிருக்க முடியும் என்று தோன்றியது. அவன்தான் இல்லையே.

"நீங்க டெமோகிராபிக் டிவிடெண்ட்ன்னு கேள்விப்பட்டிருக்கீங்களா?" இயக்குநர்தான் மௌனத்தைக் கலைத்தார்.

"ஆமாம்". இருவரும் தலையசைத்தனர். டெமோகிராபிக் டிவிடெண்ட் என்றால் மக்கள் தொகையில் இளைஞர்கள், உழைக்கக் கூடியவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பது. உழைப்பவர்கள் அதிகமாகவும் அவர்களைச் சார்ந்து இருப்பவர்கள் குறைவாகவும் இருப்பதை வரப்பிரசாதமாக உலகநாடுகள் கருதுகின்றன. இந்தியாவில் இப்போது இளைஞர்கள் தொகை அதிகமாக உள்ளது. அதாவது டெமாகிராபிக் டிவிடெண்ட். இந்த நிலை இன்னும் இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்கு இருக்கும் என்று மதிப்பிடுகிறார்கள்.

"இந்தியாவில் இப்போது இளைஞர்கள் அதிகம். ஆனால் அவர்களின் உழைப்பை பயன்படுத்திக்கொள்ள அரசிடம் எந்தத் திட்டமும் தயாரிப்பும் இல்லை. தொழிற்கல்வி அளிக்க ஏற்பாடுகள் இல்லை. எனவே எந்த தொழிற் பயிற்சியும் இல்லாத கிராமப்புற இளைஞர்கள் வேலை தேடி நகரங்களுக்கு வருகிறார்கள். அங்கே மாபெரும் சுரண்டல் நிறுவனங்களில் உறிஞ்சிக் கொள்ளப்படுகிறார்கள். இதைத்தடுத்தால் அரசு அவர்களுக்கு வேறு வேலை தரவேண்டும். இல்லாவிட்டால் பட்டினி பெரும்

சிக்கல்களையும் சமூக அமைதியின்மையையும் ஏற்படுத்தும். குறைந்த கூலிக்கு ஆட்கள் கிடைப்பதைத் தடைசெய்தால் அதனால் நட்டமடைய உள்ள முதலாளிகளுக்கு வேறு சலுகைகள் அளிக்க வேண்டும். பஞ்சம் பசி விவசாய வீழ்ச்சி தவிர இப்படியொரு காரணமும் இருக்கிறது" என்றார் இயக்குநர்.

முதலில் தோன்றியதைப் போல இயக்குநர் தி.க சிந்தனை கொண்டவர் மட்டுமல்ல, என்.ஜி.ஒ அறிவுஜீவியாகவும் இருக்கிறார் என்று ஷீலா நினைத்துக் கொண்டாள்.

கோவையில் ஓட்டல்கள் சுத்தமாக விசாலமாக இருக்கும். சென்னை மதுரை அளவுக்கு கோவை திருச்சியில் ஓட்டல்களில் நெரிசல் இருக்காது. இளங்கோ காலையுணவுக்கு ஷீலாவை அன்னபூர்ணா அழைத்து வந்திருந்தான்.

"ஷீலா மேடம் என்ன நினைக்கிறீங்க? வெள்ளிங்கிரியைத் தவிர அமுதா வேலை செய்த மில்லுக்காரங்க இதுல சம்பந்தப்பட்டிருக்காங்கன்னு நினைக்கறீங்களா?"

ஒருவர் மேல் சந்தேகம் என்று சொல்லுமளவுக்கு தனக்கு இந்த வழக்கில் முக்கியத்துவம் இருக்கிறதா? தனது வேலை என்ன என்பதில் ஷீலாவுக்குச் சந்தேகம் இருந்தது. ஆனால் பாஸ்கர் அவளது அன்புக்கு உரியவனாகி விட்டான். அழகன், வீரன், புத்திசாலி, கலகக்காரன்... பாஸ்கருக்குத் தான் செய்ய வேண்டிய கடமை ஏதோ இருக்கிறதென்று அவளுக்குத் தோன்றிக்கொண்டே இருந்தது.

"இந்தக் கொலையை கௌரவக் கொலை. ஈகோவால வந்த கொலைன்னு முடிச்சா யாருக்கும் பிரச்சினை இல்லை. வெள்ளிங்கிரி கூட பெரிய தலைவனயிடுவான். ஆனா அமுதா? அமுதா ஏன் பாஸ்கர்கிட்ட பேச விரும்பினாள்? அது இன்னும் தெரியலையே. மில்லையும் வெள்ளிங்கிரியையும் இன்னும் இணைக்க முடியலையே"

"பாஸ்கர் மில்லுல நடக்கற அட்டூழியத்தை அம்பலப் படுத்திடுவான்னு..." என்ற இளங்கோ சற்று சிந்தித்து "இது எப்படி மில்லுக்காரங்களுக்குத் தெரியும்" என்றான்.

“இது ஒரு விஷயமா? அமராவதியக் கூட்டிட்டு கோவைல திரிஞ்சதே அவங்களுக்குத் தெரிஞ்சிருச்சு. அந்தம்மாவோட பாஸ்கர் ஊர்ல அங்கே இங்க பேசாமயா இருந்திருப்பான். அப்புறம் அமுதாவைக் காண்டாக்ட் செய்ய முயற்சி செய்திருக்கிறான் இல்லையா? அமுதா மூலமாகக் கூடத் தெரிஞ்சிருக்கலாம்”

“மை குட்னஸ். அப்ப வெள்ளிங்கிரி மட்டும் இல்லைங்கறீங்களா?”

“அப்படித்தான் தோணுது...”

“மனோகரன்?”

“மனோகரனே நேர வரணும்னு என்ன? ஆட்சேபணை இல்லேன்னு ஒரு சிக்னல் காட்டியிருக்கலாம். இல்லாட்டி விஷயம் தெரிஞ்சு கண்டும் காணாம இருந்திருக்கலாம்”

13

காமாட்சிபுரம் காவல்நிலையம் உண்மையறியும் குழுவோடு நினைத்தற்கு மேல் நட்புரிமையுடன் பழகியது. போலீசின் பார்வை திட்டவட்டமாக இருந்தது.

பாஸ்கர் அமுதாவைச் சுற்றிச் சுற்றி வந்திருக்கிறான். அதைத் தடுக்க முயன்ற சென்ராயனையும், வெள்ளிங்கிரியும் தாக்கியிருக்கிறான். அதனால் இவர்களுக்கும் பாஸ்கருக்கும் முன்விரோதம் இருந்திருக்கிறது. தங்கள் சங்கத்தின் நன்மைக்காகவும் பழி தீர்க்கவும் பாஸ்கரைக் கொல்லவேண்டும் என்ற ஆலோசனை தலைவர் மனோகரனின் வீட்டில் நடந்திருக்கிறது. இந்த நேரம் பாஸ்கர் அமுதாவைப் பார்க்க பொள்ளாச்சி வந்திருக்கிறான். பின்தொடர்ந்து வந்த வெள்ளிங்கிரி, குபேந்திரன், சென்ராயன் போன்ற எதிரிகள் பாஸ்கரை மரக்கட்டையாலும் தறிக்கட்டையாலும் அடித்துக் கொன்று விட்டு ஓடிவிட்டனர். பாஸ்கரின் செல் வெள்ளிங்கிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

வழக்கில் எல்லா எதிரிகளும் கைது செய்யப்பட்டு விட்டனர். குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்ய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

நீங்கள் எல்லாம் சண்டை போட்டதால் வழக்கு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் மீதான வழக்காக மாற்றப்பட்டுள்ளது. எனவே இப்போது டி.எஸ்.பிதான் விசாரணை அதிகாரி. விரும்பினால் விசாரணை அதிகாரியான டி.எஸ்.பிஜப் பார்க்கலாம்.

“ஏதோ மில்லுக்காரங்களும் இதில சம்பந்தப் பட்டிருக்காங்க. அவங்க அமுதாவக் கொடுமைப் படுத்தினாங்க. அதைத் தடுக்க முயற்சி செஞ்சதாலதான் பாஸ்கரைக் கொன்னுட்டாங்கன்னு சொல்றாங்களே?” சுமதி நேரடியாகக் கேட்டார்.

“ஆனா அமுதா அப்படிச் சொல்லலியே?” அன்புசேகர் மொத்தமாக எல்லோர் முகங்களையும் பார்த்து புன்முறுவலோடு பதிலளித்தார்.

ஷீலாவுக்குச் சுருக்கென்றிருந்தது. தங்களுக்குத்தான் அமுதா விவகாரம் ரகசியம். மர்மம். இவர்களுக்கு எல்லாமே தெரியும்.

“நாங்க அமுதாவப் பாக்கலாமா?”

அன்புசேகர் திரும்பவும் மெல்லச் சிரித்தார். “உங்கள மாதிரி லாயர்ஸ், ஆக்டிவிஸ்ட்ஸ் சாட்சிகளைப் பார்க்கறத போலீஸ் விரும்பறதில்ல. ஆனால் நீங்க பாக்கறத எப்படித் தடுக்க முடியும்?”

அமுதா தெளிவாக திட்டவட்டமாக ‘தனக்கும் பாஸ்கருக்கும் காதல் இல்லை’ என்று சொன்னாள். ‘தான் பாஸ்கரை இங்கே அழைக்கவே இல்லை. அதற்கான தேவையும் இல்லை. பாஸ்கர் தன்னைப் பார்க்க இங்கே வந்தானா என்பது தனக்குத் தெரியாது. தன்னை மில்லில் நன்றாக நடத்துகிறார்கள் என்றும் ஒரு பிரச்சினையும் இல்லை என்றும்’ அடித்துக் கூறினாள்.

சுமதி “உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது? யாருக்கும் பயப்படாதே” என்று கூடச் சொல்லிப் பார்த்தார்.

அமுதா அசையவில்லை.

“தேர் எண்ட்ஸ் த மேட்டர் (அவ்வளவுதான் முடிந்தது)” என்றான் ரமேஷ்குமார்.

14

பூரணிக்கு விழிப்பு வந்தபோது செல் பனிரெண்டு இருபது என்று காட்டியது. தொலைவில் விரையும் லாரிகளின் ஓசைகூட நின்றுவிட்டது. விழிப்பு வந்துவிட்டால் அப்புறம் தூக்கம் வருவதில்லை. இப்போது பரந்து விரிந்த இருட்காட்டின் நடுவே ஒரு வெளிச்சப் பொட்டுபோலிருக்கும் அந்த வீட்டில் இருளைக் கண்டு அவள் பயந்து நடுங்குகிறாள். இருட்டு மூலைகளில் ஏதோ ஒரு உருவம் நடந்து போவது போலிருக்கிறது. ஜன்னலுக்கு வெளியே மையால் பூசப்பட்டது போலிருக்கும் இருளில் மறைந்திருக்கும் உருவம் 'வா' என்று அழைப்பது போலிருக்கிறது. வெளியே வேலைக்காரர்கள் இருந்தாலும், பக்கத்து அறையில் அம்மாவும், மாமியாரும், மகளும் படுத்திருந்தாலும் அவள் விளக்கணைத்துவிட்டுத் தூங்குவதில்லை.

மனோகரன் சிறைக்குப் போனதிலிருந்து அம்மா வீட்டுக்கு வந்து தங்கியிருக்கிறாள். மகள் இரண்டு பாட்டிகளுக்கும் நடுவே நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கியவளை வெளியே மண்டிக்கிடந்த இருளோடு இருளாக கரைந்து பரவி நின்ற அந்த உருவம் ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது.

அது கொல்லப்பட்டவனின் ஆவி அல்ல. ஒரு பெண்ணுருவம். சுமார் முப்பது வயதிருக்கலாம். பெரிய பொட்டு. மைதீட்டிய கண்கள். நல்ல உயரம். அதற்கேற்ற உடல்வாகு. அவள் எப்போதும் கருநீலச்சேலை உடுத்தியிருப்பது போலவே பூரணிக்குத் தோன்றும். ஒரு உணர்வுக்குத் தன்னால் எப்படி இப்படி ஒரு உருவத்தை வழங்க முடிகிறது என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. பூரணி சட்டென்று செல்லை எடுத்துக்கொண்டாள். பின் வாயிற் கதவைத் திறந்து யாரும் அறியாமல் கருவேலங்காட்டை நோக்கி விடுவிடுவென நடக்கத் தொடங்கினாள். மனோகரனின் நிலத்தின் எல்லையில் இடுப்புயரத்திற்கு ஓடைக் கற்களைக் கொண்டு எழுப்பப்பட்ட ஒரு சுவர் இருந்தது. அதையடுத்திருந்த கருவேலங்காட்டில் ஒரு சிதிலமான மேடை இருளில் மங்கலான வெண்மை நிறத்தில் தெரிந்தது. பூரணி அதன்மீது சட்டென்று

தலைவைத்துப் படுத்துக்கொண்டாள்.

எத்தனையோ காலத்திற்கு முன்பு இந்த ஓடைக்கல் சுவர்களின்மேல் வேய்ந்த சின்னஞ்சிறிய குடிசைகள் இருந்தன. அதில் இருபது முப்பது கிராமங்களைக் கட்டியாண்ட ஒரு ஜமீன்தாரின் பண்ணையத்திலிருந்த மாத குடியிருந்தனர். ஒருநாள் இங்கிருந்து சந்தைக்குச் சென்ற ஒருவனோடு அவள் வந்தாள். நெகுநெகுவென்று உயரம். ஒரு கைப்பிடியில் அடங்கிவிடக்கூடிய சின்ன இடை. நீலச் சேலையால் முகத்தை மறைத்துக்கொண்டிருந்தாள். வெளியே தெரிந்த கண்கள் கடல் போலப் பெரியவையாகவிருந்தன. மிரட்சியும் ஆச்சரியமுமாக அவை சுழன்று சுழன் விழித்தன. அவளது தந்தம் போன்ற கரங்களையும், சிற்பம் போன்ற உடலமைப்பையும் பார்த்து ஊர்க்கார ஆத்தாக்கள் இவள் நாட்டியக்காரியா இருக்க வேண்டும் என்று கிசுகிசுத்துக் கோண்டார்கள்.

அவள் தைரியம் வந்து முக்காட்டை விலக்கினாள். அழகென்றால் அ அப்படி ஒரு அழகு. பனியில் நனைந்த பூப்போன்ற முகம் மனதை அள்ளியது... யாராலும் அவள் மேல் வைத்த கண்களை அகற்ற முடியவில் அவள் யார் எவர் என்று யாருக்கும் தெரியவில்லை. அவளும் சொல்லவில் ஊர் பயந்து போனது. யாரோ பெரிய மனுசனின் மனைவி, வைப்பு, மகள் பலவிதமான சந்தேகங்கள் பேசப்பட்டன. அவள் தான் கேரளத்திலிருந்து ர வந்த போது தெரியாமல் இறங்கி வழிதவறி விட்டதாகச் சாதித்தாள். ஆனா திரும்பிப் போக விருப்பமே காட்டவில்லை. ஊரோடு ஒன்றிப் போய்விட்டா

யாருக்கும் அவள் சொன்ன ரயில் கதையில் நம்பிக்கையில்லை. வழி வந்தால் திரும்ப ஊருக்குப் போகும் ஆசை வராதா? ஏன் இப்படி இங்கே இருக்க வேண்டும்? சரி. யாரும் அதற்குமேல் யோசிக்க வில்லை. எல்லோருக்கும் இருந்த ஒரே பயம் அவள் ஜமீந்தாரின் கண்களிலோ, உள் பெரியதனக்காரனின் கண்களிலோ பட்டுவிடக்கூடாதே என்பதுதான்! அவளு அதற்குத் தகுந்தாற்போல அந்தச் சேரியை விட்டு வெளியே போகமாட்டாள் இரவுகளில் அவள் ஊரெல்லையில் நின்று விண்மீன்கள் ஒளிரும் வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை சிலர் பார்த்திருக்கின்ற அப்போது அவள் ஏதோ ஒரு இனிமையான பாடலை முணுமுணுப்பதையும் கேட்டிருக்கிறார்கள். எப்போதும் சோகம் ததும்பும் இனிய கீதம்தான் அவள்

வாயிலிருந்து வெளிவரும். அது இந்தப்பக்கத்து கூத்தோ, கும்மியோ இல்ல வேறேதோ பாட்டு.

மயிலம்மா கிழவி அந்தப் பாட்டைக் கேட்டுவிட்டு இவ அரமணைப் பொண்ணுதான் என்று அடித்துச் சொன்னாள். மகளாக இருந்திருந்தால் ஊ கேளு நாடே கேளு என்றாகியிருக்கும். மனைவியாக இருந்திருந்தாலும் அப்படித்தான். இவள் ஆசை நாயகியாக இருந்திருக்க வேண்டும். எதனாே ஒடி வந்து விட்டாள் போலிருக்கிறது.

அவளை அழைத்து வந்த மாறன் ஒரு மம்முதன். எதையும் சொந்தம யோசிக்கத் தெரியாது. என்ன சொன்னாலும் நம்புவான். அவன் அவளிடம் மயங்கிக் கிடந்தான். அவளும் அவனுக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. வகைவகையாகச் சமைத்துப் போடுவாள்... அவனை உட்கார வைத்துக் குளிப்பாட்டுவாள். குடிசையை அப்படியொரு சுத்தமாக வைத்துக் கொள்வாள். ஒரு ஆளை நெருங்க விடாமல் நெருப்பாக இருப்பா

ஒருநாள் நள்ளிரவில் எதனாலோ உறக்கம் கலைந்து மாறன் எழுந்து பார்க்கிறான். அவளுக்குப் பதில் கோரமான ஒரு உருவம் உட்கார்ந்திருக் கோரைப் பற்களும் சிவந்த கண்களுமாக கோரம் என்றால் கோரம் அப்படி கோரம். அதன் கால்களிலிருந்து தீ கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறதாம். அதில் உலை கொதித்துக் கொண்டிருந்தாம். மாறன் சப்த நாடியும் ஒடுங்கிப் போனான். இத்தனை நாள் தன்னோடு வாழ்ந்திருந் பேயா? இவன் உடலில் அசைவு தெரிந்ததும் அவள் சட்டென்று கோர ரூப மாற்றி பழைய மோகினியானாள். மாறன் காலையில் வெளியே சென்று ஊ இரவு தான் பார்த்ததைக் கிசுகிசுத்தான்.

மறுநாள் ஊர்க்காரர்கள் பஞ்சம் வரப் போகிறது. ராகியைப் போட்டுவ குழி வெட்டவேண்டும் என்றார்கள்.

எல்லோரும் முறை வைத்துக் குழி வெட்டினார்கள். அவள் முறை வந்தபோது குழி ஆளை மூடும் அளவிற்கு ஆழமாகி விட்டது. அவள் முை முனைந்து வேலை செய்து குழியை இன்னும் ஆழமாக்கினாள். தலை மை அளவிற்கு குழி ஆழமானதும் ஆட்கள் அவள் மீது மண்ணை அள்ளிப்போ அவளை உயிரோடு புதைத்து விட்டார்கள்.

இரவு நேரங்களில் அவள் பேயாக அலைந்தாள். மிக மெல்லிய அந்த கீதம் சோளக்காடுகளின் நடுவே இருந்த அந்த சின்னஞ்சிறிய கிராமத்தின் கலந்து விட்டது. அதைக் கேட்டாலே உடலெல்லாம் ஊசியால் குத்தியது போ சிலிர்த்துக் கொண்டது. மக்கள் வாய் பேசாமல் நடமாடினார்கள். ஊரில் யானைக்கால் வியாதி பரவியது... மக்கள் குடிசைகளைக் காலி செய்துவிட்டு விட்டார்கள். அவள் கோபத்தைத் தணிக்கக் கட்டிய அந்த சின்னக்கோவில் சிதலமாகி இப்போது மேடை மட்டும் இருக்கிறது. அங்கே அவள் எப்போதா நின்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பாளாம். அதே நீலச் சேலை கட்

அன்று ஒருநாள் மனோகரன் பூரணியிடம் பாஸ்கரைப் பற்றிச் சொல்லியிருந்தான்.

யாரோ ஒரு பையன் வெள்ளிங்கிரியை அடித்து விட்டானாம். இவன் அவனை என்னவோ செய்யப் போகிறான். முட்டாள்தனமாக ஏதாவது செய்யாமல் இருக்க வேண்டும் என்றான். யார் அந்தப் பையன் என்று பூரணி ஏதோ உள்ளுணர்ச்சியால் கேட்டவள் அதிர்ந்து போனாள். இதை விடவே கூடாது என்று வாதிட்டாள். மீண்டும் மீண்டும் வற்புறுத்தினாள். மனோகரன் பார்த்துக்கலாம் என்று யோசனையுடன் சொல்லித் தட்டிக் கழித்துவிட்டான்.

பூரணி அதன் பிறகு தினமும் கடைக்குச் சென்றாள். பஸ் ஸ்டாண்ட் காலியாகவே இருந்தது. பூரணி தவியாய்த் தவித்தாள். வந்து நின்ற ஒவ்வொரு பஸ்ஸும் மனம் பதற வைத்தது. பாஸ்கர் இறங்க வேண்டும் என்று மூச்சைப் பிடித்துக்கொண்டு காத்திருந்தாள். அதே நேரம் இறங்கவே கூடாது அவன் இந்தப் பக்கம் வரவே கூடாது என்று உடலின் ஒவ்வொரு அணுவும் துடிதுடித்தது. மனது நினைவுக்கு வந்த தெய்வங்களையெல்லாம் இறைஞ்சியது. மன்றாடியது. அவன் வரவேயில்லை. ஒருவேளை தான் கவனிக்காத நேரத்தில் வந்துவிட்டால்? அவள் இளம் பருவத்து நண்பன் பாஸ்கருக்காக மட்டும் தவிக்கவில்லை. மனோகரனுக்காகவும் அதனால் தனக்காகவும் தன் மகளுக்காகவும்... கூடத்தான். ஏதாவது சாக்கு சொல்லி இலுப்பப்பாளையமே போய்விடலாமா என்ற எண்ணம் கூடத் தோன்றியது. ஆனால் என்ன சொல்லிப் போவது?

வெள்ளிங்கிரியின் ஊரும் அதுதான். மனோகரன் திடீரென்று அமைதியாகிவிட்டான். கைகளைப் பின்னால் கட்டியபடி வெராண்டாவில் குறுக்கும் நெடுக்கும் நடக்கத் தொடங்கினான்.

பாஸ்கரை எதுவும் செய்துவிட வேண்டாம் என்ற பூரணியின் நச்சரிப்பை தன் மீதான அக்கறையாகப் புரிந்து கொண்டு அவளை ஆறுதல் படுத்தினான். அவன் அதாவது வெள்ளிங்கிரி ஏதாவது செய்தால் நமக்கென்ன என்கிற பாணியிலேயே மனோகரனின் பதில்கள் இருந்தன.

பூரணிக்கு சாப்பிட முடியவில்லை. உறங்க முடியவில்லை. அவளது மனம் அந்த ஸ்டோரையே சுற்றிச் சுற்றி வந்தது. காமாட்சிபுரத்துக்கு அருகேதான் அவனை ஏதோ செய்யப் போகிறார்கள் என்று அவளுக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. அவனை அப்படியே திருப்பி அனுப்பி விட்டால் ஒரு பிரச்சினையும் இல்லை என்று நினைத்துக்கொள்வாள். அன்று காலை வெள்ளிங்கிரியும் மூன்று நான்கு தடி ஆட்களும் தங்கள் வீட்டுக்கு வந்தபோது பூரணி தலையோடு காலாகப் பதறிப் போனாள்.

ஸ்டோருக்குப் போனவள் வெகுநேரம் அங்கேயே தாமதித்தாள். பின்பு ஏதேதோ காரணம் சொல்லி டிரைவரை அருகிலிருந்த பகுதிகளுக்குப் போகச் சொன்னாள்.

பின்பு பெருமாள் கோவிலுக்குப் போகும் சாக்கில் திரும்பவும் காரை மல்லிகை ஸ்டோரைக் கடக்கச் செய்தாள்.

கோவிலில் நுழைந்ததும் பூரணியைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. தலைவரின் மனைவிக்குக் கொடுக்கப்படும் மரியாதை. அதற்குள் வீட்டிலிருந்து மகள் இரண்டு முறை போன் செய்து விட்டாள். இதற்குமேல் தாமதிக்க வழியே இல்லை. பூரணி பிரமை பிடித்ததைப் போன்ற நிலையில் திரும்பி வந்தபோது வெள்ளிங்கிரியும் ஆட்களும் கொட்டகையில் இல்லை. கேட்டபோது ஊருக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனதாகச் சொன்னார்கள்.

பூரணியின் மனதில் அப்படியொரு ஆசுவாசம் பரவியது. மனதும் உடலும் லேசாகிப் போன்றதொரு நிம்மதியுடன் தாவியோடி வந்த மகளை அள்ளித் தூக்கிக்கொண்டாள். பாஸ்கரைச் சூழந்திருந்த ஆபத்து விலகிப்

போய்விட்டதாகத் தோன்றியது. பல நாட்களுக்குப் பிறகு அன்று பூரணி அடித்துப் போட்டதுபோன்று தூங்கினாள். காலையில் அந்தச் செய்தி வந்தது. செய்தி கிடைத்ததுமே பூரணி முடிவு செய்து விட்டாள். அவளுக்கு அது அவன்தான் என்பதில் ஏனோ சந்தேகமே தோன்றவில்லை.

பூரணி இருளில் தன்னை மறந்து மேடைமீது கிடந்தாள். அந்த நீலச் சேலைக்காரி தன் தோளைத்தொட்டு எழுப்பக்கூடும் என்று எதிர்பார்த்தாள். இதயம் நின்று விடுவது போலிருந்தது. எங்கோ வெகு தொலைவில் நாய் குரைக்கும் ஓசை. ஏதோ பூச்சி கிணீகிணீயென்று சத்தம் எழுப்பியது. குப்பென்ற அமைதி. அவளுக்குப் பின்புறம் சரக்கென்றது. காலடி சத்தம் என்று பூரணி தெளிவாக உணர்ந்தாள். பின்பு அசைவேயில்லை. பூரணி அந்தக் கணத்துக்காக மூச்சைப் பிடித்துக்கொண்டு காத்திருந்தாள். குளிர்காற்று ஊசியாகக் குத்தியது. அவளுக்கு மூச்சுத் திணறியது. நெஞ்சே வெடித்துவிடும் போல அடைத்துக்கொண்டது. அடுத்த விநாடி துள்ளியெழுந்து வீட்டை நோக்கிப் பாய்ந்தோடத் தொடங்கினாள்.

அன்று காலை ஷீலாவும் குழுவினரும் மனோகரன் வீட்டுக்கு வந்தபோது பத்து மணி இருக்கும். பூரணி அப்போதுதான் எழுந்து குளித்திருந்தாள். அவள் கண்கள் தூக்கமின்மையால் சிவந்திருந்தன.

ஷீலா எதிர்பார்த்ததற்கு மாறாக மனோகரன் வீடு நவநாகரீகமாகவிருந்தது. சாம்பல் நிறத்தில் கான்கிரீட் கூரையும், வெளிர் நீல ஜன்னல்களும் புகைப்படங்களில் பார்த்திருந்த அமெரிக்க ஐரோப்பிய பாணி வீடுகளை நினைவு படுத்தின. பின்புறம் மிக நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்ட பழைய பாணி மாளிகை போன்ற வீடு.

பூரணியின் பார்வையில் விரோதம் இல்லாமலிருந்தது ஷீலாவுக்கு வியப்பளித்தது. சிரிப்பு இல்லையென்றாலும் பூரணி மரியாதையாக எல்லோரையும் வரவேற்று சோபாவில் உட்கார வைத்தாள்.

“இங்க” ஷீலா கையை வீசி தயக்கத்துடன் காட்டினாள். “ஒரு மர்டர் நடந்துதே”

“எங்களுக்கும் அதுக்கும் ஒரு சம்மந்தமும் இல்லீங்க” பூரணியின்

குரல் உடைந்து விடும். அவள் அழப்போகிறாள் என்று ஷீலா நினைத்தாள். ஆனால் பூரணி அழவில்லை. தெளிவாகவும் நிதானமாகவும் பேசத் தொடங்கினாள்

“இறந்து போனவரும் எங்க சங்கத்துக்காரரும் ஒரு ஊர்க்காரங்க. அவங்கூரை உட்டுட்டு இங்க ஏன் வந்து கொலை பண்ணோணும்? எங்க வீட்டுக்காரருக்கு அந்தப் பையன யாருன்னே தெரியாது. அவுரு யாரையும் கொலை பண்ணக் கூடியவரு இல்ல. யாரை வேணாலும் கேட்டுப் பாருங்க”

இதற்குமேல் என்ன பேசுவது என்று தெரியாமல் குழுவினர் எழ நினைத்தபோது

“அதான் கேஸ் போட்டச்சுல்ல. உங்களுக்கு என்ன சந்தேகம்? நீங்க என்ன நினைக்கறீங்க? எதுக்கு இத விசாரிக்கிறீங்க?” என்று பூரணியே தொடங்கினாள். அமுதாவின் திட்டவட்டமான மறுப்புக்குப் பிறகு என்ன சொல்வது என்று யாருக்கும் புரியவில்லை. ஆனால் இந்தப் பெண்ணின் துளைக்கும் பார்வை பேசத் தூண்டியது.

உண்மையறியும் குழு சென்றதும் வெள்ளை வேட்டி சட்டையிலிருந்த நான்கைந்து பேர் உள்ளே வந்தனர்.

“வணக்கங்மா” ஒரு குரல் மிகுந்த மரியாதையுடன் கூறியது.

“உக்காருங்கையய்யா” பூரணி அவர்களை அமர வைத்தாள். மோர் கொண்டுவரச் சொல்லி ஆள் அனுப்பினாள்.

“நாங்க சங்கத்துக்காரங்கம்மா. வீட்டுக்கெல்லாம் வந்துருக்கோம். நம்ம ஐயாவையும், சங்கத்து ஆளுகளையும் விடுதலை பண்ணச்சொல்லி கோயமுத்தூர்ல ஒரு பெரிய கூட்டம் ஏற்பாடு செய்யறோம். மூணு மாவட்டத்துல பந்த் நடத்தணும். நீங்க மேடைக்கு வந்து ஐயாவ விடுதலை செய்யுங்கன்னு ஒரு வார்த்த சொல்ல முடியுமா? நீங்க வந்தா எங்க எல்லாருக்கும் ஆறுதலா இருக்கும். மேற்கொண்டு சண்ட போடறதுக்கு ஒரு உத்வேகமா இருக்கும்” சற்றே தயக்கத்துடன் வந்தவர்களிலேயே வயதானவராகத் தோன்றிய ஒருவர் சொன்னார்.

“வந்துர்றனுங்க. நீங்க அவருக்காக இத்தன செய்யும் போது நானும்

வரணுமில்லீங்க” பூரணி ஒரு விநாடியும் தயங்காமல் பதிலளித்தது வந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் அவளுக்கே ஆச்சரியமாகவிருந்தது.

“ரொம்ப நன்றிங்கம்மா. நாங்களே வந்து ஊர்வலமா கூட்டிட்டு வர்றோம்”

அவர்கள் தனக்கு நன்றி சொல்வது பூரணிக்கு ஆச்சரியமாக இருந்தது.

பூரணி அப்படியே படுக்கையில் சாய்ந்தாள். ஜன்னலுக்கு வெளியே தொலைவில் கருவேலங்காடும் ஓடைக்கல் சுவரும் சிதிலமான கோவிலும் தெரிந்தன. தான் மேடையில் பேசப்போவது தன் கணவனுக்காக மட்டுமல்ல. அமுதாவுக்காகவும், தன் அத்தைக்காகவும், இந்த மில்களில் வேலை செய்யும் குழந்தைப் பெண்களுக்காகவும், அந்த உயிரோடு சமாதியான நீலச் சேலை பெண்ணுக்காகவும்தான் என்று தோன்றியது. பேசலாம் மெல்ல மெல்ல...

பூரணி வெளியே தெரிந்த நீலவானைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

பின்பு எதையோ நினைத்துக்கொண்டு மனோகரன் வழக்கைக் கவனித்து வரும் அந்தப் பிரபல வழக்குரைஞரைத் தொலைபேசியில் அழைத்தாள். அவர் மனோகரனுக்கு சித்தப்பா முறை. எனவே பூரணிக்கு மாமா ஆக வேண்டும்.

“கொஞ்சநாள் பொறுத்துக்க கண்ணு. வெளிய கொண்டாந்துரலாம்” என்றார் வழக்குரைஞர். குரலில் வயது தந்த அன்பும் உரிமையும் தெரிந்தன.

“அது நீங்க பாத்துக்குவீங்கன்னு தெரியும் மாமா. இன்னொரு விசியம் சொல்லோணும்னு கூப்புட்டனுங்க”

“சொல்லு கண்ணு?”

“இந்த கேஸ்ல...” பாஸ்கர் கொலை என்று சொல்ல பூரணி தயங்கினாள். “சி.பி.ஐ விசாரணை கேக்கலாங்களா மாமா?”

“சி.பி.ஐ கஸ்டம் கண்ணு. சி.பி.சி.ஐ.டி விசாரணை கேட்டா

கெடைக்கும். ம்ம்ம்ம்... ஆனா ஏன் இப்படி...” வழக்குரைஞர் என்ன பதில் சொல்வததென்று தெரியாமல் தயங்கினார். இது தலைவன் சம்பந்தப்பட்டிருக்கும் வழக்கு. திடீரென்று ஒரு கேள்விக்கு, அதை எழுப்புவது அவன் மனைவியாகவே இருந்தாலும் தான் மட்டும் முடிவெடுத்து பதிலளிப்பது சரியா? என்று அவருக்குத் தெரியவில்லை. இந்த வழக்கில் ஒருவரும் துணிந்து சாட்சி சொல்ல வரப்போவதில்லை. நடத்தி விடுதலை வாங்கிவிட்டுப் போக வேண்டியதுதானே என்று அவர் நினைத்தார். அதுவும் மனோகரன் மேல் வலுவான குற்றச்சாட்டு எதுவும் இருக்கப் போவதில்லை.

பூரணி தன் இயல்புக்கு மாறாக வெடுக்கென்று கூறினாள். “இன்னைக்கு மனித உரிமை சங்கத்துக்காரங்க வந்திருந்தாங்க. கொலைல வேற சில மில்லுக்காரங்களும் சம்பந்தப்பட்டிருக்காங்கன்னு சொல்றாங்க. இங்கயும் எல்லாரும் அதான் பேசிக்கறாங்க. கஷ்டப்படோணும்ன்னா எல்லாரும் படட்டுமே. ஜெயிலுக்குப் போகோணுன்னா எல்லாரும்தான போகோணும்”

அந்தக் கேள்வியின் ஆழம் புரிய வழக்குரைஞர் உறைந்து போனார். பூரணி கோபத்தில் பேசுகிறாளா? அல்லது அரசியல் தந்திரங்களை உணர்ந்து பேசுகிறாளா? என்று அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்னும் வலிமை வாய்ந்தவர்கள் குற்றவாளிகளாக மனோகரனோடு கூண்டில் நிறுத்தப்பட்டால் மனோகரனைத் தண்டிப்பதும் சிரமமாகிவிடும். அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் மனோகரனையும் காப்பாற்றியாக வேண்டிய நெருக்கடி நேரிடும். ஆனால் நேரடியாகச் செய்தால் எல்லோரையும் பகைத்துக்கொள்ள நேரிடும். ஒளிவுமறைவாக நுட்பமாகச் செய்ய வேண்டிய காரியம் இது. வேறு யாரையாவது வைத்துத்தான் மறு விசாரணை கேட்க வேண்டும். அல்லது ஏற்கெனவே கேட்கும் எண்ணத்திலிருக்கும் யாரையாவது மேலும் தூண்டிவிட வேண்டும். வழக்குரைஞரின் மனதில் ஒரு திட்டம் உருவாகிக்கொண்டிருந்தது.

“செரியம்மணீ. நான் பாத்துக்கறேன். இதப்பத்தி யார் கிட்டயும் பேசீறாத. நான் பாத்துக்கறேன். அந்த சங்கத்துக்காரங்க விசிட்டிங் கார்டு

ஏதாவது இருந்தா வாட்ஸப்ப்ல அனுப்பு”

அரசியலில் நெருக்கடிகள் வரும்போது பேட்ஸ்மேனே பௌலராகவும், பௌலரே அம்ப்பையராகவும் மாறுவது வழக்கம்தான்.

15

விசாலமான தொழிற்சங்க அலுவலகம் அது. கட்சிப் பத்திரிக்கையும் தினமணியும் மேசை மீது கிடந்தன. தொலைக்காட்சி ஓடிக்கொண்டிருந்தது. சட்டசபை நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஷீலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இதையெல்லாமா பார்ப்பார்கள்? சங்கத்தைச் சேர்ந்த தற்காலிக ஊழியர்களின் பணி நிரந்தரமாக்கப்படுமா என்பதைப் பற்றிய அறிவிப்பு ஏதாவது வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றார் தொழிற்சங்கத்தின் செயலாளர்.

ஏறக்குறைய உண்மையறியும் குழுவின் பணி முடிந்து விட்டது. ஆனால் இத்தனை நடக்கிறது தொழிற்சங்கங்கள் என்ன செய்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டுமென்று சிவானந்தன் வற்புறுத்தினார். இது அரசியலின் பாற்பட்டது. ஆனால் இது போன்ற பேட்டிகள், சில நேரங்களில் உண்மையறியும் குழுவின் செயல்பாடுகளுக்குப் புது பரிமாணத்தை அளித்து விடக்கூடும் என்பதால் ரமேஷும் மறுக்கவில்லை. அதனாலேயே கோவையில் நுழைந்ததும் முதல்வேலையாக அந்தத் தொழிற்சங்க அலுவலகத்துக்குச் சென்றார்கள்.

”சில மில்களில் வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் வற்புறுத்தலால் சில வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். உள்ளேயே படிக்க வைக்கிறார்கள். விளையாட்டுச் சாமான்கள் இருக்கின்றன. தங்கும் வசதிகள் இப்போது பரவாயில்லை. எத்தனை வசதி இருந்தாலும் அது சுதந்திரமில்லாத கூண்டுதான். பெரும்பாலான மில்களில் பழைய நிலையே தொடர்கிறது.

மிரட்டல் அடி உதை உண்டுதான். சில பெண்கள் வேலையின் போது காயம்பட்டு சரியான சிகிச்சை அளிக்கப்படாமல் ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டு விடுகிறார்கள். அப்படி திருவாரூருக்கு மெஷினில் கை சிக்கிப் படுகாயமடைந்த ஒரு பெண் அனுப்பி வைக்கப்பட்ட போது அங்கிருந்து தோழர்கள் எங்களுக்குத் தகவல் அளித்து ஏதாவது செய்யமுடியுமா பாருங்கள் என்றார்கள். நாங்கள் சென்று பேசி எண்பதாயிரம் ரூபாய் வாங்கித் தந்தோம்.

அங்கிருந்த பெண்களிடம் அலுவலகத்துக்கு வாங்கள், பேசலாம் என்று சொன்னோம். யாரும் வரவில்லை. வேறு எந்த விதத்திலும் தொடர்பு கொள்ளவில்லை. பெண்களுக்கு வெளி ஆட்களிடம் இருக்கும் இயல்பான பயம், எங்களிடம் பெண் தோழர்கள் இல்லாதது ஒரு பெரியகுறை. தவிர மில்கள் கோட்டைகள் போலிருக்கின்றன. உள்ளே செல்லவே முடிவதில்லை. எனவே யூனியன் தொடங்கச் செய்யப்பட்ட ஆரம்ப கட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

கோவை திருப்பூரில் தொழிற்சங்க இயக்கம் இருக்கிறதென்றுதான் இவர்கள் இங்கே கிராமப்புறத்துக்கு வருகிறார்கள். பெண்களை வேலைக்கு வைக்க முக்கியக் காரணமும் இதுதான். எனவே சங்கம் ஏற்பட்டு விடக்கூடாதென்று இவர்கள் பிடிவதமாக இருக்கிறார்கள்.

என்.ஜி.ஓ-க்களுக்கு மட்டுமே அரசு உதவியுடன் மில்களுக்குள் செல்ல வாய்ப்பு இருக்கிறது. இதை நிர்வாகமும் அரசும் அங்கீகரிக்கின்றன. என்.ஜி.ஓ-க்கள் இந்த மில்களில் தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்படுவதில்லை, குழந்தைத் தொழிலாளர்கள் இல்லை என்று சான்றிதழ் அளிக்க வேண்டும். என்.ஜி.ஓ-க்கள் தொழிலாளர்களுக்குச் சில உதவிகள் செய்கின்றனர் என்பதையும் மறுக்க முடியாது. ஏதோ ஒருவிதத்தில் சூழலின் உக்கிரத்தை மட்டுப்படுத்துபவர்களாகவும் நம்பிக்கை அளிப்பவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள்.

கோவையில் மிகச் சாதாரணமாக நடப்பது போல ஒரு கேட் கூட்டம் போடுவதோ தொழிலாளியைச் சந்தித்துப் பேசுவதோ இங்கெல்லாம் சாத்தியமே இல்லை. இது போன்ற உற்பத்தி முறையை அரசும் நீதி மன்றமும் ஏற்றுக்கொண்டுவிட்டன. கேம்ப் கூலி முறை டெக்ஸ்டைல் தொழிலின் முதுகெலும்பாக மாறிவிட்டது. இதை ஒழிக்க முடியாது. நல்லபடியாக மாற்ற முயற்சி செய்யலாம். புதுவழி ஏதாவது கண்டு பிடிக்க வேண்டும்.

பழைய பாணியிலான தொழிற்சங்க இயக்கம் இப்போது சாத்தியமில்லை" செயலர் மேசையை மெல்லக் குத்தினார். "ஆனால் ஏதாவது செய்யத்தான் வேண்டும். ஒரு வழி கண்டுபிடிப்போம்"

“நீங்கள் ஏன் விவசாயிகள் சங்கம் அமைப்பதில்லை?” ஷீலா இப்படியொரு கேள்வி எழுப்பியது குழுவினருக்கு ஆச்சரியமளித்தது. இதற்கு இப்போது என்ன அவசியம் என்ற எண்ணமும் ஏற்பட்டது போலிருந்தது. செயலாளரும் சற்று ஆச்சரியத்துடன் அவளை உற்றுப் பார்த்தார்.

“நீங்க எல்லாம் இதுல வராததாலேதான் அவங்க அந்த வேலையை எடுத்துக்கறாங்க”

“நாங்க விவசாயக்கூலிகள அமைப்பாக்க முயற்சி செய்யறோம். நூறுநாள் வேலைத்திட்டம்ன்னு சொல்றாங்க இல்ல, ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். அதுல வேலை செய்யறவங்களை அமைப்பாக்கிட்டிருக்கோம். அதனால இந்த விவசாயிகள் எங்களை எதிரி மாதிரி பாக்கறாங்க. கம்யூனிஸ்காரந்தான் எஸ்.சி-களைக் கெடுக்கறான்னு பேசறாங்க. இவனுக என்னமோ பெரிய பண்ணையார் மாதிரி. இவனுகளே பேங்க்லையும் வட்டிக்காரங்கிட்டயும் பரம்பரை நெலத்த அடமானம் வெச்சுட்டிருக்கான்”

“ஆனா இந்த நூறுநாள் வேலைத் திட்டத்தால விவசாய வேலைக்கு ஆள் கிடைக்கறதில்லேன்னு சொல்றாங்களே”

“சொல்றாங்க. ஆனா அது அப்பட்டமான பொய். வேற எந்த வேலையும் செய்ய முடியாதவங்கதான் இந்த வேலைக்கு வர்றாங்க. காட்டு வேல வயல் வேல செய்ய நல்ல உடல் பலம், ஸ்கில் வேணும். இந்தத் திட்டம் இல்லாட்டியும் இந்த ஆளுகளால காட்டு வேலைக்குப் போக முடியாது”

“ஆனா இந்த ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தால கூலி அதிகமாயிருச்சுன்னு சொல்றது உண்மைதானே?”

“அரசு நூத்தி எண்பது ரூபாய் நிர்ணயிச்சிருக்கு. அதனால காட்டு வேல தோப்பு வேலைக்குக் கூப்புடறவங்க இதை விட ஐம்பது நூறு அதிகமா குடுக்கணும். ஏன்னா வேல அப்புடி. ஆனா முதுகுஒடிய வேல செய்யறவங்களுக்கு முன்னூறு நானூறு ரூபா குடுத்தா என்ன தப்பு? அது இல்லாம இந்தக்காலத்துல சோறு சாப்புட முடியுமா? இவனுக்கு விவசாயப்

பொருள்களுக்கு வெல இல்லேன்னா, இடுபொருள் வெல அதிகமாயிருச்சுன்னா அதுக்குக் காரணமான வியாபாரிகள், கம்பெனிகள்கிட்ட சண்ட போடணும். கடன் கட்டலேன்னா பாங்க்காரன் அக்ரி லோனுக்கு 14 பர்செண்ட் வட்டி போடறான். எத்தினி பேரோட நெலத்த கோர்ட்ல ஏலம் விடறான்? அவனைக் கேக்கறது? அத உட்டுட்டு ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோவில் ஆண்டின்னு எதுக்கெடுத்தாலும் தலித் மக்களைக் குத்தம் சொன்னா எப்புடி?”

பாகம் 4

அமுதா

1

ஓலையக்கா கொண்டையில ஒரு கூடத் தாழம்பூ

தாழம்பூ சித்தாட தலை நெறையா முக்காடு

மஞ்சள் அரைபணமாம் மைகோதி காப்பணமாம்

மஞ்சக் கொறைஞ்சதுன்னு மயங்குறாளாம் ஓலையக்கா

சீல அரைபணமாம் சித்தாட காப்பணமாம்

சீல கொறைஞ்சதுன்னு சிணுங்குறாளாம் ஓலையக்கா

காங்கேயஞ் சந்தையில கண்கொள்ளாக் கட வரிச

கட வரிச முன்னால கலங்கி நின்னா ஓலையக்கா

கையிருப்போ காப்பணந்தேன்

கடச் செலவோ வெகுகனந்தேன்

கைக்காசு பத்தாம கலங்கி நின்னா ஓலையக்கா

ஓலையக்கா கொண்டையில ஒரு கூடத் தாழம்பூ

தாழம்பூ சித்தாட தலை நெறையா முக்காடு

ப லரது வாழ்க்கையில் சூறைக்காற்று வீசிய அன்றைய தினம்.

அன்று இலுப்பப்பாளையம் மில்லிலிருந்து அமுதாவையும் வேறு சில பெண்களையும் ஒரு வேனில் சந்தைக்கு அழைத்துப் போனார்கள். இது போல வேறு சில வேன்களும் வந்திருந்தன. அவற்றிலிருந்து ஒற்றை வரிசையில் வேலை செய்யும் பெண்கள் இறங்கி சந்தையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு குழுவையும் கண்காணிக்க மில்களில் இருந்து பெண்கள் வந்திருந்தார்கள். பள்ளிக் கூடத்தை ஒட்டி இருந்த ஆலமரத்துக்குக் கீழே வாகனங்கள் நிறுத்தப்படும். அதற்கு அப்பால் சந்தைப் பேட்டை.

சந்தையை நோக்கி நடந்து கொண்டிருந்த போது அமுதா திரும்பி ஊரைப் பார்த்தாள். அதோ அந்த மூன்று தென்னை மரங்கள் நிற்கும் இடத்துக்கு அருகில்தான் அவளது வீடு. ஆனால் அது இப்போது எட்ட முடியாத தொலைவில் இருந்தது.

அமுதாவுக்கு துப்பட்டாவில் அடிக்கடி மூக்குத் துடைத்து மூக்கும் கண்களும் சிவந்து போயிருந்தன. சில நேரங்களில் மில்லில் கூட்டத்தில் படுத்துக் கிடக்கும் போது மூச்சு இரைக்கிறது. முதலில் சளி பிடித்திருக்கிறது சரியாகிவிடும் என்று நினைத்திருந்தாள். ஆனால் மூக்கு வாரக்கணக்கில் ஒழுகிக்கொண்டே இருந்தது.

உடனிருந்த தேனிக்காரப் பெண் இங்கே வேலைக்கு வரும் எல்லோருக்கும் இந்தப் பிரச்சினை வரும். சிலருக்கு சரியாகும். சிலருக்கு ஆகாது என்றாள். டாக்டரிடம் போக வேண்டும். எப்போது லீவு கிடைக்கும் என்று தெரியவில்லை. சொல்ல பயமாக இருந்தது. வாட்ச் மேனிடம் அம்மாவை வரச் சொல்லிவிட்டாள்.

அமுதா வயதுக்கு வரும்வரை பாட்டி வீட்டிலிருந்தாள். அம்மா கோவையிலோ திருப்பூரிலோ வேலை செய்து கொண்டிருந்தாள். அம்மா ஒவ்வொரும் முறை வீட்டுக்கு வரும்போதும் புதுச் சேலை துணிகள், உறவுகளின் திருமணம், சாவு விஷேசங்களுக்கு சீர் செய்ய கடன் வாங்கிய பணம் என்று ஆர்ப்பாட்டமாக வருவாள். ஓயாமல் ஒவ்வொரு நாள் மாலையும் அமுதாவும், அமராவதியும் அமுதாவின் தங்கையும் சொந்தக்காரர்கள் வீடுகளுக்குப் போவார்கள். அமுதாவுக்கு தானும் திருப்பூர் செல்ல வேண்டுமென்ற ஆசை.

அமராவதி பார்க்கலாம் என்று தட்டிக்கழித்து விடுவாள். அமுதா வயதுக்கு வந்த பின்பு ஒருநாள் அவள் சித்தப்பன் அமுதாவின் கன்னத்தைத் தடவுவதையும் அவளை இழுத்து மடியில் உட்கார வைக்க முயல்வதையும் அமராவதி பார்த்துவிட்டாள். ஒருவார்த்தை பேசவில்லை. அமுதாவை இலுப்பப்பாளையம் கூட்டிச் செல்கிறேன் என்று அழைத்து வந்துவிட்டாள்.

இலுப்பப்பாளையம் வந்த பின்தான் வீட்டில் அம்மாவுடன் சென்ராயனும் இருக்கிறான் என்பதை அறிந்தாள். அடுப்புக்குத் தப்பி

நெருப்பில் விழுந்து விட்டது போலிருந்தது அவள் நிலை. அம்மா சென்ராயனை அறிமுகப்படுத்தவேயில்லை. மெஸ்ல புரோட்டா போடப் போகுது என்று மட்டும் சொன்னாள். இரவு நேரங்கள் சித்திரவதையாக இருக்கும். அம்மா சென்ராயனை வெளியே படுக்கச் சொல்லிவிடுவாள். அவன் தன்னை உள்ளே விடச் சொல்லி சாத்தியிருக்கும் கதவை உடைத்துப் புடைப்பான். அம்மாவுக்கும் அவனுக்கும் சண்டை நடக்கும். சென்ராயன் கோவித்துக் கொண்டு சென்று விடுவான். அம்மா முழங்காலைக் கட்டிக்கொண்டு எங்கோ வெறித்தபடி உட்கர்ந்திருப்பாள். சென்ராயன் காலையில் வந்துவிடுவான்.

அமுதாவைப் பார்க்கையில் அவன் கண்களில் இன்னதென்று தெரியாத ஒரு பசி இருக்கும். அமுதா தன்னை நோக்கும் எல்லா ஆண்களின் கண்களிலும் இந்த நெருப்பை உணர்ந்திருக்கிறாள். கூசி கண்காணாத இடத்தில் ஒளிந்து கொள்ளத் தூண்டும் பார்வைகள். வீட்டிலும் வெளியிலும் அமுதாவை இந்தக் கண்கள் துரத்திக் கொண்டே இருந்தன. மயிரடர்ந்த கரங்கள், குச்சிக் கரங்கள், சிவப்புக் கரங்கள், கருப்புக் கரங்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவள் மீது படரத் துடித்தன.

ஒருநாள் பள்ளி சீக்கிரம் விட்டுவிட்டால் அவளால் வீட்டுக்கு வர முடியாது. மதிய நேரம் சென்ராயன் ஓய்வெடுக்கும் நேரம். ஒற்றை அறை வீட்டில் அலங்கோலமாகப் படுத்துக் கிடப்பான். அமுதா வெளியிலேயே சுற்றிக்கொண்டிருப்பாள். முடிந்தவரை பள்ளியிலேயே அதிகநேரம் போக்குவாள். தோழிகள் வீட்டுக்குப் போவாள். அதற்கு வாய்ப்பில்லாதபோது வீட்டுக்கு வெளியே இருக்கும் துணி துவைக்கும் கல்லில் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பாள்.

எப்பொழுதாவது சென்ராயன் எழுந்து அவளைப் பார்த்து விட்டால் உள்ளே வா என்று ஒரு இளிப்புடன் வற்புறுத்துவான். தண்ணி எடுத்துக் குடு என்று என்று சாதாரணமாகக் கேட்பதுபோல அழைப்பான். அமுதா பதிலே சொல்லாமல் ஓடி விடுவாள்.

அமராவதி பணியாரக் கடை போட்டது தனக்காகத்தான் என்று அமுதாவுக்குத் தெளிவாகத் தெரிந்தது. கடை போட்டதும் அமராவதி

பகல்பொழுது முழுவதும் வீட்டில் இருப்பாள். மாவரைப்பது, வெங்காயம் மிளகாய் அறுப்பது என்று வேலை இருக்கும். அவள் வண்டியைத் தள்ளிக் கொண்டு போகும் நேரத்தில் சென்ராயனும் மெஸ்சுக்குப் போய்விட வேண்டும். அமுதா மிகுந்த பாதுகாப்பை உணர்ந்த நேரம் அது. எல்லாம் சரியாகிவிட்டது போலத்தான் தோன்றியது.

பணியாரக் கடையில் நட்டம் வந்து கடன் கழுத்தை நெரிக்கத் தொடங்கியது. இந்தக் கடனும் ஊரில் சீர்செய்ய அவ்வப்போது வாங்கிய கடன்களும் சேர்ந்து அமராவதியை மூச்சுத் திணறச் செய்தன. அமராவதி மீண்டும் வேலைக்குப் போக வேண்டி வந்தது. மில்காரர்கள் கொடுக்கும் அட்வான்ஸுக்காகவும், சென்ராயனிடமிருந்து விலக்கி வைக்கவுமாக இரண்டுக்கும் சேர்த்துதான் அமுதா இலுப்பபாளையம் மில்லில் சேர்க்கப்பட்டாள்.

மில்லில் குவாலிடி கண்ட்ரோல் பிரிவில் உதவியாளராக வேலை. ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை செய்யவேண்டி வந்தது. சிலபோது இரவு பத்து மணிவரை வேலை செய்ய வேண்டியிருக்கும். ஹாஸ்டல் ஒரு பழைய கோழிப்பண்ணையில் இருந்தது. கழிப்பறை முன் நீண்ட வரிசை இருக்கும். காலை ஐந்து மணிக்கே எழுந்து வரிசையில் நின்றால்தான் குளித்து முடித்து எட்டரை மணிக்கு கம்பெனி வேன் வரும்போது தயாராக இருக்க முடியும். இல்லாவிட்டால் அறை கூட விழும். கண் தூக்கமில்லாமல் எப்போதும் எரிந்து கொண்டிருந்தது. ஒரு நிரந்தரமான சோர்வு அவளை ஆக்கிரமித்துக் கொண்டது. வேலை செய்யும் பெண்கள் மாதம் ஒருமுறை மட்டுமே பெற்றோரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். ஞாயிற்றுக்கிழமை வெளியே செல்லும்போது நடுத்தர வயது பெண்களும் காவலாளியும் வருவார்கள். லீவில் சென்றால் ஏஜெண்ட் கூடவே வந்து கண்காணித்து அழைத்துச் செல்வான்.

-

கடைகளில் பேட்டரிகள் எரிந்து கொண்டிருந்தன. இன்னும் சில கடைகளில் மண்ணெண்ணெய் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பெரும்பாலும் பொரிக்கடைக்காரர்கள்தான் பழைய பாணியிலேயே

இருந்தனர். இப்போது மசாலா பொரி வந்திருக்கிறது. கடைகளில் இளமஞ்சள் நிறத்தில் போண்டாக்கள் கண்களைப் பறித்தன.

பெண்கள் சேப்டி பின், கிளிப், வளையல், பாசி என்று என்னென்னமோ வாங்கிக் கொண்டிருந்தனர். பாஸ்கர் அங்கே நின்று கொண்டிருப்பதை அமுதா பார்த்துவிட்டாள். வீடு பக்கத்தில் இருக்கிறது. ஆனால் எட்ட முடியாத தொலைவில் இருப்பதுபோலிருந்தது. அமுதாவுக்கு அவனோடு பேச வேண்டும் போலிருந்தது. மதுரை வீரன் கோவில் விழாக்களில் அவன் ஆடுவதைப் பார்த்திருக்கிறாள். அவளுக்கு அவனைப் பிடிக்கும். பாஸ்கர் நியாயத்துகாகப் போராடுபவன். தன் நிலை தெரிந்தால் கண்டிப்பாக ஏதாவது செய்வான். பாஸ்கரைப் போன்ற யாராவது உதவினாலொழிய தனக்கு விடிவு இல்லை என்ற எண்ணம் வண்டு போல அவளைக் குடையத் தொடங்கியது.

அமுதா பொரிக்கடை அருகே நின்று அவனையே வெறித்துக் கொண்டிருந்தாள். ஏதோ உள்ளுணர்வால் திரும்பிய பாஸ்கர் அறிமுகத்தைக் காட்டும் வகையில் முறுவலித்து விட்டுத் திரும்பிக் கொண்டான். அமுதா காவலுக்கு வந்த பெண்ணைப் பார்த்தாள். அவள் உட்கார்ந்து செல்போனில் ஆழ்ந்திருந்தாள். உடனடியாக எழும் வாய்ப்பு இல்லை. தைரியத்தைத் திரட்டிக் கொண்டு பாஸ்கரை நோக்கிப் போனாள். அவன் வியப்பால் விரிந்த கண்களுடன் இவள் விடுவிடுவென்று தன்னை நோக்கி வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பதட்டத்தில் அவளுக்கு மூச்சு இரைத்தது. மூச்சு வாங்கியபடி சிரிக்க முயன்றாள்.

“ஒரு ஹெல்ப் பண்றீங்களா?”

“சொல்லுங்க”

“மில்லுல ரொம்பக் கஷ்டமா இருக்கு. எங்க அம்மாட்ட சொல்லி என்னயக் கூட்டிட்டுப் போகச் சொல்றீங்களா?”

பாஸ்கர் திகைத்துப் போனான். தன் முன் பரிதாபமான சிரிப்புடன் நிற்கும் அவளைப் பார்க்க என்னவோ போலிருந்தது.

“கண்டிப்பா. கண்டிப்பா சொல்றேன்... ஆனா நீங்க இப்பவே...”

சொற்கள் பாஸ்கரின் தொண்டையில் சிக்கிக்கொண்டன. இப்பொழுதே வீட்டுக்கு ஓடிவிட்டால் என்ன நடக்கும்? அந்த நெருக்கடிகளைத் தன்னால் சமாளிக்க முடியுமா? அவன் தடுமாறிக் கொண்டிருக்கும் போதே அமுதா தொலைவில் வந்து கொண்டிருந்த சென்ராயனைப் பார்த்துவிட்டாள். சட்டென்று திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

அவளைப் பார்த்து நின்று கொண்டிருந்த பாஸ்கர் தனக்குப் பின்னால் சென்ராயன் வருவதைப் பார்க்கவில்லை. தான் சரியாகப் பேசாத விரக்தியில்தான் அவள் திரும்பி நடக்கிறாள் என்று நினைத்துக்கொண்டு பின்னால் ஓடினான்.

“ஒரு நிமிஷம் நில்லுங்க”

அவள் நிற்காமல் ஓடிவிட்டாள்.

அதன் பிறகு ஏதேதோ அடிதடி நடந்தது என்று கேள்விப்பட்டாள். அவளுக்கு அதைப் பற்றியெல்லாம் சிந்திக்கும் மனநிலை இல்லை.

கும்மிருட்டில் ஜோதி பாய்ந்தோடிக்கொண்டிருந்தாள். டார்ச் லைட் வெளிச்சங்கள், முரட்டு ஆண் குரல்களும் காதுக்குள்ளேயே கேட்பது போலிருந்தன. யாரோ ஒரு பெண் வீறிட்டு அழுவதும் காதில் விழுந்தது. ஜோதி கண்மண் தெரியாமல் மேடு பள்ளம் பார்க்காமல் ஓடிக்கொண்டே இருந்தாள். ஏதோ பள்ளத்தில் கால் வைத்ததில் கால் சுளுக்கிக் கொண்டது. விலாவில் வலித்தது. ஆனால் எதையும் பார்க்கும் நேரமில்லை. இரைப்பில் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது.

காற்றுக்காக நுரையீரல்கள் கெஞ்சின. ஜோதி ஓடும்போதே வாயைத் திறந்துகொண்டாள். வாயால் மூச்சு விட்டால் இரைப்புக் குறையும் என்று தோன்றியது.

தொலைவில் தெரிந்த டியூப் லைட் வெளிச்சங்களைக் குறி வைத்து ஓடிக் கொண்டேயிருந்தாள். அது என்ன இடம் என்று தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் அங்கு போய்ச் சேர்வதுதான் தப்பித்துக்கொள்ள இருக்கும் ஒரே வழி. தான் இதோ தடுமாறி விழப்போகிறோம் என்று தோன்றியது. விழாமல் எப்படித் தன்னால் ஓடிக்கொண்டிருக்க முடிகிறது

என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. எங்கோ இருப்பது போல் தோன்றிய டியூப்லைட் வெளிச்சம் சட்டென்று அருகில் வந்து விட்டது. பிரியா தெருவுக்குள் பாய்ந்து திறந்திருந்த ஒரு வீட்டுக்குள் புகுந்தாள். அவிழ்ந்த கூந்தலோடு ஓலமிட்டபடி ஒரு பெண் திடீரென்று கூடத்தில் வந்து விழுந்ததும் வீடு ஒரு நிமிடம் அதிர்ந்தது. பெண்கள் ஓடி வந்தார்கள். ஜோதிக்குத் தொண்டை அடைத்துக் கொண்டிருந்தது. அவளால் பேச முடியவில்லை.

"அக்கா... காப்பாத்துங்க அக்கா, தொரத்திட்டு வராங்க"

"செரி கண்ணு பாத்துக்கலாம், இந்த தண்ணியக் குடி" என்று அன்பான குரல்கள் காதருகே கேட்டன. தோளைத் தடவி ஆறுதல் படுத்தின. அதற்குள் வெளியே மில் ஆட்களின் கூச்சல் கேட்டது.

"பொண்ணு மில்லுல பணத்தத் திருடிட்டு ஓடி வந்திருச்சுங்க. போலீஸ் ஸ்டேசனுக்குக் கூட்டீட்டு போயிரலாங்க"

அதற்குள் மொத்த ஊரும் எல்லையில் குவிந்து விட்டது. ஜோதி அந்தப் பெண்ணை இறுகப் பிடித்துக் கொண்டு "அனுப்பிராதீங்கக்கா" என்று ஓயாமல் முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள்.

ஒரு பெரியவர் "நீங்க எந்த மில்லு? என்ன திருடுச்சுன்னு சொல்லுங்க" என்றார்.

"கேஷ்ல வெச்சிருந்த பணம் முப்பதாயிரத்தத் தூக்கிட்டு ஓடி வந்திருச்சுங்க"

"அது எப்படிப்பா மில்லுல வேல செய்யிற பொண்ணு கேஷிலிருந்து பணத்தைத் தூக்கும்? நம்பறமாரியில்லையே"

பெண்கள் "நாங்க செக் பண்ணிப் பாக்கறோம். பணம் இல்லைன்னா உடமாட்டோம். பணம் இருந்தா நாங்களே போலீசு ஸ்டேசனுக்கோ எங்கியோ கூட்டிட்டு வந்து உடறோம்" என்றார்கள்.

சில நிமிடங்களுக்குப் பிறகு சோதனை இட்ட பெண்கள் வெளியே வந்து "ஒரு பைசா கூட இல்ல. பொய்யா சொல்றே?" என்று கூச்சலிட்டனர்.

“வழியில எங்காவது ஒளிச்சு வெச்சிருச்சோ என்னவோ” என்றான் மில்காரன்.

இதற்கிடையில் பொலீரோ வாகனத்தில் எம்பவர் அமைப்பின் கே.சாமி அங்கே வந்து சேர்ந்தார்.

ஜோதியை ஆசுவாசப் படுத்தியவர் பொறுமையாக அவள் கதையைச் சொல்லச் சொல்லிக் கேட்டார். பின்பு திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். “இந்தப் பொண்ண எங்க ஆபீசுக்குக் கூட்டிட்டு போறோம். உங்களோட அனுப்ப முடியாது”

ஊர்க்காரர்களும் “அய்யாகூடப் போ கண்ணு. தங்கமானவரு. பாத்துக்குவாரு” என்றார்கள்.

2

ஜோதிக்கு தேவதானப்பட்டி அருகே ஒரு குக்கிராமம். புவனா அக்கா திருமணத்தில்தான் மில்லுக்காரர்கள் அறிமுகமானார்கள். பக்கத்து ஊரில் நடந்த புவனா திருமணத்தில் மணவறை அலங்காரம், லவுட் ஸ்பீக்கர் செலவுகளையெல்லாம் மில் ஏற்றுக்கொண்டிருந்தது. சினிமா பாட்டுக்களை இடையிடையே நிறுத்தி ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். வழக்கமாக தாய் வீடுதான் சீதனம் கொடுக்கும். ஆனால் இங்கே மில் மணமகள் புவனாவுக்கு இன்னொரு தாய் வீடாக இருந்து சீர் செய்கிறது என்று அறிவித்துக் கொண்டிருந்தார். மில் சார்பில் ஒரு பெரிய வாழ்த்து தட்டி வைக்கப்பட்டிருந்தது. மில்காரர்கள் இரண்டு நாட்களாக ஊரில் தங்கி டீக்கடை, பெட்டிக் கடை, டூவீலர் பஞ்சர் கடை எல்லாவற்றையும் பழக்கப்படுத்திக் கொண்டார்கள். திருமணத்தன்று மேனேஜர் வந்து அறுபதாயிரம் ரூபாய்க்கான செக்கை வழங்கினார். அந்தப் படம் அச்சடிக்கப் பட்ட நோட்டீஸ் மறுநாள் சுற்றுப் புற ஊர்களில் எல்லாம் விநியோகிக்கப்பட்டது.

எந்தக் கடைக்கு எதை வாங்கப் போனாலும் கடைக்காரர்கள் சொல்லி வைத்தாற்போல "பொண்ணச் கொஞ்ச நாள் கோயமுத்தூருக்கு அனுப்பலாமில்ல?" என்றார்கள்.

அடுத்த இரண்டு நாட்களில் குடிகார அப்பனால் அனுப்பி வைக்கப்பட்டவர்கள், காட்டு வேலை இல்லாததால் கையில் பணம் இல்லாமலிருக்க முடியாத அக்காக்கள், கிழவனுக்குக் கட்டிக் கொடுக்கப்படுவதிலிருந்து தப்ப விரும்பியவர்கள் என்று பதினோரு பெண்கள் மில்லுக்காரர்களுடன் கிளம்பினார்கள். அவர்களில் உயிர்த்தோழியைப் பிரிய முடியாத ஜோதியும் இருந்தாள்.

மில் நரகத்தை பூமியில் காட்டியது. ஒரு கோழிப்பண்ணை மில்லாக மாற்றப்பட்டிருந்தது. ஒரு பத்துக்குப் பதினாறு அறையில் காலையில் பத்து பெண்களும் இரவில் பத்து பெண்களும் ஷிப்ட் வைத்துத் தங்க வைக்கப்பட்டனர்.

எனவே ஒரு அறைக்கு இருபது பெண்கள். துணிகள் பைகளின்

மேல் குவிந்து கிடந்தன. சாளரங்கள் உயரத்திலிருந்ததால் பகலிலேயே அறை இருண்டுதான் கிடந்தது. கழிவறை, குளியலறைக்கு ஒரு தகரக் கதவு இருந்தது. அது பாதி பெயர்ந்து தொங்கிக்கொண்டிருந்தது.

புளோ ரூமில் மெஷின் பஞ்சை பாய் போல மாற்றும். கார்டிங் மிஷின் அதை நீள நீளக் கயிறுகள் போல பிரித்துவிடும். பின்பு கயிற்றின் தடிமன் குறைக்கப்பட்டு ஸ்பின்னிங்கில் நூலாக்கப்பட்டு கெண்டியில் சுற்றப்படும்.

மில்லில் இயந்திரம் கரகரவென்று காதைச் செவிடாக்கும் சத்தத்துடன் இயங்கிக் கொண்டே இருந்தது. ஜோதியின் அறையில் ஒருபெண் எப்போதும் வயிற்றுவலியால் துடித்துக்கொண்டிருந்தாள். 'இதுபோன்ற வலி வந்தால் குடலில் பஞ்சு சேர்ந்திருக்கலாம், ஒரு பெண்ணுக்கு இப்படித்தான் ஆபரேஷன் செய்து பஞ்சு எடுத்தனர்' என்றார்கள். பல பெண்களுக்கு சளித் தொந்தரவு இருந்தது. ரத்த சோகையால் சிலருக்கு முகம் வீங்கிக் கிடந்தது.

அடுத்தநாள் காலை ஜோதி விடுவிடுவென்று மேனேஜரிடம் சென்றாள். "என்னை வீட்டுக்கு அனுப்புங்க. வேல செய்ய முடியல" என்றாள். ஒருவிநாடி அவளை வியப்புடன் பார்த்தவன் கோபம் கொண்டு சூப்பர்வைசரிடம் இவளைப் பாத்துக்க என்றான்.

சூப்பர்வைசர் ஜோதியை இழுத்துக் கொண்டு சென்றான். அவள் திமிறி கீழே உட்கார்ந்து வர மறுத்தாள். எல்லாத் தலைகளும் திரும்பிப் பார்க்க சூப்பர் வைசர் சங்கடமடைந்து இரண்டு பெண்களை அழைத்தான். ஒரு பெண் பளீரென்று ஒரு அறைவிட்டாள். பொறிகலங்கிப் போன ஜோதி சட்டென்று அடங்கி விட்டாள். ஒரு சொல்லும் பேசவில்லை. கண்ணீர் விடவும் இல்லை. செய்யச் சொன்ன வேலையை மறு பேச்சில்லாமல் செய்தாள்.

அன்று இரவு எல்லோரும் தூங்கியதும் ஃபேனில் தூக்குப் போட்டுக்கொள்ள முயன்ற போது விழித்துக் கொண்ட பெண்கள் தொண்டையைப் பிய்த்துக்கொண்டு அலறினர்.

நிர்வாகம் ஜோதியை முரண்டு பிடிக்கும் பெண்களை அடைத்து

வைக்கும் வாட்ச்மேன் அறைக்கு அருகிலிருந்த ஒரு அறையில் அடைத்தது. அந்த அறையில் ஏற்கெனவே ஜார்கண்டைச் சேர்ந்த இரண்டு பெண்களும் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு திருமண ஏற்பாடு செய்துவிட்டு வந்த பெற்றோர் பெண்களுக்கு விடுமுறைக் கொடுத்து தங்களுடன் அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொண்டனர். நிர்வாகம் மறுத்து விட்டது. பெற்றோர் மூன்று நாட்கள் மில் எதிரிலேயே படுத்துக் கிடந்து விட்டு பின்பு தாங்கள் மட்டும் திரும்பிச் சென்றனர்.

மில் நிர்வாகம் ஜோதியின் பெற்றோருக்குப் பெண்ணைக் கூட்டிச் செல்லும் படி செய்தி அனுப்பியது. பதறி ஓடி வந்தவர்களிடம் இதுவரை அவளுக்குச் செய்யப்பட்ட செலவுகள், கொடுக்கப்பட்ட முன்பணம் எல்லாவற்றையும் வைத்து விட்டு அழைத்துச் செல்லும்படி சொல்லப்பட்டது. பணம் கொண்டுவராத அப்பாவும் அம்மாவும் கண்ணீர் விட்டபடியே பணம் பிரட்டிக்கொண்டு வருவதாக சொல்லிச் சென்றனர். அவர்களால் அந்தத் தொகையை லேசில் பிரட்டிவிட முடியாது என்பது அவளுக்குத் தெரியும்.

அப்போதுதான் வாட்ச்மேன் எங்கோ சென்றதைப் பயன்படுத்திக்கொண்டு ஜோதியும் ஜார்கண்ட் தோழிகளும் தப்பிச் சென்றனர்.

“ரெண்டு பொண்ணுகளப் பிடிச்சுட்டுப் போயிட்டாங்க சார். அவங்கள ஏதாச்சும் பண்ணிடுவாங்க” என்று கதறினாள் ஜோதி.

எம்பவர் அமைப்பும் பாஸ்கரும் அவனது நண்பர்களும் கலெக்டர் அலுவலகத்துக்கு விரைந்தனர். ஒவ்வொரு மேசையிலும் நடந்த ஓய்வு ஒழிச்சலற்ற போராட்டத்துக்குப் பிறகு போலீஸ் பாதுகாப்புடன் எம்பவர் அமைப்பினர் முன்னிலையில் மில் சோதனையிடப்பட்டது. அமுதா உட்பட 41 பெண்கள் தங்களையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

கடனுக்காகவோ வேறு கடமைக்காகவோ ஒருவரது உரிமையும் சுதந்திரமும் பாதிக்கப்பட்டால் அவரை கொத்தடிமை என்று சட்டம் வரையறை செய்கிறது. அப்படிப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டால் அவரது கடன்களை அரசு ரத்து செய்யவேண்டும், அதற்கு ஆர்.டி.ஓ ரீலீஸ்

சர்டிபிகேட் வழங்க வேண்டும். அதற்காக இன்னும் ஒருநாள் போராட்டம் நடைபெற்றது.

அமுதாவே எதிர்பாராத விதத்தில் ஜோதி விஷயத்தால் அவளுக்கு விடிவு வந்தது. வீட்டுக்கு வந்தவள் இரவோடு இரவாக மதுரைக்கு பஸ் ஏறினாள். இரண்டாவதுநாள் ஏஜெண்ட் வந்து பிடித்துக்கொண்டான். ஆர்.டி.ஓ கொடுத்த விடுதலைச் சான்றிதழால் ஒரு பைசாவுக்கும் பலனில்லை.

இந்த முறை காமாட்சிபுரம் மில்லுக்கு அனுப்பி வைக்கப்பட்டாள். காமாட்சிபுரம் வந்து ஓரிரு மாதங்களில் வலியையும், வேதனையையும் மட்டுமே அனுபவித்து வந்த அமுதாவின் வாழ்வில் மென்பட்டால் வருடிக் கொடுப்பதைப் போன்ற தென்றல் வீசியது. அங்குதான் கிஷோர் அறிமுகமானான். சூப்பர்வைசர் கிஷோர் ஒல்லியாக உயரமாக இருப்பான். ஸ்டைலாக உடையணிந்திருப்பான். அவன் கண்கள் தன்னையே தொடர்வதை அமுதா உணர்ந்தாள். அவள் தன்னைக் கவனிப்பதை உணர்ந்ததும் கிஷோர் மென்மையாகச் சிரிக்கத் தொடங்கினான். அமுதாவுக்கு மனதுக்குள் பட்டாம்பூச்சிகள் பறந்தன. தன் வாழ்க்கையே முடிந்து போய்விட்டது என்று நினைத்திருந்த நேரத்தில் படித்த உயர் பதவியிலிருக்கும் ஒருவன் தன்னால் ஈர்க்கப்படுகிறான் என்ற எண்ணமே அவளை விவரிக்கவியலாத இன்ப உணர்வில் முழுகடித்தது. ஒவ்வொருநாளும் காலையில் அவன் தன்முன் சிரித்தபடி வந்து நிற்பான் என்று அமுதா எதிர்பார்ப்பாள். எதிர்ப்பார்ப்புப் பெரும்பாலும் வீண்போகாது. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவன் அவள் அருகிலேயே நடமாடுவான்.

அவளுக்கென்று சாக்லேட், பால்கோவா என்று ஏதாவது ஒன்றைக் கொண்டு வந்து ரகசியமாகத் திணித்துவிட்டுச் செல்வான்.

இந்த நரகத்திலிருந்து தப்ப அவள் பாஸ்கரை நம்பியிருந்தாள். கொஞ்சம் கொஞ்சமாக அவள் மனதிலிருந்த பாஸ்கர் மறைந்து கிஷோர் ஆக்கிரமித்துக்கொண்டான். காதல் கனிந்து வந்த மகிழ்ச்சியில் அவள் முகம் எப்போதும் விகசித்துக் கொண்டிருந்தது. தன்னையறியாமல்

சிரிக்கவும் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுக்கவும் தொடங்கினாள். ஒருநாள் அவளது மூச்சிறைப்புக்காக பிடிவாதமாக டாக்டரிடம் அழைத்துப் போக ஏற்பாடு செய்தான்.

டாக்டரைப் பார்த்துவிட்டு இருவரும் ஆழியார் அணை போனார்கள். அங்கே மீன் சாப்பிட்டார்கள். பொள்ளாச்சி திரும்பும் வழியில் நாம கல்யாணம் பண்ணிக்கலாமா என்று கேட்டான்.

அமுதா தன் உயிரையே கண்களில் தேக்கிக் காத்துக் கிடந்தது இந்தக் கேள்விக்காகத்தான்.

பாஸ்கரை அவள் மறந்தே போனாள். அந்த நேரத்தில்தான் ஒரு எலெக்ட்ரீஷியன் மூலம் பாஸ்கரிடமிருந்து தகவல் வந்தது. அமுதா பதறிப்போனாள். எல்லாம் திரண்டு வரும் நேரத்தில் ஏதாவது நடந்து கலைந்து போகப் போகிறதே என்று கலங்கினாள். அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பைத்தியம் பிடித்தது போலிருந்தது. முன்பு ஒரு நிமிடம் கூட சகிக்க முடியாமலிருந்த சிறை இப்போது விட்டு விலகமுடியாத இடமாக மாறிப் போயிருந்தது. அவள் யோசனை கேட்கக் கூடியவன் ஒரே ஒருவன்தான்.

அவனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். அவன் பரபரப்படைந்தான்.

“நான் சொல்றது போலச் செய். யார் கிட்டயும் இதப்பத்திப் பேசிடாதே” அவன் முகத்தில் அத்தனை தீவிரத்தை அவள் அதுவரை கண்டதே இல்லை.

கொல்லப்படுவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பாஸ்கருக்கு ஒரு போன் வந்தது. எண் அன்நோன் என்று இருந்தது. தனியார் நிறுவனம் மூலம் வந்த எண் தெரியாத அழைப்பு.

“ஹலோ பாஸ்கருங்களா?”

“ஆமா. நீங்க”

“காமாட்சிபுரத்தில இருக்காங்க இல்ல அமுதா அந்தப்

பொண்ணுக்கு வேண்டப்பட்டவங்க”

“அய்யோ அப்படிங்களா... சொல்லுங்க”

“அந்தப் பொண்ணு அழுதுட்டே இருக்குது. ஒடம்பு வேற சரியில்ல. ஊருக்குப் போகணுமாம். வந்து கூட்டிட்டுப் போக முடியுமா?”

“அது எப்புடி? விடுவாங்களா?”

“நாங்க ஒரு ஏற்பாடு செய்யறோம். ஒரு ரெண்டு நாள் கழிச்சு வாட்ச்மேன் ஒரு கல்யாணத்துக்கு வெளியூர் போறாரு. அப்ப நைட்ல வந்தீங்கன்னா வெளிய அனுப்பி விடறங்க”

“நீங்க யாரு? உங்க பேரு?”

“அது வேண்டாமே! சொன்னா வீணால பிரச்சினதான். அழுதா வந்த பின்னாடி அதுகிட்ட கேட்டுக்கங்க”

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் போன் வந்தது.

“இன்னைக்கு நைட் காமாட்சிபுரம் வந்தர்றீங்களா?”

“கண்டிப்பா வந்துர்றேன். ரொம்ப நன்றீங்க. ஒரு பாவப்பட்ட பொண்ணுக்கு உதவி பண்றீங்க”

“ஏதோ நம்மாலானது. கண்டிப்பா வந்துருங்க. பைக், கார் எதுவும் வேண்டாம். இந்த ஊர்ல எந்த வண்டி வந்தாலும் உடனே தெரிஞ்சுடும். அதனால பஸ்ல வந்து காமாட்சிபுரத்துல இறங்கி நடந்து வந்துருங்க. நாங்க லாரி வேன் எதுலாச்சு ஏத்தி விடறோம்”

“ஹலோ வெள்ளிங்கிரிங்களா?”

“ம்”

“பார்ட்டி இன்னைக்கு ராத்திரி காமாட்சிபுரம் வருது. நீங்க காத்தாலயே காமாட்சிபுரம் போயிருங்க. யாராவது ஒருத்தர் இலுப்பபாளையத்துலயே இருந்து பார்ட்டிய ஃபாலோ பண்ணிட்டு வாங்க”

உண்மை அறியும் குழுவின் அறிக்கையிலிருந்து

இலுப்பப்பாளையத்தைச் சேர்ந்த அமுதா என்ற இளம்பெண் பாஸ்கருக்கு அறிமுகமானவர். அவர் ஒரு மில்லில் வேலை செய்து வந்தார். அமுதா தென் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பிற்பட்ட சாதியைச் சேர்ந்தவர். சந்தையில் ஒருநாள் பாஸ்கர் அமுதாவைத் தொடர்ந்து சென்றதைப் பார்த்த உள்ளூர் ஆதிக்க சாதி அமைப்பைச் சேர்ந்த வெள்ளிங்கிரியும் அமுதாவின் தாயாரின் கணவரான சென்ராயனும் பாஸ்கரை மிரட்டினர். அதையொட்டி நடந்த சண்டையில் வெள்ளிங்கிரியும் சென்ராயனும் பாஸ்கரால் தாக்கப்பட்டனர். இதை அவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கடும் அவமானமாகக் கருதினர்.

அந்தப் பெண் பொள்ளாச்சி அருகே காமாட்சிபுரம் கிராமத்திலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு ஸ்பின்னிங் மில்லுக்கு அனுப்பப்பட்டார். மில்லில் அமுதா கொடுமைப்படுத்தப் படுவதை அறிந்த பாஸ்கர் அமுதாவின் தாயாரை அழைத்துக்கொண்டு பல இடங்களுக்கு அலைந்திருக்கிறார். அந்த மில்லுக்கு அருகே ஒரு வயல்வெளியில் சாலை ஓரம் பாஸ்கர் இறந்து கிடந்திருக்கிறார்.

பக்கத்திலுள்ள எந்த கிராமத்திலும் பாஸ்கரைத் தெரிந்தவர்கள் யாரும் கிடையாது. எனவே அமுதாவைப் பார்க்கவந்து அதன் காரணமாக கொல்லப்பட்டிருக்கலாம் என்பது மிக இயல்பான ஒரு சந்தேகம். அமுதா ஏற்கெனவே ஒரு மில்லிலிருந்து தப்பி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது பற்றிக் கேட்டபோது, 'தனக்கு பாஸ்கரைத் தெரியுமென்றும், கடந்த நான்கைந்து மாதங்களாக அவருடன் எந்த தொடர்பும் இல்லையென்றும், அவன் தன்னைக் காதலிக்கச் சொல்லி வற்புறுத்தியதாகவும் தான் அவனைக் காதலிக்கவில்லை' என்றும் கூறினார்.

குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

இது ஆணவக் கொலை என்று உண்மையறியும் குழு முடிவு செய்கிறது. அமுதா இல்லை என்று மறுத்தாலும்கூட இருவருக்கும்

இடையே இருந்த நட்பு அல்லது காதல் அல்லது வேறு ஏதோ ஒருவிதமான உறவே கொலைக்குக் காரணமாக இருந்திருக்கிறது. பாஸ்கர் தலித் என்பதாலும் அமுதாவுடன் அவர் தொடர்பு கொண்டிருந்தார் என்பதாலுமே கொல்லப்பட்டுள்ளார். காவல்துறை இதைக் கொலை என்ற நோக்கில் விசாரித்து மனோகரன், வெள்ளிங்கிரி, குபேந்திரன் இன்னும் நால்வர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளது. எல்லோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி ஏராளமான ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும், உண்ணாவிரதப் போராட்டங்களும் மூன்று மாவட்டங்களில் நடந்து வருகின்றன. காவல்துறைக்கு மிகுந்த அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. அமுதாவின் தாயார் உள்ளிட்டோர் எங்கே இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

இலுப்பப்பாளையம் தலித் மக்கள் சட்டவிரோதமாகச் சமூகப் புறக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பொருட்களும், நீரும், வேலையும் மறுக்கப்படுகிறது. மக்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் அடிக்கடி நிகழ்கின்றன. பல குடும்பங்கள் ஊரைவிட்டு வெளியேறியுள்ளன. இவையனைத்தும் அரசின் நேர்ப்பார்வை அந்த ஊரின் மேலிருக்கும் போதே நடந்து வருகிறது. அரசு கொலை வழக்கை மட்டும் பார்த்து இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறது. இது அரசு தனது கடமையைச் செய்யத் தவறுவதாகும். சமூகப் புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்க அரசே நடவடிக்கை எடுக்கவேண்டும். வெளியேறிய குடும்பங்கள் ஊர் திரும்பவும், அவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படவும் அரசு ஆர்.டி.ஓ முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி ஆவன செய்ய வேண்டும்.

ஊரில் பதட்டம் நிலவுவதால் வெள்ளிங்கிரி உள்ளிட்ட இலுப்பப்பாளையத்தைச் சேர்ந்த எதிரிகள் ஜாமீனில் விடுவிக்கப்பட்டால் இலுப்பப்பாளையத்துக்கு வெளியே தங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட வேண்டும்.

அமுதா நீதி மன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டு அவரது

அம்மாவின் துணையோடு அவரிடமிருந்து மீண்டும் ஒருமுறை வாக்குமூலம் பெறப்படவேண்டும். அமுதாவை மில்லின் ஊழியர்களும் மேலாளரும் மிரட்டினார்களா? என்பதும் விசாரிக்கப் படவேண்டும். வழக்கை தனி வழக்குரைஞர் நியமித்து வாதிட சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுப்பது என்று குழு முடிவு செய்கிறது.

ஷீலாவின் மின்னஞ்சல்

அன்புக்குரிய இயக்குநருக்கு

பாஸ்கரின் கொலைக்குப் பின்னணியில் சிறுபெண்களை வைத்து வேலை வாங்கும் மில்களும் ரியல் எஸ்டேட் முதலாளிகளும் அவர்கள் உருவாக்கி வளர்க்கும் சாதி அமைப்புகளும் உள்ளன என்ற சந்தேகம் உள்ளது. எனவே இந்த அஸைன் மெண்ட்டை இன்னும் நீட்டித்து இந்த திட்டத்தில் வேலை செய்யும் பெண்கள் நிலை, விசைதறித் தொழிலாளர் நிலை, அவர்கள் இங்கே வர வேண்டிய தேவை, சமூகத்தில் பெண்களுக்கு உள்ள சொத்துரிமை, போன்றவற்றைப் பற்றிய ஒரு விரிவான அறிக்கை தயாரிக்க வேண்டும். இது குறித்த ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும். தேவைப்பட்டால் தலையீட்டின் மூலம் இது குறித்த நாடு தழுவிய விவாதங்களையும் போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும். இது பற்றிய எனது குறிப்புகளையும் நான் சேகரித்த மேலதிகத் தகவல்களையும் தங்களுக்கு ஏற்கெனவே அனுப்பியுள்ளேன். இவற்றை உண்மை அறியும் குழுவின் அறிக்கையில் இணைக்க குழுவின் தலைவர் திரு.குமணன் விரும்பாததால் சேர்க்க முடியவில்லை.

இது வெறும் ஆணவக் கொலை வழக்கு மட்டுமில்லை. முன்பிருந்த பண்ணையடிமை முறை தொழில்துறையில் வேறு பெயரில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்கள் தலித்துகளும் பெண்களுமாக இருக்கின்றனர். இதைப் பற்றியும் தலித்தாக வாழ்வதில் உள்ள சிரமங்கள் அவர்களது தேடல், போராட்டம் எல்லாவற்றையும் இணைத்துப் பேசவேண்டும்.

இந்தக் கொலையில் மேலும் ஓரிருவர் கைது செய்யப்பட்டாலும் அதனால் ஒருபயனும் இல்லை இன்னும் நூறு கொலைகள் நடப்பதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன. மனிதர்களுக்கிடையிலான விரோதத்திற்கான

காரணங்களைப் பேசாமல் போலீஸ்காரர்கள் வேலையைப் பற்றி மட்டும் பேசுவது போதுமானது அல்ல.

எனவே விசைத்தறித் தொழிலிலும், மில்களிலும் மக்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதைத் தடுக்க நாம் முயற்சி எடுக்க வேண்டும். காவல்துறை தனது கடமையைச் செய்ய உதவுவது போலவே இதுவும் இன்றியமையாதது என்று கருதுகிறேன்.

அன்புடன்

ஷீலா ரெஜி ப்ரியா

அன்புக்குரிய ஷீலா

ப்ரைஸ் த லார்ட்

உங்களது கடின உழைப்பு பாராட்டத்தக்கது. சிறப்பானது. ஆனால் நமது வேலைத்திட்டம் நம்மை ஏற்றுக் கொண்ட வேலைக்குள் நிற்கும்படி கோருகிறது.

ஜெர்மனியைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் SOIK என்ற மனித உரிமைகளுக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனம் 2015ல-இல் இருந்து 2018 வரை இந்தியாவில் தலித் உரிமைகளைப் பாதுகாக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்கவும் ஒரு புராஜெக்டை அறிவித்திருந்தது. தமிழ்நாட்டில் அதைச் செயல்படுத்தும் பொறுப்பை விழிப்பு பெற்று இருக்கிறது. இந்நிறுவனம் வளரும் நாடுகளில் ஐ.நா மற்றும் கவுன்சில் ஆப் ஐரோப்பாவின் விதிகளுக்கு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயல்பட்டு வருகிறது. நீங்கள் தற்போது செயல்பட்டு வருவது ஒரு புராஜெக்ட் ஆகும்.

மனித உரிமைகளைப் பிரச்சாரம் செய்வது, லாபி செய்வது, ஆதரவு திரட்டுவது

மனித உரிமை மீறல்களைக் கண்காணித்து ஆவணப்படுத்துவது

அவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது

சட்ட உதவி அளிப்பது

சட்ட உதவி பெறவும் பயன்படுத்தவும் திறனை வளர்ப்பது

-ஆகிய நோக்கங்களுக்காக நிதியுதவி அளிக்கப்படுகிறது

நாம் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் என்பதாலேயே நமக்கு இந்த புராஜெக்ட் அளிக்கப்பட்டுள்ளது. நமது பணி தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடத்தப்படும் கொடுமைகளையும் காவல்துறை உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்துவதும், அதற்காக நீதி கேட்டு சட்டபூர்வமான முறைகளில் போராடுவதும் ஆகும். பொதுவான சமூக விழிப்புணர்வு என்பது நமது வொர்க் ஏரியா அல்ல. அது சமூக மேம்பாடு போன்றவற்றில் ஈடுபாடு கொண்டிருக்கும் அமைப்புகளின் பணியாகும். நமக்கு நிதி உதவி செய்பவர்களும் நாம் திட்டவட்டமான விதிகளின் படி இயங்குவதையே விரும்புகிறனர். .

இந்தப் பன்னாட்டு மனிதஉரிமை நிறுவனங்கள் பல்கலைக் கழகங்கள், வேறு ஆய்வு நிறுவனங்கள் மூலம் நமது நாட்டில் உள்ள சமூக நிலைமைகள் குறித்துத் தகவல்கள் திரட்டுகின்றனர். பின்பு சிறந்த சிந்தனையாளர்களைக் கொண்டு அதற்கான தீர்வுகளை உருவாக்குகின்றனர். இந்தச் செயல்திட்டத்தையும் தீர்வுகளையும் செயல்படுத்துவதற்காகவே அந்தத் துறையில் செயல்படும் அமைப்புகளைத் தேர்ந்தெடுத்து நிதியுதவி அளிக்கப்படுகிறது. நமக்கு அளிக்கப்படும் உதவியை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தினால் அவர்களுக்குப் பதில் சொல்வதில் சிரமம் ஏற்படும்.

நீங்கள் குறிப்பிடும் சமூக காரணங்களைக் களையத்தான் நாம் தலித் மக்கள் விழிப்புணர்வு அடையவும் தங்களுக்கான அமைப்புகளை உருவாக்கிக் கொள்ளவும் சட்ட அறிவு பெறவும் பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் பணிகள் செய்திருக்கிறோம், தொடர்ந்து செய்து வருகிறோம் என்பது நீங்கள் அறிந்ததே.

தமிழகத்தில் 32 மாவட்டங்கள் உள்ளன. அதில் 28 மாவட்டங்களில் தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள் நடப்பதாக புள்ளி விவரங்கள்

சொல்கின்றன. மீதி நான்கு மாவட்டங்கள் குறித்துத் தகவல் இல்லை. ஐந்து மாவட்டங்கள் செயல்பாட்டுக்காகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் தலித்துகளுக்கு நீதி கிடைக்க விழிப்பு பணி செய்கிறது. அவர்கள் சொந்தத் தொழில் செய்ய பயிற்சி அளிக்கிறது. பெண்கள் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை பெண்களுக்கு அதிகாரம் அளித்து குடும்பச் சிறையிலிருந்து விடுபட உதவுகின்றன. மாவட்ட அளவில் DHRD எனப்படும் தலித் மனித உரிமைப் பாதுகாவலர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். ஊடகங்களுக்கு இது குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டுள்ளது. தலித்துகளின் தேவைகள் குறித்த பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு அரசியல் கட்சிகளிடம் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றை சில கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கையில் சேர்த்துள்ளன. சிவில் சொஸைடி அமைப்புகளும், கம்யூனிட்டி லெட் அமைப்புகள் எனப்படும் உள்ளூர் மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

Enriched change agents – மாற்றத்துக்கான பயிற்சி பெற்ற நபர்கள்

Activist group செயல்பாட்டாளர் குழுக்கள், Attrocity tracking and monitoring – ATM வன்கொடுமையை கண்டறிந்து கண்காணித்தல் ஆகிய முறைகளில் விழிப்பு செயல்படுகிறது.

இதுவரை 826 உண்மை அறியும் குழு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வன்கொடுமையில் ஈடுபட்டுள்ள 427 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 14 பேருக்கு தண்டனை பெற்றுத் தரப்பட்டது. 2,83,16,400 ரூபாய் இடைக்கால நிவாரணம் பெற்றுத் தரப்பட்டுள்ளது. மேலும் 67 வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. (இந்தப் புள்ளி விவரங்களைத் தேவையானால் நீங்கள் நிறுவனத்துக்குத் தர இருக்கும் அறிக்கையிலும், பத்திரிக்கையாளர் சந்திப்பிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் நகலை திரு.குமணன் அவர்களுக்கும் அனுப்பியுள்ளேன்).

நமது அமைப்பின் ஆராய்ச்சியாளர் என்ற முறையில் நீங்கள் இதை அறிந்திருக்கக் கூடும். ஏன் மீண்டும் சொல்கிறேனென்றால் நாம் ஏற்கெனவே மிகப்பெரிய வேலையை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

தொழிலாளர் உரிமைகள், கிராமப்புற மக்களின் வறுமை ஆகியவை குறித்துச் சிந்திக்கவும், செயல்படவும் நம்மால் இயலாது.

தற்போது இத்திட்டம் எப்படி செயல்பட்டு வருகிறது, அதன் விளைவுகள் என்ன, அளிக்கப்பட்ட நிதி சரியான விதத்தில் செலவிடப்பட்டுள்ளதா, அதை மேலும் நீட்டிப்பதற்கான சூழல் இருக்கிறதா என்று ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஹாஸ்மிக் கொரனட்ஸி ஐரோப்பிய யூனியனிலிருந்து வந்திருக்கிறார்.

அவருக்காக விழிப்பு அமைப்பு State meet on Result Oriented Monitering [ROM] Visit – அதாவது விளைவுகளைக் கண்காணிக்கும் மாநில அளவிலான சந்திப்பு – ஏற்பாடு செய்ய உள்ளது. அதற்கான ஆவணங்கள் தயாரிக்கவும், தொகுத்து வழங்கவும் நீங்கள் அவசியம் தலைமையகத்தில் இருக்க வேண்டும்.

எனவே பாஸ்கர் கொலை குறித்து நீங்கள் தயாரித்துள்ள உண்மை அறியும் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நாளை பத்திரிக்கையாளர் சந்திப்பை வெற்றிகரமாக நடத்திவிட்டு அனைத்து ஆவணங்கள் புகைப்படங்கள் வீடியோக்களுடன் வந்து சேரவும்.

– இயக்குநர்

ஹாஸ்மிக் கொரனட்ஸியுடனான சந்திப்பு வெற்றிகரமாக முடிந்தது. ஷீலா கிளம்பிக் கொண்டிருந்த போது ஸ்டீவ் திடீரென்று ஓடி வந்தான்.

“ஷீலா மேடம், கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. ஒரு காப்பி சாப்டுட்டே பேசலாமா?” அவன் கேட்டதும் ஷீலா ஆச்சரியத்துடன் தலையசைத்தாள்.

ஸ்டீவ் மேடையில் பேசுவானே தவிர மற்ற நேரங்களில் அதிகம் பேசும் ஆள் அல்ல. அவனுக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். ஆனால் மீசை அடர்த்தியாக இல்லாமல் பூனை முடி போலிருந்ததால் வயது குறைவாகத் தோன்றியது. அவனது முகம் எப்போதும் ஏதோ சிந்தனையிலேயே ஆழ்ந்திருப்பது போலிருக்கும். உடைகளில் அவனது அக்கறையின்மை அப்பட்டமாகத் தெரியும். ஆனால் கடின உழைப்பாளி.

புத்திசாலி. ஆவணங்கள் தயாரிப்பதில் நிபுணன் என்பதால் அமைப்பில் அவனுக்குத் தனி மரியாதை இருந்தது.

காப்பி ஹவுஸ் கூட்டம் நடந்த ஓட்டலின் மேல் தளத்தில்தான் இருந்தது. இருவரும் ஒரு ஓரமான இடத்தைத் தேடிஅமர்ந்தனர்.

"ஷீலா மேடம் நீங்க அனிதா மேடத்துக்கு அனுப்பிய மெய்ல் எல்லாம் பார்த்தேன். உங்க கோபம் புரியது"

ஷீலா திகைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'இவன் என்ன சொல்ல வருகிறான்?'

"பிரச்சினை வந்தபிறகு தடுக்கறதுல அர்த்தமே இல்லை. எத்தனை பேரை பிடித்தாலும் மேலும் மேலும் கொலையும், அட்டாக்கும் நடந்துட்டேதான் இருக்கும். நான் ஒரு புராஜெக்ட்க்கு முயற்சி செஞ்சுட்டிருக்கேன... பெண்களை கேம்ப் கூலி மில்களுக்கு அனுப்பும் ஊர்களைத் தேர்தெடுத்து அவேர்னஸ், வேலை செய்வதில் என்னென்ன உரிமைகள் இருக்கு, பிஎஃப் கிராஜுவிட்டி விவரங்கள், இதெல்லாம் சொல்லிக் கொடுத்து கண்டபடி போய் சிக்கிக்கறத தடுக்க ஒரு புராஜெக்ட் தயாரிச்சிருக்கேன். இந்தப் பெண்களுக்கு வீட்லயே கொஞ்சம் சம்பாதிக்கவும் வகுப்பு நடத்தலாம். நீங்க இதுல யோசிச்சிருக்கீங்க. எனக்கு ஹெல்ப் பண்ண முடியுமா?"

"அப்படின்னா தனியா வேல செய்யப் போறிங்களா? விழிப்புல இருந்து வெளிய போகப் போறீங்களா?"

"நமக்கு நியாயம்னு நினைக்கறத செய்யணும்னா வெளிய போய்த்தானே ஆகணும்?"

"முடியுமா? எப்படி...?" ஷீலா இழுத்தாள். அவளுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. ஸ்டீவ் அவள் சம்பளம் குறித்துக் கவலைப்படுகிறாள் என்று தவறாகப் புரிந்து கொண்டான்.

"ஒரு கிராண்ட் இருக்கு. வாங்கிறலாம். நீங்க இங்க வாங்கறத விட அதிக சம்பளம் ஏற்பாடு செஞ்சுறலாம். நீங்க என்ன நினைக்கறீங்களோ அதையும் செய்யலாம். இந்த மேடம் ஒண்ணும் நம்ம நம்பி இல்லையே. நாம இல்லாட்டி இன்னொருத்தங்க. இது கடல். நாம நல்லா செய்யலாம்

மேடம்” ஸ்டீவின் கண்களும் முகமும் ஏறக்குறைய கெஞ்சின.

ஹ்யூமன் ரைட்ஸ் புரொபஷனல் மனித உரிமையைத் தொழிலாகக் கொண்டவர் என்று தான் ரமேஷ் குமாரின் அறையில் ஒரு சொற்கோவையை உருவாக்கியது நினைவு வந்தது. ஷீலா குபுக்கென்று சிரித்தாள்.

செம்புலம் - வெற்று நிலத்துக் கவிதைகள் என்ற தலைப்பில் சுமதி சூடிக்கொடுத்தாள் தொகுத்திருந்த கவிதைத் தொகுப்பிலிருந்து

கானகங்களை காட்டுத்தீ
சுட்டெரிக்கும் போது அதில்
மூழ்கிக் குளிப்பவர்களுக்குப் பயம் ஏது?
கொஞ்சம் குளிர் காய நினைப்பவனைத்தான்
சுடும் அது.
ஓ காட்டுத் தாயே
உன் பார்வையில்
அமைதி தவழும் பூங்கொத்துகளில்
இருந்து வாட்கள் முளைத்தெழுகின்றன.
தூங்கிக் கிடந்த உணர்வுகள் புத்துயிர் பெறுகின்றன.
உணர்ச்சியற்றிருந்த விழிகள் சுடர் விடுகின்றன.
செம்பூக்கள் பாவிய பாதைகளில்
கனவுகளைத் தேடி நாங்கள்.....

சமுத்துருடு
தெலுங்கிலிருந்து ஆங்கில வழித் தமிழில்
சுமதி சூடிக்கொடுத்தாள்

ரத்தச் சிவப்பு ரோட்டுவாகைப் பூக்கள் இதழ் விரிக்கும் பருவம். இருள் ஒரு போர்வை போலப் போர்த்திருந்த ஒரு முன்னிரவுப் பொழுதில் அந்தக் கல் குவாரிக்கு முன்னே ஒரு பைக் வந்து நின்றது. லுங்கிகட்டியிருந்த ஒரு நடுத்தர வயது ஆளும், ஜீன்சும் டிஷர்ட்டும் அணிந்திருந்த ஒரு இளைஞனும் இறங்கினார்கள். இளைஞனின் ஒடுங்கிய முகம் உக்கிரபாவம் கொண்டிருந்தது. அவன் வலிமையான தோள்களும்,

திரண்ட நீண்ட கால்களும் கொண்டிருந்தான். மனதுக்குள் குமைந்து கொண்டிருந்த கோபத்தால் அடிக்கடி முஷ்டிகள் இறுகியதில் டீஷர்ட்டுக்குள் தசைகள் புடைப்பதையும் முறுகி ஏறியிறங்குவதையும் காண முடிந்தது.

குவாரியில் மண் மலைபோலக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. உச்சியில் கிரேனும் ஒரு மேடையுமிருந்தன. அந்தப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கியிருந்தது. அருகே இருந்த குடிசையிலும் எந்த வெளிச்சமும் இல்லை. பைக் வந்த ஓசை கேட்டு ஒரு குடிசையிலிருந்து ஒருஆள் செல் டார்ச்சை அடித்தபடி வெளியே வந்தான். அவனைப் பார்த்ததும் அந்த இளைஞன் ஒரு அசட்டுச் சிரிப்பை வலிந்து வரவழைத்துக் கொண்டான். இருளில் வந்தவனின் முகம் சரியாகத் தெரியவில்லை. உடன் வந்திருந்த நடுத்தர வயது ஆள் குடிசைக்காரனுக்குத் தெரிந்தவர். அவர் இளைஞனை அறிமுகப்படுத்தி வைத்தார்.

“ஆனைக்கட்டிகிட்ட தோட்டமிருக்குது. பன்னித் தொந்தரவு தாங்க முடியல”

அந்த ஆள் அவனைக் கவனமாகப் பார்த்து விட்டு “டெட்டனேட்டருக்கு திரியா, ஒயரா?” என்று கேட்டான்.

திரி என்றால் கொளுத்தி விசுவதற்காக. ஒயர் என்றால் மின்சாதனங்களுடன் இணைத்து வெடிக்கச் செய்யலாம்.

“ஒயர்...”

அவன் குடிசைக்குள் போய் கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து ஒரு மஞ்சள் பையைக் கவனமாக இளைஞனிடம் கொடுத்தான்.

“மெழுகு, டெட்டனேட்டர், ஒயர், உப்பு எல்லாம் இருக்கு. எப்படி வெக்கறதுன்னு தெரியுமில்ல?”

“தெரியுங்க” இளைஞன் திரும்பவும் சிரித்தான்.

அந்த நடுத்தர வயது ஆள் சற்று தூரம் சென்றதும் இறங்கிக் கொண்டார்.

“பாத்து பாங்காப் போயிட்டு வா கண்ணு” என்றவன் சற்றுத் தயங்கினான்.

“உங்க சினேகிதகாரன் அந்தப் பையன் போனவன் போயிட்டான். இருக்கறவங்களாவது நல்லா இருக்கோணும்...”

“ஒண்ணும் ஆகாது. நாங்க பாத்துக்கறோம்” என்றான் பாஸ்கரின் நண்பன்.

கூற்றுவனின் பழிவாங்கும் கொடுங்கயிற்றைத் தாங்கிய அந்த வாகனம் மையிருளில் சென்று மறைந்தது.

அமுதா ஊருக்குப் போய்விட்டு வருவதாகச் சொல்லிச் சென்ற தனது காதலன் கிஷோருக்காகக் காத்திருந்தாள். அவளது உடல் உருகிப் போய்விட்டிருந்தது. ஒரு இளைப்பு நிரந்தரமாக அவளது பேச்சில் குடியேறிவிட்டது. நாட்கள், வாரங்கள், மாதங்கள் கூடக் கடந்துவிட்டன. அவனிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. சிலபோது அவன் வரவேபோவதில்லை என்று தோன்றும். அப்போது அவளையறியாமல் கண்கள் நிறையும். ஆனால் தன் காதலின் ஆழம் எங்கிருந்தாலும் அவனைத் தன்னிடம் கொண்டுவந்து சேர்க்கும் என்று உறுதியாக நம்பினாள். மில் இயந்திரங்களின் இடைவிடாத இரைச்சலுக்கிடையே அந்த பழக்கமான காலடிகளின் ஓசைக்காக அவளது செவிகள் காத்துக்கிடந்தன.